# TIRUKALUKUNDRUM.

# திருக்கழுக்குன்றம்

என்னும்



## உருத்திர கோடித் தலமான்மியம்.

(வசனம்)

R. B. லக்ஷ்மி ரதந் அய்யர் அவர்களது,
(of Messrs. Lakshmi Ratans, Ltd., Merchants, Thambu Chetty St., Madras.)
பொருண் முயற்சியால் பிரசுரமாயிற்று.

Accn. No: 69133
No. of Pages: 370

இந்நூல் எழுதியவர் :—

பண்டிட், S. R. நமசிவாய ராஜயோகி,

நேடிவ் வயித்தியர், காந்திநிலயம்,

திருக்கழுக்குன்றம். P. O.

---

*All Rights*] விலை ரூபாய் 2. [*Reserved.*

# விளம்பரம்.

## இப்புத்தககத்தின்

கிரயம் ரூபா 2-0-0: தபாற்கூலியுட்பட ரூபா 2-6-0: ஒரே முறையில் 10 புத்தகம் வாங்குவோர்க்கு 1 புத்தகம் இனும்.

விற்குமிடங்சள் :—

(1) மெஸ்ஸர்ஸ் கணேவ்ஷ் அண்ட் கோ, நெ. 39, தம்பு செட்டி வீதி, சென்னை. (போஸ்ட் பாக்ஸ் நெ. 30).

(2) ரிப்பன் புத்தக சாலை, நெ. 87, தம்பு செட்டி வீதி, சென்னை.

(3) S. N. பாலசுந்தரம், ஸ்ரீசாது இரத்தின சற்குரு புத்தக சாலை, 4 34, நயினியப்ப நாய்க்கன் வீதி, பார்க்டவுன் P. O., மதராஸ்.

---

1. பக்ஷி தரிசன தேவ ரகசிய படம். (கிளேஸ் கடிதம் கலர் மை 22 × 16. 1-க்கு 0-1-6 : 100-க்கு ரூபா 6-4-0.

2. ஷை சின்ன படம் (9 × 5) 1-க்கு 0-0-3 ; 100-க்கு ரூபா 1-0-0.

3. ஷை கார்டு படம் (6 × 4) 1-க்கு 0-0-6; 100-க்கு ரூபா 2-8-0.

4. திருக்கழுக்குன்ற ஸ்தல [illegible] சுருக்கம் (ரப் காகிதம்) 48-பக்கம் 1 க்கு 0-2-0.

5. ஷை ஸ்ரீ வேதகிரீஸ்வரர், ஸ்ரீ திரிபுரசுந்தரி ஸ்தோத்திர மஞ்சரி 1-க்கு 0-2-0.


இவை இரண்டும் 100-க்கு 12-8-0. (தபாற்கூலி வேறு.)

வேண்டுவோர் :—திருக்கழுக்குன்றம் (P. O.) சாந்திநிலயம், நேடிவ் டாக்டர், பண்டிட் S. R. நமசிவாய ராஜயோகியாரிடம் பெறலாம்.

# ஓ ங் கா ர ஸ் த ம் ப ம்.

ஓம் என்னும் உத்கிருஷ்டமான ஏகாக்ஷரம் பிரமம் என்னப்படும்.

"ஓமித்யேகாக்ஷரம் பிரஹ்மம், அக்ஷரம் பிரஹ்ம பிரஹ்மம்."



இப்புத்தகம் 102-வது பக்கத்தில் பிரணவ மகிமையினைக் கவனிக்க.

வரகவி-தி. கன்னியப்ப முதலியார் இயற்றிய

திருக்கழுக்குன்றம்

# இரதபந்தம்.

## மேல் அணியம்.

பூமேலயனுங் காணாத புண்ணிய மா
மாமேவு நாயகனன் மலைமருந்து - நாமேவ
பாவோத வோதுரித பாவாணற் கின்பநித
மாவேத கிரி நாயகா.

| கொடிச்சீலை. | அசைந்தாடுமோலை. |
|---|---|
| தாபமாறு மாபதா | தேவராதிபர் ஏவலாளராய் |
| தாபமாறு மாபதா | மேவுமாமலைத் தேவன் வாழியே. |

## பலழக்கால்கள்.

சீலா நேயா சீரா தேவா
மேலா காயா மேரா கோவா
ஆலா தீடா ஆரா நீவா
மாலா தாயா மாரா நாவா.

## பூதப்பார் என்னும் கீழ் அணியம்.

பேராம் உனதரு பேரா நெஞ்சக பெரு வெளித்தேங்
காரா வமுதே மழுமாநில வொளிச் செறிவழகா
மாராச்சற்சன மாசீலரேறே மறைசைல சம்போ
சீராய்க் காற்குமுழக் கழுகாசலச் செழுங்கரும்பே.

## சக்கரம்.

| | |
|---|---|
| வாசவா மனதிசவா | காசுவாரண தாயகா |
| வாசதீச மகோசவா | காயதாமறை பூசகா |
| வாசகோதில நேசவா | காசபூரண நேமிகா |
| வாசநே மலை வாசவா. | காமிநேயக வாசுகா. |

☞ இரத உருவம் அதனுள் அக்ஷரங்கள் அமைத்த ரதபந்தபடம் (பெரிது) வேண்டுவோர் பிரதி 1-க்கு 0-2-0 ; 10-க்கு ரூபா 1; 25-க்கு ரூபா 2; தபாற்கூலி பிரதி 4 வரையும் 1 அணா. வேண்டுவோர் திருக்கழுக்குன்றம், காந்தி ஆஸ்ரமம், நேடிவ் வயித்தியம், பண்டிட் S. R. நமசிவாய ராஜ யோகியாரிடம் பெறலாம்.

(இந்நூலாசிரியரது பிதா.)



சை. இரத்தின செட்டியார்,

(ஸ்ரீ கிருஷ்ணாநந்த சுவாமிகள் மாணாக்கர்; ஈசூர் கணக்கு சச்சிதானந்தம் பிள்ளையின் அத்யந்த நண்பர்; சிதம்பரம் இராமலிங்கசுவாமிகளோடு பழகியவர்; இந்து தேசாபிமான சபை, இந்து டிராக்ட் சொஸைட்டி, வேதாந்த விசாரணை சபை இவைகளின் ஸ்தாபகர்; மதராஸ் ரிப்பன் பிரெஸ் அதிபர். சென்னையில் ஜவுளி வியாபாரத்தில் மிகப்பிரபல்யர். சத்தியம் பொறுமை, அன்பு, அடக்கம், காருண்யம் நிறைந்தவர். திருவள்ளுவ தேவர் போன்ற இல்லறஞானி யென்னலாம்.)

சுபமஸ்து.

# ஸ்ரீ வேதகிரீஸ்வராஷ்டகம்.

1. வ்யோமா நிலாநல ஜலாசல சந்த்ர ஸூர்ய
சைதன்ய கல்பித சரீர விராஜிதாய !
ருக்வாதி வேதகிரி ஸ்ருங்க நிகேதநாய
ஸ்ரீருத்ரகோடி நிலயாய நமஸ்ஸிவாய ! !

2. கற்பூர சங்க தவளாக்ருதி சந்த்ரகாந்த
முக்தாபல ஸ்படிக ஸன்னிப விக்ரஹாய !
கஸ்தூரி குங்கும ஹிமாம்புவி லேபநாய
ஸ்ரீருத்ரகோடி நிலயாய நமஸ்ஸிவாய ! !

3. ஸௌந்தர்ய நாயகி முகாம்புஜ பிருங்கபூத
சந்த்ரார்க்க வன்ஹி நிலயாய ஸதாஸிவாய !
அணிமாதிதாய கருணைம்ருத ஸாகராய
ஸ்ரீருத்ரகோடி நிலயாய நமஸ்ஸிவாய ! !

4. கங்கா சலாக்ர நிலயாய கலாமயாய
காமாந்தக த்ரிபுரதக்த விலேபநாய !
கங்காதராய கருடத்விஜ சேவிதாய
ஸ்ரீருத்ரகோடி நிலயாய நமஸ்ஸிவாய ! !

5. க்ருத்ரா சலேந்த்ர நிலயாய கிரீஸ்வராய
தத்வாதி ஸித்த ஸுரபூஜித வந்திதாய !
ஸித்தாதி யோக புருஷாய திகம்பராய
ஸ்ரீருத்ரகோடி நிலயாய நமஸ்ஸிவாய ! !

6. பஞ்சாக்ஷராய பவஸாகர தாரணாய
பஞ்சாஸ்ய வர்ம வஸநாய பராத்பராய !
பஞ்சாக்ஷராய நிகமாசல நாயகாய
ஸ்ரீருத்ரகோடி நிலயாய நமஸ்ஸிவாய ! !

7. வேதாந்த முக்ய விபவாய கிரீஸ்வராய
வேதாந்த வேத்ய ஸரஸாய விசக்ஷணாய !
வேதாய வேத துரகாய விஷாசனாய
ஸ்ரீருத்ரகோடி நிலயாய நமஸ்ஸிவாய ! !

8. ஆதார சக்தி குடிலாஸந பஞ்சகாய
ப்ரும்ஹாண்ட கல்பித கலாமய விக்ரஹாய !
ப்ரஸாத ஷோடச கலாமய விஸ்வமூர்த்த
ஸ்ரீருத்ரகோடி நிலயாய நமஸ்ஸிவாய ! !

ஸ்ரீ வேதகிரீஸ்வராஷ்டக சம்பூர்ணம்.

# திருக்கழுக்குன்றத்தில் நடக்கும்

# விசேஷ உற்சவங்கள்.

சித்திரை மாதத்தில் ஸ்ரீ வேதகிரீஸ்வரர் ப்ரம்மோற்சவம். மிருகசீரிஷ நக்ஷத்திரத்தில் துவிஜாரோகணம். சித்திரை நக்ஷத்திரத்தில் அவரோகணம், தீர்த்தம். சுவாமிக்கு திருமலையில் துவிஜாரோகணம், யாகபூஜை முதலிய. தாழக்கோயிலில் பஞ்சமூர்த்திகள் உற்சவம். இதில் 3-ம் நாள் அதிகார நந்திசேவை, காலை 5-மணிக்கு வடவண்டை கோபுரதரிசனம். அறுப்பத்து மூன்று நாயன்மார்களுடன் கிரிப்பிரதக்ஷிணம். 10-ம் நாள் இரவும் கிரிப்பிரதக்ஷிணம். 5-ம் நாள் காலை கதலிவாகனம் (க்ஷேத்ர விருக்ஷம்); இரவு ரிஷப வாகன சேவை. சதய நக்ஷத்திரத்தில் அப்பர் சுவாமிகள் உற்சவம்.

வைகாசி மாதத்தில் மூல நக்ஷத்திரத்தில் திருஞானசம்பந்த சுவாமிகள் உற்சவம். புனர்ப்பூச நக்ஷத்திரத்தில் அடிவார உற்சவ ஆரம்பம். விசாகம் பூர்த்தி. 10-ம் நாள் திருக்கல்யாணம், ரிஷப வாகன சேவை. இந்த 10-நாளும் அடிவார சத்திரக்காரரது சொந்த உற்சவம்.

ஆனி மாதத்தில் மக நக்ஷத்திரத்தில் மாணிக்க வாசக சுவாமிகள் உற்சவம்; உத்திர நக்ஷத்திரத்தில் நடராஜர் அபிஷேகம்; வீதி உற்சவம்.

ஆடி மாதத்தில் சுவாதி நக்ஷத்திரத்தில் சுந்தரமூர்த்தி நாயனார் உற்சவம் (ஆதிசைவர்கள் செய்வது). பரணி நக்ஷத்திரத்தில் ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளுக்கு ஆடிப்பூர உற்சவ ஆரம்பம். பூர நக்ஷத்திரத்தில் தீர்த்தம். 11-ம் தினம் மூலஸ்தான அம்பாளுக்குச் சர்வாங்க அபிஷேகம்; திருக்கல்யாணம், பஞ்சமூர்த்திகள் வீதி உற்சவம்.

ரிஷபவாகன சேவை. இதில் 3-ம் நாள் அதிகார நந்தி சேவை, கிரிப்பிரதக்ஷிணம். 10-ம் நாள் இரவு புஷ்பபல்லக்கு, கிரிப்பிரதக்ஷிணம்.

ஆவணி மாதத்தில் சவுத்தி, விநாயகர் உற்சவம்.

புரட்டாசி மாதத்தில் நவராத்திரி உற்சவம். அபிஷேக அலங்கார தூபதீப நைவேத்ய ஆராதனை; வீதி உர்சவ மில்லை. 9-ம் நாள் நவமி யன்றைக்கு மூல ஸ்தான அம்பாளுக்கு சர்வாங்க அபிஷேகம்.

ஐப்பசி மாதத்தில் ஸ்ரீ மகா கந்த சஷ்டி ஆறு தினங்களிலும் ஆறுமுகப் பெருமானுக்கு அபிஷேக அலங்கார ஆராதனை; 6-ம் தினம் காலையில் ஆறுமுகக் கடவுள் வீதி உற்சவம், இரவில் சுப்பிரமணியக் கடவுள் மயில் வாகன சேவை.

கார்த்திகை மாதத்தில் பவுர்ணமியில் தீபோற்சவம். ரிஷபவாகன சேவை, பஞ்ச மூர்த்திகள் உற்சவம். கடைசி சோம வாரம் திருமலைப் பெருமானுக்கு 1,008 சங்கங்களினால் அபிஷேகம். அன்றிரவு தாழக் கோயிலில் வீதி உற்சவம்.

மார்கழி மாதத்தில் ஸ்ரீ மந் மாணிக்க வாசக சுவாமிகள் 10-நாள் உற்சவம். கடைசி நாள் திருவாதிரையில் ஸ்ரீமந் நடராஜமூர்த்திக்கு மஹா அபிஷேகம், தரிசனம். வீதி உற்சவம்.

தை மாதத்தில் 3உ கீரப்பாக்கம் பார் வேட்டை உற்சவம். பூச நஷத்திரத்தில் சங்க தீர்த்த தெப்பல் உற்சவம், மறுதினம் நந்தி தீர்த்தம் தெப்பல்.

மாசி மாதத்தில் மக நக்ஷத்திரம் சுவாமி சங்க தீர்த்தத்தில், காலையில் தீர்த்தம். மாலையில் ரிஷப வாகன சேவை.

பங்குனி மாதத்தில் உத்திர நக்ஷத்திரத்தில், ஸ்ரீ திரிபுர சுந்தரி அம்பாளுக்கு (மூலஸ்தானம்) சர்வாங்க அபிஷேகம். ரிஷபவாகன சேவை. திருக்கல்யாணம்.

☞ பவுத்ரோற்சவம் ஆவணி அவிட்டம் முதல் கார்த்திகை மாதத்துக்குள் சவுகரியமான படி செய்கிற வழக்க முண்டு.

☞ மாசப் பிறப்பு, பிரதோஷம், கிருத்திகை, பவுர்ணமி தினங்களில் உற்சவம் உண்டு. கிருத்திகை தோறும் ஆறுமுகப் பெருமானுக்கு 4-5-வருஷ காலமாக விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடந்து வருகிறது.

---

## ஸ்ரீ வேதகிரீஸ்வரர் திருக்கல்யாண மஹோற்சவம்.

(வருஷத்துக்கு மூன்றுமுறை)

ஆடிபூர உற்சவம் மறுதினம்(1); வைகாசி அடிவார உற்சவம் 10-ம் நாள் (2); பங்குனி உத்திரம். (3)

---

## ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்மன் சர்வாங்க அபிஷேகம்.

(வருஷத்துக்கு மூன்று முறை.)

தினசரி காலை மாலைகளில் மூலஸ்தான அம்மனுக்குப் பாதத்தில் அபிஷேகம். இதை பாத பூஜை என்பார்கள். ஆடிப்பூரம் 11-ம் தினம், நவராத்திரி 9-ம் தினம், பங்குனி உத்திரம் இரவில் சர்வாங்க (தேக முழுதும்) அபிஷேகம்.

---

## உருத்திரகோடி மஹா க்ஷேத்திரத்தில்,

ஸ்கந்த சஷ்டி ஆறும் நாள் இரவு சூரசம்ஹார உற்சவம். இது தி. ஷண்முக பண்டாரம் குமாரர் வேதாசல பண்டாரம் வகையராக்களால் நடை பெறுகின்றது. இதில் மூன்று பேட்டை செங்குந்தர்கள் ஆகம விதி தவறாது வேஷம் போட்டு சூரசம்ஹாரம் நடத்துகிறார்கள்.

திருக்கழுக்குன்றப்.

(நவசக்தி. 21—11—23)

# சில புராதனக் குறிப்புகள்.

(விஷ்ணு கோபர் எழுதியது)

திருக்கழுக்குன்றம், தமிழ் நாட்டிலிருக்கும்பிரசித்தி பெற்ற சிவஸ்தலங்களுள் ஒன்று. இது வடமொழியில் பட்சி தீர்த்தம் என்று வழங்குகிறது. இது பழைய டச்சு வர்த்தகர் குடியேறியிருந்த சதுரங்கப் பட்டணத்திற்கும், செங்கல்பட்டு ரயில் ஸ்டேஷனுக்கும் மத்தியில் இருக்கிறது. தென்னிந்தியாவில் மிகவும் புராதனமானதும், சிற்பவேலை மிகுந்ததுமான "ஸப்த ஆலயங்கள்" (Seven Pagodas) என்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் மஹாபலிபுரம், இவ்வூருக்கு 10 மைல்களுக்கப்பால் கடலோரத்தில் உள்ளது.

திருக்கழுக்குன்றத்து ஸ்தல மகிமையையும், அவ்வூரில் குடி கொண்டுள்ள வேதகிரீஸ்வர ராலயம், பக்தவத்ஸலேச்வரர் கோயில், உருத்திரன் கோயில், சங்கு தீர்த்தம் முதலியவற்றின் பெருமையையும் இங்கே சென்றிருப்பவர் யாவரும் உணர்வர். இந்த ஸ்தலத்திலுள்ள மலைக்கோவிலைப் பற்றிய சில முக்கியக் குறிப்புகளை மட்டும் இங்கே கூறுவேன்.

திருக்கழுக்குன்றம் மிகவும் புராதன ஊர்களுள் ஒன்றென்பதும், அது கி. பி. ஏழாம் நூற்றாண்டில் பிரசித்தி பெற்ற சிவஸ்தலமாய் இருந்ததென்பதும், பின் வரும் சம்பந்தர், சுந்தரர் தேவாரக் குறிப்புகளால் விளங்குகிறது :—

'கன்றினோடு பிடிசூழ் தண் கழுக்குன்றம்,'

—(சுந்தரர்)

'தேனும் வண்டும்
மதுவுண்டின் னிசைபாடியே,

கானமஞ்ஞை
யுறையுந்தண் கழுக்குன்றம்'

—(சுந்தரர்)

‘களிறினொடு பிடிசூழ் தண்
கழுக்குன்றம்’ —(சுந்தரர்)

‘கண்ணுதலான் காவல்செய்
கோயில் கழுக்குன்றம்’ —(சம்பந்தர்)

வேதகிரீசுவரர் மலையேறிச் செல்வோர், மலை யுச்சியில் அமைந்துள்ள சிவபிரான் கோயில் செல்லு முன்னர், வழியில் ஒரு பெரிய கற்பாறையில் செதுக்கிய மண்டபத்தைக் காண்பர். இது மலையுச்சியிலிருந்து 50 அல்லது 60 படிகள் கீழே, கிழக்கு நோக்கியிருக்கிறது. இதை அங்கே இருப்போர் ஒருகல் மண்டபம் என்றழைப்பர். உண்மையில் இது பல்லவர் காலத்துக் குடைந்த பாறைக்கோயில்களுள் ஒன்றென்று, கோயில் அமைப்புப் பரிசோதிக்கும் நிபுணர் கருதுவர். இவ்வொருகல் மண்டபம் ஒரு பிரும்மாண்டமான கற்பாறையைக் குடைந்து அமைக்கப்பட்டிருக்கிறது. இது பல்லாவரம், மஹேந்திரவாடி, திருசிராப்பள்ளி முதலிய இடங்களில் காணப்படும் பல்லவரின் கல் கோயில்களின் அமைப்பைப் பெரிதும் ஒத்திருக்கிறது. இம்மண்டபத்தில் செதுக்கப்பட்டிருக்கும், துவாரபாலகர், பிரமன், விஷ்ணுவின் அமைப்பும், தூண்களின் சிற்ப இலக்கண விசேஷங்களும், கி. பி. ஏழாம் நூற்றாண்டில், மஹேந்திர வர்மன் என்ற பல்லவ மன்னன் அமைத்திருக்கும் கோயில்களில் காணப்படுவன வற்றோடு பெரிதும் ஒத்திருத்தலானும், இங்கே கி. பி. ஏழாம் நூற்றாண்டில் கச்சிமன்னனாய் விளங்கியிருந்தவனும், பெரிய புராணத்தில் குறிப்பிடப் பட்டவனுமான “வாதாபி கொண்ட நரசிங்கப் போத்தராயன்” கல்வெட்டின் பகுதி பொறிக்கப்பட் டிருப்பதாலும், இம்மண்டபம் இற்றைக்குச் சற்றேறக்குறைய 1250 வருஷங்களுக்கு முன்னர் (கி. பி. ஏழாம் நூற்றாண்டில்) அமைக்கப்பட்டிருக்கலாம் என்று நிச்சயிக்கப் படுகிறது. மேலும் பிரமன், விஷ்ணு, சிவலிங்கம் ஆகிய

மூன்று மூர்த்திகளையும் ஒருங்கே ஆலயத்தில் அமைப்பது, பல்லவர் கோயிலுக்கே இலக்கணமாயிருத்தலும், இக்கொள்கை வலியுறுத்தப் படுகிறது.

நிற்க, மலைபுச்சியிலுள்ள ஆலய அமைப்பை உற்று நோக்கின், இவ்வாலயம் தமிழ் நாட்டிலுள்ள மிகவும் புராதனமானதென்று அறியக் கிடக்கிறது. இவ்வாலயத்தின் மூலஸ்தானம் மூன்று பிரம்மாண்டமான கற்பாறைகளால் ஆக்கப்பட் டிருக்கிறது. இதன் உட்பக்கத்துச் சுவர்களில், மேற்கில் ஸோமாஸ்கந்தரும், பிர்ம்மாவும், விஷ்ணுவும், வடக்குச் சுவரில் யோக தக்ஷிணாமூர்த்தியும், முனிவர் இருவரும், தெற்கில் நந்திகேஸ்வரர், சண்டிகேஸ்வரர் உருவங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன. மூலஸ்தானத்தின் பின்னர் ஸோமாஸ்கந்தரின் படிமம், சிவன், பார்வதி, சுப்ரமணியர் பிற்காலத்திய பல்லவ ஆலயங்களிலேயே மாத்திரம் பெரும்பாலும் காணப்படுவதிலும், பல்லவருக்குப் பிந்தியமைக்கப்பட்ட கோயில்களிலாவது தற்காலத்து ஆலயங்களிலாவது காணப்படாமையாலும், இக்கோயிலின் மூலஸ்தானம் மஹேந்திரன் காலத்திற்குப் பிந்தியதான கி. பி. ஏழாம் நூற்றாண்டின் கடைசிக் காலத்தில் அமைக்கப்பட்டதென்று, ஒரு தலையாக நிச்சயிக்கலாம். மேலும், இவ்வாலயத்துக்கருகில் சிதறிக்கிடக்கும் புராதனத் தூண்களில் இராஜசிங்கபல்லவன் காலத்திய இலக்கணங்கள் அமைந்திருப்பதும் கவனிக்கத்தக்கது. ஆனால், திருக்கழுக்குன்றத்து பக்தவத்ஸலேஸ்வரர் கோயிலில் கண்டுபிடிக்கப்பட்ட ஆதித்ய சோழன் காலத்துத் தமிழ்ச் சாஸனமொன்றில், இவ்வூரிலுள்ள மூலஸ்தானத்துப் பெருமானுக்கு ஸ்கந்தசிஷ்யன் என்ற மன்னன் தேவதானஞ் செய்ததாகக் குறிப்பிட்டிருக்கிறது. இந்த மூலஸ்தானத்துப் பெருமானடிகளின் ஆலயம் எது என்று இதுகாறும் நிச்சயிக்கப்படவில்லை. ஸ்கந்தசிஷ்யன் என்பவன் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டில் அரசுபுரிந்த பல்லவ மன்னருள் ஒருவன். ஒரு வேளை

இக்கோயில் ஆரம்பத்தில் குறிக்கப்பட்ட ஒரு கல் மண்டபம் என்ற சிவாலயத்தைக் குறிக்குமாயின், அதுவே திருக்கழுக்குன்றத்திலுள்ள மிகுந்த புராதனப் பகுதியென்று துணியலாம்.

இது நிற்க, திருக்கழுக்குன்றம் செல்வோர் யாவரும் மலையுச்சியில் தினந்தோறும் நடுப்பகலில் இரண்டு கழுகுப்பக்ஷிகள் பண்டாரம் கொடுக்கும் உணவை அருந்தக் காணலாம். இதைப்பற்றிய கொள்கைகளும் கதைகளும் உண்டு. இப்பக்ஷிகள் முனிவரிருவரென்றும், தினந்தோறும் காசியிலிருந்து வருவதாகவும், இராமேச்வரஞ் செல்வதாகவும், சொல்லப்படுகிறது. இவ்விஷயம் எவ்வாறாயினும், அநேக நூற்றாண்டுகளாக இவ்வாறு நடந்து வருகிறது குறிப்பிடத்தக்கது. கி. பி. 1693-ம் வருஷம் பிரசுரிக்கப்பட்ட, இவ்வூர் விஜயஞ் செய்திருந்த ஹேவர்ட் என்ற டச்சு நூலாசிரியருக்கு கி. பி 1681-ம் வருஷம் ஜனவரிமீ 3௳ 10 நம்பர்கள் ஸகிதம், தான் திருக்கழுக்குன்றத்து மலைக்கோயிலை விஜயம் செய்ததாகவும், அங்கே நடுப்பகலில் இரண்டு பக்ஷிகள் மேற்குறித்த வண்ணம் ஆகாரம் உட்கொண்டதைப்பிரத்தியட்சமாகக் கண்டதாகவும், தமது நூலில் குறித்து எழுதியிருப்பது கவனிக்கத்தக்கது. வேதகிரி மலையின் படமொன்றும் இந்த நூலில் காணப்படுகிறது. கி. பி. 17-ம் நூற்றாண்டின் டச்சுக்காரர், வர்த்தக நிமித்தம் இந்தியாவிற்கு வந்து, திருக்கழுக்குன்றத்துக்கு 10-மைல்களுக் கப்பாலுள்ளதும், ஆங்கிலத்தில் ‘சதராஸ்’ என்று மருவி வழங்கப் படுவதுமான ‘சதுரங்க பட்டணத்தில்’ பண்டசாலை கோட்டை கொத்தளங்கள் அமைத்து, வர்த்தகஞ் செய்து வந்தனர். இவர் அடிக்கடி வியாபார நிமித்தமாகப் பழவேற்காட்டிற்குப் போக நேர்ந்தது. இவ்வாறு திருப்போரூர் மார்க்கமாகச் சதுரங்கப் பட்டணத்திற்குச் செல்லும் டச்சு வர்த்தக சாலை உத்தியோகஸ்தர், திருக்கழுக்குன்றத்துக் கண்கவரும் வனப்பையும், மலையுச்சியி

விருந்து கீழ்நோக்குவதனால் அடையக்கூடிய நேத்திரானந்தத்தையும் உத்தேசித்து, பன்முறை இம்மலையுச்சிக்குச் செல்வாராயினர். இவ்வாறு செல்வோர் தாம் மலையின்மீது ஏறிச்சென்றதற்கு அறிகுறியாக, அங்குள்ள முன்பே குறிக்கப்பட்ட ஒருகல் மண்டபத்தின் சுவர்களிலும் தூண்களிலும் தங்கள் நாமதேயங்களையும் தாம் விஜயம் செய்த காலத்தையும் பொறித்திருக்கின்றனர். இத்தகைய கல் வெட்டுகளில் சுமார் 20 அல்லது 25 இப்பொழுது இப்புராதன பல்லவ சிவாலயக் குகைக் கோயிலில் காணப்படுகின்றன.

இவ்வாறு விஜயஞ் செய்த டச்சு வர்த்தக உத்தியோகஸ்தர்களுள் கனம்-பெவிலியன், கீழ் இந்தியா டச்சு கவர்னர் பதவி வகித்தவரும், பழவேற்காட்டில் கி. பி. 1665 முதல் 1676 வரை டச்சு வர்த்தக நிர்வாகத்தில் முதன்மை அதிகாரம் பெற்றவருமாவர் லாரன்ஸ்-பிட் என்பவர். கி. பி. 1687 முதல் 1698 வரையில் விளங்கியிருந்த மற்றொரு டச்சு கவர்னர் மார்டினஸ்-பிட், ஹெம்சிங் முதலிய இதர உத்யோகஸ்தர்கள் வரலாறு 'படேவியன் டயிரி' என்ற டச்சு சரித்திர நூலில் கண்டுகொள்க. மேற்குறித்தவற்றால் கி. பி. 17-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எண்ணிறந்த உலாந்திய கவர்னர்களும், பிரபல வர்த்தகரும், நிர்வாக அதிகாரிகளும், நூலாசிரியரும், வேடிக்கை பார்ப்பவரும், திருக்கழுக்குன்றத்துக்கு அடிக்கடி சென்றது நன்கு புலப்படுகிறது. கி. பி. 1693 இல் ஹேவார்ட் என்ற டச்சு நூலாசிரியர் பிரசுரித்த கீழ் இந்தியா பிரயாணக் குறிப்புகளில் திருக்கழுக்குன்றத்து மலைக்கோயிலின் அழகிய படம் ஒன்று காணப்படுவது இங்கே குறிப்பிடத் தக்கது.

# திருக்கழுக்குன்றப்புராண

# ஓரடிக்கீர்த்தனை.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி

வேதாத்ரி நாதா சரணம் - விமல சதுர்
விதிமா லொடுயெதி கதிர்வானவ ரதி
பதிமா தவ எதி பதியாதியர் துதி. (வேதாத்ரி)

அநுபல்லவி.

மாதா பிதாவுமாகி மன்னுமாத்தும கோடி
வர்க்க முன்னை யறியும் மார்க்க மிதென்று நாடி
ஆதாரமாக எம்மை யளித்தாய் படித்தோர் தேடி
ஐயந் திரிபு களால் அலைக்கழிந் தார்கள் வாடி
ஆதலி னெம்முடி மீதினில் யாவருங் காண - விளங்கும்படி
சீத மலர்ப்பத மேவுற அனந்தகல்யாண - குணசகித
ஏத மிலாத சொரூப நிவாசமும் பூண - வேண்டுமெனவே
வேத மெலாமுன மோத மகிழ்ந்துகிர் வாண - தேவபாஷையில்

அலங்குறு மலந்தட நிலந்தனில் விலங்கலின்
இலங்குக கலந்தென நலந்திக ழலங்க்ருத
அங்க மொடுவிவித சந்தை கல்ப நிருவாண
துங்க உபநிடத மந்த்ர சிக்ஷை முதலான
அனைத்துந் திரண்டுகண்ட வருக்கானந்த மழுந்த
இனத்தினில் வந்த அந்த மலைக்கொழுந் தாயெழுந்த
(வேதாத்ரி)

சரணப் பல்லவி.

பூஜிக்க வரும்பொருளே - ருத்ரகோடிகள்
பூருவத்திலொரு காருடப் பறவை
யாருலக்க முனைமேரு ஒத்தவிடை (பூஜிக்க)

பொன்னடை திலொரு மின்னு ளழுதிட
உன்னு ணற்தரு மன்னோரில தெதிர்
போந்து வச்சிர மதைவிட நிரந்தரம்
பாந்தள் சுற்றிய சிறைபெரு புரந்தரன் (பூஜிக்க)

புண்டர அண்டஜ வண்டனு விண்டிடு
தொண்டது கொண்டிடு சண்டப்ர சண்டரும்
பொருவலி தெரியவம் பாகி விடாதொரு
பருதி யுலகெழு சம்பாதி ஜடாயுவும்


புத்தியின்றி வித்தியாசத் தொடிகலுறும்
பக்திசம்புகுப்த மாகுப்த ரிருவரும்
உஞ்ச வஞ்ச மிஞ்சி கெஞ்சி கெஞ்சி தஞ்சம் பேசித
வஞ்சி தைஞ்சி அஞ்சி சஞ்சி தங்கொளுஞ் சம்பாதியும்
பூஜிக்க வரும் பொருளை - அடியேன் வினை
போக்கி எனை ஆண்டருளே

நேசித்து வந்தடைந்த நிருதர்களுக் - கபயம்
நீட்டும் ப்ருகுமனைவி நிலையறியாமல் ஜயம
பேசிக் கதிர்விடுசக் கரத்தினலழன் மயம்
பெருகக் கொலை செய்திட்ட பெண்கொலை யாலிதயம்
பெருகிய பவமது கெட அனு தினமுமுராரி -
தவத்தைச் செய்யக்
கருதரு திருவரு ளருளினை சதுமுகன்பாரி - சாவித்திரியாள்
அருமறை யகலுறு மெனவொரு கொடு மொழிகூறி -
சபித்திடலும்
வெருவுற அறிதுயி லமரரி மொழிகொடுதேறி -
வணக்கஞ்செய்ய
வேதமருவ இருமாதர் மருவவர மேதினியிலருளி -
ஆதரணை செய்தனை
விநாசவிதியொடு தேவ-பசு-தனுது மடிகதை தாவ-பல
மிக்குறு-மட்டவ-சக்களி-னட்டச
விக்கின-மட்டுவி-லக்கி-வெருட்டினை
மேவுது வாதச சூரியர் தாழ்பிசி தாசன ராலுறு பீடையெலாமறு
வித்த கத்த சுத்த அஸ்தி ரத்தினைத் தெரித்தளித்து
மற்று மெய்த்த வத்த வர்க்கி லக்க ணத்தினைப்பகுத்து
வேட ரோடுவரு சுரகுரு வாற்கூலம்
நீடு கோடுடைய கருநிற ஆர்க்கோலம்
வீந்து-முன்னையவுரு-வார்ந்து-மன்னுறரவி
வேந்து-வெண் குஷ்டமது-தீர்ந்து-தன்னிஷ்டமொடு
விபவதிருப்பணி-சுபமொடியற்றிட-நிபமறுநற்பத சபலம
[ளித்தனை


வினையகழ்ந்திலங்க-திரிபுரசுந்தரி சகிதமொடுந்தரி
சனமுவந்து தந்து-திரவியமொடும்பதி அறிவினையும்பெற
விந்தைத் தமிழ்க்கவியை ஓது ஜகந் நாத னெனும்
எந்த னகத்திலக ஏது மிகு ஜால மின்னும். (வேதாத்ரி)

ஓரடிக்கீர்த்தனம் - முற்றிற்று.

# இந்நூலாசிரியன்




பண்டிட். S. R. நமசிவாயராஜயோகி,
(ஜெனனம்: பிரபவஸூ புரட்டாசிமீ 14உ சனிக்கிழமை)
(28—9—1867)




காக்கைக்குன்று

திருக்கழுக்குன்றம் சங்குதீர்த்தம் நீராழிமண்டபம்



திருக்கழுக்குன்றம் (வெளித்தோற்றம்)




திருக்கழுக்குன்றம் திருமலைக்கோயில் பக்ஷிதரிசனம்

ஓம்
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# திருக்கழுக்குன்றமென்னும்
# உருத்திரகோடித்
# தலமான்மியம்

(வசனம்)

ஸ்வதந்திரமே
ஆத்ம
சொரூபம.



ஸ்வதந்திரமே
பிறப்புரிமை.

வடமொழி தென்மொழி இரு புராணங்களை யனுசரித்து
ஆயுர்வேத பண்டிதர்

S. R. நமசிவாய ராஜயோகி

*(Son of S. Rathna Chettiar of Ripon Press and Scholar of Sri Punjatchara Sadasiva Yogi and Reddi Paradesiar, Editor and Proprietor of Arya Jana Paripalini, Viveka Sundaram, U.B.R. Series &c., Founder of Sivaraja Yogi Medical Hall, A.T.&.H.V.E. Book Depots &c.,)*

அவர்களால் சித்தாந்த வேதாந்த குறிப்புரையுடன்
எழுதப்பெற்றது.

1924.

விலை ரூபா 2.] [ருத்ரோத்காரி௵

All Rights of Translation Reserved.

## குருத்யாஷ்டகம்.

(1) பரமானந்தம் பரமசுகிர்தம் கேவலம் க்யான மூர்த்தீம், நிஸ்வாதீதம் ககனசதுர்ஸ்யம் தத்வமஸ்யாதி லக்ஷியம்:

(2) ஏகம் நித்யம் விமலமசலம் சர்வதாசாக்ஷிபூதம், பாவாதீதம் த்ரிகுணரஹிதம் ஸ்ரீ சற்குரும் நமாமி :

(3) தியானமூலம் குரோர்மூர்த்யம் பூஜாமூலம் குரோர்ப்பதம், மந்த்ரமூலம் குரோர்வாக்யம் முக்திமூலம் குரோர்க்ருபா :

(4) குருப்ப்ர்மம் குரோர்விஷ்ணு குருதேவோ மஹேஸ்வரா, குருசாக்ஷாத் பரப்ர்மம் தஸ்மை ஸ்ரீ குரவேநம :

(5) மன்னதோ ஸ்ரீ ஜகன்னதோ மஹத்குரும் ஸ்ரீ ஜகத்குரும், மமாத்மா சர்வபூதாத்மா தஸ்மை ஸ்ரீ குரவேநம :

(6) சைதன்யம் சாஸ்விதம் சாந்தம் வ்யோமாதீதம் நிரஞ்சனம், நாதபிந்துகளாதீதம் தஸ்மை ஸ்ரீ குரவேநம :

(7) ப்ர்மவிஷ்ணுஸ்ய ருத்ரஸ்ய ஈஸ்வரஸ்ய சதாசிவ : ஏசே சர்பபக்த்ஹேப தஸ்மை ஸ்ரீ குரவேநம :

(8) சர்வாத்மகம் ஸர்வஸமம் சச்சிதாநந்தவிக்ரஹம், சர்வாதாரம் சர்வபூரணம் சதா நாராயணம் பஜே :

(தெலுங்கு சுலோகம் தமிழ் எழுத்தில் எழுதியது)

## ஸ்ரீ வேதகிரீஸ்வரர் ஸ்தோத்திரம்.

பக்ஷிராஜ கோடீர பங்கஜாக்ஷபிரபு, பன்னகேந்த்ரசயன பத்மநாபா, பாலசுந்தரதீச யக்ய கருணலயா, ஜகதீச ஸர்வேச பத்மநேத்ர சந்த்ரசூடாமணீ ஆத்மரக்ஷாமணி நீலகண்டபிரபு, நீலவர்ண சோமசங்கரதேவ பரமஹம்சப்பிரபு, ரமணீய குணதாம கமலநாபா, நின்னுபஜியிந்து நிப்புடு ரலமிதோடு பரமசங்கேச ஸ்ரீ கண்ட புரநிவாச பக்ஷிதீர்த்தேச சர்வேச சங்கபேச ருத்ர கோடீச ஸ்ரீவேதாசலேசஹா :

## ஸ்ரீ வேதகிரி மகிமை.

சந்தத சங்கதீர்த்த ஸ்நான பலப்பிராப்தமுலு, வேல்பு தொரலுனு முக்ய தாயு, வேடுகங்கதர்சன மாத்ரசமசெனு, பாபமுல் யமபாதையுறுமானு யெவ்வையுஸு, நினு மங்களவாரமுல் மகிமீத ஜனலுனு கிரிப்ரதக்ஷிண சாயகலுகு பிரஜலு, கொண்டமன்னுனுதின கொப்பரோகமு வ்யாதி சங்கடகுல்மமுல் சமசிபோனு, வேதகிரீசுனும் வேதாந்த வயித்யுராணி த்ரிபுரசுந்தரியந்துரு யீதிரிபுவனமுன காசி ராமேஸு காளாஹஸ்திந்த்ர புரமு சமத்மறையகாரது யீஸ்தலமு மேலு.

ஓம்

சர்வம்சக்திமயம்.

# சமர்ப்பணம்.

உலகமுதற்பொருளாய், உம்பர்க்குணர்வரிதாம் பொருளாய், ஓதிய வேதாகமத்தினுச்சியினுட் பொருளாய், பல கலையும் தெரிந்துணர்ந்தோர் பரவிய வான்பொருளாய், நித்ய, நிர்க்குண, நிட்கள, நிராமய, துரிய, துரியாதீத, பர, பரதத்வ, பரப்பிர்ம்மமாய் விளங்கும், சர்வசாக்ஷியினிடத்து அபின்னமாகத் தோன்றி, உலகத்தை ஆட்டுவிக்கும் சத்து சித்து ஆனந்த சுயஞ்சோதி சொரூபிணியாய், ஆதிசக்தி, மஹாசக்தி, சிற்சக்தியெனப் பல பெயர் புனைந்து, நவரத்ந கசித பொன் ஊஞ்சலில், ப்ர்ம்ம விஷ்ணு ருத்திர மஹேஸ்வரர்களை ஊஞ்சற் கால்களாகவும், சதாசிவத்தைப் படுக்கையாகவும் அமைத்து, அதிலமர்ந்து சர்வாத்மாக்களையும் அடிமையாக்கி, ஞான யோகிகளின் உள்ளத்தில் மாசற்று விளங்கி, அடியேனது உபாசனா மூர்த்தியாயும் ஆத்ம தேவதையாயும் பிரகாசிக்கும்.

**ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அம்பாளது**

திருவடிப் பொற்றாமரைகளில்

பக்தி விநயத்துடன்

**இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.**

அடியார்க்கடிமை,

**நமசிவாயன்.**

(இந்நூலாசிரியன்)

ஓம்

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கழுக்குன்றத்

# தமிழ் ஸ்தல புராண ஆசிரியர்

# அந்தகக்கவி - வீரராகவ முதலியார்

# சரித்திரச் சுருக்கம்.

---

திருக்கழுக்குன்றமென வழங்கும் உருத்திரகோடி மஹா க்ஷேத்திர மான்மியம், ஸ்காந்த புராணம் நந்தீஸ்வர சம்வாதத்தில் கிரந்த ஸ்லோகமாகக் கூறப் பட்டுள்ளதை, அந்தகக்கவி-வீரராகவ முதலியார் என் பவர் 832 திருவிருத்தங்களாகத் தமிழில் திருக்கழுக் குன்றப் புராணமெனச் செய்திருக்கிறார். ஆதலால் அக் கவிமானின் சரித்திரத்தைச் சுருக்கி ஒருவாறு கூறு தல் இங்கு பொருத்தமாகும்.

அந்தகக்கவி வீரராகவ முதலியார் என்பவர் செங்கற் பட்டு ஜில்லா பொன்விளைந்தகளத்தூர் (பொற்களந் தை) க்கருகிலுள்ள பூதூரில் வடுகநாத முதலியார் என்பார்க்குப் புத்திரர். இவர் பூர்வ கன்மத்தின் பல னாற் பிறவிக் குருடராயிருந்தும், தமிழ்க்கல்வியில் ஆதி சேடனையும் அகத்தியனையும் போன்று பிரசித்தி பெற்று விளங்கினார். இவருடைய காலத்தில் இவர் குடும்பத்தார் பூதூரை விட்டுப் பொற்களந்தை வந்து குடியிருந்தார் கள். இவர் காஞ்சீபுரஞ் சென்று கல்வி பயின்றனர்

என்பதும் பிறகு சிறந்து விளங்கினர் என்பதும் "தமிழ் நாவலர் சரிதை" யிற் கூறியிருக்கின்றன.

"ஏடாயிரங்கோடி எழுதாது தன்மனத், தெழுதிப் படித்த விரகன், இமசேது பரியந்தம் எதிரிலாக் கவி வீர ராகவன்" என்னும் பாசுரத்தினல், இவர் பிறவிக் குருடராயிருந்தும், கல்விகற்ற அருமை இவ்வளவிற் றென்பது ஒருவாறு அறியலாம். காஞ்சீபுரத்தில் கல்வி கற்றுப் பிறகு தன்னூராகிய பொற்களந்தைக் கிராமத்துக்கு வந்து, தன் மனையாளோடு வாழு நாட் களில், ஓர்நாள் நம் முதலியார் வெளிச்சென்று திரும்பி வருவதை, அருகிலிருந்தவர்களுள் ஒருவர், அவர்தம் மனையாளுக்குச் சொன்னர்; மனையாள் இவரது கல்வித் திறத்தினையும் கவிப் பெருமையினையும் அறியாது, பிறவிக் குருடாகிய சிறுமையைக் கவனித்து, "இவர் வித்வத் திறமையினல் யானைக்கன்றும் வளநாடும் பெற்று வந்தாரோ" என்று, மிக்க அலக்ஷியமாகச் சொன்னாள். இதனைச் செவியுற்ற முதலியார், சிறிது ஆலோசித்து, ஆம்! வாஸ்தவந்தான், "அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை, பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லாகியாங்கு" எனத் திருவள்ளுவதேவர் குறிப் பிட்டது பொய்யாகுமா?" மனைவி யிகழ்ந்ததற்குப் பொருளில்லாமையே காரணம் என மனதிற்கொண்டு, பொருள் தேடு நிமித்தம் வீட்டை விட்டுப் புறப்பட்டு, ஒரு சிஷ்யனைத் தனக்குத் துணையாகக் கொண்டு, தேச யாத்திரை சென்றார்.

அவ்வாறு போம்போது ஒருநாள் முதலியார் தம் சீடனுடன் ஒரு குளக்கரையில் தங்கி யிளைப்பாறிக்

கொண்டிருக்கையில், அவர் கொண்டு வந்த கட்டமுதை நாய் தூக்கிக்கொண்டு போய்விட்டது. அப்போது அவர் பாடியது :—

*" சீராடையற்ற வயிரவன் வாகனஞ் சேர வந்து,
பாராரு நான்முகன் வாகனந் தன்னை முன் பற்றிக்கௌவி
நாராயணனுயர் வாகன மாயிற்று நம்மை முகம்
பாரான மைவாகனன் வந்தே வயிற்றினிற் பற்றினனே."

புலவர், பிறகு மேற்சென்று சோழ நாட்டை யடைந்து, அங்கு சில நாளிருந்து, அதன் பிறகு ஈழநாட்டுக்குச் சென்றார். அந்த ஈழநாட்டின் வடபாகத்தை அக்காலத்தில் பர ராசசிங்கம் என்னும் தமிழ் அரசன் ஆண்டு கொண்டிருந்தான். அங்கு அரசனுடைய பேட்டிக்குப் பல நாள் காத்திருந்தும், அரசனைக் காணும் சமயம் வாய்க்கவில்லை. அரசன் தவிர மற்றெல்லோரும் இப் புலவரையும், அவரது கல்வித்திறத்தையும், யாழ் வாசிக்கும் பெருமையினையும் கண்டு களித்தார்கள். ஆயினும், அரசாங்க வித்துவான்களும் நாவலரும் புலவருடைய வரவை அரசனுக்குத் தெரிவிக்கவில்லை. புலவர் பெருமான் அரச பேட்டிக்குப் பலநாள் காத்திருக்கிறார் என்பதும், யாழ் வாசிப்பதில் மிக்க திறமையுடையவரென்பதும், ஒருநாள் அரசன் மனைவி அறிந்து, அத்தகைய கல்விமானை அரசன் வரவழைத்து நல்வரவு கூறவில்லையே என அரசன் மீது கோபங்கொண்டு, அன்றிரவு அரசன் பள்ளியறைக்கு வந்தபோது, வழக்

* வயிரவன் வாகனம்-நாய்; நான்முகன் வாகனம்-அன்னம்; நாராயணன் வாகனம்-கருடன் (பருந்து); மைவாகனன்-ஆட்டுக்கடாவை வாகனமாக உள்ளவன்-அக்நிதேவன். (பசி)

கப் பிரகாரம் சந்தோஷத்துடனிராது, கடுகடுத்த முகத்துடன் ஒதுங்கி நின்ருள். அரசன் ஆலோசித்து, மனைவிக்குக்கோபம் உண்டாவதற்குக் காரணம் என்னவாயிருக்குமெனச் சிந்தித்தான். ஒன்றும் தோன்றவில்லை. கோபத்தை ஆற்ற முயன்ருன். முடியவில்லை; என் செய்வான் அரசன். அன்றிரவெல்லாம் ஆழ்ந்த சிந்தனையிலிருந்து, தூக்கமின்றிக் காலம் கழித்து, மறுநாட் காலையில் அரசன் தன் சிங்கார வனத்தில், இரவு நேர்ந்த மனக்கவலையைச் சிந்தித்துக் கொண்டே உலாவி வந்தான். அப்போது அத்தோட்டத்தில், ஒரு மரப்பொந்தில் கிளி ஒன்று வெளியே வருவதும், பயந்து உள்ளே போவதும், மறுபடியும் வெளியே வருவதும், உள்ளே போவதுமா யிருந்தது. உற்று நோக்கினுன் அரசன்; கிளி பயப்படுவதற்குக் காரணம் ஒன்றும் விளங்கவில்லை. முன்னுளிரவு மனைவியின் கோபத்துக்குக் காரணம் இன்னதெனவும் தெரிந்தானில்லை. இவ்விரு கவலையும் மனதுக்குட் புகுந்து, அரசனைக் கஷ்டப்படுத்த ஆரம்பித்தது. அரசன் கொலு மண்டபத்துக்கு வந்ததும், அவ்விடமுள்ள அரசாங்க வித்துவான்களை நோக்கி, "புலவர்களே! என் மனத்துள்ள கவலை இன்னதென்றும், அதற்குக் காரணம் யாதென்றும் ஆராய்ந்து விரைந்து சொல்லுங்கள். இன்றேல் ஆக்கினை உங்களை எதிர்பார்க்கும்" என்று அரசன் மொழிந்தான். பாபம்! புலவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்தார்கள். "கண்ட சுத்தி" பாடும் புலவர்களும் கலங்கி நின்ருர்கள்; பாவலர்கள் பயந்தார்கள்; நாவலர்கள் நடுக்க

முற்றூர்கள். அப்புலவர்களுள் ஒருவர் அரசனுடைய மனக்கவலையை எப்படியாயினும் நீக்கவேண்டும்; நம்மவர்களுக்கு வந்துள்ள ஆபத்தைத் தீர்க்கவேண்டும் என்னும் எண்ணங்கொண்டு, "மகாராஜாவே! சோழ நாட்டிலிருந்து அந்தகக்கவி-வீரராகவ முதலியார் என்னும் மஹாவித்துவான் ஒருவர் நம் நாட்டுக்குத் தங்கள் பேட்டிக்கு வந்து காத்திருக்கிறூர். அவரது கல்வித் திறமையும், யாழ் வாசிக்கும் நேர்மையும் மிக விசேஷமாயிருக்கிறது. அவர் தங்கள் மனக்கவலைக்குக் காரணம் சொல்ல வல்லவர்; உத்திரவானல் சமுகத்துக்கு அழைத்து வருவோம்" என்றூர். அரசன் உடனே அப்புலவரை அழைத்து வரும்படிப் பல்லக்கு அனுப்பினூர். அந்தகக்கவி-வீர ராகவ முதலியார் என்னும் புலவர் பல்லக்கின் மீதிலமர்ந்து, அரசரது கொலுமண்டபத்துக்கு வந்தார். அவர் அந்தகராயிருத்தலால், இராஜ பார்வைக் குரியால்லரென்று, அரச சபையில் குறுக்கே திரையொன்று போடப் பட்டிருந்தது. புலவர் பெருமானுடன் வந்த சிஷ்யன், கொலு மண்டபத்தைக் குறுகினவுடன், குறுக்கேயிருந்த திரையைக் கண்டு, "திருச்சிற்றம்பலம்" என்றதும், இக்குறிப்பறிந்த புலவர் "முத்துத் திரை இற்று விழ" என்றூர். உடனே திரை அறுந்து விழுந்தது. இதைக்கண்ட அரச சபையிலிருந்தோர் புலவரிடத்தில் அச்சமும் பக்தியுங் கொண்டு, அவரை அரசற்கருகே அழைத்துக்கொண்டு போய், ஓர் ஆசனத்தில் அமர்த்தி உபசரித்தார்கள். மேலும் அவரைப் பரீக்ஷிக்கும் பொருட்டு, அரசன் கையில் வில்லும் அம்பும் கொடுத்து,

அரசனுடைய கோலம் எம்மாதிரியாயுள்ளது என்று மந்திரிகள் கேட்கப் புலவர் பெருமான்

(1) "வாழுமிலங்கைக் கோமானில்லை மானில்லை
ஏழு மராமரமோ விங்கில்லை—ஆழி
அலையடைத்த செங்கை யபிராமாவின்று
சிலையெடுத்த வாறெமக்குச் செப்பு"

என்று சொல்லிப் புத்தி சாதுரியத்தினால், அரசன் கோலத்தைப் போர்க்கோலமாக்கி, உவமித்துக் காட்டினார். பிறகு அவரை வருவித்ததின் காரணத்தைத் தெரிவிக்க, அவர் அரசனுடைய உட்கருத்தையும் அதன் காரணத்தையும் உள்ளடக்கிக் கூறிய செய்யுள்.

(2) "வடவைக் கனலைப் பிழிந்து கொண்டு மற்று மொரு
கால் வடித்தெடுத்து
வாடைத் திருத்தி வைத்தூதி மறுகக் காய்ச்சிக்
குழம்பு செய்து
புடவிக் கயவர் தமைப் பாடிப் பரிசு பெறுமற்
றிரும்பி வரும்
புலவர் மனம் போற்சுடு நெருப்பைப்புழுகென்
றிறைத்தாற் பொறுப்பாளோ."

(3) "அடவிக் கதலிப் பசுங்குருத்தை நச்சுக் குழலென்
றஞ்சி யஞ்சி

---

(1) இலங்கைக் கரசனாகிய இராவணன் இப்போதோ இவ்விலங்கையிலில்லை; மாரீசனாகிய மானுமில்லை; ஏழு மராமரமும் இவ்விடத்தில்லை; சேது பந்தனஞ் செய்த ஸ்ரீராமபிரானைப் போன்று விளங்கும் ஏ! அபிராமா! கையில் வில்லுங் கணையுங் கொண்ட காரணம் யாது என்பது பொருள்.

(2) மனைவி சினங் கொண்டதற்குக் காரணம் கவிராயர்க்கு அரசன் பேட்டி கொடாதிருந்தது.

(3) கிளிவெளியே செல்லாததற்குக்காரணம்,காற்றில் அசையும் வாழைக் குருத்தை நச்சுக்குழலென்று பயப்பட்டு, கிளி வெளியே வருவதும் உள்ளே போவதுமாயிருந்தது.

அஞ்சொற் கிளிகள் பஞ்சரம் விட்டகலா துறையு
மகளங்கா
திடமுக்கடலா ரணமுகைத்த தேவே தேவ
சிங்கமே
திக்கு விஜயஞ் செலுத்தி வரும் செங்கோனடாத்து
மெங்கோவே."

இவ்விரண்டு பாட்டுகளாலும் அரசன் நினைத்திருந்த இரண்டு விஷயங்களும், அதற்குத்தக்க காரணங்களும், புலப்படப்பெற்றுச் சந்தோஷித்துப் புலவர் மெருமானு க்கு அநேக பரிசுகள் கொடுத்தான் ஈழ நாட்டரசன் பர ராசசிங்கம். அப்பரிசுகளுள் பொற்பந்தம் பெற்ற போது பாடிய வெண்பா :—

"பொங்குமிடியன்பந்தம் போயதே யென்கவிதைக்
கெங்கும் விருது பந்த மேற்றதே—குங்குமந்தோய்
வெற் பந்தமானபுய வீரபர ராசசிங்கம்
பொற் பந்த மின்றளித்தபோது."

யானைக்கன்று பெற்றபோது பாடிய விருத்தம் :—

"இல்லென்னுஞ் சொல்லறியாத சீமையில்
வாழுதானைப்போய் யாழ்ப்பாணன்யான்
பல்லை விரித்திரந்தக்கால் வெண் சோறும்
பழந்தூசும் பாலியாமற்
கொல்லை நினைந்தே தனது நால்வாயைப்
பரி சென்று கொடுத்தான் பார்க்குள்
தொல்லை யென தொருவாய்க்கும் நால்வாய்க்கு
மிரை யெங்கே துரப்புவேனே."

என்று பாடியபோது, அரசன் அவ் யானைக்கன்று வள ரும் படியான நாடுங் கொடுத்தான். பிறகு சில காலம் அந்த அரசனிடத்திருந்து, தான் பெற்ற பல்லக்கு

யானை முதலிய பரிசுகளுடனும் பரிவாரங்களுடனும் தன்னூருக்குத் திரும்பி வந்தார்.

இவர் செங்கற்பட்டிலிருந்த திம்மய்ய அப்பய்யன் என்பவருடைய வேண்டுகோளுக்கிணங்கித் திருக்கழுக்குன்றப் புராணம் பாடினார். அது பின் வரும் சீட்டுக் கவியாற்றெரியும் :—

"இந்நாளிருந்த பேர் புதிய பாகம் பண்டிருந்த பேர் பழைய பாக, மிருபாகமும் வல்ல லக்கணக்கவி வீரராகவன் விடுக்கு மோலை, அன்னதி தானப்பிரவாசன் பிரசங்கத்தனந்த சேடாவதார, னகிலப்பிரகாசன் திம்மய்ய வப்பய்யன் மகிழ்ந்து காண்க, தன்னுளு மோலையும் வரக்கண்டு நாம் வேத சயில புராணத்தையித், தனைநாளிருந் தோதினோ மரங்கேற்றுவது தான் வந்தலாபமில்லை, நன்னுவ லோருடனிதைக் கேட்டெனைச்சோழ நாட்டுக்கனுப்ப வேணும், நவிலோலை தள்ளாமலே சுக்கிரவாரத்து நாளிங்கு வரவேணும்."

இப்படிப் பல் வேறிடங்களிற் சென்று பாடிப் பரிசு பெற்றுத் தன்னூர் சேர்ந்தபோது, தன் மனைவி தான் பெற்று வந்த பரிசு என்ன வெனக்கேட்டதும், அதற்கிவர் கூறிய உத்தரமும் பின் வரும் பாசுரம் தெரிவிக்கும் :—

"இம்பர் வானெல்லை யிராமனையே பாடி, யென் கொணர்ந் தாய் பாண நீ யென்றாள் பாணி வம்பதாங் (1) களப மென்றேன் பூசு மென்றாள், (2) மாதங்க மென்றேனும் வாழ்ந்தே மென்றாள், பம்புசீர் (3) வேழ மென்றேனின்னு மென்றாள்,

---

(1) களபம் : யானை ; வாசனைத்திரவியம். (2) மாதங்கம் : யானை ; பொன். (3) வேழம் : யானை ; கரும்பு.

(4) பகடென்றேனுழு மென்றாள் பழனந் தன்னைக், (5) கம்பமா வென்றே னற்களியா மென்றாள், (6) கைம்மா வென்றேன் சும்மா கலங்கினளே.''

இவர் தம் மனைவியுடனிருந்து பலநாள் இல்லறம் இனிது நடாத்தி, அந்தத்திற் சிவ சாயுச்சிய முற்றார்.

## இவரியற்றிய நூல்களாவன :—

திருக்கழுக்குன்றப் புராணம், திருவாரூர் உலா, சந்திரவாணன் கோவை, கயற்றாற்றரசன் உலா, சேயூர்க் கந்தர் பிள்ளைத் தமிழ், சேயூர்க் கலம்பகம், திருக்கழுக்குன்ற மாலை: "கந்தர் அந்தாதியைப் பாராதே கழுக்குன்றமாலையை நினையாதே" என்னும் பழமொழியினால் இம்மாலையின் அருமை பெருமை விளங்கும்:

## கழுக்குன்றமாலையின் ஓர் செய்யுள் :—

"மாடேறு தாளு மதியேறு சென்னியு மாமறையோ
னோடேறு கையுமுடையார் தமக்கிட மூருழவர்
சூடேறு சங்கம் சொரிமுத்தை முட்டை யென்றே கமலக்
காடேறு மன்னஞ் சிறகாலணைக்குங் கழுக்குன்றமே."

☞ இவர் சைவ வெள்ளாளர் என்றும், இவர் காலம் பதினேழாம் நூற்றாண்டாக (1612) இருக்கலாமென்றும் அறிஞர்கள் அபிப்பிராயப் படுகின்றார்கள். அந்தகக்கவி வீரராகவ முதலியார் இறந்ததைக் கேள்வியுற்ற கவிராஜர்களும் புவிராஜர்களும் ஏக்கமடைந்து பாடியவை :—

---

(4) பகடு : யானை ; எருது. (5) கம்பமா : யானை ; கம்பம் மாவு. (6) கைம்மா : யானை ;

"இன்னமுதப் பாமாரி யிவ்வுலகிற் பொழிந்து
பொன்னுலகிற் போய்ப் புகுந்ததான்—மன்னும்
புவி வீரராக மன்னர் பொன் முடிமேற் சூட்டுங்
கவி வீரராகவமே கம்."

"தோற்றா தொழிந்திருந்த நூலக் கவிகளெல்லா
மேற்றா கையின் விளங்கியவே—யேற்றாலுங்
கன்னாவ தாரன் கவி வீர ராகவனும்
பொன்னாருஞ் செங்கதிரோன் போய்"

"முன்னாட்டுத் தவமுனியுஞ் சேடனும் வான் மீகனுமுன் முன்னில்லாமற், தென்னாட்டு மலையிடத்தும் பாரிடத்தும் புற்றிடத்தும் சென்று சேர்ந்தார், இந்நாட்டுப் புலவருனக் கெதிரிலையே கவி வீரராகவா நீ, பொன்னாட்டுப் புலவருடன் வாது செய்யப் போயினையோ புகலுவாயே."

## இவரைப்பற்றிய ஓர் கதை:—

சந்திரவாணன் கோவையை அந்தகக் கவி வீரராகவ முதலியார் காஞ்சிபுரத்தில் ஓர் கால் அரங்கேற்றியபோது அவ்வூரில் வித்துவாம்சையாயிருந்த "அம்மைச்சி" என்னும் தாசி அவ்வரங்கேற்று சபைக்கு வந்து, கவிராயர் தம் கோவையின் களவியலிலுள்ள,

"மாலை நிகரொத்த சந்திரவாணன் வரையிடத்தே
பாலேறி பாயச் செந்தேன் மாரி பெய்ய நற்பாகுகற்கண்
டாலே யெருவிட முப்பழச் சேற்றி னமுதவயன்
மேலே முளைத்த கரும்போவிம்மங்கைக்கு மெய்யெங்குமே."

என்னும் செய்யுளைச் சொன்னதும், அவள் "கவிராயர்க்குக் கண் தான் கெட்டது; மதியுங் கெட்டதோ" என்றாள். அவர் ஒன்றுந் தோன்றாது அசை வற்று நிற்க, அவள், ஐயா! கருப்பு புன் செய்ப் பயிராயிற்

றே; "சேற்றில் முளைத்த கரும்பு" என்று சொன்னீர் களே பொருந்துமா என்றாள். கவிராயர் வேண்டு மாயின் மாற்றிவிடலாம் என்று சொல்லி, கையேடு படிப்பவரை நோக்கி, ஐயா "கொம்பை வெட்டிக்கால் கொடும்" என்றவுடன், கவிராயர் அபிப்பிராய மறிந்து, உடனே "பழச்சாற்றினமுத வயன் மேலே முளைத்த கரும்போ" என்று வாசித்தார். இவ்விருவருடைய சாதுரியத்தையும் புத்தி கூர்மையையும் அச்சபையி லுள்ளார் அனைவரும் கண்டு ஆச்சரியமும் மகிழ்ச்சி யுங் கொண்டார்கள்.

மறுநாள் பிரசங்கத்திற்கு அம்மைச்சி தனது பல்லக்கி லேறி வருவதை யறிந்த கவிராயர்

"கலைமகளு நாணி நின்று கைகட்டிப் போற்றச்
சிலைமத வேள் முன்கணையே தாங்கக்—குலமருவு
கொம்மைச் சிங்காரமுலைக் கோதிறிப்பனங்காட்
டம்மைச்சி வாராளதோ".

என்று பாடியதை அவள் அறிந்து, அன்று முதல் இவர் கள் இருவரும் வித்வத் தன்மையினால் சிநேகிதரானார் கள்.

இவ்வாறிருக்கு நாளில், அவ்வூர் வைணவப் பிரா மணர்கள் இவள் கேவலம் தாசி; கல்வி கற்றதனால் கர்வங் கொண்டிருக்கிறாள்; இவளை எவ்விதத்திலும் அவமானப் படுத்தவேண்டும் என்று எண்ணி, ஸ்ரீ வரதராஜப்பெருமாள் இரதோற்சவ தினத்தன்று, இரதத்தை அவள் வீட்டில் முட்டச்செய்து, வீட்டை யிடித்துத்தள்ளிப், பிறகு தேரைச்செலுத்துவதே நல்ல யோசனை என்று ஆலோசித்தார்கள்; இதனை யறிந்த

அம்மைச்சி தன் நேயராகிய கவிராயருக்கு அறிவிக்க, அவர் பிராமணர்களைக் கண்டு "ஐயன்மீர்! அம்மைச்சி வீட்டை யிடிக்க ஆலோசித்தது யுக்த மல்ல; உங்கள் இஷ்டம் கைகூட வேறு உபாயம் தேடலாகாதோ தேர் செல்வதற்கு" என்றார், பிராமணர்கள் வீட்டை யிடித்தால் தான் ரதம் தாராளமாய்ச் செல்லும் என்றார்கள். கவிராயர் அவர்களது உட்கருத்தறிந்து அவர் தம் தீக்குணத்துக்குப் பரிதபித்து,

"பார்ப்பார் குரங்காய்ப் படையெடுத்து வந்தீரோ
தேப்பெருமாளே கச்சிச் செல்வரே—கோப்பாக
கொம்மைச் சிங்கார லங்கைக் கோட்டை யென்று வந்தீரீ
தம்மைச்சி வாழு மகம்.

என்ற பாசுரத்தைப் பாடிய மாத்திரம் ரதம் வீட்டை யிடிக்காது தாராளமாய்ச் சென்றதாம். (இது ஒரு சாரார் சொல்லும் கதையாகும்.)

ஓர் சமயத்தில் குமுணமஹாராஜன் பேட்டியானபோது, மேற்படி அரசன் தன்மனதிலிருக்கும் சந்தேகத்தை நிவிர்த்தி செய்ய வேண்ட, அப்போது கவிராயர்பாடியது இவரது கல்வித்திறமையை நன்கு விளக்கும்.

கோளர வேந்துலகிலிந்த புதுமை யுண்டோ
வென மொழிந்த குமுண கேளாய்
ஆளரை வர்தமைத் தோய்ந்த கற்புடைய பாஞ்சாலி
யணைந்த வீமன்
வாளரி போலருகிருக்க மலய வெற்பி
லிருந்து வந்த மாமனைச்
சாளர வாயிலைத் திறந்து வரவழைத்து மூலை
யாறத் தழுவினளே,"

---

ஓம்

சுபமஸ்து.

# சாற்றுக் கவிகள்.

---

சென்னை இந்து தியாலாஜிகல் ஹைஸ்கூல் தமிழ்த் தலைமை உபாத்தியாயரும், வேதாந்த போத காசிரியராயும் விளங்கும்

## ஸ்ரீமான் கோ - வடிவேலு செட்டியார்

அவர்கள் இயற்றிய

அறு சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

(1) வேதநிலை யுணர்ந்துசிவ விழுப்பொருளாய்
விளங்கிய நம் விமலநாதன்
பேத நிலை யிரியவருள் ரத்தின சற்
குரு தனயன் பிணக்கி லாது
நாத நிலை யறிபுலவன் நமச்சிவா
யப் பெயரான் நானிலத்துள்
போத நிலை பெருகவைப்பான் புண்ணியநூல்
பலவுணர்ந்தான் பொற்பு மிக்கான்.

(2) அருத்தியுட னுருத்திரகோ டித்தலமான்
மியமென்னு மருமை நூலோன்
றுருத்திரநற் பிரசாதத் தால்வசன
மாயியற்றி யுலகுக் கீந்தான்
கருத்தொருமித் தீதுணர்வார் வேதாந்த
சித்தாந்தங் கண்டா ராவர்
வருத்தமொழி வழியறிவர் மாண்புபெறு
நெறியொழுகி வாழ்வர் தாமே.

---

## திருக்கழுக்குன்றம்

### * வரகவி. கன்னியப்ப முதலியார் அவர்கள் இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

1. பூமாது செய்திடுநற் றவம்பலித்த தெனமேன்மை பொங்கா நின்று, நாமாது அருள் பெறுவார் எஞ்ஞான்றும் துதிக்கவரு நல்ல ஔவைத், தேமாது புகழ்த்தொண்டை வளநாட்டில் ஐயாறேழிரண்டாய்த் தேர்ந்த, பாமாலைத் தொடையணிவார் பதியாகும் அப்பதியிற் பரிந்து ஓங்கி.

2. அன்புடையா ரெங்கிருக்கின் அவர்பால்யான் அகமகிழ் வாய் அமர்வேனென்னும், இன்புடையா னெழிற் கோல மெத்தலத்து மிருப்பதுபோல் அன்றி எந்தை, தன் பெருமை தனைக் காட்டத் தனிக்கோயில் கொண்டதிருத்தல மீதிங்கு, முன் புருகி வருதி யெனமுடி காட்டும் அடியருக்காம் உருத்திரகோடி மன்னே.

3. இப்பதியின் மான்மியத்தை எப்புலத்து மாந்தர்களும் எளிதிலோர்ந்து, செப்புதற்குமுரியவராய் சிந்தைகளி கொளவிதனைச் செய்வேனென்று, தப்பகற்றத்தகு பெரியார் பணித்தபணி யதனைநிதம் தலை மேற்கொண்டு, ஒப்ப நடந்தவர் சொற்ற வாக்கியத்தை நன்குணர்ந்து உவகை பூத்தோன்.

---

* சோழ மன்னர்களும் தஞ்சை சமஸ்தானத்து இந்து மன்னர் களும் முடி சூட்டுங்காலத்தில், கதிர்முடி சாத்தும் பெருமை வாய்ந்த அணைக்குடி சாமிநாதம் பிள்ளை மாமனாரகிய தாண்டவராய பிள்ளை யென்னும் தாண்டவராய முதலியாரை, அடிவார சத்திர கட்டிட வேலைக்காகச் சத்திரத்ததிபதி தன்னுடன் அழைத்து வந்து சத்திர வேலை முடிந்ததும், அவருக்குச் சன்மானம் செய்து, அக்குடும்பத்தை இவ்விடம் ஸ்திரவாசம் செய்வித்தார். அக்குடும்பத்துப் பவுத்திரர் இவராவர். கல்வி கேள்விகளிற் பயின்று வரகவி யெனப் பெயர் பூண்டு விளங்குகிறார்.

4. நற்றூரணி புரக்க நல்குதிருத் தொண்டர்நவில் நல்ல நூலை, கற்றூவின் மனம் போலக் கசிந்துருகி யதன் வழியைக் கருத்தி லேற்றிச், செற்றூர்கள் புரம் செற்ற சிவனடியை மறவாது சிந்தை செய்து, சொற்றேறும் சுவைசுவைக்க சித்தாந்த நிலை நாட்டும் திறத்தின் மிக்கான்.

5. அன்னவன் தான் பழைய வென்பை பாவையுரு வாக்குவி க்கும் பதியணித்தாஞ், சென்னை நகர் வாழ்வைசிய கொத்தந்தி மகரிஷியின் கோத்திரனுன, தன்னியனுஞ் சை. ரத்தினவேள் தவத்தின் வந்துதித்த செல்வச்சீரான், நன்னயமாஞ் சிவராஜ யோக நமசிவாய னேனும் நாமத் தோன்றல்.

6. சொன்னூட்டும் வடமொழியால் இப்பதியின் சரிதைதனை சொன்னூர்தக்கோர், பொன்னூட்டுப் புலவனெனப் புகழ்ந்திட வே கவிவீரராகவன் தான் புகல் புராணம், இன்னூட்டுத் தமிழ் மொழியாம் இவ்விரண்டின் பயன் நூக்கி ஏற்ற மேற்கோள், முன்னூட்டி வசன நடையியற்றினனே யிவன் மாற்ற மெம் மனேர் மொழியப்பாற்றே.

---

## வித்துவான், புரசை. M. பாலசுந்தர நாயகர்

அவர்கள் கூறியவை.

பவரோக வயித்திய னெனப் படர்வரையிற் பச்சிலையா மரு ந்து பாவித், தவரோக மிரிந்தோட வருட்சுரக்கு மாண்டகையா யமர்ந்து சால, சிவலோகத் தனிலழுந்துஞ் சீராளர் வீடுபெறச் சிந்தை தேக்குந், தவலோக மானகழுக் குன்றமமர் சிவன்றூளைச் சரணுய் நின்றேன்.

அன்னவன் யாரெனிற் கேண்மி னருங்கலை தேர் நிபுணனு யமர்ந்து சைவதை, சென்னையினிற் பின்றூென்றிச் சீர் பரப்பு

மிரத்தின வேள் செல்வனாகி, நன்னிலைகண் மிகப் பரிந்து நம்பரமன் சீர்த்திகளை நாட்டி லென்றும், மன்னியிட வேண்டு மெனும் பான்மை யான் மன்பதர் கண் மதிக்கும் பேரான்.

கழுக்குன்றத் தின்புராணக் கவியைக் காசினியோர் களங்க மின்றி, யிழுக்கவிலா தேயுணர வேண்டுமென் றுளம்வைத்து இனிமையாக, வழுக்கவிலா வசனமதாய் வரைந்தளித்தான கமகிழ்ந்து வையம் போற்ற, ஒழுக்கமமர் நன்னமசிவாய சிவ யோகியா முயர் கோமானே.

---

மதுரைத் தமிழ்ச்சங்க வித்துவான்

சே. அரங்கசாமி நாயகர் அவர்கள்

இயற்றியது.

எம்மருந்து மருத்தி யன்றி நோய் நீக்கலில்லா தென்றெண் ணற் பாற்று, வம்மருந்து கழுக்குன்ற வூர்மருந்தாஞ் சிவக் கொழுந்தை யடைந்து கண்டு, எம்மருங்கி னுள்ளாரு மேத்திடற் குப் புராணமதைக் கத்தியமென்னச், செம்மை திகழ் நமசி வாயச் சிவயோகிப் பெயரான் செய்திட்டானே.

---



ஸ்வாமி விவேகாநந்தர்.

"ஸ்வதந்திரமே ஆத்மசொரூபம்;
ஸ்வதந்திரமே அதன் பிறப்புரிமை."

ஓம்

குருவே நம :

# நூன்முகம்.

"அன்பெனும்பிடியு ளகப்படுமலையே யன்பெனுங்குடில் புகுமரசே, யன்பெனும் வலைக்குட் படுபரம் பொருளே யன்பெனுங் கரத்தமரமுதே, யன்பெனுங் கடத்து ளடங்கிடுங் கடலே யன்பெனு முயிரொளி ரறிவே, யன்பெனு மணுவுள ளமைந்த பேரொளியே யன்புருவாம் பரசிவமே.

நமது தாய் நாடாகிய பாரத வருஷத்தின் பெருமையினையும், ஆரிய சநாதன தர்மத்தையும், உலகு முழுதும் யாத்திரை செய்து, பல தேயத்தினருக்கும் அறிவித்து, அவர்கள்பிரமிக்கும்படி, பிரசங்கங்கள் மூலமாகப் பறையறிவித்த ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளின் குருமூர்த்தியாய் எழுந்தருளிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸரது குண விசேஷங்களை அறியாதார் ஒருவருமிரார் என்பது திண்ணம். அம்மஹான் லோகோபகாரமாகத் திருவாய் மலர்ந்தருளிய அமுதோபதேச மொழிகள் பலவற்றுள் "கடவுள் எல்லோரிடத்தும் இருக்கிறார்; எல்லோரும் கடவுளிடத்திலில்லை" என்னும் வாக்கியமும் ஒன்றாகும்.

இவ்வரிய வாக்கியத்தைக் கல்வியறிவோடு கூடி ஆராயுமிடத்து, இதன் உண்மைப் பொருள் எல்லோர்க்கும் எளிதில் விளங்கும். ஆயினும், இங்கு சிறிது ஆராய்வோமாக. அண்டபகிரண்டமும் அடங்கவொரு நிறைவாகி எங்கும் பரிபூர்ணமாக நிறைந்த சத்துசித்து



ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்.

"கடவுள் எல்லோரிடத்தும் இருக்கிறார்;
எல்லோரும் கடவுளிடத்தில்லை."

ஆநந்த சுயஞ்சோதிப் பிரகாச மூர்த்தியான கடவுள், எல்லோரிடத்தும் எல்லா விடத்தும் எல்லாக்காலத்தும் எல்லாச் சமயத்தும் நீக்கமற நிறைந்துள்ளார் என்பதை சர்வத்ராளும் நிராக்ஷேபமாய் ஒப்புக்கொள்வார்கள். எல்லோரும் கடவுளிடத்திலில்லையென்னும் வாக்கியத்தை மாத்திரம் சர்வத்ராளும் எளிதில் ஒப்புக்கொள்வதென்றால் சந்தேகமே. இவர்களது சந்தேகத்தை சற்று ஆராய்ந்து பார்ப்போமாக.

எல்லோரும் கடவுளிடத்திருப்பது உண்மையாயின், ஒவ்வொரு இடமும் கடவுளுடைய க்ஷேத்திரமாகும்; ஒவ்வொரு இடமும் பரிசுத்தமாயிருக்கும்; உலகம் என்கிற தோற்றம் உண்டாக இடமேயிராது; சுகமென்பதும் துக்கமென்பதும் கிடையா. நன்மை தீமைகள் எங்கிருந்து வரும்; ஜீவியமும் மரணமும் உண்டாகா; ஸ்வர்க்கத்திலே அல்லது நரகத்திலே அல்லது வேறு எந்த இடத்திலே பார்ப்பதெல்லாம் ஈஸ்வர சாந்நித்தியமாயிருக்கும்; பெரியோரென்றும் சிறியோரென்றும் வகுத்துப்பார்க்க இடமிராது. வேதாகம புராண இதிகாச உபந்நிஷத்தாதி சாஸ்திரங்கள் எது பயனைத் தரும்; எங்கும் சிவமாயும் எல்லாம் ஆநந்தமாயும் சர்வம் பிரகாச மாயும் விளங்கவேண்டுமல்லவா? அப்படி நாம் காண்கின்றோமில்லை.

ஏனெனில், உலக முழுதுக்கும் வெப்பத்தையும் பிரகாசத்தையும் கொடுக்கவல்ல சூரிய கிரஹணங்களை மேகங்கள் மறைக்க, வெப்பமும் பிரகாசமும் மங்கிப் போகிறது. ஆனாலும், சூரிய கிரஹணங்கள் இருக்கவேயிருக்கிறது. அதுபோல, நமது ஹ்ருதய கமலத்தில் சதா குடிகொண்டிருக்கும் அறிவாகிய கடவுள் அகங்கார மமகாரங்களாகிய மாயையால் மறைக்கப் பெற்று, அக்கடவுளின் பிரகாசம் மறைகின்றது. அவ்வந்த

காரத்தில் ஐம்புலன்களாகிய கள்வர்கள், காமக்குரோத லோப போக மத மாற்சரியாதி துஷ்டர்களைக் கொண்டு, அறிவாகிய ஞானரத்நத்தை அபகரித்து விடுகிறார்கள்; நாம் அறிவிழந்து, ஞான சூன்யர்களாய், மதி மயங்கி, அஞ்ஞான சாகரத்திலழுந்தி, மண்ணாசையால் மருண்டு, பெண்ணாசையால் உருண்டு, பொன்னாசையால் திரண்டு, ஆசைக்கயிற்றில் ஆடும் பம்பரம் போல் அலைந்து கஷ்டப்படுகிறோம் மரணம், பயம், துக்கம் இதுவே சமயமென நம்மிடம் குடி கொள்கிறது. பிற வித்துன்பம் வருத்துகிறது. இவ்வாறு கஷ்டப்படும் வேளையில் நாம் கடவுளிடத்திருப்பது எப்படி சாத்தியமாகும். அன்பர்களே! சிறிது ஆழ்ந்து யோசித்தால் நாம் கடவுளிடத்தில்லை யென்னும் பரமஹம்சாது உபதேச வாக்கியம் உண்மையாகும.

இவ்வாறு ஞானரத்நத்தைப் பறிகொடுத்துப், பவ சாகரத்துள் மூழ்கிப் பரதவிக்கும் ஜீவர்களை ரக்ஷிக்கும் பொருட்டுக், கருணைக் கடலாகிய சிவபெருமான் வியாசாதி மஹா ரிஷிகள் மூலமாக, ஆதியும் அநந்தமுமாகிய வேதங்களை இருக்கு யசுர் சாம அதர்வணமாகப் பிரித்து, அவற்றுள் ஞான காண்டம் கரும காண்டமென இரு பாகமாக வகுத்தருளினார். அவைகளுக்கனுகுணமாக வேதாகமம், புராணம், இதிகாசம், உபநிஷத்தாதி சாஸ்திரங்களை ஜீவர்களது பக்குவாபக்குவ மறிந்து உபதேசித்தருளினார். அவ்வேதாகம ஆதாரவுகொண்டு மூர்த்திகளையும் தலங்களையும் தீர்த்தங்களையும், மஹாரிஷிகள் ஸ்தாபித்தார்கள். அத்தலங்களில் சிவன் விஷ்ணுவாதி தேவர்களை வேதாகம மந்திரங்களின் பலத்தினால் பிரதிட்டை செய்ய, சர்வாந்தர்யாமியாயுள்ள கடவுள், பாசவலையிற் பட்டு மயங்கும் ஜீவர்களை, பக்தி வலையிற் சிக்கவைத்துத் தன்னை வந்தடைய, பிரதிஷ்டா மூர்த்திகளில் சாந்நித்தியாய் ஜீவர்

களது பரிபக்குவ மறிந்து அருள்புரிகின்றார். இது வேதாகம ரகஸ்யமென அறிவுடையோர் கூறுப.

இவ்வாறு அருள் புரியும் சிவ க்ஷேத்திரங்கள் பலவற்றுள் உருத்திரகோடி மஹா க்ஷேத்திரமும் ஒன்று. இது மற்றெல்லா க்ஷேத்திரங்களுள்ளும் மஹா மஹிமை பொருந்தியதாகும். மூர்த்தி தல தீர்த்த வைபவங்களிற் சிறந்தது. இச் க்ஷேத்திர மான்மியம் ஸ்காந்த புராணம் நந்தீஸ்வர சம்வாதத்திலும், பவுஷியோத்தர புராணம் லிங்க புராணங்களிலும், விரிவாய்க் கூறியிருப்பதை, கிரந்த எழுத்தில் முப்பத்திரண்டு அத்தியாயங்களாக வகுத்துச் சுலோக பூர்வகமாக வரையப்பெற்று, இதுகாறும் அச்சுக்கு வராமலே யுள்ளது. இக்கிரந்த ஸ்லோகங்களை ஒருவாறு அனுசரித்து, உழலூர் அந்தகக்கவி - வீரராகவ முதலியார் என்பார் 823 திருவிருத்தப் பாசுரங்களாகத் தமிழில் செய்திருக்கிறார். இவ்விரு புத்தகங்களும் முறையே கிரந்த ஞானமில்லாதார்க்கும், தமிழ்க் கல்வியுணர்ச்சி யில்லாதார்க்கும் எளிதில் அறியக் கூடாதாதலின், சர்வ சாதாரணமாய் ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் பிறரது உதவியின்றித் தாங்களே வாசித்து, நம்மத உண்மைகளையும் க்ஷேத்திர மஹிமையினையும் அறிந்துகொள்ள இப்புத்தகம் வசன நடையாக, இனிய செந்தமிழில் எழுதப்பெற்றதாகும்.

இந்த க்ஷேத்திரம் செங்கல்பட்டு தாலூகாவைச் சேர்ந்த 224 நெ. திருக்கழுக்குன்றம் என்னும் கிராமம், சென்னை மாநகரத்திற்கு 50 மயில் தூரத்தும், செங்கல்பட்டுக்குத் தென் கிழக்கு ஒன்பதாவது மயிலிலுமுள்ளது. இதன் * விஸ்தீர்ணம் வடக்கு தெற்கு

---

* சமஸ்கிருத புராணத்தில் இச்க்ஷேத்திரத்தின் ஜெக் பந்தி சொல்லியிருக்கிற விபரம் ;—

கிழக்கு:—“ஆக மாத்திரயீஸ்ஹ புரோபாகே பஞ்சக்குரோச

2½ மயில்; கிழக்கு மேற்கு 2 மயில். ஜனத்தொகை தற்போது சுமார் 6,000 என மதிக்கலாம். இது சிறு சிறு குன்றுகளால் சூழப் பெற்றிருப்பதால் இதைப் பொருள் இலக்கணிகள் குறிஞ்சி நாடென்றும், மலை நாடென்றும் கூறுவார்கள்.

"மேற்குப் பவளமலை வேங்கட நேர் வடக்காம்
ஆர்க்கும் முவரி யணி கிழக்கு—பார்க்குளுயர்
தெற்குப் பிணுகி திகழி ருபதின் காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு."

எனப் பெரியார் வாக்கின்படி, இது தொண்டை நாட்டுக்குரிய இருபத்துநாலு பிரிவுகளுள், களத்தூர் பிரிவெனச் சொல்வார்கள்.

வேதகிரி:—இந்த கிராமத்தின் மத்தியில் சுமார் 500 அடி உயரமுள்ள ஓர் மலையிருக்கிறது. இது ருக், யசுர், சாம, அதர்வணமென்னும் நான்கு வேதங்களே நான்கு மலைகளாகவும், அதர்வணவேத உச்சியில் சிவபெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிறார் எனவும் புராணத்தில் சொல்லியிருக்கிறபடி, ஜனங்

---

விதூரதஹா: மஹாபலீபுரம் க்ஷேபம் சிவஸ்தானேத்த மோத்தமம்" என்பதனல் மஹாபலிபுரத்தில் சிவ க்ஷேத்திரம் ஒன்று மாபலிச்சக்கிரவர்த்தியால் பூஜிக்கப்பெற்றிருக்க வேண்டும்.

"வர்த்ததே தத்ரதேவேசோ மஹா பலிசு பூஜிதஹ:"

மேற்கு:—"ஆக மாத்திர யீஹை பச்சிமதஹா கோசத்ரய விதூரதஹா: ததோக்ஷீர ததங்கன்யா பச்சிமேதக் திவர்த்ததே, வியாக்ர பாத முனீஸ்ஸ்ரீமான் சகராலய மற்புதம்."

தெற்கு:—"ஆக மாத்திரயீ தக்ஷிணதஹ: பஞ்சக்குரோச பயஸ் ஸ்வன்னி குமார்யாச் சாபி சங்கமே, சங்க மேற்புதம் ஜம்பு கேஸ்வர மித்யேத லிங்க மஸ்தி மஹத்தரம்."

வடக்கு:—"ஈசான்யாம் ஆக மாத்திரேஸ்து சார்த்த யோசன தூரதஹ: வாராசாக்ய மிதக்ஷேத்ரம் மஹா விஷ்ணு ஸ்தலம் மஹத்:

ஏதை ஸ்தலைஹீ: பரிவ்ருதம் நிகமாசல மஸ்த்ஹீ;

சனே வசீகரம் செய்யும்படியான அழகிய கோயில் ஒன்று மூன்று கற்பாறையின் மேல் அமைந்திருக்கிறது. இம் மலைக்கு "வேதகிரி" எனப் பெயர்; கைலையங்கிரியிலுள்ள சிகரங்களுள் ஒன்று. இதைத் தக்ஷிண கைலாசமென்றும் சொல்வார்கள். திருமலைக் கோயிலில் சிவபெருமான் வாழைப்பூக்குருத்துப்போல தோன்றியிருக்கிறார். அவ்வுருவம் சிதைவுறா வண்ணம் சிவலிங்கத்தைக் கவசமாகத் தரித்திருக்கிறார்கள். மூர்த்தி சுயம்பு (self existent emblem). கிரேதா யுகாரம்பத்திலே கழுகு முனிவர்கள் பூஜித்ததாகக் கூறப்படுவதால், அந்த யுகத்துக்கு முன்னரே இம்மூர்த்தியும் ஆலயமும் இருந்திருக்கவேண்டுமாதலால், அநாதி ஸ்தலமெனச் சொல்வார் அறிஞர்கள். இம்மலையாண்டவனை பிர்ம்மா, விஷ்ணு, இந்திரன், பன்னிரு சூரியர்கள், சந்திரன், சிவ சுப்பிரமணியக்கடவுள், அஷ்டவசுக்கள், கோடி ருத்ரர்கள், முனிகணங்கள், நந்தியெம் பெருமான், அஷ்ட கழுகுகள் முதலியோர் பூஜித்துப் பேறு பெற்றார்களதனால், முறையே பிரமபுரி, ஆதி நாராயணபுரம், இந்த்ரபுரி, ஆதித்தபுரி, குமாரபுரி, வசுபுரம், ருத்திர கோடி, முனிகண நாதபுரம், நந்திபுரி, கழுகாசலம் எனப் பலபேர்கொண்டு விளங்குகின்றது. இம்மலையில் சித்தர்களும் முனிவர்களும் வாசஞ் செய்வதாகப் பிரமாணம்; சஞ்சீவிக் காற்று தரும்படியான பல மூலிகைகள் இம் மலையிலுள்ளனவாதலால், பிரதக்ஷிணம் செய்வோர்கள் பலர் இக்குளிர்ந்த காற்றினால் தங்களுக்குண்டான கடும் ரோகங்கள் பல நிவிர்த்தியடைந்து சுகம் பெறுகின்றார்கள். பிரதக்ஷிண பாதை சுமார் 30 வருஷத்துக்கு முன், சென்னையம்பதியில் சித்தப்பிரமை கஷ்டப்பட்டு இவ்விடம் வந்து பிரதக்ஷிணம் செய்து சுகமடைந்த கோபதி. வீராசாமி செட்டியார் அவர்களால் சுத்தமாக்கப்பெற்று, இருபுறங்களிலும் குளிர் நிழலைத்தரும்

மரங்கள் வைத்ததாகச் சொல்லுகிறார்கள். இம்மலை விஸ்தீர்ணம் 264 ஏகர்; பிரதக்ஷிண பாதை 2 மயில் 2 பர்லாங். திருமலைக்கோயில் கர்ப்பக்கிருகத்தில் மூன்று பக்கம் சுவர்களில்* பிர்ம்மா, விஷ்ணு, நந்தி, சண்டி, சோமாஸ்கந்தர், காசி ஓங்கார கடத்தில் கழுகு முனிவர்க்குபதேசித்த தக்ஷிணாமூர்த்தி, மார்க்கண்டேயர் சிவலிங்க பூஜை, போகசக்தி முதலிய அமைக்கப் பெற்றுள்ளன. பிரதக்ஷிண உட்பிரகாரத்தில் சொக்கம்மன் ஆலயம், விநாயக மூர்த்தி ஆலயம் உள்ளது. திருமலை யாண்டவனைத் தேவேந்திரன் மநுஷ வருஷம் 12-க்கு ஒரு முறை பூஜை செய்வதாகப் புராணம் சொல்லுகிறது. அப்பூஜை இடி யபிஷேக மாகும். இந்த இடி திருமலைக் கோபுரத்துள்ளே விழுந்து, சிவ பெருமானை மூன்று முறை பிரதக்ஷிணம் செய்து, பூமியிலிறங்கி விடுகிறதாம். இதனால் கோயிலுக்காவது சுவாமிக்காவது சேத மில்லை; 1889ஷுத்திலும் 1901 ஷுத்திலும் நடை பெற்றது. நாளது வரையும் நடை பெறாதது கலியின் மகிமை யாகும்.

ருத்ரகோடி க்ஷேத்ரம்:—கோடி ருத்திரர்கள் அவுணக் கூட்டங்களைக் கொலை செய்த தோஷத்தை நீக்குவான் வேண்டி, இவ்வேதகிரியில் தவஞ் செய்தார்கள். அவர்கள் தவஞ் செய்த விடம் ருத்திரகோடி க்ஷேத்திரம், சங்க தீர்த்தத்துக்குத்தென்கிழக்கு ஒருபர்லாங்கு தூரத்துள்ளது. இவர்களால் பிரதிஷ்டை செய்த லிங்கம் "ருத்திரகோடீஸ்வரர்;" அம்பாள் பெயர் "அபிராமி நாயகி". இதற்கருகே யுள்ளது ருத்திர கோடி தீர்த்தம். வேதகிரி அநாதி யென்றும் ருத்திர கோடி ஆதி யென்றும் விளங்கும். இவ்வாலய பூஜைக்காக தேவஸ்தான கட்டளையுடன் முத்துப்பட்டிணம்

---

* பக்ஷிதரிசன தேவாகவியபடத்தில் (விலை 0-1-6) விசிதமாய்க் காணலாம்

ஸ்ரீமான். ரா. ம. மு. ரா. ம. சாமிநாதன் செட்டியார் அவர்கள் வருஷம் ரூ. 180 கொடுக்கிறார். தற்காலம் நடக்கும் சகல வைபவங்களுக்கு இத்தலம் காரண மாயிருந்தும், இத்தல சீர் திருத்தத்தைக் கவனிப்பார் வெகு சிலரேயாவர். கோபதி வீராசாமி செட்டியார் இத்தல சீர் திருத்தத்துக்கும் பூஜை உற்சவங்களுக்கும் வெகு பாடுபட்டு உழைத்தார் என்பதாக வதந்தி. கோயில் பாழடைந்து இடிந்து போகாமலிருக்கப்பார்ப் பதே நமக்கு வெகு புண்ணியமாகும். இக்கோயிலின் தெருக் கோபுரம் வடவண்டை பக்கம் சுப்பிரமணிய ஆலயம் ஒன்றிருக்கிறது. சுமார் 150-வருஷத்துக்கு முன் அத்தல வாசியாயுள்ள தியாகராய பண்டாரம் என்னும் சைவர் தனது ஆத்மார்த்த பூஜையாகிய சுப்பிரமணியத்தை இவிடம் பிரதிஷ்டை செய்து, பூஜை முதலிய நடத்தியதுடன், ஐப்பசிமீ சூரசம்மார உற் சவமும் நடத்தி வந்தாராம். அவர் கொண்ட பக்தி வைராக்கியத்துக் கிடையூறின்றி அவர் பரம்பரை யாருட் சிலர் சூரசம்மார உற்சவம் நாளைக்கும் நடத்தி வருகிறார்கள்.

விஷ்ணு ஆலயம்:—இந்த க்ஷேத்திரத்தில் விஷ்ணு ஆலயம் ஒன்று இருந்ததாகவும், அதை இடித்துத் தேரடிக்குளமாகச் செய்து விட்டார்களெனவும் பல மான வதந்தி உலாவுகின்றது. பூமியைத் தோண் டும்போது அநேக விஷ்ணு சிலா விக்கிரகங்கள் அகப் படுவதாகவும் சொல்லுகிறார்கள். ஆனால் இந்த க்ஷேத் திரத்தில் விஷ்ணு பூஜித்தாரென்று புராணம் சொல் வதுடன் "வேத நாராயணபுரம்" எனவும் பெயர் உண்டு. வைஷ்ணவர்கள் திருமலையிலும் தாழக்கோயி லிலும் தற்போதும் பரிசாரக வேலை பார்க்கிறார்கள். சமயபேதமின்றி அநேக வைஷ்ணவர்கள் தரிசனத்துக் கும் பிரதக்ஷிணத்துக்கும் இவிடம் வருகிறார்கள் என்பது அநுபவம்.

ஒரு கல் மண்டபம் :—திருமலைக் கோயிலுக்குச் சுமார் 50-60 அடிக்குக் கீழ், ஒரே பாறையில் மண்டபம் கர்ப்பக்கிருகம், அதனுள் லிங்கம், துவாரபாலகர்கள், அம்மன், விஷ்ணு மூர்த்தி முதலிய சிற்பங்கள் செய்யப் பெற்றிருக்கின்றன. உற்று நோக்கினால் பெரும் புத்தியுடைய சிற்பியொருவனால் இத்தகைய அருமையான வேலை செய்திருக்க வேண்டும். இதன் வேலைப் பாட்டின் சிறப்பினை மேனாட்டார் பலரும் வந்து தரிசித்து மயங்குகின்றார்கள். மஹா பலிபுரத்தில் அதிசயமான சிற்ப வேலை செய்தவர்களால் இது செய்திருக்கவேண்டும். இதன் திறமையும் அருமையுங் கண்டு அரசாங்கத்தார் "Ancient Monuments Preservation Act" படி காப்பாற்றி வருகிறார்கள். இது கி. பி. ஏழாம் நூற்றாண்டில் பல்லவராயர் அரசாக்ஷிகால மென்னலாம்.

கழுகுகள் பூஜை :—பிர்ம்ம புத்திரர்கள் எண்மர் சிவ பெருமான் சாபத்தால் கழுகுருவடைந்து, சென்ற மூன்று யுகத்துக்கு ஆறு கழுகுகள் இவ்வேதகிரியில் தவஞ் செய்து மோக்ஷமடைந்தன. இக்கலியுகத்தில் பூஷா, விதாதா என்னும் இரண்டு கழுகுகள் தவஞ் செய்கின்றன என்பது புராண சித்தாந்தம். ஸ்ரீ மணிவாசகப் பெருமான் திருக் கோவையாருள்ளும், வைராக்கிய சதகத்திலும், அருணகிரி நாதர் திருப்புகழிலும், திருப்போரூர் சிதம்பரஸ்வாமிகள் ஸ்தோத்திரப் பதிகத்திலும் கழுகுகள் தொழுவதாகவும், தவஞ் செய்வதாகவும் சொல்லியிருக்கிறது. இதற்கு மாறாக, பக்ஷிகளுக்கு காலை 11 மணிக்கு சக்கரை அன்னம் நெய் கொடுக்கிறார்கள். இது பழக்கம் என்று சொல்லாமலே விளங்கும். (இது விபரம் 161-வது பக்கத்தில் விரித்துரைக்கப் பார்க்கலாம்) 17-6-21 காலை 9 மணி சுமாருக்கு மதுரை பொற்றாமரைத் தடாகத்தில் இரண்டு

க. குகள் வந்ததாகவும், அங்குள்ளார் பலர் திருக்கழுக்குன்றத்துப் பக்ஷிகளாக இருக்கு மென்று சந்தேகித்த தாகவும், சில பத்திரிகைகளில் கண்டுள்ளன. மதுரைக் கோவில் ரிஸீவர் அப்பக்ஷிகளை போடோ எடுத்து, திருக்கழுக்குன்றத்து கோயில் டிரஸ்டியாருக்கு அனுப்பிய தாகவும், இவர் அந்தபோடோ படத்தைப்பார்த்து, பல பெரிய மனுஷ்யாள் முன்னிலையில் பரீக்ஷித்து, இவைகள் தான் அப்பக்ஷிகளென ஆமோதித்ததாகவும், பிரஸ்தாபம் உண்டாயிருக்கிறது. பக்தியும் வைராக்கிய முங் கொண்ட விவேகிகள் மனதை மாறுபடுத்த எண்ணமில்லா விடினும், ஆழ்ந்து யோசிகக வேண்டிய சந்தர்ப்பங்கள் சில உதிக்கின்றன. முதலாவது கடவுளால் சிருட்டிக்கப் பெற்று, உலகத்துள்ளவும் கழுகுகளுக்கும் திருக்கழுக்குன்றத்தில் தினசரி வரும் கழுகுகளுக்கும் நிறம், சாயை, அங்கம், அச்சம், அடையாளத்தில் வேறுபாடுண்டா? இரண்டாவது மதுரையில் தோன்றிய தினத்தில் இத்திருக்கழுக்குன்றத்தில் பக்ஷிகள் வந்தனவா? வந்திருந்தால் தரிசனம் காலதாமதமா? சரியான நேரமா? என்பதை உணர்ந்து அறிஞர்கள் உண்மை தெளிவாராக. சித்தூர் ஜில்லா மஹா தேவ மலையிலும் தினசரி இரண்டு கழுகுகள் வந்து பண்டாரம் ஒருவர் கொடுக்கும் அன்னத்தைச் சாப்பிட்டுப் போவதாகவும் இருக்கிறது. இது எப்பக்ஷிகளோ?

நால்வர் கோயில்:—சைவசமயாசாரியர்களாகிய அப்பர், சுந்தரர், சம்பந்தர், ஸ்ரீ மணிவாசகப் பெருமான் என்னும் நால்வர்களும் வேதங்களே மலைகளாக இருத்தலால், அதை மிதித்தல் தோஷமெனக் கருதி அடிவாரத் திருந்தே சிவபெருமானைத் தோத்திரித்தார்கள். இச்சமய குரவர்களது ஆலயம் திருமலைக்குக் கீழ் பாகம் உள்ளது. அதற்கருகே இந்திரதீர்த்த மென்றொரு தடாக முண்டு. தற்போதும் சில பக்தர்

கள் மலையேறுவது தோஷமாமெனக்கருதி அடிவார பிரதக்ஷிண நமஸ்காரம் மாத்திரம் செய்து போகிறார்கள்.

இலக்கணிகள் சந்தேகம் :—திருமலைக் கோயில் சிவாலயமெனவும், சிவபெருமானே மலைக் கொழுந்துருவமாகத் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கிறாரெனவும், ஸ்தலபுராணங்களும் உலக அநுபவமும் பிரசித்த மாயிருக்கிறது. ஆனால் இலக்கண அறிஞருட் பலர் இது சுப்பிரமணியர் ஆலயமென வாதாடுகிறார்கள். அவர்கள் வாதம் என்னெனில் :—பொருள் இலக்கண ரீதியாக இந்நாடு மலைநாடு அல்லது குறிஞ்சி நாடென்றும், குறிஞ்சி நாட்டுத் தெய்வம் ஸ்ரீ சுப்பிரமணியரென்றும், அவரது வாரம் அங்காரக வாரம் அதாவது மங்களவாரமென்றும், பிரார்த்தனை செலுத்துதலாகிய முடி வாங்குகிறதும் ரோக நிவிர்த்தியாவதும் சுப்பிரமணியர்க்கே யுரித்தாமென்றும், “குன்று தோறாடல் நின்றதன் பண்பே” என நக்கீர தேவர் திரு முருகாற்றுப் படையின்படி குன்றுகளிலும் மலைகளிலும் வீற்றிருப்பவர் சுப்பிரமணியரா யிருக்கவேண்டுமென்றும் வாதம் செய்கிறார்கள். அவர்கள் வாதத்துக் கிசைந்தபடி திருமலையில் பெருமான் வீற்றிருப்பதும், முடி வாங்கிப் பிரார்த்தனை செலுத்துவதும், ரோக நிவிர்த்தியாவதும், மங்களவாரத்திலேகிரிப்பிரதக்ஷிண தரிசனம் விசேஷமாய் நடப்பதும், அநுபவத்திலிருந்து வருகிறது. இத்யாதி காரணங்களால் இவ்விலக்கண அறிஞர்களது கொள்கையை ஒருவாறு ஒப்பவேண்டியிருந்தும், வெகு கால உலக அநுபவத்தை மாற்ற இயலாதெனமதிக்கிறோம். எக்கடவுளராயினும் பக்தி வைராக்கியத்துடனிருந்து சித்த சுத்தி அடைந்து, தன்னைத் தானறிதலே மோக்ஷமென்பார்கள் அறிஞர்கள்.

சங்கதீர்த்தம் :—திருமலைக்குத் தென் கிழக்கில்

ருத்திரகோடி க்ஷேத்திரத்துக்கு வடமேற்கிலுள்ளதான சங்கதீர்த்தம், சுமார் ஆயிரம் கஜ விஸ்தீரண முள்ளது; சுத்தமான ஊற்று ஜல முடையது. அடிக்கடி சுத்தித்து வந்தால் ஒரு உலகத்தையே காப்பாற்றுந் தன்மையது; இது தாமர சத்துடையதென்று மேனாட்டார் பலரும் புகழ்ந்துரைப்பார்கள். ஆயுர்வேத வயித்திய பண்டிதர்களும் இதை சுத்தமான தெய்வீகமுள்ளதென்று மதிக்கிறார்கள். இதில் 12 வருஷத்துக் கோர்தரம் சங்கம் பிறக்கிறது. சர்வத்ராளுடைய கர்மங்களையும் பாபங்களையும் போக்கவல்லதை அநுபவத்தில் பார்க்கிறோம்; கங்கையாதி நதிகள் தன் நாயகனோடு அசூயையாதி குணத்தால் ஊடல்கொண்டு நின்ற காலத்து, கோதாவரி கோடீஸ்வரப் பெருமான் அநுக்கிரகத்தால், இச் சங்க தீர்த்தம் வந்து ஸ்நாநம் செய்தவுடனே, தங்கள் பொறாமைக் குணமானது சூரியன் முன் பனிபோல் நீங்கியதென்றால், இதன் மகிமையை அளவிட்டுச் சொல்ல யாரால் முடியும். இதை அநுசரித்ந்த சங்க தீர்த்த புஷ்கர வைபவம் 12 வருஷத்துக் கோர்முறை இங்கு நடக்கிறது. (இதன் விரிவு இப்புத்தகம் 179-ம் பக்க முதல் கவனிக்க.)

நவக்கிரகங்களுக்குள் முதன்மைபெற்ற சுபக்கிரகமாகிய குருவினுடைய சாரத்தை அநுசரித்து, தீர்த்த புஷ்கரம் உலகில் நடை பெறுகின்றது. வட இந்தியாவில், கும்பராசியில் குரு பிரவேசிக்கும்போது அரித்வாரம் பிரயாகை இவ்விரு விடங்களிலும், கடகத்தில் குரு பிரவேசிக்கும்போது நாசிக் (Nasik) கிலும், சிம்மத்தில் குரு பிரவேசிக்கும்போது கோதாவரி தீரம், உஜ்ஜீயின் (Ujjain) தேசத்திலும், தென் இந்தியா கும்பகோணம் மாமக (மாமாங்கம்) குளத்திலும், கன்னியில் குரு பிரவேசிக்கும்போது கிருஷ்ணாதீரம், பெஜ்வாடாவிலும் (Bezwada) தீர்த்த புஷ்கர வைபவம்

நடை பெறுகிறதுபோல், இவ் உருத்திரகோடி க்ஷேத்திரம் திருக்கழுக்குன்றம் சங்க மஹா தீர்த்தத்தில், கன்னியில் குரு பிரவேசிக்குங் காலம் தீர்த்த புஷ்கரம் நடைபெறவேண்டுமெனப் புராணம் கூறுகிறபடி, இத்திருக்கழுக்குன்றத்தில் சென்ற துன்மதி௵ ஆவணி௴ 1௳ (16—8—21) ல் நடைபெற்றது. கன்னியில் குரு பிரவேசித்துத் தங்கும் ஒரு வருஷம் வரையும் இப் புண்ணிய கால மிருக்குமென்பார்கள் அறிஞர்கள்.

இத்தீர்த்தத்தில் பெருவியாதி சித்தப்பிரமை காசம் முதலிய அசாத்திய ரோக முடையோர் பலர் ஸ்நான பானம் செய்து, தத்தம் ரோகங்களை நிவிர்த்தி செய்து கொள்ளுகிறார்கள் என்பது அநுபவம். இதன் மேலண்டைக் கரையில் மார்க்கண்டேயரால் பிரதிஷ்டை செய்த சிவலிங்கம் மார்க்கண்டேஸ்வரர், தீர்த்தேஸ்வரர் என்று பெயர் வழங்கிவருகிறது.

நந்திதீர்த்த முதலாய தீர்த்தங்கள்:—திருமலைக்குத் தென்மேற்கு (தாழக்கோயிலினுள்) நந்தி தீர்த்தமெனப் பெயர் கொண்ட தடாகம் ஒன்றுண்டு. அதன் தென் கீழ்க்கரையில் நந்தியந்தேவர் சிலா விக்கிரகம் திருமலைப் பெருமான் முகமாக வீற்றிருக்கிறது. இதுவே நந்திதேவர் தவஞ்செய்த விடமெனச் சொல்லலாம். திருமலையில் நந்தி விக்ரகம் கிடையாது.

விஸ்வாமித்திரர் இவ்வேதகிரியில் வந்து தங்கியிருந்தாராதலால் விஸ்வாமித்திர தீர்த்தமென்றொரு குளம் இருக்கிறது. இதை ஆண்டர்சன் குளமென வழங்கி வருகின்றார்கள்; ஆண்டர்சன் (Anderson) என்பவரால் சீர்திருத்தப் பட்டதென்றும் சிலர் சொல்வதுண்டு. பிரதக்ஷிண பாதையில் கோடி விநாயகர் தீர்த்தமென வழங்கி வருகிறதை வருண தீர்த்தமெனச் சொல்லுகிறார்கள். திருமலைக்குத் தெற்கில் அகஸ்திய தீர்த்தமென்பதை பொன்னிட்ட நாடார் குளமெனச் சொல்

லுகிறார்கள். வட மேற்கில் மார்க்கண்டேய தீர்த்தத்தை சேரான் குளமென வழங்கி வருகிறார்கள். இது சேர அரசனால் திருத்தப்பட்டு இப்பெயர் பெற்றதோ, அல்லது சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அத்யந்த நண்பரான சேரமான் பெருமான் நாயனார், சுந்திரமூர்த்தி நாயனார் இவ்விடம் பொன் வாங்கவந்த போது வந்தனரோவென ச்சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இவ்வூர் பிரம்மோற்சவம் நான்காம் தினம் இரவு, சுவாமி நாகவாகனத்தின் மீதிலமர்ந்து நிசப்தமாய் தென்கோடியிலுள்ள கருணீகர் மண்டபத்தில் செல்வதும், சுந்தரமூர்த்தி நாயனார் கோயிலுக்குட் சென்று, சுவாமியைக் காணாது வருந்தி தேடிக் கருணீகர் மண்டபம் போய், சுவாமியைக்கண்டு பொன் வாங்கிச் சென்றதுமான பிரபல உற்சவம் நடைபெறுகின்றது. இதன் பெருமை பெரிய புராணம் சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திரத்திலாவது இவ்வூர் ஸ்தல புராணத்திலாவது கூறவில்லை யாயினும் அநுபவமாய் நடைபெறுதற்குக் காரணம் என்னே?

தாழக்கோயில்:—திருமலைக்குத் தென் மேற்கில் சுரகுருச் சக்கிரவர்த்தியால், தான் செய்த கோவதைத் தோஷம் நீங்கும் பொருட்டுப் பிரதிட்டை செய்த லிங்கம் "பக்தவற்சலர்" எனப் பெயர்கொண்டு விளங்குகிறது. இக்கோயிலின் வெளி மண்டபத்தில் சுமார் 7 அடி உயரமும் அதற்குரிய பருமனும் 32 ஆயுதங்களும் ஊர்த்துவ முகப் பார்வையுங் கொண்ட வீர பத்திரர் சிலா உருவமிருக்கக் காணலாம். இவ்விடத்தில்தான் உற்சவ விக்கிரகங்களும் பஞ்ச பர்வாதி உற்சவங்களும் பிரம்மோற்சவமும் நடை பெறுகின்றன. திருமலைக் கோயிலில் துவிஜாரோகணம் யாக பூஜைமாத்திரம்; மற்றவையெல்லாம் தாழக் கோயிலிலேயே நடை பெறுகின்றது. வருஷந்தோறும் சித்திரை மாதத்தில் திருமலையாண்டவனுக்கும், ஆடி மாதத்தில் ஸ்ரீ திரிபுரசுந்தரிக்

குமாக இரு பிர்ம்மோற்சவங்கள் நடைபெறுகின்றன. ஸ்ரீமந் நடராஜ சந்நிதிக்கெதிர் மண்டபத்தில் அழகிய அருமையான சித்திரவேலை யமைக்கப்பெற்ற தூண்கள் நிறுத்திய மண்டபம் இருக்கிறது. இதன் சிற்ப சாஸ்திரப் பெருமையினை மேனாட்டார் பலரும் கண்டு அதிசயிக்கிறார்கள்.

ஸ்ரீ திரிபுரசுந்தரி என்று வழங்கும் பெண்ணினல்லாளம்மை ஆலயம் தாழக்கோயில் வடமேற்கு மூலையில் தர்மம் நாராயணஞ்செட்டியாரால் அழகிய மண்டபம் அமைக்கப்பெற்றிருக்கிறது. தினசரி நூற்றுக் கணக்கான பக்த மஹா ஜனங்கள் இவ்வம்பாள் ஆலயத்தைப் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, தத்தம் இஷ்ட காம்ய சித்தி பெறுகிறார்கள். தவிரவும், இவ்வாலய பிரதக்ஷிணத்தால் பேய் பிசாசு முனி முதலிய துஷ்ட கிரகங்கள் யாவும் பஞ்சாய்ப் பறக்கக் காணலாம். இதற்கெதிரே பிரத்தியக்ஷ வேதகிரீஸ்வரர் ஆலயமொன்றுண்டு. இவ்வாலயத்துக்கு வடக்கே வண்டுவனப் பிள்ளையார் ஆலயம். இந்த விடம் கதலிக் காடாயிருந்து, அதைத் தோண்டிய காலத்து, வண்டுகளால் சூழப் பெற்ற சிலா விக்ரகம் கிடைத்ததாகச் சொல்லுகிறார்கள். க்ஷேத்திர விருக்ஷம் கதலி, பிர்ம்மோற்சவம் 5-ம் நாள் காலையில் கதலி வாகனத்தில் சுவாமி எழுந்தருளுகிறார். அருகே ஆறுமுகப் பெருமான் ஆலயம். சுமார் 4, 5, வருஷத்துக்கு முன் சில பக்தர்களால் அஷ்டபந்தன கும்பாபிஷேகம் செய்யப்பெற்று, நாளதுவரை கிருத்திகை தோறும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்று வருகிறது. வெளிப் பிரகாரத்தில் ஆமை மண்டபம் ஒன்று வன்னிய வம்சத்தாருக்குச் சொந்தமென்று சொல்லுகிறார்கள். இதன் சிற்ப வேலைகள் கண் கவருந் தன்மையன.

அடிவாரத்தில் படியேறு வழியில் சித்தாத்ரீ கணபதி

ஆலயமொன்றுள்ளது. இதை அகஸ்தியர் பிரதிட்டை செய்ததாகச் சொல்லுகிறார்கள். அதற்குக் கீழ்ப்பாகம் கணநாதர் ஆலயம் ஒன்று உண்டு. இதை ஐயனார் கோயில் என்று வழங்குகின்றார்கள்.

சுமார் ஆயிர வருஷத்துக்கு முன்னே சோழ வம்ச பரம்பரையில் ராஜகேசரி வர்மன் பரகேசரி வர்மன் குலோத்துங்க சோழன் முதலியஅரசர்கள் அரசாண்ட காலத்தில், இத்தேவாலய பூஜை உற்சவங்களுக்காக அநேக நிலங்களும், அகண்டதீப நெய்க்காக ஆடு மாடுகள் பலவும் தானம் செய்ததாகக் கல்வெட்டுசாசனங்கள் பல, திருமலைக் கோயில் தாழக்கோயில் மதிற்சுவர்களில் காணப்படுகின்றன. இவைகளின் பிரதி புராதன கலாஞான ஆபீசில் (Archaeological Department) காணலாம். தவிரவும், சில சாசனங்கள் (Christian College Magazine) கிறிஸ்தியன் காலேஜ் மாதாந்தப் பத்திரிகை பல வருஷங்களுக்கு முன் வெளியானதிலும், (South Indian Shrines) தென்னிந்தியக் கோயில் என்னும் புத்தகத்திலும் வரையப் பட்டுள்ளன.

பெரியபுராணம் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் நமிநந்தியடிகள் நாயனார் மடத்துக்காக ராஜ ராஜபுரம் குடியானவனொருவனால் சிலநிலங்கள் விடப்பட்டதாகச் சாசனம் ஒன்றிருக்கிறது. இது சிறுத்தொண்ட நாயனார் வசித்த காலம்; சிலநாள் முன்னம் கல்விமான்கள் ஒரு சிலரால் ஏற்படுத்தப்பட்ட சுரகுரு நாடகத்தில் ஸ்தலவிசேஷம் ஒருவாறு கூறப்பட்டதெனினும், சில விடங்களில் மாறுபடுவது கவிவாணரது சேர்க்கையாமென மதித்தல்வேண்டும்.

சுமார் 600, 700 வருஷங்களுக்கு முன் பேரம்பலத்துறவர் அல்லது பேரம்பலத் தம்பிரான் என்பார் தபோ மகிமையும் பக்தி சிரத்தை வைராக்கியமுங் கொண்டு,

இவ்வாலய கோபுர மண்டபமாதி திருப்பணிகளைச் செய்து, வேலைசெய்தோர்க்கு அருட்பிரசாதமாகிய விபூதிகொடுக்க, அவ்விபூதியே அவரவர்கள் செய்யும் கஷ்டத்துக்கேற்ற கூலியாக நின்றதெனவும், அத்தகைய வர் ஸ்ரீவேதாத்ரியின் அவதார புருஷரெனவும், ஸ்தலவாசிகள் அவரை நாளைக்கும் புகழக் காண்கின்றோம். இவரே ஜனசவுகரியத்தை உத்தேசித்து மூவர் கோயிலுக்கெதிரேயுள்ள பழைய மலையேறு வழியை மாற்றி, தற்போதைய அடிவாரத்தையும் மலையேறுவழிப் படிக்கட்டுகளையும் ஒழுங்குபெறக் கட்டிவைத்தாராம். இப்பெரியார் தனக்குதவியாக ஆதி சைவ குலத்துதித்த குங்கிலியநாயனார் என்பாரைத் தன்னுடன் சேர்த்துக் கோயிற் காரியத்தை நடத்திவந்ததாகவும், இவ்விரு மஹான்களுடைய சிலா விக்கிரகம் தாழக்கோயில் திருப்பெருந்துறைக் கோயிலில் இருக்கிறதெனவும் சொல்லுகிறார்கள். இவ்விருவர்களது அருட்கிருபையாலேயே இவ்வாலயம் இப்பெரும் மகிமையைப் பெற்று விளங்குகிறதென்னவேண்டும்.

இம்மகான்களுக்குப் பின் இருபத்தாறு தம்பிரான்மார்கள் கோயிற்காரியங்களை நடத்திவந்து, 27-வது பட்டம் சிங்காரவேலு தம்பிரான் (1887.) இவருக்குப் பின் இத்தம்பிரான் உயில்மூலமாக ஏற்படுத்திய வைதிநாத தம்பிரான் திருவாவடுதுறையிற் கல்விபயின்று, அம்மடாதிபதிப் பெரும்பதவி யடைந்து, 1922-ம் வருஷத்திலே சிவகதி அடைந்தாராதலால் தம்பிரான் ஆதிக்கியம் இக்கோயிலில் அதோடு முற்றுப்பெற்றது.

இத்திருமலை யாலயத்தைச் சகல சுதந்தரத்துடன் பூஜித்துவந்தவர்கள் கௌசிக கோத்திரத்தவர்கள்; "சிவருத்திர பண்டிதர்" எனவும் பெயருண்டு. மேலப்பட்டு கிராமத்தில் பூதகிரீஸ்வரர் கோயில் பூஜைசெய்திருந்தவர்கள். சுரகுருச் சக்கிரவர்த்தியால் தாழக்கோயில்

ஊயா முதலியார் நந்தவனம், நகரத்தார் பார்வையிலிருக்கும் கோயில் நந்தவனம் ஆக எட்டு.

நகரத்தார் தருமம்:—இவ்வாலயத்தில் தர்மம் நாராயணன் செட்டியார் என்னும் சீமான் திருப்பணி செய்ய ஆரம்பித்து ஸ்ரீ திரிபுரசுந்தரி ஆலயம் (கர்ப்பக்கிருகம் நீங்கலாக) வெளி மண்டபம் முதலிய திருப்பணி செய்தார். அவருக்குப் பின் இத்திருப்பணி நின்றிருக்கிறது. சண்முகநாதபுரம் சி. த. சிதம்பரநாத செட்டியார் அவர்கள் நந்தவன கயிங்கரியமும், கழணிவாசல் சி. செ. அ. கறுப்பன் செட்டி வகையராக்கள் வேதபாடசாலை பசுமட தர்மமும், அ. ள. மு. க. மு. (தேவகோட்டை) வினைதீர்த்தாச்சி அம்மாள் குருபூஜை கைங்கரியமும் செய்துவருகிறார்கள்.

சத்திரங்கள்.—இவ்வூரில் தர்ம சத்திரங்களுள் கல்வெட்டு சிலாசாசனம் பறக்கிறதே யொழிய, யாத்திரை வாசியாய் வரும் பக்தர்கள் ஒருநாள் இருநாள் தங்குவதற்குத் தங்க இடம் அகப்படுவது நிர்ப்பந்தமே. பதினாயிரக்கணக்காகப் பணம் செலவிட்டுச் சத்திரம் கட்டிய பிரபுக்கள் தங்கள் அனுமதிச் சீட்டில்லாமல் யாரையும் உள்ளே விடுவதில்லையென்று ஏற்பாடுசெய்திருக்கிறார்கள்; தங்களுக்கு வேண்டியவர்களாயும் தங்களைப்போலொத்த பிரபுக்களாயுமுள்ள பெரிய மனுஷாளுக்குச் சகஜமாய் இடங்கிடைக்கிறது. இது தான் தர்மமென நினைக்கிறார்கள். ஆனால் இரண்டொரு சத்திரங்கள் மாத்திரம், சத்திரம் பார்ப்பவர்கள் அனுமதியின் பேரில் விடப்படுகின்றன.

இதில் அடிவார சத்திரமானது வெகு புராதனமானது. 200 வருஷத்துக்கு மேற்பட்டது. பாளையங்கோட்டை திருமணம் ராமலிங்கமுதலியார் அவர்களால் கட்டப்பெற்றது. இப்பரம்பரையாருள்சுலோசன முதலியார் என்பார் திருநெல்வேலி தாம்பிரவர்ண

நதிக்கு ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்து பாலம் கட்டி, அதில் இவர்களது சிலாசாசனம் அமைத்திருக்கிறார்கள். சத்திரத்துச் செலவுக்காகச் சுமார் Rs. 17,500 அக்கால அரசாங்கத்தினிடம் சாஸ்வத பண்டாக வைத்து, அதிலிருந்து வருஷம் ரூபாய் 1400 வட்டி வருகிறது. இந்த வட்டியைக்கொண்டு சதாவர்த்தி, நந்தவனம், தர்ம பாடசாலை சுக்கிரவார அர்ச்சனை, அடிவார வசந்த உற்சவம், கார்த்திகை சோமவார அபிஷேகங்கள், பிரதோஷ உற்சவ முதலிய தர்மங்கள் நடைபெறுகின்றன. அடிவார சத்திரமானது 200 × 400 அடி விஸ்தீர்ணம். பிராம்மணாள் சூத்திராள், பயிராகிகள் மூவரும் தனித்தனி இறங்குவதற்கு மூன்று சத்திரங்களாக வகுக்கப்பட்டுள்ளன.

அடியேன், தேக அசௌக்கியத்தோடு இத்தலத்தில் வாசஞ்செய்ய நேர்ந்தபோது, திருமலையின் வசீகரத்தோற்றமும், குளிர்ந்த மலைகாற்றும், சுத்த ஆகாயமும் எனது சரீரத்தை ஆரோக்கியப்படுத்தியதுடன், சாதுக்களது நேசமும் ஞானவான்களது தரிசனமும் என் மனதைச் சமாதானம் செய்தது. நான் கற்ற கல்வி கேள்விகளின் பலனும் கைமேற் கிடைக்க ஆரம்பித்தது. இத்துணை ஆச்சரியநிலைமை உண்டுபண்ணிய இத்தல மகிமை யின்னதென ஸ்தல வாசிகளாகவுள்ள பலரை விசாரித்ததில், அவர்கள் கூறும் விஷயங்கள் எனது சிற்றறிவுக்குப் புலப்படவில்லை யாதலால், இச்க்ஷேத்திர மான்மியம் கிரந்த தமிழ்ப் பிரதிகளைக் கண்டுபிடித்து, கல்வியிற்றேர்ந்த அறிவாளர்கள் பலர் முன்னிலையில் கேட்டதில் உண்மை யின்னதென விளங்கிற்று. நான் பெற்ற உண்மையை உலகினர்க்கறிவித்து உலகோர் கொள்கையி ன்னதென உணர ஆரம்பிப்பான் வேண்டி, இச்க்ஷேத்திர படங்களும், ஸ்தலபுராணச் சுருக்கமும், சங்கதீர்த்த மேளா என்னும் சங்கதீர்த்த புஷ்கர மகத்துவமும் அச்

பூஜைக்காக காசியிலிருந்து வரவழைக்கப்பெற்றவர்கள் பாரத்வாஜ கோத்திரத்தார்; "திருச்சிற்றம்பல பட்டர்" எனவும் பெயர் உண்டு. இவ்விருகோத்திரத்தவர்களும் திருமலையிலும் தாழக்கோயிலிலும் பூஜைசெய்கிறார்கள். காசிபம் அகஸ்தியமாகிய இருகோத்திரத்தவர்களும் கோயிலில் சட்டியம் சொல்லியும், அலங்காரம் செய்தும் வருகிறார்கள்.

இவ்வாலய வருமானமோ முற்காலத்தை விட அதிகம். காலநிலையையும் அகவிலையையும் உத்தேசித்து உற்சவக்காரரிடம் அதிக வருமானம் பெறுவதுடன் பாதகாணிக்கையும் பிரார்த்தனை உண்டியும் இருபங்கு வசூலாகிறது. சென்னை திருவட்டீஸ்வரன் பேட்டை ம. வடமலை கிராமணி பாரியாள் ஸ்ரீமதி ம. செல்லம்மாள் காலைசந்திக்கட்டளைக்காக வருஷம் ரூபா 720 வருமானம் செய்திருப்பதாக அடிவார சிலா சாசனம் சொல்லுகிறது. திருவல்லிக்கேணி ம. வரதராஜுலு செட்டியார் என்பார் உச்சிக்கால கட்டளைக்காக ஏதோ ஏற்பாடுசெய்திருப்பதாக வதந்தி. சங்கீத மேளத்துக்காக நகரத்துச் செட்டிமார்களுள் ஒருவர் மாதந்தோறும் தொகை கொடுத்துவருகிறார். சிவராத்திரி உற்சவத்துக்காக பெரிய தெருவில் வருஷம் ரூபாய் 100 வருமானம் கொடுக்கும் ஓர் வீடு தெய்வநாயக முதலியாரால் சன்மானிக்கப்பட்டிருக்கிறது. சுரோத்திரிய முத்திகை நல்லான்குப்பம் (இவ்வூருக்கு தெற்கு 2-பர்லாங்கு தூரம்) கிராமம் ஒன்று சுவாமிக்குள்ளது. சென்னை பார்க்டவுன் போஸ்ட் வேங்கா செட்டி தெருவில் சுவாமிக்கு மனை ஒன்றிருக்கிறது. திருக்கழுக்குன்றத்துக் கடுத்த வழுதூர் கிராமத்தில் 10-காணி நிலம் அறுபத்துமூன்று நாயன்மார் நித்திய நைமித்திய பூஜைக்காக 1819ஆு டிசம்பர்மீ 7உ செங்கல்பட்டு ஜில்லா கலெக்டர் உல்லியம் கூக்ஸ்

துரையவர்களால் விடப்பட்டிருக்கிறது. இடக்கு நாட்டில் சில தோட்டங்கள் இருப்பதாகப் பிரஸ்தாபம். ருத்திரான் கோயில் உச்சிக்கால கட்டளைக்காக நகரத்துச் செட்டிமார் ஒருவர் வருஷம் ரூபா 180 கொடுக்கிறார். இடையிடையே நடக்கும் விசேஷங்களுக்கு சென்னை வாசிகள் பலர் தக்க உதவிபுரிந்து வருகிறார்கள். கவர்ன்மெண்டார் கொடுக்கவேண்டிய வருஷவாரி மோகினிபணமும் தடையில்லாமல் வந்துகொண்டிருக்கிறது. இத்யாதி வருமானங்களைக் கொண்டு தேவஸ்தானம் சிறப்புற நடைபெறுமானால், கிராமத்துக்கு க்ஷேமமும், குடிகளுக்கு நன்மையும், விசாரணைகர்த்தாக்களுக்குப் புண்ணியமும், தரிசிப்போருக்குப் பக்தி வைராக்கியமும் பெருக உண்டாகும்.

இத்தேவஸ்தானத்தின் போஷகத்தை எதிர்பார்த்த ஆலயங்கள் (சுற்றுக்கோயில்கள்)—ருத்திரான் கோயில் (ராமலிங்க குருக்கள் & மாணிக்க குருக்கள்); அறுபத்துமூன்றுநாயன்மார் (பெரியவீட்டு குமாரசாமி குருக்கள்); சங்கதீர்த்தக் கரை தீர்த்தேசுரர் கோயில் (நபிஞ குருக்கள் சந்ததியார்); நால்வர்கோயில் (மூவர்கோயிலென வழங்கும்) காசிவாசி விஸ்வநாத குருக்கள் & சுந்தரேச குருக்கள்); சொக்கப்பிள்ளையார் (முத்து வேதாசல குருக்கள்); அடிவாரம் கணநாதர் (தி. ந. வேதாசல குருக்கள்); ஆஞ்சநேயர் கோயில் (சக்கிரவர்த்தி ஸ்ரீநிவாசாசாரியார்; கிராமதேவதைகளுக்கும் விசேஷ காலங்களில் சொற்ப வருமானம் கொடுப்பதுண்டு.

இந்த ஆலயசம்பந்தமான நந்தவனங்கள்.—அண்ணாஜி இராயர் பூந்தோட்டம், குட்டி முதலியார் நந்தவனம், விஸ்வநாத முதலியார் நந்தவனம், கோபதி நாராயணசாமி செட்டியார் நந்தவனம், கடலூர் தனுசு அம்மாள் நந்தவனம், அடிவார சத்திர நந்தவனம், பணவி சின்

சிட்டு வெளியிட்டேன். இத்தலத்தில் எக்காலத்தும் நடந்திராத சங்கதீர்த்த புஷ்கர மஹோற்சவம் துந்துபி௵ ஆவணி௴ 1௳ (16-8-21) நடந்து, அன்றிரவு லக்ஷதீப மஹோற்சவமும் மிக வைபவமாக நடந்தேறியது. அக்காலையில் யாத்திரைவாசியாய் வந்த ஸ்ரீமதி மனோன் மணியம்மாள் என்னும் மாது சிரோன்மணியை தெய்வ சம்மதமாய்ச் சந்திக்க நேர, அம்மாது இத்தல வைபவம் முழுமையும் சாங்கோபாங்கமாக ஏழையேனால் முடிக்கவேண்டுமென்று பன்முறை வேண்ட, அம் மனோன்மணியின் அபிப்பிராயத்துக்கிசைந்து, இப்பெரு நூல் எழுத நேர்ந்தது. இந்நூல் எழுதிவருங் காலத்தில் பலப்பல சந்தேகங்களும் மனோகஷ்டங்களும் தோன்றின; ஆயினும் ஜெகன்மாதாவின் அநுக்கிரக பலத்தினாலும் பெரியோர்களது ஆசீர்வாத விசேஷத்தினாலும் இப்புத்தகம் இனிது முடியக் கண்டு சந்தோஷிக்கும் பாக்கியம் இன்று பெற்றோம்.

இப்புத்தகத்தை அச்சிட்டு வெளியிடுவான் வேண்டிப் பலமுறை முயன்றகாலத்தில், ஆஷாடபூதிகளது இனிய வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து மோசம்போன சங்கதி ஆசை வெட்கமறியாதான் கதை போலாயிற்று. ஜெகன் மாதாவின் திருவருட்கிருபையால் சரீர சவுக்கியத்தின் பொருட்டு இவ்விடம் விஜயஞ்செய்தஅறவாழி அந்தணர் குலத்தோன்றல் ப்ர்ம்மஸ்ரீ R. B. லக்ஷ்மி ரதன் அய்யர் (of Messrs R. B. LatchmiRatans, Ltd., Merchants, Thambu Chetty Street, Madras) என்னும் சீமான் இப்புத்தகத்தை யான் பிரசுரித்து வெளியிடுகிறேன் எனச் சொல்லிய அமுத மொழிகளின் வன்மையால், தற்போது இது நம்மனோர் கையில் தவழக்கண்டு மகிழும்படியான பாக்கியம் பெற்றோம். அதனால் அத்தரும குணசீலர்க்கு நமது மனமார்ந்த நன்றி செலுத்தி, அச்சீமானது ஆசீர் வசனமும்

பெறக் கடமைப் பட்டிருக்கின்றோம். இப்புத்தகம் இனிது முடியுமாறு வேண்டிய முயற்சியெடுத்த அவாது அன்பர்கள் (Messrs. Ganesh & Co., Madras) மெஸ்ஸர்ஸ் கணேஷ் கம்பெனியாருக்கும், இந்நூலைப் பரிசோதித்துத் திருத்தி உதவிய கல்வி மான்களுக்கும் நன்றி செலுத்துகிறோம்.

கல்வியறிவாசார நடையுடை பாவனை ஒழுக்கங்களைக் கனவினும் கேட்டறியாத மந்த மதியுடைய அடியேன் இப்பெருநூலை எழுதி வெளியிட்டது சூரியப் பிரகாசத்தின்முன் மின் மினிப்பூச்சி தன்னொளியை வீச முன் வந்ததாகுமென அறிஞர்கள் கூறுவர். ஆயினும் இச்க்ஷேத்திர வாசியாய் அடியேன் வந்து தங்கிய காலத்து, சரீர திடமும் மனோ சாந்தியுந் தந்து ஏழையேனை ஆட்கொண்ட எம்பெருமானுக்கு இம்மான்மியத்தை எழுதிச் சிவபெருமானது லீலா விநோதங்களை வெளியிடுவதைத் தவிர வேறொரு கைம்மாறு செய்யச் சக்தியுள்ளேனல்லனாதலால், இலக்கிய இலக்கணங்களில் வல்லுநராகிய அறிஞர்கள் சிவபெருமானிடத்துக் கருணை கூர்ந்து, இந்நூலுட் பொதிந்துள்ள குற்றம் குறைகளை மன்னித்து, எளியேனை ஆட்கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்.

இவ்வரிய நூலை எழுதி வெளியிடும்படியான வல்லமையைக் கொடுத்த லோகமாதாவாகிய இராஜ ராஜேஸ்வரி அம்பிகையின் இரு பாத பங்கஜங்களை நமஸ்கரிக்கின்றேன்.

இதில் சமய குரவர்கள் இச்க்ஷேத்திர சம்பந்தமாகப் பாடிய தேவார திருவாசகங்களுடன், அருணகிரிநாதர் அருளிச் செய்த திருப்புகழ் நான்கு பாசுரங்களும், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய ஸ்ரீ வேதகிரீஸ்வரர் ஸ்தோத்திரப் பதிகங்களுடன் மஹாலிங்கப் பதிகம், ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்மை

யார் ஸ்ரீ மலைச்சொக்க நாயகியார் ஸ்தோத்திரப் பதிகங்களும் சேர்க்கப்பட்டுள்ளது. ஆங்காங்கு வேதாந்த சித்தாந்த சாஸ்திர குறிப்புரையும் எழுதப்பெற்றுள்ளது.

ஓம்! சாந்தி! சாந்தி!! சாந்தி:

சர்வேஜனோ சுகினோ பவந்து.

பண்டிட் S. R. நமசிவாய ராஜயோகி,

காந்திநிலயம், ஆயுர்வேதபண்டிதர்,

திருக்கழுக்குன்றம், P.O.

---

இந்நூலாசிரியரால் எழுதி

அச்சுக்குத் தயாராயிருக்கும் புத்தகங்கள்.

1. ஸ்ரீ கிருஷ்ண லீலாம்ருத வசனம்.
2. ஸ்ரீ குசேலர்.
3. இந்து ஜெயபேரிகை அல்லது மதுரை பண்டாரத்துக்கும் கிறிஸ்தவப் பாதிரிக்கும் நடந்த சம்பாஷணை.
4. சென்னப்பட்டணம் கேப் மாரிப்பட்டணமா ?
5. சென்னைக் கந்தர் ஆலய வைபவம்.

☞ கல்வி அபிவிருத்தியை நாடும் தனவான்கள் மேற்குறித்த புத்தகங்களை அச்சிட்டு வெளியிடப் பிரிய முளதேல் இந்நூலாசிரியருக்கு நேரே எழுதி ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

ஓம்

சிவமயம்

திருக்கழுக்குன்றமென்னும்

# இவ் உருத்திரகோடித் தலமான்மியத்துள்ள

# விஷய அட்டவணை.


| அதிகார எண். | விஷயம். | பக்கம் எண். |
| --- | --- | --- |
| | உருத்திரகோடித் தலமான்மியம் (அகவல்) (திரு எவ்வளூர் - இராமசாமி செட்டியார் இயற்றியது) ... ... ... | 1 முதல் 6 வரை |
| | விநாயகர்துதி முதலியவை ... ... | 7 & 11 |
| 1. | நைமிசாரண்ய வனச்சிறப்பு ... ... | 12 |
| 2. | புராண வரலாறு ... ... ... | 13 |
| 3. | திருக்கைலாயச் சிறப்பு ... ... | 17 |
| 4. | கருடன் அகந்தை ஒழிந்தது ... ... | 21 |
| 5. | சிவபெருமான் நந்திதேவருக்கு வேதகிரி மகிமையை உரைத்தது ... ... | 27 |
| 6. | உருத்திரகோடி மகிமை ... ... | 31 |
| 7. | நந்திதேவர் தவஞ்செய்யுஞ் சிறப்பு ... | 40 |
| 8. | மாயீகன் என்னும் அசுரன் பன்றி உருவெடுத்தது ... ... ... | 50 |
| 9. | காமதேனு அஷ்டவசுக்களுக்குச் சாபம் கொடுத்தது ... ... ... | 53 |
| 10. | நாரதர் வசுக்களுக்குச் சாபவிமோசனமார்க்கம் சொன்னது ... ... ... | 59 |

11. (ஸ்ரீ மார்க்கண்டேயர் உபதேசித்த) தேவேந்திரன் சாபவிமோசனம் ... ... 62

12. ,, ஸ்ரீ மஹாவிஷ்ணு சாபவிமோசனம் ... 67

13. ,, ப்ர்ம்மா தவஞ்செய்து பூஜித்தது. (இதில் காலப்பிரமாணம் விவரித்துள்ளது) ... ... ... 74

14. ,, சிவபூஜாவிதானம் சொல்ல, அஷ்டவசுக்கள் சாபவிமோசனம். (இதில் பதி, பசு பாசவிலக்கணம், விபூதி ருத்திராக்ஷமான்மியங்கள், ஸ்ரீ பஞ்சாக்ஷரமகிமை, பிரணவமகிமை, சிவலிங்க பூஜாவிதானம், விவரிக்கப்பட்டுள்ளது) ... 80

15. துவாதசாதித்தர்கள் பூஜித்த வைபவம். ... 109

16. முனிகணங்கள் சந்தேகந் தீர்ந்தவைபவம் ... 115

17. சிவபெருமான் திருக்கல்யாண வைபவம். (இதில் வியாக்ரபாத முனிவருக்காக நடன தரிசனம் காட்டி வியாக்ரபாதபுரம் (புலிப்பர் கோயில்) உற்பத்தியான சரித்திரம் ... 118

18. கங்காசல வைபவம். அல்லது கழுகு முனிவர்கள் சாபவிமோசனம் ... ... 136

1. கிரேதாயுகத்தில் சண்டன், பிரசண்டன் சாபநிவிர்த்தி ... 141

2. திரேதாயுகத்தில் சம்பாதி, சடாயு சாபநிவிர்த்தி ... 148

3. துவாபரயுகத்தில் சம்புகுத்தன், மாகுத்தன் சாபநிவிர்த்தி ... 154

4-வது கலியுகத்தில் பூஷா, விதாதா, அதாவது சம்பு, ஆதி கழுகு முனிவர்கள் தவஞ்செய்கிறார்கள் ... ... 160

19. திலோர்த்தமை, மாயீகன் சாப விமோசனம் ... 166

20-A. சம்பாதி முனிவர்கள் சுரகுரு வேந்தனுக்கு தீர்த்த விசேஷம் சொல்லியது ... 173

1. சங்கதீர்த்த புஷ்கரம் அதாவது கங்கை யாதி நதிகள் அருளையை நீக்கிக்கொண்டது ... ... ... 179

2. மஹாவிஷ்ணு சாபந்தீர்த்தது ... 191

3. மார்க்கண்டேயருக்காகச் சங்கம் பிறக்கிறது ... ... ... 196

4. சம்புலிங்கம் சித்தப்பிரமை நீங்கியதும், யக்ஷன் சாப விமோசனமானதும் ... 196

20 B. கழுகு முனிவர்கள் ஈசகுரு வேந்தனுக்குத் தலவிசேஷமும் ஞான விளக்கமும் சொல்லியது ... ... ... 199

21. சுரகுருச் சக்கிரவர்த்தி, சிவலிங்கப் பிரதிஷ்ட்டை கிராம சீர்திருத்தம், கோயில் திருப்பணி செய்த வைபவம் ... ... 226

சிவாலய வழிபாடு ... ... 233

சோமவார விரதம் ... ... 240

சநிப்பிரதோஷம் ... ... 251

திருக்கழுக்குன்றம் கிரிப்பிரதக்ஷிண விதி ... 252

ஆருத்திரா தரிசனம் ... ... 263

சிவராத்திரி ... ... ... 265

லக்ஷ்மிதுதி, சரஸ்வதிதுதி, சிற்சத்திதுதி ... 268

ஸ்தல தேவார திருவாசகம் :—ஸ்ரீ வேதகிரீஸ்வரர், திரிபுரசுந்தரி, மலைச்சொக்கநாயகி ஸ்தோத்திரப் பதிகங்கள், மலைமருந்துப் [illegible] முதலியன ... 271 to 332


☞ [illegible] பக்கத்தில் வேதகிரி அஷ்டகம், குருத்யாஷ்டகம், ஓரடிக் கீர்த்தனை, புராதனக் குறிப்புகள், அந்தகக்கவி வீரராகவ முதலியார் சரித்திரம் நான்முகம் முதலிய காணலாம்



ஓம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

திருக்கழுக்குன்றமென வழங்கும்.

# உருத்திரகோடித் தலமான்மியம்.

---

(திருஎவ்வளூர் - இராமசாமி செட்டியார் இயற்றியது.)

---

(நிலைமண்டில வாசிரியப்பா).

கேண்மின் கேண்மின் கேண்மின் கேண்மின்
மாண்மிக் கோங்கிய மாநிலத் தவரே
கேண்மின் கேண்மின் கேண்மின் கேண்மின்.

நெடுங்கட லுடையுடீஇ நிலவு மொண்ணிலமக
டடங்கெழு முகமெனுந் தகுதொண்டைநாட்டில்
விண்ணகத் தவரொடு வியன்மண் ணகத்தவர்
நண்ணிவந் திறைஞ்சு நலமுயர் சிவதல
முப்பா னிரண்டின் முதிர்புக ழனந்தனுற்
செப்பரும் பல்வளஞ் செறிந்தொளிர் சீர்ப்பதி
வேதமோர் நான்கும் விதுமுடிப்பரமனை

யாதரம் பெருகவந் தர்ச்சித்த மாண்பதி
யுருத்திர கோடிய ரொருங்கிணி தெய்தி
யருத்தி யொடுதுதித் தர்ச்சித்த பொற்பதி
தண்டுள வணிமால் சதுமுக னிந்திரன்
வண்டறை மலர்த்தார் வனைநந்தி தேவ
ரமரரெண் வசுக்க ளந்தண ராதியோர்
நமவெனத் துதித்தரு ணண்ணிய மகாதலம்
பசுவொடு வராகம் பன்முறை வலம்வந்
துசிதமாந் தேவ வுருப்பெற்ற கேத்திர
மிறைசண் டன்பிர சண்டனென் றிருகழு
கிறையேத்தி முன்யுகத் தின்முத்தி பெற்றவூர்
சாற்றுசம் பாதி சடாயுவென் றிடுபெய
ரேற்றுடன் மிகக் கொண் டிருகழு கரசர்க
டிரேதா யுகத்திற் சிவார்ச்சனை புரிந்துட்
பராவினன் முத்திப் பலனுற்ற பூம்பதி
யுத்தம துவாபர யுகத்தினிற் சம்பு
குத்தன் மாகுத்த னெனப் பெயர் கொண்ட
விருடிய ரிருவ ரியம்பு மெய்ச் சிவமே
பெரிதெனச் சத்தியே பெரிதென வின்னணம்
பன்னிமா தர்க்கப் படலு முளங் கொண்
டென்னிறை சிவத்தொடு மியற் சத்தியும்வந்
திகலுமிம் மாற்ற மேற்றிடா தேற்றிடா
தகலுவீர் தர்க்கமீங் ககலுவீ ரெனவே
யினிதாய்ப் புகலவு மெட்கடை யேனு
மனதினிற் கொளாது மறுத்ததாற் சாப
நேர்ந்தது வினையா னிகழ்கழு குருவஞ்
சார்ந்துபி னனேகநாட் டகுதவ முஞற்றி

யகங்களிற் தன்புட னரனையர்ச் சித்துத்
திகழ்முத்தி பெற்ற தெய்வீகத் திருத்தலம்
பூடா விருத்தா வெனப்புக றவத்தினர்
பீடார் தவநிலை பிறங்கிய காலையிற்
சிவபெரு மானுரை செய்த வாக்கினை
யவமதிப் பாக்கி யருண்முத்தி வேண்டித்
தடுத்ததாற் சாபமுந் தந்திடக் கழுகுடம்
படுத்தது கடையுக மாகிக் கலியுகத்
தெத்திசை யோரும்வந் தெளிதினிற் காணப்
பத்தியாய் வேத பருவதம் வலஞ்சூழ்ந்
தந்திவண் ணன்றா ளன்புடன் சிந்தித்
தந்தமா முத்தி யடைதற் கனுதின
முளத்திற் பரிவா யோரிரு கழுகுகள்
வளத்தொடம் முத்திக்கு வழிபடு பெரும்பதி
பரசிவன் றருமறைப் பாதுகை யதனைப்
பெரிதன் பகத்திற் பிறங்கக் கொணர்ந்தே
மாணிக்க வாசகர் வைத்தர தனம்போற்
காணிக்கை யாகக் கவின் பதிகஞ் சொலக்
குருவடி வரனார் குணமொடு காட்டி
யுரிமையா யாண்டரு ளுதவுதெய் வத்தலம்
விரிசிறை பனிமுரன் மேதகு பொதும்பர்ச்
சிரபுரக் குருந்தொண் டிருவா ரூரா
சேவற் றெழுமற்கிறை யிசையச் செய்திட்ட
நாவலூர் நாவல நற்கற் பகமா
மூவர்க ளுரைத்த முதிர்தமிழ்ச் சொற்சுவைப்
பாவெனும் பதிகப் பண்புகொள் பொற்புரி
யித்தகு மகத்துவ மெய்திய தலமாம்

விந்தக வேத கிரித்தல மேவியுஞ்
செறிசங் குத்தடத் தீர்த்தத்திற் றோய்ந்து
நெறிநெறி காட்டும் வெண் ணீற்றினை யணிந்துஞ்
செய்கடன் முடித்துஞ் சிரமேற் றமதிரு
கைகள் கூப்பியுங் கருத்துமேற் கொண்டும்
வண்டு வனவே ழுத்தை வழுத்தியும்
வண்டில் வேலாயுத வள்ளலைப் போற்றியும்
கேகையார் வேத கிரிவலம் புரிந்தும்
வாலகசேர் மலையடி மண்மருந் தருந்தியுஞ்
சிகரகோ புரமார் தேவாலயம் பணிந்
தகர வெழுத்துப்போ லாதியாம் பரனைப்
பெண்ணினல் லாளெனப் பேர்பெறு முமையை
யெண்ணிச் சேவித் தியன்மண மலர்கள் கொண்
டருச்சனை புரிந்து மாடியும் பாடியும்
விரிச்சி வாழ்த்தியும் வேண்டித் துதித்துந்
தரசிவ சங்கர சம்போ கங்கா
தரமங் களகுண தாவர வரகர
பருணிதர் பராவும் பரமகா தேவ
கருணைக் கடலே காத்தரு ளென்பிரே
லடரு மூலம்பித் தறிவுண் மயக்கங்
கொடுமைசெய் குடர்நோய் குன்மம் வெங்காசங்
கண்ணோய் தலைவலி கடுவ ணாதிய
திண்ணிய வியாதிக டீர்ந்தினி துய்வீர்
பேய்பிசா சரக்கி பிரம ராக்கதை
தீயவே தாளந் திடமுறு சடாமுனி
பில்லிவைப் பேவல்கள் பெருஞ் சூனியமிவை
யெல்லின்முன் பனியா யிடரினைத் தவிர்வீர்

நெடுநாள் வஞ்சக நெஞ்சில் வைத்தடரும்
படைசூழ்ந் தெதிர்க்கும் பகைஞரை வெல்வீர்
சேடனைப் போலுந் திகழ்கல்வி கற்றுவி
சேடனென் றிடவே சிறந்த சீரேற்பீர்
புடவியில் யானைவண் புரவிபொற் சிவிகை
யுடையராஞ் சம்பத் தோங்கவே யுறைவீர்
கற்பனை தீர்ந்துட் கருத்து மொருமித்
தற்புத மாத்தீர்க் காயுளுற் றிருப்பீர்
சொற்பெறு கல்வித் துறையினும் விற்பனம்
பற்பல தொழிலினும் பலன்மிக் கெய்துவீர்
கற்புறு சிந்தைவங் கணங்குண மாட்சிசால்
பொற்புறு மாதர்தம் புதுமணம் புரிவீர்
தண்ணிய குணஞ்சீர் தகுசதுர் வடிவு
வண்ணமார்ந் தொளிருநன் மக்களைப் பெறுவீர்
நுவலிகத் தின்பநுகர்ந்து வானமரார்க
டவனிவ னெனவிணிற் சார்ந்தின்பு நுகர்வீ
ரவமுறும் பவப்பிணி யகன்றுபின் கைலையிற்
சிவசா ரூபஞ் செறிந்தும்வாழ் குவிரே.

ஓம் ! ஸாந்தி !! ஸாந்தி ! ஸாந்தி !!

முற்றுப் பெற்றது.

## உயிர்வருக்க மோனையும், வாரமாலையும், கேசாதி பாதவர்ணனையும்.

---

அவிர் ஞாயிறு சவிநீள்சடை
ஆர் திங்களை நேருறுமுகம்
இழிவறுமறை பொழிதருசெவாய்
ஈரமதெனு மாரமுதருள்
உயரற்புத நயவம்பகம்
ஊர்வியாள மதார்வண்செவி
எவமில்வெள்ளி நவசூத்திரம்
ஏர் சனித்தொளி வாரெண்புயம்
ஐம்மழுமறி கைம்மலிகரம்
ஒலிபுலியதள் பொலியுடையிடை
ஓதுசரணநல் வேதகிரியையை
ஔவியமற வெவ்வமினெஞ்சே
அஃகலிறுதிசெய் வெஃகி வாழ்தற்கே.

---



உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ வேதாத்ரீசாயநம:

"சிவாய பரிபூர்ணாய சீதளாய சிதாத்மனே:
சித்தநாதாய நாதய தேஜசே ப்ரம்மணே நம:"

# திருக்கழுக்குன்றமென வழங்கும்

# உருத்திரகோடித்தலமான்மியம்.

(வசனம்.)

## விநாயகர் துதி.

வாழத் தானணத் தான்மக வான்கட
லாழத் தானனத் தானரு மாதவர்
சூழத் தானணத் தானச் சுரர்தொழும்
வேழத் தானனத் தான்பதமேற் கொள்வாம்.

[கருத்து]—அன்னவாகனத்தராகிய ப்ரம்மதேவனும், நூறு அஸ்வமேத யாகம் செய்த தேவேந்த்ரனும், வைகுண்டவாசராகிய லட்சுமி நாயகனும் மஹாவிஷ்ணுவும், மற்றுமுள்ளதேவர்களும் முனிவர்களும் தொழுகின்ற யானைமுகக்கடவுளராகிய விநாயகமூர்த்தியின் திருவடிக் கமலங்களைத் தொழுது வணங்குவாம்.

---

## ஸ்ரீவேதகிரீசுரர் துதி.

சீர்பூத்த வுருவகை நான்கருவகை நான்கிருவகையின்
செயற்கையொன்று
யேர்பூத்த நவப்பொருட்கு முதற்பொருளா மொரு
பொருள்வந்தெம்மைக் காப்பான்
வேர்பூத்த கிளைகிளைத்து மெய்ஞ்ஞானமணம் பொதுளி
வெளி நின்றோங்கும்
சூர்பூத்த வோதமலை வேதமலைக்கொழுந்தை முடி
சூடிக்கொள்வாம்.

[கருத்து]—ப்ரம்ம விஷ்ணு ருத்ர மஹேஸ்வரர் என்னும் உருவகை நான்கும், சத்தி சிவம் விந்து நாதம் என்னும் அருவகை நான்கும், இவ்விருவகையின் செயற்கையொன்றாகிய உருவம் அருவமின்றி உருவாரூபமாய் சதாசிவம் ஆக ஒன்பது பொருட்கும், முதற்பொருளாகிய அகண்டாகார சின்மய சித்சொரூபவஸ்து, எம்மைக் காக்கும்பொருட்டு வேதங்களே மலைகளாக, அதன் உச்சியில் பிரணவ வடிவமாகிய ஞானத்திருமேனிகொண்டு சிவலிங்க உருவாக எழுந்தருளியிராநின்ற ஸ்ரீவேதகிரீஸ்வரரது பாதாரவிந்தங்களைத் தொழுது வணங்குவாம்.

## ஸ்ரீ மலைச்சொக்கநாயகி துதி.

பஞ்சொக்க நெகிழ்ந்தன்னப் பரிசொக்க நடக்குமடிப்
 பசுந்துழாயோன்
றுஞ்சொக்க விளங்குதரத் தூசொக்க மிலைந்தமுலைச்
 சுடர்ப்பூந்திங்கட்
பிஞ்சொக்க வயங்குநுதற் பிரசொக்க மொழியு
 மொழிப்பேரண்டஞ்சூழ்
மஞ்சொக்க வளரளக மலைச்சொக்க நாயகியை
 வணக்கஞ் செய்வாம்.

[கருத்து]—செம்பஞ்சுபோன்று மிருதுவாகிய அன்னப்பட்சி நடையையொத்து நடக்கும் திருவடிகளையும், ஆலிலைபோன்ற வயிற்றினையும், உத்தரீயம் தரித்த தனபாரங்களையும், இளம்பிறைபோன்ற நெற்றியினையும், தேன்போன்ற மதுரமான மொழியினையும், மேகம் போன்ற கரிய கூந்தலையுமுடைய லோகமாதாவாகிய மலைச்சொக்கநாயகியைத் தொழுது வணங்குவாம்.

---

## ஸ்ரீ வண்டுவனப்பிள்ளையார் துதி.

(தலவிநாயகர்.)

பூவேழம்பொதிகளாம் புரவேழம் பூவழியிற் பொழி
 யும்பைந்தேன்
காவேழம்புதமென்னும் கருவேழம் பரத்தினொடும்
 காக்குங்காவற்
கோவேழம்பயந்த முத்தங்கொடுத்த கனிக்கடுத்த
 கனிக்குவையோடப்ப
மாவேழம்படைத்த வண்டுவனவேழம் புரக்கவென்று
 வணக்கஞ்செய்வாம்.

[கருத்து]—வண்டு என்பது சங்கு; வனம் என்பது தீர்த்தம்; சங்குதீர்த்தக்கரையிலுள்ளது வண்டுவனப் பிள்ளையார் என்பது இத்தல விநாயகர்.

ஏழுலகங்கள், சப்த சமுத்ரங்கள், பசுந்தேனைப்பொழியும் ஏழு சோலைகள் இவைகளை ஆகாயத்துடன் காக்கும் தேவேந்த்ரன், வேயீன்றமுத்தாகிய பரமசிவம் முன்னோர் காலத்தில் கொடுத்த மாங்கனிக்கொப்பாக மதுரமாகிய மா, பலா, வாழைகளும், அப்பம் அதிரச முதலிய அபூப வர்க்கங்களும், கரும்புகளும், நிவேதித்த வண்டுவனப் பிள்ளையார் நம்மைக் காக்கக் கடவரென்று வணக்கஞ் செய்வாம்.

---

## ஸ்ரீசுப்பிரமண்ணியக்கடவுள் துதி.

பெருவேலைஞ் ஞூறிரட்டி விழிபடைத்தாயமர ரொடும்
விடாது துன்பம்
மருவேலை மழைநிறத்தாய் மலரகத்தாயெனத்தனது
மலர்க்கண் சாத்திப்
பெருவேலைப் பொருதலைக்குங் கருவேலைக்கவுணர்
கணப் பெருவேலைக்
கொருவேலை விடுத்தானை யிருவேளையுந்தமி
யேற்குணர மேலை.

[கருத்து]—ப்ரம்மவிஷ்ணுவாதி முப்பத்துமுக்கோடி தேவர்களைக் காத்து ரக்ஷித்து அவுணக் கூட்டங்களை அழித்த வேலாயுதம் படைத்த அறுமுகக்கடவுளைச் சதாகாலமுந் தொழுவாம்.

---

## ஸ்ரீ நந்திதேவர் துதி.

கண்ணனையும் கமலமலர்க் கண்ணனையு மமரரையும்
ககனவாசி
விண்ணனையு முமைபாகன வையகத்தே நிரந்தர
மும் விலக்குந்தோறும்

தண்ணனைய துழாய் மணமுந் தாமரையின் விரை
    மணமுந்தாருத்தாரின்
வண்ணனையின் மணமுமணந்துடைய பிரம்புடையானை
    வணக்கஞ்செய்வாம்.

[கருத்து] கைலையங்கிரி நாதராகிய பரமசிவத்தின் சந்நிதானத்தில் தரிசனார்த்தம் வரும் ப்ரம்ம விஷ்ணு இந்திராதி தேவர்களை விக்கினமின்றித் தரிசிக்க ஒழுங்கு பட நிறுத்தும் பிரம்பினையுடைய நந்தியெம்பெருமான் பாத தாமரைகளைத் தொழுவாம்.

☞ சிலாதர முனிவருடைய திருமைந்தராக அவ தரித்துத் திருவையாறு என்னும் க்ஷேத்திரத்தில் தவஞ் செய்து, சிவபெருமான் திருவருளால் சுரிகையும் வெள்ளிப்பிரம்பும் திருக்கயிலாயத்தைக் காக்குந் தலைமையும் பெற்றார் என்ப.

---

### சமயாசாரியர் நால்வர் துதி.

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

கறைக்கண்டர் பதங்கடமைப் பாடிய சண்பைக்கவிஞர்
    கழற்றாள் போற்றி
யிறைக்குரிய பணிபுரிந்தோர் சிங்கவாய்ப் புகுமுனிவ
    ரெழிற்றாள் போற்றி
துறைக்கயிலை யாளிவிடு மியானையிவர் வன்றொண்டர்
    துணைத்தாள் போற்றி
மறைக்குதிரை மீதெம்மான் வரச்செய் மணிவாசகர்
    செம்மலர்த்தாள் போற்றி.

---

## 1. நைமிசாரணிய வனச் சிறப்பு.

முன்னோர்காலத்தில் சிருட்டிகர்த்தராகிய ப்ர்ம்ம தேவரைச் சவுனகாதி நாற்பத்தெண்ணாயிர மஹாமுனி வர்களும் உள்ளன்போடு புகழ்ந்து பூஜித்து, பிரபோ! எங்களுக்குத் தபோமார்க்கத்தையும், தவஞ்செய்வதற் குப் பரிசுத்தமான ஓரிடத்தையும் தேவரீர் கட் டளையிடவேண்டு மென்று பிரார்த்தித்தார்கள். அம் மதுரமொழியைக்கேட்ட ப்ர்ம்மதேவர் மனமகிழ்ந்து, முனி சிரேட்டர்களே! எல்லோரும் மனமகிழ்ந்து வழி படத்தகும் கடவுள், மனோவாக்கைக்கடந்த நிரதிசயா நந்த மகிமையினையுடைய சிவபெருமானே யாவர். அவர் அகண்டபரிபூரணர்; சத்து சித்து ஆநந்த சிற்சொரூபர்; அகில லோக சராசரங்களுக்கும் பிதா; சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகமாகிய பஞ்ச கிருத்தி யங்களுக்கும் அதிகாரி. அணுவுக்கணுவாயும் மஹத் துக்கு மஹத்தாயும் காருண்யமே ஓருருக்கொண்டவர். அவரை உள்ளன்போடு வணங்குவோர்களது உள் ளத்தின் கண்ணும் சதா குடிகொண்டிருக்கும் கரு ணைக்கடல்; பச்சைப் பசுங்கொடியாகிய உமா தேவியாரை அரைக்கணம் பிரியாத அன்பர்; அத் தகைய அநந்த கல்யாண குணங்களையுடைய முழு முதற்கடவுளராகிய எம்பெருமானை எக்காலத்தும் எவ் விடத்தும் எந்நேரத்தும் வணங்குதலே தபோ மார்க் கம் என்று, ஒரு தருப்பையை எடுத்து வட்டமாக முடி ந்து, அதைப் பூமியில் விட்டு, இத்தருப்பைச்சக்கரம் போய் தங்கும் இடம் நீங்கள் தவஞ்செய்வதற்குரிய பரிசுத்த ஸ்தானமாகுமென்று திருவாய் மலர்ந்தருளி

ணூர். முநிகணங்கள் ப்ர்ம்மன் ஆக்கினைப்படி அத்தரு ப்பை நேமியின் பின்னேபோய், அது தங்கிய வனத்தி லிருந்து தவஞ் செய்தார்கள். அக்காரணத்தினுல் அவ் வனம் நைமிசாரணியமெனப் பெயர் பெற்று விளங் கியது.

ப்ரம்மதேவரின் ஆக்ஞையால்ஏற்பட்ட இவ்வாரண்யம் மல்லிகைமுல்லை இருவாக்ஷிமுதலிய நறுமணம் நிறைந்த நந்த வனங்களாலும், சந்தனம் பாரிஜாதம் புன்னை மாதுளை அசோகு இலந்தை கொன்றை முதலிய விரு க்ஷங்களாலும், மிகப்பரிசுத்தமான திவ்ய தீர்த்தங்கள் நிறைந்த தாமரைத்தடாகங்களாலும் சூழப்பட்டுள்ளது. ஜென்மப்பகையுள்ள புலியும் பசுவும் ஓர் துறையில் நின்று ஜலம் சாப்பிடுகிறதென்றுல் அவ்வனத்தின் மஹிமையை அளவிட யாரால் முடியும்? இனிய குர லோசையுடைய மயில் குயில் நாகணவாய்ப்புட்கள் எந்நேரமும் ஓங்கார ஹ்ரீங்கார சப்தத்துடன் பாடிக் கொண்டேயிருக்கும். முநிசிரேட்டர்களது வேத மந் திர பாராயணமும், அவர்கள் செய்யும் ஆநந்த ஓமங்களும் அவ்வனமெங்கும் கோஷித்துக் கொண்டி ருக்கும். ஆதலால் இந்நைமிசாரணிய வனம் தேவ லோகம்போல் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

## 2. புராண வரலாறு.

இத்தகைய சிறப்பு வாய்ந்த நைமிசாரண்யத்தில் வசிக்கும் தவசிரேட்டர்களிடம் பரசிவாக்ஞையால் வேத வியாசபகவானது சீடர் சூதமாமுனிவர் எழுந்தருளி

ளர். திருமேனிமுழுதும் விளங்கும் விபூதியின் காந்தியும், ஆநந்தபாஷ்பம் பெருகுகின்ற கண்களும், உருத்திராக்கமாலைதரித்த அற்புதக்காட்சியும், சிவாநந்தானுபவத்தால் விளங்கும் தேஜஸும், சிவநாமோற்சாடனம் ஓதும் சிவந்தவாயும், பஞ்சேந்திரியங்களைவென்ற மனமும், பக்த கோடிகளின் மனோபீஷ்டத்தை நிறைவேற்றும் காருண்யமும் நிறைந்த சூதமஹாமுனிவரை, நைமிசாரண்ய முநி சிரேட்டர்கள் பார்த்து உபசரித்துத் தோத்திரஞ்செய்து அழைத்து திவ்யாசனத்திருத்தி சோடசோபசாரஞ்செய்து வந்தனை வழிபாடுகளுடன் வினவுகின்றார்கள். சுவாமீ! தாங்கள் இங்கு எழுந்தருளிய மகிமை நாங்கள் செய்த தவப்பயனோ? அல்லது இவ்வனம் செய்த புண்யவசமோ? தெரிகிலோம். தங்கள் தரிசனமாத்திரம் எங்களிடமிருந்த அஞ்ஞானம் மறைந்து தேகம் பரவசமாகின்றது. ஆ! ஆ! என்னே ஆச்சரியம்? சுவாமின்! எங்கள் மனதில் திடீரென ஆசை ஒன்று தோன்றியுள்ளது. அதைத் தாங்கள் பூர்த்திசெய்து வைக்கப் பிரார்த்திக்கின்றோமென மனமுருகிக் கேட்டார்கள். சுவாமீ!

ஸ்ரீகைலாசபதியாகிய எம்பெருமானும் பரமசிவம் பூவுலக பக்தகோடிகள் உய்யும்பொருட்டு, பூமண்டலத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிராநின்ற ஸ்ரீகாசி, திருக்கேதாரம், திருக்கோகரணம் முதலிய திவ்யஸ்தலங்களின் மகிமைகளையும், கங்கையாதி புண்ய தீர்த்தங்களின் பெருமைகளையும் பூர்வம் எங்களுக்குத் திருவாய் மலர்ந்தருளக் கேட்டோம், ஆநந்தித்தோம். இப்போது திருக்கழுக்குன்றம் என்றும், கங்காசலம்

என்றும் பெயர் வழங்கி வரும் உருத்திரகோடி மஹா க்ஷேத்திரத்தின் மகிமைகளைக் கேட்கவேண்டுமென்கிற அவா எங்களுக்குத் தோன்றியிருக்கிறது. ஏழைகள் மீது தாங்கள் கிருபைவைத்து, திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தார்கள்.

அதைக்கேட்ட சூதமுநிவர் அக்கினிபிற்பட்ட மெழுகுபோல் மனங்கசிந்துருகி, இருகரங்களையும் சிரமேற் குவித்து, ஸ்ரீவேதகிரிப்பெருமானையும் பெண்ணினல்லாளென்னும் ஸ்ரீதிரபுரசுந்தரியம்பாளையும் தியானித்து, ஒரு முகூர்த்தகாலம் சித்திரம்போல் அசைவற்றிருந்து, முழுமுதற்கடவுளே! முக்கண்ணு! முப்புரதகனு! பாலநேத்ரா! பக்தவற்சலா! பரமபதீ! அடியேங்களுக்குத் தாங்களே துணை. வேறு கதியில்லை. பிரபோ! எங்களை ஆட்கொண்டு ரக்ஷிக்கவேண்டுமெனத் துதித்து, இருகண்களிலும் ஆனந்தபாஷ்பம் சொரிய, சௌனகாதி முநிவர்களைப் பார்த்து, சூதா சொல்லுகிறுர். முநிசிரேட்டர்களே! நினைக்க நினைக்க மனமுருகும் ஸ்ரீகழுகாசலமென்னும் ஸ்ரீவேதகிரியின் மகிமையை அறிந்து கொள்ள உங்களுக்கு ஆசைஉண்டானது பூர்வபுண்யப் பேறேயாம். அத்தலமகிமையை பூர்வத்தில சிவபெருமானே நந்தியெம்பெருமானுக்கு உபதேசித்தார். நந்திதேவர் சனற்குமாரமுநிவர்க் குபதேசித்தார். சனற்குமாரர் வியாசருக்கு உபதேசித்தார். எனது குருநாதர் வியாசபகவான் அடியேனுக்கு அநுக்கிரகித்ததை அடியேன் தவமுதிர்ச்சி பெற்ற உங்களுக்குச் சொல்லுகிறேன். முநிவர்களே! கவனமாய்க்கேளுங்கள். இது மற்ற தலங்கள்போல் சாதாரணமான தலமல்ல. நான்கு

வேதங்கள் பூஜித்த காரணத்தால் வேதகிரி என்றும், கோடிருத்ரர்கள் பூஜித்த காரணத்தால் ருத்ரகோடி என்றும், நந்திதேவர் பூஜித்ததால் நந்திபுரி என்றும், ப்ர்ம்மா பூஜித்ததால் ப்ர்ம்மபுரி என்றும், ஸ்ரீமஹா விஷ்ணு பூஜித்ததால் வேதநாராயணபுரம் என்றும், துவாதசாதித்தர்கள் பூஜித்ததால் பரிதிபுரி என்றும், முனிகணங்கள் பூஜித்ததால் முனிகணநாதபுரம் என்றும் கழுகுகள் பூஜித்ததால் கழுகாசலம் என்றும் தேவேந்திரன் பூஜித்ததால் இந்த்ரபுரி என்றும் பெயர் வழங்கி வருகிறது.

இத்தலம் காஞ்சிமஹாக்ஷேத்ரத்துக்குத் தென்கிழக்கில் நாலு யோசனை தூரத்திலும், சமுத்ரதீரத்துக்கு மேற்கில் ஒருயோசனை தூரத்திலும், இமயமலைக்கும் கங்கா நதிக்கும் தென்பாரிசத்தில் இருநூறு யோசனை தூரத்திலும், பிணாகினி கடிலம் இந்தநதிகளுக்கு வடபாரிசத்தில் பத்துயோசனை தூரத்திலுமுள்ளது.

இத்தலத்தின் பெருமையைப்பற்றிச் சொல்லப்புகுந்தால் புற்களுக்கெல்லாம் விசேஷம் நாணலும், விருக்ஷங்களுக்கெல்லாம் அஸ்வத்தமும், புஷ்பங்களுள் நீலோற்பலமும், ஜலசத்துக்குள் சங்கமும், பர்வதங்களுக்குள் மஹாமேருவும், சதுர்ப்பாதங்களுக்குள் காமதேனுவும், மிருகங்களுள் மானும், சர்ப்பங்களுள் ஆதிசேஷனும், ரத்நங்களுள் சிந்தாமணியும், தேஜசுள் சூரியனும், தீர்த்தங்களுள் பாகீரதியும், யாகங்களுள் அஸ்வமேதமும், தானங்களுள் அன்னதானமும், தர்மத்துள் சத்தியமும், மந்திரத்துள் பிரணவமும், ரிஷிகளுள் வியாசரும், புருஷருள் விஷ்ணுவும், ஸ்திரீகளுள் பார்வதியும், லோகத்

துள் சிவலோகமும், தேவதைகளுள் தேவ பிதாவும், எப்படிமேம்பாடுடையவர்களோ அவ்விதம் க்ஷேத்திரங்களுக்கெல்லாம் மேம்பாடுடையது இவ் உருத்திரகோடி மஹா க்ஷேத்திரம் என்பதை முநிவர்களே! உறுதியாய் நம்புங்கள். இச்க்ஷேத்ரமான்மியம் ஸ்காந்த புராணம் நந்தீஸ்வர சம்வாதத்திலும், சிவபுராணம் பத்தில் பவுஷியோத்தர புராணம், லிங்கபுராணங்களிலும் விரிவாய்ச்சொல்லியிருக்கிறதை உங்களுக்குச் சுருக்கமாய்ச் சொல்லுகிறேன். சிரேட்டர்களே! கவனமாய்க் கேளுங்கள் என்று சூதமாமுநிவர் சொல்லத்தொடங்கினர்.

## 3. திருக்கயிலாயச் சிறப்பு.

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகராய், ஆதிமத்யாந்த ரகிதராய், நித்யானந்த பரிபூர்ண சொரூபராய், சமஸ்த ஜீவகோடிகளின் உள்ளத்தில் சதாகுடிகொண்டிருப்பவராயுள்ள, உமாசகாயராகிய பரமசிவம் பக்தகோடிகள் உய்யும்பொருட்டு, திருக்கோயில் கொண்டெழுந்தருளியிராநின்ற ஸ்ரீகைலாயமென்பது மகம்மேரு பர்வதத்தின் வடபாரிசத்தில் இருக்கிறது. அது அநந்தங்கோடி சந்த்ரர்கள் ஒன்று கூடித் தத்தம் களங்கம் நீங்கிப் பிரகாசிப்பதுபோலும், உலகத்துள்ளவர்களது அகத்திருளாகிய அஞ்ஞானமும், புறத்திருளாகிய பூத இருளும் நீங்கி, சோதி சொரூபமாய் விளங்குகிறது. கயிலைமுதல் அண்டசராசரம் வரையும் ஓரே சோதியாய் விளங்குவதால் கயிலை யென்றும் அண்டர்களென்றும் பிரித்துச் சொல்லக்கூடாமல் உலகமுழுதும் ஜெகஜ்ஜோதியாய்ப்

பிரகாசிக்கின்றது. அம்மலையின் சாரலில் சமுத்ரம்போல் அருவிகள் ஜில்லென்று சதா விழுந்து கொண்டிருக்கிறது. அவ்வருவிகளில் தேவர்களுக்குச் சாத்தும் நறுமணம் நிறைந்த புஷ்பமாலைகள் சதாமிதந்துவந்துகொண்டிருக்கின்றன. புன்னை, செருந்தி, சந்தனம், குங்குமம், நறவம், அகில், தாறை, கோங்கு, அசோகு, கமுகு, சண்பகம், தெங்கு, மா, பலா, வாழையாதி மரங்கள், ஆகாயமளாவிச் சோலைகளாய் இம்மலைச்சாரலில் நெருங்கியிருக்கின்றன. இச்சோலையினிடத்து வாசஞ்செய்யும் கிள்ளைகள், நாகணவாய்ப்புட்கள், மயில், குயிலாதி பக்ஷிகள் நான்கு வேதங்களையும் அவற்றின் பிரிவாகிய ஆகமத்தின் அஷ்டாக்ஷர பஞ்சாக்ஷரப் பெருமைகளை ஓங்காரஹ்ரீங்கார சப்தத்துடன் உச்சரித்துக்கொண்டிருக்கின்றன. நறுமணங்கமழும் நந்தவனங்களும், தவஞ்செய்வதற்குப் புனிதமான குகைகளும் நெருங்கியுள்ளன. சிவகணங்களும் பூதகணங்களும் சித்தர் முனிவர் குழாங்களும் நெருங்கியிருப்பதால் இவ்வெள்ளிமலை மேன்மேலும் மகிமை பொருந்தியுள்ளது. இம்மலையில் முத்துக்களாலும் மாணிக்க வைடூரியங்களாலும் விலையுயர்ந்த நவமணிகளாலும் மாடமாளிகை கூடகோபுரங்கள் ஆயிரக்கால் நூற்றுக்கால் மண்டபங்கள் அணி அணியாய் வகுத்துக் கோடிக்கணக்காய் நிர்மாணிக்கப் பட்டிருக்கின்றன.

அளவு சொல்லக்கூடாமல் இத்தகைய சிறப்பு வாய்ந்த வெள்ளியங்கிரியென்னும் கயிலை மலையில் உயர்ந்த தங்கத்தினாலாக்கப்பட்டு, தேஜோ ராசிகளை விரிக்கும் சாதரங்கம் குருவிந்தம் முதலாகிய விலை மதிப்பிடக் கூடாத நவரத்தினங்களாலிழைக்கப்பட்டுக் கிரண சோ

ளைகளைப் பரப்பிக்கொண்டு கைத்தொழிலினாலாக்கப் படாத திவ்ய தேஜோன்மயமான சிம்மாசனம் ஒன்று உண்டு. அச் சிம்மாசனத்தின்மேல் ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்யோஜாதம் என்னும் பஞ்சமூர்த்தங்களோடு, ஆகாய கங்கையையும் மூன்றாம் பிறையையும் தாங்கிய சடாமகுடதாரியாய், திருநீறணிந்த பிரகாச முகத்தினராய், நாககுண்டலம் விளங்கும் செவியினராய், மான் மழு திரிசூலம் அபயவரத திருக்கரங்களுடையராய், சாமவேத உச்சியில் வீற்றிருக்கின்றோம்; எம்மைத்தவிர உலகமில்லை; எல்லாம் சிவமயமே என்று சப்திக்கும் திருவடிச் சிலம்புடையராய், கருணையே பொழிகின்ற முகமும், புன்சிரிப்பும், அடியார்க்கடியராகும் பெருங்குணமும் பொருந்தி, அறுசமய உண்மைகளையும் முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்து மலையரசன் மகளாய் அண்ட சராசரங்களையும் ஈன்றெடுத்த லோகமாதாவாய் வீற்றிருக்கும் உமாதேவியார் வாம பாகத்தில் வீற்றிருக்க, அளவிறந்த பெருங்கருணையோடு எதுகேட்டாலும இல்லையென்னாது கொடுக்கும் வள்ளலாய், ஏழைபங்காளராய் சிவபெருமான் வீற்றிருப்பார். அத் திருச்சந்நிதானத்தில் பிர்ம்ம விஷ்ணுக்கள் கைகட்டி வாய்பொத்தி நின்றும் தொழுதும அத்தாபோற்றி! ஆநந்தாபோற்றி! சித்தாபோற்றி! சிவசொரூபாபோற்றி! முத்தாபோற்றி! மூவர்க்குமுதலே போற்றி! பத்தாபோற்றி! பதியேபோற்றி! பித்தா போற்றி! பிரபோ போற்றி! என்று துதித்து, ஆனந்தக் கண்ணீர் சொரிய நிற்பார்கள். இந்திராதி தேவர்கள் கருடர் காந்தருவர் இயக்கர் பூதர்

மருத்துவர் யோகியர் முதலிய சித்தர்கள் வானவர்கள் உள்ளும் புறம்பும் தியானித்துச் சமயமறிந்து, வேண்டிய வரங்களைப் பெறும்பொருட்டுக் காத்திருப்பார்கள். தியான யோக சமாதியைவிட்டு நீங்காத பெரியோர்கள் குகைகளில் சொரூப சாக்ஷாத்கார அநுபூதி நிலையில் வசிப்பார்கள். நான்கு வேதங்கள் புருஷ வடிவங்கொண்டு தோத்திரிக்கும். சரஸ்வதி தும்புரு நாரதர் யாழ் வாசித்து நிற்பார்கள். அரம்பை ஊர்வசி ரம்பை திலோர்த்தமை மேனகை முதலாய நடன மாதர்கள் பரத சாஸ்திர விதிப்படி நடனஞ்செய்து நிற்பார்கள். மத்தளம், பம்பை, குடமுழா, தம்பட்டம், முருகி, வீணை, தாளம், சங்கம், வேய்ங்குழல் முதலிய வாத்தியங்கள் ஆடம்பரமாய்க் கோஷிக்கும்.

வேதாத்யயனம் செய்யும் ஓசையும், ஆகமபடனஞ் செய்யும் ஒலியும், சிவ புராணபடன கோஷ்டமும், சிவ நாமோற்சாடண ஆரவாரமும் அத்திருமலையில் எந்நேரமும் ஓங்கி சப்தித்துக்கொண்டிருக்கும். தரிசிக்க வருபவர்களுக்குக் கற்பக விருக்ஷங்கள் அதிக மதுரமான கனிகளையும், விலைமதிப்பற்ற பீதாம்பரங்களையும் திவ்யப் பிரகாச பூஷணங்களையும் கொடுக்கும். அரிச்சந்தனம் தேவதாரம் மந்தாரம் பாரிஜாதம் முதலிய புஷ்பங்களைச்சொர்ணதாம்பாளங்களில் ஏந்திக்கொண்டு, பக்தகோடிகள் நந்திதேவரது உத்திரவை எதிர்பார்த்து நிற்பார்கள். முதற்கோபுர வாயலில் சிவ சின்னங்களோடு சிவத்தியானபரராய் வீற்றிருக்கும் நந்தியெம் பெருமான் பொற்பிரம்பை கையிற்றாங்கி, தரிசனார்த்தம் வருகின்ற ப்ரம்ம விஷ்ணுவாதி தேவர்களைச் சந்நிதா

ணம் மறைக்காமல் அணிவகுத்து நிற்கச்செய்வார். இவ்வளவு வைபவத்தோடு பக்தகோடிகளுக்கு வேண்டிய வரப்பிரசாதங்களை அநுக்கிரகிக்கவல்ல அருட்சத்தியாகிய பார்வதி சமேதராகிய சிவபெருமான் வீற்றிருக்கும் கைலைமலையின் சிறப்பை தவமுனிவர்களே! எவ்வாறு உச்சரிப்பேனென்று சூதபுராணிகர் சொல்ல, நைமிசாரண்ய வாசிகள் இவ்வற்புதத்தைக் கேட்டு ஆனந்தமடைந்தார்கள்.

## 4. கருடன் அகந்தை ஒழிந்தது.

கேட்டீர்களா! முனிவர்களே! முன்னம் சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலைமலைச் சிறப்பு சொன்னோம். இப்போது கருடன் யானெனும் அகந்தைகொண்டு அழிந்த விதத்தைச் சொல்லுகிறோம். கவனமாய்க் கேளுங்கள் என்று சூதமுனிவர் சொல்லுகிறார்.

முன்னோர் காலத்தில் தருமநெறியை வேதாகமங்களால் உரைத்தருளும் பரமசிவம் திருவோலக்கங்கொண்டிருக்கும்சந்நிதானத்தைத்தரிசிப்பான் வேண்டி, லட்சுமி நாயகராகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவானவர், தான் பள்ளிகொண்டிருக்கும் திருப்பாற்கடலைவிட்டு கருடவாகனத்தின்மீதேறி ஸ்ரீ கயிலையங்கிரிக்கு வந்து, முதற்கோபுரவாயிலில் தன் வாகனத்தை நிறுத்தி, தான் நந்தியெம்பெருமானை நமஸ்கரித்து, உள்ளே சென்று, பரமசிவத்தைப்பணிந்து, ஆநந்தபாஷ்பம் சொரிய, தொழுத கை தலைமேலேறத் தோத்திரம் செய்யும் நாவுடன், தண்டாயுதம் போல் பன்முறை கீழேவிழுந்து நமஸ்

கரித்து, ஹர ஹர என்றுதோத்திரித்து, எம்பெருமானே! கருணைக்கடலே! கற்பகக்கொழுந்தே! சிருட்டி திதி சங்கார திரோபவ அனுக்கிரகமாகிய பஞ்ச கிருத்திய நடனு! மூவாமுதலே! முழுமுதற்பொருளே! தேவரீர் திருவருளினாலன்றி தீவினையுடையேங்கள் செய்யும் பகுதி என்னுளது? என்று மனங்கசிந்துருகி நின்றார். சிவபெருமான் அருள்பழுத்த திருவுள்ளத்தோடு எதிரே நிற்கும் வைகுண்டவாசனை கிருபா நோக்கத்தால் தழுவி, பக்தசிரோன்மணீ! என்று வாய்குளிர அழைத்து, அருகிருத்தி, ரக்ஷிக்கும் தொழிலின் குறைநிறைவுகளை விசாரித்துக்கொண்டிருந்தார்.

இத்தறுவாயில் முதற் கோபுரவாயிலின்கண் நிறுத்திவைத்திருந்த கருடன், அகந்தைப்புத்தியை மேற்கொண்டு, அவ்வாயில் காப்பாராகி சிவசொரூபமே தானாக நிற்கும் நந்தியெம்பெருமானை வெகு அலட்சியமாகப் பார்த்தான். இதைக்கண்ணுற்ற நந்திதேவர் கண்களில் தீப்பொறி பறக்க விழித்து நோக்கினார். பின் விளைவது இன்னதென்பதையறியாத கருடன் "நீ பிச்சை இரந்து உண்பவன் வாகனம்; நீ கோபித்து என்ன செய்ய முடியும்" என்று கேட்டான். நந்திதேவர் சிறிது யோசித்து, தன்னை வணங்கிலன் என்ற குற்றத்தைப் பொருட்படுத்தாமல், எல்லாம் வல்ல இறைவராகிய எம்பெருமானை நிந்தித்த சொல்லானது தன் இருசெவிகளிலும் நாராசம்போலிறங்கிச் கொதித்த மாத்திரம் புவனங்கள் அதிர்ந்தன; அண்டகோடிகள் வெடித்துத்தூளாயின; சந்த்ர சூரியர்கள் ஒளி மழுங்கி மறைந்தார்கள்; எங்கும் இருட்கூட்டங்கள் பரவி, திசைகள் எல்லாம் தீக்கூட்டம் பர

வின ; தவமுனிவர்கள் தத்தம் தவநெறி விலகி மயங்கினார் கள் ; தேவர்கள் யாது நேரிட்டதோ வெனத் திகைத் தார்கள் ; அஷ்டதிக் கஜங்கள் அதிர்ந்தன ; சிவனே தா ளுக நிற்கும் நந்தியப்பன், இந்தக்கருடனை இதோ கொல் லுகிறேன் பார் என்று, சிவநிந்தை யென்னும் தீக்கொழு ந்தானது அவியாமல் தம்முடைய காதுகளின் வழியாக உள்ளிழிந்து கொதித்து மேலெழ, குவிந்த நெற்றிக் கொம்புகளை அசைத்து, முசிப்பு துடிக்கும்படி, பரம சிவம் சர்வசங்கார காலத்தில் தோன்றும் உக்ர மூர்த்தத் தையொத்து பெருமூச்சொன்று விட்டார். அச்சுவாசத் துடனே கருடன் தான் நிற்கும் நிலையைவிட்டு நூறு யோசனை தூரம் குண்டுகட்டாக உருண்டுபோனான். மறு படியும் உள்ளுக்கு வாங்கிய சுவாசத்தினல் நாசியின் துவாரத்தில் அசப்பட்டு வருந்தினன்.. இப்படி வருந்தி யும் கருடனது அகந்தை நீங்கவில்லை. நந்தியின் சுவாச மோ ஊழிக்காலத்து பிரசண்டமாருதத்தையொத்தது. அதில் சிக்கிய கருடன் புழுதியும் சருகும்போல் உடல் நொறுங்கினன் ; சிறகுகள் ஒடிந்தன ; என் செய்வான் கருடன். "நந்தியப்பன் மகிமையறியாமல் கெட்டேனே! லட்சுமி நேசனே! கமலக்கண்ணா ! பரந்தாமா ! மேக வண்ணா ! வைகுண்டவாசா ! அய்யய்யோ! துயரம் பட முடியவில்லையே ! க்ஷணப்போதில் என் தேகம் அழியும் போலிருக்கின்றதே ! பெரியோனே! பெருமானே! இவ்வேளை அடியேனைக் காத்தருளவேண்டும். பிராண ரக்ஷை தரவேண்டும். அறியாமை காரணமாக எனக் குண்டான அகந்தையினல் என் நிலை குலைந்து மதியிழ ந்து அலைகின்றேனே" என்று கதறினன். இந்தக்

கஷ்டத்தைக் கண்ணுற்ற சொர்க்க பதவியடைந்துள்ள அன்னம் முதலிய பல பக்ஷிக்கூட்டங்கள் ஒன்றன் முகத்தை ஒன்று பார்த்துப் பேசப்பயந்து நடுநடுங்கி, நந்தியப்பன் கோபாவேசம் தங்களை ஒன்றும் வருத்தாதது சிவானுக்ரகமென்று ஒதுங்கியிருந்தன. கேட்டீர்களா! முனிசிரேட்டர்களே! அண்டங்களை யெல்லாம் தன்வயிற்றில் வைத்து ரக்ஷிக்கும் மகா விஷ்ணுவைத் தாங்கும் கருடனே சிவ நிந்தையால் இவ்வளவு கஷ்டப்பட்டானென்றால் மற்ற முனிவர்கள், தேவர்கள், ரிஷிகள் கதி என்னுகும் என்பதை நீங்களே யோசித்துப் பாருங்கள் என்று மேலே நடந்ததைச் சொல்லுகிறார்.

பரமசிவ தரிசனத்தில் ப்ரம்மாநந்தமடைந்து, சிவமயமாய்நின்ற விஷ்ணுதேவர், கருடன் முறைப்பாடுகளைத் திடுக்கென்று கேட்கவும், பெருமாள் சற்று நிதானித்து, நடந்ததை உணர்ந்து, வெகு பயத்துடன் எழுந்து, "பரமசிவா! பார்வதிபாகா! ஆபத்பாந்தவா! ஆத்மரக்ஷகா! முதற்கோபுரவாயலில் நிறுத்திவந்த கருடன் அகங்காரத்தால் அழிந்து, நந்திதேவரின் கோபத் தீயினல் மிகக்கஷ்டப் படுகின்றான். தேவரீர் திருவுளங்கொண்டு கருடனை விடும்படி நந்திதேவருக்கு உத்தரவு செய்யவேண்டும். அடிமை திருவுளச் சம்மதப்படி நடக்கச் சித்தம்" என்றார். பரமசிவம் "அப்படியே யாகுக" என மொழிந்தார். விஷ்ணுதேவர் பரமசிவத்தின் கட்டளையைச் சிரமேற்றாங்கி நந்தியப்பரிடம் சென்று, "ஐயனே! நமஸ்காரம் கருடன் அறியாமையாற் செய்த பிழையைப் பொருட்படுத்தாமல் பொறுத்து விட்டுவிடுவீராக. இது பரமபதியின் கட்டளை" என்று

விநயமாய்க் கேட்டுக்கொண்டார். நந்தியெம்பெருமான் கோபக்குறியோடு மஹாவிஷ்ணுவைப் பார்த்து, "அண்டபகிரண்டமும் அடங்க ஒரு நிறைவான பரமசிவனை நிந்தித்த இந்தபாவிக்காகவா நீர் பரிந்து வந்தீர். அவனைக் கொன்றாலல்லது என் கோபாக்னி தணியாது; அவனை உயிருடன் விடேன்" என மறுமொழி பகர்ந்தார். நந்தியின் கோபத்துக்குப் பயந்து, வைகுண்டவாசர் மீண்டும் பரமசிவத்திடம் சென்று தொழுது, இங்கு நடந்ததை விண்ணப்பித்தார். பரமசிவம் நந்தியை அன்புடன் அழைத்து "கருடன் அறியாமையாற் செய்த குற்றத்தை மன்னித்து விட்டுவிடுவாயாக" என்றார். நந்தியப்பன் சிவபெருமான் திருவடிகளை வணங்கி நமஸ்கரித்து, "எம்பெருமானே! தங்களை நிந்தித்த இம்மஹா பாதகனைக் கொன்றாலல்லது என்மனம் சாந்தம் அடையாது" என்று விண்ணப்பித்தார். பரமசிவம் நந்தியப்பாவைக் கருணையோடு பார்த்து "அப்பா! நந்தீ! ஒறுத்தார்க்கு ஒருநாளையின்பம், பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்; அஞ்ஞானத்தினால் குற்றம் செய்தவனை மன்னிக்க வேண்டுபவர் நம்மைத்தவிர வேறு யார் இருக்கிறார்கள்? தீயையொத்த சொல்லினால் சுட்டவர்களையும் பொறுத்து அவர்களுக்கு அபயாஸ்தம் கொடுப்பதே பெருமை என்பது நீ அறியாத விஷயமா? இவ்வளவில் கருடனை விட்டுவிடு. அவன் அநுபவித்ததே போதுமானது" என்று கட்டளையிட்டார். உடனே நந்திதேவர் கருடனை விடுவித்து, பரமசிவாக்கினையைமறுத்துரைத்ததைச் சிந்தித்து, ஆ! ஆ! என்ன பாதகம் செய்தேன்!

சிவாக்ஞையைமறுத்துரைத்த சிவாபராதத்துக்கு என்ன செய்வேன். சம்போ சங்கர சதாசிவரூபா! என்று ஆறாத்துயரங்கொண்டு, மனவாட்டமுற்று, திகிலும் பயமுமடைந்து, பெருமூச்சுவிட்டார். உன்மத்தர்போல் ஒன்றுந் தோன்றாமல் ஒரு முகூர்த்த நேரம் நின்று இருகண்களிலும் அருவிபோல் ஜலம் பெருகி, பரமசிவத்தின் திருவடிகளை வணங்கித் தோத்திரித்து நின்றார். "ஏ! சற்குணா! சம்போ! சதாசிவா! தீனதயாளு! அரிபிரமாதிகளும் வேதாகமபுராண இதிகாச சுருதிஸ்மிருதிகள் யாவும் நின்னையன்றி வேறொரு வஸ்து வில்லையென்று கோஷிக்கின்றன. சின்மயரூபா! சித்சொரூபா! நான்கு வேதங்களினும் பிரகாசிக்கின்றனை. அண்டசராசரங்கள் உள்ளினும் புறம்பினும் மறைந்தும் வெளிப்பட்டும் நிற்கின்றனை. இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே! அன்பருக்கன்பனே! பஞ்சகிருத்தியங்கட்கும் காரண பூதனாகி நிற்கின்றவன் நீயே! எல்லோருடைய உள்ளத்துமிருக்கின்றாய்! விருப்பு வெறுப்பற்ற மகாப்பிரபு! நின் மாயாசக்தியை அறியவல்லார் யார்? சர்வ ஜீவர்களுக்குத் தந்தையாகவும் தாயாகவும் இருக்கின்றனையே! உன் புகழைப் பேச எவரால் முடியும்? அவ்வுயிர்களுக்குத் தோன்றாத் துணையாயிருந்து அவரவர் வினைக்கீடாக ஊட்டி உறக்கி உபகரிக்கின்றாய்! அஞ்ஞானத்தையும் அதனால் வரும் பாவத்தையும் மாற்ற வல்லவை நீரே! பார்வதீசமேதா! பக்தவற்சலா! பரந்தாமா! தீனபந்து! தீனரக்ஷகா! ஏழை பங்காளா! தங்கள் திருக்கருணையன்றி எளியேங்கட்கு வேறு

சுதந்தரம் உண்டோ? பெருமானே! அறிவில்லாத யான் தேவரீரது கட்டளையை மறுத்துரைத்து மகா பாதகத்துக் காளானேன். தேவரீர் கிருபா நோக்கத்துடன் இந்தப்பாவத்தை அடியோடு ஒழித்து, அநுக்ரகம் செய்யவேண்டும். இதுவே என் பிரார்த்தனை. இதுவே என் வேண்டுகோள். கருணை பாராட்டவேண்டும்'' என்று பலமுறை இரந்து போற்றினர். மகாமுநிவர்களே! சிவாபராதத்துக்கு நந்தியெம்பெருமானே பயந்து நடுங்கினர் என்றால் நம்போல்வார் செயற்பாலது என்ன இருக்கிறது என்று சூதர் மேல் நடந்தவற்றைச் சொல்லுகிறார்.

## 5. சிவபெருமான் நந்திதேவருக்கு வேதகிரி மகிமையை உரைத்தது.

தவசிரேட்டர்களே! நந்தியப்பாவுக்கு எம்பெருமான் வேதகிரிமகிமையை உரைக்கின்றார், கவனமாய்க்கேளுங்கள் என்று சூதர் சொல்லுகிறார்.

நந்திதேவருடைய பிரார்த்தனையைக் கேட்டு பரமசிவம் கருணைகூர்ந்து, "நந்தியே! கருடன் அகங்கார மமதையினாற்செய்த குற்றத்துக்கு நீ சிக்ஷை விதித்தது கிரமந்தான். எனது ஆக்ஞையை நீ மறுத்துரைத்தாய். நான் உன்னை க்ஷமித்தாலும் சிவாபராதம் உன்னை விடாதென்பதை நீ உணர்ந்திருக்கின்றாய். அதனால் உன்மனம் கவலைப்பட்டு வருந்துகின்றது. அச்சிவாபராதம் உன்னை விட்டு நீங்குதற்கு ஓர் உபாயம் சொல்லுகிறேன் கேட்-

பாயாக, நாம் பக்தகோடிகள் நன்மார்க்கமடைந்து உய்யும்பொருட்டு, பூலோகத்தில் திருக்கோயில்கொண்டு அருள்செய்கின்ற தலங்கள் அநந்தம். அவைகளுக்குள் சிறந்ததும் மேலானதும் வெகுசீக்கிரத்தில் அநுக்கிரகம் பெறக்கூடியதுமான தலங்கள் அறுபத்தெட்டு. அவைகளுள் மகாமேன்மை பொருந்தி விளங்குவது, ஹிமய மலைக்குத் தென்புறத்தில் கங்காநதிக்குத் தென்பாகம், சமுத்திரதீரத்துக்கு மேல்பாகம், குகநதிக்கு வடபாகம், இதன் மத்தியிலிருக்கிறது உருத்ரகோடித் தலம். இது வினைதீர்க்கும் தலமென்றுஞ் சொல்வார்கள் விவேகிகள். கோடிருத்ரர்கள் பூஜித்து வரம் பெற்றமையால் (1) உருத்ரகோடி யென்னும் பெயரைப் பெற்றது. இது எல்லாத்தலங்களினும் மேம்பாடுடையது. இத்தலத்தில் யக்யம், தானம் தவம், முதலிய எது செய்தாலும் ஒன்றுக்கு (2) கோடி பங்கு பலம் கொடுக்கும். இத்தலத்தின் மத்தியில் ஒரு மலையிருக்கிறது. அம்மலை தீராத எவ்வித பிணிகளையும் கர்மவினைகளையும் தீர்ப்பது. இம்மலையில் மகத்தான சஞ்சீவி மூலிகைகள் கிடைக்கும், இம்மலைக்காற்றானது தேகத்துக்கு ஆரோக்யத்தையும் சுகத்தையும் கொடுக்கும். இம்மலை தோன்றிய விதானம் சொல்லுகிறேன். நந்தீ! கேட்பா

---

(1) "ருத்ரகோடி கிரேஸ்ருங்கம் தூரேத்ருஷ்ட்வா சிவாத்மகம் சம்சாரபயநிர்முக்தஸ் சிவசாயுஜ்யமாப்னயாத், காமாக்குரோதாஸ் சாபாலோபா அக்யாஞக்யான தோபிவா, ருத்ரகோட்யாம் கொரீத்ரா உஷித்வா ருத்ரதாம்ரிஜேத்."

(2) "ருத்ரகோட்யாம் க்ருதம் புண்யம் தத்கோடி குணிதம் பவேத்" என்பது பேரியோர் வாக்கு.

யாக. முன்னோர் காலத்தில் வேதங்களெல்லாம் மிகுந்த அன்புடன் நமது கைலாயமலையை அடைந்து, ஆநந்த பாஷ்பம் சொரிய, எம்மைத்தொழுது துதித்து வணங்கி "நாங்கள் மிகுந்த பாவமாகிய மஹா சமுத்திரத்தில் முழ்கி நொந்து மெலிந்தோம். பரந்து விரிந்து மலைபோல் விளங்கும் எங்களை பிரமதேவன் நான்கு பாகமாகப்பிரித்தான்; பாரத்துவாஜமஹா முநிவர் காயத்ரியாகச்செய்தார்; வேறுசில முநிவர்கள் ஓரெழுத்தாகவும், சிலர் ஐந்தெழுத்தாகவும், சிலர் எட்டெழுத்தாகவும் செய்தார்கள். அந்நாள்முதல் நாங்கள் வேறு வேறு ரூபமானோம். தேவர்களும் முநிவர்களும் உலகத்துள்ள மற்றவர்களும், எங்களை முழுதும் ஓதுகின்றதுமில்லை; உணர்கின்றதுமில்லை. எங்களது ஆறு அங்கங்களாகிய மந்த்ரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், சோதிடம், நிருத்தம் இவைகளும் எங்களோடு ஒன்று பட்டிருக்கக்காணோம். ஆதலால் ஐயனே! இந்த ஆறங்கங்களுடன் நாங்கள் உமது திருவடியின் கீழ் நிலை பெற்றிருக்கவேண்டுகின்றோம்" என்று விண்ணப்பித்தன. இவ்வாறு துதிசெய்தவேதங்களை நோக்கி "நீவிர்பூலோகத்தினிடத்தில் உமது அங்க பேதங்களுடன் சென்று கிரிரூபமாக நில்லுங்கள். நாம் அக்கிரியின் கொழுந்து போல் பிரகாசிக்கின்றோம். நீங்கள் செய்யும் பூசனைகளை ஏற்றுக்கொண்டு, அந்த மலையினிடத்தே சிவலிங்க ரூபமாக வீற்றிருந்து, உங்கள் பொருட்டால்ஞானசொரூபமாக விளங்கிக் கொண்டிருப்போம். இனி உங்களுக்கு வேதகிரி எனப் பேரோங்கும். இந்த மலையினிடத்து வாசஞ்செய்கிறவர்களுக்குப் பாபம் சேராது. இந்தமலை

யை வலம் வந்து நம்மைத் தொழுபவர்களுக்குச் சகல சுகிர்தமுண்டாகும். தானதருமம் செய்தாலும் யாகாதி கிரியைகள் செய்தாலும் ஒன்றுக்குக் கோடிபங்கு பலன் கிடைக்கும். நீங்கள் போங்கள்" என்று பரமசிவம் கட்டளையிட்டார். அவ்வாறே *வேதங்கள் தம் கூட்டத்தோடு பூவுலகஞ்சேர்ந்து இருக்கு வேதம் வேராகவும், யசுர்வேதம் மத்திய பாகமாகவும், சாமவேதம் முடியாகவும் அதர்வணவேதம் சிரசாகவும் நின்றது. ஆறங்கங்களுள் சந்தையென்பது அம்மலையில் பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம், வெண்கலம், தாரா என்னும்தாதுக்களாகவும், கற்பம் குகையாகவும், மீமாம்சம் தாழ்வறையாகவும், உபநிடதம் விருக்ஷங்களாகவும்,

---

* வேதம் 4 : இருக்கு, யசுர், சாமம், அதர்வணம். வேதாங்கம் 6 : சிக்ஷை, வியாகரணம், சந்தசு, நிருத்தம், சோதிடம், கற்பம். உபாங்கம் 4 :—மீமாஞ்சை, நியாயம், புராணம், ஸ்மிருதி. மீமாஞ்சை. 2 :—பூர்வ மீமாஞ்சை, உத்தர மீமாஞ்சை. நியாயம் 2:—கௌதம சூத்ரம், கணாத சூத்ரம். புராணம் 18:—பிரமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், இலிங்கம், வராகம், ஸ்காந்தம், வாமனம், பவிஷ்யம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்னேயம், பிரமகைவர்த்தம், கூர்மம், மற்சம், காருடம், பிரமாண்டம். ஸ்மிருதி. 18:—மநு, பிரகஸ்பதி, தக்ஷ, யம, கௌதம, அங்கிர, யாஞ்ஞவல்கிய, பராசர, சம்வர்த்த, உசன, சங்க, லிகித, அத்திரி, விஷ்ணு, பிரசேத, சாதாதப, ஆபஸ்தம்ப, ஹாரித ஸ்மிருதிகள். இதிகாசம் 3:—சிவரகவியம், இராமாயணம், பாரதம். சைவாகமம், 28 :—காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்நேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்த்ரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம். வைஷ்ணவாகமம் 2:—பாஞ்சராத்ரம், வைகாநசம்.

நிருத்தம் அருவிகளாகவும், சோதிடம் பல மணிகளாக வும், சிவாகமங்கள் இருபத்தெட்டும் நாற்புறச்சாரல்களா கவும், வியாகரணம கற்களாகவும், பதினென்புராணங்கள் அகத்தந்திரங்கள் வனங்களாகவும், தீக்ஷை பசியதளிரு ளளவ்காடியாகவும், வேதங்களோடு ஒன்றுபட்டு நின் றன. இக்கிரியின் மகிமையளவிட்டுச்சொல்லமுடியாது. இதை எல்லையை மிதித்தாலும் பாபக்கூட்டங்கள் பஞ் சாய்ப்பறக்கும். தானதருமம், தவம், தியானம் எதுசெய் தாலும் இத்தலத்திலவிசேஷபலன்கிடைக்கும். இந்நாமத் தை மனதில் நினைத்தாலும் வாக்கினால் உச்சரித்தாலும், இக்கிரியின் சிகரத்தை தூரத்தில் தரிசித்தாலும், எல்லா வினைகளும் தீப்பொறிபட்டபஞ்சுப்பொதிகள்போலவும் சூரியன்முன் பனிபோலும் நீங்கிப்போகும். ஆதலால் இதன்புகழை ஆயிரநாக்கொண்ட ஆதிசேடனும் சொல்ல முடியாதென்றால் நான் எம்மாத்திரம்? சவுனகாதி ரிஷிகளே! இவ்விதம் நந்தியப்பாவுக்குப் பரமசிவம் அருளபுரிந்ததை உஙகளுக்கு நான் சுருக்கிச்சொன் னேன் என்று சூதர் மேலும் சொல்லுகிறார்.

## 6. *உருத்திரகோடி மகிமை.

தவசிரேட்டர்களே! கோடிருத்திரர்கள் வேதகிரி யைப் பூஜித்துப் பேறடைந்ததைப் பரமசிவம் நந்தியெம்

* சங்கதீர்த்தத்துக்குத் தென்கிழக்கு மூலையிலுள்ளது. சங் கல்பாதிகாலங்களில் இந்த க்ஷேத்ரத்தை அநுபவத்தில்சொல்லி வருகிறதுண்டு. திருமலை அநாதியாகவும் இத்தலம் அடுத்தும் தோன்றியதாக ஏற்படுகிறது.

பெருமானுக்கு உபதேசித்தவிதம் சொல்லுகிறேன். கவனமாய்க்கேளுங்கள் என்று சூதர் உருத்திரகோடிமகிமையைச் சொல்லத்தொடங்கினூர்.

நந்தியப்பர் ஸ்ரீவேதகிரியின்மகிமைகளைக்கேட்டு ஆனந்தித்துப்பரமசிவத்தின் திருவடிகளை வணங்கித்துதித்து, "எம்பெருமானே! கோடிருத்ரர்கள் வேதகிரியைப் பூஜித்த விதானங்களை அனுக்கிரகிக்க வேண்டுமென்று விண்ணப்பித்தார். பரமசிவம் நந்தியை நோக்கி, நந்திக் குழந்தாய்! "முன்னோர்காலத்தில் * அவுணர்கள் அநேகர் உலகத்திலுள்ள உயிர்களையெல்லாம் வருத்தினூர்கள். அவ் அவுணக்கூட்டங்களை அடியோடு தொலைத்து விடுவான் வேண்டி, நம்முடைய திருமேனியிலிருந்து கோடிருத்திரர்களைத் தோற்றுவித்தோம். அவ்வுருத்திரர்கள் எம்மையொத்த சரீரநிறம், கைகள், அக்கினியைப்போன்ற மேனி, திடசரீரம், எலும்பு மாலை, காளகண்டம், சடைக்கற்றை, யோக சிந்தை, புலித்தோல், முத்தலைச்சூலம், மழுப்படை, வில், சக்கராயுதம், பிண்டி, பாலம், கைவேல், முதலிய முப்பத்திருவகை ஆயுதங்களுடன் ஆயிரம் யானைப்பலமுள்ள பலிஷ்டர்களாய்த் தோன்றிவந்து, எம்முடைய திருவடிகளை வணங்கி நின்றூர்கள். நாம் கருணைகூர்ந்து ருத்திரர்களே! தேவர்கள் எல்லாம் நமது ஆக்ஞைப்படி பாற்கடல்கடைய மேருகிரியை மத்தாக நாட்டிய காலத்தில் அப்பாலத்தின்வழியே பாதாளத்தினின்றும்

---

* அவுணர்கள் = அசுரர்கள்; தைத்தியர்கள். காசிபரிஷி மனைவியர்கள் பதின்மூவருள் திதி என்பவளுடைய புத்திரர்கள்.

வெளிவந்த அவுணக்கூட்டங்கள் தேவர்களையும், தவ முனிவர்களையும், அவர்கள் செய்துவரும் யாகாதிகளை யும், மற்றுமுள்ள உயிர்களையும் வருத்துகின்றார்கள். தேவர்களோ அவ்வசுரர்களது கொடுமையைச் சகிக்க முடியாமலும், அவர்களை வெல்ல முடியாமலும், அபயம் அபயம் என்று நம்மிடம் வந்து முறை யிட்டார்கள். நாம் அபயாஸ்தம் கொடுத்தோம். ஆதலால் நீங்கள் யாதொன்றும் சிந்தியாது, தயை தாக்ஷண்யமின்றி, அவ்வசுரக் கூட்டங்களை யழித்து, அண்டங்களைக் காத்துக்கொண்டிருங்கள் என்று கட் டளையிட்டோம். இக்கோடி ருத்திரர்களும் நமது கட்டளையைச் சிரமேற்றாங்கி, பிருதிவி அப்பு தேயு வாயு அண்டங்களில் வாசமாயிருக்கும் அசுரர்களை யெல்லாம் கொன்று, முனிவர்களையும் ரிஷிகளையும் ரக்ஷி த்து, தருமத்தை நிலைக்கச்செய்து, அண்டகோடிகளை அநேக கற்பகோடிகாலம் ரக்ஷித்தார்கள் என்று சிவ பெருமான் நந்திதேவருக்குச் சொல்லியதைச் சூதர் சௌநகாதிகளுக்குச் சொல்ல, முனிவர்கள் சூதரைப்பா ர்த்து, சுவாமீ! அவ்வசுரர்களது பராக்கிரமங்களையும், ருத்ரகணங்கள் அசுரர்களை வென்ற விதானத்தையும், தயவு செய்து விரிவாய் எடுத்துரைக்க வேண்டுமென்று விநயமாய்க் கேட்டார்கள். சூதர் மனமகிழ்ந்து சொல் லுகின்றார்.

ஸ்ரீ மஹாவிஷ்ணு பாற்கடல் கடைந்து, அமுதம் எடுத்துத் தேவர்களுக்குக் கொடுத்து ரக்ஷிக்கும் பொருட்டு, இந்திராதி தேவர்களுடன் சென்று மந்தர பர்வதத்தை எடுத்த சமயத்தில், பாதலத்தின் வழியாக

ஆயுதபாணிகளாய்த் தோன்றிய அசுரர்கள், அநந்தும் தலைகளைச்சேர்த்து ஒரு கையில் பிடிப்பார்கள், மலை களுடன் மலைகளை மோதுவார்கள்; அண்ட கோடி களையெல்லாம் நீர்க்குமிழிபோல் உடைத்துத் துகள் செய்வார்கள்; சக்கிரவாளகிரியைக் கடகமாக அணி ந்து கொள்வார்கள்; தீயைத் தங்கள் கடைக் கண் களால் உண்டாக்கி விடுவார்கள்; ஏழுலகங்களையும் பிளந்து தூளாக்குவார்கள்; அஷ்டதிக்குகளிலுள்ள மதயானைகளைத் தங்கள் உதடுகளில் இடுக்கிக்கொள்வார் கள்; நக்ஷத்திரக் கூட்டங்களை உதிர்த்து வேடிக்கை பார்ப்பார்கள்; சூரியனைத் தனியே பிடித்து இழுத்துச் சக்கரம்போல் சுழற்றுவார்கள்; பாதாளத்திலிருக்கும் நாகங்களை எடுத்துத் தாழ்வடமாக அணிந்து கொள் வார்கள். உயர்ந்தமலைகளைக் கொத்துமாலைகளாகத் தரித் துக்கொள்வார்கள்; சப்த சாகரங்களை உள்ளங்கையா லெடுத்துக் குடிப்பார்கள்; ஊழித்தீயை ஒரு சுவாசத்தி னால் ஊதி அவித்து விடுவார்கள்; திக்கு பாலகர்களு டைய அரசாட்சியை மாற்றி விடுவார்கள்; பிரமனு டைய சத்தியலோகத்தை ஹதம் செய்வார்கள்.

விஷ்ணு உலகத்துள்ள குடிகளை வருத்தி அலைத்து விடுவார்கள். முனிவர்களுடைய யாகங்களை அழிப் பார்கள். ரிஷி சிரேட்டர்களுடைய தவங்களைக் கலைப் பார்கள். இந்திராதி தேவர்களை அடித்து உதைத்துத் தள்ளுவார்கள். தேவ மாதர்களைக் கற்பழிப்பார்கள். இவ்வண்ணமாக அவுணக்கூட்டங்கள் எல்லா உலகங் களினும் நெருங்கி வருத்துவதைப் பிர்ம்மதேவன் அறிந்து, இந்த்ராதி தேவமுனிவர்களுடன் கைலையங்

கிரிக்குச் சென்று ஈசனைப்பணிந்து, துதிசெய்து, மகத் தான துயரத்துடன் "எம்பெருமானே! கயிலைவாசா! ஏழைபங்காளா! தீனபந்து! தீனதயாளு! அபயம் அபயம்! அவுணக்கூட்டமாகிய சமுத்ரம் உலகமெங்கும் வியாபித்து விட்டது. வானுலகமும் பூவுலகமும் அழிந்தது அழிந்தது: ஞானதேசிகா! அபயம்! தேவர் முனிவர் சித்தர் சாரணர் இயக்கர் பூதர் மருத்துவர் யோகியர் எல்லோரும் அழிந்து நாசமாக்கப்படுகிறார் கள்; மூவாமுதலே! முழுமுதற்பொருளே! பிராண பிட்சை தந்து எங்களை ரக்ஷிக்கவேண்டும்" என்றுஅசுரர் களது துஷ்டச்செயல்களைச்சொல்லி முறையிட்டார்கள். அப்போது பெருமான் தேவர்களிடம் கருணைவைத்து, அவுணக்கூட்டங்களை விரைவாக வதைத்து நாசஞ்செய் யுங்களென்று கோடிருத்திரர்களை ஏவினார். இவர்கள் பெருமானுடைய கட்டளையைத் தாங்கி, அசுரர்களிடம் போர் செய்யத் தொடங்கினார்கள். தானவர்கள் இவ்வு ருத்ரர்களைக்கண்டு கண்கள் சிவந்து, ஆரவாரம் செய்து, வாயை மடித்து, அண்டம் அதிரும்படி தங்கள் புயங் களைத் தட்டி, பெரிய பெரிய மலைகளையெல்லாம் பெயர்த்து, ஆயிரக்கணக்காக உருத்திரர்கள்மேல் எறிந் தார்கள். பெரும் பெரும் விருக்ஷங்களை எடுத்து ஆகாயம் மறைய வீசினார்கள். வேலாயுதங்களை பாண வருஷம்போல் விட்டார்கள்; சில அசுரர்கள் மலைகளை யும் செடிகளையும் வேருடன் பிடுங்கி எறிந்தார்கள். இந்தகோலாகலத்தைக்கண்ட உருத்ரகணங்கள் தலையை யசைத்து, புன்னகை செய்து, பேஷ் பேஷ் நன்றாயிருக் கிறது. விநாசகாலத்துக் கேற்றபடி உங்களுக்கு விபரீத

புத்தி உண்டாயிருக்கிறது. நல்லது ஆகட்டும் என்று சிவத்தை மனதினால் தியானித்து, அசுரர்கள் எறிந்த மரங்களையும் மலைகளையும் அந்த்ரத்திலேதானே பொடியாகும்படி செய்து, அசுரக்கூட்டங்களை அடியோடு நாசமாக்கினார்கள். அசுரர்களது உதிரம் முந்நீரைச் செந்நீராக்கியது. பருந்துகளும் கூளிகளும் அசுரர் மாமிசங்களைச் சலிப்பின்றித் தின்றன. பூதபைசாசங்கள் உதிரம் குடித்தன. கோட்டான்கள் பாடின; கபந்தங்கள் கூத்தாடின; அந்தரத்தில் *பஞ்ச வாத்யங்கள் முழங்கின; தேவர்கள் பூமாரி பொழிந்தார்கள்; ரிஷிகளும் முனிவர்களும் தேவதேவோத்தமராகிய பரமசிவத்தின் கருணையை வியந்து துதித்தார்கள்; உருத்ரர்கள் அசுரக்கூட்டங்களை நாசஞ்செய்து, வெற்றிமாலை சூடிக்கொண்டு வந்து, சிவபெருமானுடைய திருவடிகளை வணங்கித்தொழுது, ஹரஹர என்று ஆரவாரித்து, "என் ஐயனே! என் அப்பனே! ஒப்பிலாமணியே! தங்கள் கட்டளைப் பிரகாரம் அக்கூட்டங்களைக் கொன்றுவிட்டோம். தேவர்களும் முனிவர்களும் இனி யாதொரு பயமின்றி யோகங்கள் செய்யலாம்; தான தருமங்கள் பண்ணலாம். தபசுகள் செய்யலாம். யாகங்கள் முடிக்கலாம். பூலோகவாசிகள் இனி சந்தோஷமாய் ஜீவிக்கலாம். இனி பயம் வேண்டாம்; ஆனால், எவ்வகை உயிரைக் கொன்றாலும் பாவம் வந்து சித்திக்கும் என்பது வேதாகம புராணத்தின் முடிவன்றோ? அதிலும் இவ்வசுரர்கள் தவம் மிகுந்த

* பஞ்சவாத்தியமாவது :—தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, மிடற்றுக்கருவி யென்பன.

வர்களாச்சுதே. இவர்களைக்கொன்ற பாவத்துக்கு உய்யும் வகையை தேவரீர் அநுக்கிரகிக்கவேண்டுமென்று விண்ணப்பம் செய்தார்கள். பரமசிவம் திருவருள் சுரந்து, "கோடிருத்ரர்களே! அஞ்சுதல் ஒழியுங்கள். துஷ்டநிக்ரகம் சிஷ்டபரிபாலனம் செய்ய வேண்டியது அவசியம். தேவர்கள் முனிவர்கள் ரிஷிகள் பிராமணர்கள் மற்றுமுள்ள ஜீவராசிகளின் கஷ்டத்தை நிவிர்த்திக்கும்படி செய்வனவாகிய பாபங்கள் ஒருவரையும் சாராது. ஆயினும் உங்கள் மனதில் பயமிருப்பதாகத் தெரிகிறது. ஆதலால் நீங்கள் நம்மை அருச்சித்துப் பூஜித்தால் எத்தகைய பாபங்களும் நீங்கிப்போம். தவம் செய்வதற்குத் தகுதியான இடம் வேதகிரித்தலம். அங்கு அடையுங்கள்" என்று சிவபெருமான் அநுக்ஞை கொடுத்தார். அவ்வாறே கோடி ருத்ரர்களும் வேதகிரியை நாடிக்கொண்டு வரும்போது, வேதகிரியின் சிகரத்தைக் கண்ட மாத்திரத்தில் வேறொன்றும் தோற்றாது பரவசமானார்கள். ரோமங்கள் புளகாங்கிதமாயின; ஆநந்தபாஷ்பம் கண்களினின்றும் தானாகவே பெருகிற்று. உடனே தண்டம்போல் கீழேவிழுந்து பணிந்து நமஸ்கரித்தார்கள். ஹர ஹர சம்போ சங்கர சதாசிவா! என்று துதித்து நின்றார்கள். தங்கள் மனதில் பாவம் செய்தோமென்ற எண்ணம் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கத் தலைப்பட்டதும், ஆநந்தக் கூத்தாடின வண்ணமாகவே அவ்வேதமலைக்குச் சென்றார்கள். இவர்கள் கண்ணுக்கு நாம் கோடிலிங்க சொரூபமாகக் காக்ஷி கொடுத்தோம். கோடிருத்திரர்களும் நம்மைத் தனித் தனி வணங்கித், தரிசித்துச் சோடசோபசாரத்துடன் பூஜித்

தார்கள். (1) அஷ்டபுஷ்பங்களினால் அருச்சனை செய்தார்கள். அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரம் செய்தார்கள். எம்மனம் உருகும்படி பாடினார்கள். ஆநந்தக் கூத்தாடினார்கள். அவர்கள் பூசைக்கு நாம் மகிழ்ந்து அவர்களுக்கு ஆசீர்வாதமும் அநுக்கிரகமும் சாப நிவிர்த்தியும் செய்தோம். சிலர் (2) ஞானக்கடலுள்

---

(1) புறத்தில் அர்ச்சிக்கும் எட்டுவகைப் புஷ்பங்கள்:—புன்னை, வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி, செந்தாமரை: அகத்தில் அர்ச்சிக்கும் எட்டு வகைப் புஷ்பங்கள் :—மகாலையின்மை, இந்திரிய நிக்ரகம், சாந்தி, தயை, ஞானம், தவம், சத்யம், பாவனை :

(2) ஞானம் எழுவகையினையுடையது. அதாவது:—விகற்பஞானம், நிருவிகற்ப ஞானம், திரிபுடி ஞானம், சாத்திர ஞானம், பாவனை ஞானம், விந்து ஞானம், சிவஞானம் என எழுவகை: விகற்ப ஞானமாவது :—சிற்சத்தியை தரிசித்ததனாற் சிவத்தை வேறறக்காண்கை. நிருவிகற்ப ஞானமாவது :— காண்பானாகிய தன்னையும், காணப்படு பொருளாகிய சிவனையும், காட்சியாகிய சிவஞானத்தையும் பகுத்தறியும் முறைமையின்றிச் சிவமாக நிற்பது: திரிபுடி ஞானமாவது:—காண்பானாகிய ஞாதுருவும் காணப்படு பொருளாகிய ஞானமும், சாட்சியாகிய ஞேயமும் சங்கற்பித்தறிதல் அதாவது ஆன்மபோதத்தைச் சுட்டியறிகிற ஞானம்: சாத்திரஞானமாவது :—கேள்விமாத்திர முள்ளது: பாவனை ஞானமாவது :—சிந்தித்துத் தெளிதலிலுள்ள பேதஞானம்: விந்து ஞானமாவது :—வைகரி, மத்திமை, பைசந்தி, சூக்குமையென்னும் நாலு வாக்குகளைப் பற்றி நிகழும் ஞானம்: சிவஞானமாவது :—திருஞானம்: அநுபூதியில்லாமல் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு, வாக்கு மனோகோசாமாயிருக்கிறது. சீவன்முக்தர்கள் விகற்ப பதார்த்த ஞானங்களைவிட்டு எல்லாம் சிவமாகவே விளங்குவர். வேதாகம புராணங்களில் ஞானத்தாலேயே முத்தியுண்டாகுமென்ப. "ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராண நல்ல வாகமஞ் சொல்ல வல்லவாமென்னு, மூனத்தாரென்கடவ ரஞ்ஞானத்தாலுறுவது தான்

ஆழ்ந்தார்கள். சிலர் *சிவயோகிகளானார்கள்; சிலர் மும்மூர்த்தி சொரூபமானார்கள். சிலர் ஆசைப்பற்றை நீக்கி முத்தியடைந்தார்கள்; சிலர் ததாகாரமாய் நின்று தவஞ்செய்தார்கள்; இந்நாள் முதல் என்றென்றைக்கும் இந்த ஸ்தலமும், இதில் அடைந்த நான்கு வேதங்களாகிய மலையும், உமாதேவியாரும், நம்முடையதிருநாமமும் எங்கள் பெயராலேயே விளங்கவேண்டுமென்று கோடிருத்ரர்கள் கேட்டுக்கொண்டபடி, இத்தலத்துக்கு ருத்திரகோடித்தலமென்றும், இம்மலைக்கு ருத்திரகோடிமலையென்றும், தீர்த்தத்துக்கு ருத்திரகோடி தீர்த்தமென்றும், அம்பாளுக்கு ருத்திரகோடீஸ்வரியென்றும், நம்முடைய பெயர் ருத்திரகோடீஸ்வரர் என்றும் வழங்கிவருகிறது. ஆகையினால் இந்த வேதகிரியினிடத்தில்

---

பந்தமுயர் மெய்ஞ்ஞானத்தா னைத்தாலது போவ தலர் கதிர் முன்னிருள் போலஞ்ஞானமற பந்தமறு முத்தியாகும்" எனச் சிவஞான சித்தியார். "இருணீங்கி யின்பம் பயக்கு மறுணீங்கி, மாசறுகாட்சியவர்க்கு" எனத் திருக்குறள் கூறியவற்றானுணர்க.

* சிவயோகமாவது :—வாயுவை யடக்குதல் ஞானநிட்டையல்ல; மனத்தின் விருத்தியடங்க நிறுத்துதலே ஞான நிட்டை. மனம் அடங்கிடில் வாயு அடங்கிடும்; அப்படி கருத்து அடங்கினமைத சிவயோகம். "நிட்டையாதல் கருத்தடங்க நிறுத்தலே சிவயோகம்" என்றும், "மனமடங்கிடில் வாயுவடங்கிடும் மனமங்குண்டு வாயுவுமங்குண்டு" என்றும், நிட்டானுபூதி. திருமந்திரம்வைகளினுய, [illegible]கையகத்தடக்குமவனே ஞான அதி சூரன்" என நிஷ்டானுபூதியிலும், [illegible]வொன்றும் நினையாமனிற்கினக மென்பார் நிற்குமிடமே யருள் நிட்டை யருளொட்டும்," "மரணமுண்டென்பது சதா நிட்டர் நினைவதில்லை" எனத்தாயுமானவரும் "திடமாகச் சுவானுபூதி சிவோக மென்றிருந்திடாயே" எனக் கைவல்யமும் சொல்லும்.

எல்லாக் காலங்களிலும்சத்தியும் சிவமாயும் குடியிருப்போம். திருவாரூரில் அந்திக்காப்பாகிய சாயரக்ஷயிலும், சிற்சபேசன்வாழும் சிதம்பரத்தில் அர்த்த சாமத்திலும் குடியிருப்போம். மற்றவேளைகளில் இருப்பதில்லை. இந்தருத்ரகோடித்தலம் நமக்குஹிருதயம். காசி, காஞ்சி திருவாரூர் திருவண்ணாமலை சிதம்பரம் காளத்தி மதுரை வலிதாயம் இத்தலங்கள் முதலாக மற்றத் தலங்களெல்லாம் நமக்கு அங்கமாம். எவ்வித பிணியும் எவ்வித கர்மமும் அத்தல வாசத்தினாலேயே நீங்கிவிடும். அதன் சிகர தரிசனம் கிடைத்த மாத்திரம் மோக்ஷம் கிடைக்கும். நந்தியப்பா! உன் மனதிலுதித்தபயம் நீங்கும் பொருட்டு, நீயும் அவ்விடத்திற்சென்று, உண்மைத் தவம்செய்து, எம்மைப் பூஜித்து அருச்சித்து வரக்கடவாயாக. தேவபதவிகளிடத்தில் செய்தபாபங்களினின்று முய்யும் பொருட்டு, பூலோகத்தில் சென்று தவஞ் செய்தலே நன்மை. சீக்கிரம் சித்தியும் அடையலாம்." என்று பரமசிவம் நந்திதேவருக்குச் சொன்னார் என்று சூதர் சொல்ல, சவுனகாதி ரிஷிகள் கேட்டு ஆநந்தித்தார்கள்.

## 7. நந்திதேவர் தவஞ்செய்யும் சிறப்பு.

சவுனகாதி தவச்சிரேட்டர்களே! சிவபெருமான் ருத்ரகோடி மகிமையை நந்தி[illegible]ருக்குச் சொன்னதும், நந்[illegible] மனமகிழ்ந்து ருத்ரகோடி மஹா க்ஷேத்திரத்துக்கு வந்து தவம் செய்த விதானமும் சொல்லுகிறேன். கவனமாய்க் கேளுங்கள்; என்று சூதர் சொல்லுகிறார்.

நந்தியெம்பெருமான் சிவபெருமானைப் பிரதக்ஷிண நமஸ்காரஞ் செய்துகொண்டு, ருத்ரகோடி மஹாக்ஷேத்திரத்துக்குச் செல்ல விடைபெற்றுக் கயிலாயத்தை விட்டுப் புறப்பட்டு, பூலோக மிறங்கி, இமயமலையைக் கடந்து, கங்கா நதிக்கு வந்து அதில் ஸ்நாநம் செய்து, காசி விஸ்வநாதரையும் விசாலாட்சியையும் தரிசித்துக் கொண்டு, வரும்வழியிலுள்ள பற்பல தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்தும், பலப்பல திவ்யக்ஷேத்திரங்களைத் தரிசித்துக் கொண்டும், காளத்தி காஞ்சி முதலிய க்ஷேத்திரதரிசனம் செய்து கொண்டே, கங்காசலம் என்றும் கழுக்குன்றம் என்றும் வழங்குகின்ற உருத்திரகோடி மஹா க்ஷேத்திரம் வந்து, வேதகிரியின் சிகரத்தைப் பார்த்த மாத்திரம் மனம் கசிந்து, பூமியில் விழுந்து, (1) அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரஞ்செய்து, ஹர ஹர என்று துதி செய்து, ஸ்கந்த நதியில் ஸ்நாநம் செய்து, வேதமலையைக் கண்டு ஆநந்தக் கூத்தாடினார்; பிரதக்ஷிணம் செய்தார்; அக்கிரிச்சாரலின் மேற்றிசையிலிருக்கும் (2) தீர்த்தத்தில் மறுபடியும் ஸ்நாநம் செய்தார்.

---

(1) அஷ்டாங்க நமஸ்காரம் என்பது தலை 1. கைகள் 2. முழங்கால்கள் 2. மார்பு 1. கன்னங்கள் 2. ஆக எட்டுறுப்பும் பூமியிற்படும்படி நமஸ்கரித்தல். பஞ்சாங்க நமஸ்காரம் என்பது தலையும் கைகள் இரண்டும் முழங்கால்கள் இரண்டும் பூமியிற் படும்படி நமஸ்கரித்தல்.

(2) தற்காலம் தாழக்கோயிலினுள்ளிருப்பது நந்தி தீர்த்தமாம். நந்திதேவர் ஸ்நாநம் செய்த தீர்த்தமாகும். மூன்று வகை ஸ்நாநமாவது:—தீர்த்த ஸ்நாநம், மந்திர ஸ்நாநம், விபூதி ஸ்நாநம். பஞ்ச சுத்தியாவது:—ஸ்தான சுத்தி, ஆத்ம சுத்தி, திரவிய சுத்தி மந்திர சுத்தி, பிம்பசுத்தி.

அத்தடாகத்திலுள்ள வெண்டாமரை மலரை எடுத்துப் பரமசிவத்தை உள்ளன்போடு பூஜித்தார். உடலு முயிரும் கம்பி, ஆநந்த நடனஞ் செய்தார். இடைகலை பிங்கலையை மாற்றி, மூலாதாரமாகிய சுழிமுனையைத் திறந்து, கோடிசூர்யப் பிரகாசத்தினை யொத்த சோதி யைத் தரிசித்து, தசவித நாதமுஞ் சிரவணஞ் செய்து, (1) ஐம்புலச் சேஷ்டைகளையும், முக்குணவேகத்தையும் உள்ளடக்கி, புருவத்தின்மேல் பார்வையைச் செலுத்தி, அச்சந்த்ர மண்டலத்திலிருந்து கசியும் அமுர்தபானத் தைப்புசித்து, ப்ர்ம்மாநந்த வெள்ளத்திலழுந்தி, சித்திரப் பதுமை போல் சிவராஜயோகம் செய்து(2) தேவ வருஷம் ஆறு அளவு தவஞ்செய்து(3) சிவோகம் பாவனையாக நின்

(1) ஐம்புலச் சேட்டை என்பது :—காது, உடம்பு, கண், நா, மூக்கு இவ்வவயங்களினால் உண்டாகும் சத்த, ஸ்பரிச, ரூப, ரச கந்தங்களினால் உண்டாகும் வியவகாரம் : கேட்டல், பரிசித் தல், காண்டல் ருசித்தல், மோத்தல். முக்குணங்கள் என்பது மூலப்பிரகிருதியிலே புத்திக்கு உபாதானமாகிய சத்துவ, ரஜஸ், தமஸ் என்னும் முக்குணங்கள். இம் முக்குணங்களுள் ஒவ் வொன்று மூன்றாக விரியும். முக்குணங்களும் தோன்றாத இடம் அவ்யக்தம்.

(2) தேவ வருஷம் 6க்கு மனுஷ வருஷம் 2160.

(3) சிவோகம் பாவனையாய் நின்றார் என்பது :—"சிவோகம் பாவிக்கு மத்தாற்சிவனுமாவார்" என்றும் "கண்டவிவையல்லே நானென்றகன்று காணுப் பரமுநானல்லே னெனக்கருதிக் கசி ந்த, தொண்டினொடு முளைத்தவன் றானின்ற கலப்பாலே சோக மெனப்பாவிக்கத் தோன்றுவன் வேறன்றி, விண்டகலு மலங் களெல்லாம் கருடத்தியானத்தின் விடமொழியுமதுபோல விம லதையு மடையும், பண்டமறைகளு மதுநானானேனென்று பாவிக்கச் சொல்லுவதிப் பாவகத்தைத்தானே" என்றும் சிவ ஞான சித்தியார் சொல்லுகிறபடி, விஷம் தீண்டினவன் தன்

ரூர். இவரது தவஉறுதியைப் பரிசோதிக்கும் பொருட்டு, பரமசிவம் தேவேந்த்ரனை அழைத்துப் பொன்னுலகத்து அரம்பாஸ்திரீகளின் உபாயத்தினல், நந்திதேவரின் தவத்தைஅழித்துவிடுவாயாக என்றுகட்டளையிட்டார். ஈசன் ஆக்ஞைப்படி இந்திரன் பொன்னுலகத்துக்குச் சென்று யோசிக்கலானன். "ஐயோ! என்செய்வேன் இந்தவினைக்கு? நந்தியின் தவத்தை அழிக்கப்பரமசிவம் கட்டளையிட்டார். முன்னம் கருடன் நந்திதேவரால் பட்ட துன்பம் பொன்னுலகமும் மண்ணுலகமும் இன்னும் மறந்தபாடில்லை. சிவாக்ஞைக்குப் பயப்படுவேனு? நந்திதேவரது கோபத்துக்கும் சாபத்துக்கும் பயப்படுவேனு?" என்று மனம் பலவாறு தடுமாறிச் சிந்தித்துப் பின் ஒருவாறு தேறி, "நல்லது வந்தது வரட்டும்; கர்மம் யாரையும் விடாது; எப்படியும் நந்தியப்பாவுடைய சாபம் வந்தே தீரும். அனுபவிக்கத்தான் வேண்டும். சிவாக்ஞைக்கு மாறு நடக்கப்போகாது. சிவாக்ஞையை அலட்சியம் செய்த நந்தி பிரபுவே விமோசனத்துக்குத் தவம் செய்கி

---

ஊக் கருடனைகப் பாவிக்க, யந்தப்பாவகத்தினல் அவனுக்குண்டாகிய விஷம் தீர்ந்து விடுகிறதுபோல, பதிஞானத்தினலே அந்தச்சிவன் நானென்று ஸோகம் பாவனை செய்யில், அப்போதே காட்டத்தில் அக்கினி தோன்றினற்போலச் சிவன்ருனே ஆன்மாவில் தோன்றிப் பிரகாசியா நிற்பன். அக்காலத்தில் அநாதியாக இவனிடத்திற் செறிந்து நீங்காதிருந்த மலங்களெல்லாம் போகாநிற்கும். சோகம் :—ஸ—அவன், அஹம்-நான். இது வடமொழிப்பதம். "அது நானனேன்" என்று பாவிக்கும்போது அத்துவிதமாகும். இது ஐக்கியப் பிராந்தி. "தாஸோக மிதிஸம் மோஹம் ஸோகமேவ பரிப்ரம : அஹமேவ பரிப்ராந்தி தஸ்மாத் ரிணிபரித்யஜேத்" என்பது ஆகம வாக்யம்,

ரென்றால் நாம் எம்மாத்திரம்" என்று தெளிந்து, ஏவலாளரையழைத்து, தேவதாசிகள் அனைவரையும் அழைத்து வரும்படி இந்திரன் கட்டளையிட்டான். கட்டளைப்படி ஊர்வசி ரம்பை திலோர்த்தமை மேனகை இந்தமாதர்களுடன், பெண்யானை பெண்மான் பெட்டைக்கிள்ளை மயிற் கூட்டம், அன்னம், பூங்கொடி, மின் குலத்தையொத்து, மாணிக்க ரத்நங்களாலாய மேகலாபரணங்கள் பூண்டு, நறுமணமலர்மாலை யணிந்த குழலியர்கள் நான்கு கோடி தேவ மாதர்கள் வந்து தேவேந்திரன் சந்நிதானத்தில் நின்றார்கள். தேவேந்த்ரன் இவர்களை நோக்கி, "தேவமாதர்களே! நந்திதேவர் பரசிவாக்ஞைப்படி வேத சொரூபமாகிய உருத்திரகோடி மஹா க்ஷேத்திரத்தில் கடுந்தவம் செய்கிறார். இவரது தவத்தை அழிக்கச் சாமர்த்திய முடைய மாதர்கள் உங்களில் யார் இருக்கிறார்கள்" என்று கேட்டான். ஒவ்வொருவரும் நந்தியப்பாவுடைய சாபத்துக்குப் பயப்படுவோமா? அல்லது தேவர்க்கதிபதியாகிய இந்திரனது கட்டளையை கடக்க வல்லோமா? என்று ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து விழித்து, மனமயக்கங் கொண்டு, முகமிரங்கி, கையிலிருந்த மலர்களைக் கீழே நழுவவிட்டு, ஒன்றும் தோற்றாது ப்ரமை கொண்டவர் போலானார்கள். அவர்களுள் மேல்வரும் வினையை யோசிக்காமல் திலோர்த்தமை என்னும் மாது, ஊழ்வினையானது மனத்தின் கண்ணுண்டாகி நாவை யசைப்பிக்கச் சொல்லுகிறாள், "அமராபதிக்கரசே! தேவரீர் கட்டளையிட்டால் அடியாள் நந்திதேவரது தவத்தை அழிக்க வல்லேன்" என்று வணங்கிச் சொன்னாள். தேவேந்த்

ரன்மகிழ்ந்து, திலோர்த்தமா! அப்படியே செய்யக் கடவாய். ஆனால் ஒன்று கவனிக்கவேண்டும்; நந்தி தேவர் சாதாரணமானவரல்லர்: சிவத்துக்கும் நந்திக்கும் பேதமில்லை. சிவமே நந்தி; நந்தியே சிவம்; கடுஞ்சாபத்துக்கு ஆளாகாமல் காரியத்தைத் தந்திரமாகச் சாதித்து வரவேண்டும். நந்தியப்பர் வேதமலைச் சாரலில் தவஞ்செய்கிறார். சதுர்வித உபாயத்தினாலும் மயக்கித் தவத்தை அழிப்பாய்" என்று கட்டளையிட்டதும், திலோர்த்தமை இந்திரனிடம் விடை பெற்றுக்கொண்டு, வேதகிரியை அடைந்து, அதன் சாரலில் கடுந்தவம் செய்து கொண்டிருக்கும் நந்திதேவரிடம் சென்று, தன்தோழிகளுடன் போய்க் காட்டில் வாசஞ்செய்யும் பசுவைப் போல் பசு உருக் கொண்டு, நந்திதேவருடைய அதிசவுந்தர்ய விசித்திர திருமேனியின் அழகையும், கடுந்தவக் கோலத்தையுங் கண்டு, பெருங்காமத்தினால் மோகங்கொண்டாள். மன்மதனுடைய கரும்பு வில் சொரிகின்ற மலர்ப்பாணம் படுவதினால் மேனிகுழைந்து, மனம் வெம்பி, மயிர்க்கால்கள் தோறும் சிலிசிலிர்த்து, நந்தியப்பரிடம் சமீபித்தாள், அவருடைய திருமேனியை நக்கினாள்; தன் கொம்பினால் அவர் கொம்பினை உராய்ந்தாள்; அவர் சரீரத்துடன் தன் சரீரத்தை காம சங்கல்பம் உண்டாகும்படி சேர்த்துத் தேய்த்தாள்; மோந்தாள்; எத்தனை விதங்கள் தான் செய்யினும், அவர் தன் தியானத்தினின்றும் தவத்தினின்றும் சிறிதும் அசையவில்லை. இரண்டாவது சம்புவாயிருப்பவர் நந்திதேவர் என்ற எண்ணத்தை திலோர்த்தமை சிறிதும் கவனிக்கவே

யில்லை. ஊசிமுனையில் மலையை அசைக்கமுடியுமோ? கரியை நரிவெல்லுமோ? பாவம்! திலோர்த்தமை; தன் பிரயத்தினங்கள் வீணாய்விட்டதுடன், காமவிடாயும் அதிகப்பட்டு வருந்தினாள். நந்தி தேவர் தவம் முடிந்து யோகநிலையினின்றும் பிரிந்து, கண்விழித்து, எதிரே நிற்கும் திலோர்த்தமையாகிய கிடாரியை நோக்கி, பெருங் கோபத்தை உள்ளடக்கி, திலோர்த்தமா! என் செய்தாய்! பாவிகள் செய்யும் செய்கையினை மேற்கொண்டாய்! துஷ்டை! என் தவ உறுதியை அசைக்க உன்னால் முடியுமா? வீண் பிரயத்தினம் செய்து கெட்டாய். மாயப்பசு வடிவெடுத்தாய்; மாயா விகாரங் கொண்டு அலைகின்றாய்; சீ! சீ! என்ன காரியஞ் செய்தாய்; நல்லது இருக்கட்டும்; இந்தக்கிடாரி வடிவம் உனக்கு நிலைபெறக்கடவது. இவ்வடிவத்துடன் காட்டில் சஞ்சரித்திருக்கக்கடவை" என்று சாபம் கொடுத்தார் நந்திதேவர்; கிடாரி வடிவங்கொண்ட திலோர்த்தமை பயந்து, நடுநடுங்கி, கைகட்டி, வாய் பொத்தி, கண்ணீர் விட்டு, எதிர்நின்று, "சுவாமீ! என் ஐயனே! பிரபோ! மன்னிக்கவேண்டும். இவ்விபரீத காரியம் நானே செய்திலன்; தேவேந்திரனது கட்டளைப்படி செய்தேன்; யாது செய்வேன்; தேவேந்திரனது ஏவலை மறுக்க முடியவில்லை: அறியாமையினாற் செய்த குற்றத்தை பிரபு மன்னிக்கவேண்டும்; பொறுக்கவேண்டும்; கருணைக்கடலே! தீனதயாளு! தேவரீரிட்ட சாபம் நீங்கும் வகை திருவருள் செய்யவேண்டும். அடிமை உய்யும் வண்ணம் அநுக்கிரகிக்கவேண்டும். அடிமை ஏழை; கடைக்கண்ணோக்கம் வைத்து அடியாளை ரக்ஷிக்கவேண்

டும்" என்று பலமுறை பிரார்த்தித்தாள். நந்திதேவர் மனமிரங்கி, இது தேவேந்திரனது ஏவலால் நடந்த காரியமென்பதை உணர்ந்து, "திலோர்த்தமையே! கேள்; நீ இக்காட்டினிடமே வசித்திரு; கலியுகத்தில் மல்லை நகரத்து அரசனாகிய (மாவலிபுரம்) சுரகுரு என்னும் சூரியகுலத்தரசன் இவ்வனத்தில் வேட்டையாட வருவான். காட்டிலிருக்கும் மிருகங்கள் மீது பாணத்தை விடும்போது மாயீகன் என்னும் பன்றியின்மேல் விடும் பாணமானது உன் சரீரத்தின் மீது வந்து தாக்கி, உன் சரீரத்தைப் பிளக்கும்; அப்போது இந்த சாபம் நீங்கிப் பழைய உருவெடுப்பாய் போ" என்று சொன்னார். திலோர்த்தமை மகிழ்ந்து, நந்தியப்பரை வணங்கித் தொழுது நாம் பூர்வம் செய்வினையை நாமே அநுபவிக்கத்தான் வேண்டும். பிறரை நோவதெற்றுக்கு? எனத்தன் மனதைத்தானே சமாதானப் படுத்திக்கொண்டு, அருகினிலுள்ள காட்டுத்தழைகளையும் புற்களையும் மேய்ந்துகொண்டு, சுனை நீரையுண்டு, கலியுகம் எப்போது வரும், நம் கலி எப்போது நீங்கும் என்று எண்ணி எண்ணி, அந்தக்காட்டில் திரிந்து கொண்டிருந்தாள் பசுரூபங் கொண்ட திலோர்த்தமை. திலோர்த்தமை சாபமடைந்ததைக் கண்ட தோழிகளாகிய மற்ற தேவமாதர்கள் பயந்து, இனி இங்கிருந்தால் நமக்கும் ஆபத்து விளையுமென்று தேவலோகம் போய்விட்டார்கள். நந்திதேவர் மறுபடியும் கண்களை மூடி ஆநந்த பாஷ்பம் சொரியக் கடுந்தவம் செய்யத் தொடங்கிச் சித்திரப் படம்போல் அசைவற்று நின்றார். இவரது கடுந்தவம் தேவலோகம் ப்ர்ம்மலோகம் வைகுண்டலோ

கம் சிவலோகம்முதலிய எல்லா லோகங்களேயும் தகிக்க ஆரம்பித்தது. தேவர்கள் முனிவர்கள் யோகிகள் எல்லாம் தவாக்கினேச்சுவாலேக்கு நடுங்கினுர்கள். பரமசிவம் உமாதேவியாருடன் நந்திதேவரின் தவ உறுதியை திருவுள்ளத்திலுணர்ந்து, பல வாத்தியங்கள் முழங்க, நந்திதேவர் முன் கோடி சூரியப்பிரகாசராய் எழுந்தருளினுர். பிரமன் விஷ்ணு இந்திராதிதேவர்கள் முனிவர்கள் சித்தர்கள் கின்னரர் கிம்புருஷர்கள், யோகியர்கள், பூதகணங்கள் முதலானவரும் நந்திதேவர் முன் தோன்றினுர்கள். தேவர் கூட்டத்தின் முழக்கமும், பூதகணங்களின் ஆரவாரமும், ப்ர்ம்ம விஷ்ணுக்களின் போற்றி சப்தமும், பற்பல வாத்யங்களின்னேசையும் கேட்டு, நந்திதேவர் கண் விழித்துப் பார்த்து, ஆசையெழுப் பதைத்தெழுந்து மகிழ்ந்து, ஆ! என்னே அதிசயம்! ஏழைமீது திருவருள் சுரந்து எம்பெருமான் தரிசனம் கொடுத்தார். அடியேனுடைய சாபவிமோசனமாகு நாள் சமீபித்ததுபோலும் என ஆநந்தித்து, கண்களில் ஆநந்தபாஷ்பம் சொரிய, அகங்குழைந்து, மெய்சிலிர்த்து இருகைகளேயும் சிரமேற் கூப்பிவணங்கித் தொழுது, ஆநந்தக்கூத்தாடி, அரகரா! சம்போ சங்கரா! சதாசிவா! செங்கனற்கண்ணு! அம்பிகை பாகா! ஆநந்தரூபா! வேதகிரியிலமர்ந்தருளும் பெருமானே! சரணம் சரணம்; மூவாமுதலே! முழுமுதற்பொருளே! முக்கணுமூர்த்தி! சரணம் சரணம்; அரிபிரமாதியர் தேடிய பாதா! ஏழையடியேனேயும் ஒரு தொண்டனுக மதித்துத் தங்கள் திருவடி நோவத் தரிசனம் தந்தது யான் முன் செய்புண்யமோ! இக்கானகம் செய்த தவமோ?

அறியேன், எனப் பாடித்துதித்துச் சிரம், வலது அத்தம், இடது அத்தம், வலது கன்னம், இடது கன்னம், முகம், வாய், வலது புஜம், இடது புஜம் என்னும் அஷ்டாங்கங்களும் பூமியிற்பட நமஸ்கரித்து, ஒரு முகூர்த்த காலம் பரமசிவத்தையே மனதிலிருத்தி, மோனமாய் நின்றார். பக்திவலையிற் படுவோராகிய பரமசிவம், நந்திதேவரின் மெய்த்தவத்துக்கு மகிழ்ந்து, "நந்தியப்பரே! உனது தவம் மகா அருமை அருமை; உனது மெய்யன்புக்கு நாம் மகிழ்ந்தோம்; உனக்கு வேண்டிய வரம் யாது? தெரிவிப்பாயாக" எனத் திருவாய் மலர, நந்திதேவர் சிறிது நேரம் சிந்தித்து, "எம்பெருமானே! எனக்கு வேண்டியது என்ன இருக்கிறது. தங்கள் திருவடிகளை என்றும் மறவாத பேரன்பும், தங்களை விட்டுப்பிரியாதிருக்க அநுக்கிரகமும் அருளல் வேண்டு" மென்று பிரார்த்தித்தார். சிவபெருமான் கருணை பொழியும் வாக்கினால் உனது அபீஷ்டப்படி தந்தோம் தந்தோம் என மொழிந்தார். அன்றியும், நந்திதேவர் விரும்பியபடி, "அப்பா! நந்தீ! நீ தவஞ்செய்த இக்கிரிக்கு நந்திகிரி என்றும், இந்த இடத்துக்கு நந்திபுரி என்றும், தினந்தோறும் நீ ஸ்நானஜெபதபம் செய்த தீர்த்தத்துக்கு நந்தி தீர்த்தம் என்றும் விளங்கக்கடவது" என்று அருள் செய்தார். மேலும் ப்ர்ம்ம ஹத்தி, ஸ்திரீ ஹத்தி சிசுஹத்தி முதலிய மஹாபாதகஞ் செய்தோரா இந்நந்தி தீர்த்தத்தில ஸ்நாநம் செய்து, இக்கிரியை வலம் வந்து, என்னையும் உமாதேவியாரையும் உள்ளன் போடு பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து வணங்குவாராயின், அவர்களுக்கும் மோக்ஷத்தைக் கொடுப்போம்"

என்று ஆசீர்வசனம் சொல்லவும், இடபரூபங்கொண்ட நந்தியெம்பெருமான் அளவிலா மகிழ்ச்சியுற்று, சிவபெருமானைத்தாங்கிக் கைலாயம் சென்றார். சௌநகாதி முநிவர்களே! நந்தியின் கடுந்தவம் எத்தகைய மேம்பாடுடையதென்பதை நீங்களே ஆலோசியுங்கள்.

பின்னொர்காலத்தில் கோ உலகிற்சென்று, கோவின் புணர்ச்சியிலாழ்ந்து கிடத்தலைப் பரமசிவம் உணர்ந்து கோபித்து, "நந்தீ! உனக்கு இன்னும் மாயையில் மயக்கம் நீங்கவில்லை. ஆதலின் நீ பூலோகம் சென்று, விஷயாதிகளிலுழன்று, மாயா மயக்கம் தீர்ந்ததும், திரும்பி இவ்விடம் வருக" என்று ஆக்ஞாபித்தார். நந்திதேவர் பயந்து, இவ்வேதகிரியில் மறுமுறைவந்து தவம்செய்து, சனகர் முதலான தவமுநிவர்கள் ஆசிவசனம் பெற்று, நன்மார்க்கமடைந்து, பரமசிவத்தின் திருவடி நீழலை அடைந்தார். முநிவர்களே! இரண்டாவது சம்புவாகிய நந்திதேவரே! தவம் செய்து பேறுபெற்ற தலம்என்றால் இத்தலத்தின் மகிமையும் இக்கிரியின் பெருமையும் எடுத்துரைக்க என்னாலாகுமா என்று சூதர் சொல்ல ரிஷிகள் ஆநந்த பரவசமானார்கள்.

## 8. மாயீகன் என்னும் அசுரன் பன்றி உருவெடுத்தது.

தவசிரேஷ்டர்களே! கவனமாய்க் கேளுங்கள். மாயீகன் என்னும் அசுரன் பன்றி உருவெடுத்ததைச் சொல்லுகிறேன் என்று சூதர் சொல்லுகிறார்.

மகம்மேருகிரியை நிகர்த்த இரண்டு புஜங்களையும், கடையுகத்தில் தோன்றும் ஊழித்தீயைப் போன்ற சிவந்த கண்களையு முடைய கொடிய அரக்கர் குலத்துதித்த மாயிகன் என்னும் ஓர் அசுரன் இருந்தான். அவன் கொலைக்கஞ்சா மாபாதகன்; காடு மலை வனம் வனாந்தரங்களிற் சஞ்சரித்து, நிணங்களையும் பிணங்களையுந் தின்பவன்; மாய உருவெடுப்பதைக் கற்றுணர்ந்த மகா பாபி; பற்பல மாய உருவமெடுத்துத்திரிந்து, மிருகாதிகளைக் கொன்றுதின்று ஆநந்திக்கிறவன். இத்தகைய கொடிய அரக்கன் ஓர் காலத்தில் வேதகிரிப் பெருமான் வீற்றிருக்கும் வேதகிரியைச் சார்ந்த வனத்தில் பெரிய பன்றி ஒன்றைக்கண்டு, அதைக் கொன்று தின்ன ஆவல்கொண்டு, தானும் ஓர் பன்றி உருவெடுத்துக் கர்ச்சித்து, அவ்வனத்தில் திரியலானான்.

அவ்வனத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த மார்க்கண்டேய மஹாமுநிவர், இம்மாயா உருவெடுத்த மாயிகன் என்னும் மாயப்பன்றியைக்கண்டு பரிதபித்து, "ஆ! ஆ! மஹா பாபி! கொலை செய்வான் வேண்டி, மாய உருவெடுத்தான் மஹா பாதகன் இவ்வரக்கன். இது பாபம் என்று நினைந்தானில்லை போலும்; கல்நெஞ்சுடைய கசடன்; சீ! சீ! இவன் செய்கை கொடிது! கொடிது!!" என இரங்கி, அவ்வரக்கனைப் பார்த்து "வஞ்சகனே! உயிர்களை வதைக்க எண்ணங் கொண்டு இவ்வனத்தில் வந்தனை; என் எதிரில் தோன்றினை; மாமிசம் தின்னுமாசையால் இம்மாய உருவம் எடுத்தனை; சகிக்கொணாத் துர்நாற்ற முடைய புலாலை வெறுத்துவிடாமல் இருக்கின்றனை; நீ மஹா கொடி

யன்; மஹா பாதகன்! புண்யம் என்ற சப்தம் சொப்பனத்திலும் நீ கேட்டறியாய் போலும். பாழ் நரகங்களுக்குப் பாத்தியங் கொண்டாடி நிற்கின்ருய். அடமூர்க்கா! உனக்கு இறத்தல் வரும்போது உன்மனம் அஞ்சாதோ? அட! பேதாய்! தன்னுயிர் போல் மன்னுயிரை நினையாத மஹா துரோகிகளும் நமனுக்கு அஞ்சுவார்களே! அந்தோ! பரிதாபம்; உயிரைக்கொன்றுதின்ன, உன் சரீரத்தை மாயத்தால் மறைத்தனே; பாதகா! இப்போது நீ மாயப்பன்றி உருவெடுத்து, மற்றொரு பன்றியைக் கொன்று தின்னவந்த இவ்வனம் சாக்ஷாத் சிவபெருமான் நான்கு வேதங்களையே ஆசனமாக்கொண்டு வீற்றிருக்கும் வேதகிரிமலையைச் சார்ந்த தல்லவா? அப் பெருமானது ஆக்ஞைக்குட்பட்ட இவ்வனத்தில் நெஞ்சம் அஞ்சாது கொலை செய்ய ஓடி ஆடித்திரிகின்ருய். அடதுஷ்டா! கெடுவாய் கெடுவாய்'' என்று காலனை வென்ற மார்க்கண்டமுனிவர் கூறவும், மாயீகன்என்னும் அரக்கன், முனிவரது தரிசன விசேஷத்தால் அறிவு விளங்கி, பயந்து நடுங்கி, ''சுவாமீ! நான் அரக்கர் குலத்துதித்தவன்; மாயீகன் என்னும் பெயருடையவன்; கொலை செய்து தின்னுதலே ஜீவனமாக உடையவன்; பல மாய உருவெடுக்க வல்லவன்; முநி ஐயா! கொலைக்கஞ்சாநெஞ்சினனுகிய புலையனேன் செய்த குற்றங்களை மன்னிக்க வேண்டும்; அடியேன் இத்தனைகாலம் பாபம் என்றறியாமல் பல கொலைகளைச் செய்தவன். புண்ய மென்பதறிந்த ஊரில் குடியிருந்தறியாத கசடன் மூர்க்கன் நான்; என் செய்வேன்? ஏழையடியேன் மீது திருவுளமிரங்கி ரக்ஷிக்க வேண்டும். ஐயா

வே! இப்பன்றி உருவம் எக்காலம் நீங்கும்; நான் எக்காலம் எவ் வழியில் கிருதார்த்தனுவேன்; திருவுளம் பற்ற வேண்டும்'' என அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகப் பிரார்த்தித்துக் கீழே விழுந்து வணங்கினுன். மகரிஷி மனமிரங்கி, "அரக்கனே கேள்! மல்லை (மஹாபலிபுரம்) என்னும் நகரத்து அதிபதி சுரகுருச் சக்கிரவர்த்தி இவ் வனத்தில் வந்து வேட்டையாடப் போகிருன். அவன் விடுகின்ற பாணமானது உன் மேல் விழும். நீ பன்றி உருமாறி பழைய வடிவம் பெறுவாய். அதுவரையும் கொலைத் தொழிலை ஒழித்து, இவ்வனத்திலேயே சஞ்சரித்திருக்கக்கடவை என்று அநுக்ரகித்தார். மாயீகன் பன்றி உருவத்தோடேயே இவ்வேத வனத்திற் சஞ்சரித்துக் கொண்டிருந்தான் எனச்சூத முனிவர் சொல்ல சவுனகாதிகள் கேட்டு ஆநந்தித்தார்கள்.

## 9. காமதேனு அஷ்டவசுக்களுக்குச் சாபம் கொடுத்தது.

தவ சிரேட்டர்களே! வசிட்ட மஹாமுநி வரிடமிருந்த காமதேனுவாகிய தேவபசுவானது அஷ்டவசுக்களுக்குச் சாபம் கொடுத்ததைச் சொல்லுகிறேன் என்று சூதர் சொல்லுகின்றுர்.

மகம்மேருவின் சாரலில் மேய்ந்து கொண்டிருக்கும் பசுக்களின் கூட்டத்தில் மகா தவச்சிரேஷ்டராகிய வசிட்ட மகரிஷியின் ஆசைக்குட்பட்ட காமதேனுவா

னது கற்பக நீழற்சாரலில் மேய்ந்து கொண்டிருந்தது. இத்தேவபசுவின் அழகு பார்த்தவர்கள் கண்களைப் பிரமிக்கச் செய்யுந் தன்மையது. சிவந்த பவழம் போன்ற திருமேனியும், அழகிய நீண்டகாதும், அகன்ற நெற்றியில் மூன்றாம் பிறைச் சந்திரன் போன்ற வெண்மையான பொட்டும், பொன்மயமான கொம்புகளும், வெள்ளி மயமான குளம்புகளும், கவரிமானைப் பார்க்கிலும் வெண்மையான நீண்ட மயிரினையுமுடையது. அழகிய ரத்தினங்கள் இழைக்கப்பட்ட கிண்கிணி மாலையும், ஒரு குடம் பால் கறக்கத்தகுந்த பருத்த மடியினையு முடையது. சிறிய பாலர்களும் பால் கொள்ளத்தக்க சாந்த குணமுடையது. இத்தகைய அழகிய தேவ பசு வசிட்டருக்குக் களிப்பை உண்டாக்குவதுந் தவிர, அவர் விரும்பியது விரும்பியபடியே கொடுக்குந் தன்மையது.

மேன்மைதங்கிய இப்பசு மேய்ந்து கொண்டிருப்பதை அச்சாரலில்உல்லாசமாய்க்காலங்கழிக்கவந்திருந்த அஷ்டவசுக்களும் தத் தம் மனைவியருடன் பார்த்து, ஆ! ஆ! என்ன! இவ்வழகுள்ள பசு வசிட்ட முனிவர்க்குச் சொந்தமல்லவா? இம்முனிவர் செய்த தவமே தவம். இப் பசுவை அம்முனிவர்க்கு அநுக்கிரகித்த கற்றைவார் சடையன் சிவபெருமானது திருவருட் பெருங்கருணையே கருணை; அதிசயம்! முனிவர் எது கேட்டாலும் கொடுக்கத்தக்கது என்றுரைத்துஅதிசயித்து ஆநந்தித்தார்கள். அத்தறுவாயில் அத்தேவ பசு புற்களை மேய்ந்து, தேன் துளிக்கும் கற்பகப் பூஞ்சோலை நீழலிற் போய்த் தங்கியது.

அனலன், அணிலன், ஆபச்சைவன், சோமன், தரன்,

துருவன், பிரத்யூகன், பிரபாசன் என்னும் அஷ்ட வசுக்களுள் எட்டாவது வசுவாகிய பிரபாசன் என்பவனின் மனைவி மாலினி என்பாள் இக்காமதேனுவினிடத்து ஆசைகொண்டு, அதன் பாலைக் கறந்து சாப்பிடப் பிரியப்பட்டு, தன் நாயகன் பிரபாசனிடம் முறை யிட்டாள். பிரபாசன் பேதைமை யென்பது மாதர்க்கணிகலம் என்னும் நீதியை யுணராதவனாய், தன்மனைவியிடத்து வைத்த காமவேட்கையினால், காமதேனு என்பது தேவபசு என்பதையும், தவச்சிரேட்டரது உடைமை என்பதையும் மறந்து, அப்பசுவிடத்துச் சென்று, பால் கறக்கப்போனான். அக்காமதேனுவானது பிரபாசன் செய்த துஷ்டத்தனத்தைக் கண்டு கோபித்து, ஆ! ஆ! என்னே! இவன் ஆண் மகனாயிருந்தும் மோகத்தினால் மனைவியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்ய விரும்பினானே யல்லது, பிறர் சொத்தை உத்திரவின்றித் தொடலாமா? அல்லது பகா தவமுனிவர்க்குச் சொந்த மாச்சுதே, அவர் உத்திரவு பெறாமல் இக்காரியஞ்செய்யலாமா? அல்லது நம்மையாவது யாசித்துக்கேட்டானா? எதுவுமின்றி தன் சொத்துபோல் சொந்தம் பாராட்டி, அக்ரமம் செய்ய வந்தானல்லவா? வென்று பால் கறக்க வைத்திருந்த பாத்திரத்தைத் தள்ளிக்கவிழ்த்துவிட்டு, அவனை உதறித்தள்ளிக் கோபித்துப்போய் "அஷ்டவசுக்களே! இத்துஷ்ட காரியம் செய்தவனும், அவன் செய்த அக்கிரமத்தைத் தடுக்காமல் பார்த்திருந்த, ஏனைய தமையன் மார்களும், துன்பம் பொருந்திய வறுமை அடைந்து, காசிச் சுடலையிலிருக்கும் பிணங்களின் ஊனைப்புசித்துத் திரிந்துலாவக்கடவீர்

களாக" என்று காமதேனு சாபம் கொடுத்தது. உடனே அச்சாபம் அஷ்டவசுக்களையும் துன்பப்படுத்த ஆரம்பித்தது. என்ன செய்வார்கள் பாபம்? ஒருவரை யொருவர் பார்த்து; முகம் வேறு பட்டு, அச்சங் கொண்டவர்களாய் வியர்த்து நடுநடுங்கி, இந்த துன்பம் நமது பூர்வ கர்மவினையினாலும் இளையவன்மனைவியினாலும் நேரிட்டது. இனி என்ன செய்யலாம். வருவது வந்தே தீரும்; அநுபவிக்கத்தான் வேண்டும்; பிறரை நோவதிற் பயனில்லை. ஆயினும் நமக்குச் சாபம் கொடுத்த காமதேனுவையே நமஸ்கரித்து, சாபவிமோசனமாகும் விதத்தைக் கேட்போம் என நிச்சயித்து, அத் தேவ பசுவிடம் சென்று, "காமதேனு தாயே! வயதிற் சிறியவன் புத்தியிற் குறுகியவன், அறியாமையாற் செய்த குற்றத்தை மன்னிக்கவேண்டும்; ஒருவன் கொண்ட பெண் மயக்கம் எங்கள் எல்லோரையும் குடியோடு கெடுத்தது. ஏழையாகிய எங்களை ரக்ஷிக்கவேண்டும். உமது கன்று வேறாகவும் நாங்கள் வேறாகவும் கருத வேண்டாம். அம்மணீ! சாபவிமோசனமாகு மார்க்கத்தை எங்களுக்கு அநுக்கிரகிக்கவேண்டும்" என்று அஷ்டவசுக்களும் பிரார்த்திக்க, காமதேனு மனமிரங்கி, "வசுக்களே! உலகத்திலே மூன்று ஆசைகள் அதாவது மண்ணாசை பொன்னாசை பெண்ணாசை எல்லோர்க்கும் உண்டு. அதில் மண் பொன் ஒருவர்க்கு நீங்கினாலும், பெண்ணாசை மயக்கத்தினின்றும் நீங்குதல் அருமையினும் அருமை. மனைவிபேரில் கொண்டகாமவெறியினால் உங்களில் ஒருவன் செய்த குற்றம், நீங்கள் தடுக்காதிருந்ததினால் உங்கள்எல்லோரையும் சார்ந்தது. ஜீவ

ர்கள் பெண் மயக்கத்தினு லுண்டாகும்*விபரீதங்களுக்கு அகப்படாமல்வெகு ஜாக்ரதையாயிருக்கவேண்டும்; உங்களுக்குச் சில நீதிகள் சொல்லுகிறேன் கவனமாய்க்கேளுங்கள். தாய் தந்தை முதலிய பெரியோர்களை அலட்சியம் செய்து, அவர்கள் மனம் நோகச் செய்கிறவர்களும், கற்புள்ள மனைவியை இகழ்ந்து வெறுக்கிறவர்களும், பிறர் தாரத்தை இச்சிக்கிறவர்களும், பிராமணர்களைத் தூஷிக்கிறவர்களும், அவரவர் ஆசார அநுட்டானங்களைவிட்டு மகாபாதகமாகிய கொலை களவு கள் காமமாதி குற்றம் செய்கிறவர்களும், தவம் தானம் யக்

---

*"பெண்ணென்றால் யோகப் பெரியோர் நடுங்குவரேல்,
மண்ணின்றார் யார் நடுங்க மாட்டார்காண்,
பெண்ணென்றால்பேயுமிரங்கு மென்பாய்,
பேயொன்றோ தான் பயந்த சேயுமிரங்குமவர் தீமைக்கே"
என்றார் இராமலிங்க சுவாமிகள்.

"ஒரு கோட்டுக் கலைமுநியு மொளிதிகழும் புலியாடை
யுடுத்த கோவும்
மருமலர் வாழ் திசைமுகனும் வானவர்களுயகனு
மயிடன்றானும்
கரிய நிறத்திருமாலும் வாலியும் பராசனுமே
காமனம்பால்
பெருமை யிழந்தனரென்றாற் சிறுமனிதர்க் கெப்படியோ
பேசுங்காலே."

வாசவனும் பிறர் நகைக்க உடலானுனெருவனரா
வடிவமானன்
தேசுபுகழ்க் கலைமதியு முடலிழந்தான் மலர்வேதன்
சிரமொன்றற்றான்
ஈசனுதல் விழிதிறந்தானிராவண சுந்தோப சுந்தரிறந்தார்
மண்மேல்
காசினிப்புன் மானிடரோ மோக சாகரமதனைக் கடக்க
வல்லார். (தனிப்பாடற்றிரட்டு.

கியம் செய்வதற்கு இடையூறு செய்கிறவர்களும், ஒரு வருக்குக் கொடுப்பதாகச் சொல்லிப் பிறகு இல்லை என்கிறவர்களும், சுற்றத்தாருக்குத் தன்னாலியன்ற உதவி செய்யாதவர்களும், கோயிலை இடிக்கிறவர்களும், குளத்தைத் தூர்க்கிறவர்களும், வேதங்களைக் கிரயத்துக்குக் கொடுக்கிறவர்களும், சாதத்தை விற்கிரயம் செய்கிறவர்களும், தானதருமங்களை விற்கிறவர்களும், செய்ந் நன்றியை மறந்தவர்களும், அரசனைக் கொன்ற மந்திரிகளும், புருஷனைக்கொன்ற பூவையர்களும், பக்ஷிகளைக் கூட்டிலடைத்து வைக்கிறவர்களும், அரசு வேம்பு ஆல் முதலிய நிழலைத் தரும் மரங்களை வெட்டுகிறவர்களும், கள்ளினைவிரும்பிப்பாளையை அறுக்கிறவர்களும், கருப்பத்தை அழித்த மாபாவிகளும், பசுவின் முதுகில் சுமை வைத்து அடிக்கிறவர்களும், புனுகுப்பூனை வளர்க்கிறவர்களும், பாதுகாத்துத்தரும்படி கொடுக்கும் பொருள்களை அபகரிப்பவர்களும், கடவுளுக்கு உபயோகமாகும்படி வைத்திருக்கும் நந்தவனங்களை அழிப்பவர்களும்,கோயில் சொத்தை அபகரித்துத்தின்கிறவர்களும், சத்திரம் சாவடி மடங்களைத் தன்னதென்று சத்தியம் செய்து சொந்தமாக்கிக் கொள்பவர்களும், தன் மனைவியைக்கேவலம் பொருளுக் காசைப்பட்டுப் பிறனிடத்து விட்டு ஜீவிப்பவர்களும், தெய்வத்தை நிந்திக்கிறவர்களும், பொருளுக்காசைப்பட்டு ஸ்திரீ ஹத்தி சிசு ஹத்தி செய்கிறவர்களும், தமயன் மனைவி பிராமண ஸ்திரீ நீச ஸ்திரீ இவர்களுடன் சம்போகம் செய்கிறவர்களும், குருவின் மனைவியை இச்சிக்கிறவர்களும், பொன்னையும் பாலையும் திருடுகிறவர்களும், எளியவர்க்

குத் துன்பம் விளைப்பவர்களும், பொய் வேஷம் போட்டு உலகை ஏமாற்றுகிறவர்களும் மகாபாபிகளேயாவர். வசுக்களே! இவர்களை யமன் இலேசில் விடான். எல்லா நரகங்களும் இம்மகாபாதகர்களுக்குச் சொந்தம். இவர்கள் ஒருபோதும் நல்வழியிற் சேரார்கள். பிறவித்துன்பம் கற்பகோடிகாலம் இவர்களை விட்டு அகலாது. ஆதலால் உலக விஷயத்தில் இச்சையெழுந்தாலும் நீதி மார்க்கம் தவறி நடக்கப்படாது. இதுவே உங்களுக்குச் சொல்லும் நீதி. தன் மனைவியின் ஏவலைக் கடந்திலனாய் உங்கள் பின்னவன் பிறர் சொத்து அதிலும் முனிவர் சொத்து என்று யோசியாமல் அபகரித்தான். மற்றவர்கள் தடை செய்யாது பார்த்திருந்தார்கள். அதனால் நீங்கள் பூவுலகத்தில் காசிச்சுடலையில் நூறு வருஷகாலம் பிணத்தைத் தின்று ஜீவிக்கவேண்டும். நாரதர் அவ்விடம் வருவார். அவரை வழிப்பட்டு அவர் உபதேசிக்கிறபடி நடப்பீர்களானால் உங்கள் சாபம் நீங்கிப் பழைய உரு எடுப்பீர்கள்" என்று காமதேனு சொல்லவும், வசுக்கள் எண்மரும் சிறிது சந்தோஷித்து பூலோகம் சென்றார்கள் என்று சூதர் சொல்லவும் சௌனகாதி ரிஷிகள் கேட்டு மகிழ்ந்தார்கள்.

## 10. நாரதர் வசுக்களுக்குச் சாப விமோசன மார்க்கம் சொன்னது.

சவுனகாதி முனிவர்களே! பெண் பேச்சைக்கேட்டுப் பெருமையிழந்து சாபம் பெற்ற வசுக்கள் எண்மர் பட்ட துன்பங்களை அறிந்தீர்கள் அல்லவா? பெண்ணால்

வரும் பெரும்பாவம் அநந்தம். இந்திரன் ஆயிரங் கண்ணானதும், சந்திரன் கலைகள் தேய்ந்து வளர்ந்து நிற்பதும், ராவணன் மடிந்ததும், வாலி இறந்ததும், பெண்ணாலன்றோ? பெண்டுகள் வார்த்தை கேட்டால் பெரும்பிழை நேரும் என்பதை ஒவ்வொரு ஜீவர்களும் கவனிக்கப் பாலதென்று கூறி, வசுக்கள் எண்மருக்கும் நாரதர் தரிசனம் கொடுத்ததும், சாபம் நீங்கும் உபாயம் சொன்னதும் கூறுகின்றேன் என்று சூதர் சொல்லுகிறார்.

தவசிரேட்டர்களே! அஷ்டவசுக்கள் காமதேனுவின் சாபத்தால் வறுமையடைந்து, காசி மசானத்தில் பிணங்களைத்தின்று, தங்கள் சரீரத்தின் தேஜசு மறைந்து, நூறு வருடகாலம் சீக்கிரத்தில் ஒழித்தபோது, நாரதபகவான் காசியிற் சென்று பாகீரதியில் ஸ்நாநம் செய்து, விஸ்வநாதரையும் விசாலாட்சி யம்மனையும் தரிசித்து, மசானத்தின் வழியாக வந்து கொண்டிருந்தார். வசுக்கள் எண்மரும் நாரதபகவானைக் கண்டு கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்தது போலும், இடருக்கு ஒரு மருந்து கண்டது போலும் நினைத்து, அவரை வணங்கித்தொழுது, "சுவாமீ! அடியேங்கள் காமதேனுவின் சாபத்தால் சரீரம் நொந்து, மதியிழந்து, பெருமை கெட்டு, இம்மசானத்தில் பிணங்களைத்தின்று இன்றைக்கு நூறு வருடகாலம் கழித்தோம்; நாங்கள் உய்யும் வகை தேவரீர் அருள்புரிய வேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். நாரதர் சிறிது யோசித்து, சாபம் வந்த விதத்தைநோக்கி மனமிரங்கி, தம்முடைய கமண்டலத்துள்ள ஜலத்தை வாரி அவர்கள் மேல் வீச, அஷ்டவசுக்கள்

பழைய உருவெடுத்து, அவர் அருகில் வந்து கைகுவித்து வணங்கி நின்றார்கள். இவர்களை நாரதமுனிவர் பார்த்து "வசுக்களே! இந்த சரீரத்தினால் அடையும் இன்ப துன்பங்கள் நம்மை விட்டு நீங்கா. உலகிலுள்ளவைகள் யாவும் கூத்தாடுபவைகள். அவைகளை ஆட்டிவைப்பவராகிய நமது கடவுள் கூத்தாட்டி; சுகதுக்கங்கள் நாம் விரும்பாமலே சிவன் செயற்படி வரும். நாம் கவலைப் படுவதிற் பிரயோசனமில்லை. ஆதலால் இந்த பிறப்பில் பரமசிவனைப் பூஜித்தால் மறுபிறப்பில் *சஞ்சிதம் பிராரத்தம் ஆகாமியம்என்னும்மூன்றுவினைகளும் நசிக்கும். ஆதலின் வேதகிரியின் சாரலில் மார்க்கண்டேய முனிவர் தவம் செய்துள்ளார். நீங்கள் அவ்விடம் வாருங்கள். நீங்கள் உய்யும் வகையை அவர் அறுக்

---

* சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என வினைகள் மூன்று; சஞ்சிதம் :—ஜநநங்கடோறும் அநாதியே தொடர்ந்து தொடர்ந்து மந்திர, பத, வன்ன புவன, தத்துவ கலைகளிற் கட்டுப்பட்டு அளவிறந்து கிடக்கும் நல்வினை தீவினைகளாம். இதை கைகூடாத ஆசைகள் அனைத்தும் அடைக்கப்படும் பை என்பார்கள் பெரியோர்கள். பிராரத்தம்—அந்த சஞ்சிதத்திலே பரிபக்குவத்தைக் குறித்ததற்கேற்ற தநு, காண, புவன, போகங்களை உண்டாக்கிப் புசிப்பிப்பது. இந்த பிராரத்தம் இச்சை, அநிச்சை, பரேச்சை என மூவகையாகும். இச்சையாவது அரசன் மனைவியைத் தீண்டலால் வரும் சுகதுக்கங்கள், அநிச்சையென்பது இடி முதலியவற்றாலிரு பயனையு முறுவது. பரேச்சையாவது ஒருவன் ஒரு காரியஞ் செய்வதனால் அவனை மற்றொருவன் ஆக்கினை அபராதம் சொல்ல அநுபவித்தல். இந்தப் பிராரத்தம் சுபத்தம், மந்தம், தீவிரம் என மூவகைத்து. ஆகாமியம் :—பிராரத்தத்துக் கிசைய எடுத்த தேகத்தில் அதன் பலத்தைப்புசிக்கையில் விருப்பு, வெறுப்பு, நிந்தைகளாலுண்டாகிய கன்மத்தால் வரும் புண்ய பாபங்கள்.

கிரகிப்பார் என்று வசுக்கள் எண்மரையும் தம்முடன் அழைத்துக் கொண்டு வந்து, மார்க்கண்டேயர் ஆசிரமத்தைக் காட்டி, உங்கள் சாபநிவிர்த்தி இதோ உளது என்று காட்டினார். இவர்கள் எண்மரும் கை குவித்து வாய் புதைத்து, வணங்கி நமஸ்கரித்து, ஒன்றும் தோன்ருமல் பணிந்து நின்ருர்கள். அம்முனிவர் இவர்களது பக்குவத்தை அறிந்து, "அப்பா வசுக்களே! துன்பங்கள் எவர்களுக்குத்தான் சம்பவியாது. சாக்ஷாத் மஹா விஷ்ணுவும், பிர்ம்மாவும், தேவேந்த்ரனும், இழிவான தன்மையைச் செய்து, திருமேனி ஒளியிழந்து, தங்கள் தங்கள் வாழ்வு நீங்கி, இருப்பிடம் விட்டுச் சில காலம் பரமசிவனைப் பூஜித்துத் தத்தம் பதியைச் சேர்ந்தார்களென்ருல் நாம் எம்மாத்திரம்? அவரவர் வினையின் அவரவர் வருவார் அவரவர் வினையளவுக்கே அவரவர் போகம் என்பது பொய்க்குமா" என்று முனிவர் கூற, அஷ்டவசுக்கள் சந்தோஷித்து, சுவாமீ! கிருபைசெய்து இம்மூவர்கள் என்ன காரணத்தினுல் பிழை செய்து என்னவிதம் தங்கள் பதவிகளைப் பெற்ருர்கள். அதைச் சொல்ல வேண்டுமென்று பிரார்த்திக்க, மார்க்கண்ட முனிவர் வசுக்களுக்குச் சொல்லுகிருர் என்று சூதர் சவுனகாதிகளுக்குச்சொல்ல முனிவர்கள் கேட்டு ஆநந்தமடைந்தார்கள்.

## 11. தேவேந்த்ரன் சாப விமோசனம்.

தவ முனிவர்களே! மார்க்கண்டேய மகாமுனிவர் அஷ்டவசுக்களுக்கு அமராபதிக்கரசன் சாபம் பெற்றுப்

பூஜித்துப் பேறு பெற்ற கதையைக் சொல்லுகிறார் என்று சூதர் சொல்லுகிறார்.

மூன்னோர் காலத்தில் இந்திரன் அமராபதியை விட்டு அதற்கருகிலிருக்கும் ஆகாய கங்கை நதிக்கரையினிடம் வந்தான். அக்கரையில் ஓர் தெய்வப் பெண் கண்களில் நீர்ததும்ப வருந்திக் கொண்டு நிற்கக் கண்டு, இந்திரன் அம்மாதினை நோக்கி "அம்மா! நீ துயரப்படுவானேன்? உனக்கு என்ன கவலை? விவரமாய் சொல்லுவையேல் நான் தீர்ப்பேன்" என்று கேட்டபோது, அம்மாது "ஐயாவே! என்கையிலிருந்த பந்தை யாரோ ஒரு ஆடவன் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டு வெள்ளி மலைக்குச் சென்றான். இத்தகாத காரியம் செய்தவன் இன்னானென்றுந் தெரியவில்லை. அவனைப் பின் சென்று பிடிக்கத்துணையுமில்லை. யான் என் செய்வேன்? இத் தேய அரசர் ஆக்கினை இம்மட்டிலிருக்கிறது. அதனால் அழுகின்றேன்" என்று சொன்னாள். உடனே இந்திரன் அவ்வாடவன் அடிகளைக் குறிப்பாகப் பார்த்துக் கொண்டு, அவன் போன பாதை வழியே போய், தன் ஆயிரக்கண்பார்வையோடு நாடிக்கைலையங்கிரிக்குச் சென்றான். அக்காலத்தில் சிவபெருமான் ஓர் காளை போலவும், பார்வதி ஒரு கன்னிகை போலவும், வடிவெடுத்து, சூதாடிக் கொண்டு, அந்த குறித்த பந்து இவர்களுக்கருகிலிருப்பது போலவும், ஓர் திருவிளையாடல் செய்தார். இந்திரன் அந்தப் பந்தினைக் கண்டு, பரமசிவம் மாறுவேஷங் கொண்டு இத்திருவிளையாடல் செய்கிறார் என்பதறியாமல், அவரை அதட்டி, "கள்வனே! இந்தப்பந்தை எவ்விதமாகத் திருடிக்கொண்டு

வந்தாய். உடையவரிடம் இதைக் கொடுத்து விடு" என்று உக்ரமாய்க் கேட்டான். காளை வேஷங்கொண்ட சிவபெருமான் இந்த வார்த்தைகளைக்கேளாதவர்போல், சூதாட்டத்தில் ரொம்ப விருப்பமுள்ளவராக அபிநயித்துக் கொண்டிருக்கையில், இந்திரன் இவரைத் தன் கையிலிருந்த வஜ்ராயுதத்தினால் அடிக்கக் கையை நோக்கினான். எம்பெருமான் சிறிது கடைக்கண்ணோக்கம் வைத்தார். இந்திரன் சித்திரத்தைப் போல் அசைவற்று, தூக்கிய கையை மடக்கமாட்டாதவனாய், வருந்தி நின்றான். சிவபெருமானைப் பக்திவலையிற் சிக்கவைக்கலாமே யொழிய, அகந்தைச் செருக்கினால் வெல்ல முடியுமா? பரமசிவம் சூதாடி முடிந்தபின், அவ்விடமுள்ள ஒரு தொழிற்பெண்ணினைப் பார்த்து, "இவனை ஒரு பாம்பினாற் கட்டி, ஒரு மலைக் குகையில் சிறையில் அடைத்து வை" யென்று கட்டளையிடவும், கட்டளைப்படி இந்திரனைச் சிறையில் அத் தோழியால் வைக்கப் பட்டது. சிறையிலடைக்கப் பட்டிருக்கும் இந்திரன் சிறிது சிந்தித்து மனங்கலங்கி, "ஆ! கெட்டேன். என்ன காரியம் செய்தேன். பரமசிவம் என்பதறியாமல் தீவினைக்காளானேன், பொன்னாடு என்ன பாடு படுகிறதோ? நாம் இந்திரலோகத்தில் இல்லையென்பதை அசுரக்கூட்டங்கள் அறிந்தால், தேவர்களைக் கஷ்டப் படுத்துவார்களே! மனோவாக்குக் காயத்தினால் செய்த வினைக்குக் கட்டாயம் சிக்ஷை கிடைக்கும். இனி என்ன செய்யலாம்" என்று மனம் சோர்ந்து வருந்தினான். தேவர்களும் மகரிஷிகளும் தெய்வமாதர்களும் அமராபுரியில் தேவேந்திரனைக்காணாது வருந்தி,

தங்கள் குரு பிரகஸ்பதி பகவானுக்கு அறிவித்தார்கள். அவர் இந்திராணியை விசாரித்தார். அவள் திகைத்து நின்றாள். எல்லோரும் கங்கை நதிக்கரையினிடத்திலும், கற்பக நீழலிலும், பிரமனுலகத்திலும், விஷ்ணு உலகத்திலும், பாதாளத்திலும், ஆதிசேஷன் உலகத்திலும், சூர்யசந்த்ர மண்டலங்களிலும், தேடிப்பார்த்து உழன்றும் காணாதவர்களாய், கைலைமலைக்குச் சென்றார்கள். நாரதர் சிவபெருமானைப் பணிந்து துதித்துவரும் வழியில், தேவர்கள் முகவாட்டத்துடன் போவதைக் கண்டு விசாரிக்கு மளவில் சங்கதி தெரிந்து, நாரதர் தேவர்களை நோக்கி "தேவர்களே! தேவேந்திரன் கைலைமலையில் ஓர் குகையில் சிறையிடப்பட்டிருக்கின்றான். அவன் செய்த சிவாபாரதம் மிகப்பெரிது" எனக் கூறிச் சென்றார், தேவ குருவும் தேவர்களும் இதைக் கேட்டுப் பயந்து நடுங்கிச் சிவாபராதம் எப்படி நீங்கும். இந்திரனை எப்படிமீட்கலாமென்றுமயங்கி வருந்தினார்கள். பிரகஸ்பதி பகவானாகிய தேவகுரு சிறிது நேரம் சிந்தித்து, ஆ! என்னே கஷ்டம்! சிவனுக்கு நியமித்த வஸ்துக்களை அபகரித்தாலே பல்லூழிகாலம் கடும் நரகத்துக்காளாய்ப் பல்கோடி தாழ்ந்த ஜென்மம் எடுக்கவேண்டுமென்று வேதம் விதித்திருக்க, சிவபெருமானை நேரே எதிர்த்த அபராதத்துக்கு மீட்சி என்ன இருக்கிறது? ஆயிரங் கண்ணிருந்தும் இந்திரனுக்கு ஆராயுந்தன்மை இல்லாது போய்விட்டதே? சிவபெருமான் மாறுவேடங் கொண்டிருந்தாலும் அறிவினால் அறியச் சக்தியில்லையா? காலம் கெடுதி. மதியை மயக்கினபோலும்; இனி என்ன செய்யலாம். யோசிப்

பதில் ஆலஸ்யமுண்டாகுமே தவிர பலன் இராது. தெய்வலோகத்தில் இந்திரன் இல்லையென்றால் தேவர்களையும் முனிவர்களையும் வருத்த இதுதான் சமயமென்று அசுரர்கள் கொண்டாட்டமடைவார்கள். நல்லது; பக்தபராதீனர் பரமசிவம்; ஏழை பங்காளர்; நாமும் தேவர்களும் சிவபெருமான் சந்நிதானம் சென்று குறையிரந்து கேட்போம்" என மனம் திடங்கொண்டு, தேவகுருவுடன் தேவர்களும் முனிவர்களும் கைலயங்கிரிக்குச் சென்று, சிவபெருமானை வணங்கித் தொழுது, ஆநந்தக் கண்ணீர் சொரிய நமஸ்கரித்து, "எமது ஐயனே! தேவதேவோத்தமா! தேவதா சாரூபௌமா! இறையவனே! சிருட்டிமுதல் இந்நாள்பரியந்தம் குறைகளைச் செய்வது எங்கள் குணமென அறிந்தோம்; அக்குறைகளை க்ஷமிப்பது தேவரீரது சாந்தகுணமென உணர்ந்தோம். எங்களுக்குத் தாயும் நீ, தந்தையும் நீ, அருளும் நீ, பொருளும் நீ, உருவம் நீ, அருவம் நீ, செல்வம் நீ, வறுமை நீ, பெரிது நீ, சிறிது நீ, இன்பம் நீ, துன்பம் நீ, கோபம் நீ, சாந்தம் நீ, பொய்யும் நீ, மெய்யும் நீ, மேன்மை நீ, தாழ்மை நீ, உள்ளும் நீ, புறமும் நீ, வெம்மை நீ, தண்மை நீ, வையம் நீ, வாயு நீ, தேயு நீ, அண்டபகிரண்டமும் அடங்கவொரு நிறைவாகி எங்கும் நிறைகின்ற பரிபூரணானந்தமான உமது புகழை எடுத்துரைக்க ஏழையேங்களால் முடியுமோ? பரமபதீ! பார்வதி சமேதா! தேவர்க்கதிபதியாகிய இந்த்ரன் அறியாமையாற் செய்த பிழையை மன்னிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். இறையவன் மனம் இரங்கி, சிறையில் கிடக்கும் இந்த்ரனை அழைத்துக்கொண்டு

வரும்படிக் கட்டளையிட்டார். ஏவலாளிகள் இந்த்ரனை சிவசந்நிதானத்திற் கொண்டு வந்து நிறுத்தினார்கள். இந்த்ரன் தன் குற்றத்தை வாய் விட்டுச் சொல்ல வகையறியாமல், தனக்கு நேரிட்ட துன்பத்தை நினைத்து, முகவாட்டத்துடன் கவிழ்ந்து கொண்டு, அழுத கண்ணும் சிந்திய மூக்குமாக வணங்கி நின்றான். ஏழை பங்காளராகிய பரமசிவம் கிருபைகூர்ந்து, அமராபதிக் கரசைப் பார்த்து, "நீ வேதகிரி யென்னும் ஸ்தலத்துக்குச் சென்று, நம்மை ஆகம விதிப்படி பூஜிப்பையானால், சிவாபராதத்தால் நேர்ந்த துன்பம் நீங்கிச்சுகம் அடைவாய்" என்று கட்டளை யிட்டார். இந்திரன் பிரகஸ்பதி பகவானுடன் வேதகிரி க்ஷேத்திரத்தினிடத்திற் சென்று, இறையவனைப் பூஜை செய்து, தன்னுடைய குற்றங்கள் நீங்கப் பெற்று, விண்ணுலகஞ் சென்றான். அந்தக் கால முதல் இதற்கு இந்த்ரபுரி என்று பெயர் வழங்கிவருகிறதுடன் அவர் ஸ்நாநம் செய்து வந்த தீர்த்தத்துக்கு * இந்திர தீர்த்தமாகும் என்று அஷ்ட வசுக்களுக்கு மார்க்கண்டேய முனிவர் சொன்னதாக, சூதர் சௌநகாதிகளுக்குச் சொல்ல, முனிவர்கள் சந்தோஷக்கடலுண் மூழ்கினார்கள்.

## 12. ஸ்ரீ மஹாவிஷ்ணு சாப விமோசனம்.

சௌனகாதி தவ சிரேட்டர்களே! மார்க்கண்டேய மஹா முனிவர் அஷ்டவசுக்களுக்கு இந்திரன் தன் சிவா

* 12-வருஷத்துக்கு ஒரு தரம் (இக்காலத்தும்) வேதகிரிக்கு வந்து இந்திரன் பூஜிப்பதாகவும், அப்பூஜையே இடி அபிஷேகம் என்றும் . சொல்லுகிறார்கள். இந்திரதீர்த்தம் திருமலைக்குக் கீழ்பாகம் நால்வர் கோயிலுக் கருகாமையி லிருக்கிறது.

பராதத்தை ஸ்ரீ வேதகிரியை வலம் வந்து சிவபெருமானைப் பூஜித்து நீக்கிக் கொண்டார் என்று சொல்லி, ஸ்ரீ மஹா விஷ்ணுவின் சாபத்தையும் இவ்வேதகிரி நீக்கியருளிற்று என்று சொன்னதை சூதர் சௌநகாதி முனிவர்களுக்குச் சொல்லுகிறார்.

ஒரு காலத்தில் தேவர்களையும் முனிவர்களையும் ரிஷிகளையும் அசுரக்கூட்டங்கள் கஷ்டப்படுத்தி வந்தார்கள். அவர்கள் ஒன்றுகூடி இந்திரனிடம் வந்து முறையிட, அவ்விந்திரன் தேவர்களுடன் லக்ஷ்மி நேசனாகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவிடம் வந்து, "ஐயனே! எங்கள் இறையவனே! வைகுந்தவாசா! அபயம்! அபயம்!! அசுரர்கள் எங்களைத் தொந்தரவு செய்கிறார்கள்; அவர்களை வெல்ல எங்களுக்குச் சக்தியில்லை. எங்களை ரக்ஷிக்கவேண்டும்; பிரபோ! நாங்கள் எல்லோரும் உம்மிடம் அடைக்கலமானோம்" என்று வணங்கினார்கள். துளசிமாலையணிந்த திருமாலானவர், இந்திராதி தேவர்களுக்கு அபயாஸ்தம் கொடுத்து, அசுரக்கூட்டங்களை அழிப்பதற்குச் சக்கராயுதம் ஏந்தி, அஷ்டகுல பர்வதங்களிலும் அஷ்டதிக்குகளிலும் சப்த சமுத்திரங்களிலும் மற்றுமுள்ள இடங்களிலுமுள்ள அசுரர்களைத் தேடிப்பிடித்துக் கொலைசெய்தார். சில அசுரர்கள் பரந்த காட்டின்கண் பிருகு மஹரிஷியின் ஆசிரமத்தில், அவர் பத்தினியாருடைய இரண்டு பாதங்களையும் பிடித்துக்கொண்டு அடைக்கலம் புகுந்தார்கள். இந்த ரிஷி பத்தினியானவள் அடைக்கலம் புகுந்த அசுரர்களைத் தன்னாஸ்ரமத்தில் ஒளித்து, அவர்களைக் காக்கும் பொருட்டு, திருமால் உள்ளே நுழையாதபடி, வாயலில்

ஒரு சட்டுவத்தைக் கையிற் பிடித்துக்கொண்டு அஞ்சாமல் நின்றிருந்தாள். திருமால் கோபாவேசத்துடன் கண்களில் தீப்பொறி பறக்க, உதடுகள் துடிக்க, சக்கராயுதத்துடன் ரிஷி பத்தினியார் எதிரில்வந்து, "அம்மணீ! சற்றே விலகுங்கள். அசுரர்களைக் கொலை செய்ய வேண்டும்" என்று கூற, அந்தம்மாள் "விஷ்ணுவே! அடைக்கலம் புகுந்தவர்களைக் காட்டிக்கொடுப்பது தருமமுமல்ல நீதியுமல்ல" என்றாள். வைகுந்தம் வந்த ரிஷி மாதினை நோக்கி "ஆம்! வாஸ்தவந்தான். தேவர்களை இம்சிக்கிறவர்களையும், பிராமணர்களின் தவங்களை அழிக்கிறவர்களையும், யாகங்களைக் கெடுதி செய்கிறவர்களையும், கொலை செய்யாமல் விட்டுவிடுதல் நீதியாமா? அப்படிப்பட்ட அசுரர்களை ஒளித்துவைத்துக்கொண்டு அவர்களுக்குத் துணை செய்வது தருமமாமா? இது தங்களுக்கு ஒழுங்கல்ல" என்று நகைத்துக் கோபித்துத் தன் சக்கரத்தை விட்டார். சிவபெருமான் பிரயோகித்த பாணத்தினால் திரிபுரத்தவர்கள் இறந்ததுபோல, விஷ்ணுவின் சக்கரத்தினால் அசுரர்கள் மாண்டார்கள். ரிஷி பத்தினியும் சாம்பரானார். வெளியே போயிருந்த பிருகுமுனிவர் வந்து, தன் ஆசிரமத்தில் பத்தினியைக் காணாமல் பரிதபித்து, உற்று நோக்கி, "ஆ! ஆ! விஷ்ணு சக்கரத்தினால் தன் மனைவியும் மாண்டாளென்றறிந்து, அப்பத்தினியிடமிருந்த மிக்க அன்பினால், அவள் எலும்புகளைப் பார்த்துப் பார்த்து, யமதருமராஜனுக்குண்டாகும் கோபம் போல் பிருகுமுனிவருக்குக் கோபம் அதிகரித்து, மனம் நொந்து, இந்தமாயவன் பின் வருவதை நினைக்கின்றானில்லை. பெண் கொலை பொல்லாதென்

பதையும் உணர்ந்தானில்லை, யான் தவசி என்று எண்ணி ஞனுமில்லை. தேவலோகத்தையும் பூலோகத்தையும் காத்து, உடலையும் உயிரையும் ரக்ஷிக்கின்ற இம்மாயோனுக்கு யானும் என்மனைவியும் அயலானோம். அடைக்கலமாக வந்தவர்களைக் காக்காமல் விட்டு விடுதல் தருமம்போலும்! விடாமற் காப்பவர்களைக் கொலை செய்வது நீதிபோலும்! சீ சீ! என்னே கஷ்டம்!" என்று எதிரிலிருக்கும் விஷ்ணுவை நெருப்புப் பொறி பறக்கப் பார்த்து "பெரியோனே! உமது செய்கை மிக நன்றாயிருக்கிறது. உம்மைத் தான் ரக்ஷிக்கும் கர்த்தா என்று சொல்லவேண்டும்; ஆ! ஆ! கொடிது கொடிது மஹா கொடிது" என்று மனம் புண்ணாகி, "திருமாலே! என் மனைவியைக் கொன்று என் மனதுக்கு வருத்தத்தை விளைவித்தனை. ஆதலால் நீ பூவுலகத்தில் யோனித்துவாராவாக பத்து அவதாரமெடுத்து, அந்த பத்தில் * ஒரு அவதாரத்தில், உன்பதியை விட்டு, பதினலு வருஷம் காட்டில் மரவுரி உடுத்து, பலவித கஷ்டங்கள் அடைந்து, உன் மனைவியை அசுரன் கையில் அகப்படவிடுத்து, என்னைப்போல் உன் அறிவு மயங்கி, அலையக்கடவாய்" என்று சபித்தார் பிருகு முனிவர். மாயவன் இச்சாபத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுப் பயந்து "ஐயோ! நாம் தேவர்களுக்குச் சகாயம் செய்யப்போய் நமக்கு இப்பாவம் சம்பவித்தது. இதுவும் நமக்கு ஏற்பட்ட பிராரத்த கருமம். வினை ஒருவரையும் விடாது" என்று

---

* இராமாவதாரம்; ஸ்ரீராமர் பதினன்கு வருஷம் காட்டில் வசித்ததும், தன் பத்தினியாகிய சீதையை இராவணேஸ்வரன் அபகரித்துப்போனதும் ஸ்ரீமத் ராமாயணக் கதை.

சிந்தித்து, முனிவரைப் பார்த்து, "தபசியே! உமது மனைவியை எழுப்பித்தருகின்றேன். என் பிழையை மன்னிக்கவேண்டும் ஐயா" என்று சரணஞ் செய்து வணங்கி, தன் காற் பெருவிரலினுல் பூமியை ஊன்றினுர். கங்கை பாதாளத்தினின்றும் பொங்கி வந்தது. அந்த பாதாள கங்காதீர்த்தத்தை ரிஷிபத்தினியின் எலும்புகளின் மேல் தெளித்தார். ரிஷி பத்தினி உயிர் பெற்றெழுந்து வந்தாள். பிருகு மஹரிஷி தன் பத்தினியைக் கண்டு சந்தோஷித்து, வைகுந்தனைப் பார்த்து, "நீ அண்டங்களை உண்டும் உமிழ்ந்தும் உழுதும் அளந்தும் காப்பாற்றுவாய். உன் மாயத்திறத்தை அறிய வல்லார் யார்? உன் மகிமையை என்னென்று சொல்லுவேன். என் பத்தினியை எழுப்பியது தேவர்களையும் தர்ம நெறிகளையும் காக்க விரும்பிய செய்கை என்பது உண்மைதான். என் சாபத்தினுல் உன் பத்தினியை நீ விட்டு விலகினுலும், பின்பு அரக்கர்களைக்கொன்று உன் தேவியை மீட்டுச் சுகமாக ராஜ்ய பட்டாபிஷேகத்துடன் வாழக்கடவை. என் மனைவியைக் கொன்ற பெண் கொலை இலகுவில் விடாது. என் சாபமும் வீணுகாது. அப்பழி நீங்கு நிமித்தம் ஸ்ரீ வேதகிரிக்குச் சென்று, சிவபெருமானைப் பூஜித்து, உன் பாபத்தை ஒழிக்க" என்று ஆசிர்வதித்து அனுப்பினுர். அவ்விதமே மஹாவிஷ்ணு வேதகிரித்தலத்தை அடைந்து, சிவபிரானை வேதாகம விதிப்படி ஆயிர நாமங்களைச் சொல்லிப் "பரமசிவா! பக்தர்கள் நேசா! பார்வதீ பாகா! தங்கள் கிருபா விலாசத்தினுல் உலகங்களை ரக்ஷித்து வருகின்றேன். அன்றி, உம்மை க்ஷணப்போதே

னும் உள்ளன்போடு தியானித்து வணங்கினேனல்லன். பாசபந்தமான (1) இருவினைகள் ஒழியும் நாள் அநுக்கிரஹிக்கவேண்டும்" என்று பூசனை செய்து, பெண் பழி நீங்கிச் சுக சொரூபராய் வைகுந்தம் சேர்ந்தார். வசுக்களே! அத்தலத்துக்கு அது முதல் (2) திருநாராயணபுரம் என்று பெயர் வழங்கிவருகிறது. மற்றோர்காலத்தில் திரிபுரர்கள் சிவபூஜை, யக்கியம், தானம், தவம் முதலிய நற்காரியங்களில் சிறப்புற்று விளங்கி வருவதால், அவர்களைச் சாதாரணமாய் வெல்வது கூடாமை பற்றி, மஹா

---

(1) இருவினை—ஆன்மாக்கள் செய்யுந்தொழில் நல்வினை, தீவினைகள்; வினை முதற்காரணமாகிய உயிர், உலகு, உடல், கரணம், காலம், உறுபலம், நியதி, செய்தி, என்னும் ஏழு காரகங்களையுந் தனக்குத் துணையாகக்கொண்டு வினைகளை ஈட்டலும், நுகர்தலும் உடைத்தென்பது எல்லோரும் ஒப்பமுடிந்தமையே. கன்மம் சடமாகையால் தானுகச்சென்று ஆன்மாவைப் பொருந்தமாட்டாது. பாச சம்பந்தியாகிய ஆன்மா தானுகவே கன்மத்தைக் கூட்டிக்கொள்ளமாட்டாது. இவையிற்றைக் கூட்டி ஈசுரன் காரியப்படுத்துவன். இதற்குப் பிரமாணம்:—"உலகுடல் கரணம் காலமுறு பல நியதிசெய்தி, பலமவைகொண்டு கன்மம் பண்ணுவதுண்பதானு, னிலவிடாவிவை தான் சென்று நினைந்துயிர் நிறுத்திக்கொள்ளா, தலகிலாவறிவினுனை யணைத்திடு மருளினுலே." (சிவஞான சித்தியார்.)

(2) வேத நாராயணபுரம் என்னும் மற்றொரு பெயர் வழங்கி வருகிறதாம். இங்கு பெருமாள் கோயில். ஒன்று உண்டு எனவும், அது அழிந்து தற்போது தேரடிக்குளமாக இருக்கிறதெனவும் வதந்தி. இங்கு வைஷ்ணவர்களே கோயில் பரிசாரகத்தொழிலில் அமர்ந்துள்ளார்கள். "நாராயணன்" என்பதற்குச் சப்தார்த்தம் சேதன வர்க்கத்துக்குப் பிராப்யபூதன் என்க; "நாரா-ஜீவாத்மசமூகம்; அயந-மனிதர்கள் கூட்டத்துக்கு ஆதாரமான ஸ்தானமாயிருக்கும் பிரமம் எனப் பொருள் கொள்வார்கள் அறிஞர்கள்.

விஷ்ணு அவர்களுக்குப் பொய்யான துர்ப்போதனை களைச்செய்து, அவர்கள் தவ நெறியைக் கெடுத்தார். அந்த தோஷத்தையும் இவ்வேதகிரித் தலத்துக்கே வை குந்தன் வந்து, சிவபெருமானைப் பூஜித்து, அத்தோஷத் தையும் நீக்கிக்கொண்டார்; தவிர, கிருஷ்ணவதாரத்தில் கஞ்சன் உயிரை வாங்குவதற்கு வெண்ணெய் திருடிய தோஷத்தையும் இத்தலத்தில் வந்து தீர்த்துக்கொண் டார் என்றால், இவ்வேதகிரித்தலம் சர்வ பாபத்தையும் சர்வ தோஷத்தையும் நீக்க வல்லதென்பது வசுக்களே ! திடமாய் அறியுங்கள் ; மேலும் விஷ்ணுவானவர் திரி மூர்த்தி சொரூபத்தில் ஸ்ரீபரசிவத்திக்கு இடப்பாகத் தில் அமர்ந்தார் ; சர்வசங்கார காலத்தில் எலும்பு மாலையாகவும், மச்சாவதாரத்தில் ஓடாகவும், நரசிம் ஹாவதாரத்தில் தோலாகவும், திரிவிக்ரமாவதாரத்தில் நடு முதுகெலும்பாகிய தண்டாகவும், திரிபுரசங்கார காலத்தில் பாணமும் விடையாகவும் நின்றார். தவிர,

---

அகண்டபரிபூர்ண சச்சிதாநந்த சுயம்பிரகாச ப்ர்ம்மத்தினிட த்து கிளிஞ்சலில் வெள்ளி தோன்றினாற்போல் மூலப்பிரகிருதி என்மொரு சத்தி உண்டாயிற்று. அம்மூலப் பிரக்ருதி சத்வ, ரஜஸ், தமோகுணமாகிய முக்குணத்தோடு கூடியிருக்கும். இச்சத்துவகுணமாயையினிடத்து சத்துவத்தில் சத்துவம், சத் துவத்தில் ராசதம், சத்துவத்தில் தாமதம் என மூன்று குணங் கள் உண்டாகும். சத்துவத்தில் சத்துவம் மேற்பட்டுநிற்கும் போது அதில் பிரதிபிம்பித்த ஈஸ்வரன் ஜெகத்தை ரக்ஷித்த லால் விஷ்ணுவாயும், சத்துவத்தில் ராஜதம் மேம்பட்டு நிற்கும் போது ஜகத் சிருட்டி செய்தலால் பிர்ம்மாவாயும், சத்துவத்தில் தாமதம் மேம்பட்டு நிற்கும்போது ஜகத்சங்காரம் செய்தலால் ருத்ரனுயும் சொல்லப்படுதலால் மூன்று நாமம் படைத்த கடவுள் ஒன்றேயாகும். இவ்வுண்மையறியாச் சமயவாதிகள் வாதித்தல் வீணேயாகும் என்பார் பெரியோர்.

சிவபெருமானை ஆயிரம் புஷ்பங்களால் அருச்சனை செய்யும்போது ஒரு புஷ்பங்குறைய, அப்புஷ்பத்துக்குப் பதிலாகத்தன் கண்ணைப்பெயர்த்து அர்ச்சித்தாரென்றால் விஷ்ணுவின் பரமபக்திக்கு யாது பெருமை சொல்லலாம் என்று மார்க்கண்டேய முநிவர் சொன்னதாக, சவுனகாதிகளுக்குச் சூதர் சொல்ல, முநிவர்கள் மகிழ்ந்து ஆநந்தித்தார்கள்.

## 13. ப்ர்ம்மா தவஞ் செய்து பூஜித்தது.

அன்னவாகனத்தையுடைய ப்ர்ம்ம தேவரானவர் பாரதி, சாவித்ரி என்னும் இரண்டு மனைவியர்களோடு தனது சிருட்டித்தொழிலை நடாத்தி வந்தார். ஓர் காலத்தில் அவ்விரு மனைவியர்களுள் சாவித்ரியிடத்து அன்பில்லாமல், அவளைவிட்டுப் பாரதியிடத்து அன்பும் பிரியமுங் கொண்டார். சாவித்ரி மனம் வெறுத்துத் தன் நாயகனைப் பார்த்து, வேதங்கள் உபநிஷத்துக்கள் முதலிய உன்னை விட்டு நீங்கக்கடவதென்று சாபமிட்டு, சப்த முநிவர்கள் வசிக்கும் ஆசிரமத்துக்குச் சென்று, அங்கு பரமசிவத்தை நோக்கித் தவஞ் செய்து கொண்டிருந்தாள். வேதங்களும் உபநிடதங்களும் பிர்ம்மாவை விட்டு அக்கணமே நீங்கியதும், தீபமானது அழுக்குப் படிந்தாற்போல் பிர்ம்மாவின் திருமேனி ஒளி மழுங்கிற்று; மனம் கலக்கம் அடைந்தது. அறிவு குறுகிற்று ; தொழிற் கிரமம் பேதப்பட்டது. அந்நேரத்தில் திருமால் செவியிடத்துண்டான மதுகயிடவர் என்னும் இரண்டு அரக்கர்கள் ப்ர்ம்மாவை வருத்தத் தலைப்பட்

டார்கள். ப்ர்ம்மா அவர்களை வெல்லச் சக்தியில்லா மல் வருந்தி, அவர்கள் படைக்குத் தோற்று நின்றார். என் செய்வார் பாபம். அந்தோ பரிதாபம்! "ஆ! ஆ! பாரதியிடம் காமத்தீயினால் அன்பு செலுத்தி, புத்தி மயங்கி, சாவித்ரியை நீக்கினோம்; அவள் சாபத்தினால் செல்வம் இழந்தோம்; சரீரம் வேறானோம்; அரக்கர் படைக்குப் பயந்தோம்" என்று மனம்புழுங்கி, பாற்கட லில் ஆலிலைமேற் பள்ளிகொண்டு யோக நித்திரை செய் யும் முகுந்தனிடம் சென்று, வந்தனை வழிபாடுகள் செ ய்து, தோத்திரித்து "ஐயனே! தங்கள் செவியினிடத் துண்டான மது கயிடவர் என்னும்அரக்கர்களால் நான் படும்பாடு சொல்லத்தரமல்ல. என்னை ரக்ஷிக்கவேண்டிய பாரம் உங்களுடையதே" என்று ஏங்கி வருந்தி நின் றான் பிரமன். இதைக்கண்ட முகுந்தன் மனமிரங்கிக் கோதண்டம் என்னும் வில்லுடன் அவ்வரக்கர்களை எதி ர்த்து, ஐயாயிரம் வருஷம் போர் செய்து அவர்களைக் கொன்று, ப்ர்ம்மாவை நோக்கி, "அப்பனே! உன்னிடம் எதிர்த்த மது கயிடவர் அழிந்தார்கள். இனி பயம் வேண்டாம். உன்னை எக்காலும் பிரியாத உன் மனைவி சாவித்திரி உன்னைப் பிரிந்தமையால் இத்துன்பம் உன க்கு நேரிட்டது. அவளிட்ட சாபத்தால் வேதங்களும் உபநிடதங்களும் உன்னைவிட்டு நீங்கின; சரீரம் இளைத் தது; முகம் வாடிற்று; மனம் ஏக்கமடைந்தது; சிருட் டித் தொழிலின் ஆற்றல் குறைந்தது; அந்தச் சாவித்திரி இப்போது எங்கிருக்கின்றாள்" என்று கேட்கவும், ப்ர்ம்மா "ஐயனே! பாரதி என்னும் மனைவியிடம் நான் கொண்ட காதற் பெருக்கினால் சாவித்ரி என்னை

விட்டுப்பிரிய நேர்ந்ததும், இவள் என்னைக் கோபித்து வேதோப நிடதங்கள் என்னை விட்டுப் பிரியும்படிச் சாபம்கொடுத்ததும் வாஸ்தவமே. தற்போது அவள் * சப்த முநிவர்கள் ஆசிரமத்தில் தவஞ் செய்கிறாள். பிரபுவே! புத்ரர்களுக்கு அறிவில்லாமையினால் நேரும் குறைகளைத் தாய் தந்தையர்கள் நீக்குதல் கடமையல்லவா? தேவரீர் ஏழை படுந்துயர்க்கிரங்கி, சாவித்ரியை என்னிடம் சேரும்படிச் செய்யவேண்டும்" என்று கை குவித்து வணங்கினார். மஹாவிஷ்ணு ப்ர்ம்மாவை நோக்கி "நான் சொல்வதைக்கேள். உமக்கும் நமக்கும் மேலான கடவுள் தேவ தேவோத்தமராகிய பரமசிவம் இருக்கிறார். அவரது அநுக்ரகம் கிடைக்கும் பக்ஷத்தில் சர்வகாரியமும் சுலபமாக முடியும். அப்பெருமான் விருப்பமாய் வீற்றிருக்கும் தலங்களுள் மிகச் சிறந்ததும், சர்வ பாப சர்வதோஷங்களை நீக்கவல்லதும், நமது மனக்கவலைகளை யெல்லாம் வேரோடழிக்க வல்லதுமான உருத்திரகோடித்தல மென்னும் வேதகிரி க்ஷேத்திரம் ஒன்றுண்டு. அவ்விடத்தில் பரமசிவம் நந்தி யெம்பெருமான் உமாதேவி இரண்டு புத்ரர்களுடன் சதா வீற்றிருக்கிறார். நீ அத்தலத்துக்குப் போய் விதிப்படிப் பெருமானைப் பூஜித்து, அருச்சித்து, தொழுது வருவீரானால் எது கேட்டாலும் கொடுக்க வல்ல அப் பரமசிவம் உனது மனத்துயரை நீக்கி யருளுவார்" என்று சொன்னவுடன், ப்ர்ம்மதேவர் வேதகிரிக்கு வந்து, பெருமானைப் பூஜித்து, "ஆராவமுதே! அளவி

*சப்தமுநிவர்கள் :—அத்திரி, ஆங்கிரசர், கௌதமர், ஜமதக்நி, பாரத்துவாசர், வசிட்டர், விஸ்வாமித்திரர்.

லாப் பெம்மானே! ஓயாதார் உள்ளத் தொளிக்கும் ஒளி யானே! இன்பமும் துன்பமும் இல்லானே! அன்பருக் கன்பனே! என் ஐயனே! நின்னையன்றி உலகம் என்ற பொருள் வேறு ஒன்று உண்டோ? எல்லாம் தேவரீர் மயமே; நின்செய்கை நின்திறம் நின் பெருமை அடி யேங்களால் வகுத்துரைக்க முடியுமோ? பரமசிவா! ஏழையடியேற்கிரங்கி என் கவலை தீர்த்தருளவேண்டு" மென்று பிரார்த்திக்க, சிவ பெருமான் கருணைகூர்ந்து, இழந்த சாவித்ரி என்னும் மனைவியையும், தன்னை விட்டு நீங்கிய வேதோபநிடதங்களையும் அநுக்கிரகித்து, பிரமன் மனக்குறைகளை யெல்லாம் நீக்கி ஆசீர்வதித் தார். ப்ர்ம்மா மனமகிழ்ந்து, தன் மனைவி சாவித்ரியுடன் சத்தியலோகம் சென்றார். அது காரணத்தினால் அன்று முதல் இத்தலம் "பிரமபுரி" எனப்பெயர் பெற்று விளங்குகின்றதென்று வசுக்கள் எண்மருக்கும் மார்க் கண்டேய முனிவர் சொல்லியதாகச் சூதர் சவுனகாதி களுக்குச் சொல்லவும், தவச்சிரேட்டர்கள் ஆநந்தித்து, சுவாமீ! பிர்ம்மாவின் வயதுக்கும் மனுஷ்யாளுடைய வயதுக்கு முள்ள வித்தியாசத்தைச் சிறிது தெளிவு படுத்திச் சொல்லவேண்டுமாய்க் கேட்கச் சூதர் சொல்லுகிறார்.

தவமுனிவர்களே! மனுஷ்யாள் வயதுக்கும் தேவர் கள் வயதுக்கும் ரொம்ப வித்தியாசமுண்டு; விபர மாய்ச் சொல்லுகின்றேன். கவனமாய்க் கேளுங்கள் என்று சிவபெருமானைத் தியானித்துச் சொல்லுகிறார் சூதர்.

நிமிஷம் பதினைந்து கொண்டது ஒரு காஷ்டை;

காஷ்டை முப்பது கொண்டது ஒரு கலை; கலை முப்பது கொண்டது ஒரு முகூர்த்தம்; முகூர்த்தமென்பது இரண்டு நாழிகை; முகூர்த்தம் முப்பது கொண்டது பகலும் இரவும் கூடிய ஒரு நாள்; நாள் பதினைந்து கொண்டது ஒரு பக்ஷம்; பக்ஷம் இரண்டு கொண்டது ஒரு மாசம்; மாசம் ஆறு கொண்டது ஒரு அயநம்; அயநம் இரண்டு கொண்டது ஒரு வருஷம்; இம்மனுஷ வருஷம் ஒன்று கொண்டது தேவர்களுக்கு ஒரு நாள்; தேவர்களுக்கு உத்தராயணம் பகலும், தக்ஷிணாயனம் இராத்திரியுமாகும்; மனுஷ வருஷம் முந்நூற்றறுபது கொண்டது தேவர்களுக்கு ஒரு வருஷம்; தேவ வருஷம் பன்னீராயிரங் கொண்டது ஒரு சதுர்யுகம்.

| யுகம். | | தேவ வருஷம். | மனுஷ வருஷம். |
|---|---|---|---|
| கிரேதாயுகம் | ... | 4,800 | 17,28000 |
| திரேதாயுகம் | ... | 3,600 | 12,96000 |
| துவாபரயுகம் | ... | 2,400 | 8,64000 |
| கலியுகம் | ... | 1,200 | 4,32000 |
| சதுர்யுகம் | ... | 12,000 | 4,320,000 |

இப்படிச் சதுர்யுகம் ஆயிரந் திரும்பினால் பிரமாவுக்கு ஒரு பகலாகும்; பின்னும் ஆயிரந் திரும்பினால் பிரமாவுக்கு ஒரு இராத்திரியாகும்; ஆகவே இரண்டாயிரம் சதுர்யுகங்கொண்டது பிரமாவுக்கு ஒரு நாள். இந்த நாள் முப்பது கொண்டது ஒரு மாசம்; இந்த மாசம் பன்னிரண்டு கொண்டது ஒரு வருஷம்; இந்த வருஷம் நூறானால் பிரம்மாவுக்கு ஆயுசு முடியும்; இவ்வியல்புடைய பிரமாக்கள் எண்ணில்லாதவர்கள் பிறந்து இறந்தார்கள். பிரமாவினுடைய ஆயுசு பரம்

எனப் பெயர்பெறும். அதிற் பாதியாகிய ஐம்பது வருஷம் பரார்த்தமென்று சொல்லப்படும்.

பிரமாவினுடைய பகலாகிய ஆயிரஞ் சதுர்யுகத்திலே பதினான்கு மநுக்கள் அதிகாரம் பண்ணுவார்கள். அவர்கள் பெயர் சுவாயம்புவர், சுவாரோசிஷர், ஔத்தமர், தாமசர், ரைவதர், சாக்ஷுஷர், வைவஸ்வதர், சூரிய சாவர்ணி, தக்ஷசாவர்ணி, பிரமசாவர்ணி, தருமசாவர்ணி, ருத்திர சாவர்ணி, ரோச்சியர், பாவியர் எனப்படுவார்கள். ஒவ்வொரு மநுவந்தரத்துக்கு எழுபத்தொரு சதுர்யுகங்கள், தேவமானத்திலே எட்டு லக்ஷத்து ஐம்பத்தீராயிர வருஷங்களாகும். மனுஷியமானத்திலே முப்பது கோடியே அறுபத்தேழு லக்ஷத்து இருபதினாயிர வருஷங்களாகும். ஒரு மநுவந்தரத்துக்கு எழுபத்தொரு சதுர்யுகமாகப் பதினான்கு மநுவந்தரத்துக்கும் தொளாயிரத்துத் தொண்ணூற்று நான்கு சதுர்யுகமாகும். * பிர்மாவின் பகலிலே மிஞ்சிய சதுர்யுகம் ஆறு.

---

* தற்காலத்திலிருக்கிற பிரமாவுக்கு முதற் பரார்த்தமாகிய ஐம்பது வயதும் சென்றன. இப்போது நடப்பது இரண்டாம் பரார்த்தத்தில் முதல் வருஷத்து முதல் மாசத்து முதல் தினம். இது சுவேதவராக கற்பம் எனப்படும். பிரளய சலத்தில் மூழ்கியிருந்த பூமியை விஷ்ணு வெள்ளைப் பன்றி உருவங்கொண்டு, மேலே எடுத்த கற்பமாதலின் சுவேதவராக கற்பம் என்று சொல்வார்கள். இத்தினத்திலே சுவாயம்புவமநு, சுவாரோசிஷமநு, ஔத்தமமநு, தாமசமநு, ரைவதமநு, சாக்ஷுஷமநு என்னும் ஆறு மநுக்கள் இறந்து போனார்கள். இப்போது ஏழாவது மநுவாகிய வைவஸ்வத மநுவினுடைய காலம் நடக்கிறது. இவருடைய காலத்திலே இருபத்தேழு சதுர்யுகங்கள் சென்றன. இப்பொழுது இருபத்தெட்டாஞ் சதுர்யுகத்துக் கலியுகம் நடக்கின்றது.

இப்படிப் பதினான்கு மநுவந்தரங்களானால், பிரமாவுக்கு ஒரு பகலாம். இதன் முடிவிலே தினப்பிரளயம் உண்டாகும். அப்பொழுது பிரமா அப்பகலளவினதாகிய இராத்திரியிலே யோகநித்திரை செய்வர். இப்படி ஆயிரஞ் சதுர்யுக அளவையையுடைய இராத்திரி கழிந்தபின் பிரமா திரும்பியும் படைத்தற்றொழில் செய்வர். பிரமாவுக்கு ஒரு பகல் ஒரு கற்பம் எனப்படும். கற்பமாவது சிருட்டிமுதல் பிரளயமிறுதியாகிய காலம். ஒரு கற்பத்துக்கு மனுஷ வருஷம் நானூற்று முப்பத்திரண்டு கோடி (4,320,000,000).

பிரமாவின் ஒரு பகலிலே பதினான்கு இந்திரர்கள் இறப்பார்கள். ஒரு மாசத்திலே நானூற்றிருபது இந்திரர்களும், ஒரு வருஷத்தில் ஐயாயிரத்து நாற்பது இந்திரர்களும் இறப்பார்கள். பிரமாவின் ஆயுசுள்ளே ஐந்து லக்ஷத்து நாற்பதினாயிரம் * இந்திரர்கள் இறப்பார்கள், முனிவர்களே! பிரமாவின் ஆயுட்பிரமாணத்துக்கும் மனுஷிய ஆயுட்பிரமாணத்துக்குமுள்ள வித்தியாசங்களை நன்கு அறியுங்கள் என்று மேலே சொல்லத் தொடங்கினர் சூதர்.

## 14. அஷ்டவசுக்கள் சிவபூஜாவிதான மறிந்து சாப விமோசனமடைதல்.

சவுனகாதி த்வசிரேட்டர்களே! மார்க்கண்டேயர் அஷ்டவசுக்களுக்கு இந்திரன், விஷ்ணு, பிர்மா இவர்

* "நூறுகோடி பிரமர்கள் நொங்கினும்
ஆறுகோடி நாரணர் அங்ஙனே
வீறுகங்கை மணல் எண்ணில் இந்திரர்
ஈறிலாதவர் ஈசன் ஒருவனே." என்பார் பெரியோர்.

களது கஷ்டம் நீங்கிய விதானங்களைச் சொல்லி, மேல் சிவபூஜா கிரமங்களையும் அதனை அநுட்டிக்கும் மார்க்கங்களையும் போதிக்க, அவர்கள் சிவபூஜைகளை வேதாகமப்படி செய்து, தங்கள் சாபந்தீர்ந்து, தங்கள் பதவியை அடைந்தார்கள் என்பதைச் சொல்லுகிறார் என்று சூதபுராணிகர் சவுனகாதிகளுக்குச் சொல்லுகிறார்.

மார்க்கண்டேயர் அஷ்டவசுக்களுக்குச் சொல்லுகிறார். வசுக்களே! இந்திரன் விஷ்ணு பிர்ம்மா ஸ்ரீ வேதகிரியைப் பூஜித்துத் தத்தம் குறைகளை நீக்கிக்கொண்டு, தங்கள் பதவிகளிற் சேர்ந்தார்கள் என்பதைக் கேட்டீர்கள் அல்லவா? அதுபோல் உங்களுக்கு நேர்ந்துள்ள காமதேனுவின் சாபத்தைப் போக்கடிப்பதற்கு ஸ்ரீ வேதகிரித்தலமே உத்தமமானது. நீங்கள் அவ்விடத்துக்குச் சென்று, வேத கிரியை வலம் வந்து, ஸ்ரீ வேதகிரிப்பெருமானைப் பூஜிப்பீர்களானால், உங்களுக்கும் க்ஷேமம் உண்டாகும். உங்கள் சாபமும் நிவிர்த்தியாகும் என்று சொல்லிச் சிவபெருமானை வழிபடுதற்குரிய மார்க்கங்களை வேதாகம நூல்வழி போதித்து அநுக்கிரகிக்கிறார். சிவபெருமானைப் பூஜிப்பதற்குரிய விதிநிஷேதங்கள் வேத சிவாகமங்களில் விரிவாய்க் கூறியிருக்கிறது. வசுக்களே! கேளுங்கள். எல்லாவற்றுக்கும் முதனூலாகியவேதம், வேதாகமம் என்னும் [1] இரண்டினுள் சப்தரூபமாகிய வேதம் சர்வத்தையும்

[1] "வேதமோ டாகம மெய்யா மிறைவனூ
லோதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக
நாதனுரை யிவை நாடிலிரண் டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே." 1.

உலகினருக்குப் பொதுவாகச் சொல்லப் பட்டது. ஆகமம்-சித்தாந்தம். இது சிறப்பு நூலாகும். இதை இறைவன் வாக்கென்றுஞ் சொல்லுவார்கள். வேதாகமங்களில் விரித்துச் சொன்ன அர்த்தங்களை அறிவதற்கரிதாயினமை கொண்டு, சிவபெருமான் திருவருள் பெற்ற பெரியோரால் பிரித்துச் சுருக்கிச் சைவ சித்தாந்த சமய நூல் செய்யப்பட்டது. ஆயினும் இவ்விரண்டும் பெரியோர்க்குப் பேதமில்லை.

இவ்வேதாகமத்தில் பதி பசு பாச மார்க்க உண்மை விளக்கியிருக்கிறது. பதி-கர்த்தா ; பசு-ஜீவன் ; பாசம்-உடல். இம்மூன்றும், அது நீ யானய் என்னும் "தத்வமசி" வேத மஹா வாக்யார்த்தப்படி திரி பதார்த்த நிச்சய முணர்ந்து, தன்னைத்தான் உணர்தலே தத்துவ ஞானம்; கர்த்தா—தத்வாதீதர் என்பார் அறிஞர்.

பதி என்பது :—பரமசிவம் நித்ய சர்வ வியாபக சித்ரூப நிர்விகாரியாயும், மாயா சம்பந்தமில்லாதவனுயும், சைதன்ய சொரூபனுயும், எங்கும் பரிபூர்ணமாய் அழிவின்றி நிற்பவனுயும், ஞான ஸ்வரூபியாயும், மனோவாக்குக் கெட்டாதவனுயும், சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியத் தாண்டவம் நடித்து நிற்பவனுயும், சர்வான்மாக்களிடத்தும் வியாபித்து, உயிருக்குயிராயும் அறிவுக்கறி

"வேதநூல் சைவநூ லிரண்டே நூல்கள்
வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்த நூல்கள்
ஆதிநூ லாதியம லன்றருநூ லிரண்டும்
ஆரண நூல் பொதுச்சைவ மருஞ்சிறப்பு நூலாம்." 2.
(சிவஞான சித்தியார்.)

வாயும் நின்று, சர்வத்தையும் உள்ளே உணர்த்துபவனும், அருளே தாரகமாய் நின்று சுவானுபூதியாலறிவதன்றி மற்றவற்றாற் காணப்படாதவனும், தனக்குச் சமானமான முத்தியைக் கொடுப்பவனும், சந்நிதிமாத்திரத்தானே பிரபஞ்சம் ஜீவித் தொடுங்குவதாயும் விளங்கா நின்ற பதியாதிய பரமேஸ்வரன் ஒருவனே.*

அநாதிமுத்த சித்துருவாகிய பரமேஸ்வரன் ஒன்

* "சித்ரூப மாத்ம சொரூபம் திருக்கிரியா குணலக்ஷிதம், ஞானரூபஸ்ய தஸ்யாபி ஸ்வரூபம் த்ருக்ரியாத்மிகம், சைதன்யம் த்ருக்கிரியா ரூபத் தஸத்யாத்மநி சர்வதா, சர்வதச்ச யதோமுக தௌ ஸ்ரூயதே ஸர்வதோமுகம், அதாநாதி மலோபேதஸ் ஸக் வக் ருத் ஸர்வவித் ஷிவ." 1.

"உலகெலாமாகி வேறாயுடனுமா யொளியா யோங்கி
யலகிலா வுயிர்கட் கன்மத் தாணையி னமர்ந்து செல்லத்
தலைவனா யிவற்றின் றன்மைத் தனக்கெய்த லின்
றித்தானே. 2.

"நின்றனன் வேறாய்த்தன்னி னீங்கிடா நிலைமையாலே
பின்றிய வுணர்வுக் கெட்டாப் பெருமைய னறிவினுள்ளே
யென்றுநின் றிடுதலாலே யிவனவ னென்னலாமே." 3.

(சிவஞான சித்தியார்.)

"ஒன்றன்ற தொன்றே காண் ஒன்றே பதிபசுவாம்
ஒன்றென்ற நீ பாசத் தோடுளகா—னென்றின்று
லக்கரங்க ளின்றா மகரவுயி ரின்றேல்
இக்கிரமத் தென்னு மிருக்கு" 1.

"அரக்கொடு சேர்த்தி யணைத்தவக் கற்போ
லுருக்கியுடங் கியைந்து நின்று—பிரிப்பின்றித்
தானே யுலகாந் தமியே னுளம்புகுதல்
யானே யுலகென்ப னின்று." 2.

(சிவஞானபோதம்.)

"அகர முதலானை யணியாப்ப நூரானை
வினைப் பற்றறுப் பாரே." (திருஞான சம்பந்தர்.)

"அகர முதலெழுத்தாகி நின்றாய் சொல்லே."

(சுந்தரப் பெருமாணாயனார்.)

"அகர முதல வெழுத்தெல்லா மாதி பகவன்
முதற்றேயுலகு." (திருக்குறள்.)

றிலுந் தோய்வின்றித்தானே சுயம் பிரகாசனாய் நிற்குந் தன்னுண்மையிற் சிவம் என்றும், பஞ்ச கிருத்திய மாகிய ஐந்தொழில் செய்யுந் தன்மையிற் பதி என்றும், பிரபஞ்சமெல்லாந் தானேயாய் இவற்றுக்கு வேறுமாய் அவ்வாருயிர்களின் வழிநிற்குந் தன்மையிற் சத்தி யென்றும் பெயர் பெற்று விளங்குவன்.

ஞானமே யானபோது சிவமென்றும், ஞானம் கிரியை யாய் வியாபிக்கும்போது சத்தியென்றும், ஞானம் கிரியை இரண்டு மொத்து வியாபிக்கும்போது சதாசிவ மென்றும், ஞானம் குறைந்து, கிரியை மேலோங்கி, நிற்கும்போது மஹேஸ்வரன் என்றும், கிரியை குறை ந்து, ஞானம் மேலிட்டு வியாபிக்கும்போது சுத்த வித்தையென்றும் ஐவகையாகச் சொல்வார்கள்.

பசுவென்பது :—அநாதியே ஆணவமலம் என்னும் அஞ்ஞானத்தால், தனது இச்சா ஞானக்கிரியைகள் மறைப்புண்டு, பசுத்துவம் அடைந்தமையால், உடலின் வேறு உயிரெனுஞ் சீவனாகிய ஆன்மா, பசுவெனும் பெயர் பெற்றது. பசு என்னும் சத்தத்துக்கு அருத் தம் அஞ்ஞானம். ஆன்மா வென்றால் ஞானம். உயிர் செய்த கன்மத்தளவில் கர்த்தா பயன் அளிக்க அநுப விக்கும்; உயிர் கர்த்தாவாகாது; கர்த்தா உயிருமா காது. உயிர் கன்மத்துக்கீடாகிய சுகதுக்க போகங்க ளைப் புசித்து, ஜனன மரணங்களுக் கேதுவாய்ச் சாக் கிர சொப்பன சுழுத்தி துரியம் துரியாதீதமென்னும் அவத்தைகளைப் பொருந்தும். உண்மை * துரியாதீத மென்றும் சொல்வார்கள்.

---

* "உயிரெனப் படுவதிந்த உடலின் வேறுளதாயுற்றுச்
செயிருறு மிச்சாஞானச் செய்திக ளுடைய தாகிப்
பயில்வரு மின்பதுன்பப் பலன்களு நுகரும் பார்க்கிற்
றுயிலொடு மைந்தவத்தைப் படுமுண்மை துரியாதீதம்."
(சிவஞான சித்தியார்.)

பாசமென்பது:—உடல் ஆன்மாக்களுடைய விபுத்வ சர்வஞ்ஞதையை அநாதியே வந்தித்திருக்கும் ஆணவ மலம், கன்மம் காமியம் மாயையாகிய இவைகளைப் [1] பாசமெனப்படும். அது ஒன்றாயும், அளவிறந்த சத்திக ளாயும் இருண்ட மயக்கத்தையுடையதாயும், செம் பிற் களிம்புபோல் அழியாத பிரதான மலமாய் ஆன் மாக்களுடைய இச்சா ஞானக்கிரியைகள் எல்லாவற் றையும் மறைத்து நிற்கும். [2]

---

[1] "கட்டு முறுப்புங் கரணமுங் கொண்டுள்ள
மிட்டதொரு பேரழைக்க வென்னன்றாங்—கொட்டி
யவனுள்ளமா கில்லானுளமவனு மாட்டா
தவனுளமா யல்லனுமா மங்கு. (சிவஞான போதம்.)

"இருவினை யின்பதுன்பத் திவ் வுயிர் பிறந்திறந்து
வருவது போவதாகு மன்னிய வினைப் பயன்க
டருமரன் றரணியோடு தராபதி போலத்தாமே
மருவிடா வடிவுங்கன்மப் பலன்களு மறுமைக்கண்ணே."
(சிவஞான சித்தியார்.)

[2] "ஈசனது சத்திமல மூன்றினையு மேவுதலாற்,
பாசமெனும் பேரதற்குப் பாங்கு." (சைவக்குறள்.)

"மாயையின் காரியத்தை மாயேய மலமதென்று
மேயுமும் மலங்கடத்தந் தொழிலினை யியற்ற வேவுந்
தூயவன் றனதோர் சத்தி திரோதான கரிய தென்று
மாய்வரிம் மலங்களைந்து மணுக்களை யணைந்து நிற்கும்."
(சிவஞான சித்தியார்.)

"மோகமிக வுயிர்கடொறு முடனாய் நிற்கு மூலவாணவ
மொன்று முயங்கிநின்று, பாகமிக வுதவுதிரோ தாயி
யொன்று பகர்மாயை யொன்று படர்கன்மமொன்று,
தேகமுறு கரணமொடு புவனபோகச் செயலாரு மா
மாயைத் திரட்சியொன்றென், றாகமல மைந்தென்பர்."
(சிவஞான சித்தியார்.)

வசுக்களே! பதி பசு பாசங்களின் விளக்கத்தைச் சொல்லக் கேட்மீர்கள். பாசங்கள் ஒழிந்தாலன்றிப் பதியாகிய பரமேஸ்வரனை அறிய முடியாது. பாசங்களை நீக்கும் உபாயம் என்னெனில் அவயவங்களைக் காண்கிற * கண் தன்னைக் காணமாட்டாது. அந்தக் கரணங்கள் தாமல்லா விடத்துக்கும் அறிவாய் நிற்கினுந் தன்னை அறியமாட்டாது. அந்தக் கரணங்களைக் காரியப்படுத்தி நிற்கிற பிராண வாயுவும் தன்னைத்தான் காணமாட்டாது. கன்மத்துக் கீடாகச் சரீரத்தைப் பொருந்திச் சுகதுக்கங்களை அனுபவிக்கிற ஆன்மாவும் தன்னைக் காணமாட்டாது. ஆனால் அந்தச் சிவனை எப்படி அறியலாமெனில், எல்லாவற்றையும் அறியத்தக்க சிவன் பேதத்தில், இந்த ஆன்மாவுக்குத் தோன்றாமல் நின்று, முத்தியில் தன்னையுங்காட்டி, அந்த ஆன்மாவையுங்காட்டிச் சிவன் தன்னைக் காண்கைக்கு ஆன்மாவுக்குத் திருஷ்டியுமாய்க் கரணங்களால் அறியுமிடத்துத் தோன்றாமலும் நிற்பன். தனக்குப் பிராணனாய் நிற்கிற சிவனுடைய ஞானத்தினாலே தன்னிடத்திலே கண்டுகொண்டு, அவனுடைய சீர்பாதத்தைப் பொருந்தில் மயக்க விகற்பங்கள் பொருந்தாது.

தற்போதஞ் சீவியாமல் பரமேஸ்வரன் திருவடியிலே அந்த ஞானமே மயமாய் நின்று, நற்குணங்களாகச்

---

*"காட்டியிற் கண்ணே தனைக்காணக் கண்ணுக்குக்
காட்டாய உள்ளத்தைக் கண்காணக்—காட்டிய
உள்ளந்தனைக்காண உள்ளத்தின் கண்ணாய
கள்ளந்தான் உள்ளத்திற் காண்."
(சிவஞானபோதம்.)

சொல்லப்பட்ட [1] அட்டகுணம், எட்டுச் சித்திகளை [2] யும், பிரமபத வைகுண்டபத இந்திரபத முதலிய பதவிகளையும், வெறுத்துக் கீழு மேலுமாக, எங்கும்

[1] அட்டகுணம் :—நுண்மை, பெருமை, அளவு நொய்தாயிருத்தல், மிகவும் கனத்திருத்தல், விண்மிசைஏகல், பாரம் சேர்தல், வேண்டின உருவைக் கொள்ளல், எங்குந்தானேயாய் நிற்றல்.

[2] எட்டுச் சித்திகள்-அஷ்டமா சித்திகள் : அணிமா, மகிமா, லகிமா, கிரிமா, ஈசத்வம், வசித்வம், பிராப்தி, பிராகாம்யம் என எட்டு. இது தேக சித்தி ஐஸ்வர்யம், அந்தக்கரண சித்தி ஐஸ்வரியம் என இருவகை. தேக சித்தி ஐஸ்வர்யம்:—அணிமா, மகிமா, லகிமா என மூன்று. அணிமாவென்பது பரமாணுவிலும் சூக்குமமான தேகத்தை உடைத்தாயிருத்தல் ; மகிமா-தேகேந்திரியங்களின் வன்மையால் பிர்ம்மலோக பரியந்தம் வியாப்பியமாயிருத்தல் ; லகிமா-சேற்றிலும் ஜலத்திலும் அடி அமிழாமல், சரீரத்தோடு செல்லும் தேகத்தை உடைத்தா யிருத்தல் ; இந்த ஐஸ்வரியங்கள் மூன்றும் தூலதேகம் அழியாமல், நீடூழிகாலம் யவ்வன பருவத்தோடு, வைத்திருக்கவேண்டு மென்னும் இச்சையுடையோர் அனுட்டிக்கும் சாதனங்கள் : அந்தக்கரண சித்தி ஐஸ்வர்யம் :—பிராப்தி, பிராகாமியம், ஈசத்வம், கிரிமா, வசித்வம் என ஐந்து. பிராப்தி யென்பது மனதில் நினைத்த பதார்த்தங்கள் எல்லாம் தன்முன்னே வந்திருத்தல்; பிராகாம்யம் -ரூபமுள்ள ஸ்திரீகள் அநேகரை மனச்சங்கற்பத்தினுலுண்டாக்கி, எல்லாருடனும், ஏக காலத்தில் ரூபங்கொண்டு கூடியிருத்தல். ஈசத்வம்-ப்ர்ம்மாதி தேவர்களிடத்துத் தன்னுடைய ஆக்கினையைச் செலுத்துதல் ; கிரிமா-பர்வதத்திலும் பாரமாய் மஹாவாயுவினுலும் அசைக்க முடியாமலிருத்தல் ; வசித்வம்-சர்வ ஜனங்களையும் மாயையாகிய பிரகிருதியையும் வசீகரணம் பண்ணிக்கொண்டு சிருட்டி செய்தல்; இந்த ஐஸ்வரிய பேதமானது பூலோகத்து மேலாய், பிசாசலோக முதலாக உத்தரோத்தரம் துவித குணமாய் அறுபத்து நாலு அஞ்ஞான பேதமென்பார் பெரியோர்.

நிறைந்து நிற்கத்தக்க [1] ஆறு அத்துவாக்களின் வழி யடங்கலேயும் சுத்த அசத்திய மென்றறிந்து, அந்த ஞானமயமாய் நிற்க, சர்வமுந் தானாய் நிற்கும் முதல்வன் பக்தியையுமுண்டாக்கி, அப்பக்திவலேயிற் புகுந்திடுவன். அப்பெரிய பக்திவழியிற்றானுஞ் சென்று, சிவாநந்த போகத்தை அடையா நிற்பன் [2].

வசுக்களே! பதியாகிய பரமேஸ்வரனைத் தரிசித்து, மோக்ஷமடைய விரும்பினால், ஆன்மாவை அணுசம்பந்தமாக்கிய ஆணவமலம், ஆன்மாக்கள் அறிவை யியக்கும் மாயாமலம், ஆன்மாக்கள் தொழிலேச் செய்வதினாலுண்டாகிய கன்மமலம், மாயையின் காரியமாகிய கலே முதலிய தத்துவ சமுகங்களான மாயேய மலம், ஆன்மாவினுடையவும், சிவனுடையவும் தரிசனத்தை யாகவொட்டாமல் மறைக்கும் திரோதாயீ மலம், ஆகிய

[1] அத்துவாக்கள் ஆறு:—மந்த்ர, பத, வன்ன, புவன, தத்துவ, கலேகள் ஆறு. இவ்வாறுருப்புகளும் சிவனுக்குத்தேகம் என்ப; மந்திரம் பதினொன்று; பதம் எண்பத்தொன்று; வன்னம் ஐம்பத்தொன்று; புவனம் இருநூற்றிருபத்து நாலு; தேக தத்துவம் முப்பத்தாறு; கலேகள் ஐந்து; "வழுவிலாவழி யாறு மந்திரங்கள் பதங்கள் வன்னங்கள் புவனங் கடத்துவங்கள் கலேசத்தியின்கண் சத்திசிவன் கண்ணும்."

(சிவஞான சித்தியார்.)

[2] "குறிப்படியினின்றட்டகுண மெட்டுச் சித்திகோ
கனகன் முதல் வாழ்வுகுலவுபத மெல்லாம
வெறுத்து நெறியறுவகைமே லொடு கீழடங்க வெறும்
பொய்யென நினேந்திருக்க மேலொடு கீழில்லா
னிறுத்துவதோர் குணமில்லான்றன்னே யொருவர்க்கு
நினேப்பரியானென்று மிலான் நேர்பட வந்துள்ளே
பொறுப்பரிய பேரன்பை யருளியதன் வழியே புகுந்திடுவ
னெங்குமிலாப் போகத்தைப் புரிந்தே."

(சிவஞான சித்தியார்.)

[1]பஞ்சமலங்களைப் போக்கடிக்க வேண்டும். அர்த்தேஷணை, புத்திரேஷணை, லோகேஷணையாகிய [2]ஈஷணாத்ரயங்களை ஒழிக்கவேண்டும். ராகத் துவேஷ லோப மோக மத மாற்சரிய அகங்கார டம்பமாதி[3] துர்க்குணங்களை நீக்கவேண்டும். சிவ பக்தி அடியார் பக்தி குரு பக்திசெய்து, அன்பு அடக்கம் பொறுமை சாந்தம் காருண்யத்தோடு[4] சாது சங்கப்பழக்கத்தை நாடி, சிவபெருமானை அடைய வேண்டி, விசாரணை செய்தல் வேண்டும்.

அநாதியாயுள்ள வேதம் பிரபல சுருதி வாக்கியமென்னும் ஞானகாண்டம், அற்ப சுருதி வாக்கியமென்

---

[1] "மலங்களைந் தாற் சுழல்வன்றயிரிற் பொருந்து மத்துளவே." (ஸ்ரீமங் மணிவாசகப் பெருமான்.)
"எழுமுடல் கரணமாதி யிவைமலம்,"
"தநு கரண புவன போகந் தற்பரம் பந்தம்."
"மல மாயை கன்ம மாயே யந்திரோதாய் மன்னிச்,
சலமாறும் பிறப்பிற்றங்கி யித் தரை கீழ் மேலும்."
(சிவஞான சித்தியார்.)

[2] அர்த்தேஷணை ஆணவமலத்தால் மண் பெண் பொன் ஆகிய மூன்று பொருள்களிற் செல்லும் மோகம்: புத்திரேஷணை—காமிய மலத்தால் புத்திர சம்சாராதிகளிற் செல்லும் மோகம்: லோகேஷணை—மாயா மலத்தால் தேவகுரு பக்திகளைப் பண்ணுமல், அஞ்ஞானத்தால் கெட்ட விஷயங்களில் விழுந்து சம்சாரத்தை அடைதல்.

[3] ராகம்-ஆசை; துவேஷம்-கோபம்; லோபம்-உலுத்தம்; மோகம்-தரியாமை; மதம்-களிப்பு; மாற்சரியம்-பொருமை; அகங்காரம்-என்னேடொப்பார் யார் என்கை; டம்பம்-கர்வம் ஆக எட்டு துர்க்குணங்கள்.

[4] "சற்சங்கத்வே நிற்சங்கத்வம், நிற்சங்கத்வே நிர்ம்மோகத்வம், நிர்ம்மோகத்வே-நிர்ஜ்ஜலதத்துவம், நிர்ஜ்ஜலதத்வே ஜீவன் முக்தம் என்பார் அறிஞர்.

னும் கன்மகாண்டமென இருவகையாகச் சொல்லியிருக்கிறது. இவ்விரண்டில் கன்மகாண்ட விதி கட்டுக்கடங்காதாரைக் கட்டுக் கடங்கக் கன்மம்புரிய நியமித்த தாயினும் இது பூர்வ பக்ஷம்; களைதற்பாலது. கன்மங்களும் அதனுலுண்டாகும் போக போக்யாதிகளனைத்தும், பின்பு துன்பமாக நேருதலைக் கண்டு, அவற்றை விடுத்து, பிரம கைவல்யமாகிய பரம சுகத்தைத் தேடவேண்டுமென்பதே வேத சம்மதம். போக போக்கியப் பயனுகிற கன்மத்தை வேதம் விலக்கினதேயன்றி விதித்ததன்று; கன்மத்தாற் பெறும்பலம் அற்பம்.* துன்பமோ மிகப் பெரிது. ஆயினும் வேதம் விதித்த கன்மகாண்டப்படி, ஜீவர்கள் தத்தம் வருணுஸ்ரம தர்மங்கட்கேற்ப, சத்கருமங்களைப் பலாபேக்ஷையின்றி ஈஸ்வரப்பிரீதி செய்யில், அந்தக்கரணத்திலுள்ள அசுத்தம் நீங்கும். சித்த சுத்தி வரும்; அம்மனம் பின்பு சித்சட விசாரஞ்செய்து, ஞானத்தை அடையும். அஞ்ஞானத்துக்குச் சொரூப ஞானம் உறவும், விருத்தி ஞானம் பகையுமாம். விசாரத்தாலுண்டாகும் அந்த விருத்தி ஞானமானது சொரூப ஞானத்தில் உறவாகி நின்று, அஞ்ஞானத்தைக் கெடுத்துத் தானும் அந்த அஞ்ஞானத்தோடொக்க நசிக்கும். விசாரணையாவது ஏது என்னில், மன முதலிய இந்தத் தேகத்திலிருக்கிற இந்த நான் என்பவன் யாவன்? சித்தென்பது யாது? சித்துஞ் சடமுமாகிய இரண்டும் ஒன்ருய்க் கூடப் பெற்ற பந்தம் யாது? அதனை விடப்பெற்ற முத்தி என்பதென்ன? என விசாரித்தல் விசாரணையாகும்.

---

* "தெளிய யோகசித்தர்க்குஞ் சிறப்பேயலது
செல்லுண்டோ,
புளிய சிலையைப் பொருந்தார்க்குப் பொருளோ சிறிது
துயர் பெரிது,
நெளிவு பெரிது மலஞ் சிறிது நிறைந்த கரும நிலை
யார்க்கே."
(சிவ தருமோத்தரம்.)

இருக்கு வேதத்தில் பிராமணத்திலும், உருத்ர சங்கிதையிலும், யசுர் வேதத்தில் ஆரணத்திலும், பிரதாரணியோப நிடதத்திலும், சாமவேதத்தில் சாந்தோக்கிய ஆருவதிலும், அதர்வண வேதத்தில் ஈஸ்வர சாக்ஷாத் காரத்திலும், சைவ புராணத்தில் சுப்ர பேதத்தும், சிவ தருமோத்தரத்திலும், பதினெண் புராணங்கள் இருபத்தெட்டு ஆகமங்களினும், ஞானத்தினுலேயே முத்தியென்று ஸ்பஷ்டமாய்க் கூறியிருக்கிறது. ஞானமல்லாதனவெல்லாம் அஞ்ஞானமாதலின், அவ்வஞ்ஞானப் பகுதிகளால் பந்தமுறுதலின்றி, வீடு பேறடைதல் கூடாது. கருமம் அனைத்தும் ஞானவாயிலாக வீடு பேற்றிற்குக் காரணமாவதல்லது, நேரே காரணமன்று. மெய்ஞ்ஞான முடையோர்க்கே முத்திப் பேறு என்பது சாஸ்திர சம்மதம்.*

---

* * * * * *, "கூடாமவர் சுபாவங்கள் சீலங்கள் குறிகளாய்ந்தறியாமல்,
ஓடியுங் குதித்துந் தலைகீழ் நின்று முயர் கம்பத்தேறி,
ஆடியும் பலகன்மங்கள் செய்யினு மவருண்மை
தெரியாதே."

"மனைக்குள் வைத்த பண்டங்களை மறந்தவன் வருட
நூறமுதாலும், நினைத்துணர்ந்து பின் கிட்டும்."
"எறிகின்ற விளக்காற் கண்ணுவிருட்பொருள் காணல்
வேண்டும், புரிகின்ற விருத்தி யொன்றே போதுமெய்ப்
பொருள் காண் போர்க்கே."

"இன்னவாறந்தப் பிரமத்தை யறிவிக்கு மிலக்கணத்தால்
வேதம்,
சொன்ன ஞானமும் விசாரத்தால் வருமின்றிச் சுருதி
நூல் படித்தாலும்,
அன்னதானங்க டவங்கள் மந்திரங்க ளாசாரங்கள்
யாகங்கள்,
என்ன செய்யினுந் தன்னைத்தானறிகின்ற திவைகளால்
வாராதே." (கைவல்ய நவநீதம்.)

இச்சிக்கப்படும் பொருளையடையக் கருதுவதான காமியத்வம் சித்தியையும், பொருளொன்றையும் அடைய விரும்பாத நிஷ்காமியத்வம் முத்தியையுங் கொடுக்கும். இவ்விரண்டையும் அப்பியாசம் செய்த முனிவர்கள் சித்திமுத்தியைப் பெற்றார்கள். *அணிமாதி அஷ்டமாசித்துகள் காலம் போக்கும் விளையாடலை மாத்திரந் தருமேயன்றி மோட்சத்தைக் கொடுக்க மாட்டாது.

இத்தகைய ஞானத்தைப் பெறவேண்டியதற்குச் சாதன சதுஷ்டயம் முக்கியம். அதாவது நித்தியா நித்திய வஸ்து விவேகம்:—தேகேந்த்ரியாதி சகல சகத்தும் அநித்தியம், பிரமமே நித்யம்; பிரமத்தின் காரியமான தேவ பதவிகள் நித்தியமென்றெண்ணுவது புத்திப்பிரமமே யொழிய வேறல்ல. இது முதற் சாதனம். இக முத்திரார்த்த பலபோக விராகம்:— இகலோக பரலோக போகங்கள் இரண்டும், அநித்தியமாயிருப்பதால் அவைகளில் அற்ப புத்தி செய்து, அவற்றை நிராசை பண்ணி வெறுப்பது. இது இரண்டாம் சாதனம். சமாதி சட்க சம பத்தியம்:— சமம், தமம், உபரதி (விடல்), திதீக்ஷை (சகித்தல்), சமாதானம், சிரத்தையெனும் ஆறு விதம். சமமாவது

---

* "முனிவர் சித்திகள் விநோத மாத்திரம் தரு முத்தியைத் தாராவே." என்றும் "ஆகையாலந்தச் சித்திகள் பிராரத்தமாகு மென்றறிவாயே," என்றும் கைவல்யம் கூறும்.

"சொல்லரிய வழுதுண்டு மற்பவுடல் கற்பங்கடோறு
நிலை நிற்க வீறு,
சித்தி செய்துஞ்ஞான மலதுகை கூடுமோ."
(தாயுமானவர்.)

மனது தன்னுட்டத்திலொருமைப் பாடாக நிலைத்திருப்பது. தமமாவது-சித்தம் ஏகாக்கிர மாயிருந்து, சத்தாதி விஷயங்களில் இந்திரியங்கள் செல்லாதபடி நிறுத்துகிறது. உபரதியாவது-சித்த சுத்திக்குச் சாதனமாகக்கண்ட, நித்திய நைமித்தியாதி கன்மங்களையும் விட்டொழிக்கிறது. திதிக்ஷையாவது-பிராரத்த கன்மத்தால் தாபத்திரயங்கள் தன்னை வந்தடைந்தாலும், அவைகளை எண்ணாமல் பொறுத்துக்கொள்வது. சமாதானமாவது-வேதத்திற்சொல்லும் அருத்தம் அறிவதன் பொருட்டு, சித்தத்தை நன்றாக நிறுத்துவது. சிரத்தையாவது-குருவாக்கியத்திலும், வேத வாக்கியங்களிலும், சத்திய புத்தி உண்டாயிருப்பது. இது மூன்றாம் சாதனம். முமுக்ஷுத்வம் :—எந்த விவேகியானவன் சத்திய வைராக்ய அநுபவ ஞானத்தினாலே சமுசார பந்தத்தை விடவேணுமென்று எண்ணியிருக்கிறானோ அவனே முமுக்ஷுத்வமென்னும் சாதனமுடையவன். அதாவது ஐக்கிய முக்தியை விரும்பத்தக்க இச்சையுடையவன். இது நான்காம் சாதனம். இந்நான்கு சாதனமுடையோர்க்கே அறிவுண்டாகும். * சாதனமில்லாமல் எதையும் சாதிப்பவர்கள் உலகில் ஒருவருமில்லை.

வசுக்களே! ஞானத்தை அடையவேண்டிய மார்க்கத்தைச் சுருக்கமாய்க் கூறினேன். இப்போது உங்களுக்குக் காமதேனுவால் நேர்ந்த சாபத்தை நீக்கிக்கொள்வதற்கு சிவபூஜையே உத்தமமானது. ஆன்

---

* "சாதனையின்றி யொன்றைச் சாதிப்பாருலகிலில்லை,
யாதலாலிந்த நான்கை யடைந்தவர்க் கறிவுண்டாகும்."
(கைவல்யம்.)

மாக்கள் அறிவிற்குப் புலப்படும் பொருட்டு, சுத்த மாயையிலே பரமேஸ்வரன் சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவன், மஹேஸ்வரன், உருத்திரன், மால், அயன் என்னும் ஒன்பது விதமான திருமேனியை ஒன்றிலொன்றாகக்கொண்டு, பஞ்ச கிருத்ய பரமாநந்தத் தாண்டவம் நடித்தார் என ஆகமங்கள் கூறுகின்றன. அந்தத் திருமேனியைப் பிரித்தறியில் அருவம் நான்கு, உருவம் நான்கு, உருவா உருவம் ஒன்றுமாக ஒன்பதாகக் கொள்ளல்வேண்டும். இவை நிட்களம், சகளம், நிட்கள சகளமென்னப்படும். இவற்றுள் சிவம், சத்தி, நாதம், விந்துவென்னு நான்கும் நிட்களமாகிய அருவம். இது சிவ யோகிகள் தியானித்தற் பொருட்டென்ப. பிர்ம்ம, விஷ்ணு, ருத்ரன், மஹேஸ்வரன் என்னும் நான்கும் சகளமாகிய உருவம். இது தாமராதி லோகங்களிலும், காட்ட முதலியவற்றிலும் திருமேனி கொண்டு, பூஜாதி உற்சவாதிகளுக்கு அங்கங்கே ஆன்ம கோடிகளுக்கு அநுக்ரகம் செய்தற்பொருட்டு எழுந்தருளியிருக்கும். சதாசிவன் நிட்கள சகளமாகிய அருவாரூபம் அதாவது உபய ரூபம். இது சத்தியும் சிவமும் கூடி மிஸ்ரமாயிருக்கிற சிவலிங்கம் என்னப்படும். இதையே சிறப்புடைத்தெனக் கருதித் தேவர்களும் முனிவர்களும் பூஜை செய்தார்களென்று ஆகம புராணங்களில் விரித்துரைத்திருக்கிறது. ஆகையால் வசுக்களே! நீங்கள் பஞ்ச பஞ்ச உஷத் காலத்தில் எழுந்து, நித்ய கருமமுடித்து, ஸ்நாந ஜெபதபங்கள் செய்து, சிவலிங்க பூஜை செய்தல் வேண்டும்; சிவபூஜை செய்வோர் விபூதி ருத்திராக்க மணியவேண்டும் என்று

வேதாகமங்கள் முறையிடுவதால் விபூதி ருத்திராக்ஷத்தின் பெருமையினையும், ஸ்ரீ பஞ்சாக்ஷர மகிமையினையும் சுருக்கி, மார்க்கண்டேய மஹா முனிவர் அஷ்டவசுக்களுக்குக் கூறுகிறார்.

விபூதி மான்மியம் :—

விபூதியானது கற்பம், அனுகற்பம், உபகற்பம் என மூன்று வகைப்படும். இவைகளில் கற்ப விபூதிக்குரிய இலக்கணம் :—அவயவப் பழுதான பசு, கன்னிப் பசு, கன்றுபோட்ட நாள்சமீபித்த பசு, மலட்டுப்பசு, கிழப் பசு, கன்றிறந்தபசு இவைகள் ஆகாவாம். அழகுவாய்ந்த கன்றையுடைய பசுவாயிருக்கவேணும். அப்பசு சம்பாத்தாள் மேய்ந்திருந்தால் உத்தமம். அதன் சாணத்தை அஷ்டமி, சதுர்த்தசி, பூரணை இந்தத்திதிகளில் கீழ் விழுவதற்கு முன், பரிசுத்தத்தோடு எடுத்து வந்து, மேல்வழுப்பினைநீக்கிப் பஞ்சகவ்வியம் வார்த்துப்பிசைந்து, பதறில் உருட்டி, அக்கினியில் தகித்துப் பதத்தில் எடுத்துப் புதுப்பாண்டத்தில் வைப்பது கற்ப விபூதியாகும். சித்திரைமாதத்தில் வனத்தில் உலர்ந்திருக்கும் சாணத்தையெடுத்து வந்து, உரலில் இடித்துக் கோஜலம் வார்த்துப் பிசைந்து, பதரில் உருட்டி, அக்கினியில் தகித்துப் புநிதமாக எடுத்துவைப்பதே அநுகற்ப விபூதியாகும். பெருவனம் இயற்கையாகப் பற்றிக்கொண்டதில் நேரிட்ட சாம்பற்பொடியை எடுத்து வந்து பால், தயிர், நெய், கோஜலம், கோமயம் என்னும் பஞ்சகவ்வியம்விட்டுப் பிசைந்து, அக்கினியில் தகித்துப் புநிதமாக எடுத்துவைப்பதே உபகற்பவிபூதியாம்.

இவ்வாறு உண்டுபண்ணும் விபூதி நீலநிறமாயிருக்கில் வியாதியும், கருமை மிகுந்து சிவந்திருக்குமாகில் ஆயுள் குறைவும், செம்மை நிறமாகில் புகழ் நீங்குதலும், மஞ்சள் நிறமாகில் வறுமையும் உண்டாகும். வெண்மை நிறமானால் புண்ணியம் உண்டாகும். பட்டு, வஸ்திரம், பெண்மான்தோல், புலித்தோல் இவைகளில் எதையாவது விபூதிப்பையாகத் தைத்துக்கொள்ளலாம். விபூதிப்பை பன்னிரண்டங்குல நீளமும், எட்டங்குல அகலமுமாக இருக்கவேண்டும். விபூதிப்பை நேரிடாவிடில் சம்புடம், வாழைப்பட்டை, மான்றோல், வியாக்கிர சர்மம், வில்வக்குடுக்கை, சுரைக்குடுக்கை இவைகளிலும், வைத்துக்கொள்ளலாம். விபூதிதரிக்கும்விதி: விபூதி உத்தூளனஞ்செய்து, காலையில் கிழக்குமுகமாகவும், மாலையில் வடக்குமுகமாகவும், ஆசாரியர் மூலமாய்த் தெரிந்த மந்திரங்களை யுச்சரித்துக்கொண்டு, ஜலம்விட்டுக் கவச மந்திரத்தால் குழைத்துச் சிரசு, நெற்றி, மார்பு, நாபி, வலதுமுழந்தாள், இடதுமுழந்தாள், வலதுபுஜம், இடதுபுஜம், வலதுமுழங்கை, இடதுமுழங்கை, கணுக்கை இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து ஆகிய பதினாறிடங்களிலும் தரித்துக்கொள்ளவேண்டும். இவைகளில் விலாப்புறம் நீக்கிக் காதுகளைக் கொள்வதுமுண்டு. முழங்கைகளையும் மணிக்கட்டுகளையும் நீக்கிப் பன்னிரண்டு ஸ்தானங் கொள்வது முண்டு. அப்படித்தரிக்கும் விபூதியின் அளவு நெற்றியில் கடைப்புருவ மளவும், மார்பு புயங்களில் அவ்வாறங்குல நீளமும், மற்ற ஸ்தானங்களில் ஒவ்வோர் அங்குல நீளமுமிருக்கவேண்டும். ஒன்றுடன் ஒன்று சேரலாகாது.

எந்தச் சத்கர்மங்களை ஆரம்பித்தாலும், விபூதி தரித்துப் பின்பு ஆரம்பிக்கவேணும். சுவாமி சந்நிதியிலும், யாக சாலையிலும், ஆசாரியர் முன்னிலும், நேரில் தரிக்காமல் வேறுதிக்குமுகமாக இருந்து தரிக்கவேண்டும். விபூதி உயிர்க்குற்றங்களை நீறுக்குதலால் திருநீறென்றும், சம்பத்தைக் கொடுத்தலால் பூதியென்றும், ஆகமங்களில் சொல்லப்படும்.

உருத்திராக்க மான்மியம் :—

உருத்திராக்ஷநிறம் வெண்மை பிர்ம்மகுலமென்றும், செம்மை க்ஷத்திரிய குலமென்றும், பொன்னிறம் வைசிய குலமென்றும், கருமை சூத்திரகுல மென்றும், சொல்லப்படும். உருத்திராக்ஷபேதங்கள்:—ஒருமுகம் முதலாகப் பதினாறுமுகம் வரையிலும் உள்ளன. இவைகளில் முப்பத்திரண்டு மணி மாலையாகத் தரித்துக்கொண்டாலும், அல்லது தனியே ஒருமணி தரித்தாலும், பாபம் நீங்கிப் புண்ணியம் பெறுவார்கள். இவைகள் சிவரூபமாதலால் சிவபெருமானுகவே பிரீதி பாராட்டவேண்டும். ஜெப மாலைக்கு மணி நூற்றெட்டு, ஐம்பத்துநாலு, இருபத்தேழு, இவைகள் ஒன்றுடன் ஒன்று சேராமல் முடிந்து, மாலையாக வைத்து, ஜெபிக்கவேண்டும். இஷ்டசித்தி விரும்பினோர் இருபத்தைந்து முப்பது மணிசேர்ந்த மாலை தரிப்பது முண்டு. செபிப்பது சிவாலயத்திலாகில் விசேஷ புண்ணியமுண்டாம். காசி முதலிய க்ஷேத்திரங்களில் தேவர்களாலும் அவுணர்களாலும் பூஜிக்கப்பட்ட இலிங்கங்களில் பாணுசுரனால் பூசிக்கப்பட்ட இலிங்கங்களை வருணாச்சிரமத்துக் கேற்றவைகளாகக் கொண்டுவந்து, மாலையாகத் தரித்து, வெண்மைநிற விபூ

தியுந் தரித்து, விதிப்படி பெருமானைப் பூஜிப்பாராயின் மோக்ஷம் அடைவார்கள்.

ஸ்ரீ பஞ்சாக்ஷர மகிமை:—சிவபெருமான் ஆன்மாக்கள் தரிசிக்கத்தக்க பஞ்சாக்ஷர திருமேனி கொண்டபோது, "நமசிவய" மென்னும் பஞ்சாக்ஷரமாகிய ஐந்தெழுத்தையே கொண்டருளி நிருத்தஞ் செய்தனர். திருவடியிலே ந காரமாகவும், திருவுந்தியிலே ம காரமாகவும், திருத்தோளிலே சி காரமாகவும், திருமுகத்திலே வ காரமாகவும், திருமுடியிலே ய காரமாகவும், கொண்டருளினார். நகாரம் திரோதயக்ஷரம், மகாரம் மலரக்ஷரம், சிகாரம் பதியக்ஷரம், வகாரம் அருளக்ஷரம், யகாரம் சிவாக்ஷரம் என்க. நகாரம் ப்ர்ம்மா, மகாரம் விஷ்ணு, சிகாரம் உருத்திரன், வகாரம் மஹேஸ்வரன், யகாரம் சதாசிவனுமாம். யகாரம் லிங்கம், வகாரம் நாளம், சிகாரம் மேற்பதுமம், மகாரம் கண்டம், நகாரம் கீழ்ப்பதுமம்; நகாரம் சத்யோசாதம், மகாரம் வாமம், சிகாரம் அகோரம், வகாரம் தற்புருடம், யகாரம் ஈசானமுகமாகப் பரமசிவனது திருமேனியாயிற்று. அருபாரூபம் அதாவது உபய ரூபமாகிய சகள நிட்கள சதாசிவமூர்த்திக்கும், உருவமாகிய சகள மூர்த்திகளுக்கும், பஞ்சாக்ஷரமே திருமேனியானது.

பஞ்சாக்ஷர தரிசனம் என்பது:—நகாரம் பாதம், மகாரம் வயிறு, சிகாரம் தோள்கள், வகாரம் முகம், யகாரம் திருமுடி என்ப. "நமசிவய"மெனு மைந்தெழுத்தும் நிவிருத்தி, பிரதிட்டை, வித்தை, சாந்தி, சாந்தியாதீதமென்னும் பஞ்ச கலைகளுக்கும் பீஜமாகும். பஞ்சாக்ஷரத்தினுள்ளே சிவமும் சத்தியும் முந்தி நின்று,

ஆன்மாவை நடுவே வைத்த முறைமை; அதாவது "சிவயநம" என்றதினால், சிவன் ஆன்மாக்கள் பாசத்தை நீக்கி, அனுக்கிரகம் செய்வன் என்பது பொருள். நமஸ்கரிக்கிறவன் அடிமையும், நமஸ்காரத்தைக் கொள்கிறவன் ஆண்டவனுமாகையால், ஆன்மாக்கள் பாசத்தை நீக்கி, அநுக்கிரகஞ் செய்கிற சிவனுக்கு, ஆன்மா அடிமை யென்று சொல்லப்படும். ஆன்மா அடிமையும், சிவன் ஆண்டவனுமென்கிற முறைமை யறிந்து, பூஜை யோமத் தியானங்களும், ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தாலே செய்யக்கடவது. ஸ்ரீ பஞ்சாக்ஷரத்துக்குள்ள மரியாதை அறிந்து, புருவ மத்தியிலே சிவன் ஆன்மாவுக்குப் பிராணனாய் நிற்கிற தன்மையுமறிந்து, அந்தச் சிவன் நானென்று சோகம் பாவம் செய்ய, இந்த ஆன்மாவை உள்ளடக்கிச் [1]சிவன் பிரகாசிப்பன் என்று அறியுங்கள் வசுக்களே!

ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தில் "நமசிவய" மென்றது தூலம்; "சிவயநம" என்றது சூக்குமம்; "சிவயவசி" என்றது காரணம். "வசிவ" என்றது மகா காரணம். [2]சிகாரம் முதலாக ஓதினால் அருள் கொடுக்கும்; பஞ்சாக்ஷரம் குரு முகத்தால் அறியவேண்டும். பஞ்சாக்ஷரம் திரி பதார்த்தமா யடங்கும்; எப்படியெனில்

---

[1] "அஞ்செழுத்தாலுள்ள மரனுடைமை கண்டதனை
அஞ்செழுத்தா லர்ச்சித் திதயத்தில்—அஞ்செழுத்தாற்
குண்டலியிற் செய்தோம கோதண்டஞ் சாதிக்கில்
அண்டனாஞ் சேடனா மாங்கு." (சிவஞானபோதம்.)

[2] "நம் முதலா யோதிலரு ளுடாது, நாடுமது சிம்
முதலா யோது நீ சென்று." (பெரியார்.)

நம, சிவ, ஆய எனப்பிரித்து, "நம" என்றது ஜீவாத்மாவையும், "சிவ" என்றது பரமாத்மாவையும், "ஆய" என்றது ஐக்கியத்தையும், "தத்வமசி" வேத மகா வாக்யத்தின் வாயிலாக விளக்கிக்காட்டும். நகார மகாரங்கள் பாசமாகவும், சிகார வகாரங்கள் பதியாகவும், யகாரம் பசுவாகிய ஆன்மா வாகவும், திரிபதார்த்தமாக அடங்கற்பாலது. [1] வேதநான்கினு மெய்ப்பொருளாக நிற்பது "நமசிவய" என்னும் பஞ்சாக்ஷரமே. [2] பஞ்சாக்ஷரத்தில் தொண்ணூற்றாறு தத்துவங்களு மடங்கி நிற்கும்.

[3] அஷ்டாக்ஷரமாகிய மூல பஞ்சாக்ஷரமாவது "ஆம்,

---

[1] "வேத நான்கினும் மெய்ப்பொ ருளாவது
நாத நாம நமச்சி வாயவே." (தேவாரம்.)

[2] "தீங்கான தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
சிவாயநம வஞ்செழுத்திற் செனித்தவாறே."
(ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள்.)

"நவ்விரண்டு காலதாய் நவின்ற மவ்வும் வயிறதாய்
சிவ்விரண்டு தோள்களாய்ச் சிறந்த வவ்வும் வாயதாய்
யவ்வும் வவ்வும் முடியதா யெழுந்த செம்மல் நேர்மையைச்
செம்மை யோர்ந்து நிற்பதே சிவாயமைந் தெழுத்துமே."

"யகார மிலிங்கமாம் நாளம் வகாரஞ்
சிகாரமேற் பீடந் தெரிக்கின்—மகாரந்தான்
கண்டமே யாகும் கலிஞரடிப் பீடம்
பண்டிகழு நக்காமை யார்."

"நகாரமே சத்தியோ சாதமுக நாடின்
வகாரந்தான் வாமமென மதிக்கச்—சிகாரம்
அகோரம் வகாரந் தற்புருட மாகும்
யகார மீசான முகமென்." (பேரறிஞர்.)

[3] "அஞ்சு மூன்று மெட்டதா யநாதியான மந்திரம்" என்றார் சிவ வாக்கியர்; "ஞாலமதி லெட்டெழுத்துத் தெய்வப்பேழை

ஊம், ஓம், சிவயநம" என்னும் அக்ஷரங்களை மூல பஞ்சாக்ஷரமென்றும், அஷ்டாக்ஷரம் என்றும் சொல்லப்படும். ஆம் என்றது அடி, ஊம் என்றது நடு, ஓம் என்றது திருவடி, சி என்றது சிவம், வ என்றது சத்தி, ய என்றது சிவன் என்னும் ஆத்மா, ந என்றது திரோதாய், ம என்றது மலர்ப்பாதம். நகாரம்-பிர்ம்மம், மகாரம்-விஷ்ணு, சிகாரம்-ருத்ரன், வகாரம்-மஹேஸ்வரன், யகாரம்-சதாசிவன்.

"ஓம் நமசிவய" என்றது ஆதாரம்; "ஓம் சிவயநம" என்பது நிராதாரம், "ஓம் ஆம் அவ்வும் சிவய" என்றது மீதானம். ஆதாரமாவது நடுமூலம், நிராதாரமாவது நடு இருதயம், மீதானமாவது புருவ மத்தி; மீதானமாகிய புருவ மத்தியில் பேரொளிப் பிரபையே நிராதாரம் என்பது; ஓம் என்றது உச்சியும் மூலமுமொன்றூ யூடுருவி நிற்குமென்றும், "சிவய" என்றது சோதிமயமாய் நிற்குமென்றும், அந்தச் சோதி, புருவத்திடை வெளி உச்சி உண்ணாக்குக்கு மேலாய்க் காணவுந், தன் மயமாய் நிற்குமென்றும், அந்தப் பேரொளியே அடிமுடிக்கு நடுவாய், நல்வினை தீவினைக்கு நடுவாய், இடை பிங்கலைக்கு நடுவாய், இரவு பகலுக்கு நடுவாய் விளங்கி, அருவுருவில்லாத ஆநந்த மயமாய் நின்ற அவனைக்கண்ட பரம ஞானிகளே சாயுச்சிய பதத்தைப் பெறும் பாக்கியவான்களெனப் படுவர் என்பது வேதாகமத் துணிபு.

---

நயந்தறியாப் பேதையறிவில்லாரோடு" என்று ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகள் கூறுதல் காண்க.

69133

[1] பிரணவ மகிமை :—சொல்கிறேன் கவனமாய்க் கேளுங்கள் வசுக்களே! என மார்க்கண்டேயர் சொல்லுகிறார்.

---

[1] "அகார உகார மகாரமென்னும் மூன்று அக்ஷரங்களையும் கூட்டி ஓத, ஓங்காரம் பிரணவம் ஆயிற்று. அகாரம் பிர்ம்மா, உகாரம்-விஷ்ணு, மகாரம்-ருத்ரன், விந்து-மஹேஸ்வரன், நாதம்-சதாசிவன் ஆகும். இவர்கள் பஞ்ச கர்த்தாக்கள் எனப்படுவர். அகாரம் சூரியப்பிரகாசம் போன்ற மனதையும், உகாரம் சோமப் பிரகாசம்போன்ற புத்தியையும், மகாரம் அக்நிப் பிரகாசம் போன்ற அகங்காரத்தையும், விந்து தீபப் பிரகாசம்போன்ற சித்தத்தையும், நாதம் ஆயிரம்கோடி ஆதித்தப் பிரகாசம்போன்ற புருடனையுமாக, அகார உகார மகார விந்து நாதமென்னும் ஐந்து அக்ஷரங்களும், நிறை நிறையே யதிட்டித்து நின்று செலுத்தும். கடலின் தானத்திலே மனதும், நீரின் தானத்திலே ஆன்மாவும், அலையின் தானத்திலே ஆன்மபோதமும், வாயுவின் தானத்திலே கன்மமும், ஆகாயத்தின் தானத்திலே விஷயமுமாய் நின்றது. அகாரம்-ரேசகம்; உகாரம்-பூரகம்; மகாரம்-கும்பகம்.

"பிரணவஸ் ஸர்வ வேதேஷு" என்றும் "மேதயம் பவித்ர மோங்கார ருகஸாம் யஜு ரேவச" (பகவத் கீதை.)

"ஓங்காரம் பிந்து சம்யுக்தம் நித்யம் தியாயந்தி யோகினும், காமதம் மோக்ஷதம் சைவ ஓங்காராய நமோ நம:"

(சிவரகஸ்ய மூல பீஜம்.)

"ஓ மென்னும் பதமதனில் வேதமாதி உற்பவிக்கு மாலம் வித்திலுதிக்குமாபோல், ஓமென்னும் பதமதனையுணர்ந்தார்தாமே உணர்ந்தார்கள், வேதாதி உரைகளெல்லாம்." (புஜண்டர் நூல்.)

"அலகில் சீர் பிரணவத்தை யுணர்ந்தவரே
வீட்டின்ப மடைய வல்லார்." (அகஸ்தியர்.)

"ஓங்காரமாய் நின்ற வத்துவிலே ஒருவித்து வந்து
பாங்காய் முளைத்த பயனறிந்தாற் பதினாலுலகும்
நீங்காம னீங்கி நிலைபெறலாமிந்த நிச்சயந்தான்
ஆங்கார மும்மத மற்றோ ருபதேச மாமனமே."

(பட்டிணத்தார்.)

"ஓம்" என்கிற பிரணவம் உத்கிருஷ்டமான ஏகாக்ஷரத்தினால் விளங்கப்படுகிறது எதுவோ அதுவே பிரமம் எனப்படும். சமஸ்த வேதங்களும், சாஸ்திரங்

"அகார காரணத்துளே அநேகனேக ரூபமாய்
உகார காரணத்துளே உருதரித்து நின்றனன்
மகார காரணத்துளே மயங்கி நின்ற வையகம்
சிகார காரணத்துளே தெளிந்ததே சிவாயமே."

"அழிவிலாது நின்றதே அகாரமும் உகாரமும்
குளிகையான சோதியும் குலாவி நின்றதவ்விடம்
வெளியதாகு மொன்றிலே விளைந்ததே சிவாயமே."

"ஈன்றதாயும் அப்பனு மியங்குகின்ற நாதமும்
தோன்றுமோ ரெழுத்தினோடு சொல்ல வேறுமில்லையே."
(சிவ வாக்கியர்.)

"அகார உகார சிகார நடுவாய, வகார யகார வாசியெனவே, நகார மகார மிரண்டு மறுத்துச், சிகார முதல்வன் சிறந்து நின்றனே. (திருமந்திரம்.)

"எட்டு மிரண்டு முருவான லிங்கத்தே."
(உண்மை விளக்கம்.)

"அகர முதல எழுத்தெல்லா மாதி பகவன்
முதற்றே யுலகு." (திருக்குறள்.)

"அவ் வுடனுவ் வுமனம் புத்தி அகங்காரங்கள்
செவ்விய விந்து நாதம் சித்து மோடுள்ளமாகும்
ஒவ்வெனு மெழுத்தா மைந்துமுணர்வுதித்தொடுங்குமாறு
பவ்வமுந் திரையும் போலும் பார்க்கிலிப் பண்புந்
தோன்றும்." 1.

"அயனரி யரனு மீசர் சதாசிவ ரதி தெய்வங்கள்." 2.
(சிவஞான சித்தியார்.)

"எட்டிரண்டுங் கூடியே யிலிங்கமான தேவனை
மட்டதா யும்முளே மதித்து நோக்க வல்லிரேற்
கட்டமான பிறவியின் கருக்கடல் கடக்கலாம்."
(சிவ வாக்கியர்.)

களும், இதிகாச புராணுதிகளும், சமஸ்த சப்தங்களும், சமஸ்த மந்திராதிகளும், பிரணவாகாரமாகிய ஓங்காரமே மூலாதாரமாக, முதன்மையாய் நின்றெலிக்கின்றன. அப்பிரணவம் உம்பர் நாயகன் திருவாக்கினுதித்தது. அது பரம் அபரம் என இருவகைத்து. பரப்பிரணவம்-வாக்கிய ரூபம், ஒலி வடிவு, சிவம் ஓம் என்பது. இது சச்சிதாநந்த சொரூபமாகிய சிவமே இன்பத்தைப் பெருக்கும் ஆதிக்கியத்தோடு பொருந்தி நிற்பது. அபரப் பிரணவமாவது வாசக ரூபம், நாத வடிவு, சத்தி. இது மாயா சொரூபமாய், சத்த வடிவாய்ச், சிவ தத்துவ உண்மையாகிய ஆதிக்கியத்தையுண்டாக்கி, ஆன்மாக்களுக்கு நன்மைகளை யெல்லாம் தருவது. எல்லாப் பொருளும் தோன்றுவதற்கு மூலமாயுள்ள இந்த அபரப் பிரணவத்தினின்றும் இருக்கு முதலான நான்கு வேதங்கள் தோன்றின.

<u>சிவலிங்க பூஜை</u>:—வெண்மை நிறமுள்ள விபூதியும் உருத்திராக்ஷ மாலையும் அணிந்து, பரமசிவ சொரூபமான சிவலிங்கத்திற் பூஜை செய்யும் மார்க்கத்தையும், அதனால் வரும் நன்மைகளையும் சொல்லுகிறேன் வசுக்களே! கேளுங்கள் என்று மார்க்கண்டேயர் சொல்லுகிறார்.

பசுமண், சுடுமண், மணல், சிலை, லோகம், ரத்தினம், சுயம்பு, ரசம், பவள மணிகள், தீபம், பளிங்கு, காந்தம் என்னும் இப்பன்னிரண்டு உருவினாலும் இலிங்கம் அமைத்துப் பூஜித்தல் உத்தமம். தேவர்களும் முனிவர்களும், கங்கையாதிதீர்த்தங்களில் அருச்சித்துப் பூஜித்த சிவலிங்கங்கள் தேவலிங்கம், ஆக்ருஷண லிங்கம் எனப்

படும். அசுர குலத்துதித்த பாணுசுரனால் பூஜிக்கப் பெற்ற லிங்கம் பாணலிங்கம் எனப்படும். பரமசிவம் பாண லிங்கத்தைத் தவிர, வேறிடத்தில் எழுந்தருளி யிருக்க மாட்டார் என்பது வேதாகமத் துணிபு. ரசலிங்கம் ஒன்று, மற்றைய பத்துக்கோடி லிங்கங்களுக் கொப்பாகும். அது மோக்ஷத்தையும் ஞானத்தையும் கொடுக்கும். அதன் திருமஞ்சன நீர் உள்ளுக்குக் கொண்டால், அரிய உயிர்களுக்கு ஆதரவாகும். மரணத் தறுவாயில் அந்நீரை உட்கொண்டால் பாவ வினைகள் பஞ்சாய்ப் பறக்கும் என்பார் பெரியோர்.

பாணலிங்கத்தில் சில அம்சங்கள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டியது. சர சரத்திருக்குமாயின் புத்திர னையும் மனையாளையும் மாய்க்கும். கோணலாயிருக்கு மானுல் மனையாளை மாத்திரம் மாய்க்கும். உச்சியில் குழிந்திருந்தால் தன்னைக் கொல்விக்கும். கீற்றுயிருந் தால் தன்னை வெட்டுவிக்கும். காகத்தின் கால்போ லிருக்குமானுல் கழுத்தை அறுப்பிக்கும். களங்க மிருக்குமாயின் க்ஷய ரோகம் உண்டாகும். பிந்துப் போல் சுழியிருக்குமாகில் நட்புக் கேடு உண்டாகும். இவையன்றி மிகவும் சிறிதும், மிகவும் பெரிதுமாகா தென்று வேதமறிந்த பெரியோர்கள் சொல்லுவார்கள்.

நற்குணம் அமைந்த பாணலிங்கம் கிடைப்பது அரிது. சுருக்கமாய் வேண்டுமானுல் உறையும் வெண் மணல், களிமண், அரிசிமா, விபூதி, கும்பம், கொன்றைமலர், தருப்பை, வில்வம், பால், வேதிகை, சித்திரப்படம், எள், சுத்த ஜலம், கோமயம் இவைகளைச்சிவலிங்கமாகப் பாவனை செய்து, பூஜித்தல் உத்தமமென வேதாகமம்

சம்மதிக்கின்றன. ஒருகாலத்திலேனும் பரிசுத்த மனதுடன் பக்தியோடு பூஜித்தலே போதும். பனியினால் குளம் நிறையாதது போல், பக்தியுடன் சிவபூஜை செய்யாத பேர் நன்மார்க்கத்தை அடையார்கள். சிவலிங்கப் பெருமானை ஒரு தரம் அருச்சித்துப் பூஜிக்கும் பலம் ஆயிரம் தரம் கோதாவரி, கங்கை, யமுனை தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்யும் பலத்துக்கு ஈடாகாதென்று நினையுங்கள் வசுக்களே!

மேலும், திருக்கழுக்குன்றத் தலத்தில் ஸ்ரீ வேதகிரிப் பெருமானை ஒருநாள் பூஜித்தாலும், அஸ்வமேத யாக பலனையும், சாந்திராயண விரத பலனையும் கொடுக்கும். தவிரவும், தேவகணநாதராயிருந்து, பிறகு எம்பெருமான் திருவடித்தாமரையைச் சேரலாம். சௌந்தர்யம், நற்குலப் பேறு, கல்வி, பேரறிவு, நற்புத்திரப் பேறு, இஷ்ட காம்யாதி சித்திகள் கொடுக்கும். தேவேந்திரன் பதவி கிடைக்கும். பூவுலகத்தில் அரசனாய் வாழலாம். திருமால், இந்திரன், பிரமன், முதலிய தேவர்கள் தத்தம் மனைவியருடன் தத்தம் பதவியில் தற்போது வீற்றிருக்கும் பெருமை இப்புண்ய தலத்தில் பூஜித்ததால் வந்ததல்லவா? வசுக்களே! கவனியுங்கள்.

விளையாட்டினாலும், சோம்பலினாலும், பிறர் மதிக்க வேண்டும் என்னும் அவாவினாலும், உள்ளன்பில்லாமல் இத்தலத்தில் சிவலிங்க பூஜை செய்கிறவர்கள் அரசர்களாகவும், தவம் கல்வி பெருமை யுடையவர்களாகவும், இருப்பார்களென்றால், உண்மைத் தொண்டர்களால் அருச்சித்துப் பூஜிக்கிறவர்கள் அடையும் பலனை நான்

எவ்வாறு வர்ணிப்பது. [1] பிரதோஷகாலத்தில் இவ் வேதகிரிப் பெருமானை அருச்சித்துப் பூஜித்தால், சகல பாபங்களும் சகல தோஷங்களும் நிவிர்த்தியாகும். [2] சோமசூத்திரப் பிரதக்ஷிணம் செய்தால், ஒவ்வொரு அடிக்கு ஒவ்வொரு அஸ்வமேதயாக பலன் தரும். பஞ்ச மஹா பாதகங்கள் நீங்கும். மோக்ஷத்தைத்தரும். அபர பக்ஷத்து அஷ்டமி திதியில் ஸ்ரீ வேதகிரிப் பெருமானுக்கு அபிஷேகம் செய்தால், ஆயிரம் கோதானம் கொடுத்த பலன் உண்டாகும். சூரிய கிரகண, சந்திர கிரஹண காலங்களில் அபிஷேகம் செய்தால், கோடி கோதான பலன் கொடுக்கும். அஷ்டமி திதியில் தேனினால் அபிஷேகம் செய்வோர்கள் அக்நி தேவனையும், சுத்த ஆற்று ஜலத்தால் செய்வோர்கள் வருணதேவனையும், விபூதியினால் செய்வோர்கள் சந்திரனையு மாவார்களென்று வேதாகமம் சொல்லுகிறது. அபர பக்ஷத்து சதுர்த்தசி

---

[1] பிரதோஷகாலமாவது: பதின்மூன்றாந் திதியாகிய திரயோதசித் திதிவருநாளில் சூரியன் அஸ்தமிப்பதற்கு முன்னும் பின்னும் ஒரு சாமப்பொழுது. சனிக்கிழமையில்வரும் பிரதோஷம் விசேஷம் என்பார்கள்.

[2] பிரதக்ஷிணம் செய்யும்போது நந்திதேவரைத் தரிசித்து, அங்கிருந்து இடமாகச்சென்று, சண்டேசநாயனாரைத் தரிசித்து, வந்தவழியே திரும்பிவந்து, மறுபடியும் நந்திதேவரைத் தரிசித்து, அங்கிருந்து வலமாகச்சென்று, சோமசூத்திரத்தைத் தரிசித்து, சென்றவழியே திரும்பிவந்து, நந்தியைத்தரிசித்து, அங்கிருந்து இடமாகவே சென்று, சண்டேச நாயனாரைத் தரிசித்து, மறுபடியும் அங்கிருந்து வந்து, நந்தியைப் பணியாமல் வலமாகச் சோமசூத்திரத்தருகு சென்று, அங்கிருந்து வந்து சண்டேச நாயனாரைத் தரிசித்து, மறுபடி திரும்பி வந்து நந்தியந்தேவரைத் தரிசித்தால் இது ஒரு சோம சூத்திரப் பிரதக்ஷிணமாகும்

திதியோடு, சோமவாரத்துடன் பொருந்திய தினத்தில் அபிஷேகம் செய்தால் ஜீவன் முத்தராவர்.

நெய்தல் மலரால் அலங்கரித்துத்தரிசித்தால் எல்லாப் பாபங்களும் நீங்கும். செஞ்சந்தனக்கட்டையால் தூப மிட்டால் சிவகதி கிடைக்கும். எண்ணெய் கொண்டு தீபமேற்றினுல் சாலோக பதம் கிடைக்குமென்றால், பசு நெய்யினுல் கணக்கில்லாத தீபம் ஏற்றினோர் அடையும் பலன் கணக்கிட்டுச் சொல்ல முடியாதன்ரு? தாம ரை நூல் திரியிட்டுப் பசுநெய்யில் விளக்கேற்றினுல், சிவ சந்நிதானத்தில் சதாகாலமும் எம்பெருமான் திரு வடியிலேயே வாழலாம். முநிவர்களே! சிவலிங்க பூசை யைப்பற்றிச் சொல்லவேணுமானுல் இன்னும் எவ்வ ளவோ சொல்லலாம் என்று வசுக்களுக்கு மார்க்கண் டேயர் கூறினர்.

அஷ்டவசுக்களே! நீங்கள் சிவபூஜை செய்தால் பாப கர்மங்கள் நீங்கிச் சாபம் விமோசனமாகும்; மேன் மேலும் அயிஸ்வரியம் சம்பத்து பெருமை கவுரவம் உண்டாகும். அதற்கு விபூதி ருத்திராக்ஷம் தரித்து, பிரணவத்தோடு கூடிய ஸ்ரீ பஞ்சாக்ஷர மந்திரம் ஜெபித் துக்கொண்டு, சிவபூஜை செய்யவேண்டும். காசியினின் றும் பாணலிங்கம் கொணர்ந்து பூஜிக்கலாம். கோடிக் கணக்கானவர்கள் சிவலிங்க பூஜைசெய்து, இகத்தில் புத்ரமித்ரகளத்ராதி போகபோக்யங்களை அநுபவித்துப் பரத்தில் சிவபெருமான் திருவடி நீழல் அடைந்தார்கள் என்பது நிச்சயம்; இது வேதாகமத்தின் துணிபு.

இப்போது உங்களுக்கு காமதேனுவால் நேர்ந்த சாபம் ஸ்ரீ வேதகிரிக்குச்சென்று சிவபெருமானை ஆகம

விதிப்படி பூஜித்துக் கிரியை வலம்வந்து, சகஸ்ரதள புஷ்பமிசை வீற்றிருக்கும் உமாதேவியை வணங்கி வருவீர்களாயின் நீங்கும் என்று கூறவும், வசுக்கள் எண்மரும் சந்தோஷித்து, மார்க்கண்டேயரைப் பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்து, அவர் அநுமதி பெற்று, ஸ்ரீ வேதகிரிக்கு வந்து, சிவபெருமானைப் பூஜித்துச் சாபம் நீங்கிப் பழைய உருவெடுத்துத் தங்கள் பதிக்குப்போய்ச் சேர்ந்தார்கள். சௌனகாதி முனிவர்களே! கேட்டீர்களா! வசுக்கள் எண்மரும் அடைந்த சுகத்தை; இத்யாதி மகிமைகளையுடைய ஸ்ரீ வேதகிரியின் பெருமையை அளவிட்டுச்சொல்ல யாரால் முடியுமென்று சூதர் சொல்ல ரிஷிகள் கேட்டு ஆநந்தித்தார்கள்.

## 15. துவாதசாதித்தர்கள் பூஜித்த வைபவம்.

மஹரிஷிகளே! அஷ்டவசுக்கள் சாபம் தீர்ந்த வைபவம் சொன்னோம். பன்னிரெண்டு சூரியர்கள் வேதகிரியைப் பூஜித்த வைபவம் சொல்லுகிறோம் என்று சூதர் சொல்லுகிறார்.

வைகர்த்தன், விவச்சுவான், மார்த்தாண்டன், பாஸ்கரன், இரவி, லோகப்பிரகாசன், சாக்ஷி, சுவிக்கிரமன், ஆதித்தன், சூரன், அஞ்சுமாலி, திவாகரன் என்னும் பன்னிரண்டு சூரியர்களும், மனம் சகியாமல், வேறுபட்டு, ஒருவர்க்கொருவர் பிரகாசிப்பதில் தாம் தாம் வல்லவர்களென்று விவாதப்பட்டு, சண்டையிட்டு, சத்தியலோகம்போய்ப் பிர்ம்மாவை நமஸ்கரித்து, "சுவாமீ!

எங்களுக்குள் ஒற்றுமை இன்றிப் பிணக்கு ஏற்பட்டிருக்கிறது. இனி ஆகாயத்திற் சஞ்சரிக்குமுறை எவர் பங்கில் வருமோ? உலகம் என்னுகுமோ? தெரிகிலோம். தேவரீரிடம் இது சங்கதி விண்ணப்பிக்க வந்தோம்" என்று சொன்னூர்கள். பிரமதேவர் சற்று நிதானித்து, "ஆதித்தர்களே! நீங்கள் சம ஒளியுடையீர்கள். உங்களுக்குள் உயர்வு தாழ்வு ஒன்றும் இல்லை. வீணுக மாற்சர்யங்கொண்டு அவதிப்படுகிறீர்கள்" என்றுகூறி, க்ஷணநேரம் சடாமகுடதாரியாகிய பரமசிவனைத் தியானித்தார். பக்த பராதீனராகிய பரம்பொருள் ப்ர்ம்ம தேவரது உள்ளக்கமலத்தில் தோன்றி ஏவலிட்டபடி, சூரியர்களை நோக்கி "அப்பா! சூரியர்களே! உங்களுக்குள் இனி சண்டை வேண்டாம். மாதம் ஒவ்வொருவராக நின்று உலகிற் பிரகாசியுங்கள்" என்று கட்டளையிட்டார். துவாதசாதித்தர்களும் பிரமன் கட்டளையை சிரமேற்றூங்கி, உதயகிரியிற்றேன்றி, தத்தம் தொழிலை மாதம் ஒவ்வொருவராக நடத்தி வந்தார்கள்.

பின்னர், சந்தனச்சோலை கமழும் கிழக்கு திக்கில் போர்செய்தலே தொழிலாகவுடைய பந்தேகன் முதலிய அரக்கர்கள், இச்சூரியர்களிடம் சண்டை யிட்டுச் சூரியர்களை முறியடித்தார்கள். சூரியர்கள் மிகக் கஷ்டமடைந்து, மறுபடியும் பிரமதேவரிடம் சென்று வணங்கி "ஐயாவே! பந்தேகன் முதலாகிய அரக்கர்கள் எங்களிடம் சண்டையிட, நாங்கள் தோல்வியடைந்தோம்; வெகுவாய்க் கஷ்டப்பட்டோம்; எங்களைக்காத்து ரக்ஷிக்கவேண்டும்" என்று முறையிட்டார்கள். பிரமன் ஞானதிருட்டியினுல் நடந்த சங்கதிகளை யறிந்து, சூரியர்

களைப் பார்த்து, “ஆதித்தர்களே! அந்த அரக்கர்களை அழிக்கத்தக்க ஆயுதங்கள் உங்களுக்குக் கொடுக்க எங்களுக்குத் தகுதியில்லை. நாங்களும் அவர்களை ஒழிக்கும்படியான வல்லமை படைத்தோம் அல்லம். ஆயினும் ஓர் உபாயம் சொல்லுகிறேன் கேளுங்கள். வேதகிரி என்னும் சோதிமலை ஒன்றிருக்கிறது. அம்மலையினுச்சியில் எம்பெருமான் பரமசிவம் லோகமாதாவாகிய ஸ்ரீ திரிபுரசுந்தரியாருடன் நம்போல்வார் துன்பத்தை ஒழிக்க வீற்றிருக்கிறார். அப்பெருமானுடைய அழகிய திருவடிகளில் பூசைசெய்து, அம்மலையில் தவம் செய்வீர்களானால், உங்கள் பகைவர்கள் நாசம் அடைவார்கள். முன்னாளில் எங்களுக்குக் காயத்ரீஜெபம் உச்சரிக்கும்படி செய்து, எங்கள் துன்பங்களை நீக்கி, எங்களை ஆட்கொண்டிருக்கிறார். நீங்களும் அங்கு சென்று, பெருமானைப் பூஜித்துத் தவம் செய்யுங்கள். உங்களுக்கு அநேக நன்மைகள் கிடைக்கும். மாயா ரூபிகளாகிய அவ்வரக்கர்களும் வலியிழந்து ஒழிவார்கள். எத்தன்மையுள்ள பகைவர்களும் நாசம் அடைவார்கள். ஆதலால் காலதாமதம் செய்யாமல் இந்த க்ஷணமே அவ்வேதகிரிக்குச் செல்லுங்கள். இதுதான் நீங்கள் உய்யும் மார்க்கம்” என்று உலகெலாம் படைத்த பிரமதேவர் சொன்னார்.

பிரமன் வாக்கியத்தைக்கேட்ட பன்னிரெண்டு சூரியர்களும், உடனே வேதகிரிக்கு வந்து, சிவபெருமானைக்கண்ட அளவில், ஆநந்தபாஷ்பம் பொழிய, ஆநந்தக்கூத்தாடிக் கும்பிட்டு, வேதாகமவிதி தவறாமல் இரண்டு வேளையும் ஸ்நான ஜெபதப நியமத்துடன் சிவபூஜை

செய்து, அத்திருமலையிலேயே தவம்செய்து, ததாகாரமாய் நின்றார்கள். எம்பெருமான் இவர்களது தவத்துக்கிரங்கிக் கொன்றைமாலை சூடிய சடாமகுடத்தினையும், மான் மழுவேந்திய கரங்களையும் பொருந்தி, பெண்ணினல்லாள் என்னும் பார்வதிதேவியாருடன் ரிஷபவாகனரூடராய்க் கோடி சூரியப் பிரகாசம்போல் அருள் ஒளி பிரகாசிக்கத் துவாதசாதித்தர்கள் முன் தோன்றினார்.

ஆதித்தர்கள் பன்னிருவரும் பரமசிவத்தைத் தரிசித்துப் பணிந்து நின்று, "எம்பெருமானே! மறைமுடிக்குப் பொருத்த முறுமணியே! ஞானவாரிதியே! அன்பர்கள்தம் மனத்தே நின்று குறைமுடிக்கும் குணக்குன்றே! குன்றாமோனக் கோமளமே! தூய சிவக்கொழுந்தே! வெள்ளைப் பிறைமுடிக்கும் பெருமானே! துளவமாலைப் பெம்மானே! செங்கமலப்பிரானே! இறைமுடிக்கும் மூவர்கட்கும் மேலாய்நின்ற இறையே! அவ்விறைபுரியும் இன்பமே! அன்பர் மோகமே! மோகமெலாம் அழித்து வீறுமோனமே! மோனத்தின் முளைத்த முத்தே! எங்கள் அப்பனே! ஆருயிரே! அபயம்! அபயம்!! அசுரர்கள் படுத்துந்துயர் போதும்போதும்!! அம்பிகை பாகா! ஏழையேங்கள் செய்யும் அற்ப தவத்துக்கிரங்கி எழுந்தருளிய கிருபை என்னே! அதிசயம்! அடியேங்களை ரக்ஷிக்கவேண்டும்" என்று தோத்திரித்து நின்றார்கள். பரமசிவம், தொழுதுநிற்கும் துவாதசாதித்தர்களை நோக்கி "சூரியர்களே! உங்கள் கடுந்தவத்துக்கு நாம் மகிழ்ந்தோம். உங்கள் பூஜையை உகந்தோம். உங்களுக்கு வேண்டும் வரம் யாது? கொடு

க்கச் சித்தமாயிருக்கிறோம்" என்று கூறவும், ஆதித்தர்கள் "பரமபதீ! தேவரீரது திருவுள்ளத்தில் அறியாத விஷயம் ஒன்று உண்டோ? கருணாநிதீ! பந்தேகன் முதலாய அரக்கர்கள் எங்களைக் கஷ்டப்படுத்துகிறார்கள். அவர்களை வெல்லும்படியான சக்தியைத் தேவரீர் எங்களுக்கு அநுக்கிரகிக்கவேண்டும்" என இரங்கித் துதித்து நின்றார்கள்.

சிவபெருமான் சூரியர்களது தவ உறுதியை மனதில் நினைத்து, ஒன்று சொல்லுகிறார். "ஆதித்தர்களே! அவ்வரக்கர்கள் மாயா சொரூபிகள்; அவர்களை யடக்குவதற்கு எவர்களாலும் கூடாது. ஆயினும் நீங்கள் இவ்வேதகிரியில் வந்து தவம்செய்து, நம்மைப் பூஜித்ததால், இவ்வேதகிரி வெளியில் நின்று வில்வளைத்து, அவர்களைத் துரத்துகிறோம்; பயப்படாதீர்கள். அவர்கள் விஷயமான கவலையை இந்த நிமிஷத்தோடே விடுங்கள். ஆனால் உறுதி ஒன்று சொல்லுகிறோம். கவனமாய்க் கேளுங்கள். ஒரு க்ஷணப்போதிலும் நம்மைவிட்டுப் பிரியாமல் வேதங்கள் ஓதிக்கொண்டிராநின்ற இவ்வேதகிரிக்கும் நமக்கும் திருமேனி வேறில்லையாதலால், இவ்வேதகிரியுடன் நம்மை ஒன்றாக உங்கள் உள்ளத்தில் சதா இருத்திக்கொண்டிருங்கள். இந்த முறையை அம்மாயா அரக்கர்கள் கண்டவளவில், உங்களுடன் போர்செய்வதற்கு அஞ்சுவார்கள். நீங்கள் உய்யும் பொருட்டு *அறுதொழிலாளராகிய பிராமணர்கள் திரி

* பிராமணர்களது அறுதொழில்:—வேதமோதுதல், வேதமோதுவித்தல், யாகம் செய்தல், யாகம் செய்வித்தல், தானம் கொடுக்கல், தானம் ஏற்றல் என்பனவாம்.

காலங்களிலும் சூரியர்களைக் காக்கக்கடவதென்று கொடுக்கும் கை யருக்கியமே அவ்வரக்கர்களுடைய போர் வலியைக் குறைக்கும். * இருபிறப்பாளராகிய பிராமணர்கள் காயத்திரியிற் பிறந்தவர்கள், அந்தக் காயத்திரியாகிய மந்திரத்துக்கு இறையவர்கள் நீங்களாதலினால், பிராமணர்கள் உங்கள் புத்திரர்களாவார்கள். பிதாவுக்கு ஒரு குறை நேரிட்டால், புத்திரர்கள் காத்தளிப்பர் என்பது வேதமுறைமை யாதலின், அவர்கள் திரிகாலங்களில் விடுகின்ற அருக்கியமானது, உங்கள் பகைவர்களை யழிக்கும். நீங்கள் யாகத்துணைவர்களென்று விளங்கக் கடவீர்கள். அரக்கர் போரும் அவர்களால் நேருந்துன்பமும் ஒழிந்து, கிழக்குத்திசை மலையில் உதயமாகக் கடவீர்கள். உங்கள் தாய்க்கு சக்களத்தி [1] திதியின் குமாரர்களாகிய அரக்கர்களை வெல்லக்கடவீர்கள். உங்கள் புத்திரர்களாகிய பிராமணோத்தமர்களது இஷ்டகாம்யங்களைப் பூர்த்திசெய்யக் கடவீர்கள். பிராமணர்கள் சூரிய உதயத்துக்கு முந்தி ஸ்நானம்செய்து, ஜெபதபாதிகள் முடித்து, மூன்று காலத்தி

* பிராமண குலத்தில் பிறந்தாலும், உபநயனம் ஆகிறவரையில் சூத்திரர் என்றும், உபநயனம் ஆனபின் பிராமணத்வம் உண்டாவதென்றும் சொல்லப் படுகின்றமையால் இருபிறப்பாளன் என்பார்கள்.

[1] அதிதி என்பவளுடைய புத்திரர்கள் சூரியர்களாதலால் ஆதித்தர் எனப்படுவார்கள். அதிதிக்கு சக்களத்தி திதி என்பவளுடைய புத்ரர்கள் தைத்தியர்கள், அதாவது அரக்கர்களெனப் படுவார்கள். இவ்விருவர்களும் காசிப மகரிஷிக்கு மனைவியர்கள் பதின்மூவருக்குட் பட்டவர்கள். இப்பதின்மூவரும் தக்கன் பெண்கள். தேவர்களுக்கும் அதிதி என்பவளே தாய்.

லும் உங்களுக்கு அர்க்கியம் விடுத்து, வேதமந்திரங்களால் உங்களைத்தொழுது [1]ஆன்மப்பிரதக்ஷிணம் செய்து பணியக்கடவார்களாக. அவர்களே சூரியரக்ஷகர்கள். அவர்களுக்கு எது கொடுத்தாலும் பயன் தரும். இம்முறைசெய்யாத பிராமணர்கள் சூரிய காதகர்களாவர். வேதநெறி தவறாது ஒழுகும் பிராமணர்களால் உலகம் உய்யும். நீங்கள் உலக இருளை நீக்கிச் சுகமாக வாழுங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளி, பார்வதி தேவியாருடன் சிவலிங்கத்துள் மறைந்தார். பன்னிரு சூரியர்களும் எம்பெருமான் அநுக்கிரகித்தபடி சித்திரைமாத முதல், மாதம் ஒவ்வொருவராக, உலகில் பிரகாசித்து ஜீவர்களை ரக்ஷித்து வந்தார்கள். அந்தக் காலமுதல் இவ்வேதகிரிக்கு "பரிதிபுரி" எனப் பெயர் வழங்கி வருகின்றது என்று சூதர் சவுனகாதி மஹரிஷிகளுக்குச் சொல்ல, அவர்கள் கேட்டு அகமகிழ்ந்தார்கள்.

## 16. முநிகணங்கள் சந்தேகந்தீர்ந்த வைபவம்.

முநிவர்களே! கவனமாய்க் கேளுங்கள் என்று சூதர் சொல்லுகிறார். ஒருகாலத்தில் ஆதிசேஷன், புண்டரீக மஹாக்ஷேத்திரமென்னும் சிதம்பரத்தில் சிற்சபையின் கண், நந்தி மத்தளம்போட, நாரதர் கீதம்பாட, பிர்ம விஷ்ணு இந்திராதி முப்பத்து முக்கோடி தேவர்கள் ஹர ஹர என்று போற்றிசெய்ய, உமாதேவியார் மனங்

[1] ஆன்மப் பிரதக்ஷிணமாவது நின்ற நிலையில் உடல் சுழல்வது.

களிக்க, ஆநந்த நிருத்தஞ்செய்யும் பரமசிவத்தைப் பணிந்து தோத்திரித்து, "எம்பெருமானே! தேவரீர் திருவாய் மலர்ந்தருளிய பாணினியமென்னும் வியாகரணத்தை உபதேசிக்கவேண்டுமென்று, அருந்தவ முநிவர்கள் அடியேனைப் பிரார்த்திக்கிறார்கள். தேவரீர் அநுக்ஞையை எதிர்பார்க்கிறேன்" என்றார். பரமசிவம் "அப்பா! ஆதிசேஷா! நம்முடைய நடனதரிசனத்தை முக்கண்ணன் எதிர்பார்க்கிறான். நீ பதஞ்சலி வடிவங்கொள்வாய். அச்சமயத்தில் உபதேசிக்கலாம்" என்றனர். அவ்வண்ணமே ஆதிசேடன் பதஞ்சலிமுநிவடிவங்கொண்டு, அங்குத் தவம் செய்யும் வியாக்ரபாதமுநிவரோடு சிற்சபாநாதர் தாண்டவத்தைத் தரிசிக்கும்போது, அருந்தவத்தோர் அங்கு பிராப்தமாய், பதஞ்சலியாம் ஆதிசேடரை வியாகரணம் போதிக்கவேண்டுமென்று கேட்டார்கள். பதஞ்சலியார் சிவபெருமான் திருவருளை நோக்காமல், அப்பெருமான் திருமுடி யசைத்தலே உத்திரவெனக்கருதி, அம்முநிவர்களுக்குப்பாணினியமென்னும் வியாகரணத்தை நாத்தழும்பேறச்சொல்லிவந்தும், வேதநெறி தெளிந்த முநிவர்கள் உண்மை விளக்கம் அறியாமல், மதிமயக்கம் கொண்டார்கள்.

சிவாகாரமாயிருந்து போதியாமையால் அம்முனிவர்கள் சந்தேகம் அடைந்து, பொருள்தெரியாது, அத்தில்லைவனத்திலேயே பரமசிவத்தைக் குறித்து, நெடுநாள் அரிய தவஞ்செய்தார்கள். முநிவர் தவத்துக்கிரங்கிப் பரமசிவம் அவர்கள் எதிரிற்றோன்றி "முநிவர்களே! நான்கு வேதங்களும் வேதாங்கங்கள் ஆகமங்

கள் புராண இதிகாசங்களுடன், அகரமுடன் உகரமாகிய பரவிந்து நாதத்தில், குற்றம் நீங்கக் கலந்திருக்கும் பரிசுத்தமான வேதகிரிச் சிகரமானது பிரணவத்தின் சொரூபமாகும். அதுவே நம்முடைய சொரூபமென்று உறுதியாய் நம்புங்கள். நீங்கள் அங்கு சென்றால், உங்கள் மயக்கம் சந்தேகம் எல்லாம் தீர்ந்து உண்மை விளங்கும்" என்று அநுக்ரகித்தார். தில்லையம்பதி நாதராகிய சபாநாதர் அநுக்கிரகத்தைப் பெற்ற முனிவர்கள், சிதம்பரத்தின் எல்லையைக்கடந்து, வேதகிரிச் சிகரத்தைக் கண்டார்கள். கண்ட வளவில், உடல் புளகாங்கிதங்கொண்டு, ஆநந்தக் கண்ணீர்சொரிய, எம்பெருமானைத் தோத்திரித்த வண்ணமாய், வேதகிரித் தலத்தை அடைந்தார்கள். அக்கிரியின் அமைப்பும், பக்தகோடிகள் அக்கிரியைப் பக்தி சிரத்தையுடன் பிரதக்ஷிணம் செய்யும் நேர்மையும், முனிகளும் ரிஷிகளும் அங்கு தவமிருக்கும் பான்மையுங்கண்டு, ஆச்சரியமும் சந்தோஷமும் அடைந்து, ஆ! ஆ! இது பிரணவசொரூபம் என்பது உண்மையே, என்று அங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நாநம்செய்து, கிரியை வலம்வந்து, ஸ்ரீ வேதகிரி நாதரையும் பார்வதியாரையும் வேதாகம விதிப்படி பூசித்து, அம்மலையிலேயே தவஞ்செய்தார்கள். பரமசிவம் அம்முனிகணங்களின் மன உறுதியையும் தவப்பெருமையையும் கண்டு, தம் உள்ளத்தில் சந்தோஷித்து, அவர்களது சுத்த மனதிற்றோன்றி, பாணீனியமென்னும் வியாகரணத்தின் உண்மைப் பொருளைத் தெரிவித்தார். அவர்கள் விரும்பிய வரங்களையும் கொடுத்தார். முனிவர்கள் சிவபெருமானின் பரம காருண்ய

த்தை நினைந்து நினைந்து தொழுது சென்றார்கள். அந் நாள்முதல் இவ்வேதகிரிக்கு "முநிகணமாபுரி" என் றும் "முநிகணநாதபுர மென்றும், பெயர் வழங்கி வரு கின்றது என்று சூதபுராணிகர் சௌனகாதிகளுக்குச் சொல்ல, அவர்கள் களி மதுக் கடலிலாழ்ந்தார்கள்.

## 17. சிவபெருமான் திருகல்யாண வைபவம்.

சவுனகாதி தவமுநிவர்களே! கவனமாய்க் கேளுங் கள். சிவபெருமான் உலக மாதாவாகிய பார்வதி தே வியாரை முன் ஒருக்கால் இமயமலையில் திருமணம் செய்ததல்லாமல், பின்னும் ஒருகாலத்தில் வேதகிரித் தலத்தினின்றும் இமயமலைக்குப்போய்த் திருக்கல்யா ணம் செய்துகொண்ட வைபவத்தைக் கூறுகின்றேன் என்று சூதர் சொல்லத் தொடங்கினார்.

ஓர்காலத்தில் இமயமலைக்கரசன், தனக்கு அருந்தவப் புத்திரியாய் வந்து அவதரித்த உமாதேவியாரை, பரம சிவத்துக்கு விவாகம்செய்து கொடுப்பான் வேண்டி, எம்பெருமானின் அபிப்பிராயத்தை அறிந்துகொள்ள, கௌதமர், காசிபர், மார்க்கண்டேயர், பாரத்துவாசர், அகஸ்தியர், புலஸ்தியர், ஆங்கீரசர் என்னும் சப்தமுநி வர்களை நோக்கி, "முனிவர்களே! முன்செய் தவப்பய னால் லோக நாயகியை நான் புத்திரியாய்க்கொண்டேன். அக்குழந்தையைச் சிவபெருமானுக்கு விவாகம்செய்து கொடுக்க நிச்சயித்திருக்கின்றேன். தேவரீர் வேதகிரிக் குச்சென்று, அடியேன் சம்மதத்தைச் சுவாமி சந்நிதி யில் விண்ணப்பித்து, அவர் அநுமதிபெற்று வருவீர்

கள்" என்று பிரார்த்தித்தான். அவ்வாறே சப்தமுனிவர்களும் வேதகிரித்தலத்தை யடைந்து, பரமசிவத்தைப் பணிந்து தோத்திரித்து, "எம்பெருமானே! இமய பர்வத ராஜன் தனது குமாரத்தியைத் தேவரீருக்குத் திருமணம் செய்துகொடுக்க நிச்சயித்திருக்கிறான். தங்கள் அநுக்ஞையை எதிர்பார்த்துத் தங்கள் திருச்சமுகத்துக்கு ஏழையேங்கள் வந்தோம்" என்றார்கள். பரமசிவம் புன்சிரிப்போடு உலகம் உய்யும்பொருட்டு, ஆம்! அப்படியே யாகட்டும் என்ற குறியுடன், சிரசை அசைத்தார். சப்தமுனிவர்கள் மகிழ்ந்து, மீண்டும் வணங்கி, பர்வதராஜனிடம் சென்று, சிவபெருமான் சம்மதத்தை அவனுக்கு விண்ணப்பித்தார்கள். அரசன் சப்தமுனிவர்களையும், மற்றுமுள்ள ஜோதிட சாஸ்திர நிபுணர்களையும் வரவழைத்து, முகூர்த்த நாள் நிச்சயித்து, ஸ்ரீ வேதகிரிப் பெருமானுக்கு அறிவித்தார்கள். சிவபெருமான் நந்தியெம்பெருமானை அழைத்து, நந்தியப்பா! இமயமலை அரசன் புத்திரி பார்வதி தேவியாரை நாம் திருமணம்செய்ய நிச்சயித்திருக்கிறோமென்பதாகப் பறையறைவிக்க, உத்திரவு செய்யும்படிச் சொன்னார். அவ்வாறே அண்டசராசரங்கள் முழுதும் பறை யறைவிக்கப்பட்டது. தேவர்களும் முனிவர்களும் ரிஷிகளும் ஆநந்தித்து, விவாகத்துக்கு வந்து சேர்ந்தார்கள். பிரம்மாவானவர் சரஸ்வதி தேவியாருடன் அன்னவாகனத்தின்மீதூர்ந்து வேதகிரிக்கு வந்தார். மஹாவிஷ்ணு தன் பத்நினிகள் ஸ்ரீதேவி பூதேவிகளுடன் கருடவாகனத்தின்மீதேறி வந்தார். அமராபதிக் கரசனாகிய இந்திரன் இந்திராணியுடன் வெள்ளையானையிலமர்ந்து வந்

தான். முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிர மஹாரிஷிகளும், கருடர் காந்தர்வர் இயக்கர் பூதர் மருத்துவர் யோகியர் சித்தராதி வானவர்களும் வந்து சேர்ந்தார்கள். சடாதாரிகளும், மரவுரி யுடுத்தியவர்களும், தண்டு கமண்டலம் தாங்கிய பெரியார்களும், ஜீவ காருண்யம் நிறைந்து, மெல்லென நடக்கும் மஹான்களும், பிரபஞ்ச வாழ்க்கையை வெறுத்துப் பரிசுத்த மனதுடன் வாழும் தபோதனர்களும் வந்தார்கள், சித்தர்களும் வித்யாதரர்களும் தத்தம் உயிர்போன்ற பத்தினிகளுடன் இரத்தினங்களாலிழைக்கப் பட்ட மகுடம் பாகுவளையம் முத்துமாலைப் பதக்கம் அணிந்து, உயர் தர யாழ் ஏந்திக்கொண்டு, முத்து விமானத்திலேறி வந்தார்கள். கருடர் காந்தர்வர் கிம்புருஷர்கள், மந்தரம் மத்திமம் தாரமாகிய மூன்று இசையைக்குறிக்கும் சங்கீத சாஸ்திர முறைமை தெரிந்தவர்கள், தத்தம் பத்னியாருடன் அழகிய விமானங்களில் வந்தார்கள். நாகலோகத்து ஆடவர்களும் ஸ்திரீகளும், போகபூமி யாடவர்களும் ஸ்திரீகளும், ஆடையாபரணாலங்கிருதர்களாய் வந்து சேர்ந்தார்கள். சந்திரன் தன் இருபத்தேழு நக்ஷத்திரங்களாகிய பத்னிகளோடு மகிழ்வுடன் வந்தான். பன்னிரு சூர்யர்களும் பச்சைப்புரவி கட்டிய தேரின்மீதேறி வந்தார். ஊர்வசி, ரம்பை, மேனகை, திலோர்த்தமையாதி நடனமாதர்கள், நாலுகோடித் தோழிமார்களுடன், வந்து சேர்ந்தார்கள். மழுப்படையும் மானுமேந்தி, நான்கு புயமும் நீலகண்டமும் சந்திர சூர்யாக்னியாகிய மூன்று கண்களும், சூலமேந்திய கைகளையுமுடைய ருத்தரகணத்தலைவர்கள் வெள்ளம், நந்தி

யெம்பெருமான் அதிகாரத்துட்பட்டு வந்து சேர்ந்தன. கோரைப்பற்களும், எறித்தீப்போன்ற கண்களும், பெரிய சால்போல் வாயும், செம்பட்ட சிவந்த கறடு முறடான மயிரும், கோபுரவாயிலொத்த காதுகளும், பிரசண்டமாருதம் வீசும் மூக்கும், அண்டங்கள் எல்லாம் பொருந்தும் வயிறும், பூமிதேவி பொறுக்கலாற்றாத முதுகு நெளியும்படி குறுகிய கால்களும், பொருந்திய பூதகணங்கள் கடல் ஒலிபோல் ஹரஹர என்று சத்தமிட்டுக் கொண்டுவந்தன.

இவ்வளவு ஆரவாரத்துடன் சிவபெருமான் வீற்றிருக்கும் வேதகிரியானது சமஸ்தலோகம் ஒருங்கே நிறைந்த கைலாசம்போல் விளங்கியது. ஸ்ரீ வேதகிரிப்பெருமான் ஆடையாபரண அலங்கிருதராய், திருமணக்கோலங்கொண்டு, வெள்ளிய ரிஷபவாகனத்தின்மீதேறி, பிர்ம்ம விஷ்ணுக்கள் புடைசூழவும், இந்திராதி தேவர்கள் பின் செல்லவும், ருத்திரகணங்களையும் பூதகணங்களையும் நந்தி யெம்பெருமான் அணிவகுத்து முன்னும் பின்னும் செலுத்தவும், எம்பெருமான் இமயமலைச்சாரலுக்குத் திருமணம்செய்யப் பிரயாணமானார். குறுகிய பூதங்கள் அண்டத்தை அளாவிய குடைகள் பிடித்து நின்றன. ரிஷபக்கொடி ஆகாயம் அளாவி வீசிச்சென்றது. சங்கங்கள் அண்டங்கள் செவிடுபடும்படி தொனித்தன. தாரைகளும் திருச்சின்னங்களும் ஊதப்பட்டன. முரசவாத்தியங்கள் சப்தித்தன. எக்காளமும் தாளமும் முழங்கின. கற்பகப்பூமாரி சரம் சரமாக வீழ்ந்தன. பிராமணர்களது வேதஒலை காதுக்கு இனிமையாக முழங்கின. அண்டர்களும் முனிவர் கூட்டங்களும் ஒலி

த்த ஹரஹர என்ற சப்தம் பூவுலகெங்கும் ஆர்ப்பரித்தன. தேவ நடனமாதர்கள் பரதசாஸ்திரவிதிப்படி நடித்துப்போனார்கள். வேய்ங்குழல் வீணைவாத்தியங்கள் ஒலித்தன. சப்தமுநிவர்களும் ரிஷிகளும் சிவபெருமானது அழகிய கோலத்தைக்கண்டு மயங்கி சிவாகாரமாய் நின்றார்கள்.

இத்தறுவாயில், இமயமலை யரசன் தன் ராச்சிய முழுதும் பச்சைப் பந்தரிட்டு, மகுட தோரணங்களும் வாழை கமுகு தென்னை சோலைகளும் நாட்டி, ஊருக்கு வெளியில் ஒரு காததூரம் நிழல்கொடுக்கப் பச்சைப் பந்தல் அலங்கரித்தான். தெருவீதியெல்லாம் களப கஸ்தூரிகள் நிறைந்த சந்தனக்குழம்பு தெளித்தான். விவாகச் சடங்குசெய்யும் மகாமண்டபத்தில், நவரத்தினங்களாலிழைத்துப் பவழக்கால் நாட்டி, கெட்டி முத்தால் சிங்காரித்துப்பார்ப்பவர் கண்ணைப் பறிக்கும்படி, பிரகாசம் கொடுக்கிறவிதம் பீடம் அமைத்தான். ப்ர்ம்ம விஷ்ணு இந்திராதி தேவர்களுக்குத் தனித்தனி மண்டபங்களும், ரிஷிகள் முநிவர்களுக்கும் மற்றுமுள்ள தேவர்களுக்கும் பெரிய மண்டபங்களும் அமைத்தான். யாக மண்டபம் நிருத்தமண்டபம் நிர்ம்மித்தான். வருகிற சேனைகளுக்கு அவர் அவர் அந்தஸ்துக்குத் தக்கபடி இடங்கள் அலங்கரித்தான். அன்னசாலையின் பெருமை அளவிட முடியாமல் இருந்தது.

தூதர்கள் ஓடோடியும் வந்து, சிவபெருமான் திருமணக்கோலங்கொண்டு வருகிறார் என்று சொல்லவும், மலையரசன் அளவிலாச் சந்தோஷங்கொண்டு, மேளதாள சங்கீத வாத்தியங்களுடன், தன் சேனைகள் தன்னைச்

சூழ்ந்துவர எதிர்கொண்டுபோய், சிவபெருமானைத் தரிசித்து, மனதில் தியானித்து வணங்கிச் சோடசோபசாரஞ்செய்து, வந்தனை வழிபாடுகளுடன், தன் பொற்கோயிலுக்குள் அழைத்துவந்து, அங்கு நிர்மாணிக்கப் பெற்றுள்ள வயிரக்கால் மண்டபத்தில் முத்துமணிச் சிம்மாசனத்தில் வீற்றிருக்கச் செய்தான். மற்றும் அவரோடுவந்த ப்ர்ம்ம விஷ்ணு இந்திராதி முப்பத்துமுக்கோடி தேவர்களுக்கும், நாற்பத்தெண்ணாயிர ரிஷிக் கூட்டங்களுக்கும், தக்கஉபசாரம்செய்து, அவரவர்க்கு நியமிக்கப்பட்டிருக்கும் மண்டபத்தில் அமர்த்தினான். இயக்கர் பூதர் மருத்துவர் கருடர் காந்தர்வர், அஷ்ட திக்பாலகர்கள், ருத்திரகணங்கள், பூதகணங்கள் பைசாசகணங்கள் இவர்கள் பத்தினிகள் எல்லோருக்கும் தனித்தனி அறைகள் அமர்த்தப்பெற்றார்கள். ஊர்வசியாதி நடனமாதர்களும் அலங்கார அறைகள் நியமிக்கப்பெற்று வீற்றிருந்தார்கள். நந்தி யெம்பெருமான் தேவ சேனைகளையெல்லாம் அவரவர் இடங்களில் சரியாய் அமர்த்தி, சிவபெருமான் வீற்றிருக்கும் மஹா மண்டபத்தின் வாயலில் காவலாக அமர்ந்தார். இந்த சமயத்தில் மலையரையன் கோயில், அண்டங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து வந்து இவ்விடம் பிரகாசிக்கிறதென்று சொல்லலாமேயன்றி வேறு உவமைசொல்ல முடியாது. இந்த வைபவத்தைக்கண்ட மலையரசன் சற்று நிதானித்து "ஆ! ஆ! என்னே! ஆச்சரியம். பரமசிவம் நம் கோயிலை யடைந்ததனாலேயே நம் மூவேழ் தலைமுறை வர்க்கத்தாரும் கடைத்தேறினார்கள். எளியேனுடைய நாடு கைலையங்கிரிபோல் விளங்குகின்ற

தல்லவா? இவ்வளவும் அண்டங்கள் எல்லாவற்றை யும் ஈன்று அளிக்கும் அன்னையாகிய பார்வதிதேவி யாரை அடியேன் புத்திரியாகப்பெற்றபெருமையினாலல் லவா" வென்று ஆநந்தசாகரத்தி லழுந்தினான்.

ஈதிப்படியிருக்க, லக்ஷ்மி சரஸ்வதி இந்திராணி நாக கன்னிகைகள் தேவகன்னிகைகள் முதலிய ஸ்திரீக் கூட் டங்கள், அந்தப்புர மாளிகைக்குப்போய், பார்வதிதேவி யாரைக்கண்டு, அஞ்சலியஸ்தராய்க் கீழேவிழுந்து நமஸ் கரித்துத் துதித்துத்தோத்திரித்து "அம்மணீ! தாயே! எங்கள் பாக்கியமே பாக்கியம். எங்கள் அத்தன் கைலை யங்கிரி வாசருக்கு இடதுபாகத்தில் அமையும் தேவரீ ரது தரிசனமாத்திரத்திலேயே எங்கள் குற்றம் குறை கள் நீங்கிப் பரிசுத்தர்களானோம். தேவீ! மனோன்மணித் தாயே! எங்களையெல்லாம் ரக்ஷித்து அருள்புரியவே ணும்" என்று வணங்கினார்கள். தேவியார் புன்சிரிப் புடன் குளிர்ந்த முகத்தோடு, எல்லோரையும் ஆசீர்வதி த்து இருக்கச்செய்தாள் என்னை யீன்றதாய் பார்வதி.

உடனே அம்மையாருக்குச் சரஸ்வதிதேவியார் மந்தி ரங்களோத, கங்கையாதி தீர்த்தங்களாள் மங்களஸ்நாநம் செய்வித்து, கற்பகத்தருவினால் கொடுக்கப்பட்ட பட்டு பீதாம்பரங்களை இந்திராணி கொடுக்கத் திருமகள் அம் மையாருக்கு உடுத்துவித்து, மாணிக்கவைடூரிய நவரத் தினங்களாலிழைக்கப்பட்டு விளங்கும் விலைமதிக்கப்பெ றாத ஆபரணங்களை அலங்கரித்து, நறுமணமுள்ள புஷ் பங்கள் சூட்டி, எம்தாயாரைத் திருமகள் லக்ஷ்மி இருபுறமும், இந்திராணி முதலியதேவமாதர்கள் புடை சூழவும், கங்கையாதி நதிகள் சாமரம் வீசவும், நாககன்

னியர்கள் மாணிக்கதீபம் பிடிக்கவும், குண்டோதரன் குடைபிடிக்கவும், மிருதுவான நடையாக அழைத்துப் போய், திருக்கல்யாண மண்டபத்துள் எம்பெருமான் இடதுபாகத்தில் அமரச்செய்தார்கள். அம்மையார் வலப்புறங் காலை மடக்கி யுயர்த்தி, இடப்புறத் திரு வடியைப் படியவைத்து, திருமுகத்தைத் தாழ்த்தி நின் றனர். உடனே பிரமதேவர் வேதவிதிப்படி திருமணச் சடங்கு தொடங்கி, ஓமாக்னியை வளர்த்து நிற்கவும், மலையரையன் தன் பத்நி மேனையுடன் கங்கா தீர்த்தத் தால் தன் புத்திரி பார்வதி தேவியாரை, ஸ்ரீ வேதகிரிப் பெருமானுக்குத் தத்தம் செய்தார். உடனே எம்பெரு மான் எம் அன்னையாருக்குத் திருமங்கிலிய தாரணம் செய்தார். இச்சமயத்தில் தேவர்கள் கற்பகப் பூமாரி பொழிந்தார்கள். பிரமனும் திருமாலும் இந்திராதி தேவர்களும் சிவபெருமானையும் பார்வதியன்னையாரை யும் தோத்திரித்து நின்றூர்கள். பூதகணங்கள் வாத்திய கோஷம் செய்தன. வேதங்கள் கடலொலிபோல் கோ ஷித்தன. தேவர் முநிவர் ரிஷிகள் எல்லோரும் ஹர ஓம் ஹர ஓம் என்று தொழுது நின்றூர்கள். சரஸ்வதியாதி தேவ மாதர்கள் வாழ்த்து கூறினூர்கள். நடன மாதர் கள் பரத சாஸ்திர விதிப்படி நடித்தார்கள். பிரமதேவர் மேல் நடக்கவேண்டிய சடங்குகளை வேதவிதிப்படி செ ய்வித்துப் பின்னர் ஓமாக்னியைச் சிவபெருமான் வலம் வரும்போது, எம் அன்னையாரது கால் பெருவிரலை யெ டுத்து, லோக பிதாவாகிய பரமசிவம், அம்மியில்வைத்த அதிசயம் மஹரிஷிகளே! கேளுங்கள். இது திருமணச் சடங்கின் விதி. பின் மலையரையன் இப்பெருமையினைக்

கண்டு மகிழ்ந்து, முப்பத்திருவகைத்தானங்களையும் விதி முறை தவறாது செய்தார். அளவிலாத் திரவியங்களை அவரவர் இஷ்டம்போல் வாரி வாரி இறைத்தார். சன்மானங்கள் வெகுமானங்கள் முதலிய மரியாதைகளை அவரவர் அந்தஸ்துக் கேற்றபடி செய்து முடித்தார். மலைமலையாக அன்னபானாதிகளும் பக்ஷண பாயச வகைகளும் அளவிடக்கூடாத வண்ணம் அளித்து, எல்லோரும் போதும் போதும் என்ற வளவில் பரிமாறப் புசித்தார்கள். இவ்வாறு ஐந்து நாள் சடங்குகளும் கிரமமாய் நடந்தேறிற்று. இச்சமயத்தில் பரமசிவம் அவரவர் விரும்பிய வண்ணம் வரங்களைக் கொடுத்தார்.

அங்குட்டப்பிரமாணங்கொண்ட அகஸ்திய மஹா முனிவர் சிவபெருமான் திருக்கல்யாண தரிசனம் செய்யப்புறப்பட்டு, பொதிகை மலையினைவிட்டுவர, வடகோடுதாழத் தென்கோடு உயர, பூமியானது ஊஞ்சலாட ஆரம்பித்தது, மலையரையன் நாடு அசைந்தது. எம்பிராட்டியாகிய பார்வதிதேவியார் ஈதென்ன உத்பாதமென நடுங்கினர். தேவர்கள் பயந்தார்கள். பரமசிவம் சற்று நிதானித்து "அகஸ்தியரே! உமக்கு *திருமணக்கோலதரிசனம் அவ்விடத்திலேயே காட்டுகிறோம். நீர் அவ்விடத்திலேயே நிற்க" என உத்தரவானதும், அகஸ்தியர் பொதிகையிலேயே தங்கப்பூமி சமனாயிற்று.

இத்தகைய மகிழ்ச்சிகள் நடந்ததும், நல்ல சுப முகூர்த்

---

* அந்நாள்முதல் ஒவ்வொரு தேவாலயங்களில் நடக்கும் திருக்கல்யாணமஹோற்சவம் அகஸ்தியருக்காகவே யென்பார் அறிஞர்கள்.

த்தில் சப்த முனிவர்களும் தொழ, தேவ முனிவர்கள் வணங்க, இயக்கர் பூதர்கள் ஆநந்திக்க, கருடகாந்தர்வர் புஷ்பமாரி பெய்ய, பரமசிவம் தனது மாமனாராகிய இமயமலையரசனிடம் சுபவேளையில் ஸ்ரீ வேதகிரிக்குச் செல்ல விடைபெற்று, ரிஷபவாகனத்தின் மீது மலையரையன் பொற்பாவையாகிய பார்வதியைத்தம் இடப்பாகம் அமர்த்திப் பிரயாணமானார். ப்ர்ம்ம விஷ்ணு இந்திராதி தேவர்களும் தத்தம் வாகனத்தின் மீதேறிப் பிரயாணமானார்கள். ருத்திர கணங்களும் அணி அணியாய்ப் பரமசிவத்துக்கு முன்னும் பின்னுமாக நடந்தார்கள். தேவ மாதர்கள் நடன அலங்காரத்துடன் பின் வந்தார்கள். மேள தாள வாத்திய ஓசைகளும், சங்கம் எக்காளம் குடாமுழா ஓசையும், அண்டம் செவிடுபடும்படிச் சப்தித்தன. இமயமலைமுதல் ஸ்ரீ வேதகிரிவரையும் எங்கும் ஓரே கூட்டமாய், ஹர ஓம் என்கிற சப்தம் உண்டாச்சுது. பர்வதராஜன் தன் புத்திரியின் பிரிவாற்றுமையினால் மனம் வருந்தியும், லோகநாயகனே தனக்கு மருமகனாகக் கிடைத்த சந்தோஷப் பெருக்கினால் எல்லாவற்றையும் மறந்து, தேவர் முனிவர்களுக்கெல்லாம் பிரிவுபசாரஞ் செலுத்தி, பரமசிவத்தைக் கொஞ்ச தூரம் வழிவிட்டுவர பாதசாரியாக நடக்க, சிவபெருமான் கண்ணுற்று, அவனுக்கு உபசாரஞ் சொல்லி ஆசீர்வதித்து அனுப்பினார்.

பரமேஸ்வரன் பார்வதியாருடன் நல்ல சுப முகூர்த்தத்தில் ஸ்ரீ வேதகிரியைச் சேர்ந்து, கிரகப்பிரவேசஞ் செய்தார். மாணிக்க வைடூரிய நவரத்ந கசிதமாயிழைக்கப் பெற்றுள்ள மஹா மண்டபத்தில் சிம்மா

சனத்தின்கண் அமர்ந்தார். பார்வதியாரும் இடப்பாகத்தில் உட்கார்ந்தார். பிர்ம விஷ்ணு இந்திராதி முப்பத்து முக்கோடி தேவர்களும், சிவபெருமானைத் தோத்திரித்து சிவாகாரமாய் நின்றார்கள். ஸப்தரிஷிகள் ஆசீர்வாதம் செய்தார்கள்: வேதங்கள் திருவடி சுமந்தன; இந்திரன் காளாஞ்சி ஏந்தி நின்றான்; ஈசானன் அடப்பை காட்டினான். குண்டோதரன் குடை பிடித்தான்; வாயு ஆலவட்டம் வீசினான்; அக்நிதூபம் காட்டினான்; வருணன் பூர்ணகும்பமெடுத்தான்; நிருதி கண்ணாடி காட்டினான்; குபேரன் நவநிதி சொரிந்தான்; யமன் கஞ்சுகத்தொழில் புரிந்தான்; நாககன்னிகள் மாணிக்கதீபம் ஏந்தினார்கள்; கங்கையாதி நதிகள் சாமரை வீசினார்கள்; சுந்தரப்பெருமான் திருநீறு பெட்டி தாங்கினார்; பாநுகம்பன் ஆயிரம் வாய்களால் சங்கத்தொனி செய்தான்; பாணாசுரன் ஆயிரம் கைகளால் குடாமுழக்கம் அடித்தான்; சிவ கணத்தலைவர்கள் பல்வேறு வாத்தியங்கள் முழக்கினார்கள்; இத்தகைய உபசாரங்கள் நடக்க, எம்பெருமான் தேவர் முநிவர் யாவர்களுக்கும் உபசாரவார்த்தை சொல்லி, ஆசீர்வதித்துத் தத்தம் ஆசனத் தமரும்படி அநுக்ஞை கொடுத்தார். நந்தியெம்பெருமான் தேவர்களையெல்லாம் ஒழுங்குபெற அமர்த்தி, ருத்திரகணங்களையும் பூத கணங்களையும் அணிவகுத்து நிறுத்தி, சிவாக்ஞை என்னவருமோவென வெதிர்பார்த்து நின்றார். தேவ மாதர்கள் யாவரும் கைகட்டி வாய் புதைத்து, உமாதேவியின் ஆக்ஞையை எதிர்பார்த்து நின்றார்கள்.

இத்தறுவாயில் ஒரு விசேஷ வைபவம் நடந்ததைச் சொல்லுகிறேன். சவுனகாதி முனிவர்களே! கவனமாய்க் கேளுங்கள் என்று சூதர் சொல்லுகிறார்.

ஸ்ரீ வேதகிரிப் பெருமான் திருக்கல்யாண மஹோற்சவத்தைத் தரிசித்த பின்னர், தேவர்கள், முனிவர்கள், ரிஷிகள், பிர்ம்ம விஷ்ணு, இந்திராதி தேவர்கள் தத்தம் ஆசிரமத்தில் போய் அமர்ந்து, எம்பெருமான் புகழைப் பாடித் தோத்திரம் செய்திருந்தார்கள். பதஞ்சலி, வியரக்ர பாதர் இருவரும் பரமசிவ சந்நிதானத்தில் நின்று, வணங்கித்தொழுது, "எம்பெருமானே! தேவரீர் திருக்கல்யாண மஹோற்சவ தரிசனம் கண்டு, ஆநந்தித்தோம். இப்பெரும் பாக்கியம் அடியேங்களுக்குக் கிடைத்தது பூர்வம் செய்த தவப் பயனேயாம்" என்று உபசாரமொழிகள் சொல்லி, "பரமசிவா! எளியேங்கள் தங்கள் திருச்சமுகத்தில் செய்து கொள்ளும் விண்ணப்பம் ஒன்றுளது. தேவரீர் அநுக்கிரகிக்கவேண்டும். நாங்கள் சிதம்பரம் திருச்சிற்றம்பலமுடையானைத் தரிசித்து உண்பது அடியேங்களது நியமம். அத்தரிசனத்துக்குப் போகத் தேவரீர் விடை அளிக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். பரமசிவம் இவர்களது பிரார்த்தனையைக் கேட்டுப் புன்னகை செய்து, "பதஞ்சலி வியாக்ரபாத முனிவர்களே! வஸ்து நிச்சயம் அறியாத அவிவேகிகள் போல் பேசுகிறீர்கள்; என்னே அதிசயம்! அகண்ட பரி பூரணமாயும், ஆதி மத்யாந்த ரகிதமாயும், சத்தியம் ஞானம் அநந்தம் ஆநந்தமாயும், சத்து சித்து ஆநந்த சச்சிதானந்தமாயும், சமயக் கோட்பாடுகளுக்கெல்லாம் விளங்கத்தக்க மூர்த்தியாயும், சின்

மயமாயும், மௌனாந்தமாயும், தேசிக மூர்த்தி வடிவாயும், தத்துவமாயும், துரிய துரியாதீதமாயும், நித்யமாயும், நிட்களமாயும், நிராமயமாயும், நிர்க்குணமாயும், பஞ்சகிருத்திய கர்த்தாவாயும், பரதத்துவமாயும், பரமாயும், பரமான்மாவாயும், பரப்பிர்ம்மமாயும், பல குண பரியாய நாமங்களாற் கொண்டாடப் படுவதாயும், விளங்கப்படா நின்ற நிர்ம்மலப் பிரமப் பொருள் ஒன்றே யென்றும், அப்பொருள் நாம் என்றும், வேதாகம புராண இதிகாச சுருதி ஸ்மிருதி உபநிஷத்தாதிகள் எல்லாம் கோஷிக்கின்றதைத் தாங்கள் உணர்ந்திருந்தும், உணராதவர்கள் போல் பேசுகின்றீர்கள் ; ஆச்சரியமாயிருக்கிறது. பக்த கோடிகளின் பக்குவா பக்குவங்களை அறிந்து, அவரவர் விரும்பியவண்ணம், பல மூர்த்தங்களாக அவதரிப்போம். எம் மூர்த்தமும் நாமே தவிர பிறவல்ல வென்பதை உண்ர்ந்தவர்கள் நீங்கள். தில்லையம்பதியின் கண்ணுள்ள நடன மூர்த்தமும் நாமே. இத்திருக்கழுக்குன்றமென ருத்திரகோடியில் வேதமலையில் வீற்றிருக்கு மூர்த்தமும் நாமே. சில சமயங்களில் நமது பராக்ரமத்தை * அறுபத்து நாலு மூர்த்தமாகக்

---

* சிவபராக்ரமம் அறுபத்துநாலு : லிங்கம், லிங்கோத்பவம், அமுதலிங்கம், சதாசிவம், மஹாசதாசிவம், உமாமஹேஸ்வரம், சுகாசனம், உமேசம், சோமாஸ்கந்தம், சந்திரசேகரம், விருஷபாந்திகம், புஜங்கவளிதம், புஜங்கதராசம், சத்தியாநிர்த்தம், காளி தாண்டவம், கங்காதரம், கங்காவிசர்ஜ்ஜனம, திரிபுராந்தகம், கல்யாணசுந்தரம், அர்த்தநாரீஸ்வரம், கஜயுத்தம், சுவராபக்கம், சார்த்தூலம், ஹரி, பாசுபதமூர்த்தம், கங்காளம், கேசவார்த்தம், பிக்ஷாடனம், சும்ஹக்கம், சண்டேசாநுக்கிரகம், தக்ஷிணாமூர்த்தம், யோகதக்ஷிணாமூர்த்தம், காலாந்தகம், காமாரி, லகுலீஸ்வரம், பைரவம், ஆபதோத்தாரணம், ஸ்டுகம், க்ஷேத்ரபால

காட்டியதும், மதுராபுரியில் *அறுபத்துநாலு திருவிளையாடல் செய்ததும் நாமே. மற்றெவ்விடத்தும் எம்மூர்த்தமும் நாமே என்பதை உணர்ந்தவர்கள், உம்மைப்போன்ற ஆத்மஞானிகள். அப்படியிருக்க, நீங்கள் ஈதறியாது, மயங்கி நிற்பதற்குக் காரணம் விளங்கவில்லை. நடன மூர்த்த தரிசனம் வேண்டுமாயின், உங்களுக்கு இவ்விடமே காட்டுவோம்" என்னலும், பதஞ்சலியார் பரமசிவ வாக்யத்தைக்கேட்டு, மனம் சாந்தி அடைந்து, தம் ஆஸ்ரமத்திற்போய் அமர்ந்தார்.

வியாக்ரபாதரோ மீண்டும்,பரமசிவத்தைத் தரிசித்துத்தொழுது வணங்கி, "பக்தகோடிகளுக் கநுக்கிரகிக்கும் பரமகுருவே! தாங்கள் உபதேசித்த வாக்யங்கள் ஒவ்வொன்றும் உண்மையே. ஆயினும் "திருச்சிற்றம்பலமுடையானைத் தரிசிக்காமல் உண்பதில்லை" என்கிற விரதம்,வெகுகாலமாய் அநுட்டித்து வருகிறேன். அவ்விரதத்தைப் பங்கம்செய்ய, ஏழை மனம் சம்மதிக்கவில்லை; ஆதலின்,தேவரீர் அடியேன் மனம் சாந்தமடையத் தில்லைச் சிதம்பரம்போக அநுக்கிரகிக்கவேண்டும்" என்று தாழ்ந்து வணங்கிக் கேட்டுக்கொண்டார். பெரு

---

கம், வீரபத்மம், அகோராஸ்த்ரம், தக்ஷயக்ஞஹதம், கிராதம், குருமூர்த்தம், அஸ்வாரூடம், கஜாந்திதம், ஜலந்த்ரவதம், ஏகபாதம், திரிமூர்த்தம், கௌரிவரப்ப்ரதபம், சக்ரதானஸ்வரூபம், கௌரீலீலாசமன்விதம், விஷாபஹர்ணம், கருடாந்திகம், ப்ர்ம்மசிரச்சேதம், கூர்மசம்ஹாரம், மற்சாரி, வராஹாரி, பிரார்த்தனு மூர்த்தம், ரத்தபீக்ஷாபிரதானம், சிஷ்யபாவம்.

* ஹாலஸ்ய மகத்வமென்னும் திருவிளையாடற் புராணம் பார்க்க.

மான் மாறு சொல்லாமல் "ஆனால் உன் அபீஷ்டப்படி செய்க: வருவன வந்தே தீரும்" என்றார்.

வியாக்ரபாதர், எம்பெருமான் அநுக்ஞைபெற்று, ஸ்ரீ வேதகிரியை வலம் வந்து, ஸ்ரீ வேதகிரிப் பெருமானை யும், அருகிலிருக்கும் லோகமாதாவாகிய ஸ்ரீ திரிபுர சுந்தரி அம்பாளையும் தரிசித்து, நமஸ்கரித்து, திருச்சிற் றம்பல முடையானைத் தரிசிக்கப் பேராவல் கொண்டு, அதி விரைவாக நடந்தார். க்ஷீர நதியைக் கடந்து அக்கரை சென்றார். சிவபெருமான் ஆக்கினைக்குட் பட்ட வருணராஜன், வியாக்ரபாதரது யாத்திரையைத் தடுப்பான் வேண்டி, பேரிடி முழக்கம், மின்னல், பிர மாத மழையைப் பொழிய ஆரம்பித்தான். எங்கும் ஓரே இருள் சூழ்ந்தது. பிரமாதமான காற்று வீசிற்று. க்ஷீரநதி பிரவாகம் வந்து, இருகரையும் புரண்டது. பாதையெல்லாம் ஜலம் நிரம்பியது. என்ன செய்வார் வியாக்ர முனிவர்; மனம் வருந்தினார்; மேல் என்ன செய்வதென்று விழித்தார். ஸ்ரீ வேதகிரிப்பெருமான் திருக்கூத்தோ இது என மனம் நைந்தார். ஆகாரம் கிடையாது; நித்திரையில்லை; சரீரச்சோர்வு அடைந் தார். ஆயினும் மனம் மாத்திரம் தில்லைச் சிதம்பரே சனது திருவடியில் மூழ்கி மறைந்து, ஒன்றுந்தோன் றாமல் ஸ்தம்பித்து நின்றார்.

ஸ்ரீ வேதகிரிப் பெருமான் வியாக்ரபாதரது சித்த சுத்தியையும், மனோவைராக்கியத்தையுங் கண்டு மகிழ் ந்து, இனி தாமதித்தல் கூடாது என்று வியாக்கிரர் தங்குமிடஞ் சென்று, தில்லைச் சிற்றம்பலேசனது நிருத்த தரிசனம் காட்டப் புறப்பட்டார். ஈதறிந்த

தேவர் முனிவர் ரிஷிகள் நடன தரிசனம் காண்பான் வேண்டி, அவ்விடம் வந்து கூடினார்கள். ஐயர் திரு நடன மகிமை சொல்லக்கூடியதன்று. மானாட, மழு வாட, மங்கை சிவகாமி மகிழ்ந்து கொண்டாட, டமருகம் ஓசையிட, கற்றைவார் சடை தவழ்ந்து புரள, கங்காதேவி அலம்போசைசப்திக்க, மகரகுண்டல மாட, மூன்றாம் பிறைச் சந்திரன் பிரகாசிக்க, மாணிக்கவைடூரிய ரத்நாபரணங்கள் ஜொலிக்க, அரவாபரணம் அசைந்தாட, புலித்தோல் புரள, அபயவரத் திருக்கரங்கள் பக்தகோடிகளை எமது குஞ்சிபாத திருவடியின்கீழ் சேர்ப்பிப்போம் பயப்படாதேயுங்கள் என்று கூறிய அடையாளம் குறிப்பிக்கப் புன்னகையோடு, ஆநந்தக்கூத்தாடினார் பரமசிவம். அப்போது திருவடியின்கீழ் மிதிபட்டுக்கிடந்த முயலகன் கண் பிதுங்கியது. முதுகு நெரிந்தது. திருவடிச் சிலம்பு கலீர் கலீர் எனச் சப்தித்தது. ஐயர் திருமேனியிலுள்ள வெண்ணீறு வெள்ளிடை மலைபோல் பிரகாசித்தது. அருகே நிற்கும் உமாதேவியார் புன்னகைகொண்டு சந்தோஷித்தாள்.

இந்த நிருத்தத்தில் திருமால் மத்தளம் அடித்தார்; பிரமன் சாமவேதத்தை யாழிசையில் பாடினார்; நந்திதேவர் குடா முழக்கினார்; நாரத தும்புரு கருட காந்தர்வர்கள் கீதம் பாடினார்கள். தேவேந்திரன் தாளம் போட்டான்; தேவ தாசிகள் பரத நாட்டியம் ஆடினார்கள். பஞ்ச துந்துபிகள் சமுத்ர கோஷம்போல் ஒலித்தன; தேவர்கள் புஷ்பமாரி பெய்தார்கள்; ரிஷிகள், முநிகள், யோகிகள் ஹர ஹர என்ற சப்தத்துடன் ஸ்தோத்திரித்துத் தன்னையறியாமல், நிருத்தஞ் செய்

தார்கள். பூவுலக வாசிகள் ஐயர் நடன தரிசனத்தைக் கண்டு சந்தோஷக்கடலுள் மூழ்கி, ஒன்றுந்தோன்றாது, பித்தர் போல் நின்றார்கள்.

பக்த கோடிகளது ஹர ஹர முழக்கமும், தேவர் முனிவர்களது ஆரவாரமும், எம்பெருமானின் காற்சிலம்போசையும், பல் வகை வாத்திய கோஷமும், ததாகாரமாய் நிற்கும் வியாக்கிரபாதரது இரு செவிகளினும் நுழைந்தது. கண் விழித்தார்; என்னே இது அதிசயம்! அதிசயம்! பொன்னம்பலவாணர் பொற்றிருக்கோயிலா இது என மயங்கினார்; சொப்பனமா இது என மருண்டார்; மீண்டும் உற்று நோக்கினார்; ஆம்! ஆம்! சிற்றம்பல முடையான் திருவருள் என்று திடங்கொண்டார்; ஆச்சரியமும் அச்சமும் அடைந்தார்; ஏழையேன் பொருட்டுப் பரமசிவம் சிற்சபா தரிசனம் இங்கு காட்டியது விந்தையினும் விந்தையெனப் பேராநந்தமடைந்து, இரு கண்களினின்றும் ஆநந்த பாஷ்பம் சொரிய, இரு கைகளையும் சிரமேற் கூப்பித்தொழுது வணங்கித் தோத்திரித்தார். திருவடியில் விழுந்து நமஸ்கரித்தார். பின்னும் பரமன் புகழைப் பாடினார்; ஆடினார்; ஆநந்த பரவசங்கொண்டார்; தன்னையறியாமல் தற்போதமிழந்து நின்றார்.

நடன மூர்த்தங்கொண்ட ஸ்ரீ வேதகிரிப் பெருமான், வியாக்ரபாதரது பக்தி வைராக்கியத்துக்காகப்புகழ்ந்து, "வியாக்ரபாதரே! உமது நியமம் பூர்த்தியாச்சுதா? மனம் சந்தோஷம் அடைந்ததா?" என்று வினவி, உமக்கு என்ன வரம் வேண்டும்; கேள்; தருகிறோம் என்றார். வியாக்ரபாதர் மீண்டும் பெருமானை நமஸ்கரித்து

வணங்கி, "பரமதயாளுே! அடிமைக்குத் தங்கள் திருவருட் கிருபை பூரணமாக இருக்கும்போது, வேறு என்ன வேண்டியிருக்கிறது. தங்கள் திருவடியை மறவாத பேரன்பு ஒன்றும், தங்கள் திருவடி நீழலில் சதா வாசம்செய்யக் கிருபையும், அநுக்கிரகித்தால் அதுவே எனக்குச் சகல சாம்ராஜ்யம் அளித்தது போலாகும்" என்று சொல்லி, அப்பனே! தாங்கள் அடியேனுக்காக இங்கு காட்டிய நடன தரிசனத்தை, எப்போதும் இங்கேயே நிலை நிறுத்தவும், இவ்விடம் சிதம்பரம் போன்ற சிற்சபை அமைத்து, அதில் இக்கோலத்தோடு தேவரீர் சதா எழுந்தருளியிருக்கவும் பிரார்த்தனை" என்றார்.

பரமசிவம் "உமது இஷ்டப்படி ஆகுக; நீர் தங்கிய இந்த இடத்துக்கு *வியாக்ரபாதபுரம் என வழங்குக; என்று அநுக்ரகித்தார். அந்நாள் முதல் வியாக்ரபாதபுரம் எனவழங்கும் இச்க்ஷேத்திரத்தில் சிற்சபை ஒன்று அமைத்து, அதில் பொன்னம்பலவாணன் பக்தகோடிகளுக்கு இன்றும் நடன தரிசனம் தந்து வருகிறார் என்று தவமுனிவர்களுக்குச் சிவபெருமான் திருக்கல்யாண

---

* வியாக்ரபாதபுரம் என்பது வடமொழி; தமிழில் புலிப்பர் கோயில் என வழங்கும். திருக்கழுக்குன்றத்திலிருந்து மேற்கு 5-வது மயில் பாலாற்றுக்கு அக்கரை. செங்கல்பட்டு ரெயில்வே ஸ்டேஷனுக்கு 3-வது ஸ்டேஷன் பட்டாளம் ஸ்டேஷனுக்குத் தெற்கு ஒரு மயில் தூரம். ஆற்றங்கரை ஓரம். வசதியான இடம். சோழ கட்டிடம்: சுவாமி பெயர். வியாக்கிரபுரீஸ்வரர். அம்மன் பெயர் பாலகுசாம்பிகை: ஸ்காந்தபுராணம் நந்தீஸ்வர சம்வாதத்தில் கூறியதை ருத்திரகோடி மான்மியத்தில் 22-வது அத்யாயத்தில் சுருக்கமாகக் கூறியிருக்கிறது.

வைபவத்தையும், வியாக்ரபாதருக்குத் தரிசனந் தந்த நிருத்த வைபவத்தையும், சூதர் சொல்லக்கேட்டு, முனிவர்கள் மகிழ்ந்து, சுவாமீ! பக்தபராதீனராகிய பரமசிவத்தின் காருண்யமே காருண்யம். பரமதயாளு என்பது வாஸ்தவமே என்று சிவபெருமானை மனதில தியானித்துச் சிவாகாரமாய் நின்றார்கள்.

---

## 18. கங்காசல வைபவம்

அல்லது

### கழுகு முநிவர்கள் சாப விமோசனம்.

நைமிசாரண்யவாசிகள் சூத மஹா முநிவரைப் பார்த்து நமஸ்கரித்து, ஐம்புலன்களை அடக்கிய அந்தணர் பெருமானே! ஏழையேங்கள் வேண்டுகோட் கிரங்கி, இது காறும் கூறிவந்த ருத்திரகோடித்தல மான்மியத்தில் *ஸ்ரீ அகிலாண்டகோடி பிர்ம்மாண்ட நாயகராகிய எம்பெருமான் ஸ்ரீ வேதகிரிநாதர் பர்வதராஜன் புத்திரி

---

* அண்டங்களென்றும் புவனங்களென்றும் உலகங்களென்றும், பலவிதமாக நமது இந்து சாஸ்திரங்களில் சொல்லப்பட்டு வருகிறது. மேனாட்டுப் பூகோள படத்தில் ஆசியா, ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்டிரேலியா என ஐந்து கண்டங்களை உலகமென, ஓர் சக்கரத்தில் அமெரிக்கா பாதிபாகத்திலும், மற்ற நான்கு கண்டங்களை மற்றொரு பாகத்திலும் அமைத்துக் காட்டுகிறார்கள். தற்காலம் மேனாட்டுக் கல்வி பயிலும் மாணவர்கள் இது தான் மெய்யென்றும், இந்து சாஸ்திரங்களிற் கூறுவன

பார்வதி தேவியாரை மணஞ் செய்து வந்ததும், வியாக்ர பாத முநிவருக்காக, ருத்திரகோடிக்கடுத்த க்ஷீர நதிக் கரையில் நடன தரிசனம் காட்டியதும் கேட்கக் கேட்க வெகு சிறப்பாயிருக்கிறது. தேவரீர் சிரமமில்லாமல் சத் விஷயமாகவே எங்கள் பொழுதைப் போக்குவதை உற்று நோக்கினால், நாங்கள் பாக்கியசாலிகளே. மேலே

---

வெல்லாம் பொய்யென்றும் சொல்லுகிறார்கள் சூர பதுமன் ஆயிரத்தெட்டு அண்டங்களை அரசாக்ஷி செய்து வந்தான் என் பதைக் கந்த புராணம் மிகவும் கம்பீரமாகக் கூறுகிறது. இதற்குச் சாஸ்திர சம்மத மீதெனத் தெரிந்தவரையும் விளக்கு வாமாக.

"ஏழ்கடற் றீவேழ் குன்ற மெட்டொரு செம்பொன்மேரு,
சூழுமோர் நேமிகுன்றம் செப்பிலோர் உலகமாகும்,
தாழ் தருமுலக மீரேழ் சாற்றிலோ ரண்டமாகும்,
வாழுமாயிரத் தெட்டண்டம் வகுத்ததோர் புவனமாமே."

"பூவிரு நூற்றெண் மூன்று புரிந்தவோர் அகிலாண்டமென்பர்,
அவையகிலாண்டங்கோடி கொண்டது ப்ர்ம்மாண்டந்தான்
நவையுறு ப்ர்ம்மாண்டங்கள் நாயகனருளிற் சற்றே,
உவரியிற் பக்கஞ் சிந்தும் திவலையென் றுரைக்கலாமால்."

இவ்விரு பாட்டுக்களின் அருத்தத்தைக் கவனித்தால், (லவண, இக்ஷு, சுரா, சர்ப்பி, ததி, க்ஷீர) சமுத்திரங்கள் ஏழும், (ஜம்புத்து வீபம், பிலக்ஷத்துவீபம், சான்மலித்துவீபம், குசத் துவீபம், கிரௌஞ்சத் துவீபம், சாகத் துவீபம், புஷ்கரத்துவீபம்,) எனத் தீவுகள் ஏழும், அஷ்டகுல பர்வதங்களும், மேருபர்வத மும், இவைகளைச் சுற்றியுள்ள சக்கரவாளகிரியும் சேர்ந்தது ஓர் உலகமாகும். இக்கணக்கினையுடைய பதினாலு உலகங்கள் கொண்டது ஓர் அண்டமாகும்; இத்தகைய அண்டங்கள் ஆயி ரத்தெட்டு சேர்ந்தது ஓர் புவனமாகும்; இம்மாதிரி புவனங்கள் இருநூற்றிருபத்திநான்கு சேர்ந்தது ஒரு அகிலாண்டம்; இன் னணைய அகிலாண்டங்கள் கோடி சேர்ந்தது ஒரு பிர்ம்மாண்டம். இப்படிப்பட்ட பிர்ம்மாண்டங்கள் கணக்கில்லாதது உண்டு. இவைகள் சர்வலோகநாயகனது அருட்சத்தியின் சந்நிதானத்தில்,

நடந்தவற்றைத் தயவு செய்து சொல்லவேண்டுமென்று பிரார்த்திக்க, சூதர் மனமகிழ்ந்து, முனிவர்களே! சத் விஷயமாக உங்களுக்குச் சொல்வதினின்றும் யானும் பாக்கியசாலியே யாவோம்! பல்லூழிகாலம் பரமேஸ்வரன் திருவடி தொழுதார்க்கல்லவோ சிவபுராணம் கேட்கவேண்டும் என்னும் ஆசை உண்டாகும் என்று சூதர்மேல் நடந்தவற்றைச் சொல்லுகிறார். கழுகுகள் பூஜித்துப் பேறுபெற்ற வைபவத்தைச் சொல்லுகிறேன்.

கங்காசலம், கழுகாசலம், கழுக்குன்றம் என்பனவாய பலபேதவகைச் சொற்கள் ஒரே பொருளைக் கொடுக்கும். கழுகுகள் வசிக்குமலை யென்றாலும், கழுகுகள் பூஜித்த மலையென்றாலும் பொருந்தும்.

---

மஹா சமுத்திரத்தினிடத்துண்டாகும் அலைகளினின்று தோன்றும் ஒரு திவலைக்குக் கூட சமானமில்லை என்பது பொருள். இதை அநுசரித்தே ஸ்ரீமத் ராமலிங்க சுவாமிகள் தமது திருவருட் பாசுரம், நடராஜபதி மாலையில் "ஒரு பிரமனண்டங்கள் அடிமுடிப் பெருமையே யுன்ன முடியா வவற்றி, னோராயிரங் கோடி மாலண்ட மரனண்டமுற்ற கோடா கோடியே, திருகலறு பலகோடி யீசனண்டஞ் சதாசிவ வண்டமெண்ணிறந்த, திகழ்கின்ற மற்றைப் பெருஞ் சத்தி சத்தர்தஞ் சீரண்டமென் புகலுவேன், உருவுறு மிவ்வண்டங்களத்தனையு மருள்வெளியிலுறு சிறு வணுக்களாக, வூடசைய வவ்வெளியி னடுநின்று நடனமிடு மொரு பெருங் கருணையரசே, மருவியெனை யாட்கொண்டு மகளுக்கி யழியா வரந்தந்த மெய்த்தந்தையே, மணிமன்றி னடுநின்ற வொரு தெய்வமே யெலாம்வல்ல நடராஜ பதியே" என்றார். "மண்டலத்தின்மிசை யொருவன் செய்த வித்தை யகோவெனவும் வாரணுதி, அண்டமவை யடுக்கடுக்கா யந்தரத்தி னிறுத்துமவ தானம்போல, எண்டரு நல்லகிலாண்ட கோடியைத் தன்னருள் வெளியிலிலக வைத்துக்கொண்டு நின்ற வற்புதத்தை யெவராலு நிச்சயிக்கக் கூடாவொன்றை" என்றார் தாயுமானவர்.

முன்ஞேர் காலத்தில், பிர்ம்மாவின் மானஸீக புத்திரர்கள் எண்மர்கள், சாரூப பதவியை வேண்டிக் கடுந்தவம் புரிந்தார்கள். சிவபெருமான் அவர்கள் தவத்துக்கிரங்கி, ரிஷபாரூடராய் பார்வதி சமேதராய் எண்மர் முன் தோன்றி, "தபசிகளே! உங்களுக்கு என்ன குறை? யாது வேண்டும்? உங்களது தவத்துக்கு நாம் மகிழ்ந்தோம்" என்ருர். பிரம புத்ரர்கள் எண்மரும், தவத்தினின்றும் கண் விழித்து, தம் மெதிரிற்ருேன்றிய கருணைக்கடலாகிய பரமசிவத்தை நமஸ்கரித்து, வணங்கித் தொழுது, கைகட்டி வாய்பொத்தி நின்று, "எம் பெருமானே! ஏழையேங்களது தவத்துக்கிரங்கி வந்த அண்ணலே! எழுதரு மறைகடேரு இறைவனே! சத்து சித்து ஆநந்த சொரூப சித் சோதியே! அன்னையினும் பெரிதினிய கருணையூட்டும் ஆரமுதே! எழுத்தறிந்து தமை உணர்ந்தோருள்ளத் தியங்குகின்ற சிவமே! பற்றறியா முத்தர் தமை வாழைப்பழம்போல விழுங்குகின்ற பரமே! மாசு பெற்றறியாப் பெரும் பதமே! தங்கள் தரிசனம் கிடைத்த பின்னர், எங்களுக்கு என்ன குறையுளது? வேண்டியது என்ன இருக்கிறது? பரமபதி! எங்களை ஆட்கொளவேண்டி எழுந்தருளியசெல்வமே! என்று மீண்டும் மீண்டும் தொழுது, வணங்கித் தோத்திரித்து, சாயுச்சிய பதவியை அநுக்கிரகிக்கவேண்டும் எனப் பிரார்த்தித்து நின்ருர்கள். குன்ரு ஞானக்கொழுந்தாகிய பரமேஸ்வரன் ஆச்சரியமுற்று, தபசிகளே! நன்ருயிருக்கிறது உங்கள் விருப்பம்; நீங்கள் விரும்பியதைக் கொடுக்கத் தடையில்லையாயினும், ஒன்றை விரும்பித் தவஞ்செய்து, மற்ருென்றை

வினவினீர்கள். உமது ஆருயிருக் காருயிராய் நிற்கும் நாம் அறியாத தொன்றில்லை. மனமொன்றும் செயலொன்றுமாக நடித்தல் சிவத்துரோகம் என்பதைச் சிறிதும் சிந்தித்தீர்களில்லை. கடுந்தவம் புரிந்தும், வேத சாஸ்த்ரங்களைக் கற்றுணர்ந்தும், கன்மவினை உங்களை விட்டு நீங்கினதில்லை; ஆதலால் நீங்கள் எண்மரும் பிணங்களைப்பிடுங்கித் தின்னும் கழுகுகளாகப்பிறந்து, உழல்வீர்களாக" என்று சாபம் கொடுத்தார் சிவபெருமான். தவசிகள் சாபத்தைக் கேட்ட மாத்திரம், நடுங்கிப் பயந்தார்கள். மனந்தடுமாறி, வாய் குளறி, ஒன்றுந் தோன்ருது பிரமை கொண்டார்கள்; வருந்தினார்கள் ; ஆ! என்னே! கஷ்டம்! கிணறு வெட்டப் பூதம்புறப்பட்ட கதைபோல், கடுந்தவம் புரிந்து கஷ்டம் விளைவித்துக் கொண்டோம். எங்கள் கன்ம வினை நாநுனியினின்று தோன்றியது. இனி என் செயலாம்! என்று மனதை ஒருவாறு தேறுதல் செய்து, மீண்டும் பரமசிவத்தை வணங்கி "ஆராவமுதே! அளவிலாப் பெம்மானே! ஓராதாருள்ளத் தொளிக்கு மொளியானே! நீராயுருக்கி யெம்மாருயிராய் நின்றானே! இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே! அன்பருக்கன்பனே! அற்புத சிகாமணீ! ஆநந்த நடனா! நாங்கள் செய்த குற்றத்தை மன்னித்து, அநுக்கிரகஞ்செய்யவேண்டும். எழுவகைப் பிறவிகளுள் எதுவரினும் வருக; வழுவகைத் துன்பமே வந்திடினும் வருக; மிகவாழ்வுவரினும் வருக; மதிவரினும் வருக; அவமதி வரினும் வருக; மற்றெதுவரினும் வருக ; எது போகினும் போக ; தங்கள் இணையடிகள் மறவாத பேரன்பு ஒன்று அநுக்கிரகஞ் செய்யவேண்

டும், என்று வணங்கித் தோத்திரித்து நின்றார்கள். பரமேஸ்வர் இத்தவசிகளின் மன உறுதியைக் கண்டு பரிதபித்து, பிரம புத்திரர்களே! கேளுங்கள். நீங்கள் எண்மரும் யுகத்துக்கு இரண்டு கழுகுகளாகப் பிறந்து, எம்மைத் தோத்திரித்துத் தொழுது வணங்கி, யுக முடிவில் சாயுச்சிய பதவியைச் சேருங்கள். உங்கள் சாபம் நிவர்த்தியாகும். நீங்கள் தவஞ் செய்வதற் குரிய இடம் உருத்திரகோடித் தலமே சிறந்தது. இது பூவுலகத்துள்ளது. ஹிமாசலத்துக்குத் தெற்கே இரு நூறு யோசனை தூரம்; சமுத்ரக்கரைக்கு மேற்கு ஒருயோசனை தூரம்; ஸ்ரீ காஞ்சிமாநகருக்குக் கிழக்கு ஐந்து காத தூரம்; க்ஷீரநதிக்குக் கிழக்கு ஐந்துமயில் தூரம். இதன் மத்தியிலுள்ளது. இங்கு ஸ்ரீ வேதகிரி என்றொரு மலையுண்டு; நான்கு வேதங்களே நான்கு மலைகளாகவும், அதன் உச்சியில் நாம் மலைக்கொழுந்தே உருவாக அமர்ந்துள்ளோம். அங்கு கழுகுக்கூட்டங்கள் விசேஷமாக வசித்திருக்கும்" என்று கூறிப் பரமேஸ்வ ரன் அந்தர்த்தானமாயினர், என்று சூதர் சொல்லவும், தவச் சிரேஷ்டர்களாகிய சவுனகாதிகள், சுவாமீ! பிரம புத்திரர்கள் எண்மரும் எப்படிப் பிறவியெடுத்து மோ க்ஷம் அடைந்தார்கள் எனக்கேட்கச் சூதர்சொல்லுகிறார்.

## 1-வது கிரேதாயுகத்தில்

## சண்டன்-பிரசண்டன் மோக்ஷமடைந்தது.

நீர்வளம் நிலவளம் குடிவளம் முதலிய பல் வளங் களும் நிறைந்து, அஷ்டயிஸ்வரியங்களும் பொருந்தி,

அழகிய மலைகளாலும் குளிர்ந்த சோலைகளாலும் அலங்கரிக்கப்பட்டு விளங்கும், சான்மலி என்னும் நாட்டின் கண், கிரேதாயுக ஆரம்பத்தில் விருத்த சிரவா என்னும் முனிவர் வசித்திருந்தார். இவருக்கு நெற்றியில் சண்டன் என்பானும், மார்பில் பிரசண்டன் என்பானும், கழுகு உருவாகத் தோன்றினார்கள். கழுகுருப்பெற்ற இரண்டு புத்திரர்களைப்பார்த்து, விருத்த சிரவா என்னும் பிதா, மனம் வருந்தினாராயினும், புத்ரர்களே! வினைக்கீடாக நீங்கள் கழுகுரு வமைக்கப் பெற்றீர்கள். குற்றமில்லை; நீங்கள் பக்ஷிகளுக்கெல்லாம் அரசராயிருந்து காலங்கழியுங்கள் என்று ஆசீர்வதித்தார். புத்திரர்கள் பிதாவின் ஆசீர்வசனங்களைக் கேட்டு, “ஐயாவே! உங்களை நமஸ்கரித்து ஓர் விண்ணப்பம் செய்கிறோம். பெருவாழ்வும் சம்பத்தும் பெருமையும் கவுரவமும் நிறைந்த அரச சம்பத்து, பெருந்துன்பத்துக்கும் பாவத்துக்கும் இடந்தரும். தருமநெறியாகப் புண்யகர்மங்களைச்செய்தாலும், அது பஞ்சேந்திரிய வழியில் மனம் சென்று, பிறவியைக்கொடுக்கும். அநித்யமான உலக மாயையிற் சிக்குண்டு, போக போக்கியாதிகளை அநுபவிக்க, எங்களுக்கு விருப்பமில்லை. சம்சார சாகரமாகிய இல்வாழ்க்கையிலாவது, அரசாக்ஷியிலாவது ஆசையில்லை. பிறவித்துன்பத்தை வேரோடறுக்கும் மோக்ஷம் அடையும் மார்க்கம் ஒன்றை, பிதாவே! தேவரீர் அனுக்கிரகம் செய்யவேண்டும்” என்று விநயமாய்க்கேட்டுக் கொண்டார்கள். இந்த அருமையான வசனங்களைக்கேட்டு, பிதா மனமகிழ்ந்து, புத்ரர்களை எடுத்து மார்போடணைத்து, உச்சிமோந்து, பன்முறை

முத்தமிட்டு, புத் என்னும் நரகத்தினின்றும் எங்களை விடுவிக்க வல்ல புத்திரர்களே! நீங்கள் கேட்ட காரியம் சாமான்யமல்ல: பிறவித்துன்பம் நீங்கவேண்டியிருந்தால், அஷ்டாங்கயோகங்களோடே கூடின யக்யம், தானம், தபசு, தியானம், சந்தியா வந்தனம், பஞ்ச மகா யக்யங்கள், அக்நிஹோத்ரம், தீர்த்தயாத்திரை, சாஸ்திராப்யாசம், சமாராதனை, தர்ப்பணுதிகளோடு கூடிய கர்மயோகங்கள் முதலிய எது செய்யினும் பிரயோசனமில்லை. (1) தான் என்பதை உள்ளவாறு அறிய வேண்டும். அறிவின்மையினுலுண்டான பிறவித்துன்பம், அறிவு உதயமாய்த் தன்னைத்தான் அறிந்து ஆராயுமட்டும் இருக்கும். தன்னை யென்றது, அழியும்படியான தேகத்தில் அழிவற்றவனுய்ச் சேடித்திருக்கிற பிரத்யேக ஆத்மா என்னும் கூடத்தன். தான் என்பது போதமாகிய அறிவு. தன்னைத்தன்னுல் அறிய வேண்டுமேயல்லாமல், மற்றொன்றினுலும் அறிய முடியாது. அறிவினுல் தன்னை ஆராய்ந்து பார்த்தாலன்றித் தான்

---

[1] "தன்னை யறியத் தனக்கொரு தீங்கில்லை
தன்னை யறியாமற் றுனே கெடுகிருன்
தன்னை யறியு மறிவை அறிந்த பின்
தன்னை யர்ச்சிக்கத் தானிருந் தானே."
"அறிந்தேனிக்காயத்தை அறிவு தனைக்கண்டு,
அறிந்தேனென்னுள்ளே ஆடுந் திருக்கூத்தை
அறிந்தவ ரறிந்தா லறிவறி யாரே."
"அறிவு சிவமா யறிய வல்லார்க்கு
அறிவினுள்ளே யானந்தமாமே."
"பொன்னை மறைத்தது பொன்னணி பூஷணம்
பொன்னில் மறைந்தது பொன்னணி பூஷணம்,"

(திருமந்திரம்.)

எனல் கூடாது. (1) தேகம் இன்னதென்றும், தேகி இத் தன்மையனென்றும் உணர்பவன் எவனோ, அவனே தன்னைத்தான் அறிபவனாகும். எவன் பிரமமாகிய தன்னை மறந்தானோ, அவன் எவ்வித பதவிகளிலும் நிலையின்றிச் சுழற்காற்றிலகப்பட்ட பஞ்சுபோல், கால சக்கரமென்னும் மயக்கத்தில் மாறாது பிறந்து இறந்து திரிந்துகொண்டேயிருப்பான். தன்னையும் தனக்காதாரமான பிரமத்தினிலைமையும், வேதமஹா வாக்கியஉபதேசப்படி தரிசிப்பானாயின், பின்னர் அப்பிரமமே தானாய், தானே அப்பிரமமாய் விளங்கப்படுவன். அப்படி விளங்கும் அநுபவத்துக்கு உதயாஸ்தமன மின்மையால் ஜனன மரணம் கிடையாது.

நான் என்று சொல்லாதவர்கள் உலகில் ஒருவருமில்லை; அதை இன்னதென்று அறியமுயல்வாரும் ஒருவரில்லை. ஆராய்ந்து ஆராய்ந்து பொருளல்லாதவற்றைப்பொருளாகக் காண்பதனால் துவிதபேதம் அற இடமில்லை. நான் என்பது நீ என்னும் ஞானமாகிய வித்தையும், பிரம மென்பது ஆநந்தமுமாகும். நான் என்பதற்குச் சுயம் வடிவம் மெய்யுணர்வு. இதை மறந்த அறிவே மூலப் பிரக்ருதி; இதை மறந்த அறிவே மக தத்வம்; இதை மறந்த அறிவே அகங்கார தத்துவம்; இதை மறந்த அறிவே குணத்திரயம்; இதை மறந்த அறிவே

---

[1] "தன்னையுந் தனக்காதாரத் தலைவனையுங் கண்டானேல்
பின்னையத் தலைவன்றானாய்ப் பிரமமாய்ப் பிறப்புத்
தீர்வன்."
"இன்னது தேகம் தேகி யிவனென உணர்வன் யாவன்
அன்னவன் றன்னைத் தானென்றறிந்தவனாகும்."
(கைவல்யநவநீதம்.)

ஈசன்; இதை மறந்த அறிவே சீவன்; இதை மறந்த அறிவே சூக்கும பூதம்; இதை மறந்த அறிவே சூக்கும பௌதிகமான மனது. இதை மறந்த அறிவே ஸ்தூல பூதம்; இதை மறந்த அறிவே, ஸ்தூல பவுதீகமான தூலதேகம்; இதை மறந்த அறிவே எழுவகைத் தோற்றத்திலொன்று; இன்னும் இதனினுங் கீழாகக் கிடக்கும் பேதங்களும் அநேகம் உண்டு.

நான் என்னும் பொருள்யாதோ அது*பிறந்ததுமில்லை இறந்ததுமில்லை. அதுவே கூடத்தன்; கூடத்தனே பிரமம் என்று அறியுங்கள். ஞானமே பிரமமென்னும் ("பிரக்ஞானம் பிர்ம்மம்") இருக்கு வேதவாக்கியமும், நான் பிரமமென்னும் ("அகம் பிரமாஸ்மி") யசுர் வேத வாக்கியமும், நான் பிரமமாகிறேன் ("தத்வமசி" அது நீயானாய்) என்னும் சாம வேதவாக்கியமும், நான் ஆத்மா பிரமம் என்னும் ("அயம் ஆத்மா பிரமம்") அதர்வண வேதவாக்கியமும் கூறுகின்றபடி, இதுவே அதுவாய், அதுவே இதுவாய் இருக்கும். இதுவே மெய்ஞ் ஞானம். புத்திரர்களே! இந்த ஞானம் அடைய வேண்டில், பரமேஸ்வரனைப் பூஜிக்கவேண்டும். அவரது அநுக்கிரகத்தால் கிடைக்கும் என்று சிவபெருமானைப்

---

* "பிறந்ததுண் டானலன்றோ பிறகுசாவதுதா னுண்டாம்
பிறந்ததே யில்லை யென்னும் பிரமமு மதுவும் நானே
பிறந்தது நானன்றாகில் பிரமமென்றந்த நானே
பிறந்தது மிறந்ததற்ற பிரமமா நானே நானே."

(கைவல்ய நவநீதம்.)

"நானெனவும் நீயெனவு மிருதன்மை நாடாமல்
நடுவே சும்மாய்த்தானமரு நிலை யிதுவே
சத்தியம் சத்தியம்." (தாயுமானவர்.)

பூஜிக்கும் கிரமங்களையும் அவரை, யடைய வேண்டிய தபோ மார்க்கத்தையும், சாங்கோபாங்கமாக, அவர்கள் மனம் தெளியும்படிப் போதித்தார். இவ்வாறு போதித்த பிதாவின் திருவடிகளைப்புத்ரர்கள், நறுமலர்களால் அருச்சித்துப் பூஜித்து வணங்கிப் "பிதாவே! பரமசிவத்தைப் பூஜித்து, அவரது திருவருளைப் பெறும் மார்க்கத்தை உபதேசித்தீர்கள். அவரைப் பூஜிக்கும் உத்கிருஷ்டமான இடத்தைத் தேவரீர் சொல்ல வேண்டும் என்றார்கள். பிதா மிகக் கருணையோடு "புத்ரர்களே! சிவபெருமான் எங்கும் எவ்விடத்தும் எக்காலத்தும் நிறைந்து பரிபூர்ணராயிருக்கிறார். ஆயினும், நம் போன்ற ஜீவர்கள் பக்தி செய்து பூஜிப்பதற்கு, மூர்த்தி தலம் தீர்த்தங்களை, நம்பெரியார்கள் கற்பிக்கப் பட்டிருக்கிறார்கள். அவற்றுள் உருத்திரகோடித் தலம் என்றொன்று, ஸ்ரீ காஞ்சிமா நகருக்குக் கிழக்கு ஐந்து காத தூரத்திலுள்ளது. அங்கு நான்கு வேதங்களே அமைந்து, ஸ்ரீ வேதகிரி என்னும் பெயர் பெற்ற மலை ஒன்று உண்டு. அதன் உச்சியில் சிவபெருமான் மலைக்கொழுந்துருவாய் எழுந்தருளியிருக்கிறார். ப்ரம்ம விஷ்ணுக்கள், கோடிருத்திரர்கள், நந்தி யெம்பெருமான், தேவேந்த்ரன், அஷ்டவசுக்கள், பனிரெண்டு சூரியர்கள், மார்க்கண்டேயர், அகஸ்தியர், வருணன் முதலியோர் தவஞ் செய்து பேறு பெற்றார்கள். இம்மலையில் தபோதனர்களும், முனிசிரேட்டர்களும், மஹா சித்து புருஷர்களும், சதா வாசம் செய்கிறார்கள். இத்தகைய மகிமைகளைப் பொருந்தி விளங்கும் வேத மலையில், நீங்கள் போய்த் தவஞ் செய்வீர்களானால், உங்களுக்குச் சிவாபராதத்

தால் நேர்ந்த சாபமும் நீங்கும்; சாயுச்சிய பதவியுங் கிடைக்கும். ஆத்ம ஞானமும் உண்டாகும்" என்றார். பிதாவின் ஆக்ஞையைச் சிரமேற்றாங்கிப் புத்திரர்கள் இருவரும் பிதாவை நமஸ்கரித்து, அவர் ஆசீர் வசனம் பெற்று, ஸ்ரீ ருத்ரகோடி க்ஷேத்திரம் வந்து, சங்கதீர்த்த த்தில் ஸ்நாநம் செய்து, ஸ்ரீ வேதகிரியை வலம் வந்து, ஸ்ரீ வேதாத்ரீநாதனைத் தரிசித்து, அத்திருமலையில் தங் கித் தவஞ் செய்வாராயினார்கள். இவர்களது உக்ரதவத் துக்கிரங்கி, பரமேஸ்வரன் ரிஷபவாகனாரூடராய்த் தோன்றி, "முநிவர்களே! உங்கள் தவத்துக்கு மகிழ்ந் தோம். நீங்கள் எது விரும்புகிறீர்களோ அதை அநுக்கிரகிக்கிறோம் என்னலும், சண்டன்-பிரசண்டன் என்றிரு கழுகு முநிவர்களும், எம்பெருமானைச் சோட சோபசாரத்துடன் வணங்கி நமஸ்கரித்து, "கருணாகர மூர்த்தீ! தங்களுக்குத் தெரியாதவிஷயம் என்ன இருக் கிறது? நாங்கள் உலகப்பற்றினிடத்து விருப்புடை யோம் அல்லம்; தேவரீர் கிருபை வைத்து *சாயுச்சிய

---

* ஸாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியம் என நான்கு பதவி கள். இந்நான்கும் வடமொழி; ஸ-அவன். லோகம்-உலகம். ஸாலோகமென்றால் அவனது உலகத்தில் வசித்தல்; சாமீபம்-அவனது உலகத்தில் அவன் சமீபத்திலிருத்தல்; சாரூபம்-அவனது உருவமைந்திருத்தல்; சாயுச்சியம்-அவனுடன் இரண் டறக்கலத்தல். சாலோக சாமீப சாரூபமென்னும் பதமுத்திகள் அநித்யமாகையால் அசத்தியம். சாயுச்சியம் நித்தியமாகையால் அது சத்தியம். சரியை கிரியை யோகம் என்னும் மூன்றையும் அனுட்டித்தவர்கள், முறையே சாலோக சாமீப சாரூப பதவி களை அடைவார்கள்; ஞானத்தை அனுட்டித்தவர்கள் சாயுச்சி யத்தை அடைவார்கள். சாயுச்சியமே பரமமாமுத்தி. ஞானத் தில் சரியை-தத்துவங்களை நியதிகளைந்து, தன்னை அருளாலறிந்து,

பதவியை எங்களுக்கு அநுக்கிரகிக்கவேண்டும்'' என்று இரந்து நின்றார்கள். பரமசிவம் கழுகு முநிவர்களை நோக்கி, "குழந்தைகளே! இந்தக் கிரேதாயுகம் முடியுமளவும், இம்மலையிலேயே தவஞ் செய்துகொண்டிருங்கள். இவ் யுகமுடிவில் உங்கள் மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறோம்" என்று ஆசீர்வதித்து மறைந்தார். அவ்வாறே இருகழுகு புத்ரர்களும், கிரேதாயுகம் முடியுமளவும், இவ்வேதகிரியை வலம்வந்தும், ஸ்ரீவேதாத்ரீநாதனைத் தருசித்தும், இம்மலையிலேயே தவஞ்செய்தும் வந்து, கிரேதாயுகமுடிவில் பரமசிவாக்கினைப்படி பரமசிவத்துடன் இரண்டறக் கலந்தார்கள் என்று சூதர் சவுனகாதிகளுக்குச்சொல்ல, முநிவர்கள் மனமகிழ்ந்து, மேல் நடந்தவற்றைக் கேட்க ஆசையுற்றார்கள்.

## 2-வது திரேதாயுகத்தில்,

## சம்பாதி-சடாயு மோக்ஷம் அடைந்தது.

இரண்டாவது, திரேதாயுகத்தில் சம்பாதி சடாயு என்னும் இரண்டு முநிவர்கள் பூர்வம் செய்தவினைப்பய

---

முடிவில் நிற்பது. ஞானத்தில் கிரியை-அருள்வடிவாயிருப்பது. ஞானத்தில் யோகம்-அருள் வடிவாயிருந்து, தற்போதஞ் சிறிதுந் தோன்றாதொழிந்து, ஞானத்தைப் பெறுவது. ஞானத்தில் ஞானம்-பரைநீக்கத்திற்றோன்றும் ஞானனந்தத்தில் அதீதப்படுவது. ஞானத்தினாலேயே மோக்ஷம். "ஞானத்தின் ஞானதி நான்கு மாஞானிக்கு, ஞானத்தின் ஞானமே நானென்னதென்னாமல், ஞானத்தில் யோகமே நாதாந்த நல்லொளி, ஞானக்கிரியையே நன்முத்தி நாடலே." (திருமந்திரம்.)

னுக்கிடாகக் கழுகு உருவாகப் பிறந்தார்கள். இவர்களுள் மூத்தவனாகிய சம்பாதி என்பான், தன் தம்பி சடாயுவைப்பார்த்து, "உன்னிலும் யான் அதிக பலம் உடையவன்: என்றனன்; இளையோனாகிய சடாயு, தன் தமயனைப்பார்த்து, சீசீ! உன் பலம் என்னதுக்கு இணையாகுமா? உன்னிலும் யானே அதிக பலம் உடையவன்" என்றனன். இவ்வாறு தமயன் தம்பி இருவர்களும், ஒருவருக்கொருவர் வாதாடி வழக்கிட்டு, முடிவு அறியாமல், ஓர் வித சமாதான புத்தியோடு, நாம் ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுத் தன்னைத்தான் புகழ்ந்துகொள்ளுவதிற் பிரயோசனமில்லை. நாம் இருவரும் ஆகாயத்திற் பறந்து, சூரியமண்டலம் அடைய வேண்டும். யார் முன்னே செல்கிறார்களோ, அவர்களே பராக்ரமசாலிகளெனப்படுவர், என்று சபதஞ்செய்துகொண்டு, அவ்விடமிருந்த முநிகணங்களைச் சாக்ஷி வைத்து, மகம்மேரு பர்வதத்தின் உச்சியில், இருவரும் சமமாய் நின்று, ஒரேநேரத்தில், இருவரும் சூரியமண்டலத்தை நோக்கிப் பறக்க ஆரம்பித்தார்கள். இக்கழுகு முநிவர்கள் பறக்கும் வேகத்தால், தேவர்கள் மயங்கினார்கள்; ரிஷிகள் தியங்கினார்கள்; சித்தர் வித்யாதரர் கின்னரர் கிம்புருஷர்கள் ஏறிச்செல்லும் விமானங்கள் நிலை தவறின; கற்பகச்சோலைகள் அழிந்தன; அரம்பாஸ்திரீகள் அணிந்திருந்த நவரத்நாபரணங்களும், முத்து ஆரங்களும் கழன்று விழுந்தன; அழகிய கங்கை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது; ஆகாயம் நடுங்கின; மேகங்கள் கலைந்தன; சூரியனது பச்சைக் குதிரைகள் ஏழும், மனங்கலங்கிக் கண்களை மூடின; சூரியமண்டலத்துள்ள

கணங்கள் இவ்விருவர்களது ஆர்ப்பாடங்களைப்பார்த்து, ராக்ஷசர்களோ என்று பயந்து ஓடி ஒளித்தார்கள்; தேவர்களும் முனிவர்களும் என்ன விபரீதமோ வென மருண்டார்கள். சூரிய உலகத்துள்ள சில கணங்கள் வாயுவேக மனோவேகமாய் ஓடிச்சூரியனிடஞ் சென்று, "ஐயாவே! யாரோ இருவர் ராக்ஷசர்களோ பூதங்களோ தெரியாது; தங்கள் ஆக்ஞாசக்கிரத்துக்குட்பட்ட நம்முடைய உலகத்திலே, அச்சம் பயமின்றி வருகிறார்கள். நமது மண்டலம் நடுக்க முறுகின்றது; நமது மண்டலவாசிகள் யாது நேருமோ எனப்பயந்து நடுங்கி, ஓடி மறையப் பார்க்கிறார்கள். இது சங்கதி தங்களிடம் விண்ணப்பிக்கிறோம்" என்று கூறினார்கள். இத்தருணத்தில் சூரிய மண்டலத்தில் தவஞ்செய்து கொண்டிருந்த ஹம்சமஹரிஷி, இக்கழுகுகளை எதிர்நோக்கிவந்து, "கங்கபக்ஷிகளா! உங்கள் பராக்கிரமம் பேஷ் பேஷ்!! நன்றாயிருக்கிறது. நீங்கள் வெகு பராக்கிரமசாலிகள் போல் தான் தெரிகிறது. உங்களுக்கு என்ன பராக்கிரமம் இருந்தபோதிலும், காட்டவேண்டிய இடத்தில் காட்டினால் பிரகாசிக்கும். ஆயிரங் கிரணங்களை வீசும் இச்சூரியமண்டலத்தில் உங்கள் பராக்கிரமம் செல்லுமா? சூரியவெப்பம் உங்கள் உடலில் தாக்கினால் போதுமே! உடல்வெந்து சாம்பராய்ப் போகுமே! அக்கினியை எடுத்துத் தன் வேஷ்டியில் கட்டிக்கொண்ட மூடனைப்போலல்லவா உங்கள் வீரியம் பிரகாசிக்கிறது. தேவர்கள் முனிவர்கள் ரிஷிகள் குருக்கள் தாய் தந்தையர்கள் இவர்களிடமா உங்கள் பராக்கிரமத்தைக் காட்டுகிறது. சூரிய மண்டல மளாவி, இப்படி நீங்கள் இவ்வி

தம் பறந்து வருவதினல், சூரிய ஓட்டம் தாமதிக்குமே! சூரியகதி குறைந்தால் காலங்கள் பேதப்படுமே! காலங்கள் தவறினல் மஹரிஷிகள் முனிவர்கள் பிராமணேத்தமர்கள் முதலியோர் காலா காலங்களில் செய்யும் சந்தியாவந்தனம், ஜெபதபாதிகள், அர்க்யங்கள் முதலியன மாறுபடுமே! இதனல் அப்பெரியோர்கள் சாபமிடுவார்களே ! அச்சாபம் உங்களை இலகுவில் விடுமா? இம்மைக்கும் மறுமைக்கும் துன்பங்கள் பலவற்றை அநுபவிப்பீர்களே ! என்செய்வீர்கள்? பாபம். தீபம் பிடித்துக் கிணற்றில் விழுகிறவன் கதைபோலல்லவா உங்கள் பராக்கிரமமும், உங்கள் மாற்சரியமும், உங்கள் அகங்காரமும் விளங்குகின்றது. உங்கள் பராக்கிரமம் உலகத்தைப் பிரளயகாலம்போல் நடுங்கச்செய்ததால், நீங்கள் உடல் கரிந்து, சிறகு வெந்து போகக் கடவீர்களாக'' என்று சபித்தார். அக்கணமே மூத்தவன் பலம் குன்றி, சிறகு வெந்து, பூமியில் விழுந்தான். தம்பியோ சிறகு வேகாமல், உடல்மாத்திரம்பொரிந்து, கீழேவிழுந்தான். கஷ்டத்தோடு விழுந்த இருவர்களும், பெரியார் சாபத்துக்கு அஞ்சி நடுங்கி, ஆகாசத்திலிருக்கும் ஹம்ச மஹரிஷியை ஸ்தோத்திரித்து வணங்கி, "பெரியாரே ! கசடர்களாகிய அடியேங்கள் அறியாமையாற் செய்த பெருங்குற்றங்களை மன்னிக்கவேண்டும். அகங்காரத்தால் அழிந்தோம்; மாற்சரியத்தால் மெலிந்தோம்; அசூயையால் ஆபத்துக்குள்ளானேம். சாபத்துக்குப் பாத்திரமானேம்; சங்கடத்தைப் பெற்றுக்கொண்டோம். என்னசெய்வோம்? ஏதுசெய்வோம்? விழிக்கிறேம். காருண்யம் நிறைந்த பிரபுவே ! எங்களை ரக்ஷி

த்து, சாபநிவிர்த்திக்குரிய மார்க்கத்தை, தேவரீர் அநுக்கிரகிக்கவேண்டும்" என்று பன்முறை வணங்கிப் பிரார்த்தித்தார்கள். ஹம்ச மஹரிஷியார் மனமிரங்கி "கழுகு முனிவர்களே! நீங்கள் செய் தீவினையால் இக்கழுகு உருவம் எடுத்தீர்கள்; இப்பிறவியிலேனும் நல்லது செய்யாமல், அகங்காரத்தாலும் மாற்சரியத்தாலும், மதியிழந்து கெட்டீர்கள். ஆயினும் நீங்கள் நற்கதி அடையுமார்க்கமொன்று சொல்லுகிறோம். நீங்கள் அவ்விதம் செய்தால் கிருதார்த்தர்களாவீர்கள். உங்கள் ஜென்மம் சுகமே பலிதமாகும்; அம்மார்க்கமீதெனச் சொல்லுகிறோம் கவனமாய்க் கேளுங்கள். ஸ்ரீ காமாக்ஷிதேவியின் ஆக்ஞைக்குட்பட்ட ஸ்ரீ காஞ்சீமாநகரத்துக்குக் கிழக்கு ஐந்துகாததூரத்தில், விருத்தாகாரமாயுள்ளது உருத்திரகோடித்தலம் ஒன்று உண்டு. அத்தலத்தில் நான்கு வேதங்களே மலைகளாக அமைந்து, ஸ்ரீ வேதகிரி எனத் திருநாமம் பூண்டுள்ளது. அக்கிரியில் அகில லோக நாயகராகிய பரமசிவன் மலைக்கொழுந்துருவாக, அதன் உச்சியில் எழுந்தருளியிருக்கிறார். அம்மலையில் உங்கள் இனத்தவராகிய கழுகுகள் கூட்டம் கூட்டமாக வசிக்கின்றன. நீங்கள் அங்குசென்று, சிவபெருமானைத் தொழுது வணங்கித் தவஞ்செய்யுங்கள். பரமேஸ்வரன் திருவருள் கிடைக்கும். உங்களுக்கு நேர்ந்த சாபம் விமோசனமாகும். திடகாத்திர சரீரமுண்டாய், முன்போல் பராக்கிரமம் பொருந்தி இருப்பீர்கள்" என்று அநுக்கிரகித்தார். சம்பாதி சடாயு என்னும் இருகழுகு முனிவர்களும், ஹம்ச மஹரிஷியை வணங்கித் தோத்திரித்து, அவர் அநுக்ஞைபெற்று, ஸ்ரீ வேதகிரி என்னும்

உருத்ரகோடித் தலத்துக்குவந்து, சங்கதீர்த்தத்திலும் இதர தீர்த்தங்களிலும் ஸ்நாநம்செய்து, கிரியை வலம் வந்து, சிவபெருமானையும், பெண்ணினல்லாளென்னும் உமாதேவியாரையும், நமஸ்கரித்துத் தோத்திரித்துச்சுக ந்ததீர்த்தங்களால் அபிஷேகம்செய்து, நறுமணமலர் சாத்தித்தொழுது, அக்கிரியில் சிவாகாரமாய் நின்று, தவஞ்செய்தார்கள். எம்பெருமான் இம்முநிவர்களது தவத்துக்கும் பக்தி வழிபாட்டினுக்கு மிரங்கி, ரிஷபவாகனரூடராய், பார்வதியுடன் இவர்கள்முன் தோன்றினர். முநிவர்கள் பெருமானைக் கண்விழித்துப் பார்த்து, ஆநந்த பரவசங்கொண்டு, சோடசோபசாரத்தோடு தொழுது வணங்கியவுடன், உடல் வெப்பம் தணிந்து, சரீரம் குளிர்ச்சியடைந்தது. பழைய பலம் உண்டாச்சுது. பின்னர், பரமேஸ்வரன் கிருபையோடு கழுகு முநிவர்களைப் பார்த்து, "அப்பா! கழுகுருக்கொண்ட முநிவர்களே! மஹாவிஷ்ணுவானவர் ராவணசம்ஹாரத்தின் பொருட்டு, ஸ்ரீராமாவதாரங்கொண்டு*வரப்போகின்றார். அவர்கள் தூதுவர்களால் வெந்துபோன உங்கள் சிறகுகள் உண்டாகும். நீங்கள் இவ் யுகம் முடியும்வரையிலும், இக்கிரியிலேயே தவஞ்செய்து கொண்டிருங்கள். யுகமுடிவில் உங்களுக்கு மோக்ஷ பதவியைக் கொடுப்போம் என்று மறைந்தார். முநிவர்கள் பெரிதும் மகிழ்ச்சியடைந்து, பெருமான் உத்திரவுப்படி தவஞ்செ

---

*ஸ்ரீராமாவதாரத்தில் ஸ்ரீராமர் யாத்திரையாக வரும்போது, திருக்கழுக்குன்றம் வந்து சம்பாதி சடாயுவுக்குத் தரிசனம் கொடுத்ததாக, ஆநந்தராமாயணம் (கிரந்த எழுத்து) யாத்திரா காண்டத்தில் சொல்லியிருக்கிறதாம்.

ய்து, திரேதாயுக முடிவில், பரமசிவத்துடன் இரண்டறக்கலந்தார் என்று சூதர் சவுனகாதிகளுக்குச் சொல்ல, முனிவர்கள் மேல் நடந்தவற்றைச் சொல்லவேண்டுமென்று பிரார்த்தித்தார்கள்.

## 3-வது துவாபரயுகத்தில்,

## சம்புகுத்தன்-மாகுத்தன் மோக்ஷமடைந்தது.

மூன்றுவது, துவாபர யுகாரம்பத்தில் சம்புகுத்தன் மாகுத்தன் என்னும் இரண்டு முனிவர்கள் கழுகுருவத்தோடு பிறந்தார்கள். இவ்விருவர்களும் உடல் இரண்டாகவும், உயிர் ஒன்றுகவும் ஒற்றுமையாய் வாழ்ந்து வந்தார்கள். ஓர்காலத்தில், இவ்விருவர்களுக்கும் சக்தி சிவங்களைப்பற்றி வாக்குவாதம் நடந்து, பேதபுத்தி உண்டாயிற்று. மூத்தவனுகிய சம்புகுத்தன் சிவமே பெரிதென்று, அதற்கு வேண்டிய சாஸ்திர புராணங்களை ஆதாரமாகக்காட்டிச் சாதித்தான்; இளையவனுகிய மாகுத்தன் சக்தியே பெரிதென்று, அதற்கு வேண்டிய சாஸ்திர புராணங்களை ஆதாரமாகக்காட்டிச் சாதித்தான். இதனுல் ஒற்றுமையாய் வாழ்ந்துவந்த இருவர்களும், மாற்சரியப்பட்டு, ஒருவருக்கொருவர் விபரீதமான சண்டை செய்தார்கள். பொறுமை இழந்தார்கள்; கோபங்கொண்டார்கள்; இருவர்க்குள் பகை வளர்ந்து வந்தது. இதைக்கேட்ட தவமுனிவர்கள் பலரும், ரிஷிச்சிரேஷ்டர்கள் பலரும், இவ்விருவர்களைச் சமாதானப்படுத்த முயன்றும், பலிதமாகவில்லை. இது நம்மால்

தீர்க்கப்பட்ட வியவகார மல்லவென்று ஒதுங்கி நின்றார்கள் சிலர். மற்றும் சிலர் இம்முநிவர்கள் சொல்லும் வியவகாரத்துக்குப் பதில் சொல்லச் சக்தியற்று நின்றார்கள். சிவம் சத்தி என்பதற்கு மகிமை ஒன்றுயிருக்க எதற்குப் பெருமை அதிகம் சொல்லலாம், இது என்ன விபரீதம் என்று மயங்கிப் பயந்தார்கள் வேறு சிலர்; இத்தறுவாயில், தம்பி தமயனும் தங்கள் சந்தேகம் தீராது மனம் நொந்து, தமக்குள்ளுண்டான விபரீதமான இச்சந்தேகத்தைத் தீர்க்க வல்லார் சாக்ஷாத் சிவபெருமானேயாவர். மற்றவர்களால் எளிதில் தீர்க்கப்பட்ட வியவகாரம் இதுவல்ல வென்று மனந்திடங்கொண்டு, சிவபெருமான் சந்நிதானத்துக்கு இருவரும் சென்று, கைகட்டி வாய் பொத்தி நின்று, அஞ்சலியஸ்தராய், வணங்கித் தோத்திரித்து, "எம்பெருமானே! ஏழையேங்கள் கொண்டுள்ள மயக்கத்தைத் தீர்த்தருளல் வேண்டும். இம்மயக்கத்தினுல் நாங்கள் ஒற்றுமை குலேந்தோம்; மனம் வேறு பட்டோம்; மாற்சரியமுற்றேம்; பகை கொண்டோம்; பல பெரியார்களால் பங்கப்பட்டோம்; எங்கள் சந்தேகம் தீர்ந்தபாடில்லே; சித் பிரகாசமயமாஞ் சுத்த ஏகாந்தப் பெருவெளிக் குள்ளிருந்தவாழ்வே! எங்கள் இருவர்களுள் ஒருவன் சிவமே பெரிதென்கிறுன்; மற்றொருவன் சக்தியே பெரிதென்கிறுன். இவ்விபரீதத்தைத் தெளிவிக்கப் பிரார்த்திக்கின்றேம்" என வேண்டினுர்கள்; சிவபெருமான் இவர்களது விபரீத புத்திக்கு ஆச்சரியப்பட்டு, "முநிவர்களே! வஸ்து நிச்சயமறியாமல், மதி மயங்கி அலேந்தீர்கள்; சிவம் வேறு

சக்தி வேறு என்று புகல்வது சுத்த மூடர்கள் செய்கை. சிவமலாற் சக்தியில்லை; சக்தியலாற் சிவனுமில்லை. பரம பிரகிருதியாகிய பிரமமே பரமார்த்தமாகவுள்ளது. இந்தப் பிரமத்தினிடத்து சீவான்மாக்களும் பிரபஞ்சமுந் தோன்றும்; மற்றுண்டானவெல்லாம் எதும்பால் என்றால், கிளிஞ்சலில் வெள்ளி புத்திதோன்றுமாபோல்; ஜகத்துக்கு உபாதான காரணம் மாயை. தான் பிரமத்தைப்போல் சத்தியமுமல்ல; சச விஷாணம்போல் அசத்தியமுமல்ல; இம்மாயைக் காட்டில், இலக்ஷணமாக பிரம சொரூபத்தை, வேதாந்த ஞானத்தினாலே அறிதலினால், புருட தத்துவப்பிராப்தியை அடைவதே மோக்ஷமென்பார்கள் வேதாந்திகள். இது அதி தீவிர பக்குவனுக்கு உண்மையாகும்; சிவமே சத்திய தெய்வமென்னும் *சைவ சமயம், முப்பத்தாறு தத்துவங்களையும் கடந்து நிற்கும். அதுவே நாம். ஞானமேயான போது சிவமென்றும், கிரியையாய் வியாபிக்கும்போது சத்தியென்றும் சொல்லுவார்கள் அறிஞர்கள். பிரபஞ்சத்திற் றோற்றப்பட்ட சகல பதார்த்தங்களும் * சத்தி

---

* "சைவ சமயமே சமயம் சமயாதீதப் பழம் பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளி காட்டுமிந்தக் கருத்தை
விட்டு
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வ சபையைக் காண்பதற்குச் சேரவாரும்
செகத்தீரே." (தாயுமானவர்.)

* "சத்திதானுதமாதி தானுகுமந்தச்சிவமு மந்தச்
சத்தி தானுதியாகுந்தரும் வடிவான வெல்லாஞ்
சத்தியுஞ் சிவமுமாகும் சத்திதான் சத்தனுக்குச்
சத்தியாஞ் சத்தன் வேண்டிற்றெல்லாமுஞ் சத்திதானே."
(சிவஞான சித்தியார்.)

மயமும் சிவமயமுமாயிருக்கும். § சக்தி என்றால் ஞானம். இந்த சக்தி ஐந்து விதமாகப் பரிணமிக்கும். அதாவது சிற்சத்தி, பராசக்தி, இச்சாசக்தி, ஞான சக்தி, கிரியாசக்தி என ஐந்து. பராசக்தி சாதாக்கியத்தையும், சிற்சக்தி அமூர்த்தி சாதாக்கியத்தையும், இச்சா சக்தி மூர்த்தி சாதாக்கியத்தையும், ஞான சக்தி கர்த்ரு சாதாக்யத்தையும், கிரியா சக்தி கன்ம சாதாக்கியத்தையும், சர்வான்மாக்களுக்குத் தியான பூசை நிமித்தமாக, அந்தப் பரா சத்தியே தோன்றுவியா நிற்பள். கர்த்ரு சாதாக்கிய முதலிய நான்கும் இலிங்காகாரமாகவே யிருக்கும். கன்ம சாதாக்ய மொன்றுமே சிவலிங்கமும் பீடமுமாயிருக்கும். இந்தக் கன்ம சாதாக்யத்தினிடத்திலே தான், ஆன்மாக்கள் சிவ பூஜாதி கர்மங்களைச் செய்வார்கள். லிங்க பீடமா

---

§ சிற்சத்தி-உயிர்க்கொளியாய் நிற்பது ; பராசத்தி-பிராணன் முதலிய வாயுவாக நிற்பது ; இச்சாசக்தி-உயிர்க்கருணேசம், பஞ்சபூதமாக நிற்பது; ஞானசக்தி—கருமங்களை அறிந்தூட்டல், ஐம்பொறியுணர்ச்சியாக நிற்பது ; கிரியாசக்தி—உலகங்களை ஆக்குதல், வினைத்துணையாக நிற்பது ; இச்சா ஞானஸ்வரூபியான சத்தியில் நாதமூர்த்தியும், அந்த நாதத்தில் விந்து சத்தியும், உண்டாயின. பரமேஸ்வரன் ஒன்பது திருமேனிகொண்டபோது, பராசத்தி ஒன்றுமே ஏழுபேதமாக நின்றது என்பதற்கு "சிவம் சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழுமீச, னுவந்தருளுருத்திரன்றான் மாலயனென்றி ஞென்றாய், பவந்தருவருவ நாலிங்குருவ நாலுபய மொன்றாய், நவந்தரு பேதமேக நாதனே நடிப்பன்" என்றும், "சத்தியாய் விந்து சத்தியாய் மனோன்மணி தானாகி, யொத்திரு மகேசையாகி யுமை திருவாணியாகி, வைத்துறுஞ் சிவாதிக்கிங்கண் வருஞ்சத்தி யொருத்தியாகு, மெத்திறனின்றானீசனத்திறமவளு நிற்பள் என்றும், "ஒன்றதா யநேக சத்தியுடைய தாயுடனாயாதி" என்றும் சிவஞான சித்தியார் கூறும்.

யிருக்கிற சிவ சத்திகளிரண்டும், பிரிவறப் புணர்ந்து நின்று, எல்லாப் புவனங்களையும் நாம் உண்டாக்கு வோம். இந்த உற்பத்திகளைப் பண்ணுவிக்கும் பவன் என்னும் நாமத்தையுடைய நாம் எப்போதும் *நித்ய பிர்ம்மசாரியாவோம். அந்தப் பராசத்தியாகிய பரமேஸ்வரி எப்போதும் நித்திய கன்னிகையாகவே யிருப்பள். இந்த உண்மையை ஆத்மஞானிகள் உணர்வார்கள். ஒளியினின்று மணியையும், பூவினின்று மணத்தையும், அமுதத்தினின்று குணத்தையும், பிரிக்க முடியாதுபோல், சிவத்தினின்று சத்தியையும், சத்தியினின்று சிவத்தையும், பிரித்தல் என்பது கூடாது. சாஸ்திரங்களைக் கற்றதனாலென்ன பலன்? குரு முன்னிலையில் கேட்டு விசாரித்து உண்மையறியாமல் வீண் வாதம் பேசுவதில் என்ன பிரயோசனம்? முனிவர்களே! இனி இத்தகைய விபரீதங்கட் கிடங்கொடாது, திடமனதுடன், சத்தியே சிவமென்றும், சிவமே சத்தியென்றும், உணர்வீர்களாக என்று சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினார். முநிவர்கள் பரமசிவம் வாக்யத்திலும் நம்பிக்கையில்லாமல் முன் போலவே வாதாடினார்கள். பார்வதி பரமேஸ்வரர்கள் இம்முநிவரது மூர்க்கத்தனத்துக்கு வருந்தி, ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துப் புன்சிரிப்புகொண்டு "அப்பா! முநி

---

* "சிவம் சத்திதனை யீன்றும் சத்திதான் சிவத்தையீன்றும்
உவந்திரு வரும்புணர்ந்திங் குலகுயிரெல்லா மீன்றும்
பவன் பிரமசாரியாகும் பான் மொழி கன்னியாகும்
தவந்தரு ஞானத்தோர்க்கித் தன்மைதான் தெரியு
மென்றே."
சிவ ஞான சித்தியார்.

வர்களே! நாம் சொன்ன வார்த்தைகளின் உண்மைப் பொருளை ஆழ்ந்து யோசிக்காமல், மறுபடியும் வாதாடு கிறீர்கள். நீங்கள் மூர்க்கர்களேயாவீர். எம் சொற் களை மறுத்ததால், நீங்கள் இருவரும் பிணங்களைத் தின்னும் கழுகுகளாவீர்களாக" என்று சாபம் கொடுத் தார். உடனே இரு முனிவர்களும் கழுகுகளானார்கள்: நடுங்கினார்கள் பயந்தார்கள்; என் செய்வோம் எங்கள் ஏழை மதிக்கு என வருந்தினார்கள். மீண்டும் பார்வதி யையும் பரமசிவத்தையும் வணங்கித்துதித்து, "விதி யாகி அரியாகி கிரீசனாகி விளங்கு மஹேஸ்வரனாகி விமலமான நிதியாகும் சதாசிவனாய் விந்துவாகி நிகழ் நாதமாய்ப் பரையாய் நிமலாநந்தப் பதியாகும் பரசிவ மாய்ப் பரமாய் மேலாய்ப் பக்கமிரண்டாய் இரண்டும் பகராதிக்கதியாகி அளவிறந்த கதிகளெல்லாம் கடந்து நின்று நிறைந்த பெருங்கருணைத் தெய்வமே! எங்கள் குற்றத்தை மன்னிக்கவேண்டும் எனப் பரமசிவத்தை யும், சோதிக் கொடியே! ஆநந்தச் சொரூபக்கொடியே! சோதியுருப் பாதிக்கொடியே! எமையீன்ற ஆதிக் கொடியே! உலகுகட்டி ஆளும்கொடியே! சன்மார்க்க நீதிக்கொடியே! சர்வஜீவ தயாபரீ! லோகநாயகி! அறி யாமையால் நிகழ்ந்த தவறை, பெற்றதாய் நீயன்றோ க்ஷமிக்கவேண்டும்! என்று உமாதேவியாரையும் தோத் திரித்து நின்றார்கள். கருணையே உருவாய பார்வதி பரமேஸ்வராள், இம்முனிவர்களது வேண்டுகோளுக் கிரங்கி, கழுகுருப் பெற்ற முனிவர்களே! காஞ்சிமா நகரத்துக்குக் கிழக்கு ஐந்து காத தூரத்துள் உருத்திர கோடித்தலம் ஒன்றிருக்கிறது. அங்கு நான்கு வேதங்

களே ஓர் மலையாக அமைந்து, அவ்விடம் நாம் சதா வசித்து வருகின்றோம். நீங்கள் அங்கு சென்று, அம் மலையில் தவம் செய்வீர்களானால், உங்கள் சாபம் நிவிர்த்தியாகும் என்றார்கள். அவ்வாறே முனிவர்கள் சிவபெருமானையும், உமா தேவியாரையும் வணங்கித் துதித்து, ஸ்ரீ வேதகிரிக்குவந்து, சங்கதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, ஸ்ரீ வேதகிரிப் பெருமானையும் பெண்ணினல்லாள் என்னும் ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்மனையும், வேதாகம விதிப்படி பூஜித்து, அவ்வேதகிரியிலேயே தவம் செய்து கொண்டிருந்தார்கள். துவாபரயுக முடிவில் பார்வதி பரமேஸ்வராள் இக்கழுகு முனிவர்களுக்குக் காக்ஷிகொடுக்க, அம்முனிவர்கள் ஆத்மஞானம் அடைந்து சர்வமும் பிரமமயம் என்ற அறிவு தோன்றிப் பரமேஸ்வரனிடத்து இரண்டறக் கலந்தார்கள் என்று சூதர் சௌனகாதிகளுக்குச்சொல்ல, முனிவர்கள் மேல் என்ன நடந்தது என்பதை விசாரிக்கலானார்கள்.

## 4-வது இக்கலியுகத்தில்,

## * பூஷா - விதாதா தவஞ்செய்கிறார்கள்.

நான்காவது, இக்கலியுகாரம்பத்தில், பூஷா-விதாதா என்னும் இரண்டு முனிவர்கள் பிறந்து, சிவபெருமானை

---

* இக்கலியுகத்தில் நாம் பிரத்யக்ஷமாய்த் தரிசிக்கும் பக்ஷிகள் பூஷா-விதா-என்னும் இரண்டு கழுகுகள் (Eagles) இம்மலையிலேயே வசிக்கப் பார்க்கலாம். இதுகள் காசியில் கங்காஸ்நானம், ராமேஸ்வரத்தில் தரிசனம், இவ்விடம் ஊண், சிதம்பரத்

நோக்கிக் கடுந்தவம் புரிந்தார்கள். பரமேஸ்வரன் இம்முனிவர்களின் தவ உறுதியைக் கண்டு, மனமிரங்கித் தவசிகள் முன் தோன்றி, "முனிவர்களே! உமது தவம் கடுமையானது. நாம் பெரிதும் மகிழ்ந்தோம். உங்களுக்கு யாது குறையென்று அன்புடன் கேட்டு, நீங்கள் செய்த தவத்தின் பலனாக உங்களுக்குச் சாரூப பதவியை இப்போது தருகிறோம். ஒரு

---

தில் ஒடுக்கம் என்று சிலர் சொல்லுகிறதுண்டு. அவ்வார்த்தை நம்பத்தக்கதுமல்ல; புராண ஆதாரவும் கிடையாது. இப்பக்ஷிகளுக்குத் தினசரி காலை 11-மணி சுமார்க்கு சைவப்பண்டாரங்கள் சர்க்கரை அன்னம் நெய் கொடுத்து வருகிறார்கள். இது பழக்கத்தின்பேரில் செய்யும் தொழிலாக இருக்கிறதே தவிர, இதற்குப் புராண ஆதாரம் இல்லை. சில நாள் முன்னர் செங்குந்த மரபினர்களால், பக்ஷிகளுக்கு அன்னம் கொடுத்துவந்ததாக, "கழுக்குன்றிற் சம்பாதிக்கமுதூட்டும் கைக்கோளர்" என்று வீரநாராயணர் விசயத்தும், "அம்பாழிமூழ்கி யொரு கற்பமெலாம் கிடைக்கினுமென்னை மழலினின்று, வெம்பாமே வெளிக்காலுண்டுட் காலை வெளியில் விடாதிருந்தாலென்னே, வம்பாருமிதழியணி வேணியனார் வேதமலை வலம் வந்தீண்டுஞ், சம்பாதிக்கமுதளிக்குஞ் சயக்குந்தம்போல் வினவத் தாராவன்றே" என்று, திருக்கயிலாய பரம்பரைச் செங்குந்தர் சங்கப் பட்டயத்திலும் கூறியிருப்பதைக் கவனிக்க ஏற்படும். செங்குந்தர்கள் வழக்கப்படுத்தியதின்பின்தான், சைவ பரம்பரையார் தற்போது பக்ஷிக்கு அன்னம் கொடுக்கும் வேலையை ஒப்புக்கொண்டார்கள்போல் தெரிகிறது. இதற்குத் தேவஸ்தானத்தில் தினசரி சொற்பகட்டளையும், சில மான்ய நிலங்களும் விட்டிருக்கிறார்களாம். பக்ஷி தரிசனத்துக்காகவே இமயமலைமுதல் கன்னியாகுமரிவரையுமுள்ள யாத்திரைவாசிகள் தினசரி கூட்டம் கூட்டமாக வருகிறதுண்டு. புராணத்தில் சொல்லியிருக்கும் பூஷா-விதாதா என்னும் பக்ஷிகள்தான், தற்போது சாப்பிடுகின்றதென்று, குறிப்பிட்டுச்சொல்ல முடியாது. பாவனைமாத்திரத்தால் நம்ப வேண்டும் போலும்.

(1)கற்பமளவும் நீங்கள் இப்பதவியோடு திருக்கைலாசத்தில் வசித்திருங்கள். பின்னுல் உங்களுக்கு சாயுச்சிய பதவி தந்து, உங்களை ஆட்கொள்ளுகிறோம்" என்று திருவாய் மலர்ந்தருளினுர். முனிவர்கள் இருவரும் சிவபெருமானின் அனுக்கிரகத்தை மறுத்து, எம்பெருமானே! சாயுச்சிய பதவிபெறும் அந்நாள் வரையும் எங்கள் பஞ்சேந்திரியங்கள் நன்மார்க்கத்தோடு இருக்குமென்பதைக் கண்டவர் யார்? அந்தக்கதி எங்கே? நாங்கள் எங்கே! இடையில் எத்தனை விக்கினங்கள் வருமோ? மனம் எவ்வித மயக்கம் கொள்ளுமோ? நாளை யென்பதெல்லாம் இல்லையென்பதே பொருள்.(2) ஆகையால் எப்பதவியினும் உயர்ந்து, கற்பனைகளுக்

---

(1) ஒரு கற்பம்=மனுஷ வருஷம் நானூற்று முப்பத்திரண்டு கோடி.

(2) இந்த இடத்துக்கு ஒரு கதை நான் கேள்விப்பட்டமட்டும் சொல்லவேண்டியிருக்கிறது. அது தன்னவென்றுல்:—திரிலோக சஞ்சாரியாய் விளங்கும் நாரதமஹாமுநிவர், ஓர் காட்டின்வழியாக, ஓர் காலத்தில், போய்க்கொண்டிருந்தார். அக்காட்டில் ஒரு மனிதன் நீண்டகாலம் தவம் செய்திருந்தான். அவனைச்சுற்றிலும் கறையான் கூட புற்று வைத்திருந்தது. அம்மனிதன் நாரதரைப்பார்த்து "ஐயா மாமுநியே! எங்கே செல்லுகிறீர்" என்று தாழ்மையாய்க் கேட்டான். அதற்கு அம்முநிவர் "அப்பா! நான் சுவர்க்கலோகம் போகின்றேன்" என்றுர். அம்மனிதன் "ஐயாவே! எனக்குக் கடவுள் எப்போது கருணை செலுத்துவார் என்பதை அறிந்து வரவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டான். "அப்படியே யாகட்டும்" என்று நாரதர் பதில் சொல்லிப் பின்னும் கொஞ்சதூரம் போனதும், அவ்விடம் ஓர் மனிதன் ஆடியும் பாடியும் குதித்தும் கூத்தாடியுமிருந்தான். இம் மனிதன் நாரதரைப்பார்த்து "ஓய் நாரதரே! நீர் எங்கே போகிறீர் என, உரத்த தொனியினுல் கேட்போர் மனம் அச்சப்படும்

கடங்காத சாயுச்கிய பதவிஜைய இப்போதே அநுக்கிர கிக்கவேண்டும். சாரூப பதவி எங்களுக்கு வேண்டவே வேண்டாம் என்று பிடிவாதமாய்ச் சொன்ஞர்கள். பரமசிவம் சிறிது யோசித்து, முனிவர்களே! உங்களுக்கு

---

படிக் கேட்டான்." அதற்கு நாரதர் "அப்பா! நான் சுவர்க்கம் போகிறேன்" என்ருர். அப்படியாஞல் "நான் எப்போது சுதந்தரஞக முடியும் என்று கடவுளை விசாரித்து வாரும்" என்ருன். "அப்படியே ஆகட்டும்" என்று இவனுக்கும் சொல்லிப்போயினுர் நாரதர். பின்னேர்கால் நாரதர் அக்காட்டின் வழியே வந்து, முதல் மனிதனைக்கண்டார். அவன் "ஐயா! முனிவரே! கடவுளை விசாரித்து வந்தீரா" என்ருன். அதற்கு முனிவர் "விசாரித்தேன் அப்பா! இன்னும் நான்கு ஜென்மத்தின்பின் உனக்குக் கருணை கிடைக்குமாம்" எனவும், இதைக் கேட்ட அவன், "தேம்பித்தேம்பி அழுது, கரையான் புற்றுவைக்கும் அத்தனைகாலம் தவமிருந்தும், இன்னும் நான்கு ஜென்மம் எடுக்கவேண்டுமே" என்று மனம் நைந்தான். அடுத்த மனிதனைக்கண்டார் முனிவர். அவனும் "ஐயா பதில் என்னவென்று முடுக்காய்க்கேட்டான்." "அப்பா! இதோ தெரிகிறதே பெரிய புளியமரம்; அந்த மரத்திலுள்ள இலைகள் எவ்வளவு இருக்கிறதோ, அத்தனை ஜென்மம் நீ எடுத்தபிறகு உனக்கு சுதந்தரத்துவம் கிடைக்குமாம்" என்ருர். இதைக்கேட்ட இம்மனிதன் "ஆகா! இவ்வளவு சீக்கிரத்தில் எனக்குச் சுதந்தரத்வம் கிடைக்குமல்லவா" எனச் சந்தோஷித்தான். உடனே ஓர் தொனி கேட்டது. "குழந்தாய்! இதே நிமிஷத்தில் நீ சுதந்தரத்வம் பெறுவாய்" என்று அத்தொனி சொல்லிற்று என்பது ஓர் கதை. இதில் நாம் என்ன அறியவேண்டும். எத்தனை ஜென்மம் நமக்கு வந்தாலும், நாம் செய்யவேண்டியதைச் செய்ய வேண்டும். அதைரியப்படவே கூடாது. இவ்விடத்தில் பரமசிவம் பூஷா, விதாதா ஆகிய முனிவர்களுக்குச் சாரூப பதவிதந்து ஒரு கற்பம் தவம்செய்ய உத்திரவானதை, மறுத்ததால் அல்லவா கழுகுகளாகும்படிச் சாபம் நேர்ந்தது. ஆதலால் சிவன் செயலுக்கு மறுசெயல் கூடாது. நம் கர்மத்தை அநுபவிக்கத்தான் வேண்டும். "வினைப்போகமே ஒரு தேகம், வினைதாஞெழிந்தால் தினைப்போதளவும் நில்லாது" என்ருர் பட்டிணத்தார்.

நாமே விரும்பிக்கொடுத்த சாரூப பதவியை வேண்டாமென மறுத்தீர்கள். உங்கள் ஊழ்வினையின் பயனுக்கு நாம் என்ன செய்யலாம்? நம் கட்டளையை மறுத்த குற்றத்துக்காக, நீங்கள் பிணங்களைத் தின்னும் கழுகுகளாகப் பிறந்து,காடு மலை வனம் வனாந்தரங்களில் அலைந்து, திரிந்து உழல்வீர்களாக" என்று சாபம் கொடுத்தார். முனிவர்கள் என் செய்வோமென்று பயந்து நடுங்கியபோது, கழுகுருவம் வந்து சேர்ந்தது. ஐயோ எங்கள் விதிவழிக்கு யாரை நோகலாம்? சிவபெருமான் நமக்குத் தந்த பதவியை வேண்டாமென்று மறுத்தோம். கடுந்தவம் புரிந்தும், கவலைப் பட நேர்ந்தது, எங்கள் கர்மவினை, வந்ததை அநுபவித்தே தீர வேண்டும் என்று மனதில் நினைத்து, மீண்டும் பரமசிவத்தைத் தோத்திரித்து, சுவாமீ! நாங்கள் அறியாமையாற் செய்த பிழையை மன்னித்து அடிமைகளை ரக்ஷிக்க வேண்டும். நாங்கள் கழுகுகளாகப் பிறந்தாலும், தங்கள் பாத தாமரைகளை மறவாத அன்பைக்கடாக்ஷிக்க வேண்டும்; நாங்கள் கடுமையாகச் செய்த தவம், விழலுக்கிறைத்த நீர்போல்,அகங்காரத்தால் அழிந்தது, எங்கள் விதிவசமேயாகும், என்று கஷ்டப்பட்டு நின்றூர்கள். தீனதயாளுவான பரமசிவம், முனிவர்கள் படுந் துயர்க்கிரங்கி, "அப்பா முனிவர்களே! உங்களுக்கு நேர்ந்த சாபத்தின் விமோசன மார்க்கம் சொல்லுகிறோம். நீங்கள் காசிப ரிஷியிடத்தில் கழுகு புத்திரர்களாகப் பிறந்து, அவரது அநுக்ஞை பெற்று, ஸ்ரீ வேதகிரித் தலத்தையடைந்து, வேதாகம விதிப்படி நம்மைப் பூஜித்து வாருங்கள். இக்கலியுக முடிவில் நீங்கள்

விரும்பியபடி, சாயுச்சிய பதவியைத் தருகின்றோம், பயப்படாதீர்கள்" என்று ஆக்ஞாபித்து மறைந்தார். அவ்வாறே, முநிவர்கள் இருவரும் காசிப ரிஷிக்குப் புத்திரர்களாகப் பிறந்து, சம்பு, ஆதி யென்னும் பெயரினைப் பெற்றார்கள். ரிஷியானவர் புத்திரர்கள் கழுகுருவாகப்பிறந்ததைச் சிறிது யோசித்துப்பார்த்து, ஆ! ஆ! இது சிவபெருமான் கட்டளைபோலும் என்று நினைத்து, புத்திரர்களை நோக்கி, அப்பா! புத்ரர்களே! ஈசன் கட்டளைப்படி, கழுகுருவாகப் பிறந்தீர்கள். ஆனாலும் தோஷமில்லை. நீங்கள் இருவரும் உருத்திரகோடித் தலம் சென்று, அங்குள்ள மகிமைபொருந்திய ஸ்ரீ வேதகிரியை வலம்வந்து, அக்கிரியிலேயே தவஞ்செய்யுங்கள். அக்கிரியில் ஓர் பாறை யிருக்கிறது. அப்பாறையை நீங்கள் மூக்கினால் கீறுமிடத்து, அங்கு ஜலம் உண்டாகும்; அந்த ஜலம் ஆகாய கங்கைபோலும் சிறந்த தீர்த்தமாகும்; அது சர்வரோகத்தை நீக்கும். அந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யுங்கள். வேதாகமவிதிப்படி, ஸ்ரீ வேதகிரிப் பெருமானையும், பெண்ணினல்லாள் என்னும் ஸ்ரீ திரிப்புரசுந்தரி அம்பாளையும் பூஜித்து வாருங்கள். உங்கள் கழுகுருவம் மாறும். நீங்கள் சாயுச்சிய பதவியினையும் அடைவீர்கள் என்று சொன்னார். அவ்வாறே சம்பு ஆதி என்னும் இருகழுகு முநிவர்களும், ஸ்ரீ வேதகிரியை அடைந்து, அங்குள்ள ஓர் பாறையைத் தங்கள் மூக்கினால் கீறினார்கள். அதினின்றும் ஆகாய கங்கைபோல் ஜலம் புரண்டு வந்தது. அதில் ஸ்நாநம் செய்தார்கள்; கிரியை வலம் வந்தார்கள்; சிவபெருமானைப் பூஜித்தார்கள்; அம்மலையிலேயே நாளைக்கும் தவம்

செய்கிறார்கள். இக்கலியுக முடிவில் சிவபெருமான் திருவருள்பெற்றுச் சாயுச்சியபதவியை அடையப்போகிறார்கள். இதுவே கலியுகத்தில் நாம் பார்க்கவேண்டிய *வைபவம் என்றும், ஆறு முனிவர்களும் கழுகுருவெடுத்து, சென்ற மூன்று யுகங்களில், இவ்வேதகிரியைப் பூஜித்துத் தத்தம் சாபங்களை நிவர்த்திசெய்துகொண்டு, சாயுச்சிய பதவியைப் பெற்றார்கள் என்றும், சூதர் சௌனகாதிகளுக்குச் சொல்ல, முனிவர்கள் ஆநந்த பரவசமடைந்தார்கள்.

## 19. திலோத்தமை சாபமும், மாயிகன் சாபமும் நீங்கியது.

சௌநகாதி மஹரிஷிகளே! கவனமாய்க் கேளுங்கள். ஸ்ரீ வேதகிரியின் பெருமையை இன்னும் சொல்லுகின்றேன் என்று சூதர் சொல்லுகிறார்.

தேவர்களால் பூசிக்கப் பெற்றும், ரிஷிகள் முனிவர்கள், யோகிகள் இவர்கள் தவம் செய்வதற்குத் தகுதியானவிடம் அமையப் பெற்றதாயுமுள்ள, திருக்கழுக்குன்றத்தின் எல்லையின் கீழ்த்திசையில், மல்லை (மஹாபலிபுரம்) மாநகர் ஒன்று உண்டு. அழகும் பிரகாசமும்

---

* தற்போது திருக்கழுக்குன்றத்தில் தினசரி இரண்டு கழுகுகள் வந்து அன்னம் புசித்துப் போவது போல், வட ஆற்காடு ஜில்லாவில் குடியாத்தம் என்னும் ஊருக்கு எட்டாவது மயிலிலுள்ள மஹா தேவமலையிலும், தினசரி இரண்டு கழுகுகள் வந்து அன்னம் புசிக்கிறதாகச் சொல்லுகிறார்கள்.

பொருந்திய பொன் மாளிகைகள், பூஞ்சோலைகள், நந்த வனங்கள், ஆகாயத்தை அளாவிநிற்கும் பலவகை விருக்ஷங்கள் பொருந்தியுள்ளது. அந்நகர்க் குடி ஜனங்கள் ஈசுர பக்தி, குருபக்தி, அடியார் பக்தி, அன்பு, அடக்கம் பொருந்தி, ஜீவகாருண்யமே தமது முக்கிய லக்ஷணமாகக் கொண்டிருந்ததால், திருமகள் சதா வாசஞ்செய்யும் தலம்போலிருந்தது. அந்நகரை அரசு செலுத்தியவர் சோழவம்சத்திற் சார்ந்த சுருகுரு என்னும் சக்கிரவர்த்தியாவார். இவர் அரசாக்ஷிசெய்த காலம் கலியுகாரம்பமாகும். தனது ஆக்ஞாசக்கரத்தினுல், நீதியையும் தர்மத்தையும் எங்கும் பரப்பி, திரேதாயுகம் போல் தர்ம ரக்ஷகராய், துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரிபாலனம் செய்து, பகைவரை வென்று, ராஜ ராஜாக்கள் எல்லாம் தனக்குக் கப்பம் செலுத்திவரத்தக்க அருமை பெருமை பெற்று விளங்கினுன். தனது ஆளுகைக்குட்பட்ட குடிகளெல்லாரும், இவ்வரசனிடத்தில் அத்யந்தம் பிரியங்கொண்டவர்களா யிருந்தார்கள்.

ஓர்போது, கொடிய மிருகங்கள் பயிர்களை அழித்தும், நகருக்குள் புகுந்து உயிர்களைத்தொந்தரவு செய்தும், வருவதாகக் குடிகள் முறையிட்டார்கள். அம்முறைப்பாட்டினைக் கேட்ட சுரகுருச்சக்கரவர்த்தி, கானகத்துக்குச் சென்று, வேட்டையாடி, மிருகங்களை யழித்து, குடிகளை க்ஷேமப் படுத்தக்கருதி, ஏவலாளிகளை நோக்கி, கானகத்திற்குச் சென்று வேட்டையாடுவான் வேண்டி சேனைகளைத் தயார் படுத்தும்படி உத்திரவளித்தார். உடனே வேடர்களும் மற்றுமுள்ள சேனைகளும், பலவகை ஆயுதங்களுடன் புறப்பட்டார்கள். சக்கிரவர்த்

தியார், மந்திரி பிரதானிகள் சேனு சமுத்திரத்துடன், கழுகாசலம் என்னும் திருக்கழுக்குன்றக் கானகத்தை நோக்கி வந்து சேர்ந்தார்கள். மலை போன்று பருத்த தேகத்தை யுடையவர்களும், எரிகின்ற தீப்பார்வை யுடையவர்களும், இடிபோன்ற வார்த்தையினை யுடையவர்களும், புலித்தோல் கச்சை சிங்கத்தோற் செருப் பணிந்தவர்களுமாகிய, கொலைத் தொழில் செய்யவல்ல வேடுவர்கள், வில்லுகளையும் அம்புகளையும் ஏந்தி, அளவில்லாத வேட்டை நாய்களுடன், மாயவலையை வீசி, குன்றுகளிலும் குகைகளிலும், மரப்பொந்துக்களிலும், சப்பாத்தி புதரிலுமுள்ள புலிகள், காட்டுப் பன்றிகள், மான்கள், காட்டு யானைகள், காட்டுப் பசுக்கள், கடுமான்கள், சிங்கங்கள், மரைகள், கரடிகள், கஸ்தூரி மிருகங்கள் முதலிய கொடிய மிருகங்களைக் கொன்று, தனித்தனியே கும்பல் கும்பலாகக் குவித்தார்கள். இம் *மிருகங்களின் பெண் வர்க்கங்களையும் கொன்று குவித்தார்கள். வேட்டை நாய்கள் மோப்பத்தினுல், மிருகங்கள் பதுங்கியிருக்கும் இடங்களை, வேடர்களுக்கும் மறவர்களுக்கும் குரைத்துக் குரைத்துக் காட்டிக் கொடுக்கும். மறவர்களோ தங்களிடமுள்ள வலைகளை வீசியும்,

---

* யானைக் கன்றுகளையும், சிங்கம் புலி பன்றி மான் இவைகளின் குட்டிகளையும், சினையுள்ள பெண் மிருகங்களையும், மறவர்கள் கொலை செய்யார்கள். இதற்கு மேற் கோள், பெரிய புராணத்துள் "துடியடியனமடி செவியன துறுகய முனிதொடரார், வெடிபடவிரி சிறு குருளை கண்மிசை படுகொலை விரவார், அடிதளர்வுறுகருவுடையனவணை வுறுபிணையலையார், கொடியன லெதிர் முடுகியுமுறு கொலை புரிசிலை மறவோர்."

மிருகங்களின் குரல் போல் கூவியும், கொடிய மிருகங் களைக் கொன்று, மலை மலையாய்ச் சேர்த்தார்கள்.

சுரகுருவேந்தன் குதிரைகள் பூட்டிய தேரின் மீதேறி, இருபக்கங்களில் மந்திரி பிரதானிகள் சூழ, பேரிகை சங்க ஒலிகள் சப்திக்க, சாமரை இருபக்கம் வீச, சரீர சுவரக்ஷணையின் பொருட்டு வெய்ய மொழி யினையுடைய மெய்காவலர்கள் தங்களைச் சூழ்ந்துவர, *புலிக்கொடி உயர்ந்து பறக்க, வெள்ளிப்பிரம்பு தாங்கிய சேவகர்கள் முன் நடக்க, ஒற்றைக் கொடை பிடித்து, யானை சேனை பரிவாரங்களுடன் வேதவனத்துட் புகுந் தான். வேடர்கள் மிருகக் கூட்டங்களைக் கொன்று சேர்த்திருப்பதைக் கண்டு சந்தோஷித்தான். *பார்வை மிருகங்களைக் கொண்டு, ஒவ்வொரு ஜாதி மிருகங்களும் வந்து சாவதைக்கண்டு அதிசயித்தான். வேடர்கள் மிருகங்களின் அடிச் சுவட்டினைக் கண்டு, அதன் வழியே போய், மிருகங்களைப் பிடித்துக் கொல்வதைப் பார்த்தும், நாய்கள் மிருகங்களைத் துரத்திச் செல்வதைக் கண்டும், ஆநந்தித்தான். வேடுவர்கள் இவ்வாறு வேட்டையாடி மிருகங்களைக் கொன்று குவித்துவரும் போது, ஒரு பன்றியானது, கண்கள் தீப்பொறி பறக்க, இரண்டு வெண் பிறையைக் கொண்டு, இரவிருள் வந்ததோ வென்று வேடர்கண்டு மயங்க, வலைகள் அறுந்துபோம்படி, இடியேறுபோல் கர்ச்சித்துப்பாய்ந்து

* சோழ அரசனுக்கு புலிக்கொடி; சேர அரசனுக்கு விற் கொடி; பாண்டிய அரசனுக்கு மீன் கொடி.

* பார்வை மிருகமாவது: மிருக ஜாதியில் ஒவ்வொன்றைக் குட்டி முதல் வளர்த்து, அவைகளைக் கொண்டு அந்தந்த மிருகங் களைப் பிடித்தல்.

ஓடிற்று. வேடர்கள் இதன் உக்கிர பார்வையைக் கண்டு பயந்தார்கள். சிலர் கைகளை இழந்தார்கள். சிலர் கால்கள் ஒடிந்து நின்றார்கள், சிலர் மூர்ச்சையானார்கள். மற்றும் சிலர் ஓடி மறைந்தார்கள். வேட்டை நாய்கள் அநேகம் இறந்தன. பாணங்கள் பல அறுந்தன; இது நாம் கொல்லவல்ல பன்றியல்ல! நமனே இப்பன்றி உருக்கொண்டு வந்தான் போலும், என்று வேடர்கள் அஞ்சி நடுங்கினார்கள். சில வேடுவர்கள் ஓடோடியும் சென்று, சுரகுருவேந்தனை நோக்கி, "அரசரேறே! நமஸ்கரிக்கின்றோம். ஒரு பன்றியானது நம்முடைய வலையை யறுத்துப் பாய்ந்து, நம் சேனைகளை நாசம் பண்ணுகின்றது. அது அசுர மாயையாய்த் தோற்றுகிறது. இது நாம் கொல்ல வல்ல பன்றியல்ல. தக்ஷிண திக்கு அதிபதியாகிய தர்மராஜனே, இவ்வுருவெடுத்து நம்மைக் கொல்ல வந்தான் போலும். நம்மரபினர் உயிர் இழந்தார் பலர்; கை யறுபட்டார் சிலர்; கால்கள் ஒடிந்தார் சிலர்; பயந்தோடினார் சிலர்; வேட்டை நாய்கள் பல இறந்தன; பாணங்கள் பல அறுந்தன. வலைகள் பல நாசமாயின; பிரபுவே! தாங்கள் க்ஷணப்போது தாமதிப்பீர்களானால், நாம் எல்லோரும் அப்பன்றியாகிய யமனுக்குப் பலகாரமாய் விடுவோம் போலும்" என்று கைகுவித்துத் தொழுது விண்ணப்பித்தார்கள். அரசன் ஆச்சரியமும் கோபமும் அடைந்து, அந்தக் கொடிய பன்றி எங்கிருக்கிறது? அது ஓடிப்போவதற்கு முன், வேடர்களே! நீங்கள் அவ்விடத்திற்குப் போங்கள் என்று ஆஞ்ஞாபித்து, வில்லும் பாணமும் கையிற் பிடித்து, தன் தேரை அதி விரைவாக நடத்தி, எடுத்த

வில்லை நன்றாக வளைத்து, ஒரு பெரிய பாணத்தை ஏவி னார் சுபாகுரு வேந்தர். அந்தப்பாணமானது மலையருவி போல் பன்றி மேற் பாய்ந்து, உதிரம் பெருகி ஓட, வீழ்ந்து இறந்ததுமன்றி, முன்னே நந்திதேவருடைய சாபத்தினால், பசு உருக்கொண்ட திலோர்த்தமையாகிய பசுவின் உடலையும் ஊடுருவிக்கொண்டு, அப்புறம் சென் றோடியது. கண்டான் அரசன்; திடுக்கிட்டான்; பயந்தான்; மனம் சோர்ந்தான்: ஆ! என்ன ஆச்சரி யம் இது? பன்றியைக்கொல்லப் போனவிடத்துப் பசு இறந்ததே! கோஹத்தி தோஷத்துக்கு நாம் ஆளா னோமே! என்ன காலம், என்று கையிற்பிடித்தபாணத் தைக்கீழே விடுத்து, மூர்ச்சையானான். மந்திரி பிரதானி முதல் சேனைகள் யாவரும், மனம் திடுக்கிட்டுப் பயந்து சோர்ந்து நின்றார்கள்.

அரசன் சற்று மூர்ச்சை தெளிந்தெழுந்து, மந்திரி களை நோக்கி, "மந்திரிகாள்! ஒன்றை நினைக்க வேறொ ன்று நேர்ந்தது கடவுள் இஷ்டம்போலும். கிணறு வெட் டப் பூதம் புறப்பட்டது போலப் பன்றியைக் கொல்லப் போன விடத்துக் கோஹத்தி தோஷம் நேர்ந்தது. பஞ்ச மஹா பாதகங்களுள் இது ஒன்று. அரசனே இவ்விதம் செய்தால், குடிகள் என்ன நினைப்பார்கள். இதற்குப் பரிகாரம் என்ன என்பதை யோசித்துச் சொல் லுங்கள்" என்றான். மந்திரிகள் யோசித்து, பற்பல நீதிகளையும், சாந்தமான தோஷ பரிகாரங்களையும் சொன் னார்கள். அரசன் எதற்கும் சம்மதிக்காமல், "மந்திரி களே! இந்த தோஷத்துக்கு என் உயிராவது, என் புத்திரன் உயிராவது போகவேணும்" என்று சொன்ன

அளவில், மந்திரி பிரதானிகளும், சேனை வெள்ளங்களும், மனக்கலக்கம் அடைந்து வருந்தினார்கள்.

இத்தறுவாயில், இறந்த பசுவானது பொன்னிறத் திலதமும், நறுமணமுள்ள புஷ்பம் சூடிய கூந்தலும், நீலோற்பலமுள்ள கண்களும், சிவந்த வாயும், சந்திரப் பிரகாசம்போன்ற முகமும், மேகலாபரணமணிந்த தன பாரங்களும், பூங்கொடிபோன்ற இடையும், உயர்ந்த ஆடையாபரணாலங்கிர்த சுந்தரமுள்ள ஒரு பெண்ணாகத் தோன்றி, "சுரகுருவேந்தே! மனக்கவலையடையவேண்டாம். நான் உண்மையான பசுவல்ல; நீர் கோஹத்தி செய்தீர்களென்று நினைத்து வருந்த வேண்டாம். நான் திலோர்த்தமையாகிய தேவ கன்னிகை; முன்னொரு காலத்தில், சிவகணத்தலைவராகிய நந்தியெம்பெருமான் சாபத்தால், பெண்ணுருமாறிப் பசுவாக இவ்வனத்தில் மேய்ந்து கொண்டிருந்தேன். இப்போது உம்முடைய பாணத்தால், என் சாபம் விமோசனமாயிற்று; நான் பிழைத்தேன்; கோஹத்தி தோஷம் உமக்கு நேர்ந்த தென்று சஞ்சலப் படவேண்டாம். அதற்குப் பரிகார மும் செய்ய வேண்டாம்" என்று அரசனைத் துதித்து, ஸ்ரீ வேதகிரியைத் தோத்திரித்து வணங்கித், தெய்வ லோகம் சென்றாள். இறந்த பன்றியோ மாயீகன் என்னும் அசுரனாக மாறி, "அரசனே! நான் மாயீகன் என்னும் அரக்கன். மார்க்கண்டேய மஹா முனிவரது சாபத்தால், பன்றியாக இவ்வனத்தில் திரிந்திருந்தேன். சாப விமோசனம் உம்முடைய பாணத்தால் உண்டாகு மென்று, அம்முனிவர் அநுக்கிரகித்தபடி, இன்று பன்றி உருமாறிப் பழைய உருவடைந்தேன். நான் பிழைத்

தேன்'' என்றுவணங்கி, ஸ்ரீவேதகிரியைத்தோத்திரித்துச் சென்றான் அசுரன் மாயீகன்.

சுரகுருவேந்தன் இவ்விருவர் வசனங்களை யெல்லாம் கேட்டு, மனக்கலக்கம் நீங்கிச் சந்தோஷித்து, மந்திரிகளை யழைத்துத் தன்னூருக்குப் போகப் பிரயத்தினப் பட்டான். சவுனகாதி முனிவர்களே! தெய்வ சம்மதப்படி எல்லாம் நடக்கும் என்று சூதர் மேல் நடந்த விசேஷத்தைச் சொல்லுகிறார்.

## 20. சம்பாதி முனிவர்கள் சுரகுருவேந்தனுக்கு, தீர்த்த விசேஷம் சொல்லியது.

தவச்சிரேட்டர்களே! கவனமாய்க் கேளுங்கள் என்று சூதர் சொல்லுகிறார்.

சுரகுருவேந்தன் இவ்வதிசயங்களைப் பார்த்து, தெய்வக் கிருபையால் நடக்கும் விசேஷங்கள் சிற்றறிவுடையோமாகிய நாம், எப்படி அறியக்கூடும் என்று, மந்திரிகளை நோக்கி, “அப்பா! மந்திரிகளே! கோஹத்தி தோஷம் நம்மைத் தொடாதென்று திலோர்த்தமை யென்னும் தேவமாது சொன்னது வாஸ்தவமென்று எண்ணுகிறேன்; உங்கள் அபிப்பிராயம் எப்படி” என்று கேட்க, மந்திரிகள் அரசனை நோக்கி, பிரபுவே! ஆம்! வாஸ்தவந்தான்! அதற்காகக் கவலைப்பட வேண்டாம். நந்திதேவரது சாபத்தினாலான பசு, உம்முடைய பாணத்தாலேயே சாபவிமோசனம் என்று, நந்தியப்பரே அன்று சொல்லியிருக்கிறதாகத், தேவ கன்னிகை

சொல்ல வில்லையா" என்னலும், அரசன் மகிழ்ந்து, தன தேரின் மீதேறித் தன் நகருக்குச் செல்லப் புறப்பட்டான். இத்தறுவாயில், வேடுவர்களிடமுள்ள குஷ்ட வியாதியாற் பீடிக்கப்பட்டு வருந்திக் கொண்டிருக்கும் வேட்டை நாயொன்று, அவ்வேதகிரிமலை மேலேறி, அங்குள்ள சம்பாதி தீர்த்தத்திற் சென்று, தாகவிடாய் தீர்க்கப்போயிற்று. அவ்வியாதி பொருந்திய நாய் அச்சுனையில் கால் தவறி விழுந்தது. அத்தீர்த்த மகிமையால் அந்நாய்க்குள்ள குஷ்டங்கள் எல்லாம் தீர்ந்து, பொன் வடிவாய்ப் பிரகாசித்தது. பெருங் குஷ்டத்தினுல் வருந்தும் மந்திரி, அந்நாய் முன் அடைந்துள்ள வியாதியும், இப்போதடைந்துள்ள பொன்னிறமேனியுங் கண்டு அதிசயித்து, ஆ! ஆ! தெய்வீகம் பொருந்திய மலையாக்கும் இது, என்று தன் தேரை விட்டிறங்கி, அந்நாய் சென்ற காலடிப் பாதையைப் பார்த்துக்கொண்டேபோக, அங்கொரு சுனை காணப்பட்டது. அச்சுனையிலுள்ள தீர்த்தம் இம்மந்திரி கண்ணுக்குப் புழுக்கூட்டங்கள் குலவி நிறைந்திருத்தல்போல் தோன்றியது. அம்மந்திரி அத்தீர்த்தத்தின் அசுத்தத்தை மனதில் அருவருத்துக் கூசி, வாய்க்குள்ளே தீர்த்தம் போகாமல், வாயை மூடிக்கொண்டு, அந்நீரில் தேகம் முழுதும் தோய, ஸ்நாநஞ் செய்து எழுந்தான். எழுந்தவுடன், அத்தீர்த்தம்பட்ட சரீரமெல்லாம் குஷ்டநோய் தீர்ந்து, சொர்ண காந்தியாய்ப் பிரகாசித்தது. வாய் உதடுமட்டும், வெண் குஷ்டம் நீங்கவில்லை. அம்மந்திரியானவன் அதிசயித்து, "ஆ! ஆ! என்ன கஷ்டம்? நான் தீர்த்தத்தை அருவருத்து, வாய்க்குள் ஜலம் போகாமல், வாயைமூடிக்கொண்டு, ஸ்நா

நம் செய்தேன். தீர்த்தம் பட்ட இடமெல்லாம் பொன் னிறமாச்சுது. வாயில் மாத்திரம் குஷ்டம் நீங்கவில்லை. என்ன அபசாரம் செய்தேன்" என்று மனம் வருந்தி, மறுபடியும், அத்தீர்த்தத்தை வாயில் விட்டுப் பருகினுன். பரமசிவத்தின் திருவருளைச் சந்தேகிக்கும் கருத்துள்ள வனுய், முதலில் அருவருத்துப் பின்னர் அநுக்கிரகிக்க வேண்டுமானுல் கிடைக்குமா? வெண் குஷ்டம் வாயில் மாத்திரம் என்ன செய்தாலும் மாறவில்லை. மந்திரி இந்த அற்புதத்தைக்கண்டு அதிசயித்து, அரசனிடம் வந்து, நடந்த வரலாற்றைச் சொன்னுன். இது வரையில் இம்மந்திரியை, "இரணியசேதா" என்றழைத்தவர்கள், அந்நாள் முதல், "முத்துமணி வெள்வாயன்" என்று அழைத்தார்கள். மந்திரியினுடைய சரீரத்தைக் கண்டு அரசனும் மகிழ்ந்தான். மற்ற மந்திரி பிரதானி முதலியவர்கள் எல்லோரும் சந்தோஷித்தார்கள். தவச் சிரேஷ்டர்களே! சிவபெருமானின் திருவருளைச் சந் தேகித்தவர்கள், பின்னர் என்ன செய்தாலும், உய்யு முறைமை யடையார்கள் என்பது அநுபவத்தில் அறியுங்கள்.

சுரகுருவேந்தன் இவ்வதிசயங்கண்டு சந்தோஷித்து, ஸ்ரீவேதகிரியை வணங்கித் துதித்து, திருக்கழுக்குன்றத் தின் எல்லையைக் கடந்து, மஹாபலிபுரமாகிய தன் நாட்டுக்கு, மந்திரி பிரதானி சேனு சமுத்திரங்களுடன், பிரயாணப்பட்டுப் போகும்போது, அம்மலையில் தவஞ் செய்து கொண்டிருக்கும் சம்பு, ஆதி என்னும் கழுகு முனிவர்கள், சுரகுருவேந்தன் எதிரிற்சென்று, அவன் போவதைத் தடுத்து நின்ருர்கள். அரசன் கோபங்கொ

ண்டு, மந்திரி பிரதானிகளையும், ஆயுதந் தாங்கி நிற்கும் சேனைகளையும் பார்த்து, நீங்கள் இக்கழுகுகளை எதிர்த்துப்போர் செய்து, இவர்களை ஹதம் செய்யுங்கள் என்று ஆக்ஞாபித்தான். அவ்வாறே சேனைகள் வேலாயுதத்தாலும் வச்சிராயுதத்தாலும் மழுவாயுதத்தாலும் பாணங்களாலும், அக்கழுகுகளை எதிர்த்துப் போர் செய்தார்கள். அவ்வளவு கொடிய ஆயுதங்களும் பாணங்களும், அக்கழுகு முநிவர்கள் பேரில் புஷ்ப பாணங்களாய் விழுந்தன. அக்கழுகு முநிவர்கள் தன் மூக்காலெறியும் புஷ்பமலர்கள் இச்சேனைகள் பேரில் கொடிய பாணங்களாக விழுந்து, பலவித கஷ்டங்களைக் கொடுத்தன.

இந்த அதிசயத்தைக் கண்ட அரசன், கழுகு முநிவர்களைப் பார்த்து, "நீங்கள் கழுகு உருவெடுத்திருக்கின்றீர்கள். அப்படியிருந்தும், என்னுடைய சேனைகளை நாசப் படுத்தினீர்கள். என்னைப் போக வொட்டாமலும் தடுத்து நிற்கிறீர்கள். நீங்கள் தேவர்களோ முநிவர்களோ ராக்ஷசர்களோ இயக்கர்களோ பூதர்களோ மற்றும் யாவர்களோ தெரியவில்லை" என்று அண்ணாந்து பார்த்துச் சொல்ல, முநிவர்கள் அரசனைப் பார்த்து, "அரசனே! நாங்கள் முநிவர்கள். சிவ பெருமான் சாபத்தினால் கழுகுருவெடுத்தோம். அந்தச் சாபம் விமோசனமாகும் பொருட்டு, இவ்வேதகிரியில் தவஞ் செய்கின்றோம். இக்கலியுக முடிவில் எங்களுக்குச் சாப விமோசனமாகும். இது தான் எங்கள் விருத்தாந்தம். அரிபிரமாதிகள் பூஜித்து வரம்பெற்ற இவ்வேதகிரியில், நீ வேட்டையாட வந்தாய். அதனுடன் இந்த கிரியில்

கோவதை செய்து, அதற்கு யாதொரு பரிகாரமும் தேடிக் கொள்ளாமல், உனது நகர் நோக்கிச் செல்லு கின்றாய். நாங்கள் உன் மேல் மனமிரங்கி, உனக்குப் பாப விமோசனமாகும் பொருட்டு, உன்னைத் தடுத் தோம்" என்றார்கள்.

அரசன் சந்தோஷித்து, இவர்கள் என்னுடைய பாவங்களை நீக்குதற்பொருட்டே, வலியவந்து என்னைத் தடுத்தார்கள். போர் செய்தார்கள். போவதை நிறு த்தினார்கள். தெய்வத் தன்மையுள்ள முநிவர்கள் ஏழை யடியவர்கள் மீதிரங்கிச் சாபானுக்கிரகம் செய்ய வேண்டிய பெரியோர்கள் அல்லவா? ஏதோ எனக்கு நற்காலம் இருந்துதான் எனக்கு விமோசன மார்க்கம் சொல்ல, இம் முநிவர்கள் மனந்துணிந்தார்கள் போலும் என்று, தனக்குள்ளே நிச்சயித்துக்கொண்டு, அக்கழுகு களை நோக்கி, "முநிவர்களே! என்னுடைய கோ வதைத் தோஷம் நீங்கும்படியான மார்க்கம் தெரிவிப்ப துடன், இவ்வேதகிரியின் தீர்த்த விசேஷமும் தல விசேஷமும் எனக்கு விபரமாகச் சொல்லவேண்டும்" என்று பணிந்து இரங்கிக் கேட்டுக்கொண்டான். கழுகு முநிவர்கள் கருணையோடு அரசனை நோக்கி, அரசனே! உனது மனோபீஷ்டப்படி தீர்த்த விசேஷத்தை முத லில் சொல்லிப், பின்னர் தலவிசேஷம் சொல்லுகிறோம்; கவனமாய்க்கேளும்" என்று தீர்த்த விசேஷம் சொ ல்லுகிறார்கள் கழுகுமுநிவர்கள் சுரகுருவேந்தனுக்கு.

தீர்த்த விசேஷம். இவ்வேதகிரியைச் சேர்ந்த மகிமை பொருந்திய தீர்த்தங்கள் கோடியுண்டு. அக்கோடிக்குள் லக்ஷம் சிறந்தது. லக்ஷத்தினுள் பதினாயிரம் சிறந்தது.

அப்பதினாயிரத்துள் ஆயிரம் சிறந்தது. ஆயிரத்துள் நூறு சிறந்தது. அந்நூற்றுள் பன்னிரண்டு சிறந்தது. சூரிய குல சுரகுரு வேந்தே! அவைகளைச் சொல்லுகிறோம் கேட்பாயாக.

இவ்வேதமலைக்குக் கீழ்த்திசையில் ஒரு தீர்த்தமுண்டு. அதன் பெயர் (1) இந்திர தீர்த்தம்; தென்கிழக்கில் சம்பு தீர்த்தம்; (2) உருத்திரகோடித் தீர்த்தம்; தென் திசையில் வசிஷ்ட தீர்த்தம்; நிருதி திக்கில் மெய்ஞ்ஞான தீர்த்தம்; அகஸ்திய தீர்த்தம்; மார்க்கண்டேய தீர்த்தம்; கௌசிக தீர்த்தம்; மேற்கில் (3) நந்தி தீர்த்தம்; வருண தீர்த்தம்; வடமேற்கில் அகலிகா தீர்த்தம்; இம்மலையில் நாங்கள் மூக்கினால் கீறி, நீரும் மந்திரியும் கண்டது சம்பாதி தீர்த்தம். இந்த சம்பாதி தீர்த்தத்தால் இரணியசேதா என்னும் மந்திரியின் வெண்குஷ்டமும், நாயின் பெருங்குஷ்டமும், நீங்கியதைக் கண்டார்கள். ஆக இப் (4) பண்ணிரண்டு தீர்த்தங்களும், சகல பாபங்கள் சகல தோஷங்கள் சகல ரோகங்கள் நீக்கும் என்று அரசனே திடமாய் நினையும். இது தவிர, சங்க தீர்த்தம் ஒன்று உண்டு. அது இம்மலைக்குத்தென் புறத்தே யுள்ளது. இதில் 12-வருஷத்துக்கோர்தரம் ஸ்ரீமார்க்கண்டேயமஹாரிஷிக்காகச் சங்கம் பிறக்கும். 12-வருஷத்துக்கோர்தரம்

[1] மூவர் கோயில் பின்பக்க முள்ளது இந்திரதீர்த்தம். [2] ருத்ரகோடி க்ஷேத்திரத்துக்கு அருகாமையிலுள்ளது ருத்திரகோடி தீர்த்தம். [3] தாழக்கோயிலினுள் நந்தி தீர்த்தம்; அதனருகே நந்தியந்தேவர் சிலா விக்ரகம் திருமலையைத்தரிசித்து நிற்கிறார். [4] பன்னிருதீர்த்தங்களுள் சில காணாமலும் சில வற்றுக்குப் பெயர் விளங்காமலும் இருக்கிறது.

கங்கை யாதி மூன்றரைக்கோடி தீர்த்தங்களும், இங்கு வந்து ஸ்நாநம் செய்து, தத்தமக்குண்டான அசூயை யாதி துர்க்குணங்களை ஒழித்த விருத்தாந்தம், விரிவாகச்சொல்லுகிறோம்; கவனமாய்க்கேட்க வேண்டும்.

## சங்கதீர்த்த புஷ்கரம் அதாவது

### சங்கதீர்த்தத்தில் கங்கையாதி நதிகள் ஸ்நாநம் செய்து தங்கள் அசூயையை நீக்கிக்கொண்ட வைபவம்.

ஸ்லோகம்,

"கங்காத்யாஸ் ஸரிதஸ் ஸ்வபுண்ய விபவா தன் யோன்ய மாற்சரியகாஹா, பத்யௌ சானுனயே பிதேனஸஹிதாஹ: கோடீஸ்வரஸ்யாக்ஞயா, சமான்யா ஹிதிதாஸ்ஸாநிற்சிததியஹ: ஸ்ரீசங்கதீர்த் தாத்வயம் கன்யாரியே நிகமாசலே சமனுத்ஸ்நாநாத் வாயயு நிர்விர்திம்:"

கங்கை, யமுனை, சரஸ்வதி, வைகரணி, கவுதமை, மலப்பிரதரணி, துங்கபத்ரை, நர்மதை, கம்பை, பம்பை, கோமுகை, பொன்புகரி, தென்குமரி, சிங்கை, கண்டகி, வேத்ரவதி, பிராமி, தேவகை, பிணுகி, பாலை, பொருனை யென்று சொல்லப்பட்ட தாம்பரவர்ணி, சோவதி, சிந்து, சோமி, அளகை, நந்தினி, மந்தாத்திரி, பெண்ணை, அம்பை, இந்த்ரபுத்ரி, காவேரி, ருத்ரை, சரயு, வைகை, மணிமுத்தா இவை முதலிய மூன்றரைக்கோடி நதிகள், தங்கள் தலைவராகிய சமுத்ர அரசனிடம் சமரசமாயிருந்து சந்தோஷமாய் வாழ்ந்து வருங்காலத்தில்,

ஓர்நாள் நதிகள் யாவும் மகிமை புண்ய முதலிய குண விசேஷங்களால், தாம் தாம் பெரியமெனப் பொருமை கொண்டு, சமுத்ர அரசனது அன்பினைப் பூர்த்திசெய்யாது, முன்பின் முறைமை மாறி, இந்தநாள் எனக்குரியது, இந்த நாள் உனக்குரியதென்று சண்டையிட்டு நின்றார்கள். இக்கோலாகலத்தைக் கண்ட வருணன், மனம் வருந்திக் கலக்க மேலிட்டு, நதிகளைப் பார்த்துப் பொதுவாகச் சொல்லுகிறான். ஓ! நதிகளாகிய பெண்காள்! ஒருவர்க்கொருவர் வீண் சண்டையிட்டு நிற்கின்ற காரணம் என்ன? நான் உங்கள் எல்லோருக்கும் வேண்டிய நவரத்னங்கள் அளித்து வருகின்றேன். அமுதோபசாரம் தந்து, என் பூரண அன்பைச் செலுத்துகின்றேன். எவ்விஷயத்தில் யான் உங்களுக்குக் குறைசெய்கின்றேன்? பொருமைக்குணம் யாது காரணத்தால் உங்களுக்கு உண்டாயிற்று? கேவலம் அறிவீனர்களைப்போலச் சண்டையிடுகிறீர்கள். இது உங்கள் மேன்மையினைக் குறைக்கும். உலகம் உங்களைப் பழிக்கும். ஆகையால் ஒற்றுமையுடன் நீங்கள் வாழ்ந்து வருவீர்களாக என்று சமாதானம் சொன்னான்.

அந்நதிக்கூட்டத்துள்ள பாகீரதி என்னும் கங்கையானவள், தன் நாயகன் பொதுப்படச் சொல்லிய சமரச வார்த்தையினைக் கேட்டுக் கோபமுற்று, "அரசரே! கங்கையாகிய அடியாள் நமஸ்கரித்து விண்ணப்பிக்கின்றேன். சுவாமின்! தாங்கள் சொல்லும் உபசாரங்கள் வெகு நன்றாயிருக்கிறது. குலஸ்திரீகட்குக் கணவன் அன்பொன்றில்லாதபோது நவரத்தினங்களும், அமுதோபசாரமும், சங்கநிதி பத்மநிதிகளும்,

என்ன பலன் கொடுக்கும்? தத்தம் கணவர்களால் ஆதரிக்கப்படுதலில்லாத குலஸ்திரீகட்கு அழகு என்ன? ஆபரணம் என்ன? வாழ்க்கைச்சுகமென்ன? போக போக்யாதிகள் என்ன? தாய் தந்தை உற வினர்கள் இருந்தும் என்ன? யாரிருந்தும் எவை களிருந்தும் என்ன பிரயோசனம்? உயிருடன்கூடி உடலிருந்தாலும், அவர்கள் நடைப்பிணமானவர்களே! சுக துக்கங்களும், நன்மை தீமைகளும், அவைகளை அநுபவிக்கும் காலநிர்ணயமும், அவரவர் செய்வினைக் கேற்றுப்போல் நேருகிறது. தாழ்மையினுந் தாழ்ந்த நாயும் பன்றியும் கூட, தீய உணவுண்டு, பசியாறி, அற்ப சுகத்திலாழ்ந்து காலங்கழிக்கின்றன. ஜீவர்கள் உட லெடுத்து, உலகிலுள்ள நாள் வரையும் உணவூட்டிப் பரிபாலிப்பது, சிவபெருமான் கருணையேயாம். ஆதலால் செல்வம் வருகிறதென்று குலஸ்திரீகள் மானத்தை இழக்கமாட்டார்கள். உயிரை விட மானமே பெரிது. ஆடவரேனும் ஸ்திரீகளேனும் உத்தமர்கள் மானத் தோடு வரும் உணவுண்டு காலங் கழிப்பார்கள். மான மிழந்து, பசியாறிச் சுகித்திருப்பதைவிட, மானத்தோடு பசியினால் வருந்தி உயிர்விடுவதே, குலமக்கட்களுக் கழகு. பர்த்தாவே! அன்பொன்றில்லாமல் நவரத்தினங் களும் அமுதோபசாரமும் கொடுத்து, எங்களை ரக்ஷிப் பதில் என்ன பிரயோசனம்? தவிர, மற்றவர்களுடன் என்னையும் சமப்படுத்தி உபசரித்தீர்கள். முன்னிவர் பின் னிவர் என்பதை விளக்கினீர்களில்லை. என் மகிமையினை யும் கீர்த்தியினையும் பகுத்தறிவித்தீர்களில்லை. மற்றவர் களுடன், என்னையும் ஒருத்தியாக நீங்கள் மதித்து

விட்டீர்கள். ஆயிரம் நக்ஷத்திரங்கள் கூடினாலும், ஒரு சந்திரனுக்கிணையாகுமா? நீங்கள் மற்றவர்களோடு என்னையும் சமப்படுத்தி உபசரித்தது எனது காலவித்யாசந்தான். உங்களை நோவதில் என்ன பலன்" என்று மனம் வருந்திக் கோபத்தோடு கங்காதேவி சொன்னாள்.

இவ்வார்த்தையினைக் கேட்டுக் கோபாவேசத்துடனிற்கும் பாகிரதியைப் பார்த்து, சமுத்திர அரசன் சொல்லுகிறான். "ஏ! பாகீரதி! அறிவீனமுள்ள பெண்களைப்போல, நீ மனம் வருந்துகின்றாய்; தம் கணவரிடத்தில் கோபங்கொள்ளுதல் குலஸ்திரீகட்கு அழகா? நான் சொல்லிய எந்த வார்த்தை உன்மனதுக்குக் கிலேசத்தைக் கொடுத்தது? உலகிலுள்ள எல்லா நதிகட்கும், நீயே மகிமையும் முதன்மையும் பெற்றிருக்கிறாயென்று உலகம் மதித்திருக்கின்றது. ஈரேழுபதினான்கு உலகங்களிலும், வேதாகம புராண இதிகாசங்களிலும், உன் மகிமையையும் பெருமையையுமே விசேஷமாக விளக்கியிருக்கிறது. சாக்ஷாத் சிவபெருமான் முடிமீதேறி விளங்குகின்றவள் நீயே; அச்சிவபெருமானின் கண்களைப் பார்வதிதேவியார் மூடிய அக்காலத்தில், தேவியின் கைவிரல்களினின்றும் வியர்வையாகத் தோன்றினவளும் நீயே; வைகுந்த வாசராகிய மகாவிஷ்ணுவின் பாத தாமரையினின்றும் இழிந்தவளும் நீயே; ஜன்ஹு மகரிஷியின் திருச்செவியிற் றோன்றினவளும் நீயே; ஹிமாசல பர்வதராஜனிடம் புத்திரியாகப் பிறந்ததும் நீயே; நீ அமலை; பரிசுத்தமானவள்; சகரர்க்களை மோக்ஷத்துக்கு விடுத்த புண்யவதி நீயே;

சர்வத்ராளுடைய மஹாபாவங்களையெல்லாம் போக்கடிக்கின்ற உன்புகழையும் மகிமையையும் எடுத்துரைக்க ஆயிரநாக்கொண்ட ஆதிசேடனாலும் முடியாதே; ஏ! கங்கா! கோபத்தை ஒழி. பொறுமையைக்கொள். உன்னிடத்துள்ள என் அந்தரங்க அன்பை அறிந்துகொள்ளாமல் வீணே வருந்துகின்றாய். உனக்கு யான் என்ன குறை செய்தேனென்பது எனக்குத் தெரியவில்லை. நீ வருவதற்கு முன்னமே என் ஆசைப் பெருக்கினைக் காட்டி, உன்னை அணைந்து, அமுதம் பொழியவில்லையா? பெண்ணே! வருந்துதலொழி. சந்தோஷமாயிரு" என்று சமுத்ர அரசன் பாகீரதிக்குச் சமாதானம் சொல்லி, அவளது கோபத்தை ஒருவாறு தணித்தான்.

கங்காதேவி சிறிது கோபந்தணிய, அருகிருந்த யமுனை சரஸ்வதி இருதேவிகளும், ஆ! ஆ! பார்த்தீர்களா! நமது நாயகனது பக்ஷபாதத்தை; பாகீரதியிடம் மாத்திரம் பரிபூர்ண அன்பை அந்தரங்கமாகச் செலுத்துவதாக, அவர் வார்த்தையினாலேயே ஏற்படுகிறது. சர்வ மகிமைகளும் அவளுக்கே யிருக்கட்டும்; நமது நாயகனும் அவளிடமே சுகிக்கட்டும்; என்று மனம் வருந்திக் கோபித்தார்கள். இவ்விரு நதி தேவிகளுக்கும் ஒருவாறு உபசாரம் சொல்லிச் சமாதானம் செய்ய, அவர்களும் ஒருவாறு கோபந்தணிந்தார்கள். ஈதறிந்த மற்றைய நதிதேவிகளும் அரசனிடம் ஊடல் கொண்டார்கள்.

இவ்வாறு நதிகள் யாவும் ஒன்றோடொன்று சண்டையிட்டு, உன்னைவிடச் சிறந்தவள் யான்? என்னைவிட

மேம்பட்டவரில்லை யென, ஒருவரையொருவர் இகழ்ந்து போராடி, சமுத்ர அரசனுகிய தம் நாயகனை வருத்தினார்கள். அரசன் என்ன செய்வான் பாபம்? சமாதானம் சொன்னால் கேட்கிறதில்லை; நாளுக்கு நாள் சண்டையும் வருத்தமும் மேம்பட்டு வந்தது. அரசனது இனிய வார்த்தைகள், நதி தேவிகளுக்கு விஷம்போல் கோபத்தை மூட்டின. அரசன் இவர்களது போராட்டத்தைக்கண்டு, மனம் சகியாமல் வருந்தினான்.

இவ்வாறிருக்கையில் ஓர் நாள், அரசன் மட்டற்ற வருத்தத்தினால் கோபங்கொண்டு, ஏ! நதிகளாகிய தேவிகளே! பொறுமைக்குணமேலீட்டினால், உங்களுக்கு நீங்களே உயர்வு கற்பித்துக்கொண்டு, வாதாடி வழக்கிட்டு வருகிறீர்கள். நான் சொல்லும் சமாதான வார்த்தைகளையும் கேட்கின்றீர்களில்லை. உங்கள் போராட்டமும் நீங்கியபாடில்லை. உங்களைவிட உயர்விலும் மகிமையிலும் சிறந்த தீர்த்தங்கள் இவ்வுலகில் அநந்தங் கோடி உண்டு என்பதையும் கவனிக்கின்றீர்களில்லை. அத்தகைய தீர்த்தங்களின் பெருமைகளை எடுத்துரைக்க ஆதிசேடனாலும் முடியாதென்றால், என் போன்றவர்களால் எப்படிச் சொல்ல முடியும்? தேவிகாள்! இது விஷயத்தில் சந்தேகம் உங்களுக்குத் தோன்றினால், கோதாவரி தீரத்தில், சுயம்புவாகத் தோன்றி யுள்ள, சுரேசராகிய சிவபெருமானிடம் சென்று, உங்கள் சந்தேகத்தைத் தீர்த்து, உண்மை தெளிந்து, போராட்டத்தை நீக்குங்கள். அங்கே போனால், உங்களுடைய மேன்மையும் தாழ்மையும் அறிந்து கொள்ளலாம் என்றார் சமுத்திர அரசன்.

இப்படிச் சிலநாள் சென்றும், நதிதேவிகளின் மாச்சரியமும் போராட்டமும் ஒழியவில்லை. நாளுக்குநாள் அசூயை விருத்தியாய் வந்தது. அரசனிடம் அதிக வூடல் கொண்டார்கள். எங்கள் குறைகளைத் தீர்க்கக் காலம் வரவில்லையோ என்று முறையிடத் தலைப்பட்டார்கள். இக்கொடிய வார்த்தைகளைக்கேட்ட அரசன், அதிக மனம்வருந்தி, தேவிகளா! எத்தகைய சமாதான மும் உங்களுக்கு நன்மை பயக்கவில்லை. வாருங்கள் எல்லோரும் கோதவரி தீரத்துள்ள சுரேசர் சந்நிதானத்துக்குப் போவோம்; சிவபெருமானிடம் உங்கள் குறைகளை விண்ணப்பிப்போம், என்று சமுத்திர அரசனும் நதிக்கூட்டங்களும் கோதாவரி கோடீசுரப் பெருமான் சந்நிதானம்போய்ச் சேர்ந்தார்கள்.

அரசனும் நதிக்கூட்டங்களும் கோதாவரி கோடீஸ்வரர் ஆலயத்துக்குச் சென்று, க்ஷேத்ராதிபதியாகிய சுரேசர் என்று பெயர் வழங்கும் சுயம்புலிங்கமூர்த்தி, கோடீஸ்வரப் பெருமானைத் தொழுது வணங்கி, மனமுருகி நின்று, பார்வதி சமேதா! பக்தபராதீனா! ஆபத்ரக்ஷகா! அநாதிமூர்த்தி! ஆலாலமுண்டவா! அம்பிகை பாகா! அருட்பிரகாசா! அற்புத சிதாகாசா! ஆநந்த சொரூபா! சித்சொரூபா! சின்மயதேஜா! புண்யசொரூபா! நாங்கள் மனம் நொந்து வந்தோம். தீனதயாளு! எங்களை ரக்ஷிக்கவேண்டும். எனது நதிதேவிகளாகிய மனைவியர்கள் உன்னிலும் யான் பெரியன்; என்னைவிடச் சிறந்தவர்கள் ஒருவருமில்லையென மாற்சரியங்கொண்டு, ஒருவருக்கொருவர் வாதாடி வழக்கிட்டு, எனக்குக் கஷ்டம் விளைவித்து வருகிறார்கள்;

என்ன சமாதானம் சொல்லினும் கேட்கின்றார்களில்லை. இவர்களால் படுந்துயர் சொல்லத்தரமல்ல. இச்சங்கடத்தைப் பொறுக்க முடியாமல், தங்கள் சந்நிதானம் வந்தோம்; பெருமானே! தேவரீர் ஏழைகள்மீது திருவுளங்கொண்டு, எம் குறைகளைத் தீர்த்து, அவர்களது போராட்டத்தை நீக்கியருளவேண்டுவது தங்கள் கடமை. எம் குறை தீருமட்டும் இச் சந்நிதானத்திலேயே தங்கி யிருப்போம்; வேறிடம் போகோம் என்று பலவாறு தோத்திரித்து வணங்கி, நின்றான் சமுத்திர அரசன்.

பக்த பராதீனராகிய கோடீசுரப் பெருமான், கருணையினால் அரசனை நோக்கி, அப்பா வருணா! கவலையை ஒழி; பயப்படவேண்டாம்; உன் மனோபீஷ்டத்தை நிறைவேற்றி, உன் மனைவியர்களின் மாற்சரியத்தை நீக்குவோம்; இங்கு நீங்கள் வந்த காலம் மஹா புண்ய தினமாக்கும். சிம்ம ராசியில் குரு பிரவேசிக்கும்போது, இக் கோதாவரி தீர்த்தத்துக்கு விசேஷ மகிமை உண்டு. இப்புண்யகாலத்தில் இத் தீர்த்தத்தில் நீங்கள் யாவரும் ஸ்நானம் செய்து, எம்மைத் தொழுது வணங்குவீர்களாக; உங்கள் இஷ்டகாம்யம் பூர்த்தியாகும்; மாற்சரியம் நீங்கும்; மனமகிழ்ச்சி உண்டாகுமென்று ஆசீர்வதித்து மறைந்தார்.

சிவபெருமான் ஆசீர்வசனங்களைக்கேட்ட வருணன், மனமகிழ்ந்து, முன்னவனே முன்னின்றால் முடியாததொன்றுண்டோ? நாயிற் கடையேனாகிய அடியேன் குறையினைத் தீர்ப்போமெனப் பரமசிவம் திருவுளங்கொண்டது, யாம்செய்த தவப்பயனே யாமென உணர்

ந்து, பரமபதி ஆக்கினைப்படி கோதாவரி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, ஜெபதபாதிகள் முடித்து, சுரேசப் பெருமானைத் தொழுது வணங்கித் தோத்திரித்து நின்றான்.

வருணனை ஆசீர்வதித்த பிறகு, பரமசிவம் கங்கை யாதி மூன்றரைக்கோடி தீர்த்தங்களையும் பார்த்து, ஏ! நதிகளா! நீங்கள் வீணே ஒருவர்க்கொருவர் சண்டையிட்டு, உங்கள் அரசனை வருத்துகின்றீர்கள்; பெண் புத்தி பின்புத்தி யென்பதை அநுபவத்தில் காட்டி விட்டீர்கள்; உங்களில் யார் பெரியர்? யார் சிறியர்? யோசித்துப்பார்த்தால் உங்களுக்கு மகிமை யேது? பெருமையேது? புகழேது? கீர்த்தியேது? பொறாமை யினால் யானெனு மகந்தைகொண்டு அழிகின்றீர்கள்; உங்களைவிட மேலானதும் மகிமையுள்ளதுமான அநந்தங்கோடி தீர்த்தங்கள் இவ்வுலகில் இருக்கின்றன வென்பதை அறிந்து கொள்ளாமலே போராடி வருகின்றீர்கள்; அகங்கார புத்தியை ஒழித்து, சமத்வமடைந்து, உங்கள் நாயகன் சொற்படி நடந்துகொள்ளுங்கள். உங்களுக்குச் சிரேயசும் பெருமையும் தானே உண்டாகும்; வீணே மதியிழந்து, மாச்சரியங்கொண்டு அலையவேண்டாம். நதிகளா! கேளுங்கள்; ஹிமாசலத்துக்கும் கங்காதீரத்துக்கும் தெற்கு இருநூறு யோசனைதூரம், ஸ்ரீ காஞ்சிமாநகருக்குக் கிழக்கு ஐந்து காத தூரம், விருத்தாகாரமாயுள்ள உருத்திரகோடி க்ஷேத்ரமொன்றுளது; அவ்விடத்தில் நான்குவேதமே நான்கு மலைகளாகவும், அவற்றுள் அதர்வணவேதசிரசில் நாம் மலைக்கொழுந்தருவாகவும்,

பக்தகோடிகளை அநுக்கிரகிக்கவேண்டி யெழுந்தருளி யிருக்கிறோம். அந்த க்ஷேத்திரத்தில் கோடிக்கணக்கான தீர்த்தங்களுண்டு. அவற்றுள் சங்க தீர்த்தமென்பது விசேஷ மகிமை பொருந்தியது. இத்தீர்த்தக் கரையில் பிரமன் விஷ்ணு இந்திராதி தேவர்கள், அகஸ்தியராதி சித்தர்கள், மார்க்கண்டேயராதி மகரிஷிகள், சதா வாசம் செய்கிறார்கள். இது பரிசுத்தம் பொருந்தியது; வெண்மை நிறமுள்ளது. மஹத்தான ஜனங்கள் ஸ்நான பானாதிகள் செய்து, தத்தம் கர்ம ரோகங்களையும், பிறவி நோய்களையும், நீக்கிக்கொள்ளுகிறார்கள். இத் தீர்த்தத்தின் ஒரு திவலைக்குப் பெருமை சொல்ல, ஆயிர நாக்கொண்ட ஆதிசேஷனாலும் முடியாதென்றால், நீங்கள் இதன்முன் எம்மாத்திரம் பெருமையுடையோ ரென்பதை நீங்களே அறிந்துகொள்ளுங்கள்'' என்று பரமசிவம் திருவாய்மலர்ந்தருள, கங்கையாதி நதிகள் இவ்வார்த்தையினைக் கேட்டு அயர்ந்து, திப்பிரமை கொண்டவர்களாய்ப் பரமபதியின் திருவருளைச் சிந் தித்த வண்ணமாக அசைவற்று நின்றார்கள்.

அரசனும் நதிதேவிகளும் சிலநாள் கோதாவரி தீரத்திலேயே வசித்து, அத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, மூர்த்தியைத் தரிசித்துக் காலங்கழித்து வரு நாளில், ஓர் நாள் சிவபெருமான் வருணனையும் நதிக் கூட்டங்களையும் பார்த்து, இப்போது குருபகவான் கன்னியாராசிக்குப் போகிறார்; நாம் உருத்திரகோடி க்ஷேத்திரத்துக்குப் போகிறோம்; நீங்கள் எல்லோரும் அவ்விடம் வாருங்கள் என்று ஆக்ஞாபிக்க, பெருமான் கட்டளைப்படி, வருணனும் நதிக்கூட்டங்களும் உடனே

புறப்பட்டு, உருத்திரகோடி க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார்கள். கோடீசுரப் பெருமான் வருணனுக்கும் கங்கையாதி நதிக்கூட்டங்களுக்கும், இங்குள்ள கோடி தீர்த்தங்களின் மகிமைகளைக் காட்டி, சங்கதீர்த்தத்தின் பெருமைகளைச் சொல்லி, இத்தீர்த்தத்தில் நீங்கள் ஸ்நானம் செய்யுங்களென்று ஆக்ஞாபித்து, வேத பர்வதத்துக்குள் பெருமான் மறைந்தார். வருணனும் கங்கையாதி நதிகளும், பரமசிவாக்கினைப்படி இச்சங்க தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம்செய்து எழுந்த வுடனே, தத்தமக்குண்டான மாற்சரிய குணம் நீங்கிப் பரிசுத்த மனதுடையவர்களாய் நின்று, ஆச்சரியமுற்று, ஆ! ஆ! என்ன அதிசயம்? இத்தீர்த்தத்தின் மகிமைக்கு நாம் எம்மாத்திரம்? இது காறும் நமக்கு நாமே பெரியமென மதித்து, வீண் போராட்டங்கொண்டு, நமது நாயகனிடம் ஊடல் கொண்டோமே! என வெட்கி வருந்தினார்கள். எல்லாம் சிவன் செயலாகிய உண்மை ஞானம், சமத்வ குணம் உதித்தது. எல்லோரும் ஞான சொரூபராய் நின்று, மறுபடியும் அத்தீர்த்தத்தில் ஸ்நானம்செய்து, தத்தமக் குண்டான நித்திய கருமானுஷ்டானங்களையும், ஜெப தபாதிகளையும் முடித்து, ஸ்ரீவேதகிரிப் பெருமானைத் தோத்திரித்து வணங்கி நின்றார்கள். இவ்வற்புதத்தைக்காண, தேவர்கள் முனிவர்கள் சித்த வித்யாதரர்கள் கருடர் காந்தருவர் யோகியர் முதலானோர் விஜயம்செய்து, இச்சங்கதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, சிவபெருமானைத் தோத்திரித்து வணங்கிச் சென்றார்கள்.

அப்போது பரமசிவம் வருணன்முன் தோன்றி,

ஆசீர்வதித்துச் சொல்லுகிறார். "அரசனே! இவ்ருத்திரகோடி க்ஷேத்திரம் ஒருகாததூரம் விருத்தாகாரமாயுள்ளது. இவ்வெல்லைக்குள் கோடிதீர்த்தங்கள் உண்டு. அக்கோடியில் லக்ஷம் சிறந்தன. இலக்ஷத்தில் ஆயிரம் சிறந்தன. ஆயிரத்தில் நூறு சிறந்தன. அந்நூற்றில் பன்னிரண்டு தீர்த்தங்கள் சிறந்தன. அப்பன்னிரண்டில் இச்சங்கதீர்த்தம் மஹா மகிமை பொருந்தியது. இத்தீர்த்தக்கரையில் தேவர்கள், ரிஷிகள், முனிவர்கள், சித்தர்கள் சதா வாசம் செய்து வருகிறார்கள். நீங்கள் எல்லோரும் இன்றையதினம் இத்தீர்த்தத்தில் மூழ்கி, உங்கள் மாற்சரியத்தை நீக்கிக்கொண்டீர்கள். இன்று குருபகவான் கன்யா ராசிக்குப் பிரவேசித்தார். *இதுசிறந்த மஹா புண்யதினமாகும். இத்தின முதல் குரு கன்யாராசியிலுள்ள ஒரு வருஷம் வரையும் எவரேனும் இத்தீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானம் செய்து, நம்மைத் தரிசிப்பார்களாயின், அவர்களுக்கு ஒன்றுக்குக்கோடிபங்கு பலன் உண்டாவதன்றி, அவர்களைப்பிடித்த வறுமை, பீடை, கர்மரோகங்கள் யாவும்

---

* இச்சங்கதீர்த்த வைபவம் பன்னிரண்டு வருஷத்துக்கோர்தரம் குரு கன்னியாராசிக்கு வரும்போது நடப்பது. இவ்வாலயத்தில் இத்தீர்த்த புஷ்கரத்தை துன்மதிஷு ஆவணிமீ 1உ (16-8-21) மங்களவாரம் நடத்தினார்கள். சங்கதீர்த்தக்கரையில் கங்கையாதிநதிகள், வருணன் முதலிய தேவதைகளைக் கும்பத்தில் ஆவாஹனம் செய்து, ஐந்து நாள் ஆகமவிதிப்படி பூஜித்து, அக்நி ஓமம் செய்து, புஷ்கரதினத்தன்று காலை, ஸ்ரீவேதகிரிப்பெருமான் பஞ்ச மூர்த்திகளுடன் தீர்த்தக்கரையில் அதிகாரநந்திவாகனத்தில் தரிசனமும் தீர்த்தமும் கொடுத்தார். அன்றுமாலை, சிவபிரானுக்குத்திருக்கல்யாணம் ரிஷபவாகன சேவை.

நீங்கும். [1]அஷ்டயிஸ்வர்யம், புத்ரசந்தானம், இஷ்ட காம்யசித்தி உண்டாவதுடன் [2]அஷ்டலக்ஷ்மிகளும் வாசம் செய்வாள். இது நிச்சயமெனத் திருவுளம்பற்றி, வருணனுக்கும் கங்கையாதி நதிகளுக்கும் ஆசீர்வசனம் சொல்லி மறைந்தாரெனச் சுரகுருவேங் தனுக்குக் கழுகுமுனிவர்கள் சொல்ல, அரசன் கேட்டு ஆநந்தித்து,இன்னும் இதன் விசேஷத்தைச் சொல்லும் படிகேட்க, கழுகு முனிவர்கள் சொல்லுகின்றார்கள்.

மஹாவிஷ்ணுவின் சாபம் தீர்த்தது:— அரசனே! முன்னோர் காலத்தில், தேவர்க்கதிபதியாகிய இந்திரன், விருத்தாசுரனோடு யுத்தஞ்செய்த காலையில், அவ்வசுரனைக் கொல்வதற்குப் பலப்பல தந்திரங்கள் செய்தும், ஒன்றும் பிரயோசனப்படாது வருத்தமடைந்தான். அப்போது இந்திரன் லோகரக்ஷகராகிய மஹாவிஷ்ணுவிடம் சென்று, விருத்தாசுரனைக் கொல்ல வகையின்மையை விண்ணப்பிக்க, அவர் இந்திரன்மீது கருணைகொண்டு, " அப்பா! இந்திரா! விருத்தாசுரன் எவ்வகை ஆயுதங்களினாலும் இறவான். ஆனால் ஒருபாயத்தினால் இறக்கலாம்; ததீசிமுனிவரது முதுகெலும்பைக்கொணர்ந்து, அதனால் யுத்தம்செய்யும் பக்ஷத்தில், அவ்வசுரன் மாய்வது நிச்சயம். இந்த உபாயம் பிறர் அறியப்படாததொன்று " என்று சொன்னார். இந்திரன் இவ்வுபாயத்தைக்கேட்டுச் சந்தோஷித்தானாயினும், ததீசி

[1] அஷ்டயிஸ்வர்யம் :—ராஜாங்கம், பொன், மணி, நெல், மக்கள், சுற்றம், அடிமையாள்கள், வாகனம்.

[2] அஷ்டலக்ஷ்மிகள் :—தன, தானிய, சந்தான, சௌபாக்கிய, வீர, விஜய,வர, கெஜலட்சுமிகள் எட்டு.

முநிவரது உடலுக்கே கெடுதி விளையுமென்றஞ்சினன். பின் ஒருவாறு மனந்தெளிந்து, அசுரனைக் கொல்ல வேண்டுமென்கிற திடசித்த முடையோனாய், ததீசி முனிவரிடம் சென்று, அவரது முதுகெலும்பை யாசித்தான். முநிவர்பெருமான் இந்திரனது யாசிப்பை மனதிலெண்ணி, "இவ்வுபாயஞ்சொல்லி அனுப்பியவர் மஹாவிஷ்ணுவேயாவர். இவ்விரகஸ்யம் அவரைத்தவிர மற்றவர் அறியார். நம்முடைய உடலழிந்தாலும், பிறருக்கு உபகாரஞ்செய்வதே தர்மங்களிற் சிறந்தது" என்று மனதிலெண்ணி, "தேவர்க்கதிபதியே! உன்மனோபீஷ்டப்படி, எனது முதுகெலும்பை உனக்குத் தத்தம் செய்தேன். நீ அதனைக் கொண்டுபோய் உன் எண்ணத்தைப் பூர்த்திசெய்துகொள்வாயாக" என்றுசொல்லி, இவ்வுபாயத்தைச் சொல்லியனுப்பிய வைகுந்தனுக்குச் சாபங்கொடுத்து, உயிர் துறந்தார். இந்திரன் ததீசி முநிவரது முதுகெலும்பைக் கொண்டுபோய் விருத்தாசுரனோடு யுத்தஞ்செய்து அவனைக் கொன்றான்.

முநிவரிட்ட சாபம் மஹாவிஷ்ணுவை வருத்தத் தலைப்பட்டது. என்னசெய்வார்? இந்திரனை ரக்ஷிக்கச் செய்த உபாயம், தனக்குக் கஷ்டத்தை விளைவித்தது; உடனே லக்ஷ்மிநேசன் கைலாசபதியாகிய சிவபெருமானிடம் சென்று முறையிட, பரமசிவம் அன்புகூர்ந்து, அப்பா! கமலக்கண்ணா! அஞ்சுதலொழி; உருத்ரகோடி க்ஷேத்திரஞ்சென்று, சங்க மஹாதீர்த்தத்தில் விதிப்படி ஸ்நானஞ்செய்து, ஸ்ரீ வேதகிரியைப் பிரதக்ஷிணம் செய்து, அங்கேயே சிலகாலம் வசித்திரு. உனக்கு நேரிட்ட சாபம் நிவர்த்தியாகும்" என்று ஆக்ஞாபிக்க,

அவவாறே வைகுந்தன் டக்ஷி தீர்த்தத்துக்கு வந்து, சங்கதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து, ஸ்ரீ வேதகிரிப்பெருமானைத்தொழுது, கிரியை வலம் வந்து, சிலகாலம் அங்கு வசித்து வந்தார். சிவபெருமான் கண்ணன் முன் பிரத்தியக்ஷமாகி, அவருக்குச் சாபத்தால் நேர்ந்த துன்பத்தை நீக்கி, வைகுந்தம் அனுப்பினர். அரசனே! இன்னும் இதன் மகிமையைச்சொல்லுகிறேன் என்று கழுகு முனிவர்கள் மேலே சொல்லுகிறார் சுரகுருவேந்தனுக்கு.

மார்க்கண்டேய மகரிஷிக்காக *சங்கம் பிறக்கிறது. மார்க்கண்டேய மகாமுனிவர் சிவாநுக்கிரகத்தால் காலபாசத்தை வென்று, என்றும் பதினாறு வயதுடைய சிரஞ்சுகியாக வரம்பெற்ற பிறகு, காசி முதலிய க்ஷேத்திரங்கள் சென்று யாத்திரை செய்து, திரும்பிவருங்காலத்தில், இவ்வுருத்திரகோடி க்ஷேத்திரம் வந்து, சங்கதீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, நித்திய கர்மாநுஷ்டானங்கள் முடித்து, சிவபூஜை ஆரம்பித்து, தீர்த்தக்கரையில் சிவலிங்கம் ஒன்று பிரதிஷ்டை செய்தார். அதற்கு அபிஷேகாதிகள் செய்யப் பாத்திரமில்லையே யென சங்கல்பித்தவுடன், இச்சங்கதீர்த்தத்தில் சந்திரபிம்பம் போல், வெண்மையும் பிரகாசமும் பொருந்திய சங்கம் ஒன்று, ஓங்கார சப்தத்துடன் தோன்றிற்று. பக்தபராதீனராகிய பரமசிவத்தின் திருவருட்பேறு ஈதென நினைத்து, சந்தோஷ சித்தராய், அச்சங்கத்தை எடுத்துச் சுத்தித்து, தான் பிரதிஷ்டைசெய்த சிவலிங்கப் பெரு

* 12-வருஷத்துக்கோர்தரம் சங்கம பிறக்கிறது பிரத்தியக்ஷ அனுபவம்.

மானுக்கு அச்சங்கத்தால் அபிஷேகமும், அலங்கார தூபதீப நைவேத்திய சோடசோபசாரமும் செய்து வணங்கித் தோத்திரித்தார். அன்று முதல் அச் சிவலிங்கத்துக்குத் தீர்த்தேசுரரென்றும், மார்க்கண்டேய ரால் பிரதிஷ்டை செய்ததால் மார்க்கண்டேசுரரென் றும் பெயர் வழங்கி வருகிறது.

சம்புலிங்கம் சித்தப்பிரமை நீங்கியதும், யக்ஷன் சாப விமோசன மானதும்:—சம்புலிங்க மென்னும் பிராமணன் பிரமசாரி ஆஸ்ரமத்திலிருந்து, ஓர் குருவினிடம் சிசு ரூஷை செய்துகொண்டு, யோகசாஸ்திரம் வாசித்து வந்தான். அந்தக் குருவானவர் காலா காலத்தில், சந்தியா வந்தனம் ஜெப தபாதிகள் செய்வதில்லை, ஆசார அநுட்டானங்களைக் கவனித்து நடத்துகிற தில்லை. பகற்காலங்களெல்லாம் நித்திரைசெய்வார்; குருவானவர் இப்படி சாஸ்திரவிரோதமாய் நடப்பதைக் கண்ட சம்புலிங்கம், குருவை வெறுத்தான். அவரது ஒழுக்கமின்மையைக்கண்டு மனம் நொந்தான். சில நாள் சென்றதும், ஓர்போது சம்புலிங்கம் குருவை நமஸ்கரித்து, "சுவாமின்! வேதாகமவிதி தவறிப் பகற் காலமெல்லாம், நித்திரையிலேயே மயங்கிக் கிடக்கிறீர் கள்; ஆசார அநுட்டானங்களைக் கவனிக்கிறதில்லை; நித்யவிதிகளை மறந்தீர்கள்; உணவு வேண்டாமலே உறக் கம் விரும்புகிறீர்கள். இது என் மனதைக் கஷ்டப் படுத்துகின்றது. ஆதலால், அடியேன் உம்மை விட்டுப் பிரிய வேண்டியவனா யிருக்கிறேன்" என்று கூறவும், குருவானவர் கோபித்து, "அட பயலே! குருவைக் கண்டித்த நீ சித்தப்பிரமைகொண்டு அலையக்கடவாய்"

என்று சபித்தார். குருசாபம் சம்புலிங்கத்தை வருத்தத் தலைப்பட்டுவிட்டது. மதியிழந்தான்; மானமிழந்தான்; மயக்கம்கொண்டான்; மனம் ஒருவழி நில்லாது, காடு மலை வனம் வனாந்தரங்களெல்லாம் சுற்ற ஆரம்பித்தான்; நீராடலை மறந்தான்; ஜெபதபங்களை இழந்தான்; உணவை வெறுத்தான்; உறக்கத்தை நீத்தான்; இவ்வாறு சம்புலிங்கம் அலைந்து திரிந்து வருந்துகின்ற போது, தெய்வாதீனமாய் உருத்திரகோடி க்ஷேத்திரம் சங்கதீர்த்தக்கரையைச் சேர்ந்தான். அச் சங்கதீர்த்தத்தைக் கண்ணால் பார்த்ததும், அதன் குளிர்ந்த காற்று அவன்மீது ஜில்லென வீசவும், மனம் ஒருவாறு தெளிந்தது. ஆயினும் இத்தீர்த்தத்தின் மகிமையீதென்றுணராமலே, சாதாரண தீர்த்தமென்று மதித்து, இதில் இறங்கி, ஸ்நானம் செய்தான். எழுந்தவுடன பழைய நினைவு தோன்றிற்று. குரு சாபத்தால் வெகுநாள் கஷ்டப்படுத்திய சித்தப்பிரமை நீங்கிற்று; மனம் தெளிவுற்றது. நாம் யார்? இவ்விடம் ஏன் வந்தோம்? இது என்ன க்ஷேத்திரம்? இத் தீர்த்தம் யாது? என்று விசாரிக்கலானான். இத்தீர்த்தத்தால் தான் அடைந்த சுகத்தை நினைந்து நினைந்து சந்தோஷித்து, ஆ! ஆ! என்ன ஆச்சரியமுள்ள மகிமை இத்தீர்த்தத்துக்குளது, என்று பரவசப்பட்டு, இங்கேயே சில காலம் வசிக்க உத்தேசித்தான். அன்றுமுதல் சம்புலிங்கம் பஞ்ச பஞ்ச உஷக்காலத்திலெழுந்து, சங்க தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, கிரிப்பிரதக்ஷிணம் வந்து. ஸ்ரீ வேதாத்ரீ நாதனையும், ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளையும் தொழுது வணங்கி, சிலகாலம் இங்கேயே வசிக்கலானான்.

ஓர் நாள் சம்புலிங்கம் இச்சங்கதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து, அநுட்டான முடித்து, ஜெபஞ்செய்து கொண் டிருக்கும்போது, ஓர் பக்ஷியானது ஓர் மச்சத்தைக் கவ்விக்கொண்டு, ஆகாயமார்க்கமாய் சங்கதீர்த்தநடுவில் வர, தான் கவ்விவந்த மச்சமானது தெய்வீகமாய் இத் தீர்த்தத்தில் விழ நேர்ந்தது. விழுந்ததும், அம்மச்ச மானது அதி ரூபலாவண்யம் பொருந்திய ஓர் யக்ஷனாகத் தோன்றிற்று. அந்த யக்ஷனை அழைத்துப்போக, கந்தர் வக் கூட்டங்களோடு புஷ்ப விமானம் ஆகாயத்தில் வந்து நின்றது. இவ்வதிசயத்தைக் கண்ட சம்புலிங்கம், ஜபதபாதிகளை மறந்து, பிரமித்து நின்று, "ஆ! என்ன அதிசயம்? மச்சம் யக்ஷனாக மாறிய காரணம் யாது? இந்த யக்ஷன் யார்? எக்காரணம்பற்றி மச்சமானான்? எனபதை விசாரிப்போம்" என்று சிந்தித்தான் யக்ஷ னே ஆகாயத்தில் தோன்றிய புஷ்ப விமானத்திலேறப் போனான். சம்புலிங்கம் புஷ்பவிமானத்திலேற நிற்கும் யக்ஷனைநோக்கி, "அப்பா சுந்தர புருஷா! நீயார்? உன் வரலாறு என்ன? மச்ச உருவானதற்குக் காரணம் யாது? எனக்கு விளங்கச்சொல்லிப் பிறகு உன் இஷ்டப்படி போகலாம்" என்று யக்ஷனைத் தடுத்தான். சம்புலிங்கத்தின் ஆதரவு மொழிகளைக்கேட்ட யக்ஷன் மனமகிழ்ந்து, சம்புலிங்கம் என்னும் பிராமணனை நமஸ்கரித்து வணங்கி, சுவாமீ! என் வரலாறு சொல்லு கிறேன் கேளுங்கள்; "நான் ஓர் யக்ஷன்; தேவ கை லாசத்தில் வசிப்பவன்; சிவ சந்நிதானத்தில் ஊழியம் செய்பவருள் ஒருவன்; நான் ஓர் தினம் என்மனைவி யுடன், கைலாசத்தின் அருகே யுள்ள ஓர் தாமரைத்

தடாகத்தில், காம மயக்கத்தி லாழ்ந்து, ஜலக்கிரீடை செய்திருந்தேன்; அவ்வேளையில், நந்தியெம்பெருமான் அவ்வழியே வந்தார்; விஷய போக வெறி விளையாட்டில் மயங்கி, அவரை மதியாது, கிரீடையிலே மனம் செலுத்தி யிருந்தேன்; நந்திதேவர் கோபித்து, "அட யக்ஷா! பெரியோர் சிறியோர் என்ற மதிப்பில்லாது, நீ விஷய இச்சையிலேயே மயங்கி நின்றுயாதலால், மச்ச உருவாய் ஜலத்திலேயே வசிக்கக் கடவாய்" என்று சபித்தார். அவரது சாபத்துக்கஞ்சிப் பயந்து, தேவரைப் பின்பற்றி வணங்கி, சுவாமீ! அடியேன் அறியாமையாற் செய்த பிழையைப் பொறுத்து ரக்ஷிக்க வேண்டு மென்று, பன்முறை வணங்கி நின்றேன். நந்திதேவர் அடியேன் மீது இரக்கங்கொண்டு, யக்ஷா! நம் சாபம் பலியாமல் விடாது; ஆயினும் நூறு ஆயிரம் வருஷம் மச்ச உருவாய் இருக்க, பிறகு ஓர் சேனைப் பக்ஷியானது உன்னைப் புசிக்க எண்ணங்கொண்டு, கவ்விப்போகும். வழியில் நம் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் வேதமலைக்குத் தென்பாரிசத்துள்ள சங்க மஹா தீர்த்தத்தில் தெய்வீகமாய் உன்னை நழுவ விடும். அத்தீர்த்தம் உன் தேகத்தில் பட்ட மாத்திரத்தில், பழைய தேஜசும் அழகும் பொருந்திய யக்ஷனாகத் தோன்றுவாய்; அப்போது உன்னை அழைத்துப்போக புஷ்பவிமானம் கந்தருவர்களோடு வருமென நந்தியப்பர் அநுக்கிரகித்தார்; இதுவே என்வரலாறு, என்று சம்பு லிங்கத்துக்கு மிக விநயத்துடன் சொல்லி, வந்தனம் செய்து நின்றான். பிராமணன் யக்ஷனை ஆசீர்வதித்து விடைதந்தார். புஷ்ப விமானம் யக்ஷனை ஏற்றிச்சென்றது.

சம்புலிங்கம் இம் மகிமைகளைக்கேட்டு ஆச்சரியமுற்று, பின்னும் சிலகாலம் இச்சங்கதீர்த்தக் கரையிலேயே வசித்து, ஆனந்த பரவசராயிருந்தார். அரசனே! கேட்டீரா! சங்கதீர்த்த மான்மியம் எவ்வளவு உத்கிருஷ்டமானது; சகல பாபங்களையும் சகல தோஷங்களையும் சகல ரோகங்களையும் நீக்க வல்லது. இன்னும் இத்தீர்த்தத்தின் மகிமைகள் பல இருக்கினும் முக்கியமான சிலவற்றை உனக்கு எடுத்துரைத்தேன், என்று கழுகுமுனிவர்கள் சுரகுருவேந்தனுக்குச் சொல்லிப் பின்னும் சொல்லுகிறார்கள்.

இத்தீர்த்தத்தைக் கையினால் பரிசித்தாலும், அள்ளித் தேகத்தில் தெளித்துக்கொண்டாலும், உள்ளுக்குச்சாப்பிட்டாலும், ஸ்நாநம் செய்தாலும், இத்தீர்த்தத்தில் கால்சறுக்கி விழுந்தாலும், ஒருதுளி சரீரத்தில் பட்டாலும், அதில் பரந்து வரும் காற்று மேலே வீசினாலும், பஞ்சமஹாபாதகங்கள் பறந்தோடிப்போகும். தேவர்கள் எல்லாம் இத்தீர்த்தத்தின் மகிமைகளை அறிந்து, இதைத் தோத்திரித்து வணங்குகின்றார்கள் என்றால், நாம் எம்மாத்திரம். விரதம் அநுஷ்டிக்கிறவர்கள் இத்தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்தால், ஒன்றுக்குஅநந்தம் பலன் உண்டாகும். இந்த க்ஷேத்திரத்தில் சிவமென்றும், தீர்த்தமென்றும் வித்தியாசமே கிடையாது. இரண்டும் சமமேயாகும். இதில் பல நாள் ஸ்நாநம் செய்தால், ஒரு அஸ்வமேத யாக பலன் சித்திக்கும். வேந்தனே! தீர்த்த மகிமையை இதுகாறும் சுருக்கிச் சொன்னோம். இனி தல விசேஷம் சொல்லுகிறோம் கேட்பாயாக, என்று கழுகு முனிவர்கள் சொல்லச், சுரகுரு அரசன்

ஆநந்தித்தான் என்று சவுனகாதிகளுக்குச் சூத மகா முனிவர் சொன்னார்.

## 20. கழுகு முனிவர்கள் சுரகுருவேந்தனுக்குத் தல விசேஷமும் ஞானமார்க்கங்களும் சொல்லியது.

சௌனகாதி தவச்சிரேட்டர்களே! கழுகு முனிவர்கள் சுரகுரு அரசனுக்குச் சொல்லிய வேதகிரித்தல மகிமையையும் ஞானமார்க்கங்களையும் உங்களுக்கு நான் சொல்லுகிறேன் என்று சூதர் சொல்லுகிறார்.

ஆதியில் கைலைவாசராகிய பரமசிவம் பக்தகோடிகள் உய்யும் பொருட்டுத் திருவுளமிரங்கிச், சிவகணத்தலைவராகிய நந்திதேவரைப் பார்த்து, நமது "கைலைமலையின் சிகரங்களில் மூன்று சிகரங்களைக் கொண்டுபோய்ப், பூலோகத்தில் மூன்று இடங்களில் அமைப்பாயாக" என்று உத்திரவளித்தார். நந்திதேவர் எம்பெருமான் ஆக்ஞைப்படி, ஸ்ரீ சைலம் அதாவது மல்லிகார்ச்சுன புரத்தில் ஒன்றும், வாயுத்தலமாகிய ஸ்ரீ காளத்தியில் ஒன்றும், இவ்வேதகிரியில் ஒன்றுமாக, மூன்று இடங்களில் மூன்று சிகரங்களையும் அமைத்தார். இக்காரணத்தால் இவ்வேதகிரிக்கு "தக்ஷிண கைலாசம்" எனப் பெயர் வழங்குகின்றது. இந்த வேதகிரி எல்லை ஏழரைக் காத அளவில் செய்யும் மஹா பாதகங்கள், அவ்வளவிலேயே பொருந்தும். தர்மம் மாத்திரம் ஒன்று செய்தால், அது கோடியாக வளரும். ஆதலால் இத்தலத்துக்குத் தர்மகோடித்தலமெனச் சிறப்புப் பெயர் வழங்கிவருகிறது. சிவபிரான் மிக விருப்பத்தோடு

இங்கு எழுந்தருளியிருப்பதால், இதற்குச்சிவபுரம் என்றும் வழங்கிவருகிறது. நான்கு யுகங்களாக யுகத்துக்கு இரண்டு கழுகுகள் பூஜிப்பதால் [1] கழுகாசலம் எனவும் பெயருண்டு. திருமலைப் பெருமான் வாழைப் பூக் [2] குருத்தைப்போல் சுயம்புவாக முளைத்திருப்பதாலும், இது [3] கதலிக்காடாகவே யிருந்ததாலும், கதலிவனம் எனவும் பெயர் வழங்கும்.

சூரகுரு அரசனே! இவ்வேதகிரியைப் பூஜித்துச் சாபவிமோசனம் அடைந்து அநுக்கிரகம் பெற்றோர்களைச் சொல்லுகிறோம் கேட்பாயாக.

நான்கு வேதங்கள், கோடிருத்திரர்கள், ப்ர்ம்மா, விஷ்ணு, நந்தி யெம்பெருமான், தேவேந்திரன், அஷ்ட வசுக்கள், பன்னிரண்டு சூரியர்கள், முநிகணங்கள், எங்களுடன் பொருந்தி எட்டு கழுகு முநிவர்கள், சப்த மாதர்கள், ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள், சந்திரன், உண்மைத்தவமுள்ள மார்க்கண்டேயர், சம்புமுநிவர், அகஸ்தியர், வசிஷ்டர், விஸ்வாமித்திரர், சனக முனிவர், அகலிகை, கங்கையாதி நதிதேவிகள், வருணன் முதலாய பலரும் பூஜித்து வரம் பெற்றார்கள். தவயோகிகளும் ரிஷிகளும் முநிவர்களும் இவ்வேதகிரியிலேயே சிவயோக சாதனையில் சதா வசித்து வருகிறார்கள்

சிவபெருமான் திருவாலங்காட்டில் காளிகா தேவி

(1) கழுகுக்கூட்டங்கள் விசேஷமாக வசிப்பதால் கழுகாசலம் எனக் கூறுவார் சிலர். (2) சுயம்புவாக முளைத்துள்ள வாழைப் பூக் குருத்துக்குச் சிவலிங்க கவசம் அமைத்திருக்கிறார்கள் (3) க்ஷேத்ர விருக்ஷம்—கதலி ; ப்ர்ம்மோற்சவம் 5-ம் திருவிழா காலை கதலி வாகனத்தில் பரமசிவம் எழுந்தருளுகிறார்.

யோடு எதிர்த்து வாதாடி ஊர்த்தவத் தாண்டவம் செய்து, இங்கு வந்து களைப்பாறிய தலம் இவ்வேத கிரியே என்று சுரகுரு வேந்தே அறிவாயாக.

உருத்திரகோடி என்று ஒருதரம் சொன்னால், நூறு கோடி பஞ்சாக்ஷர ஜெபம் செய்த பலன் கிடைக்கும். தங்கள் வீட்டிலேயே ஸ்நாநம் செய்து, நித்யானுஷ்டானத்தை முடித்துக்கொண்டு, [1] பிராணாயாமம் மூன்று தரம் செய்து, வேதகிரி என்று ஒருதரம் சொன்னால் அளவற்ற புகழும் கீர்த்தியும் உண்டாகும்.

தினசரி ஒரு காலம் அன்னமுண்டு, பரான்னம், மாதர்போகம், கொலை, களவு, கள்ளுண்ணல், கடும் வார்த்தை இவைகளை நீக்கி, மிதியடி, வாகனம், விரிகுடை, தாம்பூலம், எண்ணெய் ஸ்நானம் இவைகளைத்தள்ளி, பஞ்ச பஞ்ச உஷக்காலத்திலாவது மாலையிலாவது, இவ்வேதகிரியை விதிப்படி மூன்றுதரம் வலம் வந்தால், அவர்கள் செங்கோல் செலுத்தும் அரசராய்ப் பிறப்பார்கள். மூன்றுதரம் [2] பிரதக்ஷிணம் செய்யச் சக்தியில்லாதவர்கள் காலை ஒரு வேளையும், மாலை ஒருவேளையுமாக, ஒரு மண்டலம் அரைமண்டலம் கால்மண்டலம் பிரதக்ஷிணம் செய்து, கடைசி தினத்தன்று, திருமலைப் பெருமானை அபிஷேக அலங்கார தூபதீப நைவேத்திய ஆராதனைகள் செய்வித்து, தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ளச் சக்தியற்ற பரம ஏழைகளுக்கும், தம்மின பந்துக்களுக்கும், இஷ்டமித்திரர்களுக்கும், சக்திக்கிய

(1) பிராணயாம மாவது :—பிராணவாயுவை ரேசக கும்பக மூலமாகச் செய்தல் (2) பிரதக்ஷிணவிதி தனியாக இதிற் சொல்லியிருப்பதைக் கவனிக்க.

ன்ற அளவு அன்னமிட்டு உபசரித்தால், இகத்தில் அவர்களுக்குண்டான மனக்கவலை, சரீரபீடை ஒழிந்து, பரத்தில் சிவபதவி அடைவார்கள் என்பது நிச்சயம்.

இத்தலத்தில் தில தருப்பணம், பிதுர்க்கடன், யாகங்கள் செய்தால் மோக்ஷபதவி கிடைக்கும். இவ்விடம் எந்த மந்திரங்கள் ஜெபித்தாலும், ஒன்றுக்கு ஆயிரம் பங்கு பலன் கிடைக்கும். நந்தி தீர்த்தத்தில் ஸ்நானம் செய்யும்போது, நடுவில் எள்ளு போட்டு ஸ்நானம் செய்து, தில தர்ப்பணம் செய்தல் உசிதம். கூன், குருடு, செவிடு, மொண்டி, முடவர்களுக்கு அன்னமிட்டாலும், வஸ்திரம் கொடுத்தாலும் சிவகதி யென்னும் பெருவாழ்வு உண்டாகும்.

இவ்வேதகிரியின் அடிவாரம் நிருதி திக்கெல்லையில் பெரிய ஆலமரம் ஒன்று, விஞ்ஞான தீர்த்தத்தினருகே, ஓங்கி அடர்ந்து வளர்ந்திருக்கிறது. அதன் நீழலில் தங்கினுல், சகல ரோகங்கள் நாசமாகும். அதனடி மண்ணை நெற்றியிலிட்டுக் கொண்டாலும், அதன் சருதுகளை சிரசில் அணிந்து கொண்டாலும், அதனடியில் வாசஞ்செய்தாலும், அங்கு ஏழைகளுக்கு அன்னமிட்டாலும், அந்த விஞ்ஞான தீர்த்தக் கரையில் நின்று பஞ்சாக்ஷரம் செபித்தாலும், பிதிர்க்கடன் திலதருப்பணம் செய்தாலும், இகத்தில் புத்ர மித்ர களத்ராதிகளுடன், சந்தோஷமாய் வாழ்வதுடன், பரத்தில் சாயுச்சிய முத்தி அடைவார்கள் அரசனே!

காசியிலிறந்தால், திருவாரூரிற் பிறந்தால், சிதம்பரம் தரிசித்தால், மோக்ஷம் அடையலாம் என்பது புராண சித்தாந்தம். இவ்வேதகிரியின் சிகரத்தை எவ்வளவு

தூரமிருந்து தரிசித்தாலும், அப்போதே சிவ பதவி கிடைக்கும். தவிரவும், பரிசுத்த மனதினால் வேதகிரி உருவத்தை ஒரு நிமிஷ நேரம் நினைத்தவர்கள் சாரூப பதவியை யடைவார்கள். பஞ்ச மகா பாதகங்கள் செய்தோர் இத்தலத்தை மிதித்தபோதே அப்பாதகங்கள் சூரியன்முன் பனிபோல் நீங்குமென்றால், இத்தல மகிமையைப் புகழ்ந்துரைக்க எவரால் முடியும்.

ப்ரம்மலோகம் வைகுந்தலோகம் கைலாசம் இந்திரலோகம் முதலிய தேவலோகங்களில் வசிப்பதைவிட, இவ்வேதகிரியில் புழுவாய்ப்பிறந்தாலே, சகல பதவிகளும் நினைத்தபடியே கிடைக்கும். இத்தலத்திலேயே சிஷ்டராயிருந்து வசித்து, அந்தக்கரண சுத்தியுடன், சிவபெருமானுக்கு அடிமையாகி, பக்தி, சிரத்தை, அன்பு, அடக்கம், பொறுமை ஜீவகாருண்யத்துடன், எல்லாம் சிவன்செயலென்று கருதி,சிவாகாரமாயிருந்து,ராஜயோகம் செய்து [1] நின்மலஞானத்தை யடைந்துள்ளோர்

(1) நின்மலஞானம் என்பது:—புண்ய பூமிகளிலே சஞ்சரித்தும், வனத்திலே சென்று கந்த மூலாதிகளைப் புசித்தும், மலையிலுள்ள குகைகளிலே தபசு பண்ணியும், யோகாப்பியாசத்தினாலே பசி, தாகம் முதலியவற்றிற்குரிய உணவுகளொழிந்தும், நெடுங்காலம் மரணமில்லாமலிருந்தும், நின்மல ஞானமாகிய யாவும் சிவன்செயலென்றறியாதவர்களுக்குச்சநநமரணம் நீங்கா. யாவும் சிவன்செயலென்றறிந்தவர்களுக்கு, இந்திரிய வியாபாரத்துடன் கூடியிருந்தாலும், சநநம் நீங்கும். இதற்கு மேற்கோள் :—"நாடுகளிற் புக்குழன்றும் காடுகளிற் சஞ்சரித்தும் நாகமுழைபுக்கிருந்தும் தாகமுதறவிர்ந்தும், நீடுபலகாலங்கள் நித்தரேயிருந்து நின்மல ஞானத்தையிலார் நிகழ்ந்திடுவர் பிறப்பி, லேடுதருமலர்க்குழலார் மூலத்தலைக்கே யிடைக்கே யேறி விழியின் படுகடைக்கே கிடந்து மிறைஞானம், கூடுமவர் கூடரிய வீடுங்கூட்டிக் குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டேயிருப்பார்" என்றார் சிவஞானசித்தியார்.

க்குச் சிவகைலாசத்தில் பரமசிவனுடன் எந்நாளும் கூடி வாழ்வார். இவர்கள் துறவு பூண்டிருக்க வேண்டுமென்கிற அவசியமில்லை. [1]இல்லறத்தாராகவே யிருக்கலாம்.

இவ்வேதகிரியில் சிறுவர்கள் விளையாட்டுக்காக மண்ணினால் சிவாலயம் கட்டினாலே, அவர்கள் சிவபதம் அடைவார்கள் என்றால், விவேகிகள் உள்ளன்போடு கோயில் திருப்பணி முதலிய செய்தால், அவர்கள் அடையும் பலனைச் சொல்லவும்வேண்டுமா? இவ்வேதகிரியில் எந்த தர்மத்தைச் செய்தாலும், எந்த தானங்களைச் செய்தாலும், [2] நிஷ்காம்ய பலத்தைத் தந்து, முத்தியைக் கொடுக்கும் என அறிவாய் அரசனே! முடிவாகக் கூறுமிடத்து இவ் வேதமலையில் மடம், சத்திரம்,

---

(1) "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றி னின்ற துணை." (திருக்குறள்).

(2) காமியம், நிஷ்காமியம் என இருவகை. இச்சிக்கப்படும் பொருளை யடையக்கருதுவதான காமியத்துவம் சித்தியையும், பொருள் ஒன்றையும் அடையக்கருதாத தான நிஷ்காமியத்துவம் முத்தியையும் கொடுக்கும் என்பார் பெரியோர். இரண்டையும் முனிவர்கள் அப்பியாசம் செய்து சித்தி முத்தியைப் பெற்றார்கள். அணிமாதி அஷ்டமா சித்திகளானவை, காலம் போக்கும் விளையாடலை மாத்திரம் தருமேயன்றி, மோட்சத்தைக்கொடுக்கமாட்டாது. சநகன், மாபலிச்சக்கிரவர்த்தி, பகீரதன் முதலானோர், ஞானத்தைஅப்பியாசித்து, மோட்சம் அடைந்தார்களே யன்றி, இச்சாபிராரத்தமாகிய அணிமாதிகளை அப்பியசிக்கவில்லை. "முனிவர் சித்திகள் விநோதமாத்திரந் தருமுத்தியைத்தராவே" என்றும், "ஆகையால் அந்தச்சித்திகள் பிராரத்தமாகுமென்றறிவாயே" என்றும் கைவல்யம் கூறும். "சொல்லரிய வமுதுண்டு மற்பவுடல் கற்பங்கடோறு நிலைநிற்கவாறு சித்து செய்துஞ்ஞானமலது கை கூடுமோ" எனத்தாயுமானவர் கூறுவர்.

ஏழைகளுக்கு அன்னசாலை, தண்ணீர்ப்பந்தல் முதலிய தர்மம் செய்கிறவர்களும், கோயில் கட்டுதல், குளம் வெட்டுதல் முதலிய திருப்பணி செய்கிறவர்களும், சிவ சந்நிதானத்தில் எந்நாளும் பிரியாமல் வாழ்வார்கள் என்பதை அறிவாயாக.

ஆதலால் சூரியகுல வேந்தனே! இதில் யாதொரு சந்தேகமும் கொள்ளவேண்டாம். நீ கோவதை செய்து அதனால் அடையும் கதியினை யறியாமலும், சிவபெருமானையும், [1] ஸ்ரீ திருமலைச் சொக்கநாயகி தேவியாரையும், அருச்சித்துப் பூஜித்துப் போகாமலும் உன் நகரத்துச் செல்கின்றனையே! உம்மேல் இரக்கங் கொண்டு, உன்னைவழி மறித்துப்போர் செய்து தடுத்து, உள்ள விஷயத்தைச் சொன்னோம். நீ எவ்வாறு நடந்தால், கோவதைத் தோஷம்உன்னைச்சாராதோ, அவ்வழி நடப்பாயாக, என்று சம்பு ஆதி என்னும் கழுகு முனிவர்கள் மிகஇனிமையாகச்சொல்லி, சுரகுருவேந்தனே!

---

(1) ஸ்ரீ திருமலைச் சொக்கநாயகி அம்மன் என்பது பார்வதிக்குரிய பல பெயர்களுள் ஒன்று. திருமலைப் பெருமான் சந்நிதானத்துக்கு வலது புறத்தே யுள்ளது. தவிரவும், கிரிப்பிரதக்ஷிணவழியின் வடபாரிசத்தில் ஓர் கோயில் இதை அபிமானித்து இருப்பதாக எற்படுகிறது. இதற்குக் கீழ்ப்பக்கத்தில் சத்தமிடுங்கல் (Echo Stone) உளது. அங்கு எதை உச்சரித்து அழைத்தாலும் ஆம் என்ற சப்தம் கொடுக்கிறதே தவிர, தெய்வீகமல்ல என்பது தத்துவ சாஸ்திரிகள் துணிபு. இதை விடுத்து, சிலர் சதுரங்கப்பட்டணத்துச் செட்டிப்பெண்ணை, கடவுள் சிறை எடுத்துப்போய் விட்டார் என்ற வதந்தி பலமாயிருக்கிறது. இதற்கு சாஸ்திர ஆதாரமுமில்லை. யுக்திக்கும் பொருத்தமில்லை. இதனால் கடவுளுக்குத் தோஷம் கற்பிக்கப்படுகிறதைத் தவிர, வேறு பலன் கிடையாது என விவேகிகள் கூறுகிறார்கள்; அறிஞர்கள் உண்மையைத் தெரிவித்தல் நலம்.

உன் மனோபீஷ்டப்படி. திருக்கழுக்குன்ற மென்னும் உருத்திரகோடித் தல மகிமையினையும், தீர்த்த மகிமையினையும் சொன்னோம். யோசிக்குமிடத்து குடிகளிடத்து அன்புள்ள சக்கிரவாத்தியாக நீ காணப்படுகிறாய். குடிகள் கஷ்டப்படாமலிருக்க, நீ வேட்டையாட வந்ததாகவும் தெரிகிறது. நீ பசுவைக் கொன்றவனு மலல; கொல்லநினைத்தவனு மல்ல; தெய்வ சம்மதமாய் உன்னையறியாமல் நடந்துவிட்ட காரியம்போலும். ஆயினும் பரிகாரம் செய்யாவிடின், கோஹத்தி தோஷம் உன்னை விடாதென்று திடமாய் நினை; அப்பா! வேந்தனே! உனக்கு ஆத்ம ஞானமார்க்கமான விஷயங்களை நீ கடைத்தேறும் பொருட்டுச் சொல்லுகின்றேன்; கவனமாய்க் கேட்பாயாக என்றார்கள் கழுகு முனிவர்கள். வேந்தனும் சந்தோஷமாய் மேல் சொல்லப்புகும் விஷயங்களை, ஆதரவுடன் கேட்கச் சம்மதித்தான்.

கழுகு முனிவர்கள் சொல்லுகிறார்கள்: வேந்தனே! நாம் அநேக கோடி ஜென்மங்களிற் செய்த புண்ய பலன்களுக்கு அநுகுணமாக இம்மானிடப் பிறவி எடுத்தோம். இப்பிறவி போனால் [1] எப்பிறவி கிடைக்கும் என்பது நாம் அறியாத விஷயம். இவ்வரிய மானிடப் பிறவியிலேயே தர்மார்த்தகாம்ய மோக்ஷங்களை அடைய வேண்டியதே தவிர, மற்ற எப்பிறவியிலும் சிவபெருமானை அறியப் போதிய சந்தர்ப்பம் கிடைக்காது.

(1) "எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான்யாதினு மரிதரிது காண், இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிகிலேன் * * *

(தாயுமானவர்.)

இம்மானிடப் பிறவிக்கோ வயது [2] நூறென்பார்கள். அது வரையும் இருப்பது கஷ்டம். இருந்தாலும் பாதி உறக்கத்தில் போகும்; அதிற் பாதி இளமை, முதுமையிற் செல்லாகும். அதிற்பாதி குடும்பத்தொல்லை, ரோகம், பசி இவைகளிற்போகும். எஞ்சிநிற்பதோ மிக மிகச் சொற்பம் என்பதை வேந்தனே அறிவாயாக. இந்த அற்ப காலத்துள் ஆத்ம விசாரணை செய்யவேண்டியதாயின், எவ்வளவு புண்யம் பூர்வம் செய்திருந்தால் கிடைக்கும்.

புழுக்கள் மலிந்து நிறைந்து கிடக்கும், [3] இம்மலப் பாண்டமாகிய இம்மானிட தேகத்தைப், [4] புலையனும் விரும்பான். இதை நிலையென்று மயங்கிச் சத்தியம் தவறி, ஐம்புல வேடர்கள் கையிற் சிக்குண்டு, காமக் குரோத லோப மோக மத மாற்சரியம் ஈரிஷை டம்பம் அசூயையாதி பேய்கள் வயப்பட்டு, ஜனன மரணமாகிய

---

(2) "வேதநூற் பிராய நூறு மனிதர் தாம் புகுவரேனும், பாதியும் உறங்கிப் போகும் நின்றதிற் பதினையாண்டு, பேதை பாலகனதாகும் பிணி பசி மூப்புத்துன்பம், ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா நகருளானே."

(பிள்ளைப்பெருமாள் ஐயங்கார்.)

(3) "பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை * *

(ஔவையார்.)

"புன்புலால் மயிர்தோல் நரம்பென்பு மொய்த்திடு
புலைக்குடிலி லருவருப்பு * * *

(தாயுமானவர்.)

(4) "புலையனும் விரும்பாத இப்புன்புலால் யாக்கை * * *

(அரிச்சந்திர புராணம்.)

பிறவிக்கடலுள் விழுந்து கிடக்கின்றோம். நாம் நம்மை அப்பிறவிக் கடலினின்றும் கரையேற்றவல்ல சிவபெருமானை வணங்கினோமில்லை. எக்காலத்தும் எவ்விடத்தும் எப்பிறவியிலும் [5] நமக்குப் பிதாவாயுள்ளவர் சிவபெருமானே யாவர். அவரது இடப்பாகத்தமர்ந்துள்ள பார்வதி தேவியாரே நமது தாயாவர். அவர்களது அடியவர்களே நமது சுற்றத்தார். சாந்தம், சமத்வமாகிய குணங்களே நமது நேயர்கள், நிராசையே நமக்குப் பெண்டிர்; அறிவே நமக்குப் புத்திரன்; சிவபெருமானது திருவருளே நமக்குச் செல்வம்; அவ்வருட் செல்வத்தால் நாம் அடையும் ஆநந்தமே, நமது போக போக்கியங்கள். விபூதி ருத்திராக்ஷமே நம்மை எதிரிகள் தாக்கக் கூடாமற் காக்கும் கவசம்: எதிரிகளை வெல்லத்தக்க ஆயுதப்படையேதென்னில், ஸ்ரீபஞ்சாக்ஷர மஹா மந்திரமேயாகும்; இதனால் அடையும் பலமோ சிவகதி என்னும் பெரிய வாழ்வு; இவ்வளவும் ஒருவன் பெற்றானாகில் அவனுக்கு உவமை சொல்ல அண்ட சராசரங்களில் எவர் உள்ளார் என்பதை அரசனே!

(5) "சந்தத மெனக்கு மகிழ் தந்தை நீ உண்டு நின்றன்னிடத்தேம வல்லி தாயுண்டு, நின்னடிய ரெனு நற்றமருண்டு சாந்தமெனு நேயருண்டு, புந்திகொணி ராசையா மனைவியுண்டறிவெனும் புதல்வனுண், டிரவு பகலும் போன விடமுண்டு அருட் பொருளுமுண், டாநந்த போக போக்கியமுமுண்டு வந்தனை செய் நீறெனும் கவசமுண், டக்கமா மணியுமுண்டைஞ்செழுத்தா மந்திரப் படையுண்டு, சிவகதி யெனும் பெரிய வாழ்வுண்டு தாழ்வுமுண்டோ * * * *
* * * * * * * "

(ஸ்ரீராமலிங்கசுவாமிகள்.)

தெளிவாய் அறிவாயாக. நம்மை யீன்றெடுத்த தாய் தந்தைகள், மனைவி மக்கள், உற்றார் பெற்றார், உறவின் முறையார், இவர்களை மெய்யென்று நம்பினோம் இவர்கள் [6] சந்தைக்கடையில் கூட்டம் கூடுவதுபோல், முன்னும் பின்னுமாக இறக்கக் காண்கிறோம். நமது வீடு, மனை, மாடம், மாளிகை, தோட்டம், துறவு, வாகனம், ரத கஜ துரக பதாதி சேனைகளையும், நம்மதென்ற பிமானித்து வாழ்கின்றோம். இது மாய வித்தைக்காரன் செய்யும் இந்திரஜாலக் கோலம் போல், அழிவதைக் காண்கின்றோம். நமது அருமையானதேகத்தைப்பொன்

(6) " தந்தை தாய் தமர்தார மக வென்னு மிவை யெலாஞ்
சந்தையிற் கூட்ட மிதிலோ
சந்தேக மில்லை மணி மாட மாளிகை மேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வுமோ ரிந்த்ரசாலக் கோலம்
வஞ்சனை பொருமை லோபம்
வைத்த மன மாங்கிருமி சேர்ந்த மல பாண்டமோ
வாஞ்சனை யிலாத கனவே
* * * * * (1)

"தந்தை தாய் தமர்தார மகவெனு மவையெலாஞ் சகத்திற்,
பந்தமா மென்றே யருமறை வாயினுற் பகர்ந்த, எந்தை நீ
* * * (தாயுமானவர்.) (2)

"மனையாளு மக்களும் வாழ்வுந்தனமுந்தன் வாயின்மட்டே
யினமான சுற்ற மயானமட்டே வழிக்கேது துணை
தினையாமள வெள்ளளவாகினு முன்பு செய்த தவம்
தனையாள வென்றும் பரலோகம் சித்திக்கும் சத்தியமே."

" அத்தமும் வாழ்வு மகத்துமட்டே விழியம்பொழுக
மெத்தியமாதரும் வீதி மட்டே விம்மி விம்மி யிரு
கைத்தலை மேல்வைத் தழுமைந்தருஞ் சுடுகாடுமட்டே,
பற்றித் தொடரு மிரு வினைப் புண்ணிய பாவமுமே."
(பட்டிணத்தார்.)

போல் காத்து ரக்ஷித்தோம். இது [7] இக்கணமிருந்து வருகணத்தில் நிற்கும் என்ற நிலையில்லாமலிருப்பதால், இது சொப்பன மாத்திரமா யுள்ளதென அறிகின்றோம். அறிவுள்ள அரசனே! தேகத்தை நாம் அறிந்தோமே யன்றிச், சூத்திரப்பாவைபோல் நம்மைஆட்டிவைக்கும் தேகி என்பவன் யாவன்? அவன் தேகத்துக்குள் எங்கு ஒளித்துக்கொண்டிருக்கிறான்? என்பதை நாம் ஆராய்ந்து பாராமல் காலங்கழிக்கின்றோம். அவனை இத்தன்மைய னென்றறிவதற்கே, வேதமுடன் ஆகமபுராண மிதிகாச முதல், பலவேறு சாஸ்திரங்களும்உண்டாயிருக்கின்றன. சமயவாதிகள் பலர் அவரவர் புத்திக்கெட்டிய வரையும் எட்டிப்பார்த்து, சித்தாந்தம் செய்தாலும், உண்மையான ஞானநெறி எளிதில் விளக்கமாய்ச், சுருதியுக்திஅநுபவத் துக்கொப்ப முடிந்ததை நாம் அநுட்டிக்கவேண்டும். (1) வீண் சமயவாதங்களில் நாம் தலையிடவேண்டிய

---

(7) " இக்கண மிருந்த யிம்மெய்யென்ற பொய்க்கூறை
யினிவருகணப் போதிலே யிடியாதிருக்குமோ
இடியுமோ . . . "

(ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள்.)

" * * இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பரென் றெண்ணவோ திடமில்லையே, அநியாயமாயிந்த வுடலை நானென் றுவரு மந்தகற்காளாகவோ * * * "

(தாயுமானவர்.)

" * . . . நீரிலெழுத்தாகும் யாக்கை
* * * * * * "

(நன்னெறி.)

(1) " உவலைச்சமயங்க ளொவ்வாத சாத்திரமாம்
கவலைக்கடலுட் கிடந்து தடுமாறு " (மணிவாசகர்.)
" பேதித்த சமயமோ வொன்று சொன்னபடி ஒன்று
பேசாது."
(தாயுமானவர்.)

அவசியமில்லை. எச்சமயத்தாரும் மோக்ஷ சுகத்தை விரும்புகிறார்கள். ஆனால் மோக்ஷமென்பதை அவரவர் சாஸ்திர ஆராய்ச்சிக் கேற்றாப்போல் சித்தாந்தம் செய்வார்கள். (2) எத்தெய்வத்தை, எவ்வெச்சமயத்தார், எவ்வெப்படி பூசிக்கினும், எல்லாம் அந்தப் பரம்பொருளின் சந்நிதானத்துக்கே சேரும். ஆதலால் மெய்ஞ்ஞானமாகிய உண்மை ஞானத்தை, நாம் அடையப் பிரயத்தினம் செய்யவேண்டும். அதுவே தத்துவ ஞானம் என்பார் பெரியோர். வேதாகம முதலிய சாஸ்திர விசாரணையினால், திரிபதார்த்த நிச்சயம் உணர்ந்து, தன்னைத்தான் அறிதலே தத்துவ ஞானம். தத்துவ ஞானமே பெரிது; கர்த்தா தத்துவாதீதன்; ஆன்மாக்களுக்குச் சர்வ வியாபகமாகப் பொருந்தி நிற்பது தத்துவங்களே; (3) பஞ்ச கோசங்களாயிருக்கிற சரீரத்துடன் கூடியிருக்குமளவும் மறைப்பேயுண்டாகும்; சரீர

---

(2) "யாதொரு தெய்வங் கொண்டீர் அத் தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனார் தாம் வருவார் மற்றத் தெய்வங்கள்
வேதனைப் படுமிறக்கு மேல் வினைகளையுஞ் செய்யும்
ஆதலாலிவை யிலாதானறிந்தருள் செய்வனன்றே."
(சிவஞான சித்தியார்.)

(3) பஞ்ச கோசங்கள் :—அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆநந்தமயம் என ஐந்து. அன்னமயம்-தாதுக்களாலெடுத்தது; தூல சரீரம் நசியாமலிருப்பதற்காதாரமாகும். பிராணமயம்-அன்னசாரத்தினால் பிராணனும் பலமும் கூடியது; சூட்சும சரீரம் நிலைத்திருப்பதற்காதாரமாகும். மனோமயம்-அன்னசாரத்தினாலடங்கிய பலத்தினால் வந்து தோன்றியது; சூட்சும சரீரம் நிலைத்திருப்பதற் காதாரமாகும். விஞ்ஞானமயம்-மனத்தின் கண் தோன்றுவது; ஆநந்தமயம்-வித்தை யல்லது கல்வியிற்றோன்றும் ஞானம்; காரண சரீரம் நிலைத்திருப்பதற்கு ஆதாரமாகும்.

மும், சரீரியாகிய ஆன்மாவும், இத்தன்மையுள்ளதென்று தெரிந்து கொள்ளப் பிரயத்தினப் படுகிறவர்களுக்கே, சூரிய சந்நிதானத்தில் இருள் எப்படி விலகுகிறதோ, அப்படி அஞ்ஞானம் நீங்கி, ஞானக்கிரியைகள் பிரகாசிக்கும்; அவர்களே பந்தம் நீங்கி, முத்தி அடைவார்கள்; அவர்களே ஜனன மரணத்திலிருந்தும் விடுபடுவார்கள்; தத்துவ ரூபமென்பது:—மண் முதல் நாத தத்துவமீறாகிய தத்துவங்களையும், தநு கரண புவன போகங்கள் அவற்றின் செயல்கள் பிரேரகமாய் நின்றதையும், தனக்கு வேறாகக் காண்பது; தத்துவ தரிசனமென்பது: தத்துவங்கள் சடப்பொருளென்று தன்னறிவிலே காணப்படுவது; தத்துவ சுத்தியாவது:—தத்துவங்கள் தன்னைத் தாக்காமல், தன்னறிவிலே கண்டு நீங்கி, அசுவற, அந்நியனாய், எங்கும் நிறைவாய், நித்தியமாய், அறிவு மயமாய் நிற்பது.

அரசனே! அறிவையல்லாமல் வேறொன்றுமில்லையென்பதை விளக்கிக் கூறுகின்றேன். கவனமாய்க் கேட்பாயாக. அநாத்மாவாகிய தேகமே ஆத்மா என்பவன் நாஸ்திகன்; சீவனெனக் குறிப்பிடுவான் ஆஸ்திகன். அறிவே சிவமென்பான் (4) வேதாந்தி; அநாத்

(4 வேதாந்தி-வேத முடிவு இன்னதென அறிபவன்; அதாவது, பரம பிரகிருதியாகிய பிரமமே பரமார்த்தமாக உள்ளது; இந்தப் பிரமத்தினிடத்துச் சீவான்மாக்களும், பிரபஞ்சமும் தோன்றும்; மற்றுண்டான வெல்லாம் அசத்தியம்; கிளிஞ்சலில் வெள்ளி புத்தி தோன்றுவது போல, ஜகத்துக்கு உபாதானம் மாயை. தான் பிரமத்தைப் போலச் சத்தியமுமன்று; முயற் கொம்புபோல் அசத்தியமு மன்று; இம்மாயைக் காட்டில் இலக்ஷணமான பிரமசொரூபத்தை வேதாந்தஞானத்தினாலே அறிகையாற் புருடதத்துவப் பிராப்தியை அடைவதே மோக்ஷம் என்பார்கள்; இவர்கள் கொள்ளும் தத்துவங்கள் இருபத்தைந்து; அதாவது ஆன்ம தத்துவம் இருபத்தினாலு, ஆன்மா ஒன்று, ஆக இருபத்தைந்தாகும்.

மாவைத் தவிர வேறே ஆத்மா என்பவன் யார்? மயக்கமாயுள்ள சொப்பனத்தில், தானாக வந்து முளைத்தவன் யார்? மயக்கமாயுள்ளசொப்பனத்தையும் காணப்படாத சுழுத்தியையும் கண்டறிந்தவன் எவன்? இவையனைத்தினையும் ஒழுங்காகச் சாக்கிரத்திற் சிந்திக்கிறவன் யாவன்? அறிவு என்பது யாது? இவைகளை யெல்லாம் ஆராய்ந்து பார்த்தால், இவற்றையெல்லாம் உணருகின்ற தேகி ஒருவன் இருக்கிறான் என்பது தோன்றுமல்லவா? அந்தத் தேகியே அறிவாகிற வஸ்து என விளங்கும்; இதுவே பிரத்யேக ஆத்ம ஸ்வரூபமாகும். மேலும், இந்த அறிவே பரமமும் உயிருமாகும்; அறிவைத்தவிர பரம் உயிர் இரண்டுமில்லை; ஆராய்வதன் முன்னே, உலகம் நாமரூபமாகவும், ஆராய்ந்த பிறகு அன்றாகவும் காணுதல் யாது? நாம ரூபம் பாழிலும், பாழ் நாம ரூபத்திலும் காணுதது எது? இங்ஙனம் நிற்பதும் நின்றுணர்வதும் அறிவே யாதலால், அறிவையன்றி யாது மில்லை யென விளங்குவான் வேதாந்தி.

(5) வைசேடிகன் மனமுதல் தத்துவங்கள் வந்து கூடிய காலத்து, அறிவு உண்டாகும் என்பான்; (6) பரிணமவாதி ஆன்மாவுக்குச் சுதந்தரமாய் அறிவில்லை;

---

(5) வைசேடிகன்-(வேதசம்பந்தம்) கௌதம முனிவராகிய அக்க பாதர், கணாதர் இவர்களாலியற்றிய நியாயம்-வைசேடிகம் என்னும் தருக்க நூல்கள். நியாயம் - மனஸ்பரிபந்தமே தத்துவமென்னும் ஞானத்தால், தேகாந்தத்திலே மனஸ் தத்துவ புவனத்தை அடைவார்களாம். வைசேடிகம்-அகங்காரமே ஆன்மா என்னும் ஞானத்தால் தேகாந்தத்திலே, அகங்கார புவனத்தை அடைவார்களாம்.

(6) பரிணமவாதி:—இது உட்புறச் சமயங்களில் ஒன்று.

இறைவன் உணர்த்த உணரும் என்பான்; (7) கன்மயோகி, ஆன்மா உடலின் ஓரிடத்திருக்கு மென்பான்; (8) பாஞ்சராத்திரி ஆன்மா பரமாணுவாயிருக்கு மென்பான், (9) சமணன் உடம்பு முழுதும் ஆன்மா வியாபித்திருக்கு மென்பான்; (10) மாயாவாதி போக்கு

(7) கன்மயோகி :— சைமினி பகவான் சொன்னது கன்ம மீமாஞ்சம்: "வேதமே யோதி நாத நிலை யென்று விண்ணி லேறச், சேதமாங் கன்மம் செய்யச் செயமுனி செப்பு நூலில், நீதியே கொண்டு பட்டாசாரிய நிகழ்த்து நீர்மை, யோத நீர் ஞாலத்துள்ளே யுள்ளவா றுரைக்கலுற்றாம்" (சிவஞான சித்தியார்.) பூர்வ மீமாஞ்சர் யக்ஞாதி கர்மங்களிலே மோக்ஷமென்பார்; இது வேத சம்பந்தமான சமயம்.

(8) பாஞ்ச ராத்திரி :—(வேத சம்பந்தம்) "ஆதியா யருவமாகி யகண்ட பூரணமாய் ஞானச், சோதியாய் நின்ற மாயன் சுயேச்சையா லுருவு கொண்டு, நீதிபார் கருணையாலே நீள் கடற்றுயின்று நூலு, மோதினனென்று பாஞ்சராத்திரி யுரைப்பனுற்றே." (சிவஞான சித்தியார்.)

(9) சமணன் :—(பரசமயம்) அருக தேவனால் சொல்லியது. "அந்த வாய் மொழியி னலவன் காரணமாதி யோக முதலான நூலிந்தமானிடமயங்கிடாத வகை யிங்கியம் பினிதன் பொருள், வந்தகாலமுயிர் தன்மத மின்புற மாறு விண் மருவு புற்கலம், பந்தம் வீடினோடனாதி யாயிவை படைப்பதின்றியுள பத்துமே." (சிவஞான சித்தியார்.) இவர்கள் குணன்மக ஞானத்தினாலே, தேகாந்தத்திலே குண தத்துவத்தை அடைவார்களாம்.

(10) மாயாவாதி :—(பரசமயம்) "நானே பிரமமென்றுரைத்து ஞாலம் பேய்த்தேரனவெண்ணி, யூனே புகுந்து நின்றுயிர் கட்குபதேசங்களுரைத்தவரு, மானுமதிகே டனுமாயமாயாவாதி பேயாகித், தானே யுரைக்கு மின்னூலி னுண்மைதன்னைச் சாற்றுவாம்." (சிவஞான சித்தியார்.) பிரதானத்திலே யடக்கிக் கொண்டிருக்கிற தன்னை, அந்தப் பிரதானத்துக் கன்னியமான புருஷன் தானென் றறிகிறதே மோக்ஷமாம்; தேகாந்தத்திலே அந்தப் புருட தத்துவத்தை அடைவார்களாம்.

வரவின்றி, எங்கும் பரிபூரணமாய் இருக்குமென்பான். அறிவு அசுத்த மாயைக்கும் சுத்த மாயைக்கும் அப்பாற்பட்ட வியாபகம்; மாயையில் தோற்றப்பட்ட (11) இருபத்திநாலு தத்துவங்கட்கும், பிரகிருதி வேறாதலால், அதற்குக் காரணமாகும்; அந்த மாயைக்கு மேலான இருபத்தைந்தாம் தத்துவம் ஆன்மாவென்று சொல்லவேண்டும்; இதுவே சித்தாந்தம். தத்துவங்கள் நீங்கி, அவற்றின் முடிவில் நின்ற அருளையும் பரையையும், துவித நாட்டமின்றிக்கழன்று நின்றால், தற்போதமும் ஆணவ வாசனையாகிய சார்பும், ஒழியும்; அப்படி ஒழிந்த விடத்திற்கும் அதீதத்திற்கும் இடையாகிய சந்தியில் ஞானநந்தம் உண்டாகும்; (12) போதம் அடங்கினால் அருளாகும்; அது அசைந்

---

(11) ஆன்ம தத்துவங்கள் 24:--சுரோத்ரியாதி ஞானேந்திரியம் 5, வாக்காதி கன்மேந்திரியம் 5, சத்தாதி தன்மாத்திரை 5, பிரதிவ்யாதி பூதங்கள் 5, மனாதி அந்தக் காரணங்கள் 4, ஆக 24.

(12) "போதம் பதைப்பறவே பூரணமாம் பூரணமும்
போதம் பதைத்தளவே பொய்யாகும்—ஈது
விழித்திமைப்பானின்றால் வெளியசைந்தாற் காற்றாம்
பழக்கமதைச் சாட்சியைப் போற் பார்."
"வேதாந்தம் போலிருக்கும் வேதாந்தம் சித்தாந்தம்
நாதாந்த போதம் நழுவினர்க்கு—நேதி
தனைக்கழன்று தற்போதம் சார்பொழியும் சந்திக்க
வுனக்கறிவா னந்த முதிக்கும்."

(ஒழிவிலொடுக்கம்.)

"யான் செய்தேன் பிறர் செய்தா ரென்னதியானென்னு மிக்கோ ஞான வெறியால் வெதுப்பி நிமிர்த்துத், தான் செல்வேறின் றிடவத் தத்துவந் தோன்றானே ரேதனை யளித்து, முன்னிற்கும் வினையொளித்திட்டோ."

(சிவஞான சித்தியார்.)

தால் ஆன்மாவாகும்; தற்போதம் கெட்டு, ஆநந்தாதீதப் பட்டால், அதற்குமேல் நிட்டை என்பது கிடையாது; ஆநந்த மேலிட்டபோது பிரபஞ்சமெல்லாம் ஆநந்த மயமாய்த் தோன்றும்; முத்திக்கண் ஒன்று என்றும், இரண்டு என்றும் கூறமுடியாது. காண்பான் காட்சி யற்றவிடத்து, வேதாந்த முத்தியும் சித்தாந்த முத்தியும் சரியே யாகும்.

தன்னை மனோகாமான சுத்த சைதன்யமென்று கேட்டும், பிறக்கிறதும் இறக்கிறதுமான பந்தத்தினாலே மனுஷிய பாவத்தை அடைகிற மனுஷ்யன், தன்னுடைய அக்கியானம் தெரியாமல், காமவசனாய்ச் சலன மடைந்து, விருதாவில் கெட்டுப் போகிறான். மந்த புத்தியுடையவன் தத்துவம் கேட்டும், விபரீதன் என்கிற சிநேகிதனுடன் கூடி, எந்நேரமும் காமமே இச்சிப்பான்; நல்ல புத்தியுடன் இரான்; ஆத்மக்கியானியானவன் தன்னுடைய தேகத்தை அன்னியமாகப் பார்த்து, நிந்தைகளிலே சந்தோஷமும் கலக்கமு மில்லாதிருப்பன்; ஆத்மா ஒருவனே சகல பூதங்களிலும் இருக்கிறான்; சகல பூதங்களும் அவனிடத்திலே இருக்கிறது; இப்படிக்கிருந்தும், அறிவில்லாத பேயன், தான் வேறு என்றெண்ணுவான்; சுகதுக்கங்களை மனதிலடக்கித், தான் கர்த்தாவுமல்ல போக்தாவுமல்ல என்கிற அபிர்

---

"இளைப்பினை யியக்க நீக்கி யிருந்துமுன் னிமையைக் கூட்டி, யளப்பிலைம் புலனடக்கி யன்பவர் கண்ணே வைத்து, துளக்கமில் சிந்தை செய்து தோன்றலுஞ் சுடர் விட்டாங்கே, விளக்கினை விழியிற் காண்பார் மெய்ம்மையைக் காண்கிற்பாரே."

(திருவாய் மொழி.)

தத்தை உண்டு, ஒன்றும் நினையாமல், நிச்சலமாய் நின்ருல், பந்தங்கள் விடுபட்டுச், சுகமும் சாந்தியும் அடைவான்; எப்போது இச்சையில்லாதவனும், சாந்தனும், சுயம் பிரகாசனும், தியான சொரூபனுமிருக்கிறவனுக்குச் சமாதியிலிருப்பேன் என்கிற தேது? நான் என்று எழுந்த விடத்துப் பந்தம் வந்து விடுகிறது; எப்போது நான் என்கிறதில்லையோ? அந்த க்ஷணத்திலேயே மோக்ஷம்; முத்தியில் இச்சையுண்டானல் விஷயங்களில் ஆசையை விடவேண்டும்; கிரிசியத்தில் சித்தமுண்டாயின், அப்போதே பந்தம் உண்டாகிறது; கிரிசியத்தில் மனமில்லாவிடில், அப்போதே மோக்ஷம் உண்டாகும்; ஜலத்திலே அலை நுரை குமிழி பின்னமாக உண்டாகிறதுபோல, பரமாத்மாவிலே இந்தப் பிரபஞ்சம் பின்னமாகவே உண்டாகிறது. நூலை விட வஸ்திரம் இல்லாததுபோல, சின் மாத்திரத்தை விடப் பிரபஞ்சமில்லை; கரும்பு ரசத்தினலே யுண்டான சருக்கரை, கரும்பே யானுப்போல், பூரண போத சொரூபமாயிருக்கிற தன்னிலே, பிரபஞ்சம் உண்டாக்கப்பட்டது; மண்ணிலே கடம் போலவும், பொன்னிலே பூஷணம் போலவும், ஜலத்திலே அலை நுரை குமிழிபோலவும், தன்னிடத்திலே யுண்டான சகத்து, தன்னிடத்திலேயே அடங்குகின்றன; தான் ஆநந்தனுன படியினலே எந்தப் படி சகத்து விளங்கினலும், அந்தப்படி தானே விளங்குகிருன். உதயாஸ்தமன மில்லாமல் சகல சகத்து நாசமானலும், பிரமாதி ஸ்தம்ப பரியந்தம் தானுயிருக்கிற அவனுக்கு அவனேநமஸ்காரம் பண்ணுவான்; தேக காரியமாயிருந்தும், போக்கு வருத்தில்லா

மல், இந்தச் சகத்தைத் தான் ஒருவனே வியாபித்திருக்கிறஅவனுக்கு, அவனே நமஸ்காரம்பண்ணுவான்; அறிகிறது அறியப் படாதது அறிகிறவன் இந்த மூன்றும் சாதக திருஷ்டியினுல் பார்க்கும்போது இல்லவேயில்லை. அக்கியானத்திணுலே யுண்டாகிறவெல்லாம் நிரைஞ்சனை படியால் தானுகவே யிருந்தான்.

சாகாமையே சத்தியம் என்று அறியவேண்டும். நிராகாரம் சத்தியமென்று நிச்சயம் பண்ண வேண்டும் கண்ணுடியிலே நிழல் காண்பித்தாற் போலவும், அந்தச் சாயை கண்ணுடிக் காதாரமானுற் போலவும், சரீரத்திலே எங்கும் பரமேஸ்வரன் இருந்தும், அதில் அகப்படான்; பஞ்ச பூதங்கள் தானல்லவென்றும், இந்திரியங்களால் தான் அறியப்பட்டவ னல்லவென்றும், தேக சாட்சியாய், சொல்லுக் ககப்படாத சித்ரூபமாகத் தன்னை அறியவேணும்; ஆத்மா ஒருவனே நாசமில்லாதவ னென்றறிந்து, பிரம்மக்கியான தீரம் உண்டானுல். அர்த்தாபேக்ஷை உண்டாக வழியிராது. கிளிஞ்சலானது ஞானமில்லாதவனுக்கு வெள்ளியென்று ஆசை தோன்றினுப் போலத், தன்னுடைய அக்கியானத்தினுல் விஷயங்களில் விருதா பிரமை தோன்றுகிறது. நான் ஞான மாத்திரம், உபாதி எனக்கு அஞ்ஞானத்தால் உண்டாகிறதென்று விசாரித்தலே நிர்விகற்பமாகிறது. ஆகாயத்தை மேகம் மறைத்தாற்போல, இந்த சகத்து நம்மை மறைத்திருக்கிறது என்றெண்ணும் விக்யானயுத்தனுக்கு, விடுகிறது கிரகிக்கிறது லயம் என்னும் மூன்றும் கிடையா. நாம் எதற்கும் கர்த்தாவுமல்ல போக்தாவுமல்ல என்கிறஅமுர்தத்தைப் பானம்பண்ணி,

நாம் சுகமாயிருக்க வேண்டும். காலமும் வயதும் தொந்தமும் தனக்கெப்படி உண்டாகுமென்று, மனோ சித்தியடைந்த தத்துவச்கியானி, யதேச்சையாய்ச் சஞ் சரிப்பான் ; மனதில் இச்சையில்லாமல், ஞானமிர்தத் திலே திருப்தி அடைந்த மஹாத்மாவுக்குச் சரியாக ஒருவருமில்லை; நான் என்னும் அகந்தை, யபிமானங் கள், ஆசைகள், துவேஷங்கள், காமக் குரோத லோப மோக மதமாற் சரியமென்னும் பகைகள், (13) சீவனு டைய செயலால் வந்தனவேயன்றி, சிவன் செயலால் வந்தன வல்ல. ஆசை முதலிய சீவ சிருட்டி நசிக்கில் கொடிய சனனம் நசிக்கும்; சீவ சிருட்டியை ஈசனால் வந்ததென்று சொல்லும் அறிவிலிகள் கொடிய நரகத் தை அடைவார்கள்; பிதா புத்திரர்களை ரக்ஷிப்பதும் நேசிப்பதும் கோபிப்பதும் போல, சிவபெருமான் சற் சனருக்கு இன்பமும், துர்ச்சனருக்குத் துன்பமும், செய்வது சீவர்கள் சுகப்படுமாறு செய்யும் சிக்ஷையே யாகும். இது சிவபெருமானுடைய கிருபையே யாம்.

சிவபெருமானை பக்தி வைராக்கியத்தோடு தியா னித்தா லொழிய, இந்த ஞானம் வாராது. அப்படி வராமற்போவதற்குத்தடை என்னவேன்றால், சகத்தை சத்தியமாய் நம்பிச் சகல விவகாரங்களுஞ் செய்து

---

(13) "செகந்தனிற் பொது ஈசனார் சிருட்டிகள் சராசரப் பொருளெல்லாம், அகந்தையா மபிமானங்கள் கோபங்களாசைக ளிவையெல்லாம் நிகழ்ந்த சீவனார் சிருட்டிகளாகுங் காணிமல னார் செயலன்றே."

"தாவராதிக ணசித்திடி லொருவர்க்கும் சநநங்க ணசி யாவாம், கோபமாதிகண சித்திடிற்பந்தமாம் கொடும்பிறவிகள்போகும்."

(கைவல்யம்.)

கொண்டு வருகிறதால் என்க; சகத்தானது அசத்திய மென்று விசாரிக்காத வரையில், சகத்து இருக்கிறது போலத் தோன்றிக் கொண்டிருக்கும்; அந்த மித்தை யான சகத்தினுடைய லக்ஷணங்களை நாளை, உதயமாகிற பரியந்தம் சாஸ்வதமில்லாம லிருக்கப்பட்டதெதுவோ, அதுவே தலைகீழான (14) அசுவத்த விருக்ஷமென்னும் சம்சாரம் என்னப்படும். இந்தச் சம்சாரமாகிய விருக்ஷத்துக்குச் சதுர்முகனே வேர்; வேதங்களே இலைகள்; பூமியிலுள்ள ஸ்தாவரமான வஸ்துக்களெல்லாம் கிளைகள்; சப்தாதி விஷயங்களே அந்தக் கிளைகளுக்குத் தளிர்கள்; இந்த விருக்ஷத்தின் மேலும் கீழும் தேவாதி ரூபமாயும், மனுஷ்யாதி ரூபமாயும், வியாபித்திருக்கின்ற சாகைகள், சத்வ ரஜஸ் தமோ குணங்களால் விருத்தி அடைகின்றன; கீழே மநுஷ்யாதி லோகத்திலே கர்மங்களென்கிற சிறு சல்லி வேர்கள், அநேகமாகச் சந்தித்திருக்கின்றன; இதன் ஸ்வரூபமும், நாசமும், ஆரம்பமும், அஞ்ஞானமான ஆதாரமும், இந்த லோகத்தில் அறியப்படாத விஷயம். நான்கு பக்கத்திலும் வேரூன்றின அந்த சம்சாரமாகிய அஸ்வத்த விருக்ஷத்தை, ஆத்ம ஞானத்தினாலே, திடமான குணங்களால், விருப்பத்தை விடுதல் என்கிற வாளால் வெட்டி, விஷய நிராசையால், எதனிடத்திற் புகுந்தவர்கள் மறுபடி பிறக்க மாட்டார்களோ, அந்த விடம் தேடப்படவேண்டும்; திடமான ஆத்ம ஞானம் பிறந்தாலல்லது இது நிவிர்த்தியாகாது; இந்த சம்சார விருக்ஷத்தை எவன்

(14) பகவத்கீதை 15-ம் அத்தியாயம் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அர்ச்சுனனுக்கு உபதேசித்ததைப் பார்க்க.

தெரிந்து கொள்ளுகிறானோ, அந்த மஹா புருஷனே அதை வெட்டுதற்குக் கருவியான வேத ரகஸ்யங்களைத் தெரிந்தவனாகிறான்; ஆத்மா இது, அநாத்மா இது, என்று அறிகிற விவேகமுள்ளவர்கள் அபரிமித ஞான ரூபமான ஆத்ம ஸ்வரூபத்தை அடைகிறார்கள்; இந்த விருக்ஷத்தில் இரண்டு அருமையான *பறவைகள் வாழுகின்றன; அப்பறவைகளில் போகத்தை விரும்புகிற பக்ஷி, அவ்விருக்ஷத்தின் பலத்தை நல்லது நல்லதென்று புசிக்கும்; துதிக்கப்பெற்ற மற்றொரு பக்ஷி புசியாமலிருக்கும்; வேதமானது சீவனையும் ஈசனையும் அப்பக்ஷிகளாகக் குறிப்புப் பொருளாக வகுத்துக் கூறப்பட்டிருக்கிறது. சுரகுரு வேந்தனே! இத்தகைய ஞானம், நமக்குக் கிடைக்கவேண்டுமானால், சிவபெருமானைப் பக்தி வைராக்கியத்தோடும் வணங்கவேண்டும். நமது தவத்துக் கிரங்கிச் சிவபெருமான் திருவருள் கிடைக்கத், தன்னைத்தானறிதலாகிய ஆத்மஞானம் எளிதில் வரும்.

சிவபெருமானை இரண்டு விதமாக உபாசிக்கலாம்; ஒன்று நிர்க்குணோபாஸ்தி; மற்றொன்று சகுணோபாஸ்தி; அக்ஷரமாய் இன்னபடி யென்று சொல்லப்படாததாயும், நாம ரூபங்களில்லாததாயும், சாஸ்வதமாயும், எங்கும் பரிபூரணமாயும், சிந்தனைக் கெட்டாததாயும், மாயைக் கதிட்டானமாயும், யாதொரு விகாரங்களும் சலனமுமின்றிக் கூடஸ்தராயுமிருக்கப் பட்ட நம்முடைய ஸ்வரூபத்தை, யிந்திரியங்களெல்லாம் நிக்ர

* "அசுவத்தமென்மொரு மரமதி லிரண்டரும் பறவைகள் வாழும்." (கைவல்யம்.)

கம் செய்து, எங்கும் சமபுத்தியாய், சர்வ பூதங்களுக்கும் ஹிதம் செய்கிறவராய், சமஸ்த பூதங்களிடத்தும் துவேஷங்களில்லாமல், மயித்திரியாதி குணங்களுடன், தயாவந்தனுய்த், தேகத்தைத் தானென்னு மகந்தையும் விஷயங்களைத் தன்னதென்னும் மமதையுமற்று, சுக துக்கங்களிற் சம புத்தியுடையோனு யிருந்து, நிர்க்குணோபாஸ்தி செய்யவேண்டும். இது பிரயாசமான காரியம். அதைவிட சகுணோபாஸ்தியே சிரேஷ்டம். சகுணோபாஸ்தியாவது, சிவபெருமானைச் சகுணமாக உபாசிப்பது. இந்த சகுணத்தைக் காட்டிலும், ஜனன மரணத்தைக் கொடுக்கத் தக்கதான சங்கற்ப விகற்பங்களை யுண்டுபண்ணும் மன முதலான இந்திரியங்கள் எல்லாம் சாந்தியடையும் படியாகச் செய்யப்பட்ட கன்மபலத்தியாகம் சிரேஷ்டமாகும். கன்மபலத்தியாகமாவது, வேதத்தில் விதிக்கப்பெற்றுள்ள விதிகள் பூர்வமாகக் கர்மங்களைச் செய்து, அதன் பலனைச் சிவபெருமானுக்கே அர்ப்பணம் செய்து,வேறு தேவாந்தரங்களை யுபாசியாமல், சிவபேருமானையே பரம புருஷார்த்தமென்றெண்ணி, வேறு சிந்தையில்லாத பக்தி யோகத்தினாலே, அப்பெருமானையே தியானம் செய்து கொண்டிருத்தல் என்ப. இப்படியும் சித்தத்தை ஸ்திரமாய் நிறுத்த அசக்தர்களாயிருப்போர், சிவபெருமானை எவ்விதமும் அடையவேண்டுமென்னும் நிச்சய புத்தியினால், பாகியத்தில் சிவனுக்குப் பிரீதிகரமான நிட்காம கர்மங்களைச் செய்துகொண்டு வந்தால், அவர்களும் மனதிலுண்டான விட்சேபங்கள் எல்லாம் விடுபட்டு, சிவ சந்நிதானத்தை அடைவார்கள். இந்த யோகாப்

பியாசமும் செய்யச் சக்தியற்றவர்கள் சிவபெருமானுக்குரிய விரத தினங்களில் உபவாசமுதலிய இருந்து, சிவ நாம சங்கீர்த்தன முதலிய சற்கருமங்கள் செய்தால், அவர்களும் சிவபெருமானுக்குப் பிரீதியுள்ளவர்களாய், படிப் படியாய் மோக்ஷ பதவியை அடைவார்கள். மேற்குறித்த ஞானமார்க்கத்தை அநுசரிக்கும் புண்ணியர்கள் எப்படி யிருப்பார்களென்றால், தனக்குச் சமான மான பேர்களிடத்தில் சிநேகமும், தீனாயிருக்கப் பட்டவர்களிடத்தில் கருணையும் கொண்டிருப்பார்கள்; பெண்சாதி பிள்ளைகளிடத்தில் மமத்துவமில்லாமலும், தேகத்தை நானென்கிற அகங்காரமின்றியு மிருப்பார்கள்; பூமி தேவியைப்போல் பொறுமை, சுகதுக்கங்களிடத்தில் சம புத்தி, பொருந்தியிருப்பார்கள்; சத்துருவிடத்திலும், மித்துருவிடத்திலும், மான அவமானத்தினிடத்திலும், சீதோஷ்ண சுகதுக்கங்களிடத்திலும், சம புத்தியும், துர்ச்சங்கங்களை நிவிர்த்தி செய்து சாதுசங்கப் பழக்கம் செய்துகொண்டிருப்பார்கள்; எப்போதும் ஏகாந்தமாயிருக்கப் பிரியப்பட்டுத்தானிச்சியாமல், தெய்வாதீனமாகக் கிடைத்த பொருளைத் தள்ளாமல், அதனாலே திருப்திஅடைந்து, வாராத பொருள்களிடத்தில் அபேக்ஷையும் ஆசையும் வையாமல், இன்னவிடம் இருக்கிறது, இன்னவிடமிருக்கப் படாது என்ற நிலவரமின்றிச், சமயத்தில் நேர்ந்தவிடம் எப்படியிருந்தபோதிலும் வசிப்பார்கள்; சுருக்கிக் கூறுமிடத்துச் சாந்தம் சமத்வம் அன்பு அடக்கம் பொறுமை காருண்ய முதலிய நற்குணங்கள் அமைந்து, சாதன சதுட்டய சம்பத்துடையவர்களாய், எப்போதும் மோக்ஷத்திலேயே

ஆசை வைத்து, மித்தையாகிய உலக சம்சாரத்தை வெறுத்திருப்பார்கள். இவர்கள் (15)ஞான பூமி எழும் (16) அஞ்ஞான பூமி எழும் விசாரித்து உண்மை தெளிந்திருப்பார்கள்.

---

(15) ஞான பூமி எழு என்பார்கள். சகல சமயங்களுக்கும் மேலானது ஞான பூமியாகும்; அவை யாவன :—சுபம் விரும்பல், விசார மமய்தல், நல்ல மனஞ் சிறுகல், உண்மையில் நிலை பெற்று நிற்றல், சங்கற்ப மறல், பதார்த்த எண்ண மறுத்திடல், துரியம், துரியாதீதம் ஆக எழு. முதல் இரண்டு மூன்று பூமிகளில் சகந்தோன்று மதனால் நனவாகும்; இம்மூன்று பூமியேறியவர்கள் சாதகர்கள்; ஜீவன் முக்தரல்லர்; நான்காம் பூமி கனவாகும்; ஐந்தாம் பூமி சுழுத்தியாகும்; இதில் ஏறியவன் பிரமவரன்; ஆறும் பூமியிலேறியவன் பிரமவரியன்; ஏழாம் பூமி ஒரு கற்பனையு மற்றவிடம் துரியாதீதயாகும்; இதில் ஏறியவன் பிரமவரிட்டன். இதற்கு மேற் கோள்:—"முற்புவி மூன்றினு முலகந்தோன்றுதலாற் சாக்கிரமா மூன்றற்கப்பாற், சொப்பனமா மதுவு மெள்ள நமுவு மஞ்சாம் பூமியே சுழுத்தியாகும், அற்புதமாஞ் சுவாநுபவ மிகுமாறும் புவிதுரிய மதற்கப் பாலோர், கற்பனை யிலாத விடம் அதீத மென்று மவுனமாக் காட்டும் வேதம்" என்றும், "முன்னிலங்க ளிலேறிய மூவருமப் பியாசிகளா முத்தரல்லர், பின்னிலங்கள் வரன் வரியான் வரிட்டனென்றுஞ் சீவன் முத்தர் பேதமாகும்" என்றும், கைவல்யம் கூறும்; "ஒன்றிரண்டாய் வியவகரிக்கும் வியவகாரங் கடந்தேழாம் யோக பூமி, நின்று தெளிந்தவர் பேசா மௌன நியாயத்தை நிறை நிறைவைத் தன்னை, யன்றி யொரு பொருளிலதா வெப்பொருட்குந்தான் முதலாய சலமாகி" என்றார் தாயுமானவர்.

(16) அஞ்ஞான பூமி எழு :—வித்துநனவு, நனவு, மகா நனவு, நனுக்கனவு, கனவு, கனுநனவு, சுழுத்தி என்ப. வினவுமிடத் தஞ்ஞான பூமிகளேழ் என்ற பாடத்தில் "தனிவித்துச் சாக்கிரஞ் சாக்கிர மகா சாக்கிரஞ் சாக்கிரத்தைச் சார்ந்த, கனவு கனுக் கனவு சாக்கிரஞ் சுழுத்தி யென்றெழு பேர் கணித்தார் மேலோர்"

(கைவல்யம்.)

அரசனே! உன்னைக் காலந்தாழ்த்தி வேத ரகஸ்யங்களாகிய அநேக பல முக்கிய ஞான விஷயங்களைச் சொல்லியிருக்கிறேன். இது பக்குவிகளுக்குச் சொல்ல வேண்டியவைகள்; உன் மீது வைத்த தயவினால் இவ்வளவும் சொல்ல வேண்டி நேரிட்டது. நாங்கள் சிவ பெருமானைக் குறித்துக் கடுந்தவம் புரிந்தோம். சிவ பெருமானும் எங்கள் தவத்துக்கிரங்கிப்பிரசன்னமாய்ச் சாரூப பதவி தந்தார்; அப்பதவி எங்களுக்கு வேண்டவே வேண்டாம்; சாயுச்சிய பதவியை இப்போதே தரவேண்டுமென்று பெருமான் வார்த்தையைத் தடுத்துக்கேட்டோம்; அதற்குப்பலன் கழுகுருவம் பெற்றோம்; மீண்டும் சிவாபராதத்தை மன்னித்து அநுக்கிரகிக்க வேண்டுமென்று வருந்திக் கேட்டோம். இவ்வேத கிரியில் தவஞ் செய்யும்படியும்; இக்கலியுக முடிவில் சாயுச்சிய பதவியைத் தருகின்றோம் என்றும் அநுக்கிரகித்தார். இதுவே எங்கள் வரலாறு; எனக் கழுகு முனிவர்கள் கூறச், சுரகுரு வேந்தன் அம்முனிவர்களை வணங்கி, முனிவர்களே! அடியேன் பூர்வம் செய் தவப் பயனால், அரிய பெரிய விஷயங்களைக் கேட்டுக் கிருதார்த்தனானேன் என்று, அம்முனிவர்களிடம் உத்திரவு பெற்று, ஸ்ரீ வேதாத்ரீநாதனை வணங்கித்தோத்திரித்து, தன் மந்திரி பிரதானி முதலிய சேனைகளுடன் தன்னூர் (மஹாபலிபுரம்) பிரயாணமானார் என்று சௌனகாதி மஹரிஷிகளுக்குச் சூதர் சொன்னார்.

## 21. சுரகுருச்சக்கிரவர்த்தி சிவலிங்கப் பிரதிட்டை, கிராம சீர்திருத்தம், கோயில் திருப்பணி செய்த வைபவம்.

தவச்சிரேட்டர்களே! கழுகு முனிவர்கள் சுரகுரு வேந்தனுக்கு இவ்வேதகிரியின் தீர்த்த மகிமையையும் தல மகிமையையும் கூறி ஞானோபதேசங்கள் செய்த விபரத்தை முன்னர்சொன்னோம். இப்போது சுரகுருச் சக்கிரவர்த்தி கோவதை தோஷம் நீங்கும் பொருட்டு, சிவலிங்கப் பிரதிட்டைசெய்ததைச் சொல்லுகிறோம் என்று சூதர் சொல்லுகிறார்.

முனிவர்களே! சுரகுருவேந்தன் மஹாபலிபுரம் சென்று, தன் மந்திரி பிரதானிகளை வரவழைத்து, மந்திரிகளே! நான் முற்பிறப்பில் புண்ய கர்மங்கள் செய்ததனால் அல்லவா, கழுகு முனிவர்கள் நம் பிரயாணத்தைத் தடுத்து, ஞான மார்க்கங்களைப் போதித்தார். அவர் போதனை கேட்ட பின்னர், என் மனம் அரசாங்க விஷயத்திலேனும், மற்றும் உலக விஷயத்திலேனும், செல்ல நடுக்க மடைகிறது. சிவபெருமானால் கொடுக்கப்பெற்ற நம் திரவியங்கள், அப்பெருமானது சிவாலயத்திருப்பணிக்கே செலவாகட்டும் என்று, வேலையாட்களை அழைத்து, திருக்கழுக்குன்றம் காட்டினை அழித்துக் கிராம சீர்திருத்தம்செய்யும்படி உத்திரவளித்தார்.

அரசன் தன் மந்திரி முத்துமணி வெள்வாயன் முதலிய சேனை சமுத்திரத்தைத் திரும்ப அழைத்து, திருக்கழுக்குன்றத்துக்கு வந்து, சேனைகளை யெல்லாம்

[1] அங்கு ஓரிடத்து நிறுத்தி, அரசனும் மந்திரியும் சங்கு தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, விதிப்படி வேதகிரியை மும்முறை வலம் வந்து, திருமலைமீதேறி, வாழைப்பூக் குருத்துப்போல் நிற்கும் ஸ்ரீ வேதகிரிப்பெருமானைத் தரிசித்து, ஆநந்த பாஷ்பம் சொரிய, இருகைகளையும் சிரசின்மேற் கூப்பித்தொழுது வணங்கினன். எம்பெருமான் கிருபையால், அவ்வரசன் செய்த தீவினைகளும், அநாதியாயுள்ள [2] ஆணவமலமும், கருங்காக வடிவாக

(1) சுரகுரு அரசன் தங்கிய இடம் கொற்றமங்கலம்; திருக்கழுக்குன்றத்துக்குக் கிழக்கு ஒரு மயில் தூரம் மாபலிபுரம் மார்க்கத்துள்ளது. கொற்றன்—அரசன். இப்போது இது கொத்திமங்கலமென வழங்குகின்றது. கொத்தமங்கலத்தைச் சேர்ந்த மதுரா நாச்சிமேடு என்ற இடமுண்டு; அது ராணி தங்கிய அந்தப்புரம்: நாச்சி-ராணி; இருமலிஏரியின் மேல்பாகத்தில் ராஜாங்தாங்கல் என்கிற இடத்தில் ஆனைகட்டிய இடம்; சங்கிலி நாளைக்கும் இருப்பதாக வதந்தி.

(2) மும்மலங்களுள் ஒன்று ஆணவமலம். மும்மலங்களாவன:—ஆணவம், காமியம், மாயை. ஆன்மாக்களுடைய ஞானக்கிரியைகளை மறைத்துக்கொண்டு, நீ இல்லையென்றது ஆணவமலம்; யானென்னும், மமதைகளைப் பண்ணி, விஷயங்களைப் புசிக்கிறவனாகச் செய்து நிற்கும். அது ஒன்றதாய், அநேக சக்திகளை யுடையதாய், அநாதியே யுள்ளதாய், அக்கினியைக் காஷ்டம் மறைத்தாற் போலச் சற்றுந் தோன்றாமல், ஆன்ம போதத்தை மறைத்து நின்று, புசிப்பிலே மிக திருப்தியை யுண்டாக்கி, எப்பொழுதும் அறியாமையை உண்டாக்கிக்கொண்டிருப்பது. நெல்லுக்குண்டாகிய முளைபோல ஆணவமும், தவிடுபோல மாயையும், உமிபோல காமியமும்; காம்யமாவது:—ஆன்மாக்கள் இரு வினையாலியற்றுஞ் சுகதுக்கமாகிய போகங்களைப் புசிப்பித்துத் திருப்திகளைச் செய்விக்கும்; மாயையாவது:—பொய்யை உண்டாக்குகிற போகத்தைப்பண்ணுவது. குற்றமற்ற அரிசியினிடத்து, உமியுந் தவிடு மில்லை; உமியும் தவிடும் நீக்குவோரால் கிரமத்திலே நீங்கும்; தொக்கியிருந்து மற்றொரு நெல் தோற்றும்; அதாவது தோலாகிய உமி குற்ற மற்ற அரிசி

அரசன் சிரசினின்றும், ரோமத் துவாரங்களினின்றும் வெளிப்பட்டுப், பேரிரைச்சலுடன் மேலெழும்பிப் பறந்து, திருமலைக்குத் தென்பாரிசத்தில் [3] மலைவடி வாய்ப்போய் நின்றன.

இவ்வற்புதத்தைக்கண்ட அரசனும் மந்திரியும் பேராச்சரியப்பட்டுச் சந்தோஷித்து, அம்மலைக் கொழுந்தாய் தரிசனம் கொடுத்த சிவபெருமானுக்குக் கவசமாக ஓர் சிவலிங்கம் பிரதிட்டைசெய்து, கர்ப்பக்கிருகம், அந்தராளம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், கல்யாணமண்டபம், பிராகாரம், கோபுரங்கள், பரிவாரதேவதைகள் முதலிய அமைத்தார். தவிரவும், இப்பெருமானை ப்ர்ம்ம விஷ்ணு இந்திராதிகள் பூஜித்த ஐதீகத்தையாவரும் அறிய [4] கர்ப்பக்கிருகம் மூன்று பக்கங்களிலும் அமைத்தார். அதனுடன் ஸ்ரீ திருமலைச் சொக்கநாயகி என்னும் பெயர் அமைத்து, ஸ்ரீ பார்வதி அம்மன் சந்நிதியும், திருமலைப்பெருமானுக்குத் தென்பாகம் அமைத்தார்.

திருமலையிலிருந்து கீழே இறங்கித் தான் செய்த கோஹத்தி தோஷம் பரிகாரமாகும் பொருட்டு, [5] சிவ

---

யுடன் கூடியிருந்தாலு ம், அந்த அரிசி பின்னை ஒரு நெல்லாகாது. இதுபோல பாசத்தை நீங்கின ஆன்மா விபுவாகையால், பாசத்துக்கும் ஆன்மாவுக்கும ஓரிடத்தாயினும், முன்போல முத்தான்மா பசுவாகா தென்றறிக.

3) இதற்குக் காக்கைக் குன்று எனப்பெயர் வழங்கி வருகிறது காணலாம்.

(4) நேரில் தரிசிக்கலாம்: பக்ஷிதரிசன தேவரகசிய படத்தில் (0-2-0) வெளிப்படையாய் அச்சிட்டுள்ளது.

(5) இந்த சிவலிங்கத்துக்குப் பக்தவற்சலர் என்னும் நாமம் வழங்கி வருதல் காண்க.

லிங்கப் பிரதிஷ்டை ஒன்று செய்தார். ஸ்ரீ திரிபுர சுந்தரி அம்பாள் என்னும் அம்மன் சந்நிதியை நிர்மாணித்தார். இவ்விரண்டுக்கும் கர்ப்பக்கிருகம், அந்தராளம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், கல்யாண மண்டபம், கோபுரங்கள், பரிவாரதேவதைகள், அமைத்தார். நித்யோற்சவம், வாரோற்சவம், பக்ஷோற்சவம், மாதோற்சவம், பஞ்சபர்வாதி உற்சவங்கள், ப்ரம்மோற்சவம் முதலிய உற்சவாதிகள் செய்வதற்கு, உற்சவ விக்கிரகங்கள் செய்வித்தார். இவைகளை யெல்லாம் அமைத்துப் பூஜிப்பதற்குக் காசியிலிருந்து ஆதிசைவர்களை [2] வரவழைத்துப் பூஜிக்கச் செய்தார்.

திருமலைப் பெருமான் சந்நிதானமும், தாழக்கோயில் பக்தவற்சவப் பெருமான் சந்நிதானமும், நித்திய நைமித்தியாதி காரியங்கள் சிறப்புற நடைபெறும் பொரு

(2) காசியிலிருந்து வரவழைத்த ஆதிசைவர்கள் பாரத்துவாஜ கோத்திரத்தார்கள் என்று ஏற்படுகிறது. இக் கோத்திரத்தார்கள் தற்காலம் திருமலையாண்டவனுக்கும் தாழக்கோயிலுக்கும் பூஜை முறையாகப் பிரிக்கப்பட்டு அநுபவித்து வந்தாலும், இப்பாரத்துவாஜ கோத்திரத்தாருக்கே, தாழக்கோயிலில் கும்பாபிஷேக முதலிய விசேஷ காலங்களில் ஆசாரியத்துவம் முதலிய சகல சுதந்தரமும் ஏற்பட்டிருப்பதாகக் காண்கிறது.

திருமலைப்பெருமானுக்கு, இவ்வூருக்கு ஒரு மயில் தூரத்துள்ள யேலப்பட்டு கிராமத்தில் பூதகிரீஸ்வரர் ஆலயத்தைப் பூஜித்துவந்த ஆதிசைவப் பிராமணர் (கௌசிக கோத்திரத்தார்) பூஜித்து வந்ததாக ஏற்படுகிறது. அத்தாக்ஷியாக திருமலையிலே நடக்கும் கும்பாபிஷேக முதலிய விசேஷ காலங்களில் உண்டாகும் சகல சுதந்தரங்கட்கும் ஆசாரியத்துவ பாத்தியதை இவர்களுக்கு உண்டென்பதை அநுபவத்தில் காணலாம்.

கௌசிக கோத்திரத்தாருக்கு சிவருத்திர பண்டிதர் என்றும், பாரத்வாஜ கோத்திரத்தாருக்குத் திருச்சிற்றம்பலப் பட்டர் என்றும் பெயர் வழங்குகின்றது.

ட்டு, [3] அநேக கிராமங்கள் விடப்பட்டன. இந்த தேவாலயங்களைப் பரிபாலனம் செய்வதற்கு, ஆதிசைவர்களும் தம்பிரான் மார்களும் ஒப்புக் கொண்டதாக ஏற்படுகிறது. இவ்வூர் கிராமவாசிகள் செங்குந்தர்கள் கோயில் ஊழியங்கள் செய்து வந்ததாகச் சில செப்பேடு சாசனம் உள்ளதாக வதந்தி.

பிறகு, சூரகுமேவந்தன் காடுகளை வெட்டி, பூமிகளைத் திருத்தி, வீதிகளை அமைத்து, மடங்கள் சத்திரங்கள் அமைத்துக், கோயில் பரிஜனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுத்தும், வேதாகம விதிப்படி ப்ரம்மோற்சவாதிகள் செய்வித்தும், சிலநாள் இவ்விடம் தங்கி வசித்து, ஸ்ரீவேதகிரியை வலம்வந்து சிவபெருமானைத்தரிசித்துக் கொண்டிருந்தார்.

சில காலம் சென்றதும், கழுகு முனிவர்களைத் தரிசித்து, அவர்களது அநுக்கிரகம் பெற்று, மகாபலிபுரம் அடைந்து, சிலநாள் அரசாக்ஷி செலுத்திக் கொண்டிருந்து, பின்னர் சிவபெருமான் திருவடிநீழலை அடைந்தார், என்று சூதமா முனிவர் நைமிசாரண்ய வாசிகளுக்குத்திருக்கழுக்குன்றமென்னும் உருத்திரகோடி மான்மியத்தைச் சொல்லி, இருகண்களையும் மூடிக்

3) 1808-ம வருஷத்தில் ஆதிசைவ குலோத்தமராகிய தேவநாத நாயனுர் காலத்தில், இந்த வேதகிரீஸ்வரர் சம்பந்தமான அநேக கிராமங்களையும் சர்க்காரில் ஜமை செய்துகொண்டு, தேவஸ்தானத்து நித்திய நைமித்திய காரியங்களின் செலவுகளுக்கு, அக்காலத்து கால விலைப்படி, வருஷத்துக்கோர் தரம் ரூ. 3,317—2—11 மோகினிபணமாக ஏற்பாடு செய்து, நாளது வரைக்கும் கிடைக்கப் பெற்று வருகிறது. இதனுல் இத்தேவஸ்தானம் ஆதி சைவர்களது மானேஜ்மெண்டில் வெகுகாலம் நடைபெற்று வந்ததாக ஏற்படுகிறது.

கொண்டு, ஆநந்தக்கண்ணீர் சொரிய, தியான யோகத்தி லமர்ந்தார். நைமிசாரண்ய தபசிகளும் இம்மான்மியத்தைக் கேட்டு ஆநந்த பரவசராய் நாங்கள் உய்ந்தோம் உய்ந்தோமென்று, பரமசிவத் தியானத்திலிருந்தார்கள்.

ஓம் சாந்தி ! சாந்தி ! ! சாந்தி ! ! !

இந்த உருத்ரகோடி மான்மியத்தை வாசித்தவர்களும், வாசிக்கக் கேட்டவர்களும், பிறர்க்குச் சொன்னவர்களும், இப் புராணத்தை எழுதினவர்களும், அச்சிட்டவர்களும், அச்சிடப் பொருள் சகாயம் செய்தவர்களும், இகத்தில் நோயற்றவாழ்வும் குறைவற்ற செல்வமும் பொருந்தி வாழ்வார்கள். பரத்தில் சிவஞானச் செல்வர்களாயிருப்பார்கள் என்பது திண்ணம். ஓம் சுபம் உண்டாக.

சர்வேஜனோ சுகினோ பவந்து :
சிவ குருநாதன் திருவடி வாழ்க.

திருக்கழுக்குன்றமென்னும்
உருத்திரகோடித்தலமான்மிய
வசனம்
முற்றுப்பெற்றது.

Printed at the Cambridge Press,
2/19-a, Armenian Street, Madras.

# திருக்கழுக்குன்றம்



ஸ்ரீ வண்டுவனப்
பிள்ளையார்.



ஸ்ரீ வேதகிரீஸ்வரர்.



ஸ்ரீ சுப்பிரமண்யர்.

ஓம்

பரமபதி துணை.



# சிவாலய வழிபாடு.

அகண்ட பரிபூரணமாயும், ஆதிமத்யாந்த ரகிதமாயும், சத்து சித்து ஆநந்தமாயும், நித்ய நிட்கள நிராமய நிர்க்குணமாயும், பஞ்ச கிருத்திய கர்த்தாவாயும், பர தத்துவமாயும், பரமாயும், பரமான்மாவாயும், பரப்பிர்ம்ம வஸ்துவாயும், விளங்கப் படாநின்ற கடவுள் ஒருவரே. ஒவ்வொரு சமயத்தாரும் அவரவர் மதாசார அநுட்டானப்படி, நாமரூபங்கள் அமைத்துப்பூஜிக்கும் இடம் ஆலயம் எனப்படும். சைவர்கள் சிவாலயமெனவும், வைஷ்ணவர்கள் விஷ்ணுவாலய மெனவும், மற்றவர்கள் அவரவர்கள் வழிபடுங் கடவுளாலயமெனவும் கூறுவர். ஆன்மாக்கள் எம் மதத்தினராயினும், தாங்கள் உய்யும் பொருட்டு, அவரவர் மதாசாரப்படி நிர்மாணிக்கப் பெற்ற கடவுளை, திரிகரண சுத்தியோடு வழிபடுவாராயின், அப்பரம் பொருள் ஒன்றே, அவரவர் வணங்கும் நாமரூப தெய்வமாக முன்னின்று, அநுக்கிரகிப்பார் என்பது வேத நூற்றுணிபு. அன்பர்கள் மதசம்பந்தமான வாது வழக்குகளிட்டு, அருமையான பிறவியை வீணே போக்காதிருப்பார்களாக.

இங்கு சிவாலய வழிபாட்டினைச் சொல்லுகின்றோம். சிவபெருமான் தம்மை வழிபடும் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டுச் சாந்நித்தியராய் எழுந்தருளிய விடம் சிவாலயம். சிவப்பிரதிட்டை பூஜை உற்சவ முதலாகிய சிவாலயக்கிரியைகள் எல்லாவற்றையும் விதிக்கும் நூல்கள் சைவாகமங்கள் இருபத்தெட்டாகும். இவ்வாகமங்களைக் குருமுகமாய் ஓதியுணர்ந்தும், சிவாலயக்கிரியைகளை மந்திரத்தோடும் பாவனையோடும் விதிப்படி செய்யப் பயின்றும், நல்லொழுக்கம் ஈசுர பத்தி குருபத்தி அடியார் பத்தியிற் சிறந்தும், சிவதீக்ஷை பெற்றவர்களே ஆதிசைவர்களெனப்படுவார்கள். குருக்கள் எனவும், பட்டர் எனவும், தீக்ஷிதர் எனவும், அவ்வவ்வூர் வாசகப்படி இவர்களுக்குப் பெயர். இவ்வாதி சைவர்கள் பக்தி சிரத்தையோடு செய்யும் கிரியைகளினால், கடவுள் அந்தந்த விக்கிரகத்தினிடம் சாந்நித்தியமாவார் என்பது ஆகம நூற்றுணிபு.

சிவாலயக் கிரியைகள் காலந்தோறும் தவறாமல் விதிப்படி செய்யப்படுமாயின், உலகத்திலே மழை காலாகாலத்தில் பெய்யும்; நெல் வளங்கள் பெருகும்; ஆரோக்யம் உண்டாகும்; அரசநீதி நடக்கும்; கல்வியறிவொழுக்கமும், சமய பக்தியும் தழைத்தோங்கும்; ஆலயக்கிரியைகளில் லோபத்வம் உண்டானால், மழை குன்றும்; பஞ்சம் வாசம் செய்யும்; வசூரி, வாந்திபேதி முதலிய கொடிய நோய்களால் ஜீவர்கள் பாதைப் படுவார்கள்; கன்னம் களவு கொலை வியபிசார மாதி தீத்தொழில்கள் விருத்தியாகும். இதற்குப் பிரமாணம்:—

## திருமந்திரம்.

ஆற்றரு நோய்மிகு மவனி மழை குன்றும்
போற்றரு மன்னரும் போர்வலிகுன்றுவர்
கூற்றுதைத் தான்றிருக் கோயில்களானவை
சாற்றிய பூசைக டப்பிடி ற்றானே.

முன்னவனார் கோயிற் பூசைகண்முட்டிடின்
மன்னர்க் குத்தீங்குள வாரிவளங்குன்றும்
கன்னங்களவு மிகுத்திடுங்காசினிக்
கென்னருணந்தி யெடுத்துரைத்தானே.

ஆதலினாலே, கோயிலதிகாரிகள் ஆலயங்களைச் சிரத்தையோடு கவனித்து நடத்தல் வேண்டும். தேவாலயங்களை ஜீவனார்த்த வியாபார முறையிலும், பிரபுக்களைப் படாடோபமாக வரவேற்று உபசரித்துச் செலவு செய்து தாம் கீர்த்தி பெறும் வழியிலும், நடத்தினால் பூஜாரிகளுக்கும் அதிகாரிகளுக்கும் தரிசனார்த்திகளுக்கும் மகத்தான தோஷம் நேரும் என்று வேதாகமங்கள் முறையிடுகின்றன.

சிவாலயத்தில் சைவசமயசாத்திரங்களை, அதிசமர்த்தும்நல்லொழுக்கமுமுடைய ஆசாரியர்களைக் கொண்டு, பிள்ளைகளுக்குக் கற்பித்தல் வேண்டும். ஜனங்களுக்குப் பக்தி சிரத்தை உண்டாகும் பொருட்டு, ஆலயத்தில் வேதபாராயணமும், தமிழ் வேதபாராயணமும் பூஜா காலங்களில் முழங்கிக் கொண்டிருக்க வேண்டும். ஆலயத்தில் புத்தகசாலை (Library) ஒன்று அமைத்து, அதில் வேதம் ஆகமம் புராணம் ஸ்மிருதி சுருதி உபநிஷத்துக்கள் இதிகாசங்கள் சமய சாத்திர உணர்ச்சி தரும் பலவகைப் புத்தகங்கள் சேர்த்து வைத்து, பக்தகோடிகள் இலவசமாக வந்து படித்துப்போக ஏற்

பாடு செய்யவேண்டும். யாத்திரை வாசிகளாய் வரும் தேசாந்திரிகளுக்குந் தினப்படி அன்னம்கொடுத்து உதவ வேண்டும். கோயிலில் வழி நடைகளிலுள்ள கற்களையும் முட்செடிகளையும் அன்றாடம் எடுத்து, சுத்தம் செய்து வரவேண்டும். மதிற் சுவர்களிலும், கோபுரங்களிலும் உண்டாகும் ஆல் அரசு வேம்புச் செடிகளைத் தினசரி நீக்கிப், பரிசீலனை செய்ய வேண்டும். கோயிற் பூசைகளில் மந்த்ரலோபம் கிரியாலோபம் உண்டாகாவண்ணம் அடிக்கடி பரிசீலனை செய்து வரவேண்டியது தர்மகர்த்தாக்களின் கடமை.

இவ்வளவு சீர்திருத்தங்களும் செய்யவேண்டியவர் கோயில் அதிகாரியாதலால், சமய சாத்திர உணர்ச்சி, பிறர் பொருளில் இச்சை வையாமை, பிறர்மனை நயவாமை, பிறரிடம் பெருமை நாடாமை முதலிய நற்குணங்கள் அமைந்து, ஈசுர பக்தி குரு பக்தி ஜீவகாருண்யம் பொருந்தியுள்ள அதிகாரியாயிருத்தல் வேண்டும். இன்றேல், கோயில் சொத்துக்கள் பலவழியில் அழிந்து, தினசரி பூஜைக்கே மோசமாகும். ஆதலால் பக்த மஹா ஜனங்கள் சற்குண சம்பன்னராய்ப் பார்த்து, தர்மகர்த்தாக்களை அமைத்தல் வேண்டும். இன்றேல் பக்த கோடிகளும் அதிகாரிகளும் ரவுரவாதி நரகத்திற்குக் கற்ப கோடிகாலமிருக்கப்பெறுவார்கள்.

சிவாலயதரிசனம் செய்ய விரும்புவோர் ஆலயத்துக்குச் சமீபத்துள்ள தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திர முடுத்து, அநுட்டானம் முடித்துக்கொண்டு, ஆலயத்துட்போக வேண்டும்.

ஆலயத்துக்குப் போம்பொழுது, ஒரு பாத்திரத்திலே தேங்காய் பழம் பாக்கு வெற்றிலை கற்பூரம் முதலியவைகளை அரைக்குக் கீழ்ப்படாது மேலே உயர்த்தப்பட்ட கையில் ஏந்திக்கொண்டு போதல் வேண்டும். இவைகளுக்குப் பொருள் இல்லாதவர் பத்திர புஷ்பங்களேனும் கொண்டுபோய்க் கொடுத்து வணங்கல் வேண்டும். அதுவுமில்லாதவர் சந்நிதியிலுள்ள குப்பை செத்தை முதலியவற்றைப் போக்கியேனும் வணங்கல் வேண்டும்.

திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே, திருக்கோபுரத்தை வணங்கி, இரண்டு கைகளையும் சிரமேற்குவித்துக் கொண்டு, உள்ளே பிரவேசித்து, பலிபீடத்துக்கு இப்பால் நின்று, நமஸ்காரஞ் செய்து கொண்டு, அரண் வாயிற் காப்போராகிய நந்தி யெம்பெருமானை வணங்கி, துவாரபாலகர்கள் அநுமதி பெற்று, உட் சென்று, கடவுளை வணங்குதல் வேண்டும்.

ஆடவர் [1] அட்டாங்க நமஸ்காரமும், ஸ்திரீகள் [2] பஞ்சாங்க நமஸ்காரமும் செய்ய வேண்டும். [3] திரியாங்க நமஸ்காரம் இருவர்க்கும் பொது. நமஸ்காரம் மூன்று தரத்துக்குக் குறையாமல் பண்ணவேண்டும்.

---

(1) அட்டாங்க நமஸ்காரமாவது :—தலை, கை யிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு ஆக எட்டு உறுப்புகளும் நிலத்தில் படும்படி வணங்குதல்.

(2) பஞ்சாங்க நமஸ்காரமாவது :—தலை, கை யிரண்டு, முழந்தாளிரண்டு ஆக ஐந்துறுப்புகளும் நிலத்தில் படும்படி வணங்குதல்.

(3) திரியாங்க நமஸ்காரமாவது :—சிரசிலே இரண்டு கைகளையும் குவித்து வணங்குவது.

மேற்கேயாயினும் தெற்கேயாயினும் கால் நீட்டி நமஸ்கரிக்கவேண்டுமே தவிர, கிழக்கு மேற்கில் கால் நீட்டலாகாது.

நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டுக் கடவுளை[4] மறவாத சிந்தையோடு, இரண்டு கைகளையும் இருதயத்திலே குவித்துக்கொண்டு, கால்களை மெல்ல வைத்துப் பிரதக்ஷிணம் செய்யவேண்டும்.

விநாயகமூர்த்தியை ஒரு முறை, ஸ்ரீ சுப்பிரமண்யக் கடவுளை மூன்று முறை, சூரியனை இரண்டு முறை, விஷ்ணுவை நான்கு முறை, பார்வதியம்மையாரையும் சிவபெருமானையும் மூன்று முறைக்குக் குறையாமல் பிரதக்ஷிணம் செய்யவேண்டும்.

பிரதக்ஷிணம் பண்ணும் ஆவரணத்தில் ஸ்தூபி நிழலேனும், துவிஜஸ்தம்ப நிழலேனு மிருந்தால், அந்த நிழலில் மூன்று பாகம் நீக்கி, எஞ்சிய இரண்டு கூற்றினுள்ளே செல்லவேண்டும். உற்சவ காலங்களில் இந்த விதி அநுசரிக்கவேண்டிய அவசியமில்லை. அபிஷேக

(4) மறவாத சிந்தை என்பது : நம்மைப்படைத்த கடவுளிடத்துச் சதாகாலம் சிந்தை யிருக்க வேண்டுமென்பது சாஸ்திரமும் பெரியோரும் சொல்லுவர் ; அப்படி யிருக்கச் சாத்தியப்படாதென்று ஒப்புக்கொள்வோர் அநேகர். ஆயினும், கடவுள் வழிபாட்டுக்குக் கோயிலுக்குப் போகும்போதேனும் மனதைப் பலவகைச் சிந்தனையிலாழ்த்த விடாது, கடவுளிடத்தே யிருக்க வேண்டுவது அவசியம். திருட்டாந்தமாக, துரோபதை வஸ்திராபரண காலத்தில் தேகத்தில் அபிமானம் கொண்டு, வாக்கினால் கிஷ்ணபரமாத்மாவை ஆதரிக்கப் பலமுறை வேண்ட, ஆதரவு பெறவில்லை. தான் தேகாபியானம் விட்டு, இருகைகளையும் சிரமேல் மெய்ம்மறந்து கூப்பியவுடன், பகவான் அக்ஷயம் என ஆசீர்வதித்தார் என்றால் மனமொடுக்கமே முத்தியாகும்.

காலத்தில் உட்பிரகாரத்தில் பிரதக்ஷிணம் நமஸ்காரம் கூடா.

பிரதக்ஷிணம் செய்து சந்நிதானத்துட் சென்று, சிவ பெருமானைத் தரிசித்து மனங்கசிந்துருக, ரோமஞ் சிலிர்ப்ப, ஆநந்தக்கண்ணீர் சொரியத் தோத்திரித்து, அருச்சகரைக்கொண்டு அருச்சனை செய்வித்துத், தாங்கள் கொண்டுபோன தேங்காய் பழ முதலியவை அருச்சகரைக்கொண்டு நிவேதித்து, கற்பூரார்த்தி செய்யத் தரிசித்து, அருச்சகருக்குத் தன்னாலான பொருள் சகாயம் செய்து வரவேண்டும். வரும்போது கடவுளுக்குப் புறங்காட்டாது, பலிபீடத்துக்கு வந்து, நந்தியெம்பெருமானை நமஸ்கரித்து, வடக்கு நோக்கி யிருந்து, ஸ்ரீ பஞ்சாக்ஷர மகாமந்திரத்தில் சில உருச்செபித்து, எழுந்து வீட்டுக்கு வருதல் உத்தமம்.

திருக்கோயிலில் செய்யலாகாத குற்றங்கள் :— ஆசார மில்லாது போதல், கால் கழுவாது போதல், சனனசௌச மரணசௌசத்தோடு போதல், எச்சில் உமிழ்தல், மலசலம் கழித்தல், மூக்கு நீர் சிந்தல், அபானவாயு விடுதல், பாக்கு வெற்றிலை உண்டல், தம்பலம் உமிழ்தல், போசனபானம் பண்ணுதல், நித்திரை செய்தல், மயிர்க்கோதி முடித்தல், சூதாடல், சிரசிலே வேட்டியும் சொக்காயும் போட்டுப்போதல், தோளில் உத்தரீய மிட்டுச்செல்லல், வாகன மேறிச் செல்லுதல், பாதரக்ஷை குடை பிடித்துப் போதல், ஸ்தூபி துவிஜஸ்தம்பம் பலி பீடம் இவைகளின் சாயையை மிதித்தல், விக்ரகத்தைத் தீண்டல், தாசி வேசிகளிடம் உறவாடிப் பேசுதல், அவர்களை இச்சித்

துப் பார்த்தல், பிறர் மனைவிகளிடம் ஆசை வைத்தல், அவர்கள் மேற்படும்படி போதல், ஓடி வலம் வருதல், கடவுளுக்கும் பலி பீடத்துக்கும் குறுக்கே செல்லுதல், அகாலத்தில் தரிசித்தல், வீண் வார்த்தை பேசல், சிரித்தல், அகங்காரத்துடன் சண்டையிடுதல், சிற்றின்பப் பாட்டு பாடல், திருவிளக்கு அவியக்கண்டு தூண்டாதிருத்தல், திருவிளக்கில்லாதபோது தரிசித்தல், உற்சவங்கொண்டு கடவுள் வெளியில் புறப்பட்ட பிறகு உள்ளே சென்று தோத்திரித்தல் முதலானவை பல. இவைகள் அறியாமற் செய்தோர்க்கு ஸ்ரீ பஞ்சாக்ஷ மகா மந்திரம் ஜெபிக்கின் நீங்கும். ஆகமவிதி அறிந்து செய்வோர்க்குப் பிராயச்சித்தமில்லை. எரிவாய் நரகமே பிராப்தி.

திருக்கோயிலுள் செல்லக்கூடாத ஜாதியார்கள் திருக்கோயிலின் புறத்தே பிரதக்ஷிணம் செய்து, திருக்கோபுரத்தைத் தரிசித்தாலே போதும். அவர்களுக்கு அதனாலேயே நற்கதி கிடைக்கும்.

---

# சோமவார விரதம்.

பிறவித்துன்பம் நீங்கி அழியாத முத்தியின்பம் அடைய வேண்டினோர், சச்சிதானந்த நித்ய பரிபூர்ண அகண்டாகார சிவ தத்துவத்தின் நிலைமையைச் சற்குரு கடாக்ஷத்தினால் உணர்ந்து, சுத்த நிலையில் நிற்க வேண்டும். அது கூடாதாயின் மண், பெண், பொன்

ஆசைகளைத் துறந்து, மனதைப் பஞ்சேந்திரியங்களிற் செல்லவொட்டாது நிறுத்தி, வேதாகம விதிப்படி சிவ பூஜை செய்யவேண்டும். அதுவுமன்றி, விஷயாதிக ளுடன் கூடியிருந்தபோதிலும், சிவபெருமானுடைய திருவடித் தாமரைகளை இடைவிடாது சிந்தித்திருக்கும் அன்பர்கள், இம்மை மறுமையின்பங்களை யனுபவித்து, அப்பால் முத்தி அடைவார்கள்.

இம்மை இன்பங்களாகிய போகாதிகளில் இச்சை ஒழியாதவர்கள் முத்தியடைய வேண்டுமானால், சிவ பூஜையினாலன்றி, வேறு விதத்தில் கூடாவாம்.

சிவபூஜையிலும் வேத சிவாகமங்களில் விதித்த சோமவார பூஜையே விசேஷம். சோமவார பூஜை யாவது திங்கட்கிழமை தோறும் ஸ்நாந பானாதிகள் செய்து, நித்ய கருமானுட்டானங்கள் முடித்துக் கொண்டு, அன்று பகல் முழுதும் சிவநாம உற்சாட னத்துடன் உபவாசமிருந்து, அஸ்தமன வேளையில் பரமசிவனைப் பார்வதி தேவியாருடன் எழுந்தருளப் பண்ணிச், சிவாகமவிதி வழுவாமற் செய்யும் பூஜை யாம். இந்தப்பூஜை காளையர்கள், கன்னியர்கள், இல்லறத்திலுள்ள ஸ்திரீ புருஷர்கள், சுமங்கலிகள், அமங்கலிகள் எல்லோரும் செய்தற்குரியது. தங்கள் கிருகத்தில் சிவ பூஜை செய்ய இயலாதவர்கள் சிவா லயத்துக்குச் சென்று, ஆதிசைவர்களைக் கொண்டு, சுவாமி அம்மனுக்கு அருச்சனை செயவித்து வரலாம். உபவாசம் இருக்கத்தேக திடனற்றவர்கள் பண்டு பலாதி கள் உண்டேனும், அல்லது சுத்த ஆகாரம் புசித்தே னும் இருக்கலாம். இச்சோமவார பூஜையை அன்

போடு செய்கிறவர்கள் இம்மையில் துன்பம் நீங்கிச் சகல சம்பத்தும் பெற்று, மறுமையில் முத்தியடைவார்கள். இதற்குக் கதை ஒன்று ப்ர்ம்மோத்தர காண்டத்துள்ளதைச் சுருக்கிக் கூறுவாம்.

ஆரியவர்த்த நாட்டில் சித்திரவர்மன் என்னும் அரசனுக்குண்டான சீமந்தனியாகிய புத்ரி, தன் பதினாறுவது வயதில் அமங்கலியாக வேண்டியதை ஜோதிடர்களால் அறிந்து, யர்க்கியவர்க்க முனிவரது பத்தினி மயித்திரையை அடுத்துத், தனக்கு நேர்ந்த துன்பத்தைத் தெரிவிக்க, அந்தம்மாள் இரக்கங்கொண்டு, சோமவார விரதத்தை அநுட்டித்து வர உபதேசித்தார். அம்மை சொற்படி சீமந்தனியும், தன் ஐந்தாவது பிராய முதற்கொண்டு, சோமவார விரத பூஜையை அநுட்டித்து வந்தாள்.

சீமந்தனிக்குத் தன் பன்னிரெண்டாவது வயதில், நளச்சக்கிரவர்த்தி பேரனாகிய சந்திராங்கதனுக்கு விவாகம். ஸ்திரீ புருஷர்கள் இருவரும் கூடிக் குலாவிச் சுகம் அநுபவித்து வருநாளில், ஓர் தினம் தன் தோழர்களோடு யமுனையாற்றில் தோணியிலேறி, விரைவாக நடத்தினான். விதி வசத்தால் தோணி கவிழ்ந்துவிட, தோழர்கள் யாவரும் முதலைவாய்ப்பட்டார்கள். சந்திராங்கதன் மாத்திரம் அந்நதியிலிருந்து பாதலத்தின் வழியே சென்று, நாகலோகம் ஆற்றங்கரையிற் சேர்ந்தான். அவ்வாற்றங்கரையில் நீராடிக்கொண்டிருந்த நாக கன்னியர்கள் சந்திராங்கதனின் அழகைக்கண்டு ஆச்சரியப்பட்டு, அவனை நாகலோகத்து அரசனிடம் அழைத்துப்போய் விட்டார்கள். அரசகுமாரன் நாக

லோக அரசனைத்தொழுது வணங்கிநின்றான். நாகராசன் சந்திராங்கதனைப் பார்த்து, நீ யார்? உன் பெயர் என்ன? உன் வரலாறு யாதெனவினவ, அரசகுமாரன், தன் பிதாவுக்குத் தான் ஒரே புத்திரன், என் மனைவியோ மிகச்சிறியவள், யமுனை யாற்றில் தோழர்களுடன் தோணியேறி விளையாடிக் கொண்டிருந்ததில், தோணி கவிழ்ந்தது. நான் இறந்து போனதாக அறிந்து, பிதா மாதாக்கள் கவலைப்படுவார்கள்; என் மனைவியோ, உயிர் துறப்பாள்; என்று விபரமாய்ச் சொன்னான். நாகராஜன் கேட்டு ஆச்சரிய முற்று, அரசகுமாரா! நீங்கள் வழிபடு கடவுள் எவர் என்று விசாரிக்க, சந்திராங்கதன் சொல்லுகிறான். "நாகலோக அரசரே! சகல லோகங்களையும் சகல ஆன்மாக்களையும் தமக்கு உடைமைப் பொருளாகப் பெற்றுத் தாம் உடைய வராயிருப்பவர் எவரோ, தேவர்களுக் கெல்லாம் தேவராய் மஹா தேவராய் வீற்றிருப்பவர் எவரோ, திரிபுரத சனம் செய்தவர் எவரோ, ஆலகால விஷத்தை அருந்தித் தேவர்களை ரக்ஷித்தவர் எவரோ? ப்ர்ம்ம விஷ்ணுக்களாலும் தேடி யறியப்படாதவர் எவரோ, சோம சூரியாக்நிகளின் ஒளிகளுக்கெல்லாம் ஒளியைக் கொடுத்துத் தான் பூர்ண ஒளியாயிருப்பவர் எவரோ, வேதங்களுக்கெல்லாம் கர்த்தராயும், காரணங்களுக் கெல்லாம் அநாதி காரணமாயும் கங்கையையும் இளம் பிறையையும் முடியில் தரித்து, லோகமாதாவாகிய உமா தேவியாரைத் தனது இடப்பாகத்தில் அமர்த்தி, சகல தேவர்களும் கை கூப்பித்தொழுது நின்று சேவிக்கும் லோக நாயகர் எவரோ, அவரே எங்கள் தெய்வம்;

அவரே எங்களை ரக்ஷிக்கும் பரமபிதா; அவரே நாங்கள் தொழும் கடவுள்" என்று சந்திராங்கதன் சொல்லவும், நாகராஜன் சந்தோஷித்து "அரசகுமாரனே! சிவபெருமானின் பெருமைகளை நீ சிறியவனாயிருந்தும், மிகவும் தெளிவாகச் சொன்னாய்; வெகு சந்தோஷமாச்சுது. ஆனால் ஒன்று சொல்லுகிறேன் கேள். இந் நாகலோகமானது மாணிக்க வைடூரியங்களாலாயது; சகல போகங்களும் சகல செல்வங்களும் நிறையப் பெற்றது; இயமன் இங்கு அணுக மாட்டான்; இங்கு நரை திரை அணுகாது; அரம்பா ஸ்திரீகள் போல் நாக கன்னியர்கள் பலர் இங்குள்ளார்கள். விசனமற்று இங்கேயே நீ இருக்கலாம்" என்றான். சந்திராங்கதன் "ஆம் வாஸ்தவந்தான்; எனது பிதாவுக்கு நான் ஒரே புத்ரன். அவர் கவலை, என்னைப் பாராவிடில், பிரமாதமாகும். என் மனைவியோ உயிர் துறப்பாள். தாங்கள் தயவு செய்து என்னைப் பூவுலகத்துக்கு அனுப்ப வேண்டும்" என்று பிரார்த்தித்தான். அரசன் சந்தோஷமுற்று, ஆடையாபரண மாணிக்கங்கள் பலவற்றைச் சந்திராங்கதனுக்கு வெகுமதி அளித்து, எழு கடலையும் கடக்கவல்ல ஒரு குதிரையையும் கொடுத்து, அரசகுமாரனுக்குத் துணையாக வேறு ஒரு நாகராஜனையும் அனுப்பினான். சந்திராங்கதன் அரசனிடம் விடை பெற்றுக்கொண்டு, தான் தோணி யேறிவிட்ட யமுனை யாற்றங்கரை வந்து சேர்ந்தான்.

ஈதிப்படியிருக்க, சந்திராங்கதன் தோணி கவிழ்ந்து தோழர்களோடு இறந்துவிட்டான் என்ற செய்தியைக் கேட்ட பிதா மாதாக்கள் மிக்க வருத்தமடைந்தார்கள்.

இதுதான் சமயமென நிடத தேயத்து அரசன் படை யெடுத்து வந்து, சந்திராங்கதன் தாய் தந்தையர்களைச் சிறையிலடைத்துத், தேசத்தைக் கைப்பற்றிக் கொண் டான்.

சந்திராங்கதனுடைய மாமனார், இத்துக்கத்தைக் கேட்டு மனம் பொறாமல், தன்குமாரத்தி சீமந்தனிக்குச் சொல்ல, சீமந்தனி இனி அரைக்கணமேனும் உயிர் தாழ்தவில்லை; தீயில் விழுந்து உயிர் துறப்பேனெனக் கூறினாள். பிதா கூடிய வரையுஞ் சீமந்தனிக்குச் சொல்லிச் சோமவார விரத பூஜை தவறாமல் நடத்தி வந்தால், இம்மைக்கில்லா விட்டாலும் மறுமைக்காயி னும் சிவகதி கிடைக்குமெனக் கூறலும், சீமந்தனி ஆறுதலடைந்து, பரமசிவ பக்தி கொண்டு, அவ்விரத பூஜையைக் கைசோராமல், கிரமப்படி நடத்தி வந்தாள்.

யமுனையாற்றங்கரையில் வந்திறங்கிய சந்திராங்கதன், தன்னுடன் வந்த நாகலோக ராசனை நிடத நாட்டு அரசனிடத்தனுப்பித், தான் நாகலோகஞ் சென்று உயிர் பெற்று வந்த விபரத்தையும், தன் பிதா மாதாக் களைச் சிறைவிடுத்துத் தன் தேசத்தைத் தன்னிடம் ஒப்புவிக்கும்படியும், சொல்லி அநுப்பினான். நிடத அரசன் இச்செய்தியைக்கேட்டுப் பயந்து, பிதாமாதாக் களைச் சிறைவிடுத்துத் தேசத்தை ஒப்புவித்துச் சந்தி ராங்கதனை நமஸ்கரித்துப் போனான்.

சீமந்தனியும் அவர் பிதாவும் இச்செய்தியைக்கேட்டு வந்து, சந்திராங்கதனைக் கண்டு சந்தோஷித்து, பலதேச அரசர்களுக்கும் சமாசாரம் விடுத்துச் சீமந்தனிக்கும் சந்திராங்கதனுக்கும் சாந்தி செய்தார்கள். இருவரும்

சந்தோஷமாய்க் கூடிக்குலாவி வாழ்ந்து வந்தார்கள். அவன் பிதா தவஞ் செய்வான் வேண்டிச் சந்திராங்கதனுக்கு முடிசூட்டி, நாட்டை அவன் வசம் ஒப்புவித்துக் காட்டுக்குச் சென்றான்.

சந்திராங்கதன் எட்டுப் புத்திரர்களையும் ஒரு புத்திரியையும் பெற்றுச் சீமந்தனியும் அவள் புருஷனும் பதினாயிர வருஷம் நீதியோடு அரசு செலுத்தி வந்தார்கள். அன்பர்களே! சோமவார விரத பூஜையின் பலன் இதுவன்றோ?

சீமந்தனி இவ்வாறு சோமவார பூஜையைக் கிரமமாக நடத்தி, தன்னை நாடிவரும் ஸ்திரீ புருஷர்களைப் பார்வதி பரமேஸ்வரராகப்பாவித்துப் பூஜித்து, அவர்களுக்கு வேண்டிய உதவி செய்வது வழக்கம். இப்படியிருக்குந் தறுவாயில், சுமேதா சாமவான் என்னும் இரண்டு பிராமணச் சிறுவர்கள் வேதாகம புராண சாத்திரங்களைக் கற்றுணர்ந்தவர்கள். இவர்கள் விவாகம் செய்துகொள்ள விருப்புற்று, அவ்வூர் அரசனைக் கண்டு யாசிக்க, அரசன் சீமந்தனியென்பாள் ஒருத்தி சோமவார விரத பூஜை யனுட்டித்து, யாசர்களுக்கு வேண்டிய தானம் செய்கிறாள். நீங்கள் ஸ்திரீ புமான்களாக வேஷந்தரித்து, அவளிடம் செல்லுவீர்களானால், உங்கள் குறை நீங்கும் என்றான். கற்றுணர்ந்த பிராமணச் சிறுவர்கள் ஸ்திரீ வேஷந் தரிக்கச் சம்மதியாராயினும், அரசனது ஆக்கினைக்குட்பட்டுச், சாமவான் ஸ்திரீயாகவும், சுமேதா புருஷனாகவும், சீமந்தினியிடம் சென்றார்கள். சீமந்தனி இவர்களைப் பார்வதி பரமேஸ்வரராகப் பூஜித்து, அவர்கள் வேண்டியதைக்

கொடுத்தனுப்பினர். வெகுமதி பெற்று வந்த இரு வரும், வரும் வழியில் ஸ்திரீயாக யிருந்த சாமவான் காமமீறிச் சுமேதாவைச் சேரும்படி வற்புறுத்தினன். சுமேதா என்ன நீதி சாஸ்திரம் சொல்லியும், காமத் தீயானது கொழுந்து விட்டெரிவதை அடக்க முடியா மல், சுமேதாவை வலிதிற் புணர்ந்து, சாமா சுகித்தான். இப்படி மனம் வருந்தித் தன்னூர் சேர்ந்து, தன் பிதா விடம் நடந்ததைச் சொல்லப், பிதா அரசனிடம் முறை யிட, அரசன் அவ்விடம் வந்துள்ள பாத்துவாஜ முனிவரிடம் விண்ணப்பித்தான். முனிவர் சற்று யோஜி த்துத் தேவி பூஜை செய்தால் நிவர்த்தியாகும் என்றார். அவ்வாறே இருவரும் தேவி பூஜையை கடுமையாய்ச் சில நாள் செய்ய, மனோன்மணி இவர்கள் தவத்துக்கிரங் கிப் பிரத்தியக்ஷ மாகி, கோடி வருஷம் தவஞ் செய்பி னும் அடியார்கள் பாவனையை நீக்க எம்மாலுமாகாது, எம்மிறை வராலும் ஆகாது என்று, அவர் பிதாவுக்கு இன்னொரு புத்ரனை அனுக்கிரகித்து மறைந்தாள்.

பின்னர் சாமா என்னும் சிறுவனுக்கு சாமாவதி எனப்பெயரிட்டுச் சுமேதாவுக்கு மணம் புரிவித்தார்கள் என்பது கதை.

ஆதலால் சோமவார விரத மகிமையினல் சீமந்தனி அமங்கலித்வம் நீங்கிப் பதிணுபிரம் வருஷம் சுமங்கலி யாய் வாழ்ந்ததும், சீமந்தனி பூஜையால் சாமாவின் ஸ்திரீத்துவம் மறையாது விட்டதும் கவனிக்கத்தக்கது.

☞ சோமவாரத்தில் அமாவாசை நேர்ந்தால், அத் தினம் காலையில் அசுவத்தப் பிரதக்ஷிணம் செய்ய வேண்டியது வேதாகம நூற்றுணிபு.

சோமவார விரதத்தின் மற்றொரு விபரம் கூறுவோம்.

நைமிசாரண்ய வாசிகளுக்குக் கௌதமர் சொல்லுகிறார். பூர்வத்தில், சந்திரனானவன் உமையா-சகித்வா-சோம: என்னும் சகபூர்வபத சமாச பதமாகிய திருநாமச் சொரூபராகிய சிவபெருமானுக்குரிய நாளிலே விரதமிருந்து, அச்சிவபெருமானால் நற்பேறடைவதே சிறப்பெனக் கருதி, சோமவாரமானது அவரது திருநாமத்தைப் பெற்றிருப்பதால், இந்த வாரத்தில் நாம் விரதமிருப்பதே தகுதியென்று நியமித்து, அதில் விரதாரம்பம் செய்து முடித்தான். சிவபெருமான் இவரது தவத்துக்கிரங்கிப் பிரத்தியக்ஷ தரிசனந் தந்து, ஓ சந்திரனே! உனக்கு என்ன வரம் வேண்டுமென வினவ, சந்திரன் மஹா சந்தோஷமுடையோனாய்ப் பலவாறு தோத்திரஞ் செய்து, சுவாமீ! அடியேன் தங்களிடத்தில் எப்போதும் வாசமாயிருக்கவும், அதற்குத் தக்க பேறொன்றை யடையவும், தேவரீர் அருள் புரியவேண்டுமென்று பிரார்த்தித்தான். சிவபெருமான் சந்திரனுக்குச் சோமன் என்னும் பெயர் தந்து, தனது சடையில் அச்சோமனைத் தரித்துக் கொண்டனர்.

பின், ஓர் காலத்தில் கைலையங்கிரியில் நவரத்ந கசிதமாகிய ஆசனத்தில் தேவர்களும், கின்னரர், கிம்புருடர் சித்த வித்யாதரர், இருடிகள், மற்றுமுள்ளோர்களும், தோத்திரஞ் செய்ய வீற்றிருக்கும் சிவபெருமானைப் பார்வதி தேவியார் சோடசோபசாரஞ் செய்து வணங்கினவுடன், தனது சடாபாரத்தில் யாவரும் அதிசயிக்க விளங்கும் சந்திரனைத் தோற்றுவித்தனர். அதுகண்டு அங்கு தரிசித்து நின்றோர் யாவரும் ஆநந்த

முற்றூர்கள். அப்போது பார்வதியார், அச்சடாமுடியில் சந்திரன் பெரும்பேறடைந்த காரணத்தை அறியச் சிவபெருமானைப் பிரார்த்தித்துக்கேட்டார்; சிவபெருமான் சொல்லுகிறூர்.

பார்வதீ! இச்சந்திரன் சோமவார விரதத்தை அநுட்டித்து முடித்தாஞதலால், இப்பாக்கியம் பெற்றூன் எனவும், பார்வதி மகிழ்ந்து, சுவாமீ! அவ்விரதானுஷ்டான முறைகளை அடியேனுக்கு அநுக்கிரகிக்க வேண்டுமென்று கேட்கச், சிவ்பெருமான் சொல்லுகிறூர்.

பெண்ணே! இவ்விரதத்தை அநுட்டிக்க விரும்புவோர், ஆரம்பத்தில் அஷ்ட திக்குகளில் அட்ட கலசங்களையும், நடுவே பத்மாசனத்தில் பாண லிங்கத்தையும், ஆசிரியனைக்கிழக்கு முகமாகவுமிருத்தி, வில்வம் அறுகு வெள்ளருகு வெண்பட்டு வெள்ளை அக்ஷதை, பஞ்சகவ்வியம், பஞ்சாமிருதம், பால், சந்தனம், புனுகு, இளநீர் முதலிய சிவபூஜைத் திரவியங்களை யருகில் வைத்துக்கொண்டு, அபிஷேகம் செய்து, ஓம் மஹாதேவாயநம: ஓம் மஹேஸ்வராய நம: ஓம் சங்கராயநம: ஓம் இடபத்துவிஜாய நம: ஓம் சூலபாணினே நம: ஓம் காமாங்க நாசஞய நம: ஓம் தேவதேவேச நம: ஓம் ஸ்ரீகண்டாய நம: ஓம் ஈஸ்வராய நம: ஓம் பார்வதிப்பிரியாய நம: ஓம் ருத்திராய நம: ஓம் சிவாய நம: என்னும் பன்னிரண்டு திருமந்திர புஷ்பத்தால் அருச்சித்து, தூபதீபாராதனை சோடசோபசாரங்களும் பன்னிரண்டு பிரதக்ஷிண நமஸ்காரமும் செய்து, காலையேனும் மாலையேனும் ஓர் வேளை போசனமுண்டு,

அல்லது சக்தியிருந்தால் உபவாசமிருந்து வரவேண்டும். இதில் உபவாசமிருப்பது உத்தமம். இவ்வாறு உபவாசம் செய்வோர் நித்திரை யின்றிச் சிவபுராணங்களைக்கேட்டும் படித்தும் இராவைக்கழித்து, மறுநாள் காலையில் பாரணை செய்யவேண்டும். இவ்வாறு பிரதமத்தில் நடத்துவோர், 1, 2, 3, வருடங்களிலாவது, விரதமுடிவு செய்வதாக ஆரம்பத்திலேயே சங்கல்பம் செய்து கொள்ளவேண்டும். தவிரவும், பன்னிரண்டு உத்தம குணமுள்ள பிராம்மணர்களையாவது, தனது சக்திக்கியைந்த ஒரு பிராமணரையாவது ஆசனத்திருத்தி, சோடசோபசாரம் செய்து வணங்கி, அர்த்தநாரீஸ்வர உருவமைந்த பொற்பாத்திரத்துக்கும் அபிஷேக முதலிய நடத்தவேண்டும்.

பின்வரும் சோமவாரங்களில் அதிகாலையில் எழுந்து, நித்திய கர்மானுட்டான முடித்து, நதி, ஏரி, குளம் முதலிய சுத்தமான இடங்களிற் சென்று, சிவபூஜை செய்து, வில்வம் 5, அறுகு 10, வெள்ளையக்ஷதை 10, இம்மூன்றையுங் கொண்டு, பிரதோஷகாலத்திற் கிரமப்படி சிவாலயத்துட் சென்று, முற்கொண்டுபோன வில்வ முதலியவைகளால் சிவபெருமானை அருச்சித்துச் சிவ தரிசனஞ் செய்து வந்து உண்டு, சிவபுராணங்களைப் படித்தும் கேட்டும், தனித்துச் சயனிக்கவேண்டும். இவ்விரதத்தை ஆடவரும் பெண்களும் அனுட்டிக்கலாம். இவ்விரதானுட்டானம் சாயுச்சிய பதவியைத் தரும் என்றார் கௌதமர்.

# சநிப்பிரதோஷம்.

பதின்மூன்றுந்திதியாகிய திரயோதசியின் மாலைப் பொழுதே பிரதோஷ காலம். இக்காலத்தில் கைலாய கிரியிலே பரமேஸ்வரர், பார்வதி தேவியார் கண்டு களிக்கவும், விஷ்ணு குடா முழக்கவும், தும்புரு நாரதர்கள் இன்னிசைபாடவும், திருமகளும் கலைமகளும் மகர வீணை வாசிக்கவும், சதுர்முகப்பிரமன் கைத்தாளம் போடவும், தேவர்கள் எல்லாம் துதி செய்யவும், பல கோடி சூரியர்களை யொத்து விளங்குந் திருமேனியோடு ஆநந்தத்தாண்டவம் செய்தருளுவர். அக்காலத்திலே விஷ்ணு முதலிய தேவர்கள் எல்லோரும் பரமசிவனுடைய சதாநந்த நிருத்தத்திற்குரிய பணியாளராகக் கயிலாயத்துக்குச் செல்ல வேண்டியிருத்தலால், அப்போது * தங்களை ஒருவரும் பூஜிக்கக்கூடாதென்று கட்டளை யிட்டுப், பரமசிவனுக்குச் செய்யப்படும் பூஜையையே தங்களுக்கும் செய்யப்படுவதாக எண்ணி, மகிழ்ச்சி அடைவார்கள். இது வேதாகம சாஸ்திராதி நூற்றுணிபு. அக்காலத்தில் பரமசிவனைப் பூஜியாமல், விஷ்ணுவாதி தேவர்களைப் பூஜிக்கிறவர்கள் நரகத்தில் வீழ்வார்கள்.

பிரதோஷ தினத்தில், பரிசுத்தமாகிய நீரில் ஸ்நாநம் செய்து, பகற்பொழுது உணவொழித்து, மாலைப்பொழுது வருகிற காலத்தில், சித்திரச் செவ்வாடையினல்

---

* தற்காலத்தும் அநேக விஷ்ணுவாலயங்களில் பிரதோஷ காலத்தில் ஆலயக்கதவு திறக்கப்படுகிறதுமில்லை ; திறந்தாலும் தரிசனத்துக்கு விடப்படுகிறதுமில்லை என்கிறார்கள் பெரியோர்கள்.

விதானித்துப் பந்தரிட்டு, அதிலிருந்துகொண்டு, வேத சிவாகம விதிப்படி, ஐம்புலன்களையும் அடக்கி, மனதை வேறு வழியிற் செல்ல விடாது நிறுத்தி, ஸ்ரீ பஞ்சாக்ஷர மஹாமந்திரத்தை உச்சரித்து, பரமசிவனையும் பார்வதி தேவியாரையும் தூபதீப முதலிய எல்லாவித உப சாரங்களும் குறைவு படாமல் செய்து ஆராதிக்க வேண்டும்.

தம் வீட்டில் இப்பூஜையை நிறைவேற்ற இயலாதவர்கள், சிவாலயத்துக்குச் சென்று, நந்திக்குப் பின்புறமாக நின்று, பரமசிவனைத் தரிசிக்கவேண்டும்.

இது ஒவ்வொரு பிரதோஷத்துக்கும் அனுட்டிக்க வேண்டுவது. கூடாதவர்கள் சநிப்பிரதோஷம் விசேஷமாதலால், அக்காலத்தில் விதிப்படி நடப்பது சுகிர்தத்தைத் தரும் என்றார் பெரியோர். இவ்வாறு கிரமப்படி பூஜிக்கிறவர்கள், பூவுலகத்தில் எல்லா இன்பங்களையும் அநுபவித்து, மறுமையில் மோக்ஷ இன்பமாகிய பெரும் பேறு அடைவார்கள். இதற்குத் திருஷ்டாந்தமான சரித்திரம் ப்ரம்மோத்தரகாண்டத்தில் காண்க.

---

## திருக்கழுக்குன்றம்

# கிரிப்பிரதக்ஷிண விதி.

☞ ஸ்ரீ வேதகிரியைப் பிரதக்ஷிணம் செய்வதற்கு, பலப் பலர் அறிந்தோ அறியாமையினாலோ, பலவித அபிப்பிராயங்கள் கூறி, பிரதக்ஷிணம் செய்

வோர்களது மனதை அருவருக்கச்செய்வதை நேரில் கண்டு, சாஸ்திர விரோதமின்றியும், தேகாரோக்கியத்துக்குக் கெடுதியின்றியும், சர்வ சாதாரணமாய் எல்லோரும் மனக்களிப்புடன் செய்யக்கூடும் சில விதானங்களை, இங்கு எடுத்துரைக்க மனந்துணிந்ததை அன்பர்கள் கவனிப்பார்களாக.

பிரதக்ஷிணமாவது-சுற்றிவருதல். அதாவது தேகத்துக்குரிய நரம்பு நாடிகளுக்கு அசைவுண்டாதலாகும். விடியற்காலை சுத்த ஜல ஸ்நாநமும், சூரிய உஷ்ணம் தேகத்தில் படாமல் உலாவருதலும், சிவனருள் கிடைப்பது ஓர் பக்கமிருக்க, வாயு பித்த தேகிகளுக்குத் தேகாரோக்யமும் மனோற்சாகமும் கொடுக்குமென்பார் ஆயுர்வேத சாஸ்திர மஹா பண்டிதர்கள். காடுகள் அடர்ந்த மலைப்பிரதேசத்தில் உலாவருதல் சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிந்ததுபோல் மிக விசேஷமாகும். ஆகையால், சரீர பீடையுள்ளவர்களும், கர்ம வியாதிகளென்று சாஸ்திரக்ஞர்கள் சொல்லும் தீரா வியாதியஸ்தர்களும், மண்டலக் கணக்காகத் திருக்கழுக்குன்றத்து ஸ்ரீ வேதகிரியைப் பிரதக்ஷிணம் வருதல், பரம்பொருளின் திருவருட்கிருபையால், சகல சௌபாக்கியமும் பெறலாகுமென்று வேதாகம சாஸ்திரத்துணிபும் அநுபவமுமாம்.

ஆதலால் பிரதக்ஷிணம் செய்ய விரும்புவோர் (1) பஞ்ச பஞ்ச உஷத் காலத்தி லெழுந்து,

---

(1) பஞ்ச பஞ்ச உஷத்காலமென்பது விடியற்காலை 4-மணி சுமார் என்பார்கள்.

(2) நித்தியக்கடன் முடித்து, (3) சங்கதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்து, உலர்ந்த வஸ்திரம் அல்லது பட்டு நார்மடி உடைகள் உடுத்திக்கொண்டு, தத்தம் மதாசாரக் கொள்கைக்கு மாறுபாடின்றி, விபூதி ருத்திராக்ஷம் அல்லது திருமண்காப்பு துளசிமாலை அணிந்து, அவரவர்க்குரிய நித்தியானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, கடவுளின் திருவருளையே மனதில் சிந்தித்து, அக்குளக் கரை வடமேற்கிலுள்ள விநாயகமூர்த்தியைத் தரிசித்து வந்து, கிராம தேவதைகளாகிய செல்லியம்மன் ஓசூர் அம்மன் கோயிலைப் பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து, அடிவாரத்தில் திருமலைக்கு ஏறும் வழியிலுள்ள

---

(2) நித்தியக்கடனாவது மலஜன விசர்ஜ்ஜனம், பல்தேய்த்தல்.

(3) குளிர்காலத்தில் விடியுமுன் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்ய இயலாதவர்கள், சவுகரியமிருந்தால் சங்குதீர்த்த ஜலத்தை வீட்டுக்குக்கொணர்ந்து வெந்நீராக்கியும், சவுகரியமில்லாதவர்கள் கிணற்று ஜலத்தைச் சூடாக்கியும், ஸ்நாநம் செய்யலாம். சங்கதீர்த்தத்திலேயே ஸ்நாநம் செய்யவேண்டுமென்பது கட்டாயமில்லை. சங்கதீர்த்த ஜலம் தாமரசத்து அயச்சத்துள்ளதென்று மேனாட்டு வயித்யர்கள் பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். சுதேச வயித்யர்களும் அவ்வாறே நிர்ணயிக்கிறார்கள். ஆதலால் இந்த ஜலத்தை சூடேறக் காய்ச்சி வடிகட்டிச் சாப்பாட்டுக்கு உபயோகப்படுத்திக்கொள்ளலாம். கோடைகாலத்தில் இந்த ஜலம் சிலவேளை அருசமாயிருக்கச் சாப்பிடப் பிடிக்காது. அக்காலங்களில் குயவன் கிணற்று ஜலம் மகா உன்னதமென்று பலராலும் புகழப்பட்டு வருதலால், அதை உபயோகிப்பது நன்மை. சங்கதீர்த்த ஜலம் அப்பக்கமிருக்கும் பல ஜனங்களுக்கும் குடி ஜலமாகப் பிரயோசனப்படுவதால், அசுச ஆடைகளை அதில் தோய்க்காமலும், பெருவியாதியுடையோர் ஜலத்தைக் கரைமேற் கொணர்ந்து குளித்தலும், பரோபகாரமென்பதை மறக்கப்படாது.

(1) சித்தாத்திரி விநாயகரைப் பிரதக்ஷிண நமஸ்காரம் பண்ணி, (2) அசுவத்தப் பிரதக்ஷிணம் தங்கள் சக்தியானுசாரம் செய்து கிரியை வலம் வரலாம்.

பிரதக்ஷிணம் வரும்போது (3) மிருதுவான நடையுடன் சிவநாம உச்சாடனம், ராமநாமபஜனை, புராண படனம் அல்லது தத்தம் இஷ்டதேவதா ஸ்தோத்திரங்கள் செய்துகொண்டு போகவேண்டும்.

(4) தலைமயிரை உலர்த்தும்பொருட்டு மயிரை விரித்துக்கொண்டாவது, (5) ஈரவஸ்திரம் உடுத்திக்கொண்டாவது, வம்பு வழக்கு வார்த்தைகள் பேசிக்கொண்டாவது, குடும்ப வியவகாரங்களைப் பிறரிடம் சொல்லிக்கொண்டாவது,பிரதக்ஷிணம் செய்வது பாபமாகும்.

---

(1) அடியவர்களுடைய சித்தத்துள்ள கஷ்டங்களை நீக்குபவர் என்பது பொருள்பட சித்தாத்ரீ விநாயகர் என்பார்கள். இது அகஸ்தியரால் பூஜிக்கப்பட்டதென்றும் சொல்லுகிறார்கள். இதை தினசரி பிரதக்ஷிண நமஸ்காரஞ்செய்தவர்கள் அநேகர் பல நன்மைகள் அடைந்திருக்கிறார்கள். இது தேவஸ்தான சம்பந்தமானதுமல்ல; அடிவார சத்திரத்தாருக்குரியதுமல்ல என்று ஏற்படுகிறது.

(2) அஸ்வத்தப் பிரதக்ஷிணம் காலை 12-மணிக்குள் செய்யலாமே யொழிய மாலையில் செய்தால் தோஷம்.

(3) மிருதுவான நடையாவது, பூர்ண கர்ப்பமுள்ள செல்வமாதர்கள் அரைக்குடம் ஜலத்தைத் தலையிற் சுமந்து நடக்குந் தன்மையது என்பார் பெரியோர்.

(4) தலைமயிரை அவிழ்த்துச் செல்லுதல் அசுபத்தைக் குறிக்கும்.

(5) அசுபகிரியைகளுக்குத்தான் ஈரவஸ்திரம் உடுக்கலாம். நாம் க்ஷேமமடையும் பொருட்டுக் கடவுளின் திருவருளை நோக்கிய காலத்து, உலர்ந்த வஸ்திரமே உடுக்கவேணுமென்பதற்குத்

(6) பாதரக்ஷை போட்டுக்கொண்டும், வாகனமேறியும், ஓட்டம் பெருநடையாய் கைவீசிச் சிற்றின்பப் பாடல் பாடிக்கொண்டும், பிரதக்ஷிணம் செய்வது மஹத்தான தோஷம்.

பிரதக்ஷிண வழியில் கோடி விநாயகர் ஆலயம் ஒன்றும், கோடி விநாயகர் தீர்த்தமொன்றும் உண்டு. அந்த தீர்த்தத்தில் கைகால் சுத்தித்துத் தீர்த்தத்தை சிரசில் புரோக்ஷித்துக்கொண்டு நின்றால், திருமலைப்பெருமான் கோபுர தரிசனமும், தாழக்கோயில் கோபுரங்கள் தரிசனமும் கிடைக்கும். அந்த இடத்தில் மலைமருந்து எடுக்குமிடமுண்டு. அந்த இடத்தில் சுகமாகக் காற்று வீசும்படியாக வேம்பு, ஆல், அரசு செடிகள் நிழல் கொடுக்கத் தழைத் தோங்கி நிற்கின்றன. அங்கு சிறிது தங்கி இளைப்பாற, முள்கள் எல்லாம் எடுத்துச் சுத்தித்த

---

தர்ம சாஸ்திரம் "நகுர்யாத் சுபகார்யாணி ஆர்த்ர வஸ்த்ரதரப்புமான்" "ஆர்த்ர வஸ்த்ர தரக்குர்யாத் ப்ரேதகர்ம சதபுதஹா" எனச்சொல்லும். ஈரவஸ்திரம் தேகத்தில் சில நிமிஷங்கள் தங்கினால் சீதளநோய் உண்டாவதுடன், தோலைப்பற்றிய சொரி, சிரங்கு, அரைக்கடுவன், ஆறுத புண்கள், படைகள் உண்டாகும் என்பார் ஆயுர்வேத சாஸ்திரக்ஞர்கள்.

(6) மண்டலக்கணக்காகக் காரியத்தை உத்தேசித்துப் பிரதக்ஷிணம் செய்வோர், இதை அவசியம் கவனிக்கவேண்டியது. மேனாட்டு நாகரீகத்தை அநுசரிக்கும் மேன்மக்களது செய்கையை நாம் ஆமோதிக்கவேண்டியதில்லை. நடக்கச் சக்தியற்ற வாதரோகிகள் ஸ்நாநபானாதிகள் செய்து, ஒற்றை மாட்டுவண்டியிலேறி, வண்டியினிருபுறமும் திறந்த வெளியாய் விட்டு, மெல்லெனச் செல்லலாம். சஞ்சீவிக்காற்று சரீரத்திற் பட்டு ஆரோக்யமுண்டாகும். மனமொடுங்கிக் கடவுளிடத்து நமது முழு அன்பையும் செலுத்திப் பிரதக்ஷிணம் செய்யவேண்டுமென்பது எமது அபிப்பிராயம்.

இடம் இருக்கிறது. அந்த (1) இடத்தில் மலைமருந்து எடுத்துக் கடவுளைச் சிறிது நேரம் தங்கி இளைப்பாறிச் சிவபெருமானைத் தியானித்துப் பிரதக்ஷிணம் செய்யலாம்.

வழியில் (2) திருமலைச் சொக்கநாயகி அம்மன் கோயில், ஓர் குன்றின்மேல் அமைக்கப்பட்டுள்ளது. அதைத் தரிசித்துச் சென்றால், மலைச் சொக்கம்மாளைக் கூப்பிடும் இடத்திலுள்ள நந்திகேசுவரரைத் துதித்துச் சென்று, தகப்பன் சாமியும் ஆறுமுகப்பெருங் கருணைக்

---

(1) இந்த இடத்தில் சென்னையிலிருந்து வந்துள்ள ப்ர்ம்மஸ்ரீ R. B. லக்ஷிமிரதந் அய்யர் என்னும் தருமகுண சிந்தையாளர், குளிர் நிழலைத்தரும் வேம்பு அரசு செடிகளை வைத்துப் பயிராக்கியதுடன், தங்குவோர்க்கு மனோல்லாசம் கொடுக்க, இடத்தைச் சுத்தித்து வைத்திருப்பதும், கற்பலகை நாற்காலி அமைத்திருப்பதும் சால மேன்மையுடையது.

(2) திருமலைச் சொக்கநாயகி என்பது பார்வதிக்குரிய நாமங்கள் பலவற்றுள் ஒன்று; திருமலையில் பெருமானது தென் பாகத்தில் ஆலயம் இருக்கிறது. அதை அநுசரித்ததொன்றென்றும் சொல்லலாம். இன்றேல், திருமலையே ஓர் ஆலயமாக நிர்ணயித்து, அதன் வட பாரிசத்தில் காளி இருத்தல் வேண்டுவது சிற்பசாஸ்திர முறைப்படியும் என்னலாம். ஆனல் இது புராதனமல்ல. இடையில் சில பக்தாளால் ஏற்பாடு செய்யப்பெற்று வந்ததாக ஏற்படுகிறது. இதற்கு 40, 50, அடி தூரத்தில் "சொக்கம்மா எனக்கு வேண்டியதை முடித்துக் கொடுப்பாயா" என்று உரத்த சப்தத்தோடு கூப்பிட்டால், ஓம் என்ற சப்தம் உதிக்கிறது. இதைச் சிலர் தெய்வீகமென்றும் கேட்ட வரம் கொடுப்பதற்குச் சொக்கம்மாள் அங்கு இருக்கிறளென்றும் நம்புகிறார்கள். அத்தகையோர் பக்தி வயிராக்கியத்துக்கு நாம் மாறு சொல்ல இஷ்டப்படாவிட்டாலும், உண்மையைச்சொல்ல வேண்டியிருக்கிறது. அது பிரதி தொனிக்கல் (Echo Stone) இருக்குமிடம். நாம் உரத்துக்கூப்பிடும் சப்தத்தின் முடிவே ஓம் என பிரதி பலிக்கிறது. மேலும் செட்டிப்பெண்ணைக் கடவுள் சிறையெடுத்தார் என்றால் கடவுளுக்குத் தோஷம் கற்பிப்பதாகும் என்பதை விம்வசிகள் அறிய வேண்டும்.

கடலுமாகிய முருகப் பெருமான் திருக்கோயில் கொண் டெழுந்தருளியிருக்கும் திருப்போரூரைத் திச்கு நோக் கித் தெண்டனிட்டு, வழியில் உய்யால்வார் பேட்டை யென்னும் மூவர்பேட்டைக் கருகாமையிலுள்ள எல்லை யம்மன் பிடாரியை வணங்கிச் சென்றால், இந்திர தீர்த் தம், (1) சமய குரவர்களாகிய அப்பர், சுந்தரர், சம் பந்தர், மணிவாசகப் பெருமான் ஆலயம் திருமலை யாண்டவன் சந்நிதானத்துக்கு நேரே யுள்ளதைத் தரி சித்து வணங்கி, அங்குள்ள இந்திர தீர்த்தத்தில் கைகால் அலம்பிப் புரோக்ஷித்துக் கொண்டு, மலையாண்டவனை எதிர் நோக்கித் துதித்து, அடிவாரம் வந்து சேரலாம்.

அடிவாரம் சிறிது நேரம் தங்கி இளைப்பாறி, மலை யாண்டவனை நமஸ்கரித்துத் தோத்திரித்து நின்று, "எம்பெருமானே! இன்றையதினம் காலை சுதினமாகவே பிரதக்ஷிணம் முடிந்தது உமது திருவருட் கிருபையே" என்று வணங்கித் தாழக்கோயில் சென்று, பக்தவற்ச லப்பெருமானையும் ஆறுமுகப்பெருமானையும் வணங்கி, லோகமாதாவாகிய ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் சந்நிதி சென்று வணங்கித் தோத்திரித்துத், தத்தம் சக்திக் கியைந்த அளவு 3, 5, 7, 9, 11, 21, 51, 108, பிரதக்ஷி ணங்கள் செய்தும், சக்தியும் பிரார்த்தனையுமிருந்தால், (2) அங்கப் பிரதக்ஷிணம் (3) அடிப்பிரதக்ஷிணம் செய்ய

(1) நால்வர் கோவிலுக்கு எதிரேயுள்ளதுதான் பழைய அடி வாரம் என்கிறார்கள். ஆதி பேரம்பலத் தம்பிரான் காலத்தில் இது மாறி, தற்போதுள்ள அடிவாரம் நிர்மாணிக்கப்பெற்றதாம்.

(2) அங்கப் பிரதக்ஷிணம்-சரீரத்தை பூமியிற் படப் புரளுதல்;

(3) அடிப் பிரதக்ஷிணம்-காலடியின்பின்காலடி வைத்துப் பிரதக்ஷிணம் செய்தல்.

லாம். கூடுமானால் ஆதி சைவர்களைக் கொண்டு அருச்சனை செய்யலாம். இல்லாவிடில் கற்பூராத்தி செய்து, அம்பாளிடம் உத்திரவு பெற்று, வீடு வந்து (3) சுத்தமான சாப்பாடு சாப்பிட்டுப் (4) பகல் உறக்கம், பாய்ப் படுக்கை யில்லாதிருந்து, மறுபடியும் மாலை 5-மணிக்கு மேல ஸ்நாநம் செய்து, அந்திக்கால அநுட்டான ஜெப தபாதிகள் முடித்து, காலை மாதிரி பிரதக்ஷிணங்கள் செய்தும் அம்பாள் தரிசனம் செய்தும் வீடு வந்து சாப்பிட்டு உறங்கலாம்.

இவ்விதம் ஒரு மண்டலம் (45 நாள்), அரை மண்டலம் (23 நாள்), கால் மண்டலம் (12 நாள்), பூர்வம் சொன்ன விதானப்படி பிரதக்ஷிண நமஸ்காரம் செய்ய வேண்டும். திருமலைச் சுவாமிக்கும் அம்மனுக்கும் ஆதிசைவர்களைக் கொண்டு தினசரி அர்ச்சனை செய்யலாம். மங்களவாரம் சுவாமிக்கும், சுக்கிரவாரம் அம்மனுக்கும் செய்யலாம். நேராத பக்ஷத்தில உள்ளன்போடு தரிசன நமஸ்காரத்துடன் பிரதக்ஷிணம் பூர்த்தி செய்யலாம். "கனத்தின் மேல் வளைவு" என்றாப்போல் அவரவர் மனப்பூர்வமான சக்திக்கியைந்தபடிச் செய்வதில் கடவுளுக்குப் பிரியம் உண்டாகும்.

---

(3) பகல் உறக்கமில்லாமல் புராணபடனம், தேவார திருவாசக நாலாயிரப் பிரபந்த பாராயணம், அல்லது சாஸ்திர சம்பந்தமான கிரந்தங்கள் வாசித்தல், சத்காலக்ஷேபம் கேட்டல், சாதுக்களிடம் பழகல் முதலிய செய்யவேண்டும். சீட்டு சொக்கட்டான் ஆடுதலும், காம விகாரம் உண்டாகும் நூல்கள் வாசித்தலும் கூடா.

(4) சுத்தமான சாப்பாடு என்றால் மாக்கறி உணவு. இரவில் உபவாசம் அல்லது பலகாரம் சாப்பிடலாம். தேகவலி குறைந்தவர்கள் சாதம் சாப்பிடுவதிற் குற்றமில்லை.

தாங்கள் உத்தேசித்த கணக்குப்படி மண்டலப் பிரதக்ஷிணம் செய்து முடிந்த மறுநாள், திருமலைப்பெருமானுக்கும் ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளுக்கும் (5) ஒரு வராகன் அரைவராகன் கால்வராகன் திட்டத்தில் அபிஷேகம் வைத்து, அன்று காலையில் திருமலையேறி, ஸ்ரீ வேதகிரிப் பெருமானுக்கு அபிஷேக அர்ச்சனை ஆராதனை செய்வித்துத் தரிசித்து வணங்கியும், அன்றிரவு ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளுக்கு அர்ச்சனை அபிஷேக ஆராதனை நடத்தி அம்பாளைத் தரிசித்தும் வரவேண்டும். சௌகரியமிருந்தால் திருமலைப் பெருமானுக்கு (6) சகஸ்ரநாமத்தினாலும், ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாளுக்கு சகஸ்ர நாம, திரிசதி நாமத்தினாலும் அருச்சனை செய்யலாம்.

அபிஷேகம் முடிந்த மறுநாள், தத்தம் கரும சாந்திக்காகச் சத் பிராமணரைக் கொண்டு நவக்கிரக ஓமம் செய்வித்து, அன்றையதினம் பிராமண போஜனம், ஏழைகளுக்கு அன்ன விரயம் செய்யவேண்டியது. சௌகரியமிருந்தால் வஸ்திர ஈனர்களுக்கு வஸ்திரதானம்,

---

(5) கோயிலுக்குள் அபிஷேகக் கட்டளைக்காரர் இருக்கிறார்; ஒரு வராகன் திட்டமென்பது ரூபா 6-8-0. அரை வராகன் ரூபா 3-4-0; கால் வராகன் ரூபா 1-10-0. இது கால விலையினால் அதிகப்பட்டது.

(6) சகஸ்ர நாமம் என்பது 1,000 ஸ்தோத்திர சிவ நாமங்களால் அருச்சிப்பது. இதற்கு ரூபா 1-0-0 பிரசாதம் அதிகப்படி. திரிசக்தி என்பது அம்பாளுக்கு 300 தேவி நாமங்களால் அருச்சிப்பது; இதற்கு 0-8-0 பிரசாதம் அதிகப்படி. சுவாமிக்குப் பொங்கல் விசேஷம். அம்பாளுக்குச் சருக்கரைப் பொங்கல், வடை பாயசம் விசேஷம்.

விபூதிப்பை, ருத்திராக்ஷமாலை முதலிய யாவும் தானம் செய்யலாம்.

ஒரு மண்டலத்துச்கு மேல் எத்தனை மண்டலமே னும் இவ்விடம் தங்கிப் பிரதக்ஷிணம் செய்யலாம்; இது அவரவர் சவுகரியத்துக் கேற்றபடி. பிரதக்ஷிணம் செய் யும்போது கண்ணுக்குத் தென்பட்ட ஒவ்வோர் தீர்த் தங்களிலும் தினசரி ஸ்நானம் செய்வது உசிதம்.

பிரதக்ஷிணமுடிந்து தத்தம் ஊருக்குப் போம்போது பார்வதி பரமேஸ்வரனைத் தியானித்து வணங்கி, தங் கள் காரியானுகூலங்களுக்கு அருட்கிருபை அநுக்கிர கிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டு செல்ல வேண்டியது. தாழக்கோயிலுள்ள பக்தவற்சவர், வண்டு வனப்பிள்ளையார், ஆறுமுகப் பெருமான், வீரபத்திர சுவாமி, கிராம தேவதை முதலியவைகளுக்கும் அபி ஷேக அர்ச்சனை செய்தல் உசிதம்.

## ஒவ்வோருவரும் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள்.

(1) மாதவிடாயாகும் ஸ்திரீகள் வீட்டு விலக்கமாய் 5-ம் நாள் முதற்கொண்டு 15 நாட்கள் பிரதக்ஷிணம் செய்து நிறுத்தி, மறு தூரமான 5-ம் நாள் முதல் பிர தக்ஷிணம் ஆரம்பம் செய்யவேண்டும். இவ்விதம் மூன்று 15 நாள் செய்யும்பக்ஷத்தில் ஒரு மண்டலம் கணக்கா கும். பிரதக்ஷிணமாகும்போதும், கோயில் வலம் வரும் போதும், வீட்டு விலக்கமாய் விடின், மகத்தான தோஷம் உண்டாகுமென்பதை அறிவுடையோர் கவ னிக்கவேண்டும்.

(2) வியாதியஸ்தர்கள் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நாநம் செய்யவும் பிரதக்ஷிணம் செய்யவும், தேகத்தில் சக்தி யிருந்தால் செய்யலாம். இல்லாதபக்ஷத்தில், வெந்நீரில் ஸ்நாநம்செய்து, சிவபெருமானை மனதினால் தியானி த்து, வீட்டிலேயே தங்கியிருக்கலாம். அவர்கள் உடுத் திய ஆடையைத் தோய்த்து, அவர் மனைவி, தாய், தம்பி முதலிய நெருங்கிய பந்துக்கள் எடுத்துக்கொண்டு பிரதக்ஷிணம் செய்வது உசிதம். தேக சவுகரியப்படி நட ந்துகொண்டாலே போதும்; வீண் வயிராக்கியம் கொ ண்டு தேகத்தைக் கெடுத்துக்கொள்வதிற் பயனில்லை.

(3) வியாதியஸ்தர்கள் இவ்வேதகிரியிற்றங்கி மருந்து சாப்பிட்டுக்கொண்டு பிரதக்ஷிணம் செய்வதில் தோஷ மில்லை. மருந்துக்குரிய பத்தியக்கிரமப்படி நடந்து, சுத்த ஆகாயம், சுத்த வாயு, தேகத்திற் பட்டு, சிவபெரு மானை மனதினால் தியானித்து வந்தாலே எல்லாக் காரி யங்களையும் திருவருள் கூட்டுவிக்கும். வீண் வயிராக் யத்தால் சரீரத்துக்குச் சிரமம் நோய்க்குப்பலம் கொடுப் பது விபரீதமாக முடியுமென்பதைக் கல்விமான்கள் கவனிக்க வேண்டும்.

(4) பெருவியாதி முதலிய கர்மவியாதியுடையவர் கள் சங்கதீர்த்த ஜலத்திலாவது, மற்றெந்த தீர்த்தத்தி லாவது இறங்கி அசுசி செய்யாமல், ஜலத்தைக் கரை மேற் கொணர்ந்து ஸ்நாநம் செய்வது, பரோபகார மாகும் என்பதை அவசியம் கவனிக்க வேண்டும்.

(5) தத்தமக்குண்டான பொருள் வருவாய்க்கேற்ற வண்ணம் செலவு செய்வது சிவபெருமானுக்கு ரொம்ப திருப்தியை யுண்டாக்குமே தவிர, பிறர் கவுரவத்துக்கு

ஆசைப்பட்டுத் தன் அளவுக்கு மீறிக் கடன்பட்டுச் சிவ கயிங்கரியம் செய்து, நாளை கஷ்டப்படுவதில் பலனில்லை யென்பது விவேகிகள் அறிந்தே யிருப்பார்கள்.

ஓம் சுபமஸ்து.

---

# ஆருத்ரா தரிசனம்.

இது சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக் கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியங்களைப் பற்றியது. அதாவது ஸ்ரீமந் நடராஜமூர்த்தி சிற்சபையை விட் டெழுந்தருளுவது சிருஷ்டி; இரக்ஷாபந்தனம் தரிப்பது ஸ்திதி; கிருஷ்ணகந்தம் (சாந்து) தரிப்பது சங்காரம்; வெள்ளை சாத்துவது திரோபவம்; உற்சவம் கொண் டருளுவதும், மட்டையடி யடிப்பதும் அநுக்கிரகம்.

அகங்கார மமகாரங்களால் சூழப்பெற்ற அசுரரைச் சங்கரித்தபோது, அவர்களுடைய சரீரம் கரிய பஸ்ம மாகப் போனதால், அதைத் திலதமாக்கித் தரித்துக் கொண்ட பாவனையாகக் கிருஷ்ணகந்தம் (கறுப்பு சாந்து) சாத்துவது. அச்சங்கார காலத்தில் சிவ பெருமான் திருமேனி அதி உக்கிரமாயிருந்தமையால், அது தணியும் பொருட்டுத் தேவர்கள் அத்திருமே னியை வெள்ளை வஸ்திரத்தாலும், வெள்ளைப் புஷ்பத்தி னாலும் மறைத்தார்கள். அது பாவனையாக வெள்ளை சாத்துவது.

நடேச மூர்த்தியாகிய சபாநாதருக்கு வருஷத்தில் ஆறு அபிஷேகங்கள் நடக்கின்றன; அதாவது:—

மார்கழிமீ திருவாதிரை; மாசிமீ பூர்வபக்ஷ சதுர்த்தசி; சித்திரைமீ திருவோண நக்ஷத்திரம்; ஆனிமீ உத்திர நக்ஷத்திரம்; ஆவணிமீ புரட்டாசிமீ பூர்வ பக்ஷ சதுர்த்தசி திதிகள். இதற்குக் காரணம்:—

சிவலிங்கப் பெருமானுக்குத் தினம் ஆறுகால பூஜை யென்று வேதாகமங்கள் சொல்லுகின்றன; அதற்கு விபரம் ஏதெனின், இராத்திரி 25 முதல் 30 நாழிகைக்குள் செய்கிற பூஜை பஞ்ச பஞ்ச உஷத்கால பூஜையாகும்; உதயமுதல் 10 நாழிகைக்குள் செய்கிற பூஜை காலசந்தி பூஜையாகும்; 20 நாழிகைக்குள் செய்கிற பூஜை உச்சிக்கால பூஜையாகும்; 30-நாழிகைக்குள் செய்கிற பூஜை பிரதோஷ கால பூஜையாகும்; இரவு 7½-நாழிகைக்குள் செய்கிற பூஜை சாயங்கால பூஜையாகும்; இரவு 11¼ நாழிகைக்குள் செய்கிற பூஜை அர்த்தசாம பூஜையாகும்; மானிடருக்கு ஒருவருஷம் தேவர்களுக்கு ஒரு நாளெனப்படும்; ஆதலால் மேற் சொன்ன வருடாந்திர ஆறு அபிஷேக ஆராதனை பூஜைகள், தேவர்கள் தினம் செய்யும் ஆறுகால பூஜையாம். ஆயின் திருவாதிரையானது சிவபெருமான் சகளீகரித்த தினமாகையால், விசேஷமெனச் சொல்லுவார்கள் ஆகம சாஸ்திர விற்பன்னர்கள்.

சைவ சமயாசாரியர்களுள், ஸ்ரீமந் மணிவாசகப் பெருமான் தமக்கு ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளிய பரமசிவம் அருளிச் செய்தபடி, திரு உத்தரகோச மங்கையிற்சேர்ந்து, சிவாலயத்துட் சென்று பணிந்து, தோத்திரஞ்செய்து, சுவாமி குருமூர்த்தமாய்த்தரிசனங் கொடுக்கத் தரிசித்து, விடை பெற்றுக்கொண்டு, திரு

விடை மருதூர் முதலிய தலங்களுக்குப் போய், சிவ தரிசனம் செய்து, திருவண்ணாமலைக் கெழுந்தருளி, அருணாசலேஸ்வரர் ஆசாரிய முகூர்த்தமாகத் தரிசனம் கொடுக்க, அங்கே சிலகாலம் வசித்து வந்தார். அப் போது மார்கழிமீ திருவாதிரை நக்ஷத்திரத்துக்கு முன் பதிஞெரு நாளளவும், விடியற்காலத்தில் அங்குள்ள மாதர்கள் எல்லோரும் ஒருவர் வீட்டுக்கு ஒருவர் போய்த், தோழியே! நமதாண்டவனாகிய பரமசிவத் தைத் தோத்திரஞ் செய்யக்கேட்டும், இன்னமும் நீ நித்திரை செய்யலாமா? உன் காது வலிய காதா? எழுந்திரு! அருணாசலேஸ்வரரைத் தரிசிக்கலாமென்று சொல்லி, எல்லவரும் ஸ்நாநாதி நியமங்களை முடித் துக்கொண்டு வருமன்பினைக்கண்டு, உள்ளத்திலாநந்தம் ஜெனிக்க, அவர்கள் பேசிக் கொண்டதுபோல், "திரு வெம்பாவை"ப் பாசுரங்கள் ஓதினார். ஆதலால், மார் கழிமீ சிவாலயங்களில் மாணிக்கவாசக சுவாமிகள் உற்சவம் நடப்பதும், திருவெம்பாவை யோதுவதுமா கப் பெரியோர்களால் ஏற்படுத்தப் பெற்று வழங்கி வருகின்றன.

---

# சிவராத்திரி.

**மா**துளம் முதலிய எட்டு ஆகமங்களிலும், காலோத்தரம் கால நிர்ணயம் என்னும் உபாகமங்களிலும், பௌஷியோத்தரம், காந்தம், வாயு என்னும் புராணங்களிலும் விதித்திருக்கின்றது.

பிர்ம்மதேவனும் விஷ்ணு மூர்த்தியும் தங்களுக்குத் தாங்கள் வாது செய்து, எம்பெருமானைத் தேடினபோது, பரமசிவம்

திருவுளமிரங்கி, மாசிமாதம் கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தசி சோமவாரம் திருவோண நக்ஷத்திரமுங் கூடிய புண்ணியதினம் ராத்திரி பதினுலு நாழிகையில், அக்கினிஸ்தாணுவி னின்றும் மஹேஸ்வர மூர்த்தமாக அடியுமுடியும் காட்டாமல், பிரமவிஷ்ணுக்களுக்குத் தரிசனம் தந்தார். பிரமதேவர் பரமசிவத்தின் திருமுடியைத் தரிசித்ததாகப் பொய் சொன்னாராதலால், அவருக்கு ஆலயமில்லாமற் போகக்கடவதென்றும், விஷ்ணுமூர்த்தி திருவடியைத் தரிசிக்கவில்லையென்று மெய் பேசியதால், அவருக்கு ரக்ஷகர்த்தத்துவமும் அநுக்கிரகமும் செய்தார். அத்தாணுதரிசனம் ஒரு முகூர்த்தகாலம் அப்படியேயிருக்கத்தேவாதிதேவர்கள் யாவரும் தரிசித்தார்கள்; ஆதலால் அக்காலம் லிங்கோற்பவகால மோந முகூர்த்தமென ஆகமங்களிற் கூறப்பட்டுள்ளது. அன்றியும், ராத்திரிகாலம் மஹேஸ்வர மூர்த்தம் உதித்தபடியால் சிவராத்திரி யெனவும் பெயர் பெற்று விளங்கிற்று.

பரமசிவம் அக்கினிஸ்தாணுவில் நின்று உற்பத்தியானதாலும், அந்த ஸ்தாணு லிங்க ஸ்வரூபமானதாலும், அவ்விலிங்கத்தில் மஹேஸ்வர மூர்த்தம் உற்பத்தியானதாலும், லிங்கோற்பவமென்று நாமதேயம் விளங்குகின்றது.

அன்றியும், பிரமதேவனுக்கு இறுதிக் காலமாகிய பிரளயத்தில் சீவராசிகள் முழுவதும் ஒழிந்துபோன இராத்திரி கால நான்கு சாமத்திலும், பார்வதி தேவியார் பரமசிவனைப் பூசித்து வந்தாராதலால், இதற்குச்சிவராத்திரியென்றும், இந்தக்காலத்தில் விரதமிருந்து பூசிப்பவர்கள் சாயுச்சிய பதவியை அடைவார்களென்றும் உபதேசகாண்டம் விரிவாய்க் கூறுகின்றது.

மாசிமீ அபரபக்ஷச் சதுர்த்தசி திதி சூரியோதய காலத்தில், நித்திய கர்மானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, சிவத்தியானம், சிவபுராண பாராயணத்துடன், அன்று பகல் முழுதும் உபவாசமிருந்து, இராத்திரி நான்கு சாமங்களிலும் நித்திரையில்லாமல் சிவபூஜை செய்யவேண்டும். சிவபூஜையில்லாதவர்கள் சிவாலயத்துக்குச் சென்று, பரமசிவத்துக்கு அபிஷேக முதலிய

வை செய்வித்துத் தரிசனம் பண்ணி, மறுநாள் உதயமானவுடன், நித்தியக்கடன் முடித்துச் சிவ தரிசனம் செய்து வந்து, பாரணஞ் செய்யவேண்டும். சிவராத்திரிதினம் ராத்திரி டதினைறு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்தம் லிங்கோற்பவ காலமாக விதிக்கப் பட்டிருப்பதால், அந்தக் காலத்தில் அவசியம் சிவ தரிசனம் செய்வது மஹா புண்யமாகும். இத்தினத்தில் பரார்த்தத்துக்கு மஹா லிங்க மூர்த்திக்கு மாத்திரம் பூஜை நடத்தவேண்டியதே தவிர, சூரியர் முதலிய பரிவாரதேவதைகளுக்கும் சோமாஸ்கந்த மூர்த்திக்கும் பூஜை நடத்தவேண்டிய அவசியமில்லை. பரார்த்தத்துக்கும் ஆத்மார்த்தத்துக்கும் மஹா கணபதிக்கு மாத்திரம் நான்கு காலமும் பூஜை செய்யலாம்.

இந்த மஹா சிவராத்திரி விரதம் கிரேதாயுகத்தில் விநாயக மூர்த்தியும், திரேதாயுகத்தில் ஷண்முக மூர்த்தியும், துவாபர யுகத்தில் பிர்ம்மதேவரும், கலியுகத்தில் விஷ்ணு மூர்த்தியும் அனுஷ்டித்ததாக ஆகமங்கள் கூறுகின்றன.

முற்றுப் பெற்றது.

ஸ்ரீ வேதகிரீஸ்வரர்.





ஸ்ரீ திரிபுரசுந்தரி.

சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள் இயற்றி யருளிய

# ஸ்துதி மஞ்சரி.

## இலக்குமி ஸ்துதி.

உலகம் புரக்கும் பெருமான்றன் உளத்தும் புயத்தும் அமர்ந்தருளி
உவகை யளிக்கும் பேரின்ப வுருவே யெல்லா முடையாளே,
திலகம்செறிவாள் நுதற்கரும்பேதேனே கனிந்தசெழுங்கனியே
தெவிட்டாதன்பருளத்துள்ளே தித்தித்தெழுமோர்தெள்ள
முதே,
மலகஞ்சுகத்தேற்கருளளித்தவாழ்வேயென்கண்மணியேயென்
வருத்தந்தவிர்க்கவருங்குருவாம்வடிவேஞானமணிவிளக்கே
கலகந் தரம்போற் கருணைபொழி தடங்கட் டிருவே கணமங்கைத்
தாயே சரணம் சரணமிது தருணங் கருணை தருவாயே.

## சரஸ்வதி ஸ்துதி.

தவளமலர்க் கமலமிசை வீற்றிருக்கும்
அம்மனையைச் சாந்தம் பூத்த,
குவளைமலர்க் கண்ணாளைப் பெண்ணாளும்
பெண்ணமுதைக் கோதி லாத,
பவள விதழ் பசுங்கொடியை நான்முகனார்
நாவோங்கும் பாவை தன்னைக்,
கவளமதக் கயக்கொம்பின் முலையாளைக்
கலைமாதைக் கருது வோமே.

## சிற்சத்தி ஸ்துதி.

சோதிக் கொடியே யாநந்தச் சொரூபக் கொடியே சோதியுருப்
பாதிக் கொடியே சோதியிடப் பாகக் கொடியே யெனையீன்ற
ஆதிக் கொடியே யுலகுகட்டி யாளும் கொடியே சன்மார்க்க
நீதிக் கொடியே சிவகாம நிமலக் கொடியே யருளுகவே.

## சிவசிதம்பர சங்கீர்த்தனம்.

நித்தியம் பராபர நிராதர நிர்க்குணஞ் சதாநிலய நிட்களஞ்
சத்தியங் கநாக மிகுந்ததோர் தற்பரஞ் சிவஞ்சம ரசத்துவம்
வித்தியஞ் சுசோதய நிகேதநம் விமலமென்று நால்வேத முந்
தொழும்
சித்தியங் குசிற்கன சிதம்பரம் சிவசிதம் பரம்சிவ சிதம்பரம்.

திருக்கழுக்குன்றம்

# ஸ்தல தேவார திருவாசகம்,

# ஸ்ரீ வேதகிரீஸ்வரர்

# ஸ்தோத்திரப் பதிகங்கள்.



மலைமருந்துப்பதிகம், மஹாலிங்கப்பதிகம்,

திருப்புகழ், முதலியவை.

ஆயுர்வேத வைத்தியர்,

பண்டிட் - S. R. நமசிவாய ராஜ யோகி

அவர்களால்

பார்வையிடப்பெற்றது.

# சைவசமயாசாரியஸ்வாமிகள்.




அப்பர்.




சுந்தரர்.




சம்பந்தர்.




மாணிக்கவாசகர்.

ஓம்.

ஸ்ரீ வேதாத்ரீசாயநம:

# திருக்கழுக்குன்றத்தல

# தேவார திருவாசகங்கள்.

---

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியது.

(பண் - நட்டபாடை.)

அருச்சனை.

திருச்சிற்றம்பலம்.

கொன்றுசெய்த கொடுமையாற்பல சொல்லவே
நின்றபாவ வினைக டாம்பல நீங்கவே
சென்று சென்று தொழுமின்றேவர் பிரானிடங்
கன்றினோடு பிடி சூழ் தண்கழுக் குன்றமே. (1)

இறங்கிச்சென்று தொழுமி னின்னிசை பாடவே
பிறங்குகொன்றைச்சடைய னெங்கள் பிரானிட
நிறங்கள் செய்தமணிக ணித்திலங்கொண்டிழி
கறங்குவெள்ளையருவித் தண்கழுக் குன்றமே. (2)

நீளநின்று தொழுமி னித்தலு நீதியா
லாளுநம்ம வினைக ளல்கி யழிந்திடத்
தோளுமெட்டு முடைய மாமணிச் சோதியான்
காளகண்ட னுறையுந் தண்கழுக் குன்றமே. (3)

வெளிறுதீரத் தொழுமின் வெண்பொடி யாடியை
முளிறிலங்கு மழுவாளன் முந்தியுறைவிடம்
பிளிறுதீரப் பெருங்கைப் பெய்ம்மதமூன்றுடைக்
களிறினோடு பிடிசூழ் தண்கழுக் குன்றமே. (4)

புலைகடீரத் தொழுமின் புன்சடைப் புண்ணிய
னிலைகொள் சூலப்படைய னெந்தை பிரானிட
முலைகளுண்டு தழுவிக் குட்டியொடு முசுக்
கலைகள்பாயும் புறவிற் றண்கழுக் குன்றமே. (5)

மடமுடைய வடியார் தம்மனத் தேயுற
விடமுடைய மிடறன் விண்ணவர் மேலவன்
படமுடையவ ரவன்றான் பயிலு மிடங்
கடமுடைய புறவிற் றண்கழுக் குன்றமே. (6)

ஊனமில்லா வடியார் தம்மனத் தேயுற
ஞானமூர்த்தி நட்டமாடி நவிலுமிடந்
தேனும்வண்டுமதுவுண் டின்னிசை பாடியே
கானமஞ்ஞை யுறையுந் தண்கழுக் குன்றமே. (7)

அந்தமில்லா வடியார் தம்மனத் தேயுற
வந்துநாளும் வணங்கி மாலோடு நான்முகன்
சிந்தைசெய்த மலர்க ணித்தலுஞ் சேரவே
சந்தநாறும் புறவிற் றண்கழுக் குன்றமே. (8)

பிழைகடீரத் தொழுமின் பின்சடைப் பிஞ்ஞகன்
குழைகொள் காதன் குழகன்றா னுறையும்மிட
மழைகள் சாலக்கலித்து நீடுயர் வேயவை
குழைகொண் முத்தஞ்சொரியுந் தண்கழுக் குன்றமே.

பல்லில்வெள்ளைத் தலையன்றான் பயிலும்மிடங்
கல்லில் வெள்ளையருவித் தண்கழுக்குன்றினை
மல்லின்மல்கு திரடோளூரன் வனப்பினாற்
சொல்லல்சொல்லித் தொழுவாரைத் தொழுமின்களே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்

### திருவாய்மலர்ந்தருளியது.

(பண் - குறிஞ்சி)

திருச்சிற்றம்பலம்.

தோடுடையானொருகாதிற்றூய குழைதாழ
வேடுடையான் றலைகலனாக விரந்துண்ணு
நாடுடையானள்ளிருளேம நடமாடுங்
காடுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (1)

கேணவல்லான்கேழல் வெண்கொம்பு குறளாமை
பூணவல்லான் புரிசடைமேலோர் புனல்கொன்றை
பேணவல்லான் பெண்மகடன்னை யொருபாகம்
காணவல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (2)

தேனகத்தார் வண்டதுவுண்ட திகழ்கொன்றை
தானகத்தார் தண்மதிசூடித் தலைமேலோர்
வானகத்தார் வையகத்தார்க டொழுதேத்துங்
கானகத்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (3)

துணையல்செய்தான் றூயவண்டியாழ் செய்சுடர்க்கொன்
பிணையல்செய்தான்பெண்ணினல்லாளையொருபாக[றை

பிணையல்செய்யாவிளங்கையின்மூன்று மெரியுண்ணக்
கணையல்செய்தான் காதல்செய்கோயில் கழுச்குன்றே()

பையுடைய பாம்பொடுநீறு பயில்கின்ற
மெய்யுடையான் வெண்பிறைசூடி விரிகொன்றை
மையுடைய மாமிடற்றண்ணன் மறிசேர்ந்த
கையுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (5)

வெள்ளமெல்லாம் விரிசடைமேலோர் விரிகொன்றை
கொள்ளவல்லான் குரைகழலேத்துஞ் சிறுத்தொண்ட
ருள்ளமெல்லாமுள்கி நின்றாங்கேயுடனாடுங்
கள்ளம்வல்லான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (6)

ஆதல்செய்தானரக்கர்தங் கோனையருவரையி
னோதல்செய்தானெடிவரையின்கண் விரலூன்றிப்
போதல்செய்தான் பெண்மகடன்னோ டொருபாகங்
காதல்செய்தான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (7)

இடந்தபெம்மானேனமதாயு மனமாயுந்
தொடர்ந்த பெம்மான்றாபதி சூடிவரையார்தம்
மடந்தை பெம்மான் வார்கழலோச்சிக் காலனைக்
கடந்த பெம்மான்காதல் செய்கோயில் கழுக்குன்றே. ()

[illegible]நின்றான் றிரிபுரங்கங்கை சடைமேலே
பாயநின்றான் பலர்புகழ்ந்தேத்த வுலகெல்லாஞ்
சாயநின்றான் வன்சமண்குண்டர் சாக்கியர்க்
காயநின்றான் காதல்செய்கோயில் கழுக்குன்றே. (9)

கண்ணுதலான் காதல்செய்கோயில் கழுக்குன்றை
நண்ணியசீர் ஞானசம்பந்தன் றமிழ்மாலை

பண்ணியல் பாற்பாடியபத்து மிவைவல்லார்
புண்ணியராய் விண்ணவரோடும் புகுவாரே. (10)

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாவுக்கரசு சுவாமிகள்

### திருவாய்மலர்ந்தருளியது.

(திருத்தாண்டகம்)

திருச்சிற்றம்பலம்.

மூவிலைவேற்கையானை மூர்த்திதன்னை முதுபிணக் காடுடையானை முதலானானை, ஆவினிலைந்துகந்தானை யமரர்கோனை யாலாலமுண்டுகந்த வையன்றன்னைப், பூவினின்மே னான்முகனுமாலும் போற்றப்புணர்வரிய பெருமானைப் புனிதன்றன்னைக், காவலனைக்கழுக்குன்றமமர்ந்தான்றன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக்கண்டேனானே. (1)

பல்லோடு தலைசடைமே லுடையான்றன்னைப் பாய்புலித்தோலுடையானைப் பகவன்றன்னைச், சொல்லோடு பொருளனைத்துமானான்றன்னைச் சுடருருவிலென்பறாக்கோலத்தானை, அல்லாத காலனை முன்னடர்த்தான்றன்னை யாலின்கீழிருந்தானை யமுதானானைக், கல்லாடைபுனைந்தருளுங் காபாலியைக் கற்பகத்தைக் கண்ணாரக்கண்டேனானே. (2)

திருச்சிற்றம்பலம்.

3, 4, 5, 6, 7, 8, 9, 10, இவைகள் வீடுற்றன.

## ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமிகள்

### திருவாய்மலர்ந்தருளியது.

திருச்சிற்றம்பலம்.

பிணக்கிலாத பெருந்துறைப்பெரு மானுன்னுமங்கள் பேசுவார்க், கிணக்கிலாததோரின்பமேவருந் துன்பமே துடைத்தெம்பிரா, னுணக்கிலாததோர் வித்துமேல் விளையாமலென்வினையொத்தபின், கணக்கிலாத் திருக் கோலநீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே. (1)

பிட்டுநேர்பட மண்சுமந்த பெருந்துறைப்பெரும் பித்தனே, சட்டநேர்பட வந்திலாத சழக்கனேனுனைச் சார்ந்திலேன், சிட்டனே சிவலோகனே சிறு நாயினுங் கடையாயவெங், கட்டனேனையுமாட்கொள்வான் வந்து காட்டினாய் கழுக்குன்றிலே. (2)

மலங்கினேன் கண்ணினீரை மாற்றி மலங்கெடுத்த பெருந்துறை, விலங்கினேன் வினைக்கேடனேனினி மேல் விளைவதறிந்திலே, னிலங்குகின்றநின் சேவடிகளிரண் டும் வைப்பிடமின்றியே, கலங்கினேன் கலங்காமலே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே. (3)

பூணொணாததொரன்புபூண்டு பொருந்தி நாடொறும் போற்றவு, நாணொணாததொர் நாணமெய்தி நடுக்கடலு ளழுந்தி நான், பேணொணாத பெருந்துறைப் பெருந் தோணி பற்றியுகைத்தலுங், காணொணாத் திருக்கோல நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே. (4)

கோலமேனி வராகமேகுண மாம்பெருந்துறைக் கொண்டலே, சீலமேது மறிந்திலாதவென் சிந்தைவை

த்த சிகாமணி, ஞாலமே கரியாகநானுனை நச்சிநச்சிட வந்திடுங், காலமே யுனையோதநீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே. (5)

பேதமில்லதொர் கற்பளித்த பெருந்துறைப் பெரு வெள்ளமே, யேதமே பலபேச நீயெனையேதிலார் முன மென்செய்தாய், சாதல்சாதல் பொல்லாமையற்றதனிச் சரண்சரணாமெனக், காதலாலுனையோத நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே. (6)

இயக்கிமாரறுபத்துநால்வரை யெண்குணஞ்செய்த வீசனே, மயக்கமாயதொர் மும்மலப்பழ வல்வினைக் குளழுந்தவுந், துயக்கறுத்தெனை யாண்டுகொண்டு நின் றாய்மலர்க்கழறந்தெனைக், கயக்கவைத்தடி யார்முனே வந்து காட்டினாய் கழுக்குன்றிலே. (7)

திருச்சிற்றம்பலம்.

---

திருவெண்காடர் என்னும்

## பட்டிணத்துசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளியது.

காடோ செடியோ கடற்புறமோ கனமேமிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமேமிகுந்த
வீடோ புறந்திண்ணையோ தமியேனுடல் வீழுமிடம்
நீடோய் கழுக்குன்றி லீசாவுயிர்த்துணை நின்பதமே.

---

## திருப்போரூர்

## சிதம்பரசுவாமிகள் அருளிச்செய்த

# ஸ்ரீ வேதகிரீஸ்வரர் பதிகங்கள்.

பதினான்கு சீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்.

மேருவிலா யதினாணை ரவாவொரு வெங்கணைமாலரி யாய் விரிதலை யுலகந் தேராவதி லூறுமிகுசகடிரு சுடராய், ஆரண நாலும்பரியாயம்புயனமைவுறு சாரதியா யதினீயுற்றிக லழியா முப்புரமட்டிடு மந்நாளிற், சீருறு மூவர்களழியா துன்னடிசேரா நின்றனரால் சிந்தையி லுன்றனை மறவாதவர்தமைத் தேறுவரெவரேகாண், வேரிநறுந்தொடை மாதொரு பங்குறை வெற்பேகற்பகமே வேதகிரிப் பவரோக வயித்திய வேணிமுடிக் கனியே. (1)

*ஆயுதிரந்தனி லேயும்பொழுது மைம்பேரிடராகு

---

* மாதா உதரத்தில் உற்பவிக்குங் காலையில் ஐம்பெருந்துயரென்றது "கருப்பாசயப்பை உறுத்தலினாலும், அதிற்சலம் பூரித்தலினாலும், உதராக்கினி சுடுதலினாலும், பிரசூதவாயு முரித்துத் தள்ளுதலினாலும், யோனித்துவார நெருக்கத்தினாலும், மலையிருத்திக் கொண்டது போலவும், கடலின் கண் வீழ்த்தி மிதித்தல் போலவும், இருப்புக் கடத்திலடைத்து நெருப்பாற் சுடுதல் போலவும், மலைமேனின்றுனைத் தலைகீழாகத் தள்ளுதல் போலவும், ஆலையிலிட்ட கரும்பு நெருக்குண்டல்போலவும், வருந்துன்பங்களை." இவை முதலியவற்றை; வைராக்கிய தீபத்தில் 11-வது பாசுரத்துரைதொட்டு, 13-வது பாசுரத்துரைகாறுமிச்செய்யுளின் பொருளையாண்டு நன்கு விளக்குமாதலின் றெற்றெனவுய்த் துணர்ந்துகொள்க. துயரெனினு மிடரெனினுமொக்கும்.

மகிலத்துறு சிறுகுழவிப் பருவத் தறியாமையினிடரா, மேயகுமாரத் திடர்காமத்தா லெழின்மனை சுதரெனவே யேயும்பொழுது மிடர்பிணியாலிட ரிலதாமிடிவந்தார், காயும்பசியாலிடர்பின்னரை திரைகாணுறுபோதுமிடர் காலனுதித்திடுபோதுறு மிடரைக்கடவுண்ணீயறிவாய், மேயவிடாக் கடன்மூழ்கு மெனைச்சுக வேலையினீ வைப்பாய் வேதகிரிப்பவ ரோகவயித்திய வேணி முடிக் கனியே. (2)

களபப்படிரப்புளகக் கொங்கைக்கன்னியர் போகத் தைக் கருதிக் கருதிச் சுடர்விட்டிலினிற் கடையேன் மடியாம, விளகுமனத்தோடுனையே நாடியிருந்திங்கென் செயல்போ யெல்லாநின் செயலாக நினைந்தென்னிரு ளறு நாளென்றோ, முளரிநிகர்த்திடு கண்ணற்கரசே முண்டகனுக்கரசே முத்திக்கரசே பத்திக்கரசே மூதறி ஞர்க்கரசே, விளரியடித்தளி பாடிமுரன்றெழுவெறியார் பொழில்சூழும் வேதகிரிப்பவரோக வயித்திய வேணி முடிக்கனியே. (3)

அளியுயிர்மேனு நின்மேலன்பு மாகந்தனையெமனு யறியுமுவர்ப்பு நின்றிருஞானமு மடியேனுக்கருளிப், புளிதருபழமும் ஓடும்போலப்புரைதீர் நெஞ்சினர் பாற் போதவிருத்தித் தீதகல்வித்துன் பொன்னடி யென்றருள்வா, யொளிதருமிமயாசல முன்னுதவிய வொருமையில் கனிகூர வுற்றிடுகோரே கற்றவர்சீரே யோதுமறைப்பேறே வெளியினில்வெளியே யொளியி னிலொளியே மிகுசுகசாகரமே வேதகிரிப்பவரோக வயித்தியவேணி முடிக்கனியே. (4)

மறையாகம முதலெவையுந் தருமமாதிய வோதியிடு மற்றவைதம்முள் ளறமும் பொருளும் வருகருவிக ளாகு, நெறியாகும்பினிரண்டுஞ் சுகமவை நிகழ் விடையாநந்த நீடுறு சொரூபாநந்தம் மெனவே நின் றிடு மவைதம்முட், பொறியானுகர் விடையாநந்தத் துயர் போதாநந்தமதே புகலருமழியா நிரதிசயம் மிது பொருளெனவரு டந்தோய், வெறியார் பாத சரோருக மென்றலை மீதுறவருள் புரிவாய் வேதகிரிப்பவரோக வயித்தியவேணி முடிக்கனியே. (5)

ஆகாராதியினன லும் மிளிரும்மங்கியினுருகூறு மவை யுட்பயமொன்றகலச் சொலுமவையாமின்பென வெண் ணி, யேகாதுற பயமொன்றுந்துன் பென்றெணியிச் சுக துன்பத்திடையேபடிவே னுனையே நினையேனென்றுன் னருள்பெறுவேன், மோகாதிகளுறு பிறவிக்கடலின் மூழ்காதுன்னருளா மூரிக்கப்பலிடத்தே வைத்தெனை முத்திக்கரையுய்க்கு, மீகாமனைநேராகிய வொருவா மிகுபூரண சொரூபா வேதகிரிப்பவரோக வயித்திய வேணி முடிக்கனியே. (6)

தேகம்பூதச் சடமாமதிலே திகழ்கரணம்பொறியாற் சிறுவிடயத்து றுண்டே சுழலுந்தீயு ழிச்சிந்திடுமால், போகம்புவநம் புறமாமதிலே பொலிவுறுநீயாரே, புந்தி யிலாதிவை யானெனதென்று புலம்பித் திரிகின்ற யேகமதாய் மிகு சுகமாயெங்கு மிருந்திடு பூரணமா யிலகு முனைத்தொடர் பிறவியிலுற்றிட ரெய்தாயென் றருளி, || வேகமனப்பரி நிறுவிச் சொருபம் விளக்கிடு

|| இதனை "மனமெனும்வயமா" வென்னுமிட்டலிங்கக் குறிங்கழி நெடிற்றிருவிருத்தத்தானு முணர்க.

ஞூமாரியனே வேதகிரிப்பவரோகவயித்தியவேணி முடிக் கனியே. (7)

$ அகிலசராசரமெவைபு நடத்துவை யைந்தொழிலா லிவையுள்ளானசிருட்டி யளித்தலழித்தலு மாக மதிற்சாரும், புகலுமறப்புந் தெளிவுற்றலுமே பொலி வுயிரிடைசாரும்-போதமகற்று திரோதமெனக்குப்போ க்கிற்குறைபடுமோ, பகருமறிவானந்தச்சுடரே பரகதி நேருய்க்கும் பண்பார் துணையே யென்பாலமுதே பாகே மாகடலே, மிகுநெறிதவமார் தெய்வக்கங்கம் விளங்கி யிருந்துதொழும் வேதகிரிப்பவரோக வயித்தியவேணி முடிக்கனியே. (8)

தனதானியமிட மாடாடாதி தயங்கு பொருட்சார் புந்தருதாய் தந்தைகண்மின் ஞாதியர்சாரு முயிர்ச் சார்பு மினமார் சார்புக ளிவை மேலாசை யிகந்தாமை யிணைந்து மெழில் பெறவுட் கொண்டசையாதென்று மிருந்து சமாதியிலே மனமார் வாதனையறவேவென்று மதித்த சுழுத்தியனாய், மன்னிருளற்றனே யென்றணை கிற்பேன் மாதவ மாகடலே, மினலார்மேகந்தங்கிப்பொ ழில்வாய் வெண்டாளத்துளிகால் வேதகிரிப்பவ ரோக வயித்திய வேணிமுடிக்கனியே. (9)

---

ஞு "குருவேசிவமெனக் கூறினனந்தி" யெனக்கூறிய திரு மூலனாரும்; "எல்லாமுடையான் குருவாகி" யெனநுதலிய அவிரோதவுந்தியாரு மிக்கருத்தே பற்றியென்க: பிற வாசிரி யருமிவ்வாறே.

$ இச்செய்யுளின் பொருளை "அஞ்சுதொழிலாவதுவே" யென்னு மொழிவிலொடுக்கத்திருவிருத்தத்தானு மிவ்வாசிரிய ரால் செய்யப்பட்ட வதனுரையானுங்காண்க.

வீடென்றறைதரு சொற்குப் பொருளோ விடுதலே யாதலினால்— வீக்குண் டோனுங் கட்டும்முன்னர் விளங்குந்திடமாகப், பீடுறுகட்டுத்தானாய் விட்டும் பெயராதிது சடமாம் பிணிபட்டோன் சுதந்தரனா மிப்பிணி பெயரச்செய்வோ, னீடுசுதந்தர முளனாமொருவனேருமிவ்வேதுவினா-னிகழ்பதி பசுபாசம்மெனு முப்பொரு ணிச்சயமென்றருளி, வேடனை வெல்லுங் குருவாயெனையாண் மெய்ப்பொருணீயன்றோ வேத கிரிப் பவரோக வயித்தியவேணி முடிக்கனியே. (10)

---

## திரு இலிங்கப்பதிகம்.

(நேரிசை ஆசிரிய விருத்தம்.)

அண்டாரகரவென ரிஷிகள் சிவசிவவென, அரவ முடல் நெறநெறெனவும், அணிகங்கை சலசலென நெற்றிவிழி நிகநிகென அவனிகிடுகிடெனவெண், அண்டமதிதளதளென வரியுரிச்சடசடென சொரூப வொளி பளபளெனவுந், துவளுமுயலகன் முதுகு மொளமொளென தாளிற்றொடுத்த கிண்கிணிகணீலெனத், தெண்டநிடுமடியவர் சிலம்பு கலகலவெனத் தேவ துந்துமி முழங்கத், திகழ்நந்தி மத்தள மடமடவென மகிழ்வினொடு தேவர் பூமழைகள் பொழியக், குண்டலந் தகதகென வரிப்ரம்மரிஷி முனிவர் கொண்டாட நடனமாடுங், கொங்கைமதமங்கை யொருபங்கிலுறை யுங் கழுக்குன்றின் மகாலிங்கமே. (1)

அமரர் பணிலிங்கம் திரிகோணலிங்கம் மந்த்ரமற்புத

மிருந்தலிங்கம், ஆனந்தலிங்கந் திரிநேத்ரலிங்கஞ் சூக்ஷமம் ஐந்தெழுத்தானலிங்கம், விமலவேதம் ஓதுலிங்கம் மகம்மேருவை வில்லாய்வளைத்த லிங்கம், விண்ணுக்கு மண்ணுக்கும் ஒன்றான லிங்கமொரு வித்தாய்முளைத்த லிங்கம், கமலவிதி தேடியும் காணாதலிங்கம் நங்கை லாசவாசலிங்கம், கண்கண்ட லிங்கமிது வேதாசலத்தி லுறை கருணாகடாக்ஷலிங்கம், குமாரகுரு முருகனையளித்தலிங்கஞ் செய்தகுறை தீர்க்கவந்த லிங்கம், கொங்கை மதமங்கையோரு பங்கிலுறையுங் கழுக்குன்றின் மஹாலிங்கமே. (2)

சாற்றரிய முப்புரமெரித்த லிங்கங் கொடிய சத்துரு சம்மார லிங்கம், சங்கம சொரூபமாய்வந்த லிங்கந் தனதன் பூஜைகொண்ட லிங்கம், பார்த்தனிட வில்லினலடி பட்ட லிங்கம் பரமகுருவான லிங்கம், பஞ்சாக்ஷரத்தினுக்குரிய லிங்கம் மூவர்பாட்டுக்கிதங்கு லிங்கம், போற்றுமடியவர்பங்கில் நின்றலிங்கந் தவளபூதியணி படிகலிங்கம், பொன்னினம்பலத்தில் நடனமிடுலிங்கம் பூதகணநாதலிங்கம், கூற்றனையுதைத்த மார்க்கண்ட லிங்கஞ்செய்த குறைதீர்க்கவந்தலிங்கம், கொங்கைமதமங்கையொரு பங்கிலுறையுங் கழுக்குன்றின் மஹாலிங்கமே. (3)

நிறையுருவமான பூமீகலிங்கம், அடியார் நினைவில் வருமப்புலிங்கம், நெடியமால் விதிதேடுதேய்வு லிங்கஞ் சகஜநிஷ்டைதரு வாய்வுலிங்கம், மறைமொழியுறைந்தவாகாயலிங்கஞ் சடையில்மதி நதியணிந்த லிங்கம், வருதக்ஷிணாமூர்த்தியான லிங்கம் யுத்தவைரவாகார

லிங்கங், தரையில் மதியைத தேய்த்த வுக்கிரலிங்கங் கருணைதரு வீரபத்திரலிங்கஞ், சாலோகசாமீப சாரூப சாயுச்சிய சச்சிதானந்த லிங்கங், குறையகல வந்திடுந் தர்மலிங்கஞ் செய்தகுறை தீர்க்கவந்த லிங்கங், கொங் கை மதமங்கையொரு பங்கிலுறையுங் கழுக்குன்றின் மஹாலிங்கமே. (4)

திட்டமுடன் பொன்னுலகை யாளவரு தக்ஷகன் சிரசினையறிந்த லிங்கஞ், செயலறியவேயன்று தாருகாவன ரிஷிகள்செய்தவமழித்த லிங்கம், அஷ்டதிக்கென்ன வரு கண்ணப்பரெச்சிலை யன்புடனருந்து லிங்கம், ஐந்து முகமான லிங்கம் மோக்ஷலிங்கமிது அருவுருவமானலிங் கம், இட்டமுடன் பூசைபுரியாக்ஷிலிங்கம் எனதுயிரு தயத்திருந்த லிங்கம் ஏகாந்தலிங்கம் பரப்ரம்மலிங்க மொரு இரவுபகலான லிங்கம், குஷ்டவினை வறுமை யைத் தொலைத்தலிங்கங் கொடியகோபத்தை மாற்று லிங்கம், கொங்கைமத மங்கையொரு பங்கிலுறையுங் கழுக்குன்றின் மஹாலிங்கமே. (5)

மயிலில்வரு ஷண்முகரை யேவியே சூரனிட வஞ்சிர மறுத்தலிங்கம், மந்துதிரிதூண்டிய எலிக்குத்திரிலோ கத்தை மனமகிழ வியைந்த லிங்கம், கயிலைமலை பதிநா ன்கு லோகத்தை யாண்டிடும் கர்த்தவ்வியமானலிங்கம், கனகமகமேருகிரி வலமாகவந்திடுங் கதிர்மதிகண்ணுனை லிங்கம், துயிலுமுயர்தவமுடைய ஞானவிழி காணவரு சொற்பன மகாலிங்கமுன், சுரகுருச் சக்கிரவர்த்திக்கு வெண்குட்டங் தொலைத்திட்ட ஜோதிலிங்கம், குயிலிசை முழக்கமென சங்கீத ரம்பையர்கள் கோடி சதகோடி

சூழும், கொங்கை மதமங்கையொரு பங்கிலுறையுங் கழுக்குன்றின் மஹாலிங்கமே. (6)

செண்டு முலைபுமைதழுவ கொங்கைத்தழும்பு பெறு தெய்வமே கம்பலிங்கஞ், சித்தாந்தலிங்க முபதேசலிங்கஞ் சுத்ததீர்த்தப் பிரசாதலிங்கம், பண்டுகண்டயன் முடிபறித்தலிங்கந் தேவிபார்வதிப் பிராணலிங்கம், பாரில்வருஜண்டமாருதலிங்கம் ஏகம்பரந்திடு முகாந்தலிங்கம், பெண்டுகொண்டிடு நதிப்பரமலிங்க மொழியொணுப்பிரளயப்பிரம்மலிங்கம், பேருலகிலே சர்வசம்மாரலிங்கம் பிறப்பொழித்தே தடுத்தாட்கொண்டு சிவமயமாக்கும் வேதகிரிலிங்கம்கொடும்பிணியகற்றுலிங்கம், கொங்கை மதமங்கையொரு பங்கிலுறையுங் கழுக்குன்றின் மஹாலிங்கமே. (7)

செப்புதற்கரிய ஸ்ரீங்காரலிங்கம் பவளத்திரேகநிறமான லிங்கம், திருவைநகர் பரவைக்காய்ச் சுந்தரர்க்குத் திருத்தூதுசென்ற லிங்கம், நற்புவியிலப்பரையுட்கொண்ட மெய்ஞ்ஞானப் பிரகாசலிங்கம், நரிதனைப் பரியாய் நடத்துலிங்கம் மறைகள் நாவில் வருநாதலிங்கம், அற்புதப்பிட்டுக்கு மண்சுமந்தே பிரம்பாலடிபட்டலிங்கம் ஆதிசேஷன்வந்து பூசித்தலிங்கம் நல்லடியவர்க்கெளியலிங்கம், கொப்பு நவமணி தங்கவோலை மூக்குத்தியுங் கொண்டைச் சொருக்குமழகாங், கொங்கைமத மங்கையொரு பங்கிலுறையுங் கழுக்குன்றின் மஹாலிங்கமே. (8)

அடியவர்களறுபத்துமூவர்க்குமே பேறளித்தலிங்கம் அனுதினம் அன்னமிடும் நற்சிறுத்தொண்டர் பிள்ளைக்

கறிக்கன்பா யிருந்தலிங்கம், வடிவழகர் மாசிலாமணி லிங்கமுயரும் மலைச்சக்ரவாளலிங்கம் வல்லாளன் மனைவியைத் தழுவவந்தவள் தழுவ மைந்தனாய் வந்தலிங்கம் நெடிய திருமால் கண்டறிந்த லிங்கம் புவனநித்தியகல்யாணலிங்கம் நேசரிட நெஞ்சினிலமர்ந்தலிங்கம் பிணியைநீக்கவல ஜோதிலிங்கம், கொடிய வறுமைகளகல அஷ்டலக்ஷ்மிநின்று கூத்தாடவுதவுலிங்கம், கொங்கை மதமங்கை யொருபங்கிலுறையுங் கழுக்குன்றின் மஹாலிங்கமே. (9)

நாடிமுன்னிந்திரனை ரட்சிக்கவேயன்று நல்வரமளித்த லிங்கம் நந்தி தவமேசெய்ய முந்திவந்தவர்தமை ரட்சித்த ஞானலிங்கம், தேடிவந்தனுதினம் பிரமனும் போற்றவே தெரிசனந்தந்தலிங்கம், திருமார்பனும் பூஜை செய்யவே சங்காழி செங்கையி லீந்தலிங்கம், பாடிய திலோர்த்தமையி னடு பிணி சாபம் பறித்தேத்தி நின்ற லிங்கம் பண்டு நால்வேதந் தவம்புரிய சாயுச்சிய பதவியை யளித்தலிங்கம், கோடி ருத்திராகாரர் குடிகெட்சணங் கயிலைகுடிகொண் டமர்ந்தலிங்கம், கொங்கைமதமங்கையொரு பங்கிலுறையுங் கழுக்குன்றின் மஹாலிங்கமே. (10)

நித்தமுஞ்சம்பாதி தேவர்வலமாய் வந்துநின்று தொழுசாக்ஷிலிங்கம் நேசமா யஷ்டவசு வந்து பூஜிக்க நின்ற மனசாட்சிலிங்கம், கற்றதமிழ்சுந்தரர் பாடிவரவேயன்று காணுதொளித்தலிங்கம், கண்டபின் செங்கல்லைப் பொன்னாக்கியெறிகின்ற கடவுள் பொன்னிட்டலிங்கம், முற்றத்திலேவந்து தாதி தமிழைக்கேட்டு மோட்சங்கொடுத்த லிங்கம் முப்புரமெரித்திட்ட சிறிய

நகைபுரிகின்ற மூர்த்தியாம், வேதலிங்கம், கொங்கைமத மங்கையொரு பங்கிலுறையுங் கழுக்குன்றின் மஹா லிங்கமே. (11)

திருச்சிற்றம்பலம்.

---

# மலைமருந்து பதிகம்

☞ மலைமருந்தென்பது தேவகிரிக்கு வடபுறம் சந்நிதிக்குக் கீழ்ப்புறமுள்ள பிருதுவி. இதை எடுத்து ஜலத்திற் குழைத்து மேற்பூசிடின் பித்தபாண்டு, ஆறுதரிணங்கள், வீக்கம், தலைவலி, தேகஎரிச்சல், கைகால் வலிகள், பிடிப்பு முதலிய பலரோகங்களும், உள்ளுக்குச் சாப்பிடின் வயிற்றுவலி, குன்ம வகைகள், பலவித சூலை, குஷ்ட முதலாகிய பலரோகங்களும் ஆச்சரியமாய் நீங்குமென்பது அநுபவம். இப்பிருதிவியுள்ள பாரிசத்தின் மலையின்கண் சஞ்சீவி யிருப்பதாகப் பிரமாணம்.

☞ மலைமருந்து எடுக்கவேண்டிய இடங்கள் :— அடிவாரம் சணநாதர் கோயிலுக்கெதிரில், கோடி விநாயகர் கோயில் நான்கு கோபுர தரிசனமாகும் இடத்தில், சொக்கம்மன் கோயிலுக்கு அடிப்புறத்தில், ஆக மூன்று இடங்கள்.

## மலைமருந்துப் பதிகம்

### கலிவிருத்தம்.

செய்யகம லத்திருவாழ் வளிக்குந் தியங்குமனத்
தையமகற்றுமறிவே கொடுக்கு மடந்தை பிணி

நையநறுக்குநமனையுருக்கு நனிகடல்சூழ்
வையந்துதித்திடும் வேதகிரீசர் மலைமருந்தே. (1)

சூனியம்போக்கும்பகைநீக்கும் வெய்யசுரந்தவிர்க்கும்
ஞானமுண்டாக்குமதன்போற் றிகழ்வுநயந்துதவும்
யீனந்தவிர்க்கும் பிசாசுகள்பூதத்திடரகற்றும்
வானவர் போற்றிடும் வேதகிரீசர் மலைமருந்தே. (2)

சீர்கண்டமாலைத் தலைவலி பல்வலி சீதசுரம்
மூர்க்கஞ் செயும் விஷம்பீனிசங் காசமுதற்பலநோய்
தீர்க்குஞ்சமன்வலிநீக்கி மண்மேல்வஜ்ரதிரேகந்தந்தே
மார்க்கண்டன் போல் வைக்கும் வேதகிரீசர் மலை
மருந்தே. (3)

நிரந்தரஞ்செல்வந்தரு மொருக்காலு நிலைதளரா
புரந்தரன்மாலயன் விண்ணோரியற்றியபூசனைக்கு
உரந்தருங் கல்விதருஞ் சிவஞானத்துண்மைதரும்
வரந்தந்தருள்செயும் வேதகிரீசர் மலைமருந்தே. (4)

கருத்தைந்தெழுத்துன்னிக் காலசையாமல் கண்மூக்கு
[நுனி
பொருத்திக்கருப்பைமடமாதர்கோள்மறைபூதரத்தை
யுருத்தியுடன் வலம்வந்தோர்க்கிரங்கியரும்பிறவி
வருத்தம் தணித்திடும் வேதகிரீசர்மலைமருந்தே (5)

ஆதரத்தோடு மெழுத்தைந்து மோதியரிய நந்தி
சீதப்புனத்தடத்துள்மூழ்கி நித்தஞ்செயல்முடித்தே
ஓதியெழுத்தைந்தையு மடியாருடனே யுரைப்ப
வாதையகற்றிடும் வேதகிரீசர் மலைமருந்தே (6)

விடந்தீர்க்குஞ்சோர மிருகால்திருடன் விறல்கெடுக்கும்
கொடுஞ்சூலைவாத குன்மங்கள் நீக்கும் கொலையகற்றும்

மடஞ்சேர்மின்னார்கள் வசியமுண்டாக்கும்வரமளிக்குந்
தடஞ்சேர்புயத்தண்ணல் வேதகிரீசர் மலைமருந்தே. (7)

பஞ்சமா பாதகந்தீர்க்கு மெஞ்ஞான்றும் பரிவுடனே
தஞ்சமென்றே நம்பி யுண்போர்க்கமுத சஞ்சீவியதாம்
வெஞ்சினத்தோர்செயுங் குத்திரஞ்சாய்க்கும் விறல்
கொடுக்கும்
வஞ்சமகற்றிடும் வேதகிரீசர் மலைமருந்தே. (8)

கொல்வினைகுட்டங் கொலைநோயும் குன்மம் கொலை
கொடிய
பல்வினைத்தீயவிடப் பாண்டுநோய் பஞ்சபாதகமும்
தொல்வினையென்றுந் தொலையாவினையுந் தொலைத்தடி
யேன்
வல்வினை தீர்த்திடும் வேதகிரீசர் மலைமருந்தே. (9)

மூலவியாதி பொல்லாப் பாண்டுரோகமுமூர்ச்சைவலி
சாலவுபாதி க்ஷயரோகமியாவையும் தானடக்கும்
பாலசவுந்தரி யோர்பாகன் மூவர்சொல் பாடல்
கொள்ளும்
மாலயன்றேடிடும் வேதகிரீசர் மலைமருந்தே. (10)

நந்தித்தடஞ் சங்குதீர்த்தம் சம்பாதிமெய்ஞ்ஞான நதி
வந்திக்கில்வாழ்வருள் வன சொக்க வாரறைநீள்
அந்திப்பிறையணி வேதகிரீசரண்டம்மலைமண்
சிந்திக்கில் நம் வினைநீங்கி மெய்ஞ்ஞானமும் சேர்ந்
திடுமே. (11)

பள்ளிகொள்மாயனும் வேதனும் தேடும் பரிமலத்தில்
தெள்ளியபூங்குழல் பெண்ணினல்லாளொடுசேர்
[தமரும்

வள்ளற்பெருந்தகை வேதகிரீசர் மலைமருந்தை
அள்ளியுண்டால் நமன் தெண்டனிட்டோடி யலறு
வனே. (12)

## ஸ்ரீ வேதகிரீஸ்வரர் மீது

# *மஹாலிங்கப் பதிகம்.

வரகவி-தி. கன்னியப்ப முதலியார் அவர்கள் திருத்தியது.

உருவலங்காரகிரி பூஞ்சோலை கதலிவன உச்சித மநேக விதமும், உதய மாயிரங்கோடி பானுப் பிரகாசமும் உமையவள் திரு நடனமும், தெருவது அலங்கார சித்ர வொளி மண்டபம் சிகரகோபுரவாசலும், திகழ் மதிற் பிரகாரமும் சிவாலய விநோதமும் திருக்குளம் சங்கதீர்த்தம், கருவலங்காரமாம் திருத்தேரலங்கார காவிக ளலங்காரமும், காண்பருங் கதிபெரிய அரிநந்தி பீடமும் கனகசபை கொலு மேடையும், திருவழ கலங்கார பெண்ணினல்லாளுடன் திருக்கழுக்குன்றின் மேவும், திருமலைச் சொக்கம்மன் வேதகிரி நாதனும் சிவசிவ மஹாலிங்கமே. (1)

கங்காளிருத்திரி பிரசன்ன மஹேஸ்வரி கைலாசவாச தேவி, கனகரத்தினமணி கிரீட மூக்குத்தியும் காதோலை மாங்கல்யமும், வங்கார தாவடம் சிங்கார கொப்புகள் வர்ணபொன் னாபரணமும் வளையல்முன் கடகமும் அமிர்தகிரி வண்ணமும் வச்சிராயுதங்கள் சேர்த்த, சங்கார திரிசூலமாகமு மான்மழு சங்காழிதானு முடனே

* பக்திமேலீட்டினால் தன்னை மறந்து பாடிய பாசுரங்களில் வழூஉக்கள் கவனியாமை நன்று.

சரசமுக வலங்காரி ஆடைபெரு கொடியிடைத்தாளிற் சிலம்பு கொஞ்சும், சிங்கார கொலு மேடை பெண்ணி னல்லாளுடன் திருக்கழுக்குன்றின் மேவும், திரு மலைச்சொக்கம்மன் வேதகிரி நாதனும் சிவசிவ மஹா லிங்கமே. (2)

பேர்பெருகு குருமூல வண்டுவனப் பிள்ளையார் பெருச்சாளி யாதிவாகன், பிரீதிமயில் வாகனன் சுப்பிர மணியக்கடவுள் பிரதோஷ விடங்கேஸ்வரர் தார் பெருகு சந்த்ரசேகரமூர்த்தி சதுர்ப்புஜமதான அம்மன், தானுடன் மஹேஸ்வரத் தாண்டவ னுடனன்றி தக்ஷிணு மூர்த்தி வடுகன், பார்பெருகு திக்கெட்டு பலிபீட பாதங்கள் பரம திருகொடிக்கம்பமும், பதிவாசலிரு புறம் துவார பாலகரொடு பதினொரு கோடிருத்திரர், சீர்பெருகு சேனைதளம் பெண்ணினல்லாளுடன் திருக் கழுக்குன்றின் மேவும், திருமலைச் சொக்கம்மன் வேத கிரி நாதனும் சிவசிவ மஹாலிங்கமே. (3)

அண்டரொரு முப்பத்து முக்கோடி தேவரு மாச் சந்த்ர கால முழுதும், அதிகரிஷி நாற்பத்தெண்ணா யிரம் முநிவர் அறுபத்து மூவர்முதலாய், புண்டரிக வேதனும் வண்டுளப மாயனும் பொதிகை மலைவாழ் முநிவனும், புத்திபெரு சித்தரும் சப்தரிஷியாவரும் பொன்பூர்ண சந்திராதித்தரும், மண்டலத் தவம் பெரிய அப்பர் சுந்தரர் மணிவாசகச் சம்பந்தரும், மகிமைபெறு மன்னரு மனுக்களும் வாழ்கவே மாமு கில் கருணை போன்று, தெண்டிரை யெலாமோங்கு பெண்ணினல்லாளுடன் திருக்கழுக்குன்றின் மேவும்,

திருமலைச்சொக்கம்மன் வேதகிரி நாதனும் சிவசிவ மஹாலிங்கமே. (4)

சங்கர மஹேஸ்வரா எங்குநீ தயாபரா சதாசிவ சிரோன்மணியனே, சர்வகிருபாகரா அமூர்த்தகுண தேசிகா சகலதேவாதி தேவா, கங்கை யணி பங்கனே திங்களணி துங்கனே கௌரி பார்வதி நேயனே, கிழவனே அழகனே மழுமானு தலைவனே கீர்த்திப் பிரதாபரூபா, பொங்கர வணங்கனே தங்கமுக மெந்தமே பூதப்பிரேதநாதா, பூலோக புவர்லோக மீரேழுலோகமும் பூர்ண கடாக்ஷரூபா, சிங்கவாகன நந்தி பெண்ணினல்லாளுடன் திருக்கழுக்குன்றின் மேவும், திருமலைச் சொக்கம்மன் வேதகிரிநாதனும் சிவசிவ மஹாலிங்கமே. (5)

அரகர மஹாதேவ கரியுரி சதாசிவ அரியவர்க்கரிய மூர்த்தி, அத்தனே நித்தனே சித்திதரு கர்த்தனே அபிஷேக திரிகாலனே, வரமருளு குருகிருபை திருவெண்ணீறெங்குமே மதியிரவி தனையணிவனே, மந்த்ர மஹோத்மனே தந்த்ர விநோதனே மஹேஸ்வரா விஸ்வநாதா, தந்திரச் சமுசார சொர்க்க வைகுந்தமும் தந்தருளு தரும நிதியே, தவம்பெரிய மஹிமைதலம் உலகெலாம் போற்றவரு சாயுச்சிய கழுகாசலம், திரிபுர சௌந்தரம் பெண்ணினல்லாளுடன் திருக்கழுக்குன்றின் மேவும், திருமலைச் சொக்கம்மன் வேதகிரி நாதனும் சிவ சிவ மஹாலிங்கமே. (6)

சூத்திரப் பிசாசுகள் பிர்ம்மராக்ஷசமுநி துடிபரவு வேதாளமும், துஷ்டகாட்டேறியும் வட்டமிட் டாடி

டும் சொற்கடங்காத முநிகள், சாத்திரம் கற்ற பேய் வார்த்தைவெகு சித்திரமாம் ஜடா முநி மஹா முநி களும், தர்க்கமிகு உக்ரமுநி திக்கினில் மிரட்டுமுநி சண்டமுநி வண்டமுநிகள், காத்திருந்தாடு முநி கழுக் குன்றமென்றே கரத்தினீ றெடுக்கு முன்னே, காத மிருகாத முக்காத நாற்காதமே கதறியே அலறி யோடத், தீர்க்கத் துவசங்கட்டு பெண்ணினல்லாளு டன் திருக்கழுக்குன்றின் மேவும், திருமலைச் சொக்கம் மன் வேதகிரி நாதனும் சிவ சிவ மஹாலிங்கமே. (7)

அகமுருகு மந்திரம் முகம் பெரிய பில்லிகள் அடங் காத பார்வை ஏவல், அடித்திடும் சூனியம் பிடித்து வரு மொட்டியம் அஞ்சாத சல்ய பில்லி, பகவதி காத் திடும் பூதபிலி மாரணம் பூவைப்பு தப்புயாவும், வங் காள வித்தைகள் உச்சாடணங்கெட்டி மலையாள வேலை முதலாய், புகமகிழும் வெகு வித்தை கோடானு கோடிவித முளருடன் வந்தபோது, உலகுதனில் கழுக்குன்ற மென்றவர் நினைக்கவே ஓட்டமாய் அலறி யோடும், ஜெகமதனிலிது கீர்த்தி பெண்ணினல்லா ளுடன் திருக்கழுக்குன்றின் மேவும், திருமலைச் சொக் கம்மன் வேதகிரி நாதனும் சிவ சிவ மஹாலிங்கமே. (8)

பெருஞ்சீத பேதியும் ஊதுகாமாலையும் பெருவயிறு விஷப்பாண்டுவும், பேர் பெரிய குஷ்டங்கள் சடந் திமிருவாதங்கள் பிடித்திடும் வயிற்று நோய்கள், வருஞ் சீத மித்யாதி பெருங்குளிரு காய்ச்சலும் வளர்பித்த காச ரோகம், வாந்திஜல கிராந்தியும் இடுப்பு நோயி ரைப்புகள் வலிகுன்ம ஊஷ்ண வாதம், ஊரஞ் செவிடு

குருடுமை முடமொண்டி குலபாபம் உலகுதனில் வந்தபோது, உறுதிகிரி வலம்வந்து மலை மருந்துண்டிட உடல்வினைகள் தீர்ந்து வச்சிர செஞ்சீவி யாக்கிடும் பெண்ணினல்லாளுடன் திருக்கழுக்குன்றின் மேவும், திருமலைச்சொக்கம்மன் வேதகிரி நாதனும் சிவ சிவ மஹாலிங்கமே. (9)

எல்லை கைலாயகிரி காசி ராமேஸ்வரம் அவனுசி திருவனுசி, அதிமதுரை காஞ்சியும் திருவானைக்காவல் திரு அருணகிரி காளத்தியும், வல்லை திருவாரூர் பேரூர் கனகசபை வாதூர் விருத்தாசலம், வயலூர் திருக்கடைக் கருவூர் கொடுமுடி யிவ்வவனியுறு அரவகிரியும், எல்லையூர் நஞ்சுண்ட கூடல் வேளூர்களும் இப்படி யநேக தலமும், எண்ணுமாயிரத்தெட்டு சிவாலய மெங்கெங்கும் ஏழை பங்காளனுகி, செல்லுலகில் வரமருளும் பெண்ணினல்லாளுடன் திருக்கழுக்குன்றின் மேவும், திருமலைச்சொக்கம்மன் வேதகிரிநாதனும் சிவ சிவ மஹாலிங்கமே. (10)

தவமிகு தபோதனர்கள் யுகந்தனி லநேகவித சகல கலையறியும் பெரியோர், தந்திரவெகு மந்திரங் கோடானு கோடிவித சாஸ்திர வெகு சம்பந்தமும், அவரவர்க ளனுவளவு திருவுளங் குருகிருபை சதுரகஸ்யாந்தரங்கம், நதிமூல குருமூல திருமூல கதிமூல நடன திருவிளை யாட்டு காண், எவரெவர் சொரூபமது அவரவர்க ளிருதயம் மிலைவர் கடாக்ஷ முழுதும், இரவுபக லனுதினம் அமிர்தகுண தேசிகா எங்குமுன் தங்கமுகமே, சிவசிவ மஹேஸ்வரா பெண்ணினல்லாளு

டன் திருக்கழுக்குன்றின் மேவும் திருமலைச்சொக்கம் மன் வேதகிரி நாதனும் சிவசிவ மஹாலிங்கமே. (11)

மத்தளம் தவண்டையும் பேரிகை நகபத்து மல்லாரி புள்ளாங்குழல், மணிவீணை தம்புரு அணியொத்து நாகசுர வாத்திய விநோத முறைகள், கைத்தாளம் ஜெயகண்டி பதினெட்டு மேளங்கள் கிடுகிடென வொலி முழங்க, கனகதிரு ரம்பையுரு சிங்காரமாகவே கல கலென நடனமிடவே, எத்தேச வேளையில் நித்யதிரி காலமும் இருபுறம் கவரிவீச, யஜுர் வேத மந்திரம் தூப வொளி தரிசனம் இடவல மார்த்தியேந்த, சஸ்த்ர வித்தாரமோடு பெண்ணினல்லாளுடன் திருக்கழுக் குன்றின் மேவும், திருமலைச் சொக்கம்மன் வேதகிரி நாதனும் சிவ சிவ மஹாலிங்கமே. (12)

மிக்கதிரு வெண்கனி பஞ்சகற் பசுக்கனி மேலாம் பலாக்கனிகளும், விளாம்பழ மாங்கனி கதலி மாதள நாரத்தை வெட்டிவே ரிளநீர்களும், சருக்கரை கற் கண்டு திருமஞ்சனத்துடன் சஞ்சீவி பஞ்சாமிர்தமும், சந்தனம் குங்குமம் கஸ்தூரி புனுகு சாம்பராணி ஏல மஞ்சள், அக்னியிடு வெண்ணீறு பாலாறு தீர்த்தமும் அன்னமுது நெய் பாலு தேன், ஆகாசநீ ரதிமூறற்பூர கோராசனம் அபிஷேக ஆநந்தமும் தக்கபடி நடை பெறப் பெண்ணினல்லாளுடன் திருக்கழுக்குன்றின் மேவும், திருமலைச் சொக்கம்மன் வேதகிரி நாதனும் சிவ சிவ மஹாலிங்கமே. (13)

தனதான்ய சம்பத்து திரிகால வேளையில் தினமருளு மதுதினமுமே, சமையல் நல்லன்னமும் புளியோரை

ததியான்னம் சர்க்கரைப்பாற் பொங்கலும், கனமான பூசுணைக் காயவரை புளியுப்பு கடலை சிறுபயறநேக கறி பதார்த்தங்கள் வெகு பலகார தாளிதம் கனிகளரு கதலி தேங்காய், இனமான கச்சாயம் வடை தோசை யதிரச மிரவு பகல் பரமான்னமும் இடை வடைப் பருப்புகள் பஞ்சாமிர்தம் மெத்த எண்ணறு மநந்த பூஜை, தினமாம் நிவேத்யம் பெண்ணினல்லாளுடன் திருக்கழுக்குன்றின் மேவும் திருமலைச் சொக்கம்மன் வேதகிரி நாதனும் சிவ சிவ மஹாலிங்கமே. (14)

பேராறு திருநீறு திருநாமதீர்த்தமும் பேருலகி லண்டபிண்டம், பெரியகுரு ஸ்தானிகர் பூஜைக்கார் முறைக்காரர் பிர்ம்மமத வேத முடையோர், ஆராறு காராளர் திருக்கோவில் தம்பிரான் ஆதீனம் பேரம் பலம் ஆலயம் உக்ராணர் கருணீகர் வெகுஜனம் அனே வருந் தினந்தினமுமே, ஓதுவார் பாடகர் உடன் ரம்பை யானவர்கள் உருவரவ ராறுவட்டம், உள்ளுக்கு ளென் றைக்கும் நந்தியின் விளக்குட னுமையொளி யகண்ட தீபம், சீராறு பிரகாச பெண்ணினல்லாளுடன் திருக் கழுக்குன்றின் மேவும் திருமலைச்சொக்கம்மன் வேதகிரி நாதனும் சிவ சிவ மஹாலிங்கமே. (15)

நலமான யோகமும் அஷ்டாங்க முறையுடன் நத்து வார் சித்தர் மெத்த, ராப்பகல் அநுதினம் பாவங்கள் தீர்ந்திட ரக்ஷிக்க வேதநாவில், பல பலச் சாஸ்திரம் விதமாய்ப் படித்திடப் பதினெண் புராண முதலாய், பரவிவரு கிரகமெனும் நிலையது தெரிந்திடப்பண்புடன் கிருபை செய்குவாய், குருகுல மஹாராஜ கவிவாண

ருக்கெலாம் குருசாமி வாழி வாழி, கூர் ப்ர்ம்ம க்ஷத்திரியர் குல வைசிய சூத்திரர் குல மெலாம் வாழி வாழி சிலபலது வரமருள் பெண்ணினல்லாள் வாழி திருக்கழுக்குன்றம் வாழி, திருமலைச் சொக்கம்மன் வேதகிரி நாதனும் சிவ சிவ மஹாலிங்கமே. (16)

---

ஸ்ரீ சுப்பிரமணியக்கடவுள் திருவருள் பெற்ற

## அருணகிரிநாதர்

திருவாய்மலர்ந்தருளிய

# திருப்புகழ்.

அகத்தினைக் கொண் டிப்புவி மேல் சில
தினத்து மற்றொன் றுற்றறி யாதுபின்
அவத்துள் வைக்குஞ் சித்தச னாரடு கணையாலே

அசுத்த மைக்கண் கொட்புறு பாவையர்
நகைத்து ரைக்கும் பொய்க்கடல் மூழ்கியே
அலக்க ணிற்சென் றுத்தடு மாறிய சிலநாள் போய்

இகத்தை மெய்க்கொண் டிப்புவி பாலர்பொன்
மயக்கி லுற்றம் பற் றைவி டாதுட
லிளைப்பி ரைப்பும் பித்தமு மாய்நரை முதிர்வாயே

எமக்கயிற்றின் சிக்கினி லாமுனுன்
மலர்ப்ப தத்தின் பத்திவி டாமன
திருக்கு நற்றெண் டர்க்கிணை யாகவு னருள் தாராய்
புகழ்ச்சி லைக்கந் தர்ப்பனு மேபொடி
படச்சி ரித்தண் முப்புரம் நீறுசெய்
புகைக்க னற்கண் பெற்றவர் காதலி யருள்பாலா
புவிக்குள் யுத்தம் புத்திரர் சேயர
சனைத்து முற்றுஞ் செற்றிட வேபகை
புகட்டி வைக்குஞ் சக்கரபாணிதன் மருகோனே
திகழ்க்க டப்பம் புட்பம் தார்புய
மறைத்து ருக்கொண் டற்புதமாசிய
திணைப்பு னத்தின் புற்றுறை பாவையை யணைசீலா
செகத்தி லுச்சம் பெற்றம ராவதி
யதற்கு மொப்பென் றுத்தழ கேசெறி.
திருக்கழுக்குன் றத்தினில் மேவிய பெருமாளே. (1)

ஓலமிட்ட சுரும்பு தனு தனுவென
வேசி ரத்தில் விழுங்கை பளீர் பளீரென
வோசை பெற்ற சிலம்பு கலீர் கலீரென விரகலீலை
ஓர் மிடற்றி லெழும்புள் குகூ குகூவென
வோர்வை மெத்த வெழுந்து சலா சலாவென
ரோம குச்சு நிறைந்து சிலீர் சிலீரென அமுதமாரன்
ஆலயத்து ளிருந்து குபீர் குபீரென
வேகுதிக்க வுடம்பு விரீர் விரீரென
ஆரமுத்தமணிந்து அளா வளாவென மருவுமாதர்
ஆசை யிற்கை கலந்து சுமா சுமா பவ

சாகரத்தி லமுழ்ந்தி எழா எழா துளம் [ராதோ
ஆறெழுத்தை நினைந்து குகா குகாவென வகைவ
மாலை யிட்ட சிரங்கள் செவேல் செவேலென
வேலெழுச்சி தரும்பல் வெளேல் வெளேலென
வாகைபெற்ற புயங்கள் கறேல் கறேலென எதிர்
[கொள்சூரன்
மார்பு மொக்க நெரிந்து கரீல் கரீலென
பேய்குதிக்க நிணங்கள் குழூ குழூவென [மாறாய்
வாய்புதைத்து விழுந்து ஐயோ ஐயோவென உதிர
வேலைவற்றி வறண்டு சுறீல் சுறீலென
மாலை வெற்பு மிடிந்து திடீல் திடீலென
மேன்மை பெற்ற ஜனங்கள் ஐயா ஐயாவென விசை
[கள்கூற
வேலெடுத்து நடந்த திவாகர ராசல
வேடுவப்பெண் மணந்த புயாசலா தமிழ்
வேதவெற்பி லமர்ந்த க்ருபாகர ரா சிவகுமரவேளே.(2)

எழுகு நிறைநாபி அரிபிரமர் சோதி
யிலகு மரன் மூவர் முதலானோர்
இறைவியெனு மாதி பரைமுலையி னூறி
யெழுமமிர்த நாறு கனிவாயா
புழுகொழுகு காழி கவுணியரில் ஞான
புனிதனென வேடு தமிழாலே
புனலிலெதிரேற சமணர்கழுவேற
பொருத கவிவீர குருநாதா
மழுவுழை கபால டமரக த்ரிசூல
மணிகரவிநோத ரருள்பாலா

மலாயனைநீடு சிறைசெய்தவன் வேலை
வளமைபெற வேசெய் முருகோனே
கழுகுதொழு வேதகிரி சிகரிவீறு
கதிருலவு வாசல் நிறைவானோர்
கடலொலிய தானமறை தமிழ்களோது
கதலிவனமேவு பெருமாளே. (3)

வேத வெற்பிலேபு னத்தில் மேவி நிற்கும பிராம
வேடுவச்சி பாத பத்மமீது செச்சை முடிதோய
ஆதரித்து வேளைபுக்க ஆறிரட்டி புயநேய
ஆதரத்தோ டாதரிக்க ஆணபுத்தி புகல்வாயே
காதுமுக்ரவீர பத்ரகாளிவெட்க *மகுடாமா
காசமுட்ட வீசிவிட்ட காலர்பத்தி யிமையோரை
ஓதுவித்த நாதர் கற்க ¶வோதுவித்த முநிநாண
ஓரெழுத்தி லாறெழுத்தை யோதுவித்த பெருமாளே.
(4)

☞ இந்த நாலாவது பாட்டு புதிதாகக் கிடைத்தது.



---

* மகுடா மாகாசமுட்ட = மகுடம் + ஆகாசம் + முட்ட.

¶ ஓதுவித்தமுநி = தமக்கு ஆதியில் ஹரி ஓம் என ஓதுவிக்கத் தொடங்கின பிரமன்.

# ஸ்ரீவேதகிரீசர் பதிகம்

எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

பூவினன் மணமுக் கனியினிற் சுவைதீம்
    புனலினிற் றண்மைதீ யொண்மை
பாவிலொண் பொருள்போற் பிரிவற வடியார்
    பளகரு முளந்தொறுங் கெழுமி
ஓவலிற் கருணை பொழியும் வான்முகிலே
    யுன்பத மேசர ணென்று
மேவினே னெனையாள் திருக்கழுக் குன்றில்
    வேதகி ரீசவித் தகனே. (1)

பொன்னொடு மண்பெண் ணாசைகள் மிகுந்து
    பொய்யர்தம் வாழ்க்கையே பூண்டு
நன்னெறி கூட்டு மன்பு செய்யாது
    நாடொறு மலைந்துழல் கின்றேன்
நின்னரு ணோக்க மெட்டுணை யெனினு
    நேர்ந்திடா தெவ்வண முய்வேன்
மின்னிகர் சிகரத் திருக்கழுக் குன்றில்
    வேதகி ரீசவித் தகனே. (2)

அம்புவி யதனிற் பெறலருஞ் சனன
    மமைந்து நற்பய னடையாது
பம்புபூங் குழற்செம் பவளவாய் வேய்த்தோட்
    பாவைய ரால்மன மருண்டு
ஐம்புலக் கள்வர் கையதிற் சிக்கி
    யறிவெனும் பொருளெலாமிழந்து

வெம்புவேன் றனையாள் திருக்கழுக் குன்றில்
வேதகி ரீசவித் தகனே. (3)

களைகணீ யன்றி யஞ்சலென் றென்னைக்
காத்திட வொருவருங் காணேன்
தொளையுறு மணியே யுனைத்துதி செய்யுந்
தொண்டர்கட்கினிய மெய்த்தேவே
விளையுமெய்ஞ் ஞானப் பயிர்க்கருண் மழையே
வித்தக வீட்டிற்கு வித்தே
விளையொலி யருவித் திருக்கழுக் குன்றில்
வேதகி ரீசவித் தகனே. (4)

மெய்யடி யவன்போனடிப்பதே யல்லான்
மேவுநின் னடியவர்க் கடிமை
செய்யவோர் கணமு மனங்கொளாப் புலையேன்
சிறிதுமன் பகமிலா நாயேன்
உய்யவெவ் வண்ண மாகினுங் கண்பார்
உன்னுவார்க் கருள்குணக் குன்றே
வெய்யதிங் ககற்றுந் திருக்கழுக் குன்றில்
வேதகி ரீசவித் தகனே. (5)

சேண்டொடு புனிதச் சினகரந் திகழுந்
திருமலைப் பெருவனப் பினையுங்
காண்டொறு மன்பு கசிந்தெழு நினது
கட்டழ குடைய மெய் வடிவும்
பூண்ட வன்போடு கண்டுனைப் போற்றும்
புன்மையே னெனைவிடா தாள்வாய்
வேண்டுறும் பொருள்கள் தருங்கழுக் குன்றில்
வேதகி ரீசவித் தகனே. (6)

உரையொடு மனமு மொன்றுபட் டிருகை
யுச்சிமேற் கூப்பிநின் றுருகிக்
கரையிலா வின்ப வாரியே யெந்தாய்
காத்தரு ளெனத்துதி யோதிப்
புரைதவி ரன்பி னேடுனைப் போற்றும்
புந்திவாய்ந் துய்புநா ளென்றோ
விரைமலர் வனஞ்சூழ் திருக்கழுக்குன்றில்
வேதகி ரீசவித் தகனே. (7)


மழையிலாப் பயிர்போ னின்னருள் பெறாது
வாடுமிப் பேதையே னிழைத்த
பிழையெலாம் பொறுத்து நின்னடிக் காளாய்
பிரிவற விருக்கவே பணிப்பா
யுழைமழுச் சூல மொளிர்கரத் தவனே
யுருவரு விலாநிரந் தரனே
விழையுநற் றவர்சேர் திருக்கழுக்குன்றில்
வேதகி ரீசவித் தகனே. (8)

எடுத்தவிவ் வுடலாற் பெற விருப்ப
தெதுவதை விரைவினின் முயலா
வடுத்தநின் னடியர்க்க கடியனாய்க் கணமு
மகன்றிடா தியற்று நல்லன்பைக்
கொடுத்தெனைக் காப்ப துனதருட் குறித்தா
யிருக்கவுங் குணமிலே னெனக்கை
விடுத்தனிற் கழகோ திருக்கழுக் குன்றில்
வேதகி ரீசவித் தகனே. (9)

---

ஓம்

ஸ்ரீ திரிபுரசுந்தரி சஹாயம்.



திருக்கழுக்குன்றம்

## பெண்ணினல்லாளென்னும்

# ஸ்ரீ திரிபுரசுந்தரியம்மை பதிகம்.

—:o:—

அரியமறை யொருநான்கு மளவிடற் கறியொணா
    வத்துவித வானந்தமே
அடியரித யங்களித் தகநெகிழ வருளுதவு
    மன்னையே யமலவாழ்வே
கருதரிய வருமாயை யாலீச ஜீவஜெக
    கற்பனைகொள் சிற்சடமதாம்
காரணங் காணவிவை யாவுமா யல்லவாங்
    காட்சியா யிலகு வடிவே

பெரியவெளியா யனைத்து மணுவெளியை யாக்கிடும்
பேசொணுத் துரிய நிலையே
பேரின்ப வாழ்வுற்று பிறழாத நெறியுரையும்
பெரியரின மருவு மயிலே
தெரிவுடையர் தெரியதெளி யறிவுடைய ரறியவருள்
தெருளுடைய கருணை முகிலே
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி
தேடுதிரி புரசுந்தரி. (1)

மேகநிக ரளகமே ளுகரப் பணியழகும்
முன்னெழிற் சுட்டியழகும்
மேலுலவு மதிநுதற் பொட்டினழகும் மூக்கின்
மின்னு மூக்குத்தி யழகும்
போகமுற யாவர்க்கு மோகமன தாகவருள்
பொழிகருணை விழியினழகும்
பொல்லாத வஞ்சகரை வீழ்த்தி யெறியுஞ் சூலம்
பொலிகராம் புயத்தினழகும்
வேகமுட னணுகிவரு மடையர் முதுகிறவூன்று
விஞ்சுசெஞ் சதங்கைதாளின்
வாகழகு மாகவென மனமகிழ நின்றருளி
மதியிலேன் காணவருவாய்
தேகநம தல்லவென தம்மையறி வானநிலை
தெளியறிஞர் துதிதெய்வமே
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி
தேடுதிரி புரசுந்தரி. (2)

ஓங்கார ரூபியாய் றீங்கார நிலையாகி
யொளிரு ஸ்ரீங்காரவடிவாய்

மூதகர மந்த்ரமா யுகரலட் சணமாகி
யொப்பிலா மகரபீஜ
மாங்குலவு நாதமாய் நாதாந்த வெளியாகி
யணுகொணு ஞமைமொழியா
யடியர்மல மறுமிதய கமலபீ டிகைமருவு
மம்மையே காந்தமோன
நீங்கருந் துரியபத நிலையோங்கு சுகரூப
நித்தியா நந்தவாழ்வே
நிலைபெற்ற கதியுற்ற நின்பதத் தகலாத
நீட்டையெளி யேற்கருளுவாய்
தேங்கமுத கலையொழுகு மதிநுதற் சுழிணையொளிர்
தெவிட்டாத வானந்தமே
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி
தேடு திரிபுரசுந்தரி. (3)

எண்ணரிய வகிலாண்ட கோடியொரு கணப்போதி
லுற்பவஞ் செய்முதலே
உவமையறு மைந்தொழி லுஞற்றிடப் பலமூர்த்தி
யுருவங்கொள் சித்ரவடிவே
என்றனுயி ரேயுயிர்த் துணையேயெ னன்பினுறு
மேகாந்த மோனவாழ்வே
எக்கால முன்பத்தி மிக்காகவே கொண்டு
யேகமன மாகவந்தே
பன்னாளு மேவலஞ் செய்புநின் பத்தரவர்
பக்கத்தி ருந்துதவுவாய்
பணியுமவர் சந்தோட மாகவாழ் வுறவடிமை
பதைபதைத் திடலுமழகோ

தென்னைகமு கொடுகதலி சேர்ந்துவளர் சோலைதிகழ்
தேமருவு மெல்லைநாப்பண்
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி
தேடுதிரி புரசுந்தரி. (4)

காமனுங் கோபனுங் கனமோக னும்லோப
கள்ளமத மாச்சர்யனுங்
கட்சிகொண் டெனையனூர் கைப்பற்ற வெண்ணியெங்
க்ரணமாங் காவலன்பா
லேமவைப் பார்மென்ன விஷயபோ கங்கொள்ளு
மிந்தியத் துணைவர்கூட்டி
யேமாற்றி னெனைபு மறியாது போயினன்
ஏதேது செய்ய விசைவான்
தாமாகவே தோன்றி தாரணியெ லாஞ்சுற்றி
தனியரசு புரிபவன்போற்
றுவியெனை விஷயத்து ளாழ்த்தல்சகி யேனம்ம
தற்பதத் துறவருளுவாய்
தேமருவு சோலைவளர் பூமருவு தேனிறைசெய்
தெரியலவி ளெண்டோளினுய்
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி
தேடுதிரி புரசுந்தரி. (5)

மீளாத மாயையான் மொத்துண்ட வுலகினர்கள்
மீட்சிபெற வழியின்றியே
மின்னனிகர் தேகமே யான்மமுறும் போகமே
மிகுமுத்தி யாக நுகர்வர்
ஆராரெ னக்கேட்கி லறையவொரு பதிலிலா
ரதற்குமேற் சாதியென்பா

ரணிசமய மென்பர்குல மாமென்ப ராசார
மனைத்து மேற்கொண்டு திரிவார்
நாளாக மறலியற் காளாகு மப்போதி
னடுக்கமுற்றே யழிகுவார்
நாணமொன் றில்லார்க ளுனெனும் பதமறியு
நாளெந்த நாளோவிவர்
தேளாமெனக் கண்டும் வாலதிற்கை வைப்பபோற்
றியங்கிநர காழ்வர்கண்டாய்
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி
தேடு திரிபுரசுந்தரி. (6)

குன்மம்வெஞ் சோகைநீ ரிழிவுகா பாலைவெண்
குட்டமது மேகவாதம்
குலைநோய் மகோதரம் தலைவலி விஷக்கடி
குருதிகழி கிராணிமூலம்
சன்னிமுக சன்னிசுக சன்னிபடு வன்பிளவை
சயித்தியங் காசமீளை
சலதோஷ முறைசுரம் பாண்டுதொடை வாழைப்பட்
தாமரை சுவாசரோகங்
கன்மநோ யாமிவைகண் முதலாக வந்துநின்
கழலடி வணங்குவோர்பாற்
கதிரவன் கிரணமுன் காணாத பனியெனக்
கதறியே யோடவருள்வாய்
தென்னில் வஞ்சகர்புரஞ் செற்றவன் மகிழவரு
செல்வமே சிலம்பின்மகவே
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி
தேடு திரிபுரசுந்தரி. (7)

பூதபௌ திகவுடலை யானென்ன வெண்ணியே
போக்கினே னனேகஜென்மம்
புந்திதெளி யாமலே பொன்னாசை பெண்ணாசை
பூமியின தாசையோடு
ஏதமுற விவையலா தின்பேது மில்லையென
வெண்ணினே னீதன்றியும்
எவரேனு மொருபோது கடவுளென் றொன்றுண்டு
என்றுமதை யுணரவென்னில்
போதமருள் மறையுண்டு யூகிக்க வறிவுண்டு
புகலவனு பவமுமுண்டு
போந்துணர்மி னெனவென்செவி புகவொணாதம்மவோ
புன்மையே னென்செய்குவேன்
சேதனர்க ளோதரிய சிந்தையுரை செல்வமே
செந்தா மரைப்பதத்தோய்
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி
தேடுதிரி புரசுந்தரி. (8)

வஞ்சகக் கடையரை மடையரைக் கடியரை
வம்பியற்றுங் கொடுநடையரை
வாதரைத் தீதரைக் கோதரைக் கொடியரை
வலியரைக் கயவர் தம்மை
நஞ்சரை யிழிதொழில் நரகரை வெங்கலக
நடையரை நாசநெஞ்ச
நலியரை புலையரை கொலையரை கொடுமொழிய
நாவரை பகைநாமரை
மிஞ்சுமயன் மாதரை யணையவிடு போதரை
மிரளவரு மெம்மதூதரை

வெருட்டரை புரட்டரை திருட்டரை மருட்டரை
மேவிடா துன்னையுன்னு
தெருட்டரை யழிவற்ற தேசரை மறையோது
தேவரை மேவவருள்வாய்
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி
தேடுதிரி புரசுந்தரி. (9)

இதுபொயிது மெய்யென்ன தெளிவுறு விவேகமும்
இருப்பனுத யடைவிருப்பும்
இல்லாத மாயையா லியங்கியொளிர் மூவுலக
விச்சையறுமன வெறுப்பும்
சதுமுகன் முதலியோர் சாதித்த வறுவிதச்
சமாதிசம் பத்திஞறவும்
சற்சனர்க ணேயமும் சாத்திர விசாரமும்
சதாநந்த நிட்டையடைவும்
மதியிலாச் சிறியவர டேசன்மொழி புன்சொற்கள்
மதித்தடிமை யாக்கியாளு
மாட்சியும் மெய்ஞ்ஞான வாட்சியுந் தந்தருள
மனமுவந்தருள் க்ருபாட்சியே
செதில்வரா லுகளுதேம் பண்ணைசூழ் வளமருவு
திருக்கழுக் குன்ற மேவும்
தேவாதி தேவர்துதி வேதாத்ரி நாதபதி
தேடுதிரி புரசுந்தரி. (10)

# பெண்ணினல்லாளென்னும்

# ஸ்ரீ திரிபுரசுந்தரியம்மன் பேரில்

# நவகம்.

—:o:—

கார்கொண்டசைவலக் குழலுமொளி மேவுதண்
        கதிர்நிகர் செழித்த நுதலும்
கருணைகூர் விழிகளும் செங்குமுத வாயும்
        கனங்குழை விளங்கு காதும்
ஏர்கொண்ட வெண்பணில கந்தரமு மாழிசங்
        கேந்து கரமலர்களும் பொன்
இலகுமங் கலநாணருங்கலந் திகழ்மார்பும்
        இழையொன்றை யனைய இடையும்
பார்கொண்ட விலையின்மே கலையரையும் நீள்நறும்
        பதுமபாதத் துணைகளும்
படிமிதி படிமேனி மிடியாதி தொடாரத
        படிசேவை நெடிதே யருள்
சூர்கொண்ட வமரருன் பேர்கொண்ட சீர்கண்டு
        தொண்டுபுரி வேதமலைவாழ்
சுபசகித விபவவர நிபாகித தபத்ரிபுர
        சுந்தரி சுகாநந்தியே. (1)

அழலினிற் சுடுகைபோ லெந்தையி னபேதமாய்
        ஐந்தொழில் நடாத்துபவள் நீ
அறிவிலரு மறிதரச் சகளவடி வினுமரனில்
        அர்த்தபாகம் பெற்றை நீ

கழறுதற்கரிய எண்ணான் கறம் வளர்த்துயிர்
 களைக் காத்தபெரு முதல்வி நீ
காழிவரு பிள்ளைக்கு ஞான மமுதூட்டு சிவ
 காமி நீ அபிராமி நீ
மழவிடையின்வரு மன்னம்நீ யாதலாலுன்
 மலர்ப்பதம் சர ணடைந்தேன்
மங்கில்நதி பொங்கரவு திங்க ளணிசங்கரிசு
 மங்கிலி விளங்குசூலி
துழனி யந்திரை யாழிசூழுலக மாதின்மணி
 துதை மகுடவேத மலைவாழ்
சுபசகித விபவவர நிபாகித தபத்ரிபுர
 சுந்தரி சுகாநந்தியே. (2)

விண்ணுலகி னயிராணி வாய் பொத்தி நின்பணி
 விடைக் கேங்க வாணி யொருபால்
விரிதளன மதுவச் செழும்பதும தவிசின்மலர்
 மேல் மங்கை மற்றை யொருபால்
தண்ணுலவு வெண் கவரி வீச [illegible]ப்புநதலால்
 சத்தமா தர்கள் நினதுசெஞ்
சலசபத இணைவருட அறுகோடி சத்தியர்கள்
 ஜயஜயவெனப் போற்றவே
நண்ணுமரகத வடிவின் வீற்றிருந்தருள் தெய்வ
 நாயகி க்ருபாதாயகி
ஞானசுக மோனவடி வானமதி ஆனனிசு
 ஞானியர்த மால்நி தானி
சுண்ணநெடு மணிமாட ஒள்நிரைகள் நீள்மறுகு
 தொறுநிலவும் வேதமலைவாழ்

சுபசகித விபவவா நிபாகித தபத்ரிபுர
சுந்தரி சுகாநந்தியே. (3)

பிறந்த வந்நாள்பட்ட துயர மெண்ணினு நினைவு
பெற்றிலேன் பின்சை சவம்
பெருகு பாலிய மோடு கௌமார துக்கங்கள்
பேசு மறுமான மதனல்
மறந்ததென வோர்ந்துளே னிஞ்ஞான்றி லுறுதுன்ப
வகைகாட்சியா லுணர்ந்தேன்
வழுத்தேழ் பவத்தல்ல லுவமைபி னறிந்தனன்
மரண வேதனையை யாய்ந்தால்
அறந்திகழ மான்றவர்களும் பயந்தார்க ளென்
றறை தரூஉம்நூல் பறையெலாம்
ஆதலா லீதெலா வீதமா ரேதமே
வாதவா ரூத மருள்வாய்
சுறங்கவர் மிறங்குள திறந்தன்னி னெஞ்சம்
துலங்கவதி வேத மலேவாழ்
சுபசகித விபவவா நிபாகித தபத்ரிபுர
சுந்தரி சுகாநந்தியே. (4)

வையமதில் யான்கவியி னல்படும் துயரையொரு
வாயினுல் சொல்லவரிதாம்
மட்டினி லுரைத்திட்டனே லழுத பிள்ளைகளும்
வாய்மூடும் நெடிது நின்றே
பையவே பேய்களு மிரங்கும் கருங்கலும்
பாகாய்க் கரைந் துருகுமிப்
பான்மையினை யுடைய தம்மம்ம வென்குறைதனைப்
பகருமுன் யாவு முற்றும்

ஐயமில்லா தறிந் தவளாத லாலு முன்
அடிமையா ளுதலாலும்
அஞ்சடமு றிஞ்சுபிணி யுஞ்சிறுமை யுஞ்சிதற
அஞ்ச லென விஞ்ச வருவாய்
துய்யசெஞ்சலசநற வஞ்சிதர அஞ்சங்கள்
துஞ்சுதடவேத மலைவாழ்
சுபசகித விபவவர நிபரகித தபத்ரிபுர
சுந்தரி சுகாநந்தியே. (5)

சாற்றரியவேதம் நீ லோகமாதா வெனச்
சந்தத மியம்பு மதனால்
தாழ்விலங் குகள்பறவை யினுமீன்ற சேயினுள
தால் அன்பு நின் னன்பதன்
ஏற்றதண் ணிழ லெனக்கொண்டதனை யடையுமா
றேங்கிநின்சர ணடைந்தேன்
என்பாலிரங்காத தென்னையோ நிம்மதலை
யினி லொருவ னல்லனோ
ஆற்றலுறு மூழென்னில் நின்வயின்கையடை
அடைந்த வது வறிதாகுமே
அம்புவியு மும்பருல கும்பரவு றும்புதிய
அம்புய நறும்பதத்தாய்
தோற்ற மேவியநால் வகைச் சராசர மெலாம்
தொழுதுவளர் வேதமலைவாழ்
சுபசகித விபவவர நிபரகித தபத்ரிபுர
சுந்தரி சுகாநந்தியே. (6)

கொடியமற்கடமனத் தெழுதீயநினைவுயல
கோடியா மொன்றாயினும்

குறையுமென வெண்ணுதற் கிடமில்லை யித்தகைக்
        கொள்கைக் குணக்கேடனேன்
விடியு மதுகாறுமுத் துலைபோட்டு வாளாக
        விழலுக் கிறைத்தல் போல
மெய்ஞ்ஞான நூலெலா மோதியு மடங்காத
        விதமிதென் றறிதந்திலேன்
படியினின் னருள்தந்து நிஷ்டைக்க ணொருமனப்
        படுமாறமைத்து நின்றன்
பத்தருழை நித்தமெனை வைத்தமுத சித்தியாம்
        பத்தியருண் முத்திமுதலே
துடியினே ரிடையினார் நெடியமணிமாடங்கள்
        தொறுமுலவு வேதமலைவாழ்
சுபசகித விபவவர நிபாகித தபத்ரிபுர
        சுந்தரி சுகாநந்தியே. (7)

பக்தியோ ரெள்ளளவு மில்லேனி னடியர்தம்
        பால்தொழும் பாற்றிலேன்மெய்ப்
பதிநூல் படித்திலேன் நின் திருத்தோத்திரம்
        பண்ணிலேன் சிவசின்னமே
சித்திபெற வேதரித் திலேன் நின்னருணீடு
        சினகரம் வலம்செய்திலேன்
செல்வர்பா லேங்கிநின் றேற்றேனலாற் சிறிது
        சென்மத்து மீந்துமில்லேன்
சத்திய முரைத்திலேன் உயிர்கட் கிரங்கிலேன்
        தமியனேற் குய்வருள்வையே
சந்தத முவந்தமர ருந்துதிநி ரந்தரிசு
        தந்தரி அநந்தநாமி

துத்தியம்பணவரவு மலை யத்தி மலை யாதி
துதிபுரியும் வேதமலைவாழ்
சுபசகித விபவவர நிபரகித தபத்ரிபுர
சுந்தரி சுகாநந்தியே. (8)

தனமுண்டு மறதியும் குற்றமு மிலாக் கல்வி
தானுண்டு சற்புதல்வ ராம்
சம்பத்து மேன்மேலு முண்டுநோ யணுகாத
தன்மையுண் டெவர்களாலும்
கனமுண்டு பண்ணுநற் குணமுண்டு மெய்த்தொண்டு
கண்டுவளர்சிவ னடியர்தம்
கருதரிய பெருநேச முண்டு சிவநேசம்
கதித்தெழுந் தருகு முண்மை
மனமுண்டு சொலுமிம்மை யம்மையில் சுயிலாய
வாழ்வுண்டு தாழ்வேயிலை
மண்டலமும் விண்டலமு மண்டுதுதி கொண்டகழல்
வண்டளன சேவைகண்டால்
சொனமுண்ட திருமேனி யண்ணலார் வாமம்
துளங்கவரு வேதமலைவாழ்
சுபசகித விபவவா நிபரகித தபத்ரிபுர
சுந்தரி சுகாநந்தியே. (9)

---

திருக்கழுக்குன்றம்

திரிபுரசுந்தரி என்னும்

# பெண்ணினல்லாள் அம்மன்

ஸ்தோத்திரப் பதிகங்கள்.

---

வரகவி-தி. கன்னியப்ப முதலியார் அவர்கள் திருத்தியது.

(கலித்துறை.)

சீர்கொண்ட செங்கமலத்துறை நான்முகத் தேவு மணி, வார்கொண்ட தண்டிரைப் பாற்கடற் றேவு மற் றோருமினங், தார்கொண்டிறைஞ் சுந்தயாநிதி யென்றித் தாரணிக்குட், பேர் கொண்டு வாழ்பவள் பெண்ணினல் லாளெனும் பெய்வளையே. (1)

பெய்வளைச் செங்கையுஞ் சைவலக் கூந்தலும், பேச ரிதா, மைவிளைக்குங் கந்தமா தனமுங்கொண்டு மானு டையோன், மெய் விளக்கும் பெண்ணினல்லாளெனச் சொலும் வித்தகிவந், தூய்வளெப்போது மகலாமலே யெந்தனுள்ளத்திலே. (2)

உள்ளத்தில் வந்துதிப்பா ளொளியாம லுவந்துமனக், கள்ளத்தையுந் தவிர்ப்பாள் கனகாசலக் கையனிடங், கொள்ளத் தவஞ்செயுங் கொம்பனையா ளுதன் மாமதிக் கூன், பிள்ளைத் தருஞ்சிலைப் பெண்ணினல்லாளெனும் பெட்பினளே. (3)

பெட்பினைப்புரவா யெந்தனுள்ளத்திற் பேதமிலா, நட்பினளிப்புவியாவையுங் காப்பவளுன் மறையின், கட்பினளங் கழுக்குன்றேசனாரிடங் காதலிக்கும், முட் பினளம் புயத்தாட் பெண்ணினல்லமுகிழ் முலையே. (4)

முலையினமுதளித்தா ளெம்பிராட்டி முத்தாரமுங் கொண், டலையின லெய்தகிற்ருழ்குழலா டஞ்சமென்று வந்தோற், கிலையினிவா வென்றெடுத்துரை யாளிவளா ரென்றெண்ணிற், கலையினில் வாழ் பெண்ணினல்லா ளென்னுங் கனங்குழையே. (5)

கனங்குழை காதுங் கவின்மதி வேணியுங் கானறும்பூ வனங்குழை கூவிளமும் புனைவார் வாயிடம் வாழ் பவளஞ், சினங்குழை வேல்விழிப் பெண்ணினல்லா டஞ்சமென்ற ழைந்தோர், மனங்குழையாமல் வருவா ளென்னையாளு மலர்க்கொடியே. (6)

மலர்க்கொடியாகிய மாதுநல்லாடம்விண்மாரியெனச், சொலற்கடியே னுளந்தோன்ற வைத்தாளுவ டொன் மறைநா, வலர்க்கிடை யூர்வரில் வந்தாதரித்து வாதா டுகரு, தலற்கிடியே றெனவாழ் பெண்ணினல்ல தயா பரியே. (7)

பரியாமிதென் றடியார்களுக்காய் வனப்பாலிருக்கு, நரியாவையு மளித்தானிடம் வாழ் பெண்ணினல்லவளா, தரியாதிருப்பவ டானல்லவே தஞ்ச மென்னில் வரம், புரியாதிருக்கு மவளல்லவே நிதம்பூசிப்பையே (8)

பூசிக்க நற்றமிழ்ப் பாமாலை செய்துனைப் போற்றி மிக, நேசிக்க நின்னடியாருடன் கூடியென்னெஞ்சமுற, வாசிக்க மைக்குழற் பெண்ணினல்லா யிவையாவு மெளி, தாசிக்க வைத்தது நான் செய்துவந்த தவப் பயனே. (9)

தவப்பயனு லயன் மாலறியாத பொற்றாமரைத்தாட், சிவப்புற வீதியிற்றாதுசென்றானிடஞ்சேர்ந்தவனெஞ், சுவப்புடன் வாழ் பெண்ணினல்லவளென்னுந் துரந்தரீ

வெம், பவப்படர் நோய் தவிர்த்தே மிகவாய் வாய்
பாலிப்பளே. (10)

பாலிப்பவள் களங்கண் கருநெய்தற்பணு டவரை, மா
லிப்பவள் மணியுடையாண் மறைக்குன்றிலிருந், தாலிப்
பவணன்றைக் காற்பசும் பைங்கூடனேப் புரக்கு, நாலிப்
பவனேயெனும் புரிவாழ் பெண்ணினல்லவளே. (11)

நல்லவளானவ டொல்லாரணம் பன்னெண்ணுகம
நூற், சொல்லவலாள் மன்னுந்திரிபாசத் தொடரகற்ற,
வல்லவளானதனுல் கழுக்குன்றினில் வாழும் பெண்ணி,
னல்லவளானவ ளென்றே நிகழ்த்து மிந்நானிலமே.(12)

---

## திருக்கழுக்குன்றம்

## திருமலைச் சொக்கநாயகி யம்மன் பேரில்

# பஞ்சகம்.

---

நிதிபலவும் தருதிருவும் நிலைத்துச்சேரும்
நிகரறுதூய் மெய்ஞ்ஞான நிலைமைசேரும்
கதிகூட்டு மெய்யறிவு கலந்து சேரும்
கலைஞானம் அறுபத்து நான்கும்சேரும்
பதிதந்த ஒருமைமனப் பாங்கு சேரும்
பண்ணவர்தம் திருத்தொண்டு பலித்துச்சேரும்
மதிமிகுந்தோர் துதிமிகுத்தே மன்னும் வேத
மலைச்சொக்க நாயகியை வழுத்துங்காலே. (1)

கண்ணகன்ற கவினுலக மாயைதீரும்
கதித்தெழுந்து சலக்குமனக்கவலைதீரும்
எண்ணரிய பிறவியெனுந் தரங்கம் தீரும்
இசைந் துபிரி னிலங்கியமும் மலமும் தீரும்
புண்ணமைந்த உடல்மடவார் ஆசை தீரும்
புழுப்பொதிந்த உடற்குறமுத் துயரம் தீரும்
மண்ணவரும் விண்ணவரும் துதிக்கும் வேத
மலைச்சொக்க நாயகியை வழுத்துங் காலே. (2)

நிறங்கலந்த மெய்த்திகழ்வு நிறைந்தே ஓங்கும்
நிகழ்த்திடுசன் மார்க்கநெறி நீடியோங்கும்
புறங்கலந்து பெரும்புகழ்கள் பொலிவிளேங்கும்
பொய்யாத பெருவாய்மைப் புனிதமோங்கும்
திறங்கலந்த நல்லொழுக்கச் செறிவுமோங்கும்
திறம்பாத சிவாநுபவச் செல்வமோங்கும்
மறங்கடந்த வறங்கிடந்தோர் மகிழும் வேத
மலைச்சொக்க நாயகியை வழுத்துங்காலே. (3)

குணிகுருடு செவிடாதி குலைந்து நீங்கும்
கோள்களவு கரவுமுதற் கொடுமை நீங்கும்
பிணியாவும் நிலைக்காது பிதிர்ந்து நீங்கும்
பேசரிய பாதகங்கள் பெரிதும் நீங்கும்
தணிவறுகா மாதிபகை தணந்தே நீங்கும்
சந்ததமும் வந்துலைக்குந் தவறு நீங்கும்
மணிவடம்நேர் அணியருவி மருவும் வேத
மலைச்சொக்க நாயகியை வழுத்துங்காலே. (4)

விரும்புற்ற எவைகளும் மென்மேலும் கூடும்
விதிதுடைக்கும் முதிர்வன்மை விளங்கிக் கூடும்

இரும்புற்ற நெஞ்சருளம் இணங்கிக் கூடும்
இனிதாய நல்மதுர வாக்குக் கூடும்
சரும்புற்ற சலசபதச் சேவைகூடும்
சுகாநந்தப் பெருவாழ்வு துய்க்கக் கூடும்
வரும்புத்தே ளிருந்தவரும் வணங்கும் வேத
மலைச்சொக்க நாயகியை வழுத்துங்காலே. (5)

---

## திருமலைச் சொக்க நாயகியம்மை பதிகம்.

---

பிள்ளைகள் செய்த தடங்கலுந் தீமை
யாயினும் பெற்றவ ளுள்ளங்
கொள்ளு நன்மனத்தோடு வந்துகாத் திடுமக்
கொள்கைபோ லுயடி யேன்பால்
உள்ளளி சுரந்திவ் வெளியனை யாள
வுறுபத மெனவுனை யடைந்தேன்
மள்ளவார் பழனத் திருக்கழுக்குன்றின்
மலைச்சொக்க நாயகி யுமையே. (1)

சந்தத முனையே தொழவென திருகை
சார்வதா நின்னிரு கமலச்
சுந்தரப் பதமே துதிசெய வென்னு
சோர்விலா துனையுள முன்ன
இந்தநல் வரங்க ளெனக்கருளுவையே
லேழையா னுய்குவே னன்னுப்
வந்தடியார்கள் தொழுங்கழுக் குன்றின்
மலைச்சொக்க நாயகி யுமையே. (2)

நல்லவ ரடையுஞ் செல்வமே பொதுவி
னடஞ்செயு மெம்பிரான்றுணையே
யெல்லையி லின்பந் தருமருட் கடலே
யேழுல குந்தொழும் வடிவே
புல்லனு மெனையு மாட்கொளக் கருணை
புரிவையே யின்னருட் கழகாம்
மல்லல்வேயோங்குந் திருக்கழுக் குன்றின்
மலைச்சொக்க நாயகி யுமையே. (3)

விண்ணவர் முனிவரடியவர் தமது
மெய்ப்பரி வினையறிந் தவர்கள்
எண்ணிய வெண்ண முடிக்க வெம்பிரானோ
டேய்ந்தபொற் கலாபமா மயிலே
தண்ணளி சுரந்திவ் வேளியனை யாளச்
சமையமீ தெனவுனை யடைந்தேன்
மண்ணகத் துயர்ந்த திருக்கழுக் குன்றின்
மலைச்சொக்க நாயகியுமையே. (4)

பிறந்தவிச் சனன மெத்தவஞ் செய்தோ
பெறக்கிடைத் ததுவிது வீணி
லிறந்தபின் னெந்தப் பிறவி வாய்த்திடுமோ
விம்மையே யுய்ந்திடக் கண்பார்
அறந்திகழ் சொரூபி நித்தியகல் யாணி
ஆத்ம சம்ரக்ஷணி பவானி
மறந்தவிர்த் தடியார்க் கருள் கழுக்குன்றின்
மலைச்சொக்க நாயகி யுமையே. (5)

பிரமன்மா லறியாப் பிஞ்ஞகன் கணவன்
பேசுமெண் ணான்கறம் வளர்த்த

கரமுடையாய்நீ யென்றுவந் தடுத்தேன்
கவலைதீ ரெனமுறை யிட்டுஞ்
சிரமம தொழிக்கா திருப்பது நினது
திருவருள் தனக்கழ காமோ
மரகத வடிவே திருக்கழுக் குன்றின்
மலைச்சொக்க நாயகி யுமையே. (6)

ஊன்மலி யாக்கை நிலையிலா மையையு
முனதருள் பெற்றவ ரடையு
மேன்மையு மறிந்தே யிருந்துமிப் புவியில்
வீண்மயக் கினிற்றொடர்ந் துழலும்
பான்மையிற் றவிர்ந்துன் பதத்தில்மெய் யன்பே
பற்றிட முற்றுநீ யருள்வாய்
வான்றொடர் மதில்கள் சூழ்கழுக் குன்றின்
மலைச்சொக்க நாயகி யுமையே. (7)

## பெண்ணினல்லாள் அம்மை தோத்திரம்.

ஆதிபரிபூரணி கிருபாகரி தயாநிதி அகிலாண்டமும் அளித்த, அம்மையே நாற்பத்து முக்கோணமீதொளிரு மபிராமவல்லியுமையே, சோதியே ஓங்கார ரீங்கார சுந்தர நிராங்காரமாய் சுத்தமாய் ஏகமாய் அறிவினுக்கறிவாய் சுகானந்த வடிவமாகி, நீதியுடனே கருணைமாரது பொழிகின்ற நித்ய மங்கள சொரூபி, நின்கமலபாதத்தை நினையு மடியாருடன் நீயுகந்தாண்டருளுவாய், மாதவன் தங்கையே வேதகிரி தன்னுடன் மருவியே கழுக்குன்றில் வாழ், மண்ணவர் தினம் போற்ற விண்ணவர் புகழ்ந்தேத்தும் பெண்ணினல்லாளம்மையே.

இச் செய்யுள் வரகவி. தி. கன்னியப்ப முதலியார் சிறுபருவத்து ஓர் பெரியவரால் சொல்லித்தந்தது.

---

### திருக்கழுக்குன்றம்

# வேதகிரீசர் பதிகம்.

---

### வண்டுவனப்பிள்ளையார் துதி.

பண்டுமலப் பழுதகற்றிப் பரனருளிற் படிந்துய்யப் பணிந்து போற்றி, விண்டுமுதற் றேவரெலாம் விருப்பமுட னருச்சிக்க விளங்கு மெங்கள், கண்டுமொழியுமைபாகர் கருணையினு லுலகுய்யக் கருதி யீன்ற, வண்டுவன வைங்கரனை வாக்காலு மனத்தாலும் வந்தித் துய்வாம்.

## நூல்.

பார்மருவு புலவர்துதி பாவலு தீதம்ம
 பகரரிய ஞான வமுதே
பாசமுடை யான்மவர்க் கந்தமை யணுதியே
 பரிந்தடிமை கொண்ட பதியே
கார்மருவு விடமதைக் கண்டத்த டக்கியிரு
 கருணைமழை பொழியு முகிலே
கல்லாலி னீழலமர் ஞானகுரு வேயன்பர்
 கருதரிய மோன வடிவே
சீர்மருவு முக்கட் செழுங்கரும் பேயினிய
 செந்தேன் கலந்த பாகே
சிவராஜ யோகமுதிர் தவஞான மாதவர்கள்
 சேர்ந்துறையு மலையின் முதலே
வேர்மருவு மாமலைச் சொக்கநா யகிமகிழ்
 வீற்றிருந்தருளு முருவே
வேதனரி நேசர்பணி பாதபிர காசவணி
 வேதகிரி யீச மணியே. (1)

நித்தனே நிமலனே நிறைஞான மோனமே
 நீணிலத் தரிய பொருளே
நீதியே சோதியே நிட்களப் பிரமமே
 நிகழ்சகள முற்ற தேவே
அத்தனே யண்ணலே யரியவொளி ரூபனே
 யருளமுத ளிக்கு முறவே
ஆனந்த வெள்ளமே யன்பருறு போகமே
 யமரர் துதி வேத முடிவே

சித்தமுறு மின்பமே முத்திதரு செல்வமே
திகழெனிரு கண்ணுண் மணியே
சீர்வளர் சிருட்டிமுத லைந்தொழில் நடாத்துநற்
சிந்தாம ணிக்கு வியலே
வித்தகர்ம னத்துளாணி விலையின்மா ணிக்கமே
வீயாத ஞான மயமே
வேதனரி நேசர்பணி பாதபிர காசவணி
வேதகிரி யீச மணியே. (2)

தன்னையெச் காலமுந் தியானித்த வன்பர்முத
றனதுவீ க்ஷண்ய முற்ற
தவமிகும் விருக்ஷங்கள் புற்பூண்டு முதலான
தாவரா திகளை வைக்கும்
அன்னைநிக ரருண்மேவி மன்னிவாழ் வீட்டினை
யகங்கனிந் தருளவல்ல
வருமறைக் கிரியினிற் கனிவுபெறு மன்பர்தம
தங்கணீ ரருவி யோட
முன்னையிரு வினையின்வரு செயலொருங் கற்றுரை
மொழிகுளறி மெய்நடுங்கி [செய்
முடிவிலா தர்ச்சனை யியற்றுதற் காகமுன்
முளைத்தவரு வுருவ சிவமே
வின்னமில் லாதபர வெளியிலெழு சோதியே
விபுதர்துதி சுடர் விளக்கே
வேதனரி நேசர்பணி பாதபிர காசவணி
வேதகிரி யீச மணியே. (3)

தண்டுளப னார்திமுன் றூழ்மொழிகள் கூறியுந்
தாயனைய கருணை செய்தோய்

தன்னூழின் வலிதூண் டிடத்தவக் கேடுசெய்
 தையலாள் மாயை தன்னைக்
கண்டுமவள் பொய்யாவின் வடிவினொடு கானிலே
 காலங்க ழிக்க விட்ட
கவினந்தி கேசுரர் கருத்திற் கிணங்கியே
 கடுகிவந் தாத ரித்தாய்
பண்டையிற் பூசித்த பானுமறை யிந்திரன்
 பகரரிய கோடி ருத்திரர்
பாவலர்பு கழ்ந்திடும் பண்ணவர்மு தற்பலோர்
 பவநீக்கி யருள ளித்தாய்
வெண்டுய தும்பைமல ரணிவேணி யண்ணலே
 வினையினேற் கருள்செய் கண்டாய்
வேதனரி நேசர்பணி பாதபிர காசவணி
 வேதகிரி யீச மணியே. (4)

ஆதரவி லாதழுத சிறுவணிக னுக்காக
 வருண்மாம னாக வந்தும்
ஆள்விழையும் வந்திமெய் யன்பிற் கிரங்கியோ
 ராளாகி யன்ற மர்ந்தும்
ஏதமில் லாதநற் குணசாலி யாங்கவுரி
 யிருவிழிகண் மாசு நீங்கி
யின்புற விருத்தவே தியாகி யுண்மகிழ்ந்
 திலகுகா ளைப்ப ருவமாய்க்
காதலுறு குழவியாய் விளையாடியும் பெருகு
 கருணையன் பர்க்க ளித்தோய்
கல்லனைய நெஞ்சினேர் காணுத் தெய்வமே
 காலனையு தைத்த காலோய்

வேதவரை மீதிலுள வாசமக் கோயிலில்
விளங்குநற் றெய்வ முதலே
வேதனரி நேசர்பணி பாதபிர காசவணி
வேதகிரி யீச மணியே. (5)

பண்டைநா டன்னிலே பாசமென் கின்றதோர்
பாழான பேய்பி டித்துப்
பாரென்னு மரமேறி மூவாசை யென்றிழிவு
பகர்கின்ற மதுவை யுண்டு
தெண்டனைப தென்னுநோய் நளிவிடந் தீண்டியே
தேங்குகவி மனதி னேற்குன்
றிருவருளை னுப்புனித வவுடதம ளித்துமேற்
றுன்பங்க ளைந்து நின்றன்
தொண்டர்தந் தாளிணைப் போற்றிடும் மேலான
தூயவருள் செய்தி கண்டாய்
சொல்லுமெல் லாம்வல்ல சித்தனே கர்த்தனே
சுத்தசத் தான சிவமே
வெண்டலைக ரத்தேந்தி விளையாடு மண்ணலே
வேலவரையீன்ற விபுவே
வேதனரி நேசாபணி பாதபிர காசவணி
வேதகிரி யீச மணியே. (6)

என்புதோல் போர்த்தவிப் புன்புலால் யாக்கையை
யெடுத்தமுத விற்றை வரையி
லென்றேனு மோர்கண மிருந்துசுக மெய்திலே
னென்றுமன வேட்டை யுடனே
துன்பினுக் கோருருவ தாகத்தவித்
தூலமெய்க் கொடிய நாயேன்

துயராழி தனிலாழ்ந்து கரையேற வறியாது
துணையிலாக் குழவி யென்னத்
தன்வச மிழந்தயர்ந் தேங்கிமிக நொந்துளேன்
றரணியுள் ளோர்ந கைக்கத்
தமியனைத் தள்ளிவிடின் வேறுபுக லில்லைநின்
றண்ணரு ளளிக்க முறையே
மென்புனித நற்கழுகு முனிவேந்தர் பூசித்து
மேவிவாழ் மலையின் முடிவே
வேதனரி நேசர்பணி பாதபிர காசவணி
வேதகிரி யீச மணியே. (7)

எந்தைமா ணிக்கவா சகரன்று காட்டின
யிப்பதியி லென்று பாடி
யேத்தினர் மூவர்முத லிகளிந்த வெல்லையி
லெடுத்துவை யாது பாதஞ்
சிந்தைகளி கூர்ந்து தூரத்திருந்தவர்கள்
செங்கரங் கூப்பி னர்கள்
செகமீது காட்சியுற முனிவேந்தர் கழுகதாய்
செனித்தனர்க ளென்னு மிந்த
விந்தையறி யார்களிம் மேதினியி லில்லையிவ்
வேதமலை நிகரெ னக்கீழ்
மேலுலக மெங்குமிலை மெய்யான வார்த்தையிது
வேண்டிவந் தின்ற டைந்தேன்
வெந்தபொடி பூசியொரு பாலுமை தனக்கீந்து
மேவுநித் யாநந் தனே
வேதனரி நேசர்பணி பாதபிர காசவணி
வேதகிரி யீச மணியே. (8)

நல்லவன்பே பெரும் பணியாய ணிந்துவாழ்
ஞானியர்த முறவு பூண்டும்
நலியாது மனமேவி பதியறம் பிரிவோர்க
ணற்குழா மெய்தி நாளும்
இல்லறத் துறைவோர்க ளியல்புடைய மூவர்க்கு
மினியதுணை யென்ற வாறே
யெளியரு வியலுமதை யிப்புவியின் மேலவர்க்
கினியமன தோட ளித்தும்
மல்லன்மெய் கண்டர்மென் மலரடிக் கன்புபுரி
மாபெரியருக் கேவலாய்
மாறுதவன் பெய்தியவ் வடியர் கூட்டத்தில்
வாழ்கின்ற பேற ளிப்பாய்
வன்னமேருவினை யேந்துதனி யண்ணலே
வேதாந்த மணிவி ளக்கே
வேதனரி நேசர்பணி பாதபிர காசவணி
வேதகிரி யீச மணியே. (9)

நல்லவர்கள் போற்பேசு நயவஞ்ச நெஞ்சர்பா
லணுகிமன மேங்கா மலும்
நலமிலாச் செல்வருறை வாயிலிற் சென்றுமுக
நலிவுற்று நில்லா மலும்
கல்லாத மூடர்கள் கருத்தின்வழி யிச்சகங்
கழறிவயி றோம்பா மலும்
கருணைமிகு துறவிபோற் கள்ளவே டம்பூண்ட
கபடிகளை யண்டா மலும்
கொல்லாத மாவிரத மில்லாது பன்னேன்பு
கொள்வோரை யணுகா மலும்

கோதிலா மறைமுடிச் சைவசித் தாந்தநெறி
கூடாரை நாடா மலும்
வெல்லரிய சிவஞான சித்தியுற் றின்பமுற
வேண்டினே னருள்செய் கண்டாய்
வேதனரி நேசர்பணி பாதபிர காசவணி
வேதகிரி யீச மணியே. (10)

திருச்சிற்றம்பலம்.

முற்றிற்று.

69133

332

# விளம்பர அநுபந்தம்.

☞ பண்டிட். **S. R.** நமசிவாய ராஜயோகி,

நேடிவ் வயித்தியம், காந்தி நிலயம்,

சிவராஜயோகி வயித்திய சாலை,

திருக்கழுக்குன்றம் (போஸ்ட்).

## The Best Blood-purifier and Nerve-invigorator.

### ஸ்வராஜ்யம்

அடைய வேண்டுமானல் மனோதிடம் வேண்டும்; மனோ திடத்துக்குச் சரீர வலிவு வேண்டும்; சரீர வலிவுக்கு நோயற்ற வாழ்வு வேண்டும்.

"ஜெகத்தைக் கொடுத்துச் சுகத்தை வாங்கு"

என்னும் பழமொழியைச் சில விவேகிகள் கவனியாமல், சரீரத்தைப் பல வழியிற் கஷ்டப் படுத்திப்பணம் சேகரிப்பதிலேயே பொழுது போக்குதலும், சரீரத்திலே வியாதி நேர்ந்த விடத்துக் கவனியாதிருத்தலும் விசனத்துக் கிடமாகும், ஆதலால்

### கர்மரோகஹரி என்னும்

# மன்மத சிந்தாமணி லேகியம்

(வாங்கிச் சாப்பிடுங்கள்: பத்தியமே கிடையாது.)

☞ இதில் சத்துள்ள சித்து மூலிகைகள், வேர் கொடி கிழங்கு, வித்து தினுசுகளுடன் அம்பர், கஸ்தூரி, குங்குமம்பூ, பச்சைக் கற்பூரம், தங்கவெள்ளி ரேக்குடன் சேர்ந்து சாப்பிடுதற்கு

333
334

ருசியாயிருக்கும். ரசபாஷாண வகைகளின் சேர்க்கையும், மயக்கந் தருவனவாய வஸ்துக்களின் சேர்க்கையும் கிடையாது. குழந்தைகள் முதல் கிழவர்கள் முதலாய ஸ்திரீ புருஷர்கள் எல்லோரும் கோடை மாரிக்காலத்தில் நிராக்ஷேபமாய்ச் சாப்பிட லாம்.

☞ இது கிழவனைக் குமரனுக்கும்; பல வீனனைப் பலமுள்ளவனுக்கும; பலமுள்ளவனுக்கு எமானை பலம் கொடுக்கும்; சூதக வாயுவைக் கண்டித்துச் சந்தானவிருத்தி உண்டுபண்ணும். மறதி, சோம்பல், மூளைக்கொதிப்பு, நரம்புத்தளர்ச்சி, அம்மை ..க்கினுலுண்டான பலஹீனம், வாலிபத்தில் துர்சேஷ்டைகளாலு... ..ாகும் கெடுதிகள் நிவிர்த்தியாக்கும்; போகத்தில் விருப்பம், த... ..மை, ஊக்கம், இன்பம் கொடுக்கும். நீற்றுப் போன நாதத்தை ..ங்கி மணி போலாக்கும். தவிரவும், மேகவாய்வு, பித்த ரோகங்க.. ..யெ கைகாலெரிவு, வாய் நீரூறல், வாந்தி, மயக்கம், மூர்ச்சை, ... அஜீர்ணம், மெசரியாமந்தம், க்ஷயம், சிணுக்கிருமல், முதவியதி, ... ..ங்கள் நீங்கும்.

☞ இது உபாத்தியாயர்கள், பாடகர்கள், பிப.. கள், யோகாப்பியாசிகள் முதலியவர்களுக்கு மிக்க ..பலி, வக்கீல் முகவசீகரம், சரீரக்காந்தி, தேகதிடம் கொடுக்கும் ஏகந்து சுமார் 40-வருஷ அனுபவம்: இந்தியா, பர்மா, சிலோன் மலேய நாடுகளிற் பரவி "ஜீவாதார பொக்கிஷ" மெனப்பெயர் பெற்று விளங்குகிறது.

10 பலம் டப்பி 1-க்கு ரூ. 2-8-0: தபாற் கூலியுட்பட ரூ. 3-0-0.

(ஒரு டப்பி 30-நாள் காலை மாலை 60-வேளை வரும்.)

அயக்காந்த செந்தூரம்:—சேர்த்துச் சாப்பிடுவதானல் இச் சாபத்தியமிருக்கவேண்டும்.

டப்பி 1-க்கு ரூ. 3-8-0: (தபாற்கூலி யில்லாமல்).

"நவசக்தீ உப்பு":—சேர்த்துச் சாப்பிடுவதானல் டப்பி 1-க்கு ரூ. 3-0-0. (தபாற்கூலி யில்லாமல்) பத்தியமே யில்லை.

# NAVASAKTHI SALT.

# நவசக்தி லவணம்.

பலம் 1-க்கு ரூ. 1—0—0 : (தபாற்கூலி வேறு)

☞ **பத்தியமே கிடையாது** :—காலையில் நீராகாரத்திலும் மாலையில் நவசக்தி சூர்ணம், வெள்ளைச் சக்கரை, அல்லது லேகியம் இவைகளில் ஏதாவதொன்றிற் கலந்து சாப்பிட வேண்டும். சாப்பாட்டில் மோர் அல்லது தயிர்ச்சாதத்தில் சாதாரண உப்புக்குப் பதில் சேர்த்துச் சாப்பிடலாம்.

**தீரும் வியாதிகள்** :—நீர்க்கட்டு, நீர் எ...ல, மலக்கட்டு, ...று வலி, மார் நோய், அஷ்டவகைக் குன்மங்கள், நீங்காத ...வுசைக்கட்டி, சுரக்கட்டி, பக்க சூலை, மகோதரம், நீராம்பலவகைக்கஷ்டங்கள் முதலிய சூதக வாய்வுகளினால் தேக, முகவசீகரம், சரீர திடம், நரம்பு வலிவு, ரத்த சு... எல்லா ரோகங்களுந்த விருத்தி கொடுக்கும்.

சித்தர்கள் கல்பமாகச் சாப்பிட்டு வந்ததை, நாங்கள் ☞ ...யி முறையில் உபயோகப்படுத்துகிறோம்.

# நவசக்தி சூர்ணம்.

டப்பி 1-க்கு ரூ. 1—0—0 : (தபாற்கூலி வேறு)

☞ **பத்தியமே கிடையாது** : மலக்கட்டு நீர்க்கட்டு, நாற்பது வகைப் பித்தங்கள், மயக்கம், வாந்தி, மூர்ச்சை, வயிற்று வலி, குன்மம், முதலிய சகலமும் சூரியன் முன்பனி போல் நீங்கும்.

## கலிகால ஆச்சரியம்.

# நவசக்தி கவசம்.

☞ **க...வுளை நம்பிக்கெட்டவர்கள்** உலகில் ஒருவருமில்லை. கடவுளால் சிருட்டிக்கப்பெற்ற நம்மைக் கடவுள் தான் காப்பாற்றுகிறார் ; கடவுளை நம்பினோர் கை விடப்படார் என்பது

உண்மை. ஜெகன்மாதாவாகிய மஹா சக்தியின் கிருபையால் இக்கவசம் செய்யப்பெற்று 35-வருஷங்களாகப் பல்லாயிரக்கணக்காக ஜனங்கள் உபயோகித்து ஆநந்தமடைந்து வருகிறார்கள். இது அம் மஹா சக்தியின் பீஜாக்ஷர மஹா மந்திர சக்கரம் செப்புத்தகட்டில் அமைத்து, கிரமப்படி பூஜித்து, வெள்ளித் தாயத்தில் அடக்கஞ் செய்திருக்கிறது. ஆண் பெண் குழந்தை குட்டி முதலிய எல்லோரும் உபயோகப்படுத்தலாம். ஆண் மக்கள் பூணூலிலும் வலக்கையிலும், பெண்மக்கள்தாலிச்சரட்டிலும் கோர்த்துக்கட்டிக் கொள்ளலாம்; அமாவாசை, பவுர்ணமி, முதலிய விசேஷ தினங்களிலும் ஞாயிறு, வெள்ளிக்கிழமைகளிலும் சுத்த ஜலம் அல்லது பாலில் தோய்த்துக் கழுவி தூபங் காட்டி தத்தம் குலதேவதையைத் தியானித்து அணிந்து கொள்ளவேண்டும்.

☞ இது ஒன்பது குணங்களைச் செய்யும்:—துஷ்டக்கிரகங்களால் நேரும் மூர்ச்சை, பயம், வயிற்று வலி, துர்ச்சொப்பனங்கள் நீங்கும்; வியாபார விருத்தி, பரீக்ஷையில் ஜெயம், உத்யோக உயர்வு, வியவ காரத்தில் வெற்றி, ராஜ சன்மானம், சரீர காந்தி, முகவசீகரம், உண்டாகும். எந்த முகமும் தங்க முகம் போலாகும்; குழந்தைகளுக்கு மாந்த மாதி தோஷங்கள் நீங்கும்; சுருக்கிக் கூறு மிடத்து ஆதி சக்தியின் திருவருட் கிருபை உண்டாகும் என்பதற் கையமில்லை.

கவசம் 1-க்கு ரூ. 1—10—0: (தபாற்கூலி யுட்பட)

குறிப்பு:—கவசம் அனுப்பும்போது விபூதி, குங்குமம், மலை மருந்து, பக்ஷி தரிசன படம் இனாமாக அனுப்புவோம்.

---

# NAVASAKTHI OOTHOOVATHIES.

## சுமார் 35 வருஷ அநுபவம்.

ஸ்ரீ பஞ்சாக்ஷர சதாசிவ யோகிஸ்வாமிகளால் லோகோபகாரமாக அநுக்கிரகிக்கப் பெற்று, யூநானி முறையில் அமைத்து உலகெங்கும் பிரசித்தி அடைந்தது.

336

மஹாத்மா காந்தி

# நவசக்தி ஊதுவத்திகள்.

## (சுகந்த பரிமள முள்ளது).

இது மனோரம்மியமான 108 பரிமளவாசனை மூலிகை களுடன் புனுகு, சவ்வாது, சந்தனரோஜ் அத்தர்கள், அம்பர், கஸ்தூரி குங்குமப்பூ முதலிய விலையுயர்ந்த சரக்குகள் சேர்த்து செய்யப்பெற்று இந்தியா, பர்மா, சிலோன் வாசிகளால் அநுபவத்தில் ஆதரிக்கப் பெற்று விளங்குகின்றது.

☞ இது ஒன்பது சக்தி பொருந்தியது;—(1) சுகந்த பரிமளங் கொடுக்கும்; (2) விஷய சுகத்தில் மனதுக்கு உல்லாசந்தரும்; (3) வாந்திபேதி, பிளேக், விஷசுரங்களுக்குக் காரணமாயுள்ள விஷவாயுக்களை ஓட்டும்; (4) சுரம், ஜலுப்பு, தலைவலி முதலிய ரோகங்களைக் கண்டிக்கும். (5) கடவுள் அபிஷேக ஆராதனை காலங்களில் மனதைப் பக்தி மார்க்கத்தில் செலுத்தும் (6) கல்யாண சுப சோபன முகூர்த்த காலங்களில் ஸ்திரீ புருஷர்களது மனதை ஆநந்தப்படுத்தும் (7) பஞ்சேந்திரியங்களை ஒருவழிப்படுத்தும் ராஜ யோகிகளுக்கு மனச் சாந்தி கொடுக்கும். (8) அரச சமுகத்தில் பல்லோருடைய மனதை வசீகரப் படுத்தி உற்சாகந்தரும். (9) மனக்கவலையை நீக்கி மாட்சியை தரும். ஆதலால் இதை எல்லாச் சாதியாரும் எல்லா மதத்தாரும் எல்லா தேசத்தாரும் ஆநந்த மடைய இது பிரயோசனமாகும் என்பது சொல்லாமல் விளங்கும்:

☞ இவ்வூதுவத்தியின் சாம்பல் தேன் அல்லது சருக்கரையோடு கலந்து சாப்பிட்டால் சுரம் சீதளம் நீங்கும்.

**இதன் பெருமையை அநுபவித்தவர்கள் புகழ வேண்டும்.**

1 பலம் வத்தி 0—8—0; 5 பலம் ரூ. 2—4—0

10 பலம் ரூ. 4—4—0: (தபாற்கூலி 1 பலம் முதல் 10 பலம் வரையும் 0—6—0.

இடைக்கு மிடம்:—பண்டிட். S. R. நமசிவாய ராஜயோகி, நேடிவ் வயித்தியம், காந்தி நிலயம், திருக்கழுக்குன்றம் P. O. செங்கல்பட்டு மார்க்கம், மதராஸ், இந்தியா.